
பொங்கல் முதல் சென்னை மற்றும் தமிழ் நாடெங்கும்



எங்கமாமா

டைரக்ஷன்

A.C. திருலோகசந்தர் M.A

தயாரிப்பு

P.K.V சங்கரன்-ஆறுமுகம்



1

அறையில் தொலைபேசி மணி அடித்தது. எடுத்தேன். ஜகதீசன் பேசினார்.

"உங்களைப் பார்க்க வேண்டும் என்று ஒரு பெரியவர் வந்திருக்கிறார்."

"யார் அது?"

"அவர் பெயர் அருணாசலம்."

"அருணாசலமா? எந்த ஊர்"

"திருவண்ணாமலையிலிருந்து வருகிறாராம். சோபாவில் உட்காரச் சொல்லியிருக்கிறேன்."

"சரி, வருகிறேன்."

வரவேற்பு அறைக்குச் சென்றேன். அங்கு அமர்ந்திருந்த பெரியவரைக் கண்டதும் கை கூப்பி வணங்கினேன். இவரைக் கண்டதும் நம்மையும் அறியாமல் ஒருவித மரியாதை ஏற்படும். அப்படிப்பட்ட தோற்றம் அவருடையது. கலைந்த முடி. பழுப்பேறிய நரை தாடி. சுருக்கம் நிறைந்த நெற்றியில் குங்குமப் பொட்டு. ஏதோ ஓர் ஏக்கத்தால் கலங்கி, தூக்கமின்மையால் சிவந்து, சிறுத்த கண்கள். வறுமையின் கோலமா, எளிமையின் தோற்றமா என்று பிடிபடாத அழுக்கேறிய ஆடைகள். இடது காலை மடித்து, வலது காலை கீழே தொங்கப் போட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தார் அவர். காலுக்குக் கீழே, முடவருக்குத் துணையான இரண்டு ஊன்று கோல்கள் படுக்க வைக்கப்பட்டிருந்தன. மரியாதையுடன் பரிதாப உணர்ச்சியும் சேர்ந்து கொண்டது. நான் அவர் அருகில் அமர்ந்தேன்.

"நீங்கதான்..?" என்று பேச்சை ஆரம்பித்தார் அவர்.

"ஆம்... நான்தான். என்ன விஷயம்?" என்று கேட்டேன்.

"எனக்கு ஊர் திருவண்ணாமலை. ஸ்ரீ சேஷாத்ரி சுவாமிகள் ஆச்ரமத்திலிருந்து வருகிறேன்..."

"அப்படியா...?"

என்னுடைய முகபாவத்தைக் கண்ட அவருக்குச் சந்தேகம் தோன்றவே ஆச்சரியத்துடன் கேட்டார்:

"சுவாமிகளைப் பற்றி நீங்கள் கேள்விப் பட்டதில்லையா?"

"இல்லை. உங்களிடமிருந்துதான் முதன் முறையாகக் கேள்விப்படுகிறேன். திருவண்ணாமலையில் ஸ்ரீ ரமணாச்ரமம் இருப்பது தான் எனக்குத் தெரியும்."

"ரமணாச்ரமத்திற்குக் கிழக்குப் பக்கத்தில்தான் சேஷாத்ரி சுவாமிகளின் சமாதிக் கோயில் இருக்கிறது. ரமணாச்ரமத்திற்கு வந்த போது இந்த ஆச்ரமத்தைப் பற்றி உங்களுக்கு ஒருவரும் சொல்லவில்லையா?"

"இதுவரை நான் ரமணாச்ரமத்தைக் கூட பார்த்ததில்லை. உண்மையைச் சொல்லப் போனால் நான் திருவண்ணாமலைக்கே போனதில்லை. பத்து வருடங்களுக்கு முன்பு ஒரு முறை அந்த வழியாக சாத்தனூர் அணைக்கட்டுக்குப் போனதாக ஒரு ஞாபகம்."

"அப்படியானால் நீங்கள் ஒருமுறை திருவண்ணாமலைக்கு வந்து அருணாசலேச்வரரைத் தரிசிக்க வேண்டும். அப்படியே சுவாமிகள் ஆச்ரமத்திற்கு வந்து, அதிஷ்டானத்தையும் தரிசிக்க வேண்டும். அவரைப் பற்றி உலகம் அறியவேண்டும் என்று எனக்கு ரொம்ப ஆசை. அந்த மகானுடைய அதிஷ்டானத்தில் நித்திய பூஜை செய்யும் பாக்கியம் எனக்குக் கிடைத்திருக்கிறது. இந்த சரீரம் எடுத்ததன் பலன் அதுதான் என்று நினைக்கிறேன். அந்த மகானின் நூற்றாண்டு பிறந்த தின விழா 1970-ம் வருஷம் ஜனவரி மாதம் 28-ந் தேதி விமரிசையாக நடைபெற வேண்டும் என்று கனவு கண்டு கொண்டிருக்கிறேன். நான் ஒரு பரதேசி. என்னால் ஒன்றும் செய்ய முடியாது.. ஆனால், என் உள்ளே ஏதோ ஒரு வேகம் இருக்கிறது... அந்த உள்ளொளி [illegible] உதவி செய்தால்தான் என் எண்ணம் நிறைவேறும்..."

"நான் என்ன [illegible] வேண்டும், சொல்லுங்கள்."

"சேஷாத்ரி [illegible] வரலாற்றை எழுத வேண்டும். [illegible] லட்சம்பேர் படித்து பயன்பெறும்படி செய்ய வேண்டும்."

"மகான்களைப் பற்றி எழுதுவதை நான் பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன்.. ஆனால், அவர்களுடைய அருளாசி இல்லாமல் அதை சரிவர எழுத முடியாது என்று முழுமையாக நம்புகிறவன் நான். அவசியம் ஒருமுறை வந்து சுவாமிகளின் சமாதிக் கோயிலை தரிசிக்கிறேன். முதலில் என் உள்ளம் ஒளி பெறட்டும்."

"அவசியம் வாருங்கள் எப்போது வேண்டுமானாலும் வாருங்கள். நான் அங்கேயேதான் இருப்பேன். எனக்கு வேறு இடம் கிடையாது."

"சுவாமிகள் வாழ்ந்த காலம் எது? ரமண மகரிஷி இருந்தபோது இவரும் இருந்தாரா?"

"ஸ்ரீ சேஷாத்ரி [illegible] அடங்கியது 1929-ம் வருஷம். அதாவது நாற்பது வருஷம் ஆகிறது... ரமண பகவான் [illegible] அருணாசலேச்வரர் ஆலயத்தின் [illegible] இருக்க முடியாமல் விளையாட்டுப் பிள்ளைகளின் தொந்தரவுகளு

ஆனால் போது, அவரது தபசிற்கு இடைஞ்சல் ஏற்படாமல், பாதாள லிங்க குகைக்கு வழி காட்டியவரே சேஷாத்ரி பிரும்மம்தான் என்று சொல்லுவார்கள். அதற்குப் பிறகு வடப்புறத்தில் மலையடிவாரத்திலிருக்கும் பச்சையம்மன் கோயிலில் இருவரும் சிறிது காலம் ஒன்றாக தங்கியிருந்தார்கள்.''

''சுவாமிகளை நீங்கள் நேரில் பார்த்திருக்கிறீர்களா?''


''பார்க்காமல் என்ன? நான் திருவண்ணாமலையிலேயே பிறந்து வளர்ந்தவன் ஆயிற்றே... எனக்குப் பதினைந்தாவது வயதிலேயே கல்யாணம் ஆகிவிட்டது. எங்கள் கல்யாணத்திற்கு சுவாமிகள் வந்தது எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது. எங்கள் இருவரையும் அன்புடன் தொட்டு ஆசிர்வதித்தார். 'நூறு ஆயுசு' 'நூறு ஆயுசு' என்று மகிழ்ச்சியுடன் பலமுறை சொல்லிச் ஆசி கூறினார்...''

''சுவாமிகள் எங்கே தங்கி யிருந்தார்? இப்போது ஆச்ரமம் இருக்கிறதே, அங்கேயா?''

''இல்லை, இல்லை. அது அவர் அடக்கமான இடம். சுவாமிகள் ஓர் இடத்தில் தங்கி யிருக்க மாட்டார். அலைந்து கொண்டே இருப்பார்; கோயிலில் இருப்பார், குளக்கரையில் இருப்பார், குப்பை மேட்டிலும் இருப்பார், மார்க்கெட்டில் அலைவார்; வீட்டுத் திண்ணையில் படுப்பார். உட்கார்ந்து கொண்டே இருப்பார். திடீரென்று எழுந்து போய் விடுவார். குளிக்கமாட்டார்... ஒழுங்காகச் சாப்பிட மாட்டார்...தூங்க மாட்டார்... கந்தல் துணிதான், அழுக்கு வேட்டிதான்...''

''பார்க்க சித்த பிரமை பிடித்தவர் போல் இருப்பாரோ?''

''பார்க்கிறவர்களுக்கு ஒரு பைத்தியம் மாதிரிதான் இருப்பார். ஆனால், 'அவர் ஒரு மகான்' என்றே எல்லோரும் நினைத்தார்கள். அவர் தொட்டதெல்லாம் விளங்கிற்று. சொன்னதெல்லாம் பலித்தது. அவருக்கு நடப்பதெல்லாம் தெரியும். நடக்கப் போவதும் தெரியும். நாம் நினைப்பதையெல்லாம் அவர் சொல்லி விடுவார்... 'அந்த மகான் தங்கள் வீட்டில் காலடி எடுத்து வைக்க மாட்டாரா?' என்று எல்லோரும்



திரு அருணாசலம்

ஆவலோடு காத்துக் கொண்டிருப்பார்கள்.''

''சுவாமிகள் உங்கள் [illegible] ட்டிற்கு வந்திருக்கிறாரா?''

''ஒருமுறை வந்தி[illegible] ங்கள் அவரை சாப்பிடச் [illegible]. 'சரி' என்று உட்கார்ந்த[illegible] இலையைப் போட்டு பரிமாறினோம். கறி, கூட்டு, குழம்பு, சாதம் எல்லாவற்றையும் ஒன்றாகக் கலந்தார். அதுதான் அவருடைய வழக்கம். இரண்டு மூன்று உருண்டைகளாக உருட்டினார்...... ஆனால், சாப்பிடவில்லை. அந்த உருண்டைகளை நாலு பக்கமும் வாரி வாரி இறைத்தார். என் தகப்பனார் 'ஏன் சுவாமி இப்படிச் செய்கிறீர்கள்?' என்று கேட்டார். அதற்கு சுவாமிகள், 'இந்தப் பக்கத்தில் தேவர்கள் இருக்கிறார்கள். அந்தப் பக்கத்தில் பூதகணங்கள் இருக்கிறார்கள். இதோ இந்தப் பக்கத்தில் மிருகங்கள் பட்சிகள் எல்லாம் இருக்கின்றன. அவர்களுக்

எல்லாம் பசிக்காதா? அதான் போட்டேன்' என்று சொல்லிவிட்டு கையை வேட்டியில் துடைத்துக் கொண்டு போய் விட்டார்...''

"சித்தர் போக்கு சிவம் போக்கு என்று சொல்லுங்கள்.''

"ஆமாம். ஆனால், அவர் செய்கைகளும் பேச்சுக்களும் நமக்குப் புரியாவிட்டாலும், அவர் ஒரு பிரும்மஞானி என்பது அவரது கண்களைப் பார்த்தாலே [illegible]. அது அப்படியே [illegible]. அவர் திருஷ்டி நம் மீது பட்டால் நம்மை அப்படியே உலுக்கிவிடும். [illegible] ஒரு மகானுக்கு [illegible] பாக்கியம் [illegible] பழைய பனித [illegible] அவரது மனம் அலை[illegible] கொண்டிருந்ததை என்னால் உணர முடிந்தது.

ஸ்ரீ [illegible] சுவாமிகளைப் பற்றிய [illegible] அறிய வேண்டும் [illegible] பேசிவிட்டது.

"[illegible] தோற்றம் எப்படி இருக்கும்? அவர் நல்ல உயரமா?'' என்று கேட்டேன் நான்;

"நல்ல உயரமும் இல்லை, குட்டையும் இல்லை. சிவந்த மேனி. குழந்தைப் பேச்சு... ஒரே விஷயத்தை பத்து தரம் சொல்வார்... கேட்க வேடிக்கையாக இருக்கும்...''

"சுவாமிகளுக்கும் திருவண்ணாமலை தானா ஊரா?''

"இல்லை. அவர் காஞ்சிபுரத்திலிருந்து வந்தவர். அவர் சகல சாஸ்திரங்களும் கற்றவர். தேவி உபாசகர். காமாட்சியம்மன் பிரத்யட்சம்! நீங்கள் திருவண்ணாமலைக்கு வாருங்கள். எனக்குத் தெரிந்த விவரங்களையும் என்னிடமுள்ள குறிப்புக்களையும் தருகிறேன். அதை யெல்லாம் எப்படிப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமோ, அப்படிப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்...''

எனக்கு வேறு அலுவல்கள் காத்திருந்ததால் அன்று அத்துடன் திருஅருணாசலத்திடமிருந்து விடை பெற்றுக் கொண்டேன். தம் கடமையை ஆற்றிய மனநிறைவுடன், கைப் பிடிகளை ஊன்றிக் கொண்டு புறப்பட்டு விட்டார் அவர்.

இந்தச் சந்திப்பு நடந்து ஒரு வருடம் ஓடி விட்டது. ஆனால், நான் திருவண்ணாமலைக்குச் செல்லவில்லை; மனித முயற்சி இருந்தது. ஆனால், தெய்வ சங்கல்பம் இல்லை. ஆலய தரிசனமும், புனித யாத்திரைகளும் நினைத்தபோது கிடைத்து விடுவதில்லை. ஒவ்வொன்றுக்கும் ஒரு வேளை இருக்கிறது. அந்த பிராப்தம் இருக்கும் போது தானே கிட்டுகிறது.

*

[illegible] வேண்டும் என[illegible] அந்த வார இறுதியில் [illegible] வருவதாக வாக்களித்து விட்டு அவரை வழியனுப்பிக் கொண்டிருந்த போது, காசியில் இருந்து சென்னைக்கு வந்திருந்த நண்பர் கண்ணன் என்னைக் காண வந்தார். இராமேசுவரத்தில் எழும்பியுள்ள ஸ்ரீ ஆதி சங்கர மண்டபத்தைக் கட்டி முடிப்பதில் அரும் பணியாற்றக் கொடுத்து வைத்த கண்ணன், ஸ்ரீ காஞ்சி ஆசாரிய சுவாமிகளின் திருவருளால் தற்போது காசியில் நிர்மாணிக்கப்பட்டு வரும் பஞ்சாயதன ஆலயப் பணியில் முழு மூச்சுடன் ஈடுபட்டிருக்கிறார்! நான் திருவண்ணாமலை பயணத்தை ஏற்றுக் கொண்டிருக்கும் வேளையில் ஸ்ரீ காமகோடி தெய்வத்தின் கைங்கரியத்தில் ஈடுபட்டிருக்கும் நண்பர் வருகை தந்தது. அருணாசியின் அடையாளமாகவே எனக்குத் தோன்றியது.

திருவண்ணாமலை பயணத்திற்குத் திட்டம் போட ஆரம்பித்தேன்: அச் சமயத்தில் நண்பர் மகாதேவன் என்னைக் காண வந்தார்: வேலூருக்கும் ஆற்காட்டிற்கும் இடைப்பட்ட கீழ்மின்னல் என்ற கிராமத்தில் இரத்தினகிரி என்னும் சிறு குன்றில் ஒரு முருகன் கோயில் இருப்பதாகவும்



செஞ்சிக்கோட்டையின் ஒரு பகுதி.

அங்கு ஒரு மௌன சாமியார் இருக்கிறார் என்றும் அவரைத் தரிசிக்க நான் வரவேண்டும் என்றும் என்னை ஒரு மாதமாக அழைத்துக் கொண்டிருந்தார் அவர்.

வேலூர் மின் வாரியத்தில் பணிபுரிந்து கொண்டிருந்த குமாஸ்தா ஒருவர் சென்ற ஆண்டு அந்த முருகன் கோயிலுக்கு தரிசனத்திற்குப் போனார். ஆறுமுகனின் அருள் சுரந்தது. இல்லற வாழ்க்கை அறுந்தது. அன்றே அக்கணமே ஆண்டியாகி விட்டார். அவரைக் கருவியாகக் கொண்டு, முருகன் தன் ஆலயத் திருப்பணியைத் தொடங்கிவிட்டான். அந்த அதிசய சாமியாரைக் காண்பதற்காகத்தான் என்னை அங்கு வரும்படி வற்புறுத்திக் கொண்டிருந்தார் நண்பர்.

திருவண்ணாமலையிலிருந்து திரும்பும் வழியில் கீழ்மின்னலுக்குச் சென்று இளசாமியாரைத் தரிசிக்கலாம் என்று திட்டம் வகுத்தேன். ஞாயிறு அன்று காலை பத்தரை மணிக்கு நான் அங்கு வருவதாக மகாதேவனிடம் கூறினேன். அவர் சென்னையிலிருந்து நேரே அங்கு வந்து விடுவதாகக் கூறிவிட்டுச் சென்றார்.

சனிக்கிழமை காலை காரில் புறப்படுவதற்கான ஏற்பாடுகளைச் செய்தேன்; முதலில் அலுவலகத் தோழர்களான பாஸ்கரனும் ராகவேந்திரராவும் உடன் வருவதாக உற்சாகத்துடன் கூறினார்கள். நாள் நெருங்க நெருங்க அவர்கள் பின்வாங்கினார்கள். பாஸ்கரன் வீட்டில் ஞாயிற்றுக்கிழமையன்று கார்த்திகை விரதம் முடியும் தினமாம். அன்று குடும்பத்துடன் இருக்க வேண்டும் என்று அவர் பெரிதும் விரும்பினார். ராவ், அன்று சகோதரியை வேலூர் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல வேண்டியிருந்தது. இருவருக்கும் பொறுப்பைத் தட்டிக் கழிக்க முடியாத நிலை. குடும்ப பந்தத்தில் சிக்கிக் கொண்டுவிட்டவர்களை வற்புறுத்த நான் விரும்பவில்லை. புனித யாத்திரைக்குத் தனியாகப் போகவும் என் மனம் இடம் கொடுக்கவில்லை.

என் திட்டத்தைக் கூறி அழைத்ததும் மறுமொழி பேசாமல் உடன் வர ஒப்புக் கொண்டார் ஒண்டிக்கட்டை சேஷாத்ரி. தமிழக மூலை முடுக்குகளெல்லாம் நுழைந்து புறப்பட்டவர் அவர். வழித்துணைக்கு ஏற்ற தோழர். சனிக்கிழமை காலையில் இருவரும் காரில் புறப்பட்டோம்.

திருச்சி நெடுஞ்சாலையில் பயணம் செய்கிறவர்கள், செங்கல்பட்டை அடுத்து அரசமரத்தடியில் ஒயிலாக வீற்றிருக்கும் விநாயகப்பெருமானுக்கு

காணிக்கை செலுத்தாமல் செல்லுவதில்லை. நாங்களும் இறங்கி, அவரை வலம் வந்து, வணங்கிவிட்டு, விபூதி பிரசாதத்தைப் பெற்றுக் கொண்டு பயணத்தைத் தொடர்ந்தோம். அடுத்து, மதுராந்தகத்தில் இறங்கி, ஏரிகாத்த ராமனின் ஆலய கோபுரத் தரிசனம், ராமன் காத்த ஏரியையும் தரிசனம் செய்து சென்றோம். வழி நெடுகிலும், வறட்சியால் வற்றிப் போயிருந்த நீர்நிலைகள் வான் மழையால் நிரம்பி வழிந்த காட்சி உள்ளத்தைக் குளிர வைத்தது. வாட்டி வதைக்கும் இயற்கையே வாழவும் வைக்கிறது. அன்னையின் அடிக்கும் கரங்களே அணைக்கவும் செய்கின்றன.

பயணம் தொடர்கிறது. மைலம் முருகப் பெருமானின் எழில்மிகு ஆலய கோபுரம் தொலைவில் தரிசனம் தருகிறது. திண்டிவனத்திற்குள் திரும்புகிறோம். திந்திரிணீசுவரர் கொலுவீற்றிருக்கும் திக்கு நோக்கி கும்பிடுகிறோம். செஞ்சியை நோக்கிக் கார் பறக்கிறது.

இருபுறமும் பயிராகி இருந்த நிலக்கடலையை பறித்துக் கொண்டிருக்கிறார்கள். சேஷாத்ரிக்கு நாக்கில் நீர் ஊறுகிறது. கார் நிற்கிறது.

மடி நிறைய கடலையை நிரப்பிக் கொண்டு அவ்வழியே வரும் வயோதிகரை சேஷாத்ரி வழி மறிக்கிறார்.

"பெரியவரே. ரெண்டு கடலை கொடேன்."

"ரெண்டு என்ன, இந்தா, எல்லாத்தையும் எடுத்துக்கோயேன்."

இரு கைகளாலும் வாரிக் கொடுக்கிறார். கண்களில் கருணை. உள்ளத்தில் மகிழ்ச்சி. உதட்டில் புன்னகை.

"வேண்டாம் தாத்தா ... ரெண்டு போதும்."

"சும்மா சாப்பிடுங்க. நான் அப்புறம் பறிச்சிக்கிறேன். ஆசைப்படறே, துன்னு."

இருப்பதை யெல்லாம் கொடுத்தே பழக்கப்பட்ட பண்டைய பாரதத்தின் அழியாத் தோன்றல். இருப்பதை மறைத்து, இதயத்தைச் சுருக்கி, இயன்றளவு கொள்ளையடிக்கும் நவீனப் பட்டணத்தான், இந்த வள்ளலுக்கு 'அளித்திருக்கும் அலட்சியப் பெயர் 'நாட்டுப்புறத்தான்!

பயணம் தொடருகிறது. பேச்சை சற்று நிறுத்தி விட்டு மணக்கும் பசுமைக் கடலையை மென்று கொண்டே செல்கிறோம். செஞ்சிக் கோட்டை கண்ணுக்குத் தெரிகிறது. சரித்திரப் புத்தகத்தில் பார்த்துப் பழக்கப்பட்ட காட்சியை முதல் முறையாக நேரில் பார்த்து வியக்கிறேன். சரித்திர ஏடுகள் கண் முன்னால் புரளுகின்றன. 'வந்தானைய்யா ராஜா தேசிங்கு' என்ற பழைய பாட்டு நினைவுக்கு வருகிறது.

"நீ செஞ்சிக் கோட்டையைப் பார்த்திருக்கியா? அங்கே என்ன இருக்கிறது" என்று கேட்டேன் சேஷாத்ரியிடம்.

"பள்ளிக்கூடத்தில் படிக்கும்போது ஒரு முறை ஏறியிருக்கிறேன். பார்த்ததெல்லாம் மறந்து போச்சு... இப்போது ஏறிப் பார்க்கலாமா?" என்று கேட்டார் அவர்.

"இன்று நேரமில்லை. இன்னொரு முறை பார்ப்போம். அருணாசலம் காத்துக் கொண்டிருப்பார்" என்றேன் நான்.

பயணம் தொடர்ந்தது. அருளொளி வீசும் அருணாசலம் கம்பீரமாகக் காட்சியளித்தது. மலை தரிசனம் மனத்துக்கு இதமாக இருந்தது. அருணாசலேச்வரரின் நெடிதுயர்ந்த கோபுரத்தையும் கண்டோம். நெடுநாளைய கனவு பலித்தது. புளகிதம் பொங்கியது. புண்ணியம் சேர்ந்தது.

பகல் பன்னிரண்டு மணி. செங்கம் சாலையில் இருக்கும் ஸ்ரீ சேஷாத்ரி சுவாமிகள் ஆச்ரமத்திற்குள் நுழைந்தோம். அந்த திரு அருணாசலம் எங்களுக்காகக் காத்திருந்தார். "வாங்கோ, வாங்கோ" என்று அவர் உளமார வரவேற்றார். உடன் வந்த நண்பரை யார் என்று விசாரித்தார் அவர்.

"இவர் என் நண்பர். பெயர் சேஷாத்ரி. திருவண்ணாமலைக்கு வரும்படி அருணாசலம் என்னை அழைத்தார்; சேஷாத்ரியே என்னை இங்கு அழைத்துக் கொண்டு வந்து விட்டார்" என்றேன் நான்.

கண்கள் கலங்க, அருணாசலம் பேச்சற்று அசையாமல் நின்றார்.

— தொடரும்.

ஹாஸ்டல் பொறுப்பை ஏற்றுக் கொண்டேன்.

இந்த சமயத்தில்தான் பெரியவருக்கும்-உயர்திரு ராஜாஜி அவர்களுக்கும் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டிருந்தன. பெரியவரோ ஊழியர்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்ற ஊழியராக இருந்தார்.

காங்கிரஸ் கட்சியில நானும் ஓர் ஊழியன். அதனுல், ஓர் ஊழியரின் ஆதரவு, மற்ருேர் ஊழியருக்குத்தான் இருக்க வேண்டும் என்ற எண்ணம் எனக்கு அசைக்க முடியாமல் ஏற்பட்டு விட்டது.

1945-ல் திருப்பரங்குன்றத்தில் காங்கிரஸ் ஊழியர் மகாநாடு நடந்தது. அந்த சமயத்திலெல்லாம் நான் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி மெம்பராகி விட்டேன். இந்தத் திருப்பரங்குன்றம் மகாநாடு ஒரு திருப்பு மையமான மகாநாடாக இருக்கும் என்று எண்ணி, மிகுந்த ஆர்வத்துடன் நானும் எனது நண்பர்களும் அந்த மகாநாட்டிற்குச் சென்ருேம்.

அங்கேதான் நான் முதன் முதலில் பெரியவரை சந்தித்துப் பேசினேன். நண்பர் ஒருவர் என்னை பெரியவருக்கு அறிமுகப்படுத்தி வைத்தார்.


''உங்களைப் பற்றி நிறையக் கேள்விப்பட்டிருக்கிறேன்'' என்ருர் பெரியவர்.

''உங்களை நெடு நாட்களாகவே சந்தித்துப் பேச வேண்டும் என்ற ஆவல். இப்போதுதான் வாய்ப்பு கிட்டியது ..'' என்று கூறிய நான், ''என்னுடைய ஆதரவு உங்களைப் போன்ற ஊழியர்களுக்குத்தான் கிடைக்கும்...'' என்றேன்.

''ஊழியர்களுக்கும் தலைவர்களுக்குமிடையில் வேற்றுமை பாராட்டிப் பேச வேண்டாம். நியாய உணர்ச்சியுடன் கட்சிக் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு உறுதியுடன் பணி புரியுங்கள்'' என்று பெரியவர் ரத்தினச் சுருக்கமாகக் கூறினுர்.

அந்த வார்த்தைகள் இன்னும் என் மனத்தில் பசுமையாக இருக்கின்றன; காரசாரமான விவாதங்களுக்கு மத்தியிலும் அவர் பொறுமையோடும் - நிதானத்தோடும் நடந்து கொண்டது இப்போதும் கூட என் மனக் கண்களில் தெளிவாகத் தெரிகின்றது.

சந்தித்தார்கள்!



இதெல்லாம் நடந்து இன்று ஏறக்குறைய முப்பது ஆண்டுகள் ஆகி விட்டன. முதல் சந்திப்பில் பெரியவர் எனக்கு ஓர் ஊழியராகத் தான் தோன்றினுர். ஆனுல், இன்று பாரதம் போற்றும் உயர்ந்த தலைவர்களில் ஒருவராக நான் அவரை மதித்துப் போற்றுகிறேன். ஆனுல் பெரியவரோ, அன்றும் சரி—இன்றும் சரி, என்னைத் தமது சகாவாகவே நினைத்துக் கொண்டிருக்கிருர்.

எங்களிடையே ஏற்பட்ட முதல் சந்திப்பு, சாதாரணமானதாக இருந்தாலும் எங்கள் இருவருக்கும் இடையில் ஏற்பட்டுள்ள பாசமும், மன நெருக்கமும் அசாதாரணமானதாகும்; இனி, எத்தனை பிறவி எடுத்தாலும் இது தொடர்ந்து வர வேண்டும் என்று தான் நான் பிரார்த்திக்கிறேன்.

(அடுத்த இதழில் பாலதண்டாயுதம்—ஜீவானந்தம்.)

அருணாசல

பரணீதரன்

ஸ்ரீ சேஷாத்ரி சுவாமிகள்



2

ஆசிரமத்திலுள்ள கிணற்றில் கை கால்களை சுத்தம் செய்து கொண்டு, கையில் கொண்டுவந்திருந்த பூ, பழங்களுடன் ஸ்ரீ சேஷாத்ரி சுவாமிகளின் சமாதிக் கோயிலுக்குள் நுழைந்தோம். சிறிய கருவறை. கருவறை மண்டபத்தைச் சுற்றி ஒரு பிராகாரம். அதைச் சுற்றி வந்து, சந்நிதிக்கு எதிரில் கீழே விழுந்து வணங்கினோம். கருவறையில் சிவலிங்கத்திற்கு மேலே, சுவரில் மாட்டப்பட்டிருந்த படத்தில் மகான் சேஷாத்திரி கருணையே உருவாக அமர்ந்திருந்தார். அருள் சுரக்கும் கண்களை உற்று நோக்கியபோது உள்ளத்தில் இணையற்ற பேரமைதி குடி கொண்டது.

'மகாதேவா' என்று உரக்க அழைத்தார் அருணாசலம். ஒரு பையன் வந்து நின்றான். அவனை தீபாராதனை காட்டச் சொன்னார். அவன் சொன்னபடியே செய்தான். நாங்கள் கற்பூர தீபத்தைக் கண்களில் ஒற்றிக் கொண்டு, விபூதிப் பிரசாதத்தைப் பெற்றுக் கொண்டு மெள்ள வெளியே வந்தோம்.

"நீங்கள் வேறு எங்கேயும் போக வேண்டாம். சாப்பாட்டை இங்கேயே வைத்துக் கொள்ளலாம்" என்றார் அருணாசலம். வெளியே சென்றால் நேரம் வீணாகி விடுமே, அந்த நேரத்தில் அவருடன் பேசிக் கொண்டிருக்கலாமே என்று எண்ணி, 'சரி' என்று ஒப்புக் கொண்டேன் நான்.

மகிமை

'மகாதேவா' என்று அருணாசலம் மறுபடியும் குரல் கொடுத்து விட்டு, அவனிடம் தெலுங்கில் ஏதோ சொன்னார். அவனும் பதிலுக்குத் தெலுங்கில் ஏதோ முணு முணுத்தான். யாரிடமோ ஏதோ சொன்னான். அந்த ஆசாமி ரகசியக் குரலில் எதையோ சொன்னான். அதற்குள் ஒருவன் சைக்கிளை எடுத்து வந்து, 'பாத்திரத்தைக் கொடு, நான் போய் வருகிறேன்' என்றான்.

''என்ன விஷயம்? ஓட்டலிலிருந்து சாப்பாடு வாங்கி வரப் போகிறீர்களா?'' என்று அருணாசலத்திடம் கேட்டேன் நான்.

''இங்கே சாதம், குழம்பு இருக்கிறது. போதாததற்குப் பலகாரம் வாங்கி வரச் சொன்னேன்'' என்றார் அருணாசலம்.

''அதெல்லாம் வேண்டாம். இருப்பதைப் போடுங்கள். சுவாமிகள் பிரசாதமாகக் கருதி சாப்பிடுகிறோம்'' என்று நான் கூறியதும், மகாதேவன், பிராகாரத்தின் வட மேற்கு மூலைக்கு எங்களை அழைத்துச் சென்றான். அது ஒரு சிறு சமையலறை. மேடையின் மீது கரி ஏறிய நாலைந்து பாத்திரங்கள். கீழே இரண்டு மூன்று டப்பாக்கள்.

மலையடிவாரத்தில் சமாதிக் கோயில்



முன்புறத் தோற்றம்



ஆண்கள் நடத்தும் குடித்தனத்தின் அலங்கோலத்தை அங்கே காண முடிந்தது.

எங்களுடன் அருணாசலமும் அமர்ந்தார். மகாதேவன் பரிமாறினான்.

''பையன் யாரு?'' என்று பேச்சைத் தொடங்கினேன் நான்.

''இவன் என் பையன். இருந்த வேலையை விட்டு விட்டு எனக்கு சமைத்துப் போட்டுக் கொண்டிருக்கிறான்'' என்ற தகவலைச் சொன்னார் அருணாசலம்.

''பொறுப்புள்ள பிள்ளை. அப்பா கஷ்டப்படுகிறாரே என்று உதவிக்கு வந்திருக்கிறான்'' என்று நான் சொன்னதும், ''அதெல்லாம் இல்லை. இவன் சரியான சோம்பேறி. வேலை செய்ய பிடிக்கலே. இங்கே ஓடி வந்துட்டான்'' என்று சற்று கோபமாகவே கூறினார் அருணாசலம்.

அவர் கூறியது மகாதேவனுக்குப் பிடிக்கவில்லை. அவன் ஏதோ முணுமுணுத்தான்.

எனக்கு அருணாசலத்தின் குடும்ப வாழ்க்கையைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டும் என்று தோன்றவே, அதைப் பற்றி அவரிடம் விசாரித்தேன்.

அருணாசலத்தின் தந்தையான கிருஷ்ண அய்யர் சிறந்த ராம பக்தர். நாம சங்கீர்த்தனத்தில் தம்மை மறந்து ஈடுபடுவார். ஸ்ரீ ராமநவமி, ராதா கல்யாணம் போன்ற உற்சவங்களை சிறப்புடனும் பக்தி சிரத்தையுடனும் கொண்டாடுவார். பிறருக்குப் போஜனம் அளித்து மகிழ்வதையே வாழ்க்கையின் பயனாகக் கருதிய உத்தமர். அவருக்கு நான்கு பெண்கள். வெகு காலம்



சேஷாத்ரி சுவாமிகளின் அதிஷ்டான சந்நிதி

ஸ்ரீராமனிடம் பிரார்த்தித்து, வரப் பிரசாதமாகப் பெற்ற பிள்ளைதான் அருணாசலம்.

இளம் பருவத்தில் வேத பாடசாலையில் வடமொழி பயின்றார் அருணாசலம். பதினாறாவது வயதில்-திருமணம் ஆன இரண்டு வருடங்களுக்கெல்லாம்-தம் தந்தையை இழந்தார். பின்னர், பரம்பரையாக வரும் புரோகிதத் தொழிலில் கிடைத்த வருமானத்தில் குடும்பத்தைக் காப்பாற்றி வந்தார். 1948-ம் ஆண்டில் அன்னையும் இவரை விட்டுப் பிரிந்தார். வளர்ந்து வரும் குடும்ப பாரம் இவரை வாட்டியது. இருக்கும் இன்னல்கள் போதாது என்று, பஸ் விபத்து ஒன்றில் சிக்கிக் கொண்டார். பலமான காயம் பட்டதால் இடது கால் பாதத்தை எடுத்து விட்டார்கள். ஓடி ஆடி சம்பாதித்தவர், பிள்ளைகளின் கையை எதிர்பார்க்க வேண்டிய முடமானார். உடலின் ஊனம் உள்ளத்தை அரித்தது. அவருக்கு குடும்பப் பொறுப்பு அதிகரித்தது. திருமணம் செய்து கொடுத்து விட்டால் பிரச்னை தீர்ந்து விடுகிறதா? படிக்க வைத்து விட்டால் பொறுப்பு முடிந்து விடுகிறதா?

சோதனைகள் அலை அலையாக வந்தன. இல்லறத்தை நல்லறமாக நடத்தி வந்த மனைவியும் நோயுற்று வாடினாள். காலன், புற்று நோயாக வந்து அப்புண்ணியவதியைக் கவர்ந்து சென்று விட்டான். மனைவி மஞ்சளுடன் நிம்மதியாகப் போய் சேர்ந்து விட்டாள். கணவனின் மனமோ சுக்குநூறாக உடைந்தது. அருணாசலத்திற்கு வாழவும் பிடிக்கவில்லை. வீட்டிலிருக்கவும் முடியவில்லை. பெற்ற பிள்ளைகளும், இல்லம் புகுந்த பெண்களும் தம்மை அலட்சியப்படுத்துவதாகத் தோன்றவே, அமைதியை நாடி ஊர் ஊராக யாத்திரை சென்றார். கடைசியில், ஆனந்த நடம் புரியும் சபேசனின் பாதமே தஞ்சமென தில்லையம்பதியை வந்தடைந்தார். அங்கும் சாந்தி கிடைக்கவில்லை. அருகிலுள்ள புவனகிரிக்குச் சென்றார். அங்குதான் அவர் வாழ்க்கைப் பாதையில் முக்கியமான திருப்பம் ஏற்பட்டது.

ஓர் இரவு அவரது கனவில் ஸ்ரீ சேஷாத்ரி சுவாமிகள் வந்து, அவரது தோள்களின் மீது அமர்ந்து, அவர் காதுகளில் 'நமசிவாய' என்ற பஞ்சாட்சர மந்திரத்தை ஓதினார். திருமணத்தின் போது நேரில் வந்து தொட்டு ஆசீர்வதித்த மகான், அமைதியிழந்து, ஆதரவற்றிருந்தவருக்கு அடைக்கலம் தந்து விட்டார்! திருவண்ணாமலைக்கே திரும்பும்படி சுவாமிகள் கூறியதாகவே கருதிய அருணாசலம், அருணாசலம் நோக்கிப் பயணமானார். இது நடந்தது 1959-ம் ஆண்டில்.

ஸ்ரீ சேஷாத்ரி சுவாமிகளின் ஆச்ரமத்தின் அருகில் அவர் வந்து கொண்டிருந்த போது, தெருவில் நின்று கொண்டிருந்த யாரோ ஒரு சாது, "வாருங்கள், அருணாசலம்" என்று அவரை அழைத்தார். அந்த சாதுவுடன் இன்னும் நாலைந்து பேர் நின்று கொண்டிருந்தனர். அவர்கள் எல்லாரும் தம் வருகைக்காகக் காத்திருந்தது போல் தோன்றியது இவருக்கு. அப்போது ஆச்ரமத்தில் கிணறு வெட்டும் திருப்பணி நடந்து கொண்டிருந்தது. ஸ்ரீ சேஷாத்ரி சுவாமிகளின் இச்சைப்படியே எல்லாம் நடக்கிறது என்ற முழு நம்பிக்கையுடன் ஸ்ரீ அருணாசலம் ஆச்ரமத்திற்குள் நுழைந்தார். அன்று முதல் அம்மகானின் அதிஷ்டானத்தில்

கைங்கர்யம் செய்யும் பாக்கியம் அவருக்குக் கிடைத்தது.

அப்பாட்டை முடித்துக் கொண்டு மண்டபத்திற்கு எதிரிலுள்ள மரத்தடி மேடையில் வந்து அமர்ந்தோம்.

வடப்புறத்தில் காட்சி தந்த அண்ணாமலையின் தோற்றமும், சுற்றிலும் நிலவிய நிசப்தமும், மனத்துக்கு சுகமாக இருந்தன. அருகில் வசிக்கும் குடிசைவாசிகள் ஓரிருவர் கிணற்றில் தண்ணீர் சேந்திக் கொண்டிருந்தனர். காவியுடுத்த தாடி சாமியார் ஒருவர் மெள்ள நடந்து, ஆச்ரமத்தை அடுத்துள்ள ஒரு கட்டடத்தில் நுழைந்து, கதவைத் தாளிட்டுக் கொண்டார். பொழுது போகாமல் வெய்யிலில் அங்குமிங்கும் அலைந்து கொண்டிருந்த நாய் ஒன்று, மிக உரிமையுடன் மேடையில் ஏறி, எங்கள் அருகில் சுருண்டு படுத்துக் கொண்டது. குளுமையான மர நிழலில் அமர்ந்திருந்த எனக்கு உண்ட மயக்கம் வந்தது. கால்களை நீட்டினேன்.

"கொஞ்சம் படுக்கிறீர்களா?" என்று கேட்டார் அருணாசலம்.

"வேண்டாம். படுப்பதற்காக நான் இங்கு வரவில்லை. சேஷாத்ரி சுவாமிகளைப் பற்றிய விவரங்களையெல்லாம் கூறுங்கள். அவர் தங்கியிருந்த இடங்களை எனக்குக் காட்டுங்கள். சுவாமிகளை நேரில் பார்த்துப் பழகியவர்கள் யாராவது இருந்தால் சொல்லுங்கள். அவர்களை நான் சந்திக்க வேண்டும்" என்றேன்.

அருணாசலம் இரண்டு மூன்று பெயர்களை நினைவுபடுத்திப் பார்த்து விட்டு, "வயதானவர்கள் ஓரிருவர் இருக்கிறார்கள். ஆனால், உங்களுக்குத் தேவையான விஷயங்களெல்லாம் குழுமணி நாராயண சாஸ்திரிகளின் புஸ்தகத்தில் கிடைக்கும். அதைப் படித்துப் பாருங்கள்" என்றார்.

"புஸ்தகத்தில் படிப்பது இருக்கட்டும். நான் யாரை யாவது சந்தித்துப் பேச ஏற்பாடு செய்ய முடியுமா?" என்று கேட்டேன்.

"அதற்கென்ன, இன்று இரவு ஆச்ரமத்திற்கு வாருங்கள். ரமணாச்ரமத்தில் இருக்கும் ராமசாமி பிள்ளை இங்கு வருவார். அவா முப்பது வருஷங்களுக்கு மேலாக மகரிஷியுடன் இருந்தவர். சேஷாத்ரி சுவாமிகளையும் பார்த்திருக்கிறார். அவரிடம் கேட்டால் உங்களுக்கு விஷயங்கள் சொல்லுவார்" என்று கூறிவிட்டு, 'மகாதேவா' என்று குரல் கொடுத்தார் அருணாசலம்.

முகத்தில் ஒருவித பாவமும் இல்லாமல் மகாதேவன் மண்டப தாழ்வாரத்தில் வந்து நின்றான். அவனிடம் குழுமணி நாராயண சாஸ்திரிகள் எழுதிய சேஷாத்ரி சுவாமிகளின் சரித்திர புஸ்தகத்தை எடுத்து வரும்படி கூறினார் தந்தை. சிறிது நேரத்திற்கெல்லாம் மகன் திரும்பி வந்து, "எங்கே இருக்கு?" என்று கடுகடுத்த முகத்துடன் பல்லைக் கடித்துக் கொண்டு கேட்டான்.

"அதான், அந்த சின்ன மரப் பெட்டியில். அது கூடத் தெரியலே.

மகானின் மற்றொரு தோற்றம்



வெள்ளைச்சட்டை போட்டுக்கிட்டு சினிமாவுக்குப் போகத் தெரியும். இதெல்லாம் தெரியாது'' என்று மகனை கடிந்து கொண்டார் அருணாசலம். முகத்தை 'உர்'ரென்று வைத்துக் கொண்டே உள்ளே போய் புஸ்தகத்தைக் கொண்டு வந்து கொடுத்தான் மகாதேவன். அதை வாங்கி என்னிடம கொடுத்தார் அருணாசலம்.

''சுவாமிகள் தங்கியிருந்த இடங்களைப் பார்க்க வேண்டுமே .'' என றேன் நான்.

''ஓ, பார்க்கலாமே! கம்பத்து இளையனார் கோயில், அன்ன சத்திரம், சடைச்சி ஆச்சியம்மாள் வீடு, சாதுக்கள் மடம், சின்ன குருக்கள் வீடு .''

''அது சரி, அந்த இடங்களை எப்போது பார்க்கலாம்?''

''எப்போது வேண்டுமானாலும் பார்க்கலாம். இப்போதே கிளம்பலாமா?''

''வெய்யிலாக இருக்கிறது. சாயந்திரம் ரமணாச்ரமத்தைப் பார்த்து விட்டு, அந்த இடங்களுக்கெல்லாம் போய் விட்டு வரலாம் என்று நினைக்கிறேன். நாளைக் காலையில் ஊருக்குக் கிளம்ப வேண்டும்.''

''அப்படியே செய்து விட்டால் போகிறது...... ..நீங்கள் மலை ஏறப் போவதில்லையா?''

''அங்கே என்ன இருக்கிறது?''

''ஸ்ரீரமண பகவான் வாசம் செய்த ஸ்கந்தாச்ரமம், விருபாட்ச தேவர் குகை, மாமரக் குகை, குகை நமசிவாயர் கோயில் எல்லாம் இருக்கின்றன. அவசியம் தரிசனம் செய்ய வேண்டிய இடங்கள்.''

நான் நண்பரைப் பார்த்தேன். 'ஏறிப் பார்த்துவிட வேண்டியதுதான்' என்பதுபோல் தலையை ஆட்டினார் சேஷாத்திரி.

'மகாதேவா' என்று அடி வயிற்றிலிருந்து உரக்க அழைத்தார் அருணாசலம். 'இதென்னடா தொந்தரவாப் போச்சு?' என்ற எரிச்சல் முகத்துடன் மகாதேவன் வந்து நின்றான்.

''இவர்கள் மலை ஏற வேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள். நீ அழைத்துக் கொண்டு போகிறாயா?'' என்று கேட்டார் தந்தை.

மலை என்றதும் அவன் முகத்தில் உற்சாகக் குறி படர்ந்தது. 'தயார்' என்பது போல தலையை ஆட்டினான்.

''எத்தனை நேரம் ஆகும்?'' என்று கேட்டேன் நான்.

''மூன்று மணி நேரம் பிடிக்கும்'' என்றான் மகாதேவன்.

''எதுக்குடா மூன்று மணி? இரண்டு மணியில் போய் வந்து விடலாம்'' என்றார் அருணாசலம்.

''ம்..நீ ஒரு மணியிலே கூட போய் வந்துடுவே! ரொம்ப தெரிஞ்ச மாதிரி சொல்றயே! குறைஞ்சது இரண்டரை மணியாவது ஆகும்'' என்று தந்தையை மறுத்துப் பேசினான் மகாதேவன். இந்த வாக்குவாதம் மேலும் வளராமல் தடுக்கும் பொருட்டு நான், ''அப்படியானால் இன்னொரு நாள் பார்த்துக் கொள்ளலாம்'' என்று மலை ஏறும் 'முடிவு'க்கு முற்றுப் புள்ளி வைத்தேன். மகாதேவனுக்கு 'சப்'பென்றாகி விட்டது!

சற்று நேரம் ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகளைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம். அலுவலகத்திலிருந்து வந்தபோது என்னிடம் கூறிய விஷயங்களை மீண்டும் கூறியதோடு, பக்தர்களுக்கு நேர்ந்த அற்புத அனுபவங்களைப் பற்றி கர்ண பரம்பரையாக கூறப்படும் பல நிகழ்ச்சிகளையும் கூறினார் அருணாசலம். சுவாமிகளின் பழக்க வழக்கங்களைப் பற்றி அவர் கூறிய விஷயங்கள் என் மனத்தில் ஆழமாகப் பதிந்தன.

மகான் சேஷாத்திரி, கடைத் தெருவில் நடந்து செல்லும் போது ஏதாவது ஒரு கடைக்குள் நுழைவார். அங்கு இருக்கும் சாமான்களை வாரி இறைப்பார். ஆனால், கடைக்காரர் ஒன்றுமே சொல்ல மாட்டார். மாறாக, மகிழ்ச்சி அடைவார். அன்று அவருக்கு நல்ல வியாபாரம் ஆகும்.

ஒரு கடைக்குள் நுழைவார். கல்லா பெட்டியைத் திறந்து பணத்தை எடுத்து வீசி எறிவார். அந்தக் கடைக்காரர் உடனே சுவாமிகளின் காலில் விழுந்து கும்பிடுவார். அன்று அவருக்கு பெரும் லாபம் கிடைக்கும்.

துணிக் கடைக்குள் நுழைவார். கடைக்காரர் பரிதாபப்பட்டு, அழுக்கேறிய அவர் கந்தல் ஆடையைக் களைந்து, புது வேட்டியைக் கட்டி அனுப்புவார். மறுநாளே அதைச் சாணிக் கருணையாக்கி விடுவார் சுவாமிகள். சில சமயம் புத்தாடையை

அவிழ்த்து தெருவிலுள்ள பிச்சைக் காரனிடம் கொடுத்து விடுவார். அல்லது அதைத் துண்டு துண்டாக கிழித்து, முடிச்சுப் போட்டு, கன்றுக் குட்டிகளுக்கும், கழுதைகளுக்கும் நீண்ட வாலாகக் கட்டி, அவை ஓடு வதைக் கண்டு கை கொட்டிச் சிரிப் பார். எப்போதாவது யாராவது அவரைப் பிடித்து 'ஷேவ்' செய்து கொள்ள உட்கார வைப்பார்கள். பாதியிலேயே எழுந்து ஓடி விடுவார். அரைகுறையாக வழிக்கப்பட்ட முகத் துடன் உடலை மறந்த பரப்பிரும்ம மாகவே அலைந்து கொண்டிருப்பார்.

சுவாமிகள் சொன்ன வாக்குப் பலிக் கும. தற்போது மித்திரன் நிருபராக இருக்கும் திலக சாஸ்திரி வீட்டுக்குள் ஒரு நாள் சுவாமிகள் நுழைந்து, சாஸ்தி ரியின் சகோதரனைப் பார்த்து, ''மணி இருக்கானே மணி. அவனை ஒரு வாரத் தில எமன் கொண்டு போய்விடுவான்'' என்று கூறிவிட்டுச் சென்று விட்டார். ஒரு வாரத்திற்கெல்லாம், நன்றாக விளையாடிக் கொண்டிருந்த மணி திடீ ரென்று இறந்து விட்டான்.

ஒரு சமயம் அருணாசலத்தின் தந்தை உடல்நலம் குன்றி, பிழைப்பதே கடி னம் என்ற நிலையில் இருந்தார். அருணா சலத்திற்கு அழுகையே வந்து விட் டது. கம்பத்து இளையனார் கோயிலில் அமர்ந்திருந்த சுவாமிகளிடம் ஓடிச் சென்று கண்ணீர் சொரிய, மனத்தில் தியானம் செய்து கொண்டு நின்றார். ஆனால், தந்தையின் நிலையைப் பற்றி ஒரு வார்த்தையும் கூறவில்லை. அப் போது யாரோ ஒரு பக்தர் கொண்டு வந்து வைத்த வாழைப்பழங்களில் இரண்டை எடுத்து, அருணாசலத்தின் மீது வீசி எறிந்து, 'இதைக் கொண்டு போ, கொண்டு போ' என்று சுவாமி கள் கூறினார். மகான் ஆசியுடன் அளித்த வாழைப்பழ பிரசாதத்தை எடுத்து வந்து தந்தைக்கு அளித்தார் அருணாசலம். மறுகணமே நோயின் கடுமை குறைந்து, தந்தை பிழைத்து எழுந்து விட்டார்.

ஸ்ரீ அருணாசலேச்வரர் ஆலயத்தி லுள்ள கம்பத்து இளையனாரான ஸ்ரீ முருகன் சந்நிதியிலும், சாதுக்கள் மடத்திலும், சடைச்சி ஆச்சியம்மாள் வீட்டுத் திண்ணையிலும் சுவாமிகளுக்கு எப்போதும் படுக்கைகள் போடப்பட் டிருக்கும். எங்கெல்லாமோ சுற்றித் திரிந்து விட்டு, களைத்துப் போனால் வந்து படுப்பார். இஷ்டம் இருந்தால் ஆகாரம உட்கொள்வார். வேண்டாம் என்றால் நாள் கணக்கில் அதைத் திரும்பிக் கூட பார்க்க மாட்டார். அழுகிப் போன பழங்களையும், ஊசிப் போன குழம்புச் சோற்றையும் அப் படியே வைத்திருந்து, நினைத்தபோது அதை அமிர்தமாக உண்டு ஆனந்த மடைவார். அருகில் இருப்பவர் களுக்கு துர்நாற்றம் மூக்கைத் துளைக்கும்!

ஆச்சியம்மாள் ஒருத்தியிடம் தான் சுவாமிகள் சற்று அடங்கி நடப்பார். அவள் அதட்டல் போட்டால் நடுங்கு வார். அவரைக் கட்டாயப்படுத்தி குழந்தையைப் போல் வாயில் சாதம் ஊட்டுவாள் அந்த அம்மாள்.

சுவாமிகளின் பிறப்பு, வளர்ப்பு அவர் காஞ்சியிலிருந்து திருவண்ணா மலைக்கு வந்த வரலாறு எல்லா வற்றையும் அறிந்து கொள்ள வேண் டும் என்று துடித்தேன். அருணாசலத் தைக் கேட்டால் 'எல்லாம் புஸ்தகத் தில் இருக்கிறது. படித்துத் தெரிந்து கொள்ளுங்கள்' என்றுதான் சொல்லு வார். எனவே அவரைக் கேட்க வில்லை. சுவாமிகளின் வாழ்க்கையை விட ஆச்ரமத்தின் வளர்ச்சியைப் பற்றி அவர் அதிகம் பேசினார். அங்கு பக்தர்களின் உதவியால் ஆண்டு தோறும் ஆராதனையும் ஜயந்தி விழா வும் சிறப்பாக நடந்து வருவதைப் பற்றிக் கூறினார். நூற்றாண்டு ஜயந்தி தினம் சிறப்பாக நடை பெறுவதற்கு குருநாதன் அருள் புரிவார் என்ற நம்பிக்கையையும் தெரிவித்தார். அவர் எதிர்காலத்தைப் பற்றியே பேசினார். என் மனமோ கடந்த காலத்தையே சுற்றிச் சுற்றி வந்தது.

''மகானின் பூத உடலை அடக்கம் செய்தபோது, ஸ்ரீ ரமண மகரிஷியே நேரில் வந்திருந்து, மௌன அஞ்சலி செலுத்தினார். அவர் மேற்பார்வை யில்தான் எல்லா சடங்குகளும் நடந் தேறின'' என்று அருணாசலம் கூறிய போது, காண்பதற்கரிய அக் காட்சி யைக் கற்பனையில் கண்டேன். மக ரிஷியின் சமாதிக் கோயிலை தரிசிக்க வேண்டும் என்று தூண்டியது மனம். அருணாசலத்தின் துணையுடன் ரமணாச்ரமத்திற்குப் புறப்பட்டேன்.

—தொடரும்.



நேயர் தபால்



கல்யாணராமன் சந்தானம்

இன்னும் இருவர் கொட்டகையில்...!

அருமையாகப் பாடும் இளம் வித்துவான்களை இன்னும் கொட்டகையில் நிறுத்தி வைத்திருக்கும் கொடுமையை ஆணித்தரமாகக் கண்டித்ததற்கு, சங்கீத உலகமே உங்களுக்கு நன்றி சொல்கிறது. நீங்கள் குறிப்பிட்டிருக்கும் சிறந்த வித்துவான்களோடு மகாராஜபுரம் திரு சந்தானம், திரு எஸ். கல்யாணராமன் இருவரின் பெயர்களையும் குறிப்பிடாமல் விட்டிருந்தது தான் குறை.

சென்னை-34. சி. வசந்தா.

ஜனநாயக சங்கம்

ஜனநாயகத்திலும் இந் நாட்டின் முன்னேற்றத்திலும் உண்மையுடன் அக்கறை கொண்டிருக்கும் 'ஜனசங்கம்' பற்றி நேர்மைத் திறனுடன் கருத்து வெளியிட்டிருக்கும் விகடனை வாழ்த்துகிறோம்.

புனா-ஜே. சி. சேகர், பி. என். குமார்.

உரிய நேரத்தில் பொருத்தமாக எழுதப் பெற்ற அருமையான தலையங்கம்!

புலவர் கே. சுப்பிரமணியன்.
மேட்டுப்பாளையம்.

துணிவும் நேர்மையும் மிக்க தலையங்கம். விகடன் ஒருவன்தான் இப்படி, பலமிருக்கும் பக்கம் சாயாமல் துணிவுடன் காலமறிந்து மக்களுக்காகச் சிந்தித்து மக்களுக்காகப் பேசமுடியும்!

கோவை. ஆர். முத்துராமன்.

மாற்றுக!

சென்னை, நாகப்பட்டினம் துறைமுகங்களிலிருந்து பினங்கு, சிங்கப்பூர் வந்து திரும்பும் கப்பல்களில் ஒன்றின் பெயர் 'ஸ்டேட் ஆப் மெட்ராஸ்'. 'மெட்ராஸை' அதிகார பூர்வமாக 'தமிழ்நாடு' என்று மாற்றம் செய்த பின்னர், இன்னும் கப்பலின் பெயரை மாற்றுமலிருப்பது பெருங் குறை. அரசினர் உடனே ஆவன செய்வார்களா?

சிங்கப்பூர்-2. கே. வெ. சண்முகம்.

'திருமண'ப் பாண்டவர்கள்!

இசைப் பாண்டவர்களைப் பற்றி, இனிமை ததும்ப எழுதிய உங்களுக்கு நன்றி. ஆனால், சமீபத்தில் பிரபல நடிகை ராதிகாவைத் திருமணம் செய்து கொண்ட திரு சந்திரசேகரையும், ஏற்கெனவே திருமணமான மனோகரையும் பிரம்மசாரிகள் பட்டியலில் சேர்த்து விட்டீர்களே!

நுங்கம்பாக்கம். சிவாஜி சதுர்வேதி.

ராஜாதி ராஜா!

இயல் இசை நாடகம் என்ற முக்கலைகளை அன்று மூவேந்தர்கள் வளர்த்தார்கள். இன்று விகடன் வளர்க்கிறது. நல்ல நடை இலக்கியத்தோடு, நாடகம், இசை போன்ற கலைகளுக்கும் சிறப்பிடம் தருவது மிகச் சிறப்பு.

என். சுந்தரமூர்த்தி எம். பி. பி. எஸ்.
வேலூர்.

கொண்டு வாருங்கள் ஆட்டோகிராபை

'ஆட்டோ கிராப்' பகுதியை ஓசைப் படாமல் நிறுத்தியது ஏன்? நீங்கள் குறிப்பிட்ட நட்சத்திரங்களைத் தவிர மற்றவர்கள் ரசிகர்களுக்கு புகைப்படம் அனுப்புவதில்லையா?

காரமடை. ர. மணிமாறன்.

சென்னை கெயிட்டி · நடராஜ் · மகாராஜா · ராம் மற்றும் தென்னாடெங்கும்.



தண்டாயுதபாணி பிலிம்ஸ்

அளிக்கும்...

தேவரின்

பெண் தெய்வம்

டைரக்ஷன்
M.A.திருமுகம்

திரைக்கதை தயாரிப்பு
சாண்டோ M.M.A.சின்னப்பாதேவர்

ELEGANT

அருணாசல மகிமை

ஸ்ரீ மாத்ருபூதேச்வரர் ஆலயம் (ரமணாச்ரமம்)

3

இருபது வருடங்களுக்கு முன் ஒரு கனவு கண்டேன். ஆனால், விடிந்து எழுந்ததும் மறந்து விடும் தோற்றம் அல்ல அது. என் உள்ளத்தில் பதிந்து, சிந்தையில் கலந்து, உணர்வோடு ஒன்றி விட்ட அற்புத அனுபவம். நினைக்கும் போதெல்லாம் என் கண் முன்னால் நிழலாடும் காட்சி அது.

பகவான் ரமணர், கையில் தடியை ஊன்றிக் கொண்டு, ஒரு காலை இழுத்த படி மெள்ள நடந்து வருகிறார். அவர் தோளில் ஒரு குரங்கு உட்கார்ந்து கொண்டிருக்கிறது. உதடுகளில் தெய் விகப் புன்னகை தவழ, தேனினும் இனிய குரலில் அவர் பேசுகிறார்: ''என்னைப் பார்க்க வரேன் வரேன் என்று சொல்லிக் கொண்டிருக்கிறாயே யொழிய, வரவே மாட்டேங்கிறியே. அதான் வந்தேன்'' என்று அப்புனிதர் கூறியதும், நன்றி உணர்ச்சியால் பரவசமானேன். மகரிஷிக்கு நமஸ் காரம் கூட செய்யத் தோன்றாமல் பூரிப்பால் பிரமித்துப் போய் அமர்ந் திருந்தேன். நான் கொடுத்து வைத் தது அவ்வளவுதான். கண் விழித்து விட்டேன்.

எனக்குக் காட்சி தந்த ஒரு மாதத் திற்கெல்லாம் ஸ்ரீரமணர் மகா சமாதி யடைந்து விட்டார். உடலை விட்டுப் பிரியப் போகும் காலம் நெருங்கி விட் டது என்று தெரிந்து, எனக்கு தரிச னம் தந்து அருள் பாலித்தாரோ என்று நான் நினைப்பது உண்டு. எனவே, பகவானை நேரில் தரிசிக்க வில்லையே என்ற குறை எனக்கு என் றுமே இருந்ததில்லை.


நான் கண்ட கனவில் ஓர் ஆச்சரி யம் அடங்கி யிருந்தது. நான் கனவு கண்டபோது எனக்கு ஸ்ரீரமண மக ரிஷியைப் பற்றி அதிகம் தெரியாது. அவர் தடியை ஊன்றியபடி, காலைச் சற்று இழுத்து இழுத்து நடப்பார்

பரணீதரன்

என்றோ, குரங்குகளுடன் தோழனுகப் பழகுவார் என்றோ எனக்குத் தெரியவே தெரியாது. அம்மாதிரியான படங்களைக் கூட நான் பார்த்ததில்லை. எங்கள் வீட்டிலிருந்த பெரியவர்கள் சிலர் முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு, திருவண்ணுமலையில் ஸ்ரீரமணரை தரிசனம் செய்து விட்டு வந்து, ''அவர் சந்நிதியில் அமர்ந்து கொண்டிருப்பதே மனச்சாந்தியைத் தருகிறது'' என்று பேசிக் கொண்டிருந்ததை நான் கேட்டிருக்கிறேன். அவ்வளவுதான். கடவுளைப் பற்றியோ, கோயில்களைப் பற்றியோ, மகான்களைப் பற்றியோ சிறிதும் அக்கறை செலுத்தாத பருவம் அது. ஆனல், ஸ்ரீரமண மகரிஷியை மட்டும் பார்க்க வேண்டுமென்ற ஆவல் என்னுள்ளே ஆழமாக பதிந்து விட்டிருந்தது. அப்படி யிருந்தும், திருவண்ணுமலைக்குப் போவதற்கு நான் ஒரு முயற்சியும் செய்ய வில்லை. என் ஆசையை நான் யாரிடமும் கூறியதும் கிடையாது.

அந்நிலையில், ஸ்ரீரமணரின் ததரூப தரிசனத்தை பொய்த் தோற்றமாக நான் எப்படிக் கருத முடியும்? நான் கண்டது கனவு அல்ல; சத்திய தரிசனம். சத்தியம் என்றும் நிலைத்து நிற்கும். அது மறைவதில்லை; அழிவதில்லை.

கருவறை




ஸ்ரீரமணுச்ரமத்திற்கு முதன் முறையாகப் போகும் போது, நனவான என் கனவு கண் முன்னுல் நிழற்படம் ஆட, புன்முறுவலுடன் நின்ற பகவானின் பாதங்களை மானசீகமாக வணங்கினேன். ஆச்ரமத்திற்குள் நுழைந்த போது, அடிக்கடி பார்த்துப் பழக்கப்பட்ட ஓர் இடத்துக்குப் போவதாகவே எனக்குத் தோன்றியது.

''இதுதான் மாத்ருபூதேச்வரர் ஆலயம். மகரிஷியின் தாயார் சமாதியின் மீது எழுப்பப்பட்டுள்ள கோயில்'' என்று அருணுசலம் கூறியதும் பெரும் பேறு பெற்ற அம்மாதரசிக்கு மௌன அஞ்சலி செலுத்திக் கொண்டே கோயிலுக்குள் நுழைந்தோம்.

முன் மண்டபத்தில் ஆச்ரம அலுவலகமும், புத்தகசாலையும் இருக்கின்றன. அங்கு தெற்கு நோக்கி, தட்சிணுமூர்த்தியைப் போல் அமர்ந்திருக்கும் ஸ்ரீ ரமணரின் சிலை கண்ணையும் கருத்தையும் பறிக்கிறது. பச்சைக் கல்லில் செதுக்கப்பட்டுள்ள அந்த உருவச் சிலை எந்தக் கணமும் உயிர் பெற்று எழுந்து விடக் கூடும்! அத்தனை ஜீவ களை! அதைப் படைத்த கலைஞரின் கலைத் திறனை விட, அவரது ரமண பக்தியைப் பாராட்டிக் கொண்டே, மனமில்லாமல் அவ்விடத்தை விட்டு நகர்ந்தேன்.

ஸ்ரீமாத்ருபூதேச்வரர் ஆலயம், தெய்வத் தாயின் நினைவுக்கு தெய்வ மகன் எழுப்பிய தேவாலயம். பெற்ற மகனை உலகிற்கு அளித்துவிட்டு, தாய்ப் பாசத்தை ஞானத் தீயில் பொசுக்கி, முற்றும் துறந்த சந்நியாசினியாக, ஞானப்பிள்ளையின் சேவைக்கே தம்மை அர்ப்பணித்துக் கொண்ட உத்தமி அல்லவா அழகம்மை? பந்த பாசத்தை அறுத்துக் கொண்டு, பால பருவத்திலேயே ஞான குருவாகி, அன்னையின் இறுதி மூச்சு அடங்கும் வேளையில் அவளை மடியில் கிடத்தி, மார்பில் ஒரு கரமும் தலையில் ஒரு கரமும் வைத்து, அத்தூய ஜீவனை கரையேற்றி வைத்த கருணை வள்ளல் அல்லவா ரமணர்? ஸ்ரீ ஆதிசங்கரரின் வாழ்க்கை சரிதத்தை நினைவு படுத்தும் புனித வரலாறு ஆயிற்றே அது!

ஆலயம் சிறியதாக இருந்தாலும், அது விளக்கும் ஆன்மிகத் தத்துவம் கடலை விட பெரியது. கருவறையில் மாத்ருபூதேச்வரருக்கு அருகில், மகரிஷியால் பிரதிஷ்டை செய்யப்பட்ட ஸ்ரீசக்ரம் காணப்படுகிறது.



மகரிஷி தரிசனம் தருகிறார்...

முன்னால எழில் கோலத்துடன் நிற்கும் யோகாம்பிகையையும் தரிசித்துக் கொள்கிறோம்.

தாயின கோயிலைச் சுற்றி வந்தால், வலப்புறமுள்ள வாயிற்படி வழியாக தனயனின் கோயிலுக்குச் செல்லலாம். சலவைக் கற்களால் ஆன சமாதிக் கோயிலுக்கெதிரில் கண் மூடி நின்றேன். எண்ணங்களெல்லாம் ஒடுங்கி, மகரிஷியின் பிரும்ம சொருபத்தில் மனம் லயித்தது.

ஆனால், அந்த மன அமைதி சிறிது நேரமே நிலைத்தது. சூழ்நிலையின் புனிதத்தைக் கெடுக்கும் வகையில் அங்கு கட்டட வேலை செய்பவர்கள் 'டக் டக்' என்று அடித்துக்கொண்டிருந்தார்கள். சமாதி கோயிலுக்கு முன், பிரமாண்டமான மண்டபம் ஒன்று எழும்பிக் கொண்டிருக்கிறது. அடுத்த ஆராதனை தினத்திற்குள் அதைக் கட்டி முடித்து விட வேண்டும் என்ற வேகத்தில் மும்முரமாக வேலை நடக்கிறது என்று அருணாசலம் கூறினார்.

அங்கிருந்து வடக்கே போனால், வலப்புறத்தில் ஒரு பெரிய கிணறு இருக்கிறது. அதில் தண்ணீருக்கு என்றுமே பஞ்சம் இருப்பதில்லையாம். 'மகரிஷி காட்டிய இடத்தில் தோண்டியதால்தான் இதில் நீர் வற்றாமல் இருக்கிறது' என்று ஒருவர் கூறினார்.

இடப்புறம் திரும்புகிறோம். அங்கு ஒரு ஹால். 'தயவு செய்து நிசப்தமாய இருங்கள்' என்று அங்குள்ள ஜன்னலில தொங்கும் அட்டை நம்மை வேண்டிக் கொள்கிறது.

''இதுதான் தியான மண்டபம். இங்குதான் ஸ்ரீரமணர் அமர்ந்திருப்பார். எல்லாருக்கும் இங்குதான் தரிசனம் அளிப்பார்'' என்று குரலைத் தாழ்த்தி, மிக ரகசியமாகக் கூறினார் அருணாசலம். உள்ளே நுழைந்தோம். அங்கு நிலவும் ஆழ்ந்த அமைதி, ஆன்மிக சாந்தியாகப் பரவி நம்மையும் ஆட்கொள்கிறது.

சுவர் ஓரமாக நான்கைந்து பேர் கண்களை மூடி தியானத்தில் அமர்ந்திருந்தனர். அதில் இரண்டு பேர் வெளிநாட்டுக்காரர்கள். நாங்களும் அமர்ந்தோம்.

எதிரில் பகவான் கால்களை நீட்டியவாறு ஒரு நீளமான சோபாவில் அமர்ந்திருந்தார். கோயில் மண்டபத்திலிருக்கும் உருவச் சிலையைப் போல் அந்தப் புகைப்படமும் அத்தனை உயிரோட்டத்துடன் திகழ்கிறது. எதிரில் ஒரு குத்துவிளக்கு எரிகிறது. ஊதுவத்தியின் நறுமணம் அறையைச் சூழ்கிறது. சோபாவின் மீது வைக்கப்பட்டுள்ள புகைப்படத்தில் இருக்கும் கடிகாரமும் விளக்கும் மகரிஷி,

காலத்தைக் கடந்து வாழும் ஞான தீபம் என்பதை நமக்கு நினைவு படுத்துகின்றன.

அப்போது ஓர் அன்பர் வருகிறார். மகரிஷி அவரைப் பார்த்து புன்னகை புரிகிறார். வந்தவர் அருகில சென்று தம் குறையைக் கூறுகிறார். மகரிஷி சிறிது நேரம் மௌன மாக இருந்து விட்டு அன் பரை கருணையோடு நோக்கு கிறார். அந்தப் பார்வை அவர் உடலைக் கடந்து, இதயத்தில் பாய்கிறது. வந்தவரின் கண் கள் பனிக்கின்றன. ஏதோ பேச வேண்டும் என்று நினைக் கிறார். குரல் எழும்பவில்லை. திணறுகிறார். தேம்பித்தேம்பி அழுகிறார். பகவான் முகத்திலோ புன்சிரிப்பு அரும்புகிறது. வந்தவர் நமஸ்காரம் செய்து விட்டுப் போய் விடுகிறார்.

ஜன்னல் வழியாக ஓர் அணிப் பிள்ளை வருகிறது. மகரிஷியின கைக வில் ஏறி விளையாடுகிறது. ரமணர் குனிந்து டபபாவிலிருந்து முந்திரிப் பருப்பை எடுத்து அதற்குத் தருகிறார். அண்ணலின் உள்ளங்கையை அன்னை யின் மடியாக நினைத்து அதில் அமர்ந்து அந்தப் பருப்பைக் கடித்துத் தின்கிறது அணில். பகவான் அதைப் பார்த்து மகிழ்கிறார்.

ஜன்னலுக்கு வெளியே ஒரு குரங்கு வந்து உட்காருகிறது.


"என்னடா, மறுபடியும் வந்துட் டியா? இன்னிக்கு இதோட உனக்கு மூன்று பழம் கொடுத்தாச்சு" என் கிறார் பகவான்.

குரங்கு குழைகிறது. 'இன்னும் ஒண்ணே ஒண்ணு கொடுத்துடு, இனிமே வரவே மாட்டேன்' என்று குழந்தையைப் போல் கெஞ்சும் பாவம் அதன் முகத்தில் தெரிகிறது.

"போடா...நீ எப்போதும் இப்படி பிடிவாதம் பிடிச்சே காரியத்தை சாதிச்சுக்கிறே" என்று கண்டிப்புடன் பேசிய கருணாமூர்த்தி, கைத் தடியை எடுக்கிறார். பயந்து ஓடுவது போல் ஓடி விட்டு, மறுபடியும் வந்து 'பழி'யாக உட்கார்ந்து விடுகிறது அந்தக் குரங்கு. பகவானின் சுபாவம் அதற்கு நன்றாகத் தெரிந்திருக்கிறது. சிரித்துக் கொண்டே அவர் ஒரு வாழைப் பழத்தை எடுத்து அதற்குக் கொடுக்கிறார். குரங்கு கையை நீட்டி வாங்கிக் கொள்கிறது. 'நல்ல அம்மா, சமத்து அம்மா' என்று கூறாமல் கூறி, குதித்துக் கொண்டு ஓடி விடுகிறது.

ஒரு பசு மாடு, அறைக்குள் வரு கிறது. ஒருவரையும் சட்டை செய் யாமல் அது நேராக மகரிஷியிடம் போகிறது. அதன் கண்களில் நீர் வழிகிறது. 'அம்மா' என்று பரிதாப மாகக் கத்துகிறது.

'லட்சுமி, உனக்கு என் னம்மா உடம்பு?' என்று கழுத்தைத் தடவி விட் டுக் கொண்டே கேட்கி றார் பகவான். பசு அவ ரையே உற்றுப் பார்க் கிறது. அதன் பேச்சு அவருக்குப் புரிகிறது. வயிற்றை மிருதுவாகத் தடவிக் கொடுக்கிறார்.



மகரிஷியின் சமாதி



தியான மண்டபம்

"போம்மா... எல்லாம் சரியா போயிடும். நான் சாயந்திரம் வந்து உன்னைப் பார்க்கிறேன்" என்று சொல்லி அனுப்புகிறார். பசுவும் திருப்தி அடைந்து திரும்பிப் போய் விடுகிறது.

ஒரு அமெரிக்க மாது வருகிறாள். பகவானை நெருங்கி "எனக்கு மன அமைதியே இல்லை. அதைப் பெறுவதற்கு ஒரு வழி சொல்லுங்கள்" என்று கேட்கிறாள்.

பகவான் புன்னகைக்கிறார். "அமைதி இல்லை என்று நினைப்பதற்கு காரணமே உன் மனம்தான். எண்ணங்கள் அடங்கினால் மனம் ஒடுங்கும். மனம் ஒடுங்கினால் உன் ஆத்ம சொரூபம் பளிச்சென்று தெரியும். எனவே, எண்ணங்களைத் துரத்திக் கொண்டு ஓடாமல், அவை எங்கிருந்து புறப்படுகின்றன என்று சிந்தனை செய். அதுவே தியானம், யோகம் எல்லாம். எண்ணங்களின் மூலத்தைக் கண்டு பிடித்தால் உனது உண்மையான தன்மை தெரிந்து விடும். 'நீ யார்' என்பது விளங்கி விடும். உன்னை உணர்ந்து கொண்டு விட்டால், பிறகு அமைதியையும் ஆனந்தத்தையும் தவிர வேறு ஒன்றுமே இருக்காது."-இதை ஒருவர் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கிறார். அந்த அமெரிக்க மாது அதை அப்படியே எழுதிக் கொண்டு போகிறாள்.

கண்களைத் திறந்தேன். எல்லாம் மனப் பிரமையின் படப் பிடிப்பு. புத்தகங்களைப் படித்ததன் விளைவு. ஆனால், அந்தக் கற்பனை காட்சிகளில் சத்தியத்தின் சாயல் படிந்திருந்தன.

மலைக்குப் போகும் பாதை



எழுந்து, அங்கு வைக்கப்பட்டிருந்த விபூதியை எடுத்து நெற்றியில் திட்டிக் கொண்டு அடிமேல் அடி எடுத்து பய பக்தியுடன் அறையை விட்டு வெளியேறினோம். மறைந்ததாகக் கூறப்படும் மகரிஷி அங்கு இன்றும் அமர்ந்திருக்கிறார் என்ற உணர்வு நம்மை விட்டு நீங்க மறுக்கிறது.

இடப்புறத்தில் நந்தவனமும் அதற்கு அடுத்து ஆச்ரம மருத்துவமனையும் இருக்கின்றன. "இங்கேதான் பகவானுக்கு இடது கையில் ஆபரேஷன் செய்தார்கள்" என்று சுட்டிக் காட்டினார் அருணாசலம்.

மருத்துவமனையை ஒட்டினாற் போல் காணப்படும் பாதையின் வழியாகத் தான் மலைக்குச் செல்ல வேண்டும். இந்த வழியாகத்தான் மகரிஷி தினமும் மலைக்குச் சென்று சிறிது நேரம் உலவிவிட்டு வருவாராம்.

அதற்குப் பக்கத்தில், தெற்கை நோக்கி, ஆச்ரமத்தில் வளர்ந்த பசு லட்சுமிக்கு சமாதி கட்டப்பட்டிருக்கிறது. லட்சுமியின் உருவமும் லட்சுமியின் மறைவைப் பற்றி பகவான் எழுதிய வாசகமும் நம் கவனத்தைக் கவருகின்றன.

அன்று இரண்டு பஸ்கள் நிறைய அமெரிக்க யாத்ரிகர்கள் வந்திருந்தனர். விசாரித்ததில் அத்தனை பேரும் காலிபோர்னியாவிலிருந்து வந்த மாணவ, மாணவிகள் என்று தெரிந்தது. ஏதோ ஒரு பொருட்காட்சியை காண்பது போல் அவர்கள் சிரித்து கும்மாளம் அடித்துக் கொண்டு ஆச்ரமம் முழுதும் சுற்றித் திரிந்து கொண்டிருந்தார்கள். தென்னாட்டுக்கு வந்து அரவிந்தர் ஆச்ரமத்தையும், ரமணாச்ரமத்தையும் காணாமல் சென்றால் அவர்களுடைய 'பிக்னிக்' பூர்த்தியாகாது!

பின்னர் ஆச்ரமத்தின் சாப்பிடும் அறையையும் சமையலறையையும் காணச் சென்றோம். பகவான் வழக்கமாக அமர்ந்து உணவருந்தும் இடத்தில் ஒரு மேஜையைப் போட்டு, அதன் மீது அவர் சாப்பிடுவது போன்ற ஒரு போட்டோவையும் வைத்திருக்கிறார்கள். மகரிஷி எல்லோருடனும் சேர்ந்து தான் சாப்பிடுவார் என்றும், ஆசாரமாக இருக்க விரும்புகிறவர்கள் தனியே அமர்ந்து சாப்பிடுவதை அவர் தடுத்ததில்லை என்றும் அங்கிருந்த ஒரு வயோதிகர் கூறினார்.

அடுத்து, பகவான் மகா சமாதி அடைந்த அறையைக் காணச் சென்றோம். அப்போது அங்கு ஒருவரும் இல்லாததால் உள்ளே செல்லாமல், வெளியிலிருந்தபடியே கண்ணாடிக் கதவு வழியாக அவர் கடைசியாகப் படுத்திருந்த சோபாவையும், சுருட்டி வைக்கப்பட்டிருக்கும் திண்டுகளையும், கைத் தடியையும், கமண்டலத்தையும் பார்த்தோம். கீழே இரு பாதுகைகள் வைக்கப்பட்டிருந்தன. நந்தாவிளக்கு எரிந்து கொண்டிருந்தது. எதிரிலுள்ள பிறையில் மாட்டப்பட்டிருக்கும் காலண்டர், மகரிஷி விதேக கைவல்யம் அடைந்த தினமான 1950-ம் ஆண்டு, ஏப்ரல் 14-ந் தேதியைக் காட்டுகிறது. அருகிலிருக்கும் கடிகாரம் ஆவி பிரிந்த நேரமான 8-47ஐக் காட்டுகிறது. மற்றொரு முறை வந்து அந்த அறைக்குள் போய் எல்லாவற்றையும் தொட்டு கண்களில் ஒற்றிக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்துடன் அங்கிருந்து நகர்ந்தேன்.


வழியில் ஆச்ரமத்தின் பிரசிடெண்ட் திரு டி. என். வெங்கடராமனை எனக்கு அறிமுகம் செய்து வைத்தார்கள். பெரிய அளவில் புதிதாகக் கட்டப்படும் மண்டபத்தைப் பற்றி பூரிப்போடு விவரித்தார் அவர். அந்த மண்டபத்தின் பிளானும் 'எஸ்டிமேட்'டும் அடங்கிய பிரசுரத்தை என்னிடம் கொடுத்தார்.

வெளியே வரும் போது அருணசலம், அன்னையின் ஆலயத்திற்கு எதிரே உள்ள ஒரு சமாதியைக் காட்டி, "இது தான், மகரிஷியின் கூடவே யிருந்த பூர்வாச்ரம தம்பி நிரஞ்சனனந்தாவின் சமாதி. அவருடைய பிள்ளைதான் இப்போது நீங்கள் சந்தித்த பிரசிடெண்ட் திரு வெங்கடராமன்" என்ற தகவலைக் கூறினர்.

திருச்சுழியில் பிறந்து, மதுரையில் வளர்ந்து வந்த வேங்கடராமனை தம்மிடம் அழைத்து, தன் வயப்படுத்தி தரணி காணுத தவயோகியாக்கிய ஸ்ரீ அருணசலேச்வரரை தரிசித்து புண்ணியம் பெற ரமணச்ரமத்திலிருந்து புறப்பட்டோம்.

—தொடரும்.

சிறு தொழிலுக்கு
எம்ஐஐஸி
நிதியுதவி



சிறு தொழில ஒனறினை
ஆரமபிககத திடடம
இருககிறதா?
அல்லது இபபொழுதுளள
தொழிலை விஸதரிகக
வேணடுமா?
எதுவாயினும் எம ஐ ஐ ஸி
உஙகளுககு உதவத
தயாராக உளளது.
எம் ஐ ஐ ஸியை
அணுகுஙகள்.
நடுததர மறறும பெரு
தொழிலுககும எம ஐ ஐ ஸி
உதவி எபபொழுதும
போல கிடைககும.

எம்ஐஐஸி
இதயபூர்வமான
நிதியுதவி

**மதராஸ் இண்டஸ்டிரியல்
இன்வெஸ்ட்மெண்ட்
கார்பொரேஷன் லிமிடெட்,**
எல எல. ஏ. கடடிடம்,
150-A மவுணட ரோடு, சென்னை-2.
கிளை. 1231, தெறகு மெயின தெரு, தஞசாவூர்.

Criterion MIIC 2336

அருணாசல மகிமை

உண்ணாமுலையம்மை திருச்சந்நிதி.

4

திருவாரூரில் பிறந்தால் முக்தி; காசியில் இறந்தால் முக்தி; சிதம்பரத்தைப் பார்த்தால் முக்தி; திருவணணாமலையை நினைத்தாலே முக்தி.

அகங்காரத்தை அழித்து விட்டால், நம்முள்ளே ஆன்மிக ஒளி பளிச்சிடும் என்ற தத்துவத்திற்கு விளக்கமாக ஓங்கி நிற்கிறது அண்ணாமலை எனும் ஞானமலை. அம் மலை தோன்றியதே ஒரு சுவைமிகு புராண வரலாறு.

ஒரு சமயம் படைக்கும் கடவுளான பிரும்மதேவனுக்கும், காத்தல் கடவுளான மகா விஷ்ணுவுக்கும் இடையே யார் பெரியவர் என்ற சண்டை மூண்டது. தேவர்களெல்லாம் கண்டு நடுங்கும்படியும் அண்டசராசரங்கள் அதிரும்படியும் அவர்கள் மூர்க்கமான போர் புரிந்தனர். இருவருடைய ஆணவத்தையும் அடக்க வேண்டும் என்று திருவுளம் கொண்டார் முழுமுதற் கடவுளான பரமேச்வரன். ஒரு பிரமாண்டமான அக்னி மலையாக ஓங்கி நின்றார். 'இம்மலையினுடைய முடியையும் அடியையும் யார் முதலில் கண்டு பிடிக்கிறார்களோ அவரே பெரியவர்' என்று பிரும்மாவும் திருமாலும் தங்களுக்குள் ஒரு பந்தயம் வைத்துக் கொண்டார்கள். அதன்படி பிரும்மா அன்னப் பறவையாகவும், மகாவிஷ்ணு வராகமாகவும் உருவெடுத்துக் கொண்டு அம்மலையின் முடியையும் அடியையும் தேடிப் புறப்பட்டனர். பிரும்மா எத்தனை உயரப் பறந்தும் சிவபெருமானின் முடியைக காண முடியவில்லை. விஷ்ணு எத்தனை கீழே தோண்டிக் கொண்டு போயும் அடியைக் கண்டு பிடிக்க முடியவில்லை. இருவரும் பொறுமையை இழந்தார்கள். தோல்வியை ஒப்புக் கொண்டு விஷ்ணு திரும்பி வந்து விட்டார். ஆனால், பிரும்மா ஒரு சூழ்ச்சி செய்து வெற்றி பெற திட்டமிட்டார்.

உயரத்திலிருந்து கீழே வந்து கொண்டிருந்த ஒரு தாழம்பூவைப் பார்த்த பிரும்மா, தாம் சிவனின் முடியைப் பார்த்து விட்டு வந்ததாக ஒரு பொய்யைச் சொல்லும்படி அதனிடம் கேட்டுக் கொண்டார். தாழம்பூவும்


பரணீதரன்

பிருமமாவுக்கு உடந்தையாக அதே போல் மகாவிஷ்ணுவிடம் துணிந்து ஒரு பொய்யைக் கூறிற்று. அதைக் கேட்டு சிவன சினம கொண்டார். பொய சாட்சி கூறிய தாழம்பூ தமது பூஜைக்கு உதவாத மலராக வேணடும எனறு சபித்தார். சூழ்ச்சி செயது ஏமாறற நினைத்த பிரும்மாவுக்கு பூலோகத்தில் தனிக் கோயிலோ பூஜையோ இருக்கக் கூடாது என்று உததரவிடடார்.

பிருமமாவும் விஷ்ணுவும் தங்கள ஆணவம் அடங்கி உண்மை நிலை உணர்ந்தனர். அக்னி வடிவததை மாற்றி, அப்படியே அங்கு ஒரு மலையாக நிற்க வேண்டும் என்றும், மலைக்கு கிழக்குத் திசையில் லிங்க வடிவத்தில் எழுந்தருள வேண்டும் என்றும் சிவபெருமானிடம் அவர்களிருவரும் பிரார்த்திக்க, அவர் தம்மை ஒரு மலையாகவும் லிங்கமாகவும் ஆக்கிக் கொண்டார். ஜோதி மலையாக நின்ற நிகழ்ச்சியை நினைவு படுத்துவதற்காக கார்த்திகை மாதத்தில், கிருத்திகை நட்சத்திரத்தன்று மலையின் முகட்டில் தங்களுக்கு ஜோதி தரிசனம் தந்தருள வேண்டும் என்றும் அவர்கள் பரமேசுவரனிடம் வேண்டிக் கொண்டனர்.

பாதாள லிங்கம்


அண்ணாமலையார் திருச்சந்நிதி



அத் திருநாள்தான கார்த்திகை தீபப் பெரு விழாவாக ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வருகிறது.

இந்தக் கதை, லிங்கோத்பவர் தோன்றிய வரலாற்றை விளக்குகிறது. அர்த்தநாரீச்வரர் வடிவம் ஏற்றதற்கு ஆதாரமாகக் கூறப்படும் ஒரு தல புராணக் கதையும் உண்டு.

கைலாசத்தில் ஒரு நாள் பரமசிவனும் பார்வதி தேவியாரும் வேடிக்கையாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். அப்போது சிவபெருமான் தமது ஒரு கண் சூரியன் என்றும் மற்றொரு கண் சந்திரன் என்றும் தேவியிடம் கூற, அதை உடனே சோதித்துப் பார்த்து விட வேண்டும் என்று நினைத்த ஜகன்மாதா, ஜகதீசனின் இரு கண்களையும் விளையாட்டாகப் பொத்தினாள். அடுத்த கணமே ஈரேழு லோகங்களும் இருளில் மூழ்கின. சகல ஜீவராசிகளும் எதிர்பாராத பிரளயத்தில் சிக்கித் தவித்தன. கருணையே வடிவானவர் தமது முக்கண்ணைத் திறந்து ஒளி வழங்கினார். அம்பிகைக்கு அழுகையே வந்து விட்டது. பெரும் பாவம்



வல்லாள மகாராஜா கோபுரம்

செய்து விட்டதாக மனம் கலங்கினாள். அதற்குப் பிராயச்சித்தமாக காஞ்சிபுரத்திற்கு வந்து, கம்பாநதி மணலில் லிங்கம் ஒன்று செய்து, பதியைக் குறித்து பூஜைகள் செய்து வந்தாள். மனம் இளகிய ஏகாம்பரநாதர் அம்பிகைக்கு ஆசி வழங்கினார். இடப்பாகத்தில் தனக்கு இடமளிக்க வேண்டும் என்று உமையவள் வேண்டினாள். திருவண்ணாமலைக்கு வந்து தவமிருந்து, தமது இடப் பாகத்தை பெறும்படி பராசக்திக்குக் கட்டளையிட்டார் அவர். பதியின் திருவுளப்படி பராசக்தி திருவருணை தலம் அடைந்து கௌதம ரிஷியின் நல்லாதரவுடன் பவளக்குன்றில் அருணாசலேச்வரரைக் குறித்து கடும் தவமிருந்தாள். கார்த்திகைத் திருநாளில், சிவபெருமான் மலை முகட்டில் ஜோதியாகத் தோன்றி, மலையைச் சுற்றி வந்து தம்மையடையும்படி பார்வதியிடம் கூறினார். அம்பிகை கிரிப் பிரதட்சணம் வரும்போது, மேற்குப் புறத்தில் தற்போது அடி அண்ணாமலை ஆலயம் இருக்கும் இடத்தில் ஈசன் எருது மேலேறி வந்து ஈச்வரியை வாழ்த்தி விட்டு, பின்னர் ஈசானிய திக்கில் தமது இடப் பாகத்தில் அன்னைக்கு இடம் அளித்தார். அந்நாளின் நினைவாக இன்றும் ஆலயத்தில் கார்த்திகை தீபத்தன்று அர்த்தநாரீச்வரர் எழுந்தருளுகிறார்.

ஸ்ரீ அண்ணாமலையார் ஆலயத்தை நெருங்கும்போது, நாம் கேட்டறிந்த கதைகளும், படித்தறிந்த பழைய நிகழ்ச்சிகளும் உள்ளத்தில் ஆன்மிகக் கிளர்ச்சியை உண்டு பண்ணுகின்றன. பிரமாண்டமான ராஜகோபுரம் நம்மைத் திகைக்க வைத்து, உயரிய சிந்தனைகளைத் தூண்டுகின்றது. கோட்டையைப் போன்ற திருமதில் பிரமிப்பை யூட்டுகின்றது. ஒரு பெரிய கோயிலைக் காணப் போகிறோம் என்ற உணர்வுடன் உள்ளே செல்கிறோம்.

கோபுர கணபதியை வணங்கிவிட்டு கம்பத்து இளையனார் கோயிலுக்குள் நுழைகிறோம். பின்னால் இருக்கும் மண்டபத்திலுள்ள ஒரு தூணில் எழுந்தருளி யிருக்கும் முருகப்பெருமானை மூலஸ்தானமாகக் கொண்ட அழகிய சிறு கோயில் அது. இங்குதான் ஸ்ரீ சேஷாத்திரி சுவாமிகள் சாதாரணமாக இரவு நேரங்களில் தங்குவார் என்று அருணாசலம் கூறியது என் நினைவுக்கு வருகிறது.

பிரபுட தேவராயர் என்ற மன்னனின் சபையில், சம்பந்தாண்டாருடன் விவாதம் நடத்திய ஸ்ரீ அருணகிரிநாதரின் வேண்டுகோளுக்கிணங்கி முருகப் பெருமான் கம்பத்தில் காட்சி தந்தாராம். அந்த நிகழ்ச்சி மண்டபச் சுவரில் தீட்டப்பட்டிருப்பதைப் பார்த்து ரசித்து விட்டு வெளியே வருகிறோம்.

ஸ்ரீ முருகன் சந்நிதிக்கு இடப்புறம் சிவகங்கை தீர்த்தம் என்ற திருக்குளம் இருக்கிறது. அதன் மேற்குப் புறம் இரண்டு பெரிய இலுப்பை மரங்கள் இருக்கின்றன. அதனடியிலும்


ஸ்ரீ சேஷாத்ரி சுவாமிகள் தங்கியிருந்த
கம்பத்து இளையனார் கோயில்



பால ரமணர் சிறிது காலம் தங்கி யோக நிஷ்டையில் ஆழ்ந்திருக்கிறார் என்ற செய்தியை அறிகிறோம். பின்னர், சர்வ சித்தி விநாயகரை தரிசித்து விட்டு ஆயிரக்கால் மண்டபத்திற்குள் நுழைகிறோம். 1949-ம் வருடம் ராஜாஜி கவர்னர் ஜெனரலாக இருந்த போது, அங்குள்ள பாதாள லிங்கேச்வரர் ஆலயத்தைத் திறந்து வைத்த செய்தியை ஒரு சலவைக் கல் நமக்கு அறிவிக்கிறது. உள்ளே சென்று பாதாள லிங்கேச்வரரை தரிசிக்கிறோம். இருள் மண்டிக் கிடக்கும் மிகச் சிறிய கருவறை அது. எழுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன், இதே இடத்தில், பூச்சிப் புழுக்கள் நெளிந்த பாழடைந்த பயங்கர சூழ்நிலையில், சிவலிங்கமே துணையாக, கால்களும் தொடைகளும் புண்ணாகி இரத்தம் கசியும்படி தன்னை மறந்த சமாதியில் அமர்ந்து, ஞான தவம் புரிந்த பால ரமணரை கற்பனையில் கண்டு பரவசமடைந்தேன்.

வெளியே வந்து, உருத்திராட்ச மண்டபத்தையும் நந்தி மண்டபத்தையும் கடந்து, வல்லாள மகாராஜா கோபுர வாசலில் நுழைகிறோம். முருகன் அருள் கிட்டாததால், வாழ்வை வெறுத்து, உயிரை மாய்த்துக் கொள்ள அந்த கோபுரத்திலிருந்து தான் ஸ்ரீ அருணகிரியார் கீழே குதித்தார் என்றும், ஸ்ரீ ஆறுமுகக் கடவுள் பக்தனின் நிலையறிந்து, ஓடோடியும் வந்து அவரைத் தம் திருக் கரங்களில் தாங்கிக் கொண்டார் என்றும் ஒரு கதை கூறப்படுகிறது. வலப்புறத்தில் கோபுரத்து இளையனார் சந்நிதியையும், அருணகிரியாரின் உருவச் சிலையையும் தரிசிக்கிறோம்.

வல்லாள மகாராஜாவைப் பற்றிய புராண வரலாற்றைக் கேட்கும்போது மயிர்க் கூச்செறிகிறது. இரு மனைவிகளிருந்தும் குழந்தைச் செல்வம் இல்லாமல வாடினான் அந்த மன்னன். தான தர்மங்கள் ஏராளமாகச் செய்தால் குழந்தை பிறக்கும் என்று மந்திரிகள் கூறவே, "என்னை நாடி வருபவர்களுக்குக் கேட்டதெல்லாம் அளிப்பேன்" என்று அறிவித்தான். ஸ்ரீ அருணாசலேச்வரர், மன்னனை சோதிக்கும் பொருட்டு துறவி வேடம் புனைந்து, அரண்மனைக்கு வந்து, அன்றிரவு இன்பம் துய்க்க தமக்கு ஒரு பெண் தேவை என்று மன்னனிடம் கேட்டார். ஊர் முழுதும் தேடியும் அன்று ஒரு பரத்தையரும் கிடைக்கவில்லை. 'கேட்டதெல்லாம்



கிளி கோபுரம்

தருகிறேன் என்று வாக்களித்து விட்டு, துறவியின் விருப்பத்தை பூர்த்து செய்ய முடியவில்லையே' என்று மனம் கலங்கிய வல்லாள மகாராஜாவிடம் இளைய ராணி வந்தாள். 'மன்னா, தங்கள் வாக்கைக் காப்பாற்ற, அத் துறவிக்கு என்னையே அளிக்கிறேன். சம்மதம் தருக' என்று கெஞ்சினாள். மனைவியின் தியாக உணர்வைப் போற்றிய மன்னவனும் அதற்குச் சம்மதம் தந்தான்.

துறவி படுத்திருந்த அறைக்கு ராணி சென்றாள். அவர் அயர்ந்த நித்திரையில் ஆழ்ந்திருந்ததால் அருகில் அமர்ந்து, அவரைத் தொட்டாள்.

இந்த இலுப்பை மரத்தின் அடியில் [illegible]



மறு கணம், துறவி படுத்திருந்த இடத்தில் பச்சிளம் பாலகன் ஒன்று சிரித்து விளையாடியது. ஆச்சரியம் அடைந்த அரசி, பாலகனை மார்போடு அணைத்து, மன்னனிடம் ஓடி 'நம் துயரம் தீர்ந்தது' என்று மகிழ்ச்சி பொங்கக் கூறி குழந்தையை அவனிடம் கொடுத்தாள். அடுத்த கணம், குழந்தை மாயமாய் மறைந்து, அங்கு எருது வாகனத்தில் அருணாசலேச்வரர் காட்சி தந்தார். ''மன்னா, உனக்கு இனி நானே பிள்ளை. உனது ஈமச் சடங்குகளை நான் செய்து முடிப்பேன்'' என்று கூறி மறைந்தார். மகாராஜாவும் அரசிகளும் அண்ணாமலையாரே தமக்குக் குழந்தையாக வந்து அருள் புரிந்த விந்தையைக் குறித்துப் பூரிப்படைந்து, அவர் அடிமைகளாகி முக்தி யடைந்தனர். இன்றும் ஆண்டு தோறும் மாசி மகத்தன்று, அண்ணாமலையார் பள்ளிக்கொண்டபட்டு என்ற இடத்திற்குச் சென்று வல்லாள மகாராஜாவின் ஈமச் சடங்குகளைச் செய்யும் திருவிழா நடந்து வருகிறது.

வல்லாள மகாராஜா கோபுரத்தைக் கடந்து நான்காவது பிராகாரத்தில் நுழைந்ததும், இடப்புறம், மேற்கு நோக்கி கண்ணைக் கவரும் கால பைரவரின் சந்நிதி இருக்கிறது. ஒரு காலத்தில் அது அண்ணாமலையார் கருவறையில் இருந்ததாகவும், ஒரு நாள் தவறுதலாக உள்ளே வைத்துப் பூட்டப்பட்ட குருக்களின் குழந்தையின் உயிரை அவர் குடித்ததால், அங்கிருந்துஇங்கே குடியேற்றப்பட்டதாகவும்அவ்வழியே சென்ற குருக்கள் ஒரு கதையைச் சொல்லி விட்டுப் போனார். தெற்கு புறத்தில் பிரும்ம தீர்த்தம் என்ற மற்றொரு திருக்குளம் இருக்கிறது. பிராகாரத்தைச் சுற்றி வந்து, கிழக்குப் புறத்திலிருக்கும் அழகிய கோபுரத்திற்குள்பிரவேசிக்கிறோம். அது கிளி கோபுரம். அருணகிரிநாதர் பாரிஜாத மலர் கொண்டு வருவதற்காக தம் உடலை விட்டு விட்டு, கிளி உருவம் தாங்கிச் சென்றாராம். திரும்பி வந்ததும், தம் திருமேனி காணாததால் கிளியாகவே கோபுரத்தின் உச்சியில் அமர்ந்து விட்டாராம். அந்த கோபுரத்தின் மீதும் அதன் முதல் நிலையிலும் அழகிய கிளிப் பதுமைகளைக் காணலாம்.


கிளி கோபுரத்தைக் கடந்து சென்றதும் காட்சி மண்டபம் நம் கண்ணில் படுகிறது. அந்த மண்டபத்தில் நின்று பார்த்தால் அருணாசலத்தின் உச்சி மிக நன்றாகத் தெரிகிறது. அங்கு கார்த்திகை தீபம் தரிசனம் ஆகும் அதே வேளையில், இந்த மண்டபத்திலிருந்து பஞ்ச மூர்த்திகள் பக்தர்களுக்குத் தரிசனம் தருவார்கள்.

காட்சி மண்டபத்தின் வடப்புறத்தில் ஸ்ரீ காளத்திநாதர், ஸ்ரீ ஏகாம்பரேச்வரர், ஸ்ரீ ஜம்புகேசுவரர், சிதம்பரலிங்கேச்வரர் சந்நிதிகள் இருக்கின்றன. அருணாசலேச்வரர் ஆலயத்தில் பஞ்ச பூத ஸ்தலங்களும் அடங்கி யிருக்கும் அதிசயத்தைக் காண்கிறோம்.

அப்போது சந்தியா கால பூஜையை அறிவிக்கும் ஆலயமணி ஒலித்தது. அருணாசலேச்வரரை தரிசிப்பதற்காக விரைந்தோம். சந்நிதி மண்டபத்தின் தெற்குக் கோடியில் கம்பீரமாக வீற்றிருக்கும் கணபதி 'என்னைக் காணாமல் எங்கே போகிறாய்?' என்று அழைத்தார். மறு சிந்தனையின்றி அவர் சந்நிதிக்கு ஓடினேன். சிவந்த மேனியுடனும் சிங்காரப் பேரழகுடனும் தெய்வக்களை நிரம்பிய அந்தப் பெரிய விநாயகரை அதுவரை நான் கண்டதே யில்லை. சம்பந்த விநாயகர் என்பது அவரது திருநாமம். அவரை விட்டு நகரவே மனம் வரவில்லை. என்ன செய்வது? தந்தை தீபாராதனையைக் காண அவசரமாக அழைக்கிறாரே!

அண்ணாமலையார் சந்நிதி மண்டபத்திற்குள் நுழையும்போதே கைலாயம் இப்படித்தான் இருக்குமோ என்று நினைக்கத் தோன்றுகிறது. ஜோதி வடிவான பெருமானுக்கு திவ்யமங்கள தீபாரத்தி காட்டும் போது

லிங்கோத்பவர்



நாம் என்ற தனித்தன்மை கரைந்து, அண்ணுமலையாருடன் கலந்து விடுகிறோம். ஞானச் சுடரின் ஒளியால் அஞ்ஞான இருள் அகன்று, பேரண்டப் பெருவெளி யெங்கும் அருட்சுடர் பரவுகிறது. அகிலமெங்கும் சிவமயமாகி, மங்களம் பொங்குகிறது.

தெய்விகக் கலையழகு கொழிக்கும் அம் மண்டபத்தை அண்ணுந்து பார்த்துப் பார்த்து வியக்கிறோம். ஒவ்வொரு கம்பத்தின் அருகிலும் சென்று மனத்தைப் பறி கொடுக்கிறோம். மூலவருக்குப் பின்னுல் மேற்குப் பிராகாரத்திலிருக்கும் வேணுகோபால சுவாமியைத் தரிசித்துக் கொண்டு வடப்புற வாயில் வழியாக உண்ணுமுலை அம்மையின் சந்நிதிக்குப் போகிறோம்.

ஆகா! இது என்ன? ஒரு சிற்பக்கலைக் கூடமா? அல்லது, சௌந்தர்ய தேவதையே நர்த்தனம் ஆடும் இடமா? ஆதிலட்சுமி, சந்தானலட்சுமி, கஜலட்சுமி, தனலட்சுமி, விஜய லட்சுமி, வீர லட்சுமி...அடேயப்பா ... என்ன நவீனம், எத்தனை அழகு? என்ன கம்பீரம்......? இதோ காலாந்தகர், வீணுதரர் வீரபத்ரர்...அப்பப்பா...!மனிதனின் கரங்களுக்கு இத்தனை மாட்சியா? உமையவள் கொலு மண்டபத்தில் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் ஆயிரம் ஆயிரம் சிற்ப விநோதங்கள். பிராகாரத் தூண்களில் சின்னஞ்சிறு வேலைப்பாடுகள். அவற்றைக் கண்டு களிக்கவும், பார்த்து புண்ணியம் பெறவும் ஒரு வாழ்நாள் போதாதே!

ஸ்ரீ அருணுசலேச்வரர் தரிசனத்திற்குப் பிறகு, மகாதேவன் எங்களை சாதுக்கள் மடத்திற்கு அழைத்துச் சென்றுன். உள்ளே ஒரு விநாயகர் சந்நிதி இருக்கிறது. நாலைந்து பேர் திண்ணையில் உட்கார்ந்திருந்தனர். ஸ்ரீ சேஷாத்ரி சுவாமிகள் அவ்வப்போது அங்கு வந்து தங்குவார் என்ற விவரத்தைத் தவிர அங்கிருந்தவர்களுக்கு வேறு ஒன்று ? தெரியவில்லை.

அங்கிருந்து அன்ன சத்திரத்திற்கு வந்தோம். இப்போது அங்கே இந்தியன் பாங்க்கும், தபால் நிலையமும் இருக்கின்றன. உள்ளே சென்று எட்டிப் பார்த்தோம்;

'என்ன பார்க்கறீங்க?'' என்று சாதுவைப்போல் இருந்த ஒருவர் இருமிக்கொண்டே கேட்டார்.



அன்ன சத்திரம்

''சேஷாத்ரி சுவாமிகள் இங்கே தங்கி யிருந்ததாகச் சொன்ஞர்கள். அந்தப் புனித இடத்தைப் பார்த்து விட்டுப் போகலாம் என்று வந்தோம்'' என்றேன் நான்.

''அவர் இங்கே தங்க மாட்டார். சத்திரத்திற்குப் பின் பக்கம் ஒரு இடத்தில் வந்து சில சமயங்களில் குந்துவார், படுப்பார்.''

''நீங்க அவரை நேரில் பார்த்திருக்கிறீர்களா?''


நான் வெளியூர் வாசி. அவரைப் பற்றி கேள்விப்பட்டிருக்கேன். அவர் ஒரு மகான். எப்போதும் சூரியனை யாவது, ஆகாயத்தையாவது பார்த்தபடியே நின்று கொண்டிருப்பாராம். ஒரு நாள் வானத்தைப் பார்த்து, 'அதோ, விட்டோபா போறுர்.... விட்டோபா போறுர்'னு சுட்டிக் காட்டினுர். ஒருத்தருக்கும் ஒண்ணும் புரியலே. இரண்டு மணி கழித்து, விட்டோபா சமாதியாயிட்டார்னு போளுர்லேருந்து தகவல் வந்தது. மகான் சேஷாத்ரிக்குத் தெரியாததே கிடையாது'' என்று ஒரு புதுக் கதையைச் சொன்ஞர் அந்த சாது.

''விட்டோபா என்பவர் யார்? போளுர் எங்கே யிருக்கிறது?'' என்று ஆவலுடன் கேட்டேன் நான்.

''இங்கேயிருந்து வேலூர் போற வழியில் முப்பது மைல்லே போளுர் இருக்கு. அங்கே 'விட்டோபா, விட்டோபா'ன்னு ஒரு மகான் இருந்தார். அவர் அதிகமா பேசவே மாட்டார். அவர் அறுபது வருஷத்துக்கு முந்தி அடங்கிட்டார். அவர் சமாதிக் கோயில் கூட அங்கே யிருக்கு'', என்றுர் அன்ன சத்திரத்தில் இருந்த சாது.

—தொடரும்.

மிகச் சிறந்த ''கிரேஸ்புல் ப்ரேஸீயர்ஸ்''
வாங்க சிறிய தொகை
கொடுத்தாலே போதும்



அதிக காலம் நீடித்து உழைககிறது.
மற்ற பரேஸீயர்களைவிட விலை குறைவா
னது. உயர்நத பருததியிலான ''ஹார்வி-
டுவின் டஸ்கர்'' 2x2 சூப்பர் பைன், பாப்
ளின் துணிகள கொணடு தயாரிககபபடு
கிறது. இறககுமதி செயத எலாஸ்டிக்
நாடா உபயோகப்படுத்தபபட்டிருப்ப
தால், மற்ற பிரேஸீயர்களைவிட நீடித்து
உழைக்கின்றன. இதன் தரம் பற்றி
லட்சக கணக்கான சகோதரிகளின்
பாராட்டுகளே நிரூபிக்கின்றன. கணககுப்
பார்த்தால நீங்கள ஆச்சரியப்படும் அள
விற்கு விலை மலிவானது: இன்றே
நீங்களும் வாங்குங்கள்.

"கிரேஸ்புல் ப்ரேஸியர்ஸ்"

2x2 - Princess - Rs. 3-25, Elite - 2-80, Ameetha - 2-25, Lilly - 2-25, Sharmila - 4.20, Sharmila Lace cup- 4-60, Lace Sharmila - 5-60.

ஸ்பெஷல் கட்டாபுகள் 32'' — Rs. 3.00
அதிகப்படி சைஸ் ஒன்று க்கு 0-25 P. அதிகம்

Available at:

Cauvery, Kamadhenu Supermarkets & T.U.C.S. Textile Show Rooms, Lucky Stars, Ranganathan St., Madras-17 Devika Textiles, Mungambakkam, Dress Paradise, Pycroft's Road, Triplicane. Murthy & Sharma, Pondy Bazaar, T. Nagar; Chintamani Supermarket, Coimbatore, Gandhipuram & R. S. Puram, Amuda Surabi, Pondicherry, Saravanabhava, Cuddalore, Janata Bazaar, Chittoor & Tirupathi; Trichi, Salem & Vizag. Co-op. Supermarkets and at all Leading Shops.

'GRACEFUL BRASSIERES'


Manufacturers: A-ONE LAESSES
Phone: 441484

சைக்ளான் சைக்கிள் செயின்கள்

கேட்டு வாங்குங்கள்



நம்பகமானவை
உறுதியானவை





சைக்கிள் செயின்கள்,
ஹெவி டியூட்டி சைக்கிள செயின்கள்,
மற்றும சைக்கிள ரிக்ஷா செயினகள்

சைக்ளான் ப்ராடெக்ஸ்
பிரைவேட் லிமிடெட்
சத்தியமங்கலம் ரோடு ... 6


GP




ஐடெக்ஸ்

அழகு சாதனங்கள்

ஐடெக்ஸ் கண்மை
ஐடெக்ஸ் பிந்தி
ஐடெக்ஸ் பிந்தி ஸ்பெஷல்
ஐடெக்ஸ் குங்கும் பேஸ்ட் 5 IN 1
ஐடெக்ஸ் குங்கும் பேஸ்ட்



ARAVIND LABORATORIES P. B. 1415., MADRAS 17



[illegible] சந்நிதித் [illegible] நேரே சந்நிதித் தெருவில் உள்ள சின்ன [illegible] வீட்டிற்குச் செல்வோம். அந்த வீட்டுத் திண்ணையில் தான் [illegible] சேஷாத்ரி சுவாமிகள் [illegible] சமாதியடைந்தார். [illegible] ஆண்டுகளுக்கு [illegible] ஜுரக் காய்ச்சல் [illegible] அந்த தம் உடலை [illegible] விட்டு விட்டு, தம் [illegible] ஜோதியாகப் புறப்பட்டு [illegible] அந்த மகான்.

[illegible] குருக்களின் [illegible] பெண் பார்வதி அம்மாளுக்கு அறுபது வயதாகிறதாம். நாற்பது வருடங்களுக்கு முன் நடந்த நிகழ்ச்சிகளை நேற்று நடந்தது போல் அத்தனை தெளிவாக நினைவு கூர்ந்து [illegible] அவர்: சுவாமிகள்

அருணாசல மகிமை



[illegible] வருவாராம். [illegible] சமையலறைகளுக்குள் போவாராம். 'ஏதாவது வைத்திருந்தால் யாரை[illegible] கேட்காமல் எடுத்துத் தின்று விட்டு வெளியேறி விடுவாராம்!

ஒரு நாள் மாலை வீட்டுக்கு வந்த சுவாமிகள் குருக்களுக்காக வைத்திருந்த காப்பியைக் குடித்து விட்டு, "அவன் வந்தா நான் குடிச்சுட்டேன்னு சொல்லு" என்று கூறி [illegible] பாத்திரத்தைப் [illegible] எடுத்துக்கொண்டே [illegible] விட்டாராம்.

சுவாமிகள் படுத்திருந்த திண்ணை இப்போது இல்லை. [illegible] இருந்த அந்த வீடு பாகப் பிரிவினையாகி [illegible] விட்டதால், அந்தத் திண்ணை இடிக்கப்பட்டு விட்டது என்று பார்வதி அம்மாள் கூறினார்.

[illegible] காலத்தில் சுவாமிகளின் திருமேனியை [illegible] காய்ச்சல் வாட்டி வதைத்தது. அதற்கு [illegible] காரணமாய் இருந்திருக்கிறார்கள்.

சுவாமிகளுக்கு [illegible], அபிஷேக, ஆராதனைகளும் செய்து ஒரு புகைப் படம் எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும் என்று பக்தர்களுக்கு ஓர் ஆசை பிறந்தது. ஒரு நாள் அவரைப் பிடித்து 'பட்டாபிஷேகம்' செய்வித்தார்கள். ஸ்நானம் செய்ய அழைத்தபோது சுவாமிகள் [illegible] மறுத்தார். "வேண்டாம், எனக்குக் குளிர் காய்ச்சல் வந்து விடும்" என்று அவர் [illegible] வார்த்தையையும் பொருட்படுத்தாமல் [illegible]

பரணீதரன்

[illegible] தேடிவந்து [illegible] நிறைவேற்றினர் அவருக்கு அபிஷேகம் செய்தார்கள் அன்பர்கள். கோயிலி லுள்ள [illegible]கையிலிருந்தும் நீர் வந்தது. இரண்டு பேர்க அசையா மல் அமர்ந்திருந்த சுவாமிகளுக்கு பக்தர்கள் [illegible] குடம் குடமாக அபிஷேகம் செய்தார்கள். ஒவ்வொரு வரும் வாழ்க்கையில் கிடைத்த பெரும் புண்ணியமாக அதைக் கருதினார்கள்.

பின்னர், அவருக்கு ஆடையுடுத்தி, விபூதி பூசி, உருத்திராக்ஷம் அணி வித்து, சின்ன குருக்கள் வீட்டில் ஒரு நாற்காலியில் அமர்த்திப் [illegible] படம் பிடித்தார்கள். அந்தப் படத்தை எங் களுக்குக் காட்டுவதற்காக வீடு முழு வதும் தேடினோம் [illegible] ஆனால் [illegible], அது கிடைக்கவில்லை.

அபிஷேகம் நடந்த [illegible] நாளே [illegible] [illegible] [illegible] [illegible] விட்டது. ஆனால், அவர் [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] அவர் [illegible] [illegible] கொண்டிருந்தார். [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] விட் [illegible] [illegible] அதை [illegible] [illegible] [illegible] போய [illegible] [illegible] [illegible] [illegible]

[illegible] [illegible] [illegible] பார்வதி அம்மாள். [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible]

என்றும், நீர் ஆகாரம் கூட அருந்தா மல் கட்டையைப் போல் அசைவற் றிருந்தார் என்றும், அவரைப் பார்க்கும்போது ஏதோ ஒரு [illegible] யில் இருப்பது போல் தோன்றி [illegible] கொண்டு. நோயால் அவதியு[illegible] போல் தெரியவில்லை என்[illegible] கூறினர். மகா சமாதிக்குப் பிறகு உள்ளூரிலிருந்தும் வெளியூரி[illegible] ருந்தும் அங்கு வந்து [illegible] பலர் கண்ணீர் பெருக்கி அழு [illegible] சிலர் தரையில் புரண்டு புரண்டு அழுதார்கள்; சிலர் அவரு டைய அருமை பெருமைகளை [illegible] கூறினார்கள். அன்று [illegible] [illegible] குடம் குடமாக காட்டி [illegible] [illegible]. பின்னர், மகானின் [illegible] [illegible] மகாராஜா [illegible] [illegible] அடக்கம் [illegible] [illegible] ஒருவரோடு ஒருவர் [illegible] [illegible] ஏற்பட்ட [illegible] [illegible] பார்வதி அம்மாள் [illegible] [illegible] விவரித்தார்.

[illegible] குருக்கள் வீட்டி[illegible] [illegible] ஸ்ரீ சேஷாத்ரி சுவாமிகள் ஆசிரமத்திற்குச் சென்றோம். [illegible] [illegible] எங்களுக்காக காத்திருந்[illegible] [illegible] எங்களை வரவேற்[illegible] ஆசிரமத்தைச் சேர்ந்த [illegible] [illegible] பிள்ளை வந்து விட்டார் [illegible] நான் அவரிடம் கேட்டேன்:

"ஐயா, கேட்டருகில் [illegible] [illegible]ருக்கிறாரே. அவர் [illegible] [illegible] மணிக்கு மேலாகிறது [illegible] கூறி அவரை அழைத்[illegible] [illegible]. அந்த [illegible] [illegible] நடந்து வந்தார்.

ஸ்ரீ [illegible] மடம் (வேலூர்)

சின்ன குருக்கள் வீடும், கிணறும்.

திரு ராமசாமி பிள்ளை

நல்ல உயரம், கம்பீரமான தோற்றம்; நிமிர்ந்த நடை; வெண் தாடி; சாந்தம் நிறைந்த பார்வை; அமைதி தவழும் முகம்.

எங்களிடம் ஒரு வார்த்தையும் பேசாமல் திரு ராமசாமி பிள்ளை சுவரில் சாய்ந்தபடி அமர்ந்தார். மெள்ள பேச்சைத் தொடங்கி, முதலில் அவரைப் பற்றி விசாரித்தேன். ஒருவித பரபரப்புமின்றி நிதானமாக பதிலளித்தார் அவர்.

அவருக்கு எழுபத்து நான்கு வயதாகிறது. சிதம்பரத்தை அடுத்த பிமுட்லூர் கிராமத்தைச் சேர்ந்தவர். 1917-ல் ஸ்ரீ ரமணர், மலையின் மீதுள்ள ஸ்கந்தாச்ரமத்திலிருந்த போது வந்து தரிசித்திருக்கிறார். அதற்குப் பிறகு அடிக்கடி வந்து போவதுண்டு.

பச்சையப்பன் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தவர், 1920-ம் வருஷம் ஒத்துழையாமை இயக்கத்தின் போது படிப்பை நிறுத்த வேண்டியதாயிற்று. 1922-ம் வருஷம் தாயார் காலமான பிறகு பகவான் கீழே இறங்கி வந்து விட்டார். அப்போதும் ஆச்ரமத்திற்கு வந்து போய்க் கொண்டிருந்த திரு ராமசாமி பிள்ளை, 1926-ம் வருடத்திலிருந்து அங்கேயே தங்கி பகவானுக்குத் தொண்டு புரியத் தொடங்கி விட்டார்.

ஸ்ரீ ரமண மகரிஷியும் ஸ்ரீ சேஷாத்ரி சுவாமிகளும் வெவ்வேறானவர்கள் அல்ல என்பது அவருடைய அனுபவம். இருவருமே ஆத்ம ஞானிகள். உடலிருந்தும் ஆத்ம விடுதலை பெற்றுவிட்ட ஜீவன் முக்தர்கள்; ரமணர், மூலவர் என்றால், சேஷாத்ரி சுவாமிகள், உற்சவமூர்த்தி. "என்னைப் பொறுத்த வரையில் இருவருமே அருணாசலேச்வரரின் பேரொளி பிரகாசித்த ஞான குருக்கள். ஆண்டவன், நம்மை ஆட்கொள்ளும் பொருட்டு, கருணையினால் மனித வடிவம் தாங்கி, குருவாக நம்மிடையே நடமாடுகிறார். வேறு ஒன்றுமில்லை" என்று கூறி மகரிஷி ரமணரும் மகான் சேஷாத்ரியும் ஒரே ஆத்ம தத்துவத்தின் இரு வடிவங்களே என்பதை உறுதிப்படுத்துவதற்காக ஒரு பழைய நிகழ்ச்சியைக் கூறினார் திரு ராமசாமி பிள்ளை. வெங்கட சுப்பய்யர் என்பவர் ஒரு சமயம் அருணாசலேச்வரர் ஆலயத்திற்குச் சென்ற போது அங்கு சேஷாத்ரி சுவாமிகள், சிவகங்கையின் படிக்கட்டில் அசையாமல் உட்கார்ந்திருப்பதைக் கண்டார். உலகச் சூழ்நிலைக்குச் சிறிதும் சம்பந்தமின்றி, பரப்பிரும்மமாக, பத்மாசனத்தில் ஸ்ரீ ரமணர் அமர்ந்திருப்பது வழக்கம். ஒரு கணம் கூட ஓரிடத்தில் அமைதியாக அமர்ந்து அறியாத ஸ்ரீ சேஷாத்ரி சுவாமிகள், அன்று ஸ்ரீ ரமணரைப் போலவே அமைதியாக அமர்ந்திருந்ததைக் கண்டு ஆச்சரியப் பட்டாராம் வெங்கட சுப்பய்யர். அந்தக் காலத்தில் ஸ்ரீ சேஷாத்ரி சுவாமிகளை பெரிய சேஷாத்ரி யென்றும் ஸ்ரீ ரமணரை சின்ன சேஷாத்ரி என்றும் மக்கள் குறிப்பிட்டுப் பேசியதையும் நினைவு படுத்தினார் திரு ராமசாமி பிள்ளை.

ஸ்ரீ சேஷாத்ரி சுவாமிகளின் ஆச்ரமத்திலிருந்து புறப்படும் போது இரவு பத்து மணிக்கு மேலாகி விட்டது. விடுதிக்கு வந்து படுக்கையில்

படுத்த எனக்கு, அன்று கண்ட காட்சிகளும் பெற்ற அனுபவங்களும் மீண்டும் மீண்டும் நினைவுக்கு வந்தன. அருளொளி வீசும் அண்ணாமலையும் அருளாட்சி புரியும் அண்ணாமலையாரும் ஒரே பொருளாய் இரண்டறக் கலந்து, உள்ளத்தை அமிர்தமாய் நிறைத்தது. ஆன்மிகச் செல்வர்களின் அதிசய வாழ்க்கை சிந்தையில் குடி புகுந்து, புற உலகின் உணர்வை மெள்ள மெள்ள மறைத்தது. நித்திரை தேவதையின் சுகமான தழுவலில் தன்னை மறந்து, கண்ணயர்ந்தேன்.

மீண்டும் கண் விழித்த போது காலை ஆறு மணி. இதமான குளிர் காற்று வீசிக் கொண்டிருந்தது. சன்னல் வழியே எட்டிப் பார்த்தேன். அண்ணாமலையின் திவ்ய தரிசனம் ஆயிற்று. மலை முகட்டில் பனிப் படலம் திருநீறு பூசியது போல் படர்ந்திருந்தது. சுவாமி சேஷாத்ரியை எழுப்பி, இயற்கையும் இறைவனும் கொஞ்சி விளையாடும் காட்சியைக் கண்டு ரசிக்கச் செய்தேன்.

ஒரு மணியில் எங்கள் பயணத்திற்கு ஆயத்தமாகி விட்டோம். வேலூர் வழியே கீழ் மின்னலுக்குச் சென்று, ரத்தினகிரியில் உள்ள மௌன சாமியாரைத் தரிசித்து விட்டு சென்னைக்குத் திரும்ப வேண்டும் என்பது தான் எங்கள் திட்டம். நாம் ஒன்று நினைக்க தெய்வம் வேறொன்று நினைத்து விடுகிறதே!

வேலூரை நோக்கி எங்கள் கார் பறந்து கொண்டிருந்தது. மணி ஒன்பது இருக்கும். போளூரைக் கடந்து ஒரு பர்லாங்கு சென்றிருப்போம். முதல் நாள் திருவண்ணாமலை ஆசிரமத்திலிருந்த ஒரு சாது ஸ்ரீ விடோபா சுவாமிகளைப் பற்றிக் கூறியது எனக்குத் திடீரென்று நினைவுக்கு வந்தது. இறங்கி, அவருடைய சமாதிக் கோயிலை தரிசித்துக் கொண்டு போகலாமே என்று ஓர் எண்ணம் தோன்றியது. உடனே காரை திருப்பச் சொன்னேன். மறதியாகச் சென்ற எங்களை மகான் தம்மிடம் எப்படியோ அழைத்துக் கொண்டு விட்டார்!

நெரிசலான கடை வீதிகளைக் கடந்து குறுகலான சந்து பொந்துகளில் நுழைந்து ஸ்ரீ விடோபா சுவாமிகளின் ஆலயத்தை அடைந்தோம்.



ஸ்ரீ சேஷாத்ரி சுவாமிகள்
(கடைசியாக எடுக்கப்பட்ட படம்)

மடத்தில் மனித நடமாட்டத்தையே காணோம். வெறிச்சோடிக் கிடந்த அறையை மெள்ளக் கடந்து சென்றதும், இடப் புறத்தில் ஸ்ரீ விடோபாவின் சமாதி ஆலயம் தென்பட்டது. கீழே விழுந்து வணங்கி விட்டு, கருவறையை வலம் வந்து, எதிரிலிருந்த பெரிய ஹாலுக்குள் நுழைந்தோம். மடத்தில் சாமியார் ஒருவர் வசிக்கிறார் என்பதற்கு அடையாளமாக காவியுடைகள் கயிற்றில் உலர்த்தப் பட்டிருப்பதைக் கண்டோம். 'சாமீ ...சாமீ' என்று குரல் கொடுத்தேன். "இதோ வந்துட்டேன்" என்று கூறிக் கொண்டே நந்தவனத்தில் பூப் பறித்துக் கொண்டிருந்த சாது ஒருவர் வந்தார். அறிமுகம் முடிந்ததும் விடோபா சுவாமிகளின் வரலாற்றை அறிய விரும்பினேன் நான். மடாதிபதி ஸ்ரீலஸ்ரீ துரைசாமி சாது சுவாமிகள் பீரோவைத் திறந்து ஒரு சிறு புத்தகத்தை எடுத்து என்னிடம் கொடுத்து, "இதைப் படித்துப் பாருங்கள். இதில் எல்லாம் இருக்கு" என்றார்.

"அவகாசமாகப் படிக்கிறேன். விடோபா சுவாமிகள் யார், எங்கிருந்து வந்தார் என்பதைப் பற்றி சற்று கூறுங்களேன்" என்று கேட்டேன் நான்.

மகான் விடோபா மஹாராஷ்டிர ...த்தில் பிறந்தவர். நெசவுத் தொழி...யன் குடும்பத்தைச் சேர்ந்தவர். ...னே திருவல்லிக்கேணியில் வசித்து ...ந்த இவர், இள வயதிலேயே தவ...ல் எய்தி, குடும்ப வாழ்க்கையில் ஈடுபடாமல், பெற்றோரை விட்டுப் பிரிந்து திருவண்ணாமலை வந்து, பித்த...ல் அலைந்து திரிந்து, ...டேரியில் ...ருக்கு வந்து தங்கி விட்டார். ... ஆண்டுகள் சச்சிதானந்தப் ...ரூபமமாய், சகல சித்திகளும் ...ந்த ஜீவன் முக்தராய், மௌன...வாய், அண்டி வந்தவர்களுக்கு ...டைக்கலம் தந்து அருள் பாலிக்கும் ...ண்புத் தெய்வமாய் வாழ்ந்து, விதேக ...த்தி யடைந்தார். எத்தனையோ அற்புதங்கள் நிகழ்த்தினார். தீராத ...ய்களைத் தீர்த்து வைத்தார். அவர் ...டக்கமாகி சுமார் அறுபது ஆண்டு...கள் ஆகின்றன'' என்றார் சுவாமிகள்.

மகான் விடோபாவுக்கு அப்பெயர் ...றக் காரணமான நிகழ்ச்சியை ... சுவாமிகளிடமிருந்து அறிந்து ...டேன்.

அந்த மகானின் இயற் பெயர் யாருக்...ம் தெரியாது. ஒரு நாள் போளூரை அடுத்த திரிசூரில், அவர் அன்னத்திற்...க கையேந்தி தெருவில் நின்று ...கொண்டிருந்தாராம். அவ்வழியே சென்ற கல்நெஞ்சம் படைத்த இக...கயவர்கள், 'இந்த பித்தனைப் பேச வைக்கிறோம், பார்' என்று கூறி இரு...பைப் பழுக்கக் காய்ச்சி வாயில் கு...டார்களாம். அப்போது அந்த மகான், 'விடோபா, விடோபா' என்று பாண்...ரங்க விட்டலரின் திருநாமத்தைக் கூ... அந்தப் பாவிகளைக் காத்தருளும்படி வேண்டிக் கொண்டிருக்கிறார். அன்...றையிலிருந்து அவருக்கு 'விடோபா' என்ற பெயர் நிலைத்து விட்டது.

ஸ்ரீ துரைசாமி சுவாமிகள் எங்களை ஆர். பற்குணம் என்பவரின் இல்லத்...திற்கு அழைத்துச் சென்றார். அவரு...டைய தந்தையார் ஸ்ரீ விடோபா சுவாமிகளுக்கு தொண்டு செய்யும் பாக்கியம் பெற்ற சிலரில் ஒருவர். தந்தையிடமிருந்து தாம் கேள்விப் பட்டிருந்த சில விஷயங்களை அவர் கூறினார்.

விடோபா, மழையென்றும், குளிர் என்றும், வெய்யில் என்றும் பாராமல் குப்பை மேடுகளிலும், வாய்க்கால் ஓரங்களிலும் உட்கார்ந்திருப்பாராம்.

அந்த வட்டாரத்தில் யாருக்கு உடல் நலம் சரியில்லை என்றாலும் சுவாமிகளிடம் வந்து திருநீறு பெற்றுச் செல்வார்களாம். இன்றைக்கும் அந்த ஊரில் குழந்தைகளுக்கு உடல் நலம் குன்றினால், மருத்து...

ஸ்ரீ விடோபா சுவாமிகளின் சமாதி



துரைசாமி சாது சுவாமிகள்



ம்பியைத் தேடிப் போனதில்லையாம். விடோபாவின் சமாதிக்கு வந்து, குழந்தையைத் தரையில் விட்டு, திருநீறு எடுத்துப் பூசிக் கொண்டு போய் விடுவார்களாம்.

"ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகளை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா?" என்று அவரிடம் கேட்டேன் நான்.

"இரண்டு மூன்று தரம் தரிசனம் செய்திருக்கிறேன். ஒரு முறை அருணாசலேச்வரர் ஆலயத்தின் அருகில் அவரைக் கண்டேன். அப்போது எதிரில் கூனிக் குறுகி ஒரு பாட்டி வந்து கொண்டிருந்தாள். அவள் ஸ்வாமிகளுக்கு நமஸ்காரம் செய்தாள். ஸ்வாமிகள் சட்டென்று குனிந்து பாட்டியின் கால்களைப் பற்றி, அப்படியே தூக்கி அருகிலிருந்த கல்லில் துணி துவைப்பது போல் போட்டு அடித்தார். நான் பயந்தே விட்டேன். பாட்டி பிழைக்க மாட்டாள் என்றே நினைத்தேன். ஆனால், என்ன ஆச்சரியம், அந்தப் பாட்டி ஸ்வாமிகளை வணங்கி, "புத்தி வந்தது, புத்தி வந்தது. போயிடறேன், போயிடறேன்" என்று கன்னத்தில் போட்டுக் கொண்டே போய் விட்டாள். அவளுக்கு என்ன சாபம் நீங்கியதோ, நமக்கென்ன தெரியும். அந்த மகான் முக்காலமும் அறிந்த சித்தராயிற்றே" என்றார் திரு பற்குணம்.

"உங்களுக்குத் தெரிந்து சித்த புருஷர்கள் யாராவது இப்போது இந்த வட்டாரத்தில் இருக்கிறார்களா?" என்று கேட்டேன் நான்.

"ஓ, பூண்டியில் ஒரு சாமியார் இருக்கிறார். அவர் எங்கெல்லாமோ சுற்றித் திரிந்து விட்டு, ஏழு வருஷங்களுக்கு முன் ஒரு வீட்டுத் திண்ணையில் வந்து உட்கார்ந்து விட்டார். அங்கிருந்து நகரவேயில்லை. போன மாதம் கூட நான் சென்று தரிசித்து விட்டு வந்தேன். நீங்கள் அவரை நிச்சயம் தரிசனம் செய்ய வேண்டும்" என்று கூறினார் பற்குணம்.

"பூண்டி எங்கேயிருக்கிறது?"

"இதோ, இங்கிருந்து ஏழெட்டு மைலில் இருக்கிறது. கலசபாக்கத்திலிருந்து இரண்டு மைல். நீங்கள் இப்போது வந்த வழியே திரும்பிப் போக வேண்டும். கட்டாயம் போய்ப் பார்த்துட்டுப் போங்க" என்றார் பற்குணம்.

நான் நண்பர் சேஷாத்ரியைப் பார்த்தேன். 'போய்ப் பார்த்து விட வேண்டியதுதான்' என்பது போல் அவன் தலையை ஆட்டினான்.

ஸ்ரீ துரைசாமி ஸ்வாமிகள் உடன் வர, நாங்கள் பூண்டி கிராமத்திற்குப் புறப்பட்டோம். —தொடரும்



ஸ்ரீ விடோபா ஸ்வாமிகள்

...யகக்களிலே, வீகை கலைத்துவிட வேண்டு மென்ற கருத்தே மேலோங்கி நின்றது. இறுதியாக காயிதே மில்லத் பேசினார்கள். இந்திய முஸ்லிம்களின் தாய்ச் சபையாக லீக் நீடிப்பது என முடிவு செய்யப்பட்டது. இந்த முடிவெடுத்த மறுநாள், காயிதே மில்லத் அவர்களிடம் "லீகை கலைப்பது என நேற்று பெரும்பாலோர் வற்புறுத்தியிருந்தால் என்ன ஆகியிருக்கும்" என்று கேட்டதற்கு ஒரு சிமிட்டிப் பொடியை உறிஞ்சி விட்டு அவர்கள் சொன்னார்கள்:

"அப்படிப் பெரும்பாலோர் உண்மையிலேயே கருதியிருந்தால், அவர்களிடம் கேட்டுக் கொண்டிருந்திருப்பேன்: 'லீகை கலைப்பதற்குப் பதில் நீங்கள் அனைவரும் லீகிலிருந்து ராஜினாமா செய்து விடுங்கள். நான் தனி ஒருவனாக மாத்திரம் இந்த லீகை வைத்திருக்கிறேன். உங்களுக்கும், உங்கள் பரம்பரையினருக்கும், அச்ச உணர்ச்சி அகன்று, முஸ்லிம்கள் தன்மானத்தோடு வாழ, தலை நிமிர்ந்து செயல்பட ஒரு இயக்கம் தேவைப்படும்போது இதன் நிழலில் நீங்கள் மீண்டும் இடம் தேட முடியும்' என்று சொல்ல எண்ணியிருந்தேன். ஆனால் அதற்கு அவசியமில்லாமல் ஆகிவிட்டது" எனச் சொன்னார்கள்.

இந்தப் பதிலைக் கேட்ட நாளிலிருந்து அவர்கள் மீது எனக்கு அளப்பரிய மதிப்பு ஏற்பட்டது. ஆனால், திருக்குர்ஆனை தமிழில் மொழி பெயர்த்து அச்சிட்டுப் பிரசுரிக்கும் பணியில் என் தந்தையார் அல்லாமா ஆ.கா. அப்துல் ஹமீது பாகவி அவர்களுடன் ஈடுபட்டிருந்ததாலும், அதன் பின் கல்லூரிப் படிப்பை நான் மேற்கொண்டிருந்ததாலும் நேரடி அரசியலில் நான் உடனடியாக ஈடுபடவில்லை; என்றாலும் காயிதே மில்லத் விரைவிலேயே என்னை ஆட்கொண்டார். அந்த நாள் எனக்கு நினைவில் பசுமையாக நிற்கிறது.

1954-ம் ஆண்டின் தியாகத் திருநாள். நல்ல நாட்களில் பெரியவர்களைக் காணும் பேறு பெற வேண்டுமல்லவா? காயிதே மில்லத் அவர்களைக் காணச் சென்றேன். மாலை 4 மணியிலிருந்து இரவு 10 மணி வரை அவர்கள் பேசினார்கள். அந்தப் பெருநாளின் தத்துவத்தைத்தான் அவர்கள் ... விளக்கி... னார்கள். என் தந்தையின் மடியிலும் காலடியிலும் எந்த மத அறிவைப் பெற்றிருந்தேனோ, அந்த அறிவைத்தான் காயிதே மில்லத் அவர்... விளக்கினார்கள். ஆனால், அன்று அவர்கள் சொன்ன முறையில் ஏதோ ஒரு தனிப் பொருள் தெரிந்தது.

தள்ளாத வயதில் பெற்ற பிள்ளை, உற்ற மனைவி, பிறந்த பொன்னாடு—இத்தனையையும், நபி இப்ராஹீம், இறைவனின் வழியிலே தியாகம் செய்தார்கள்.

பெற்ற பிள்ளையையும் இறைவனுக்கு... செய்யத் துணிந்த நபி இப்ராஹீமின் தியாக சிந்தை பெரிதா? அத் தியாகத்திற்கு மனமுவந்து உட்பட்ட நபி இஸ்மாயிலின் தியாக சிந்தை பெரிதா? என் சிந்தை இஸ்மாயிலின் தியாகத்தை நினைவு கூர்ந்தது. இறைவனுக்கு ஒரு இஸ்மாயில் விளக்கிக் கொண்டிருந்ததையும் எண்ணிப் பார்த்தேன். இந்திய முஸ்லீம்கள் நல்வாழ்வுக்காக இந்த இஸ்மாயில் செய்துள்ள - குர்பானி' தியாகத்தையும் எண்ணினேன். என் வாழ்வை அவர் வழியில் இணைத்தேன். அன்றிலிருந்து.. அவர் நினைவில் வாழ்கிறேன், நினைவில் செயல்படுகிறேன்.

அடுத்த இதழில்:

ஏ. கே. ஷண்முகம் — ம. பொ. சி.



அப்துல் சமத் எம்.பி.



6

போளூரிலிருந்து திருவண்ணாமலை செல்லும் பாதையில், ஐந்தாவது மைலில், செய்யாற்றின் கரையோரமாக வலப்புறத்தில் கார் திரும்பியது.

"இதுதான் கலசபாக்கம். இந்தச் சிற்றூரில் பூண்டிச் சாமியார் பல ஆண்டுகள் இருந்திருக்கிறார். வெயில் அடித்தாலும் வெள்ளம் வந்தாலும், குளிரானாலும் கடும் பனியானாலும் அவர் இந்த ஆற்று மணலிலேயே உட்கார்ந்திருப்பார்" என்றார் ஸ்ரீ துரைசாமி சுவாமிகள்.

"அவருக்கு எந்த ஊர்? கலசபாக்கத்தைச் சேர்ந்தவர்தானா?"

"அவருடைய ஊரும் பெயரும் ஒருவருக்கும் தெரியாது. முப்பது வருஷங்களுக்கு மேலாக இந்தப் பக்கத்து கிராமங்களிலேயே இவர் நடமாடிக்கிட்டிருந்தார். இப்போ ஆறேழு வருஷமா பூண்டிக்கு வந்து ஒரு வீட்டுத் திண்ணையிலே உட்கார்ந்துட்டார்... அன்னிக்கு நகரவேயில்லை."

"அந்தச் சாமியாருக்கு என்ன வயசு இருக்கும்?"

"பார்த்தால் சுமார் அறுபது வயசு சொல்லலாம். ஆனா, இருபத்தஞ்சு வருஷத்துக்கு முன்னே இவரைப் பார்த்தவங்க அப்போ பார்த்த மாதிரியேதான் இப்பவும் இருக்காருன்னு சொல்றாங்க.. சித்தர்களுடைய வயசை அவங்க தோற்றத்தைப் பார்த்துக் கண்டு பிடிக்க முடியாது.." என்றார் துரைசாமி சுவாமிகள்.

கிராமியச் சூழ்நிலையின் எழிலைப் பருகிக் கொண்டே நாங்கள் சென்றோம். நல்ல மழை பெய்திருந்ததால் செய்யாற்றில் சுமாராகத் தண்ணீர் ஓடிக் கொண்டிருந்தது. சூரிய வெப்பத்தைத் தணிக்கும் வகையில் குளிர்ந்த காற்று வீச, கரையிலிருக்கும் அரச மரங்கள் சல சலத்தன.

"பூண்டி இன்னும் எத்தனை தொலைவில் இருக்கிறது?" என்று கேட்டேன் நான். முதன் முதலாக ஒரு சித்தரைக்

— பரணீதரன் —

[illegible] போகிறோம் என்ற ஆவல் என் [illegible] இழக்கச் செய்தது.

"இன்னும் அரை மைல் கூட இருக்காது."

"சாமியார் உட்கார்ந்திருக்கும் வீடு [illegible] யா இருக்கு?"

"இல்லை.. மெயின் ரோட்டிலேயே [illegible]... போற வழியிலேயே [illegible]... அதோ... [illegible] பேர் [illegible]... அதோ விடுதான்! [illegible] இப்படியே நிறுத்திக்க [illegible]..." என்று துரைசாமி சொல்லி முடிக்கவும் டிரைவர் பிலிப் சட்டென்று பிரேக்கைப் போட்டுக் காரை ஓர் ஓரமாக நிறுத்தினார். நாங்கள் இறங்கி அந்த வீட்டை நோக்கி நடந்தோம்.

அது ஒரு சிறு ஓட்டு வீடு. வலப்புறத்தில் நாலடிக்கு நாலடி ஒரு திண்ணை. இடப் புறத்தில் ஒன்றரையடிக்கு [illegible] ஒரு குட்டித் திண்ணை. அதில் [illegible] பூண்டிச் சாமியார் உட்கார்ந்திருந்தார். ஒரு பக்கமாகத் தலையைச் சாய்த்து மின்னல் வெட்டுவது போல் 'பட் பட்' என்று எதிரில் நின்றிருந்தவர்களை அவ்வப்போது பார்த்தார். வலக்கையில் இரண்டு நெருப்புப் பெட்டிகள் இருந்தன. இடக்கையால் [illegible] தாடியை உருவி விட்டுக் கொண்டிருந்தார். அதிலிருக்கும் பேனையோ, அழுக்கையோ பார்ப்பது போல் விரல் [illegible] உன்னிப்பாக கவனித்து விட்டு மீண்டும் தாடியை வருட ஆரம்பித்தார்.

திண்ணையில் அமர்ந்திருக்கும் பூண்டிச் சாமியார்

ஓர் இளைஞர் வந்தார். சாமியாரின் வெகு அருகில் சென்று மெல்ல ஏதோ சொன்னார். அவர் 'ம்...' என்று உத்தரவளித்தார். இளைஞர் ஒரு சிகரெட்டைக் கையில் எடுத்து, சாமியாரின் வாயில் வைத்து, தீக்குச்சியைக் கிழித்துப் பற்ற வைத்தார். சாமியார் தம் கையை நீட்டி, நெருப்புப் பெட்டியை வாங்கிக் கொண்டார். இப்போது, அவர் கையில் மொத்தம் மூன்று வத்திப் பெட்டிகள் அடக்கமாகி விட்டன. இடக் கையால் சிகரெட்டைக் குடித்தார். ஆனால், சாதாரணமாக பிறர் புகைப்பதற்கும், சாமியார் புகைப்பதற்கும் நிறைய வித்தியாசம் இருந்தது. ஒரு முறை இழுக்கிறார். எடுக்கிறார். 'குப்' 'குப்'பென்று புகை விடுகிறார். உடனேயே சிகரெட் உதட்டுக்குப் போகிறது. இழுக்கிறார்; எடுக்கிறார். மீண்டும் இழுத்து புகை விடுகிறார். ஆனால், புகை அதிகமாக வெளிப்படுவதில்லை. அவர் அதை உள்ளே இழுத்து விழுங்குவதாகவும் தெரியவில்லை. இரண்டே நிமிஷத்தில் அணைத்துத் தள்ளி விடுகிறார்.

இரண்டு பேர் கீழே விழுந்து கும்பிட்டு விட்டு, அவரது கால்களைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொள்கிறார்கள். கை நீட்டி, பய பக்தியோடு திருநீறு கேட்கிறார்கள்.

"எடுத்துக்க" என்கிறார் சாமியார். அவர்கள் எடுத்துப் பூசிக் கொண்டு "போய் வரேன் சாமி" என்கிறார்கள்.

"நல்லது. போய் வா" என்று சாமியார் உத்தரவு கொடுத்து அனுப்புகிறார். போகிறவர்களைக் கீழே குனிந்தபடி ஓரக் கண்ணால் ஒரு மாதிரி பார்க்கிறார். ஒரே ஒரு கணம்தான்!

ஒரு பையன் வந்தான். கையிலிருந்த கலர் சோடாவை உடைத்துச் சாமியாரிடம் கொடுத்தான். அதைப் பெற்றுக் கொண்டு, உதட்டிலிருந்து எடுக்காமல் ஒரே வாயில் குடித்து விட்டுப் புட்டியைக் கொடுத்தார். பிறகு, ஒரு

பெரும் ஏப்பம் விட்டார். பையன் ஒரு துணியை எடுத்து சாமியாரின் வாயை யும் மூக்கையும் துடைத்து விட்டான். அவர் ஒரு சாது வான குழந்தையைப் போல அசைக்காமல் முகத்தைக் காட்டினார். 'போய் வரேன் சாமி' என்று பையன் சொன்னதும், திருநீறு எடுத்து அவன் நெற்றியில் இட்டு அனுப்பினார்.

சாமியாரையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தேன் நான். சட்டென்று அவருடைய பார்வை என் மீது விழுந்தது. இல்லை, ஒரு குளுமையான மின்னல் என்னைத் தாக்கியது. சீரடி பாபாவின் 'யோகப் பார்வை'யைப் பற்றி படித்த போது, அதன் பொருளை என்னால் முழுமையாக உணர முடியவில்லை. பூண்டி சாமியாரின் பார்வையின் மகிமையை உணர்ந்ததும் சாயி பாபாவின் அருள் நோக்கு இப்படித்தான் இருந்திருக்குமோ என்று மனக்குள் எண்ணிக் கொண்டேன் நான்.



பூண்டி சாமியார்

அத்தனை நேரம் வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றிருந்த நான், என்னையுமறியாமல் சட்டென்று கீழே விழுந்து வணங்கி விட்டு, நின்றேன்.

ஓர் அம்மாள் வந்தாள். காகிதத்தைப் பிரித்து ஒரு மிட்டாயை எடுத்துச் சாமியாரின் வாயில் போட்டாள்.. அவர் கையை நீட்டி அந்தக் காகிதத்தையும் வாங்கிக் கொண்டு விட்டார். சாமியாருக்கு ஏதாவது வாங்கிக் கொடுக்க வேண்டும் என்று எனக்குத் தோன்றவே, அங்கிருந்தவரிடம் அருகி லிருக்கும் டீக் கடையிலிருந்து ஒரு கப் காப்பி வாங்கி வரச் சொன்னேன்.

சாமியார் இஷ்டப்பட்டால்தான் நம்மிடமிருந்து வாங்கிச் சாப்பிடுவார் என்றும், அப்படி வாங்கிச் சாப்பிட்டால் அவருடைய ஆசி நமக்கு இருக்கிறது என்று அர்த்தம் என்றும் பக்கத்தில் நின்றிருந்த உள்ளூர்வாசி என் காதில் ரகசியமாக கூறவே, சற்றுத் தயக்கத்துடனேயே காப்பியை அவரிடம் நீட்டி, "காப்பி சாப்பிடுங்க சாமி" என்றேன்.

என்னை ஒரு முறை நன்றாகப் பார்த்து விட்டு, காப்பியைக் கையில் வாங்கிக் கொண்டார் சாமியார். அப்போது அவரது விரல்களைப் பார்த்தேன். நீண்ட பெரும் விரல்கள். கனமான வலுவுள்ள கைகள். அவர் எழுந்து நின்றால் ஆஜானுபாகுவாக இருப்பார்; சந்தேகமில்லை.

தம்ளரை உதட்டிலிருந்து எடுக்காமலும், தலையை நிமிர்த்தாமலும் நாக்கினால் சிறுகச் சிறுக உறிஞ்சியே காப்பி பூராவையும் குடித்து விட்டார். எனக்குப் பரம திருப்தியாக இருந்தது. அடுத்து, வேறோர் அன்பர் ஒரு டீ வாங்கி வந்து கொடுத்தார். அதையும் காப்பியைப் போலவே ஒரே மூச்சில் உறிஞ்சிக் குடித்தார். அவர் செய்கைகள் எல்லாமே விநோதமாக, அசாதாரணமாக இருந்தன.

சாமியாரைச் சுற்றிலும் பழங்களும் தின்பண்டங்களும் ஏராளமாகக் கிடந்தன. ஆரஞ்சு, ஆப்பிள், திராட்சை, வாழைப் பழம், லட்டு, பூந்தி, அல்வா, சாக்லெட், மிட்டாய், பிஸ்கெட்...

மடியல சிகரெட் பாக்கெட், இரண்டு சாசலெட் காகிதம், ரூபாய் நோட்டு ஒன்று... எதிரில் ஆறிப்போன காப்பியுடன் இரண்டு கண்ணாடி தம்ளர்கள். சுற்றிலும் சுவாமிப் படங்கள். பின்னால் மாடத்தில் ஒரு சிறு பிள்ளையார் பொம்மை. ஒரு பெரிய வேல். அவருக்கு நேரே, தூணில் ஆறுமுகனின் படம். அதை அடிக்கடி பார்த்துக் கொள்கிறார். இரண்டு திண்ணைகளுக்கும் இடையே ஓர் அறை. அதில் சாமியாருக்கு அளிக்கப்படும் பொருள்கள் மலையாகக் குவிந்திருக்கின்றன. சிகரெட் பாக்கெட்டுகள், தீப் பெட்டிகள், பூமாலைகள், பழங்கள், இலைகள், காகிதங்கள் இன்னும் ஆயிரத்தெட்டு பொருட்கள் அங்கே காணப்படுகின்றன. தமக்காக அளிக்கப்படும் பண்டங்களை அவர் அந்த அறையில் தூக்கிப் போட்டு விடுகிறாராம். அந்தத் திண்ணையிலிருந்து ஒரு துரும்பையும் அவர் அனுமதி யின்றி ஒருவரும் தொட்டு விட முடியாதாம்!

கீழ் மின்னல இளம் சாமியார்



குப்பையும் கூளமும் நிறைந்த அந்த அறையில் ஓர் அதிசயத்தைக் கண்டேன். அங்கு போடப்பட்டிருந்த பழங்கள் அழுகி, உலர்ந்து சுருங்கிப் போய் யிருக்கவில்லை. துர்நாற்றமும் அங்கு சிறிதும் இல்லை. ஏன், ஓர் ஈ கொசுவைக் கூட காண முடியவில்லை!

அந்த வீட்டுக்கு எதிரிலுள்ள கொட்டகைக்கு அருகில் நின்றிருந்த சுப்பிரமணி என்ற நபரை எனக்கு அறிமுகம் செய்து வைத்தார்கள். அவர் ஒரு தையல் தொழிலாளி. மூன்று நான்கு வருடங்களாக சாமியாருக்குப் பணிவிடைகள் செய்து வருகிறாராம். அதற்கு முன், சாமியார் பெரிய திண்ணையில் அமர்ந்திருந்த போது அவர் யாரையுமே தம்மிடம் அண்ட விடவில்லையாம். இரண்டு மூன்று வருடங்களாகத் தான் திண்ணையை சுத்தம் செய்யவும் உடலைத் துடைத்து விடவும் அனுமதிக்கிறாராம். சுப்பிரமணி, சாமியாருக்குக் காலையிலும் பகலிலும் சிறிது ஆகாரம் கொண்டு வந்து தருகிறார். சாமியார் பசிக்கிறது என்று இதுவரை யாரையும் ஒன்றும் கேட்டதில்லை என்றும், வாயில் ஊட்டினால்தான் சாப்பிடுவார் என்றும், இஷ்டமில்லாவிட்டால் அதையும் நிராகரித்து விடுவார் என்றும் சுப்பிரமணி கூறினார். இரவு எட்டு மணிக்குக் காலை நீட்டி சாமியாரைப் படுக்க வைத்து விட்டு, தானும் கீழே படுத்து விடுவாராம். சாமியார் காலையில் நான்கு மணிக்கெல்லாம் எழுந்து பழையபடி உட்கார்ந்து விடுவாராம்.

"அவர் யாருடனும் பேசுவதில்லையா?" என்று கேட்டேன் நான்.

"நல்லாப் பேசுவாருங்க. ஆனா, இஷ்டம் இருந்தாத் தான் பேசுவாரு. சில சமயம் நான் கேட்பதற்கு நேரடியாக பதில் சொல்லுவார். சில சமயம் மறைமுகமாப் பேசுவாரு. அதை நாம் தான் கஷ்டப்பட்டுப் புரிஞ்சுக்கணும்."

"அவருக்கு சொந்த ஊர் எது, அவர் பேரு என்ன என்பதைப் பற்றி யெல்லாம் நீங்க அவர் கிட்டே எப்போதாவது கேட்டிருக்கீங்களா?"

"எத்தனையோ தரம் கேட்டிருக்கி றேன். அதை மட்டும் சொல்ல மாட் டாரு... 'அதெல்லாம் தேவ ரகசியம். கேக்கப்படா'ன்னு சொல்லி மடக் கிடுவார்."


"இவர் ஒரு சித்தர்னு நம்பற [illegible] இங்கே ஏதாவது அதிசயம் [illegible]ருக்கா?"...என்று நான் சுப்பிர மணியிடம் கேட்டேன்.

[illegible] எதையோ சொல்லத் [illegible]க்கினார். சட்டென்று நிறுத்திக் [illegible] விட்டார்.

"[illegible] சொல்லுங்க" என்று [illegible] நான் உற்சாகப் படுத்தினேன்.

"[illegible] எத்தனையோ விஷயம் நடக் [illegible]...அதெல்லாம் நான் சொல்ல [illegible] கூடாதோ... சாமியார் விஷ [illegible] ரொம்ப ஜாக்கிரதையா [illegible]ணுங்க...அவர் சாதாரண சாமி [illegible]ங்க...அவங்க அவங்க அனு [illegible]பட்டாத் தான அவர் பெருமை [illegible]...... ஒரு விஷயம் கேளுங்க [illegible]... இதோ... இந்த டீக் கடைக் [illegible] நான் தினம் காலையிலே [illegible] கொடுப்பாரு....ஒரு நாள் [illegible] கொடுக்காமலேயே ஸ்கிரீன் [illegible]யை விலக்கிக்கிட்டு உள்ளே [illegible]ட்டாரு... அவ்வளவுதான்.... [illegible] மேலே சாமியார் இல்லையாம். [illegible]க்குப் பதிலா அங்கே ஒரு பெரிய [illegible] பாம்பு படுத்துக்கிட்டிருந்த [illegible] கடைக்காரர் அலறிக் [illegible]க்கிட்டு வெளியே ஓடியாந் [illegible]ரு... அப்புறம் நாங்களெல் [illegible] எழுந்து "என்ன... ஏது?" [illegible]ன்னு விசாரிச்சோம்... அவருக் [illegible] பேசவே முடியலே. நல்லா பயந்து [illegible]. அன்னி பூராவும் பேய் அறைஞ்ச மாதிரி இருந்தாரு....அப் புறம் சாமியார் கிட்டே விஷயத்தைச் சொல்லித் துருநூறு வாங்கிப் பூசிக் கிட்ட பிறகுதான் பயம் தெளிஞ்சுது" என்று சுப்பிரமணி கூறிக் கொண்டிருக் கும் போதே எனக்கு முதுகெலும்பில் பாம்பு நெளிவது போல் சில்லிட் டது. நேரே சாமியாரிடம் போய் அவர் காலைத் தொட்டுக் கும்பிட்டு விட்டு, விபூதியை எடுத்து பூசிக் கொண்டு, அவரிடம் உத்தரவு பெற் றுக் கொண்டு கிளம்பினேன். இன் னொரு முறை பூண்டிக்கு வந்து சாமி யாருடன் இரண்டு வார்த்தைகளா வது பேச வேண்டும் என்ற எண்ணத் துடனேயே கீழ்மின்னலை நோக்கிப் பயணமானேன்.

இரத்தினகிரி



ஸ்ரீ துரைசாமி சாது சுவாமிகளைப் போரூர் ஸ்ரீ விடோபா மடத்தில் இறக்கி விட்டு விட்டு, வேலூரில் ஆகா ரத்தை முடித்துக் கொண்டு நண்பர் சேஷாத்ரியும் நானும் கீழ்மின்னல் கிராமத்திற்கு வந்து சேர்ந்த போது மணி பன்னிரண்டு ஆகி விட்டது. பத்தரை மணிக்கு திரு மகா தேவனை அங்கு சந்திப்பதாகச் சொல்லி யிருந்தேன்.

அவசரம் அவசரமாக இரத்தின கிரி யில் ஏறினோம். செங்குத்தாக நூற் றைம்பது படிகள் ஏற வேண்டி யிருந் தாலும், சிரமமாக இருக்கவில்லை.

மேலே ஏறிச் சென்றதும், முப்பது வயது மதிக்கத் தக்க சாமியார் ஒருவர் கோவணாண்டியாக, உடல் பூராவும் விபூதியைப் பூசிக் கொண்டு, எதிரில் வேகமாக நடந்து வந்தார். நாங்கள் சற்று தயங்கி நின்றோம். புது முகங் களைக் கண்டு அவரும் சற்று தயங் கினார். முதலில் என்னை அறிமுகப் படுத்திக் கொண்டேன்.

'ஓ...' என்று ஆர்வம் மிகுந்த சிரிப்புடன் எங்களை வரவேற்றார் அந்த இளம் சாமியார்.

மகாதேவன் வந்திருக்கிறாரா என்று விசாரித்தேன் நான். அவர் இன்னும் வரவில்லை என்றும் ஒரு மணிக்கு வருவார் என்றும் எங்களுக்குச் சமையலறை காட்டி விட்டு, எங்களைச் சந்நிதிக்கு அழைத்துச் சென்றார்.

ஸ்ரீ வள்ளி தெய்வயானை சமேத ஸ்ரீ ஆறுமுகப் பெருமானுக்கு வெள்ளிக் கவசங்களுடன் மிக நேர்த்தியான மலர் அலங்காரம் செய்யப்பட்டிருந் தது. சாமியார் தீபாராதனை காட்டி



இப்படியிருந்த கோயில்



இப்படி மாறி வருகிறது

விட்டு, எங்களுக்கு விபூதிப் பிரசாதம் அளித்தார்.

பின்னர், குறி சொல்ல அவர் வாசற்படியில் வந்து அமர்ந்தார். அங்கு, பத்து பதினைந்து பேர் உட்கார்ந்திருந்தனர். வரிசைப்படி ஒவ்வொருவராக தங்கள் குறைகளை எழுதி, சாமியாரிடம் கொடுக்கிறார்கள். அவர் அதைப் படித்துவிட்டு, குறிப்பிட்ட நபர்களை உற்று நோக்குகிறார். கௌளி கத்துவது போல், சற்று உரக்கச் சப்தித்துக் கொண்டே, குத்திட்ட பார்வையுடன் மெள்ளத் தலையைத் திருப்பி, ஆறுமுகனின் பிம்பத்தை ஊடுருவிப் பார்க்கிறார். அந்தக் கணமே மின்சாரம் பாய்வது போல் முருகனின் அருள் அவர் உள்ளத்தில் பிரகாசிக்க, நம் பிரச்னைகளுக்கு பரிகாரம் கிடைத்து விடுகிறது... உடனே அதைக் காகிதத்தில் எழுதி விபூதியும் வேப்பிலையும் போட்டு மடித்துக் கொடுத்து விடுகிறார். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான கட்டளை பிறக்கிறது.

அந்த இளம் சாமியாரிடம் வருகிறவர்கள் நம்பிக்கையோடு வருவதைக் கண்டேன். அவர் இதுவரை எத்தனையோ பேய்களை ஓட்டியிருக்கிறார். இளம்பிள்ளை வாதத்தைச் சரி செய்து நடக்க வைத்திருக்கிறார். ஊமையைப் பேச வைத்திருக்கிறார். பைத்தியத்தைத் தெளிய வைத்திருக்கிறார். இதெல்லாம் அங்கு வந்தவர்களுடன் பேசியதிலிருந்து தெரிந்தது.


இப்படி வருபவர்கள் தங்களுக்கு இஷ்டமான பணத்தைத் தருகிறார்கள். இவ்வாறு முருகன் சந்நிதியில் சேரும் ஒவ்வொரு காசும் அவன் கோயில் திருப்பணிக்கே செலவாகிறது. இரண்டு வருடங்களுக்கு முன் கல்லும் முள்ளும், புதருமாகக் கிடந்த இடம் இன்று சீராகி வருகிறது. தங்கும் அறைகள் கட்டப்பட்டிருக்கின்றன. ஆஸ்பெஸ்டாஸ் கூரை போடப்பட்டிருக்கிறது. சுற்றிலும், மதில் சுவர்கள் எழும்பிக் கொண்டிருக்கின்றன. இது மட்டுமா? வெள்ளிக் கலசங்கள், சரவிளக்குகள், பித்தளை, எவர்சில்வர் பாத்திரங்கள், காட்ரெஜ் பீரோக்கள் என்று சொத்துக்கள் சேர்ந்து கொண்டிருக்கின்றன.

"என் முருகன் கட்டத் துணியற்ற ஏழை முருகனாகத்தான் இருந்தான். இப்போது அவன் சக்தியைக் காட்டத் தொடங்கி விட்டான். ஆறுபடை வீடுகளிலும், இதே முருகன்தானே வீற்றிருக்கிறான். அவர்களுக்கு இருக்கும் பெருமையும் புகழும் இவனுக்கும் சீக்கிரத்திலேயே வரப் போகின்றன" என்று பெருமிதத்துடன் சிலேட்டில் எழுதிக் காட்டினார் சாமியார். பின்னர், ஒரு நாள் வீட்டிலிருந்து அலுவலகத்திற்குச் செல்லும் வழியில் திடீரென்று தமக்கு அந்த நிலை ஏற்பட்ட விந்தையையும், மாறிய நிலையில் தாம் பெற்ற அனுபவங்களையும், எதிர் காலத் திட்டங்களையும் பற்றி இருபது பக்கங்களுக்கு மேலாக அசுர வேகத்தில் எழுதிக் காட்டினார்.

அப்போது மகாதேவனும் அவரது நண்பரும் வந்தார்கள். சேஷாத்ரியின் கையில் இருந்த கடிகாரத்தைப் பார்க்கச் சொன்னார் சாமியார். மணி சரியாக ஒன்று. 'ஒரு மணிக்கு வருவார்' என்று அவர் சொன்னது பலித்து விட்டது. 'மகாதேவன் வரும் நேரம் சாமியாருக்கு எப்படித் தெரிந்தது?' என் முகபாவத்திலிருந்து என் ஆச்சரியத்தைப் புரிந்து கொண்ட சாமியார், என்னைப் பார்த்து வாய் விட்டு 'கலகல' வென்று ஆனந்தமாகச் சிரித்தார்.

—தொடரும்

...ன் நாள்
முழுவதும் சுறுசுறுப்
புடன் இருப்பதற்கு
உபயோகப்படுவது
நோவா டால்க்
பவுடர்




தயாரிப்பாளர்கள்:

நோவா கம்பெனி

ஆக்ரா ரோடு, பாண்டுப்

பம்பாய் - 78.

மிகச் சிறந்த "கிரேஸ்புல் ப்ரேஸியர்ஸ்"
வாங்க சிறிய தொகை
கொடுத்தாலே போதும்



அதிக காலம் நீடித்து உழைக்கிறது. மற்ற ப்ரேஸியர்களைவிட விலை குறைவானது. உயர்ந்த பருத்தியிலான "ஹார்வி-டுவின் டஸ்கர் 2x2 சூப்பர் ஃபைன், பாப்ளின் துணிகள் கொண்டு தயாரிக்கப்படுகிறது. இறக்குமதி செய்த எலாஸ்டிக் நாடா உபயோகப்படுத்தப்பட்டிருப்பதால், மற்ற ப்ரேஸியர்களைவிட நீடித்து உழைக்கின்றன. இதன் தரம் பற்றி லட்சக்கணக்கான சகோதரிகளின் பாராட்டுகளே நிரூபிக்கின்றன. கடைக்குப் பார்த்தால் நீங்கள் ஆச்சரியப்படும் அளவிற்கு விலை மலிவானது. இன்றே நீங்களும் வாங்குங்கள்.

'கிரேஸ்புல் ப்ரேஸியர்ஸ்'

இப்பொழுது அழகான வண்ண
கலர் பெட்டிகளில் கிடைக்கும்.

2 x 2 Super Fine Royal — Rs. 3-90, Fancy — Rs. 3-90, Rosy — 3.90, Princess — 3-90, Elite — 3-90, Joy — 3-90, Sharmila — 4-20, Sharmila Lace Cup — 4-60, Lace Sharmila—5-60, Sweet Heart—7-00

ஸ்பெஷல் கட்பாடிகள்: **32 Size Rs. 4-25**

அதிகப்படி **Size** ஒன்றுக்கு **0-30P.** அதிகம்

JANATHA SPECIAL:

Ameetha—Rs. 2-25, Lilly—2-35.

Available at:

ALL LEADING SHOPS AND
SUPER MARKETS

'GRACEFUL BRASSIERS'

Manufacturers: A-ONE DRESSES,

5-B South Usman Road,
T.Nagar, Madras-17.
Phone: 441484.

இந்திய பிலிம் இன்ஸ்டிடியூட், பூனா

அனுமதிபற்றிய அறிவிப்பு

1970 ஜூலை 1ம் தேதி துவங்கும் கல்வி ஆண்டில் இத்தொழில் நுணுக்கப்பள்ளியில் மூன்றாண்டுப் பிரிவில் சேர முறையான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. டைரக்ஷன் : (3 ஆண்டுகள்) கல்வித் தகுதி: கலை, விஞ்ஞான பட்டப்படிப்பு அல்லது அதற்கு இணையான படிப்பு, வயது 1-7-70 அன்று 19 லிருந்து 30 க்குள்.

2. ஸ்கிரீன்ப்ளே ரைட்டிங் : (3 ஆண்டுகள்; கல்வித் தகுதி: கலை, விஞ்ஞான பட்டப்படிப்பு அல்லது அதற்கு இணையான படிப்பு. வயது 1-7-70 அன்று 19 லிருந்து 30 க்குள்.

3. மோஷன் பிக்சர் போட்டோகிராபி : (3 ஆண்டுகள்) கல்வித் தகுதி: பிஸிக்ஸ், கெமிஸ்ட்ரியைப் பாடமாக எடுத்து இன்டர்மீடியட் அல்லது அதற்கு இணையான படிப்பு, மூன்றாண்டுப் பட்டப் படிப்புக்கு முந்தைய ஓராண்டு கல்லூரிப் படிப்பு, அல்லது பல்கலைக் கழகம், மாநில அரசு அங்கீகரிக்கப்பட்ட நிலையத்திலிருந்து கலைத்துறைப் படிப்பில் பட்டப்படிப்பு, டிப்ளமா பெற்றவர்கள், மெட்ரிகுலேஷன் படித்தபின் ... அனுபவமாவாக இருப்பவர்கள் மனுப்போடலாம். வயது: 1-7-70 அன்று 17 லிருந்து 30 க்குள்.

4. சவுண்ட் ரிகார்டிங், சவுண்ட் இன்ஜினியரிங் : (3 ஆண்டுகள்) கல்வித் தகுதி: பிஸிக்ஸ், கெமிஸ்ட்ரி, கணக்கை பாடமாக எடுத்து இண்டர்மீடியட் அல்லது மூன்றாண்டுப் பட்டப்படிப்பிற்கு முன் ஓராண்டு கல்லூரிப்படிப்பில் தேறியவர்களும் இதில் சேரலாம். அல்லது அதற்கு இணையானபடிப்பு. வயது: 1-7-70 அன்று 17 லிருந்து 30 க்குள்.

5. எடிட்டிங் : (2 ஆண்டுகள்) கல்வித்தகுதி: கலை, விஞ்ஞானத் துறையில் இன்டர்மீடியட் மூன்றாண்டு பட்டப் படிப்பிற்கு முந்தைய ஓராண்டு கல்லூரிப்படிப்பு அல்லது அதற்கு சமமான படிப்பு. வயது: 1-7-70 அன்று 17 லிருந்து 30க்குள்.

6. பிலிம் ஆக்டிங் : (2 ஆண்டுகள்) மெட்ரிகுலேஷன் அல்லது ஆங்கிலத்தை ஒரு பாடமாக எடுத்து படித்த அல்லது இணையான படிப்பு, இந்தி/உருது மொழியில் தேர்ச்சி அவசியம். பெண்களுக்கு மட்டும் கல்வித் தகுதியில் விசேஷ சலுகை அளிக்கப்படும். வயது 1-7-70 அன்று பெண்களுக்கு 16 லிருந்து 25 க்குள் ஆண்களுக்கு 18 லிருந்து 28 க்குள்.

மேலே குறிப்பிட்ட கல்வித் தகுதிக்காக தேர்வுகளுக்கு 1970 ஏப்ரல்/மே அல்லது ஜூனில் ஆஜராகி இருப்பவர்களும், ஆஜராக இருப்பவர்களும், தேர்வின் முடிவை எதிர்பார்ப்பவர்களும், இந்த இன்ஸ்டிடியூட்டின் நுழைவாயில் தேர்விற்கு ஆஜராக அனுமதிக்கப்படுவர். ஆனால் அதற்காக, பிரின்ஸிபால், தலைமை ஆசிரியர் போன்ற கல்வி நிலையத்தாரிடமிருந்து ஒரு சர்டிபிகேட் வாங்கி அனுப்பவேண்டும். தேர்வில் தேறினால் அவர்களுக்கு தற்காலிகமான இடத்தை ஒதுக்குவர். 1970 ஜூலை 31 க்குள் குறிப்பிட்ட கல்வித் தகுதிகளைப் பெற்றதற்கான அத்தாட்சி தாக்கல் செய்யவேண்டும். இல்லையேல் ஒதுக்கப்பட்ட இடம் ரத்தாகும், கட்டணம் திருப்பித் தர இயலாது.


நுழைவுத் தேர்வின் அடிப்படையில், இப் பல்வேறு துறைக்கும் நபர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். பிலிம் டைரக்ஷன், ஸ்கிரீன்ப்ளே ரைட்டிங், மோஷன் பிக்சர் போட்டோகிராபி, சவுண்ட் ரிகார்டிங், சவுண்ட் இன்ஜினியரிங், பிலிம் எடிட்டிங் ஆகியவற்றிற்கு எழுத்து மூலமான தேர்வும், வாய் மூலம் நேரிடையான தேர்வும் நடக்கும். அலஹாபாத், பம்பாய், கல்கத்தா, டெல்லி, மதராஸ், பூனாவில் 1970 மே 10ம் தேதி (ஞாயிற்றுக்கிழமை) அன்று எழுத்து மூலமான தேர்வு நடக்கும். இதில் போதிய மதிப்பெண்களைப் பெற்றவர்கள் 1970 ஜூன் மாதம் ... தேதி முதல் பூனாவில் நடக்கும் நேரிடை தேர்விற்கு ஆஜராக வேண்டும்.

பிலிம் ஆக்டிங்குக்குக்கான தேர்வில் சிறந்த நடிப்புப் போட்டி உண்டு. அதோடு சினிமாவிற்கு ஏற்ற முகம் இருக்கிறதா என்ற ஸ்கிரீன் பரிசீலனையும் நடக்கும். பம்பாய், கல்கத்தா, டெல்லி, மதராஸில் 1970 மே மாதத்தில் நடக்கும் இத்தேர்வுகளை தேதிகள் பின்னர் அறிவிக்கப்படும்.

போதுமான அத்தாட்சியுடன் மேற்சொன்ன பிரிவுகளில் படிக்க ஆர்வமுள்ளவர்கள் நிரூபித்தால், பிரத்யேகமாக கவனிக்கப்படுவார்கள். மத்திய அரசு, ஆந்திர பிரதேசம், பீஹார், குஜராத், கேரளா, மகாராஷ்டிரா, மைசூர், மத்திய பிரதேசம், ஒரிஸ்ஸா, பஞ்சாப், மே. வங்காளம் ஆகிய மாநிலங்கள், தமிழ்நாடு சங்கீத நாடக சங்கம், பாண்டிச்சேரி யூனியன் பிரதேசம் ஆகியவற்றின் ஆதரவுடன் கல்வி உபகாரச் சம்பளங்கள் தரப்படும். மாணவ, மாணவிகளுக்கு தனித்தனி விடுதிகள்.

நுழைவாயில் தேர்வு, உபகாரச் சம்பளம், படிப்பின் முழுவிபரம், விண்ணப்ப படிவம் அடங்கிய பிரசுரத்திற்கு பிரின்ஸிபால், பிலிம் இன்ஸ்டிடியூட் ஆப் இந்தியா, பூனா-4 என்ற முகவரிக்கு எழுதிப்பெறவும். அத்துடன் பிரின்ஸிபால் பெயருக்கு கிராஸ் செய்யப்பட்ட ரூ. 1/-க்கு போஸ்டல் ஆர்டரும் 45 பைசா ஸ்டாம்பு ஒட்டப்பட்ட 25 செமீ. x 18 செமீ. (10" x 7") அளவுள்ள உங்கள் முகவரி எழுதப்பட்ட உறையையும் அனுப்பவேண்டும். இவைகள் இல்லாத கடிதங்களை ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. மணியார்டரோ, செக்கோ ஏற்க இயலாது. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப மனுக்களை கிராஸ் செய்யப்பட்ட ரூ. 5/- போஸ்டல் ஆர்டருடன் 1-4-1970க்குள் இன்ஸ்டிடியூட்டிற்கு சேரவேண்டும்.

DAVP 571 (40) '70



ஸ்ரீ அண்ணாமலையார் ஆலயம்

7

வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள ...மக் விஷாரத்தை யடுத்து, பாலாற்றின் கரையில் அமைந்திருப்பதுதான் கீழ் மின்னல் கிராமம். அங்குள்ள அழகிய சிறு குன்றான இரத்தினகிரி, அதன் இயற்கை எழிலுக்கு மேலும் அணி செய்கிறது.

அக்குன்றில் குடியிருக்கும் கலியுக வரதனான ஸ்ரீ ஆறுமுகக் கடவுள், அருட்கவி ஸ்ரீ அருணகிரியால் பாடப் பெற்றவர். கீழ் மின்னல் கிராம மணியம் திரு கே. ஆர். கந்தசாமி முதலியாரின் குடும்பம், பரம்பரை பரம்பரையாக அம்முருகப் பெருமானிடம் மிகவும் ஈடுபாடு கொண்டு, அவன் திருக்கோயிலுக்குத் திருத்தொண்டு செய்து வந்திருக்கின்றது. ஆனால், கவனிப்பாரில்லாததால் நாளடைவில் விளக்கேற்றவும் வசதியின்றி அக்கோயில் பாழடைந்து போயிற்று.

ஒரு சமயம் இரத்தினகிரிக்கு அதிகமாகக் காவடிகள் வந்ததால் திருத்தணியில் அவ்வாண்டு காவடிகள் குறைந்து விட்டனவாம். அதனால் பொறாமையும் கோபமும் கொண்ட சிலர், மந்திரத்தாலும், யந்திரத்தாலும் இம் முருகனை சக்தி இழக்கச் செய்து விட்டதாக ஒரு கர்ண பரம்பரைக் கதை இருந்து வருவதை கந்தசாமி முதலியார் நினைவு கூர்ந்தார்.

முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன், இந்தக் கோயிலுக்குத் திருப்பணி செய்து, மூளியாகி யிருந்த சிலைக்குப் பதில் வேறொரு விக்கிரகத்தைப் பிரதிஷ்டை செய்து, குட முழுக்குப் பெருவிழா செய்து முடிக்க கந்தசாமி முதலியார் திட்டமிட்டு, ஊராரின் உதவியுடன் அப் பணியில் தீவிரமாக முனைந்தார். ஆனால், என்ன தெய்வ நிந்தனையோ தெரியவில்லை. குட முழுக்கு விழா நாளன்று முதலியாரின் மூத்த மகன் சண்முகமணி திடீரென்று நோயுற்று, நாற்பத்து ஒன்பதாவது நாள்—மண்டலாபிஷேகம் ஆன மறு நாள், எமனுலகம் சேர்ந்து விட்டான். கந்தசாமி முதலியாரின் குடும்பத்தார் மனவேதனை யடைந்தனர். ஆனால், அவர்களது முருக பக்தி குறையவில்லை. தவறாமல் கிருத்திகை நாளன்று குன்றேறிப் போய் கந்தனைக் கும்பிட்டு




குறி சொல்லும் நேரம்


மந்தனர். கந்தசாமி முதலியாரின் மனைவி சிங்காரம்மாளுக்கு முருகனின் கருணை நிரம்ப இருந்தது. அந்த அம்மாள் தலைச்சனைப் பறி கொடுத்ததை நல்வினை என்றுநினைத்தாளேயொழிய தெய்வ தண்டனையாக நினைத்து பழி சுமத்த வில்லை. 'முருகன் கோயிலில் விளக்கு எரிய வேண்டும், மதில் சுவர்களுடனும் மண்டப அலங்காரங்களுடனும் அது விளங்க வேண்டும்' என்று அவர் கனவு கண்டாள். ஆனால், அக்கனவு நிறைவேருமலேயே பத்தாண்டுகளுக்கு முன் அந்த அம்மையார் கண்ணை மூடி விட்டாள்.

மனைவியின் ஏக்கத்தை மனத்திலேயே தேக்கி வைத்திருந்த முதலியார், இரத்தினகிரிக்கு முதலில் படி அமைக்க நினைத்து, திருவலம் திருப்பணித் தொண்டர் ஸ்ரீ சிவானந்த மௌன சுவாமிகளின் உதவியை நாடினார். பல சோதனைகளுக்குப் பின்னர், அம்முயற்சியில் வெற்றியும் கண்டார். பக்தர்களை தன் சந்நிதிக்கு அழைத்துக் கொள்ள முருகன் திருப்படி அமைத்துக் கொண்டு விட்டான். இனி ஆலயத்திருப்பணி தொடங்க வேண்டியதுதானே! முருகன் அந்தப் பெருமையையும் கந்தசாமி முதலியாரின் குடும்பத்திற்கே அளித்தான். ஆலயம் சிறக்க வேண்டும் என்று காலமெல்லாம் கனவு கண்ட மாதரசியின் வயிற்றில் பிறந்தவனை தன் உடைமை யாக்கிக் கொண்டு விட்டான். கந்தசாமி முதலியாரின் மூன்றுவது மகனை சச்சிதானந்தம் அலுவலகம் செல்லும் போது, அவரை வழி மறித்து, கருணை மழை பொழிந்து, கட்டியிருந்த துணியைக் கழற்றி யெறிந்து, அன்றே ஆண்டியாக்கி விட்டான். அருள் பெற்றவரின் திருவடிகளில் இன்று பொருள் வந்து குவிகிறது.


பச்சிளம் பாலகனாக மூத்தமகன் மரித்த பிறகு, கந்தசாமி முதலியாருக்கு நான்கு பிள்ளைகள் பிறந்தார்கள். கவலைகளை மறந்து ஆனந்தமாக இருக்க வேண்டும் என்று அவர்களுக்கு சிவானந்தம், சச்சிதானந்தம், நித்தியானந்தம், கிருபானந்தம் என்று பெயரிட்டார் அவர். எல்லோரும் நல்ல பிள்ளைகள். குடும்பப் பாசம் மிக்கவர்கள். அதிலும் சச்சிதானந்தம் ரொம்ப சாது. உரக்கக் கூடப் பேச



வருங்கால திட்டங்களை விளக்குகிறார்.



சச்சிதானந்தம்...



பாலமுருகனடிமை ஆனார்!

...டான். இருட்டிலே போவது...ம் அஞ்சுவான். கோழை என்று ...டச் சொல்லலாம்.

பள்ளிப் படிப்பை முடித்துக் கொண்டு, இருபதாவது வயதிலேயே திருமணம் புரிந்து, மக்கட் செல்வமும் பெற்று, குடும்பப் பாசத்தில் சிக்கி, அன்பு மனைவியின் நல்லாதரவுடன் இல்லறத்தை நல்லறமாக நடத்தி வந்தார் சச்சிதானந்தம். பக்தியால் கரையும் உள்ளம் அல்ல. புண்ணிய தலங்கள் சென்றதில்லை. புனித நூல்கள் படித்ததில்லை. புராணப் பிரவசனங்கள் கேட்டதில்லை. அரசியலில் ஆர்வம் இருந்தது. தி.மு.க. அனுதாபியாக இருந்த போதிலும் அவர் தெய்வ நிந்தனை செய்ததில்லை. தாயுடன் கிருத்திகை அன்று இரத்தினகிரிக்குச் சென்று, முருகனை கும்பிட்டுவிட்டு வந்து விடுவார். தினமும் பஸ்ஸில் வேலூர் மின் வாரியம் அலுவலகத்திற்குச் செல்லும்போது முருகன் சந்நிதிக்கு நேரே வந்ததும் ஒரு கும்பிடு போடுவார். அது ஒரு பழக்கம். அவ்வளவுதான். 'முருகன் பார்த்துக் கொள்வார்' என்ற ஒரு மூட நம்பிக்கையுண்டு. அது ஒரு திட நம்பிக்கையாக மாறும் என்று சச்சிதானந்தம் ஒருபோதும் எண்ணியதில்லை.

மகனின் வாழ்க்கையில் நடந்த அதிசயத்தைப் பற்றி தந்தை சொல்கிறார்: "இரண்டு மூன்று முறை என் மகன் மீது ஆவேசம் வந்திருக்கிறது. படிகள் கட்டும் வேலை நின்று போன போது ஒரு நாள், "பக்தா, உன் வேலையை உடனே தொடங்கு, நிறைவேறும்" என்று என்னைப் பார்த்துக் கூறினான். நாங்கள் எங்கள் குல தெய்வத்திற்குப் பூஜை போட்ட போது ஆவேசம் வந்து, பூசாரியைப் போட்டு அடித்து விட்டான். என் சின்ன மகள் கல்யாணமாகி, கலங்கிய கண்களுடன் புருஷன் வீடு போகும்போது இவனுக்குத் திடீரென்று அருள் வந்தது. 'புருஷன் வீட்டுக்குப் போகும்போது அழக் கூடாது... சிரிச்சுக்கிட்டு போ.. உனக்கு ஒரு குறையும் வராது; ஆண் குழந்தை பிறக்கும்" என்று கூறி வழி அனுப்பினான். அது அப்படியே பலித்தது. ஆனால் அப்போதெல்லாம் அவனுக்கு ஆவேசம் வருவது வருங்காலத்திற்கு அறிகுறி என்று எனக்குத் தெரியவேயில்லை. திடீர்னு ஒரு நாள் இவன் சாமியாராகி மலை மேல் போய்க் குந்திக் கொள்வான் என்று நான் கனவில்லே கூட நினைக்கலே."

"அன்னிக்காவது, அதற்கு முன்பாவது இந்த நிலை ஏற்படுவதற்கான அறிகுறி ஏதாவது தெரிந்ததா?" என்று நான் அவரிடம் கேட்டேன்.

... நண்ணுயிலே ... காலையிலே ஆபீஸ் கிளம்பற போது போன பட்டிக்கிட்டே இரண்டு ரூபாயைக் கேட்டான். அவ ஒரு ரூபா தான் கொடுத்தா. அப்புறம் மிச்சம் ... சோறு மீந்துட்டுதுன்னு அதையும் சாப்பிட்டுட்டுப் போகச் சொன்னா தன் புருஷன் கிட்டே சொன்னா. அவன், 'இன்னொரு ரூபாவையும் கொடுத்தாத்தான் சோத்தைத் தின்னுவேன்' என்று சொல்லி, பிடிவாதமா அந்த ரூபாவையும் வாங்கிக்கிட்டு ஆபீஸுக்குக் கிளம்பி யிருக்கான். தினம் ஆபீஸுக்குப்போய் பஸ் ஏர்றவன் அன்னிக்கு குறுக்கு வழியிலே என் கூடவே நடந்து வந்தான். பாண்ட் ஷர்ட்டு கிட்டு போறவன் அன்னிக்கு வேட்டி கட்டியிருந்தான். காலுலே செருப்புக் கூட இல்லே. பின்னாலேயே நடந்து வந்தவன், திடீர்னு படி ஏறி மலைக்குப் போறான். 'சரி, இன்னைக்கு நல்ல புத்தி வந்திருக்கு போலேருக்கு' என்று நினைச்சுகிட்டு நான் என் வேலையைக் கவனிக்கப் போயிட்டேன். பத்து பதினொரு மணிக்கெல்லாம் [illegible] ஜனங்க [illegible] 'சுசிரா' [illegible] பைத்தியம் பிடிச்சுடுத்து, சட்டைத் துணியெல்லாம் அவுத்துப் போட்டுட்டு [illegible] நிக்கறான்னு [illegible] என்னைக் கூப்பிட்டாங்க. நான் [illegible] ஓடிப்போய் [illegible] தேன். அவன் இருந்த நிலையைப் பார்த்துட்டு [illegible] அழுகையே வந்துடுச்சு. [illegible] என்னைக் [illegible] ஆரம்பிச்சுட்டான். [illegible] அந்த [illegible] இன்னிக்கு நிக்கறா [illegible] பயத்திலே [illegible] கட்டிக்கிட்டு [illegible] கோவணத்தையும் [illegible] விட்டுட்டு இங்கே [illegible] பைத்தியம் பிடிச்சு [illegible] முதல்லே, பேய், பிசாசு, ஏவல், சூன்யம், வைத்தியம் இப்படித்தான் [illegible] நினைச்சேன். அன்னிக்கே ஒரு அதிசயம் நடந்தது. என்னை [illegible] அழைச்சுக்கிட்டுப் போய், 'நம்ம வீட்டுலே [illegible] பார்க்க [illegible] கிளம்பி [illegible]

சக்கரம் உடைஞ்சு போய், [illegible] குடை சாஞ்சுடுத்து. ஆனா, ஒருத்தருக்கும் அடி படலே'ன்னு சாமி சொல்லிச்சு. (தம் பிள்ளையை அவர் அப்படித்தான் குறிப்பிடுகிறார்) போய் பார்த்தா, அது சொன்னபடியே இருந்தது. என் மனசுக்கு மட்டும் இப்பத்தான் முருகன் அருள்னு புரிஞ்சு போச்சு. இருந்தாலும் கூடப் பெத்த பாசம் விடுமா? என் பசங்க டாக்டர், ஜோசியர்னு கூப்பிட்டு என்னென்னவோ முயற்சி செய்து பார்த்தாங்க. ஒன்னும் நடக்கலே'' என்று அந்த சாமி முதலியார் சற்று ஏமாற்றத்துடனேயே கூறினார். மகனுக்கு ஏற்பட்ட நிலையைப் பற்றி வெளிக்கு சாதாரணமாகப் பேசினாலும், உள்ளுக்குள் அவர் முழுமையாக சமாதானம் செய்து கொண்டு விட்டதாகத் தோன்றவில்லை. மற்றோர் அற்புதம் நிகழ்ந்து, பையன் மீண்டும் முன்னைப் போல் திரும்பி வந்து விட மாட்டானா என்ற ஏக்கத்தின் சாயலை அவர் பேச்சில் காண முடிகிறது. பந்த பாசங்களை மகன் அறுத்துக் கொண்டு விட்டாலும், தந்தையால் முடியவில்லை. கடந்த இரண்டு வருடங்களாக இப்போது இரவில் மகனுடன்தான் தங்குகிறார். வீட்டிலிருந்து அனுப்பும் உணவை மகனுடன் சேர்ந்தே சாப்பிடுகிறார்.

[illegible] ஏறிச் சென்ற [illegible] [illegible] பல்வாறு [illegible] [illegible] பூண்டார் [illegible] சொல்லக் கேட்டுத் [illegible] [illegible]

[illegible] செந்திறைச் செல் [illegible] [illegible] நின்றபோத. சாமி [illegible]

[illegible] ஒரும் நபரக்குடன்

விட்டுப் போகலாமே' என்ற எண்ணத்துடன்தான் அன்று படியேறிச் சென்றார் சச்சிதானந்தம். அங்கு பூஜை செய்யும் ஐயரைப் பார்த்து கற்பூரார்த்திக் காட்டச் சொன்னார். எங்கு தேடியும் கற்பூரம் கிடைக்கவில்லை. ஊதுவத்தியாவது இருக்குமா என்று தேடினால், அதுவும் இல்லை. ஐயர் கையை விரித்தார். சச்சிதானந்தத்திற்கு ஆத்திரம் வந்தது. "சே...இது என்ன சாமி? கல்லுச் சாமி. அறுபடை வீடுகளில் உட்கார்ந்து அமர்க்களப் படுத்திக் கொண்டிருப்பவனும் நீதானே. இங்கு மட்டும் உனக்கேன் இப்படியொரு வாழ்வு? கற்பூரத்திற்கும் வழியில்லாமல் திண்டாடுகிறாயே" என்று கோபத்துடன் கத்தி விட்டு, மனம் நொந்து கீழிறங்கப் போனார். அப்போது ஐயர் அவரைக் கூப்பிட்டு, "தீபாராதனை தான் செய்ய முடியவில்லை. சுவாமியையாவது ஒரு சுற்றுச் சுற்றி விட்டுப் போங்க முதலியார்" என்று கூறினார். 'சரி' யென்று அவர் சொன்னபடியே பிராகாரத்தைச் சுற்றி வந்து, பலிபீடத்தினருகில் நின்று முருகனை உற்று நோக்கினார். பெருமானின் திருக்கரம் அசைவது போல் தோன்றியது. சச்சிதானந்தத்தினுள் அருள் வெள்ளம் பாய்ந்தது. ஆவேசம் வந்தது. 'ஆ' என்று கர்ஜித்துக் கொண்டு ஓடி வந்து சந்நிதிப் படிகளில் விழுந்து மூர்ச்சையாகி விட்டார். இதைக் கண்டு ஐயர் அலறியடித்துக் கொண்டு கீழே ஓடிப் போய் ஊரையே கூட்டி வந்து விட்டார்.

மூர்ச்சை தெளிந்த சச்சிதானந்தம், பேரானந்தப் பெரு வெள்ளத்தில் மிதந்தார். மனோ நிலை மாறினாலும் அவருக்குப் பழைய நிகழ்ச்சிகள் மறக்கவில்லை. ஆனால், பாச உணர்வுகள் மறைந்து விட்டன. உடைகளைக் களைந்து எறிந்து விட்டு, முருகனை மீதிருந்த அழுக்குத் துணியை எடுத்து கோவணமாகக் கட்டிக் கொண்டு விட்டார்.

அதற்குப் பிறகு எத்தனையோ நடந்து விட்டன. குடும்பத்தாரின் பாசக் கண்ணீர், சுற்றத்தாரின் அழைப்பு, ஊராரின் உருட்டல் மிரட்டல், போலீசாரின் தொந்தரவு, அரசியல் வாதிகளின் அநாவசிய தலையீடு எல்லாவற்றுக்கும் முருகனின் அருள் துணைகொண்டு ஈடு கொடுத்து, வைராக்கியமாக எதிர்த்து நின்று, தெய்வத் திருப்பணியில் தம்மை முழுமையாக ஈடு படுத்திக் கொண்டு விட்டார் இந்த பாலமுருகன் அடிமை.

'கற்பூரத்திற்கும் கதி இல்லாத கடவுளா நீ?' என்று கேட்டவரையே பழி வாங்குவது போல், குமரப் பெருமான், தன் திருக்கோயிலைப் பிரகாசிக்கச் செய்யும் திருப்பணியை அவரிடமே ஒப்புவித்த விந்தையை என்னென்பது? கடவுட் சித்தத்தை யாரால் அறிய முடியும்?

ஒரு கணத்தில் சம்சாரியை சாமியாராக்கிய முருகன், ஏனோ அவருடைய பேச்சையும் பறித்துக் கொண்டு விட்டான். நிலைமாறியதிலிருந்து, பேச குரலெடுத்தால், அண்டமே அதிர்ந்து தலை மீது விழுவது போலவும் பூமியே பிளப்பது போலவும் ஒரு பிரமை தட்டவே, அவர் மௌனியாகி விட்டார். சிறிது காலம் கழித்து மழலைச் சொற்களாக அரை குறைப் பேச்சு வெளி வந்தது. தற்போது ஏதோ ஒரு வைராக்கியத்தில் அதையும் நிறுத்திக் கொண்டு விட்டார். ஆனால், அவர் பேசவில்லை என்ற குறை நமக்குத் தெரிவதில்லை. சைகைகளினால் புரிய வைக்க முடியாதவற்றை சிலேட்டில் எழுதிக் காட்டி விடுகிறார். முத்து முத்தாக எழுதும் நேர்த்தியையும், எழுதிய வேகத்தில் தொடையில் தேய்த்து அழிக்கும் பாங்கையும் நேரில் பார்த்தால்தான் ரசிக்க முடியும்.

குறி சொல்லும் போதும் பூஜை செய்யும் போதும் கௌளி கத்துவது போல் குரல் கொடுக்கிறாரே, அந்த சப்தத்தை தாம் நிலை மாறிய தினத்தன்று நள்ளிரவில் சந்நிதியில் கேட்டாராம். பின்னர் இவர் அதே போல சப்திக்கத் தொடங்கியதும், அந்த ஒலி மறைந்து விட்டதாம். அது தமது மூலாதார குருவின் உபதேசக் குரல் என்று நம்புகிறார் அவர் சில சமய

தந்தை கந்தசாமி முதலியார்





தந்தை, சகோதரர்கள், குழந்தைகள்.

முருகனுக்கருகில் பயங்கரமாக மூச்சு இழுத்து ஊதுகிறார். வேறு மந்திரங்களோ, சுலோகங்களோ கூறுவதில்லை. இரவில், தனி அறையில் இருக்கும் பெரிய வேலுக்கெதிரில் அமர்ந்து மணிக் கணக்கில் தியானம் செய்கிறார்.

விடியற்காலை எழுந்து விட்டால், நள்ளிரவு வரை ரொம்பவும் 'பிஸி'யாக இருக்கிறார். உதவி நாடி வருபவர்களை எந்த நேரமானாலும் சந்திக்கிறார். பக்தர்கள் துயர் தீர்க்கும்படி முருகனிடம் சென்று வேண்டிக்கொள்கிறார். சிலையின் மீது முட்டிக் கொள்கிறார். நெற்றியில் ரத்தம் கசிந்தாலும் உத்தரவு கிடைக்கும் வரை விடுவதில்லை.

உடல் நோய்க்காகவும் மனோ வியாதிக்காகவும் நேரில் வருபவர்களைத் தவிர தபால் மூலம் 'அன்புத் தொந்தரவு' கொடுப்பவர்கள் ஏராளம். அத்தனை கடிதங்களையும் நிதானமாகப் படித்து, அவரவர்களுக்குத் தேவையான ஆறுதல் மொழிகளையோ, அறிவுரைகளையோ எழுதி அனுப்புகிறார். திருமணத்தை முடித்து வைப்பதிலிருந்து, தற்கொலையை தவிர்ப்பது வரை பல்வேறு பிரச்னை [illegible] ஜாக்பாட்டில் பணம் சம்பாதிக்க வழியென்ன என்று கேட்டு எழுதியிருந்தாராம். 'நீ ஒரு சரியான மடையன்' என்று பச்சையாக அவருக்கு பதில் எழுதினாராம்!

துறவுக் கோலத்தில் இருந்தாலும் பண விஷயத்தில் 'கறார்' சாமியாராக இருக்கிறார். வரும் பணத்தை மிச்சம் பிடித்து பாங்கில் போடுவதில்லை. அவ்வப்போது திருப்பணிக்குச் செலவழித்து விடுகிறார்.

"தேவையானபோது முருகன் எங்கிருந்தாவது எப்படியாவது பணத்தை வரவழைத்து விடுகிறான். அவனுடைய எல்லையற்ற சக்தியை நினைத்து நான் வியந்து கொண்டிருக்கிறேன்" என்று [illegible]ர் அந்த இளம் சாமியார்.

ஒரு கல்யாண மண்டபம் வேண்டும் என்றும் அதை எல்லோருக்கும் இலவசமாகத் தர வேண்டும் என்பது தம் ஆசை யென்றும் அந்தக் கனவு நிச்சயம் நிறைவேறத்தான் போகிறது என்றும் நம்பிக்கையோடு கூறினார் அவர். 'கலியுகத்தில் நடை பெறும் எத்தனையோ அதிசயங்களில் இதுவும் ஒன்று' என்று வியந்து கொண்டே நாங்கள் அவரிடம் விடை பெற்றுக் கொண்டு இரத்தினகிரியிலிருந்து புறப்பட்டோம்.

[illegible] நாள் பயணம் முடிந்து சென்னைக்குத் திரும்பும் வழியில் காஞ்சிபுரத்திற்குச் சென்று ஸ்ரீ காஞ்சிப் பெரியவர்களை தரிசனம் செய்து, என் திருவண்ணாமலை பயணத்தைப் பற்றியும், நான் கண்ட காட்சிகளையும், தரிசித்த சமாதிக் கோயில்களையும், கண்டு வியந்த பூண்டிச் சாமியாரையும், கீழ் மின்னல் பால முருகனடிமையையும் பற்றிக் கூறினேன்.

எல்லாவற்றையும் கவனத்தோடும், கருணையோடும் கேட்ட ஸ்ரீ காமகோடிப் பெரியவர்கள், "திருவண்ணாமலையில் குகை நமசிவாயர் கோயில், பவழக்குன்று மடம், ஈசானிய மடம் முதலியவற்றை பார்த்தாயா?" என்று கேட்டார்கள்.

[illegible]" என்றேன் நான்.

"அங்கெல்லாம் போனால் உனக்குச் சரித்திரங்கள் கிடைக்கும்" என்றா[illegible]

அடுத்த முறை செல்லும்போது அந்த இடங்களைப் பார்க்க வேண்டும் என்ற எண்ணத்துடன் சென்னையை நோக்கிப் புறப்பட்டோம்.

—தொடரும்

மூத்திரப்பை பலஹீனத்தால் ஸ்திரீகள் அவதியுறுகிறார்கள்

...ஆடவர்களும், ஸ்திரீகளும் 35 வயது ... சிஸ்டிடிஸ், பைலிடிஸ் போன்ற ... கோளாறுகளால் தங்கள் சக்தி ... வீர்யத்தையும் இழக்க ஆரம்பிக்கிறார்கள். இந்த மூத்திரக்காய் கோளாறுகள், முதுகு ... மூட்டுகளிலும் பிடிப்பு, மற்றும் ... எரிச்சல், அரிப்புடன் கூடிய ... வேதனை. இரவிலோ பகலிலோ அடிக்கடி ... கழித்தல், கால்களில் வலி முதலிய ... 30 ... (CYSTEX) உபயோகித்து வருகிறார்கள். இன்றே உங்கள் கெமிஸ்டிடம் ... (CYSTEX) வாங்குங்கள். ... தெரியும். ... உங்கள் பணம் வாபஸ்.

உங்கள் சருமத்தை சுத்தமாக வையுங்கள்

நிக்சோடெர்ம் (NIXODERM) உபயோகித்து ... நிக்சோடெர்ம் (NIXODERM) உபயோகியுங்கள். உங்கள் சருமம் மிருதுவாகவும் அழகாகவும் மாசு மறுவின்றியும் ஆவதைக் காண்பீர்கள். நிக்சோடெர்ம் (NIXODERM) சருமத்தின் மீது ஏற்படும் முகப்பருக்கள், கட்டிகள், செந்நிறத் தழும்புகள், மேலாகப் பரவும் படர்தாமரை, வெடிப்புகள் முதலிய உபாதைகளுக்குக் காரணமான கிருமிகளையும் பூச்சிகளையும் அழிக்க விசேஷ முறையில் தயாரிக்கப்பட்டது. உங்கள் சருமத்தின் மெல்லிய துவாரங்களில் இருக்கும் பூச்சிகளை, கிருமிகளையும் அழிப்பதாலேயே உங்கள் சரும உபாதைகள் நீங்கும். இன்றே உங்கள் கெமிஸ்டிடம் நிக்சோடெர்ம் (NIXODERM) வாங்குங்கள். ... சருமத்தை மிருதுவாகவும் அழகாகவும் ... நம்பிக்கையுடன் நிக்சோடெர்ம் (NIXODERM) வாங்குங்கள்.

35 வயதுக்குப்பிறகு

வயோதிக உணர்ச்சி, சோர்வு மற்றும் பலவீனம் காரணமாக, தினசரி அனுபவங்களை ... இளமையில் அனுபவித்ததைப் போல இன்னும் அனுபவிக்க முடியவில்லையா? ... உங்கள் டாக்டரின் ஆலோசனையைக் கேட்டு, வை-டாப்ஸ (Vi-Tabs) வாங்குங்கள். இந்த மருந்து துரிதமாக வேலை செய்து, நீங்கள் ... இளமையுடனும் ... தினசரி ... இளமைத் துடிப்புடனும் விளங்க ... உதவுகிறது ... இன்றே உங்கள் கெமிஸ்டிடம் சென்று வை-டாப்ஸ (Vi-Tabs) வாங்குங்கள். அது மேலும் இளமைத் ...

1970ம் வருட காலண்டர்கள் இதோ!

உங்கள் பவுண்டன் பேனாக்களுக்கு

லக் இங்க்

உபயோகியுங்கள். மிகச் சிறந்த ... கிடைக்கும்.

LUCK INK

... காலண்டர்கள் ... எல்லா கடைகளிலும் கிடைக்கின்றன.

1வது பரிசு ஹர்குலிஸ் சைக்கிள் 1

2 .. .. பிலிப்ஸ் ரேடியோ 1

3 .. .. ஆக்பா கிளிக் III காமிரா 1

... 30 ...

... 15-4-70

60ML (2OZ) LUCK INK ...

... 700ML (24OZ) LUCK INK ...

... எல்லா கடைகளிலும் உடனே கிடைக்கும்.

அசோக் காலண்டர் ... கார்ப்பரேஷன்

அருணாசல மகிமை



8

ஸ்ரீ சேஷாத்ரி சுவாமிகளின் ஆச்ரமத்தையும் ஸ்ரீ ரமண மகரிஷியின ஆச்ரமத்தையும் பார்த்து விட்டு, அம்மகான்களைப் பற்றி எழுத வேண்டும் என்ற எண்ணத்துடனேயே நான் திருவண்ணாமலைக்குச் சென்றேன். ஆனால், அருணாசல தரிசனம், 'அருணாசல மகிமை'க்கு வழி வகுத்துத் தந்து விட்டது. இதுவரை என் கண்களுக்கு இருண்டிருந்த காட்சிகள் அந்த ஞான மலையின் பேரொளியால் 'பளிச்' சென்று தெரிந்தன. அருணாசலத்தின் நிழலில் ஞானத் தவம் புரிந்த புண்ணிய சீலர்களின் வாழ்க்கை வரலாறும் அவர்கள் நிகழ்த்திய அற்புதங்களும் எனக்கு ஒரு புது உலகத்தை அறிமுகப்படுத்தி வைத்தன. அந்த ஆன்மீகச் சூழலில் புதுப் புது அனுபவங்களைப் பெற்றேன். புளகிதம் அடைந்தேன். நான் பெற்ற இன்பத்தை இந்த வையகம் பெற வேண்டும் என்று எண்ணினேன்.

வாழ்வுக்கு வழி காட்டியாகவும், வழிக்குத் துணையாகவும் விளங்கி வரும் ஸ்ரீ காமகோடி ஞான வள்ளலின் அருளாசி எனது இந்த முயற்சிக்கும் உறுதுணையாக இருந்ததை ஒவ்வொரு கணமும் உணர்ந்தேன். 'அங்கு போ, அதைப் பார்; இதைப் படி, அவரைக் கேள்' என்று குறிப்பால் உணர்த்தியே, தெரிந்து கொள்ள வேண்டியவற்றை சுட்டிக் காட்டியும், புரிந்து கொள்ள முடியாதவற்றைப் புரிய வைத்தும், அவ்வாறு பெற்ற ஆத்ம லாபத்தை பிறருடன் பங்கிட்டுக் கொள்ளச் செய்தும், ஒன்றுமே தெரியாதவனை அருட் தொண்டுக்கு ஒரு கருவியாக்கிக் கொண்ட கருணையை என்னென்பேன்?

அருணாசலத்தின் அருள் பெற்ற ஜீவன் முக்தர்களும், பிரும்ம ஞானி

பரணீதரன்

களும், சித்த புருஷர்களும் எப்படி வாழ்ந்தார்கள் என்பதை நாம் படித்தோ, கேட்டோதான் தெரிந்து கொள்ளவேண்டும். நம் கண்ணுக்குப புலப்படாதவர்களை கற்பனையில் கண்டு தான் புண்ணியம் பெற வேண்டும். அப்படியிருக்க 'மறைந்த மகான்கள் இப்படித்தான இருந்திருப்பார் களோ?' என்று ஓரளவு தெரிந்து கொள்ள எனக்கு ஒரு வாய்ப்புக் கிட்டியதைப் பெரும் பாக்கியமாகக் கருது கிறேன். பூண்டி கிராமத்தில ஒரு வீட்டுத் திண்ணையில் அமர்ந்திருக்கும் சாமியாரை எதிர்பாராமல் தரிசனம் செய்ய நேர்நததும் குருநாதனின் சங்கலப சிறபபு என்றே எனக்குத் தோன்றுகிறது.

முதல் முறையாக பூண்டி சாமியாரை தரிசித்துவிட்டு நான பெற்ற அனுபவங்களை உணாசசி பொங்க ஸ்ரீ காமகோடி சுவாமிகளிடம் கூறிய போது, பெரியவர்கள் அதிசயமோ ஆச்சரியமோ அடையாமல அப்படி யொரு சாமியார் இருபபதை தாம முன்பே அறிந்திருப்பது போல அததனை சாதாரணமாக அச் செய்தியைக் கேட்டுக் கொண்டார்கள்.

பின்னர், மூனறு, நான்கு முறை நான் பூண்டிக்கு சென்று அந்தச் சாமியாரை தரிசனம் செய்தேன். ஒவ்வொரு முறை சென்ற போதும், அவரிடம் எனக்கு ஏற்பட்ட மரியாதையும் பக்தியும் அதிகமாயின. அங்கு போனால் அந்த சந்நிதியை விட்டு வரவே மனம் இடம் கொடுப்பதில்லை. திரும்பி வந்த பிறகு, மீண்டும் எப் போது செல்லலாம் என்ற எண்ணமே மேலோங்கி நிற்கிறது.

முதல் நாளன்று நான் அவருடன் பேச முயலவில்லை. அவருடைய ஆழ்ந்த மௌனமும், அருள் பார்வையும் ஒரு நிம்மதியையும் மனத் தென்பையும் அளித்தன. 'அவருக்கு எல்லாமே தெரியும்' என்ற ஒரு நம்பிக்கை எனக்கு ஏற்பட்டது.

அடுத்த முறை சென்றபோது அவரிடம் ஏதாவது பேச வேண்டும் என்று தோன்றவே, ''சாமீ, நான் போன வாரம் வந்திருந்தேன். மறுபடியும் உங்களைப் பார்க்கணும்னு தோணிச்சு, வந்தேன்'' என்றேன். ஏதோ சொல்ல வேண்டும் என்று தோன்றியதால் சொன்னேன். அவர் பதில் கூறுவார் என்று நான் எதிர்பார்க்கவேயில்லை.

திடீரென்று அவர் பேசினார்:

''நாகரத்தினம் பிள்ளை கூட அப்படித்தான் சொல்றாரு 'நாக நினைச்சுக்கிட்டா நான் வந்துடறேன்'ங்கிறாரு. அதான் ஐயா, ஆற்காடு நாகரத்தினம் பிள்ளை...வேலூர்-ஆற்காடு ''

எனக்கு சற்று நம்பிக்கை வந்தது. கூடவே தைரியமும வந்தது..

''சாமி பேர் என்ன? எந்த ஊர்..?'' என்று கேட்டேன்.

''ரைஸ மில் கோவிந்தராஜ முதலியாருக்கு நான என்ன செஞ்சேன்... அவருதான் எனக்கு என்ன செஞ்சாரு. அதெல்லாம அந்தக காலம் ஐயா.. நல்லது கெட்டது, ஒழுங்கு கட்டுப்பாடு. போக்கு வரதது, நீதி நேர்மை,என்னய்யா நான சொல்றது? ரோடு போட்டானுங்க...பஸ் ஓடிச்சு, கரண்ட் வந்தது போஸ்ட் நட்டுகினே போனான் .கோனேரி குப்பம், பில்லூரு, மேல் வைத்தியநாத குப பம்.. வெள்ளிககிழமை சந்தை.... கும்பல் இருக்காதா, வரவங்க போறவங்க, பிள்ளைக்குட்டிங்க, அதெல்லாம் ஆட்டோமாடிக்கா நடக்க வேண்டியதுதானே . என்னய்யா, நான் சொலறது.. ? அண்ணாமங்கலம் ஆதிமூலம், ஏர்ணாமங்கலம சிவராமன்.. .டோல் கேட் போட்டான்...அதுக்கு துட்டு வாங்கி ரசீது கொடுத்தான். ஆனா அது ராத்திரி வரைக்கும்தான் செல்லும்...மறுநாள் வேறே ரசீது வாங்கிக்கணும், தெரியுமா?'' இப்படி அவர் பேசிக் கொண்டே போனார். எனக்குத் தலைகால் புரியவில்லை. இவர் எத்தனை வருஷத்துக்கு முந்திய விஷயங்களைச் சொல்கிறார் என்று தெரிந்துகொள்ள,





''அப்போதெல்லாம் வெள்ளைக்காரன் இருந்தானு?'' என்று நான் கேட்டேன்.

''ஜப்பான்காரன் கூட இருந்தான்'' என்று சாமியார் பதில் சொன்னுர்.

''சாமீ பேரு என்னு? சாமிக்கு எந்த ஊர்?'' என்று சந்தடி சாக்கில் மறுபடி யும் கேட்டு வைத்தேன்.

''அதெல்லாம் சொல்ல முடியாது போய்யா?''-'பட்'டென்று முகத்தில் அடித்தாற் போல் கூறி விட்டார்.

அவர் பேசுகிற விஷயங்களையும், பயன்படுத்தும் சொற்களையும் கேட் டால், அந்த சாமியார் கிராமியச் சூழ் நிலையிலே பலகாலம் பழகியவர் போல் தோன்றுகிறது. பெரும்பாலும் விவ சாயம் சம்பந்தமான பிரச்னைகளைப் பற்றியே பேசுகிருர். அவருடைய பேச்சின் பொருள் நமக்குப் புரிவ தில்லை. அந்த மகான் நடந்ததைப் பற்றிப் பேசுகிருரா, நடந்து கொண் டிருப்பதைப் பற்றிப் பேசுகிருரா, நடக்கப் போவதைப் பற்றிப் பேசு கிருரா என்பதைப் புரிந்து கொள் ளும் பக்குவம் நமக்கேது?

பூண்டி சாமியார் நாம் கேட்பதற் கெல்லாம் பதில் கூறி விடுவதில்லை. சில கேள்விகளுக்கு நேரிடையாக பதில் கூறுகிருர். சில கேள்விகளுக்கு மறை முகமாக பதில் கூறுகிருர். சிலருடன் மட்டுமே பேசுகிருர். பெரும்பாலும் மௌனமாகவே அமர்ந்திருக்கிருர். அங்கு வருபவர்கள் பழக்கப் பட்டவ ராக இருந்தாலும், புதியவராக இருந் தாலும் ஒரே மாதிரிதான் பார்க்கிருர். அவர் முகபாவத்தில் ஒரு வித மாறுத லும் இல்லை.

அக்கம்பக்கத்திலிருக்கும் கிராம மக்கள் அவரை தரிசிப்பதற்காக வந்து கொண்டே யிருக்கிருர்கள். சிலர் விழுந்து கும்பிட்டு விட்டு, திருநீற் றைப் பெற்றுக் கொண்டு போய் விடு கிருர்கள். ''போய் வரேன் சாமீ'' என் ருல், ''நல்லது'', ''போய் வா'' என்று கூறுகிருர். சில சமயம் தலையை மட் டும் ஆட்டுகிருர். சில சமயம் ஜடமாக உட்கார்ந்திருக்கிருர்.

அவரிடம் வரும் ஒரு சிலர் தங்கள் சொந்தப் பிரச்னைகளை அந்தரங்க மாகக் கூறுகிருர்கள். அதை கருணை யோடு காது கொடுத்து கேட்கிருர். அவரவர்களுக்குத் தேவையான உப தேச மொழிகளைக் கூறுகிருர். நாட்டுப் பழமொழிகளையும் கிராமத்து மக்களுக் குத் தெரிந்த எளிய உதாரணங் களையும் கூறிப் புரிய வைக்கிருர். சிந் திக்க சிந்திக்க, மகத்தான தத்துவங் களும் வாழ்க்கை நெறிகளும் அவற் றில் புதைந்து கிடப்பதை நம்மால் உணர முடிகிறது.

ஒரு வயதான அம்மாள், தன் மகன் தீய பழக்க வழக்கங்களுக்கு அடிமை யாகி, வீண் செலவு செய்கிருன் என்று மனம் குமுறி சாமியாரிடம் முறை யிட்டுக் கொண்டாள். அந்த அம்மா ளின் நிலை கண்டு அவர் மனம் இரங்கி யதை அவர் ஆறுதல் மொழிகளில் காண முடிந்தது.

''என்னும்மா செய்யறது? கலி காலம். பன்னண்டணு செலவு செய்தா, நாலணு மிச்சம் பிடிக்க ணும். நமக்கு பிறர் சொத்து வேணும், உடமை வேணும். கால் வயத்து கஞ் சிக்கு இருந்தா போதும்...என்னும்மா நான் சொல்றது? பெத்த மனம் பித்து, பிள்ளை மனம் கல்லுங்கிற மாதிரி நீ கஷ்டப்படறே...என்னு செய்யறது? இது கலி காலம்...ஒருத்தரும் 'ஐயோ' ன்னு நினைக்க மாட்டாங்கம்மா. கால்லே முள்ளு குத்திஞ பக்கத்திலே இருக்கிறவன் எடுக்க மாட்டான். அப் படிப்பட்ட காலம்மா இது! ஒழுங்கா இருந்து கொஞ்சம் துட்டு மிச்சம் பிடிச்சாதானே பொழைக்க முடியும். சிறு துளி பெரு வெள்ளம்... அருளி லார்க்கு அவ்வுலகம் இல்லே பொரு ளிலார்க்கு இவ்வுலகம் இல்லே...''



அந்த அம்மாள் குறுக்கிடடு ஏதோ முணு முணுக்கிறாள்.

சாமியார் தொடருகிறார்: ''ஆமா, ...பட்ட காலிலே படும். கெட்ட குடியே கெடும்னு சும்மாவா சொன்னாங்க.. கெட்ட சகவாசம். என்ன செய்யறது.. கலிகாலம்மா இது... கீரையை விதைச்சா பயமில்லே. பக்கத்துலேயே முருங்கை மரத்தை வெச்சா, அதுக்கு வேலி போட்டுத் தான் ஆவணும். இல்லேன்னா காயைத் திருடிக்கிட்டுப் போயிடுவாங்க. ... அப்படிப்பட்ட காலம்மா இது. ''

வேறொரு பக்தர் வந்தார். நண்பர் ஒருவருடன் கூட்டுச் சேர்ந்து ஏதோ வியாபாரம் செய்யப் போவதாகவும், அதற்கு சாமியாரின் ஆசி வேண்டும் என்றும் கோரினார் அவர்.

''ஒரே தாய் வயததிலே பொறந்த பிள்ளைங்களே ஒழுங்கா, ஒற்றுமையா யிருக்க மாட்டேங்கிறாங்க...சண்டை போட டுக்கிறாங்க.. நீ பார்த்து செய்'' என்று அவருக்கு அறிவுரை கூறினார். அவர்களுக்குள் சண்டை வரும் என்று எச்சரித்தாரோ என்னவோ!

ஒரு நாள் எதையோ பற்றிப் பேசிக் கொண்டு வந்த சாமியார் திடீரென்று, ''உலகத்திலே தர்மம் போயிடுச்சு. அதனாலே ஒற்றுமை

போயிடுச்சு'' என்று கூறினார். கேட்டபோது அது சாதாரணப் பேச்சாகத்தான் இருந்தது. ஆனால், அதைப் பற்றி அடிக்கடி நினைத்துப் பார்த்தபோது அது ஒரு வேதவாக்கு என்பது புரிந்தது. எத்தனை மகத்தான ஒரு சத்தியத்தை எத்தனை சாதாரணமாக, எத்தனை எளிதாக அவர் சொல்லி விட்டார் என்று அதிசயித்தேன்.

ஸ்ரீ சேஷாத்ரி சுவாமிகளைப் பற்றியும் ரமண பகவானைப் பற்றியும் எழுதப் போவதாகக் கூறி, ''சாமி அந்த மகான்களைப் பார்த்திருக்கா?'' என்று கேட்டேன்.

''அவங்களைப் பத்தி தெரியணும்னா தபோவனம் போய்யா'' என்று கூறினார் அவர். சாமியார் எந்த இடத்தைக் குறிப்பிடுகிறார் என்பது அந்தக் கணம் எனக்குப் புரியவில்லை. இரண்டு நாட்கள் கழித்துதான் அவர் திருக்கோயிலூர் தபோவனத்திலுள்ள ஞானானந்த கிரி சுவாமிகளைக் குறிப்பிட்டிருக்க வேண்டும் என்பது புலனாயிற்று. தபோவனம் சுவாமிகளை நான் ஆறு மாதங்களுக்கு முன் முதன் முறையாக தரிசிக்கும் பாக்கியம் பெற்றேன். பூண்டி சாமியார் மீண்டும் அவரிடம் என்னைப் போகச் சொல்கிறார். தபோவனத்தின் பெருமையைக் கூறாமல் 'அருணாசல மகிமை' முற்றுப் பெறுமோ என்னவோ!



ஒரு நாள் பூண்டி சாமியாரிடம், 'ஸ்ரீ காமகோடி சங்கராசாரியாரைத் தெரியுமா?' என்று கேட்டேன்.

''கரண்ட், மோட்டார், பம்ப் செட் எல்லாத்துக்கும் சங்கராச்சாரிதான் கண்ட்ரோல், தெரியுமா?'' என்று பதிலுக்கு என்னிடம் கேட்டார் அவர். அந்த சமயத்தில் சாமியார் என்னவோ பேசுகிறார் என்றுதான் நினைத்தேன். ஆனால், அந்த வார்த்தைகளைப் பற்றி நினைக்க நினைக்க எனக்கு சாமியாரின் பரிபாஷை தெளிவாகப் புரிய ஆரம்பித்தது.

அறுபது வருடங்களுக்கு மேலாக தெய்வ பக்தி வளரவும், ஆத்திகம் தழைக்கவும், ஆன்மிகம் சிறக்கவும் ஸ்ரீ காஞ்சிப் பெரியவர்கள்தான் மூல காரணமாக இருந்து வருகிறார் என்பது மறுக்க முடியாத உண்மை. தமது தவ வலிமையால் பாரதமெங்கும் ஆன்மிக மின்சாரத்தைப் பாய்ச்சி வருகிறார் சுவாமிகள். மறைந்து வரும் நமது வேத நெறியையும், புதைந்து கிடக்கும் புராதன கலைச் சிறப்புக்களையும் தமது ஆன்மிகச் சக்தியால் மீண்டும் வெளிக் கொண்டு வருகிறார். அதனால் தார்மிக வெள்ளம் பாரதமெங்கும் பாய்ந்து, பாரெங்கும் சாந்திப் பயிர் தழைக்கச் செய்கிறார். இந்த உண்மையைத்தான் பூண்டி சாமியார் தமக்கே உரிய உதாரணத்தால் விளக்கியுள்ளார் என்று எனக்குத் தோன்றியது. இதைப் பற்றி நான் காஞ்சிப் பெரியவர்களிடம் கூறியபோது சுவாமிகள் புன்முறுவல் பூத்தார்.

'அருணாசல மகிமை' முதல் பகுதி வெளியானதும் விகடன் இதழை எடுத்துச் சென்று பூண்டி சாமியாரின் மலரடிகளில் வைத்து ஆசி கோரினேன். '''அருணாசல மகிமை'யைப் பத்தி எழுதறேன். அது நல்லபடியா முடிய உங்க அனுக்ரகம் இருக்கணும் சாமி'' என்றேன்.

''என்னய்யா அருணாசல மகிமை? பன்னண்டா,

பதினலணு கொடுத்தா அருணசல புராணம் கிடைக்குது. வாங்கிப் படிச்சா போச்சு'' என்றார்.

''அதைப் படிச்சுகிட்டுதான் வரேன் சாமி'' என்றேன் நான்.

''ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது ஐயா'' என்றார் சாமியார்.

''புஸ்தகமும் படிக்கிறேன். எல்லா இடத்துக்கும் நேரிலே போயும் பார்க்கிறேன். படித்தது, பார்த்தது எல்லாம் எனக்கு விளங்கி, அதை நான் எழுதி, அது மத்தவங்களுக்கும் புரிஞ்சு, அதனாலே நன்மை ஏற்படற மாதிரி நீங்க ஆசீர்வாதம் பண்ணணும்'' என்று உளமார வேண்டினேன் நான்.

''அதெல்லாம் நாலு யுகத்து கதை, தெரிஞ்சுக்க...அதுலே செய்யுள்தான் முக்கியம்...என்னய்யா, நான் சொல்றது?'' என்றார் சாமியார்.

நான் கைகட்டி நின்று அந்த சித்த புருஷரின் அருளுபதேசத்தை பய பக்தியுடன் கேட்டுக் கொண்டேன். என்னுடன் பேசிக் கொண்டிருந்த போது சாமியார் பக்தர்களுக்கு விபூதி, குங்குமப் பிரசாதம் கொடுத்துக் கொண்டேயிருந்தார். கீழே சிந்திய விபூதியும், குங்குமமும் பிரித்து வைக்கப்பட்டிருந்த 'அருணசல மகிமை' தொடக்கக் கட்டுரைப் படங்களின் மீது விழுந்திருப்பதைக் கவனித்தேன். உள்ளம் மகிழ்ச்சியால் பொங்கியது. அண்ணாமலையாரின் ஆலய கோபுரங்களில் பூண்டி சாமியார் விபூதி, குங்கும அபிஷேகம் செய்து விட்டார். 'அருணசல மகிமை' சிறக்க, பூண்டி சாமியாரின் பரிபூரண ஆசியும் கிடைத்து விட்டது.

அன்று அவரிடம் விடை பெற்றுக் கொள்வதற்கு முன், ''சாமியாரைப் பற்றி எல்லாரும் தெரிஞ்சுக்க ஆசையாயிருப்பாங்க. எனக்குத் தெரியப்படுத்தின எழுதலாம்னு பார்க்கிறேன்'' என்றேன் நான்.

'சொல்ல முடியாது' என்றே, 'சொல்லுகிறேன்' என்றே சாமியார் கூறவில்லை.

''சரி, போய் வா'' என்று மீண்டும் வரும்படி கூறி விபூதிப் பிரசாதம் கொடுத்து அனுப்பினர்.

எப்படியாவது தம்மைப் பற்றிய விவரங்களை அவர் தெரியப் படுத்தி விடுவார் என்ற நம்பிக்கையுடன் நான் பூண்டியிலிருந்து புறப்பட்டேன்.

—தொடரும்.



அருணாசல மகிமை

9

அன்று நாங்கள் பூண்டிக்குச் சென்ற போது இரவு ஒன்பது மணியாகி விட்டது. அமைதியான அந்தக் கிராமம் உறங்கி விட்டிருந்தது. சாமியாரின் திண்ணைக்கு எதிரே நின்றிருந்த ஓரிருவர் ரகசியக் குரலில் பேசிக் கொண்டிருந்தனர்.

அருகில் சென்று பார்த்தோம். மின விசிறி சுழல, அந்தப் பரதேசி திண்ணையில் மகாராஜாவைப் போல் படுத்திருந்தார். அவருடைய இமைகள் மூடியிருந்தன. ஆனால், கால்கள் அசைந்து கொண்டே இருந்தன. விளக்கை அணைத்து விட்டு, திரையைப் போட்டார் சுப்பிரமணி.

''சாமி எத்தனை மணிக்குப் படுத்தது?'' என்று கேட்டேன் நான்.

''இப்பத்தான் படுக்க வைத்தோம்.''

''காலையில் எத்தனை மணிக்கு எழுந்திருப்பார்?''

''தூங்கினாத்தானே எழுந்திருக்க! எப்போ கூப்பிட்டாலும் கண்ணை முழிச்சுப் பார்ப்பாரு. படுக்க வைக்கிறுங்களேன்னு சும்மா படுக்கிறாரு அவ்வளவுதான். மூந்தாநாள் கூட கோயம்புத்தூரிலேருந்து பாதி ராத்திரி ஒரு பார்ட்டி வந்தது... .குரல் கொடுத்தோம். உடனே எழுந்து உட்கார்ந்து பேசினாரு. அவங்க ஆசையா

பாணிகரன்

கொடுத்த பழத்தை கூட சாப்பிட டாரு.. உங்களுக்கு ஏதாவது பேச ணுமா? எழுப்பட்டுமா?'' என்று கேட்டார் ஓர் உள்ளூர்வாசி.

''வேண்டாம் ... நான் ராத்திரி இங்கேயே தங்கப் போகிறேன். காலை யிலே பார்த்துக்கலாம்'' என்று கூறி அவரைத் தடுத்தேன். அசையாமல், நாளெல்லாம் அந்தத் திண்ணையில் அமர்ந்திருநது விட்டு, கால்களைச் சறறு நீட்டி படுத்திருப்பவரை எழுப்பி உட்கார வைப்பது மகா பாவம் என்று தோன்றியது எனக்கு.

எதிரிலுள்ள கொட்டகையில் ஜமக் காளத்தை விரித்தோம். அப்போது அங்கு ஒரு சாது வந்தார். நல்ல நிறம். சிரித்த முகம். அவருக்கு முப்பது, முப்பத்தைந்து வயது இருக்கும்.

''இவர் பெயர் பூர்ணனந்தா. வட நாட்டிலே இருந்து வந்திருக்கார்...'' என்று ஒருவர் அவரை எனக்கு அறி முகம் செய்து வைத்தார். அவருக்கு ஒரு கும்பிடு போட்டு விட்டு, ''இங்கே எப்படி வந்து சேர்ந்தீங்க?'' என்று கேட்டேன் நான்.

''என் குருநாதர் கணேஷ்புரி நித்தி யானந்த பாபாவின் அருள்தான் என்னை இங்கு கொண்டு வந்து சேர்த் திருக்கிறது. 'பதினைந்து ஆண்டுகள் கழித்து, மூன்றும் பிறையன்று தென் ஞட்டில் ஜீவன் முக்தர் ஒருவரின் தரி சனம் உனக்குக் கிடைக்கும்' என்று அவர் எனக்கு ஆசி வழங்கினுர். அவர் வாக்கு சத்தியமாயிற்று. கடந்த மூனறும் பிறையன்று நான் பூண்டிக்கு வந்தேன். இந்த மகானை தரிசித்தேன். இவர் என்னை ஆட்கொண்டு விட் டார். அன்று முதல் இங்கேயே இருக் கிறேன்'' என்று கூறி விட்டு, தன் கதையைச் சொல்லத் தொடங்கினுர் அந்த சாது.

மடியில் பூனைக்குட்டி....



பூர்ணனந்த சுவாமிகள் தென்னுட் டைச் சேர்ந்தவர்தான். மழலை மொழி யில் தமிழ் பேசுகிருர். பத்தொன்பதா வது வயதில், கும்பமேளாவைக் காண வேண்டும் என்ற ஆசையில், சொல்லிக் கொள்ளாமல் வீட்டை விட்டுக் கிளம் பிய இவர், வட நாட்டில் நுழையாத ஆச்ரமம் இல்லை, தரிசிக்காத மகான் இல்லை, காணுத தலங்கள் இல்லை. ஹரியாணுவில் ஒரு குகையில் தவம இருந்த நிகழ்ச்சியை அவர் விவரித்துக் கொண்டிருந்தபோது பிரயாண அசதி யால் எனக்குத் தூக்கம் கண்ணைச் செருகியது. ''தயவு செய்து காலையில் உங்கள் அனுபவங்களின் தொடர்ச்சி யைக் கேட்கிறேன். இப்போது சற்று ஓய்வெடுத்துக் கொள்ளுகிறேன்'' என்று கூறி விட்டு கண்ணயர்ந்தேன். அப்போது மணி பன்னிரண்டு இருக்கும்.

விடியற்காலை நானகு மணி. எதிரி லுள்ள டீக்கடைக்காரம்மா, பால் வாங்கி வர பையனை எழுப்பும் குரல் கேட்டு கண் விழித்தோம். ஸ்ரீ காஞ்சி காமகோடிப் பெரியவர்களின் விசுவ ரூப தரிசனத்தைக் காண, அவர் படுத் துறங்கும் மேனுவுக் கெதிரில் மண் தரையில் துண்டை விரித்துப் படுத் திருந்த நாட்கள் என் நினைவுக்கு வந்தன.

எழுந்து சாமியாரின் திண்ணைக் கெதிரே போய் நின்றேம். அங்கு ஒரு பூனைக்குட்டி ஓடி வந்தது. நான் ஏற்கெனவே அதை அங்கு பார்த்திருக் கிறேன். அது சாமியாரின் மடியில் தன் இஷ்டத்துக்குக் கொஞ்சி விளையாடும்; சுருட்டிக் கொண்டு படுத்துறங்கும்; தோள் மீது ஏறி குதிக்கும்; எதிரி லுள்ள கிண்ணத்தில் பக்தர்கள் ஊற்றி வைக்கும் பாலைக் குடிக்கும். ஆனுல், சாமியார் அதைக் கண்டு கொள் ளவே மாட்டார். அவர் அதைத் தொட்டு நான் பார்த்ததில்லை.



நடமாடிக் கொண்டிருந்த போது...

எங்கிருந்தோ வந்த அந்தப் பூனைக் குட்டி, அவர் படுத்திருந்த திண்ணைக் கருகில் சென்று 'மியாவ்' என்று இரண்டு மூன்று தரம் கத்திற்று. ''சுப்ரபாதம் பாடுகிறது'' என்றார் என் நண்பர் பாப்ஜி. சாமியார் விரல்களைச் சொடுக்கும் சப்தம் கேட்டது. அடுத்த கணம் டீக்கடைப் பையன் 'டீ'யை எடுத்து வந்து, 'சாமீ' என்று லேசாகக் குரல் கொடுத்தான். உடனே சாமியார் எழுந்து உட்கார்ந்து விட்டார். டீயைக் குடித்து முடித்ததும் பயங்கரமாக இருமினார். அந்த ஒலி பூண்டி கிராமத்தையே ஒரு குலுக்கு குலுக்கி விட்டது.

சாமியார் அமர்ந்திருந்த புல்லூர் ஓடை



அடுத்து, சுப்பிரமணி, சாமியாரின் முகத்தைத் துடைத்து விட்டு, சட்டையை மாற்றி, திருநீறு பூசி, சந்தனம் குங்குமம் இட்டு, மாலைகள் அணிவித்து, திரையை விலக்கி விட்டு அவருக்குப் பூஜை செய்தார். அங்கு கூடியிருந்தவர்களும், அப்போது திண்ணைக்கு நேரே வந்து நின்ற முதல் பஸ்ஸில் இருந்த பிரயாணிகளும் கன்னத்தில் போட்டுக் கொண்டனர்.

சாமியார் கடையைத் திறந்து விட்டார். கொடுத்து வைத்தவர்கள் வந்து தரிசனம் செய்து புண்ணியம் பெற்றுச் செல்லலாம்!

ஆற்றுப் புறமுள்ள கிராமப் பகுதிகளில் இந்த சித்தர் இருபது முப்பது ஆண்டுகள் சுற்றித் திரிந்திருக்கிறார் என்று எல்லாரும் சொல்லுகிறார்கள். அந்த இடங்களை காண வேண்டும் என்று புறப்பட்டுச் சென்றோம். அந்தப் பகுதியில் அவர் உட்காராத கோயில் மண்டபம் இல்லை; மரத்தடி இல்லை; பாறை இல்லை. ''சாமியார் இங்கே உட்கார்ந்திருப்பார், அங்கே படுப்பார், இந்த வீட்டில் சாப்பிடுவார், அந்தக் கடைக்கு வருவார்.'' என்று அந்தப் பகுதி மக்கள் எல்லா இடங்களையும் சுட்டிக் காட்டுகிறார்கள்.

இருபத்தைந்து வருடங்களுக்குமுன் செய்யாற்றின் தென்கரையிலுள்ள மேட்டுப்பாளைய ஓடையில் இவரைக் கண்டெடுத்து, ஆற்றங்கரையில் இவருக்கு அபிஷேகம் செய்து ஒரு கொட்டகை போட்டு அமர்த்தி, ஆகாரம் கொடுத்திருக்கிறார்கள். அவர் பகல் பூராவும் எங்கெல்லாமோ சுற்றி விட்டு, படுப்பதற்கு இரவில் அங்கு வந்து விடுவாராம். சில சமயம் சுடுகாட்டிலும் போய் படுப்பாராம். தலையில் ஒரு மூட்டையும், கையில் ஒரு மூட்டையுமாக அலைந்து கொண்டிருப்பாராம். சாமியாரிடம் அன்பு பாராட்டிய ஒருவர் அவரிடம் எதையோ எதிர்பார்த்து ஏமாந்து, அவரை அடித்துத் துன்புறுத்தவே, அங்கிருந்து கிளம்பி, புல்லூருக்குச் சென்று விட்டார். அங்கு சப்பாத்திக் கள்ளிக் காடுகளிலும், முட்புதர்களிலும் உட்கார்ந்திருந்தார். ஓடையில் வந்து குந்துவார். பேய் மழை அடித்தாலும் எழுந்திருக்க மாட்டார். வெள்ளம் வந்து அடித்துக் கொண்டு போய் விடப் போகிறதே என்று அவ்வூர் மக்கள் எரு கூண்டை எடுத்து வந்து அவருக்கு பாதுகாப்பாக வைத்திருக்கிறார்கள்.

இரு நாள் பெய்த பெரு மழையின் காரணமாக பெருகிய வெள்ளத்தில் மூழ்கியே விட்டார். பின்னர், பயந்து போன கிராமப் பெரியவர்கள் அவரை எடுத்து வந்து, வைக்கோல் கொளுத்தி சூடேற்றி, பச்சையப்ப நயினார் வீட்டில் வைத்துக் காப்பாற்றினார்கள்.

இந்தத் தகவலை பஞ்சாயத்து போர்டு தலைவராக இருந்த பொன்னுசாமி நயினார் கூறினார். பூண்டி சாமியாரைக் கடவுளாக மதிக்கிறார் அவர். சாமியாரைப் பற்றிப் பேசும்போது அவர் கண் கலங்கி விடுகிறது. சாமியார் மீது தனக்கு எல்லையற்ற பக்தியும் நம்பிக்கையும் ஏற்படுவதற்குக் காரணமாயிருந்த நிகழ்ச்சியையும் கூறினார் அவர்.

ஒரு சமயம் ஊரில் ஏற்பட்ட பகையின் காரணமாக இவருடைய கரும்பு ஆலை யந்திரங்களை யாரோ திருடிக் கொண்டு போய் விட்டார்கள். போலீசுக்குத் தகவல் கொடுத்தும் பயனில்லை. மனம் நொடிந்து போன நயினார், சாமியாரிடம் போய் நின்றார். களவு போன பொருள் கிடைக்குமா என்று மனத்திற்குள் கேட்டபடி கவலையோடு கை கூப்பி நின்றார்.

அப்போது சாமியார், ''பொருள் எங்கேயும் போகலையய்யா. நாசந்தோப்புக்கிட்டே ஆற்றங் கரையிலே கிடைக்கும், போய்யா'' என்று கூறி அனுப்பி விட்டார்.

''ஆச்சரியத்தைப் பாருங்க. அன்னிக்கே மணல்லே ஒரு ஆணி மாதிரி தெரியுதுன்னு யாரோ தோண்டிப் பார்க்க, எல்லா சாமான்களும் கிடைச்சுப் போச்சு. அவங்க புதைச்சு வெச்ச இடத்தை சாமியார் கரெக்டா சொல்லிட்டாரு....அன்னிலேருந்து எனக்கு அவர்தானுங்க கடவுள். தினம் ஒரு முறை அவரை தரிசனம் செய்துட்டு வந்துடுவேன். ஒண்ணுமே பேச மாட்டேன். எல்லாம் மனசிலே நினைச்சுக்குவேன். அவர் சரி பண்ணிடுவார்... இப்போது கூட என் குடும்பத்திலே ஒரு புயல் வீசிச்சு. அவர் என் பையன் சொப்பனத்திலே வந்து அந்தப் பிரச்னையையும் தீர்த்து வெச்சுட்டார்.'' என்று உணர்ச்சி பொங்கக் கூறினார் பொன்னுசாமி நயினார்.

அந்தப் பகுதி மக்கள் இம்மாதிரியான அதிசய அனுபவங்களை நிறைய



தூங்காமல் தூங்குகிறார்.


கூறுகிறார்கள். ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் மறக்க முடியாதவாறு ஏதாவது ஓர் அற்புதத்தை நிகழ்த்தியிருக்கிறார் பூண்டி சாமியார்.

ஒரு சமயம் இரவில் ஆற்றங்கரை ஓரமாக கலசபாக்கத்தைச் சேர்ந்த ஒருவர் போய்க் கொண்டிருந்த போது சாமியார் கண்டதுண்டமாக வெட்டப்பட்டு, கை ஓரிடம் கால் ஓரிடமாக இருந்த பயங்கரக் காட்சியைப் பார்த்து பயந்து, அலறிக் கொண்டு ஓடி வந்தாராம். மறுநாள் சாமியார் சாதாரணமாகத் தெருவில் நடந்து போவதைப் பார்த்து பிரமித்துப் போய் விட்டாராம் அவர். ''பசி எடுக்கிறது, ஏதாவது தாருங்கள்'' என்று சாமியார் இதுவரை யாரிடமும் கேட்டதே இல்லை என்று எல்லோரும் சொல்லுகிறார்கள். சில சமயம் பசியாயிருக்கும் போது அவர் கல்லையும் மண்ணையும் தின்பதைப் பார்த்தவர்களும் இருக்கிறார்கள்


பூண்டிக்கு மேற்கே பிராயப்பட்டு, மோட்டூர், நட்சத்திரக் கோயில் முதலிய சிற்றூர்களில் அவர் நடமாடிய இடங்களையும் சுற்றிப் பார்த்து விட்டு வந்தோம். பூண்டியைச் சேர்ந்த 'ஞானம்' என்பவர் சாமியாரிடம் உத்தரவு பெற்றுக் கொண்டு எங்களை அங்கெல்லாம் அழைத்துச் சென்றார். ரொம்பவும் நெருங்கிப்

நட்சத்திரக்கோயில் முருகன் ஆலயம்





கலசபாக்கம் ஈச்வரன் கோயில்



பெருமாள் கோயில்

பழகுபவர்கள் சாமியாரைக் கேட்காமல் எதைச் செய்யவும் அஞ்சுகிறார்கள்.

நட்சத்திரக் கோயிலில், சிறு குன்றின் மீது முருகன், வள்ளி தெய்வயானை சமேதராய் எழுந்தருளியிருக்கிறார். முருகனுக்கு முன்னால் முக்கால் அடி உயரத்தில், சுயம்பூ லிங்கம் ஒன்று காணப்படுகிறது. அதனால் அங்கு முருகனுக்கு சிவ சுப்பிரமணியன் என்ற திருநாமம் வழங்கப்படுகிறது. அது ஓர் அழகிய சிறு கோயில். ஒரு நட்சத்திரக் கோயில்!

திரும்பி வரும் போது ஞானம் ஓர் அதிசய நிகழ்ச்சியைக் கூறினார்.

அவருடைய நிலத்தில் ஒரு பூவரசு மரம் இருக்கிறது. அது உலர்ந்து போய் பட்டமரமாக நின்று கொண்டிருக்கவே, அதை வெட்டிப் போட்டு விடலாம் என்று முடிவு செய்து அதற்கான ஏற்பாடுகளைச் செய்தார். சாமியாரிடம் உத்தரவு கேட்டபோது, 'வேணும். மரத்தை வெட்டாதே' என்றே கூறி விட்டார். அதையும் மீறி அவர் மரத்தை வெட்ட முயன்ற போது, கத்தியைக் கையில் எடுத்த பணியாள் திடீரென்று உடல் நலம் குன்றிப் படுத்த படுக்கையாகி, பிழைப்பதே கடினம் என்ற நிலை ஏற்பட்டுவிட்டது. ஞானத்திற்கு பயம் வந்து விட்டது. சாமியாரிடம் போனார். ''ஏன் அந்த மரத்தை வெட்டக் கூடாதுன்னு சொல்றே? உன் மனசிலே இருக்கிறதைச் சொல்லு'' என்று கேட்டார். ''அது பூவரசன். அதை வெட்டாதே'' என்று சாமியார் உறுதியாகக் கூறவே, அந்த எண்ணத்தையே அவர் கைவிட்டு விட்டார். பின்னர், அம்மரம் துளிர்க்க ஆரம்பித்தது. தற்போது சாமியார் அதற்கு பூஜை செய்யச் சொல்லியிருக்கிறார். அதனடியில் ஒரு கோயில் கட்டும் படியும் கூறியிருக்கிறாராம். நாங்கள் அந்த பூவரசு மரத்தைப் போய் பார்த்தோம்.

''இன்னொரு அதிசயம் பாருங்க. இந்த இடத்துக்கு 'ஸோமாஸ் மேடு'னு ஒரு பழைய பேரு உண்டு. அது இந்த ஊர்க்காரங்களுக்கே அவ்வளவாகத் தெரியாது. அந்தப் பெயரை சாமியார் சொன்னதும் எனக்கு ஆச்சரியமாகப் போயிடுச்சு. எனக்கு என்னவோ, இவர் பூண்டிலே பொறந்தவர்னுதான் தோணுது. இப்போ இல்லாட்டாலும் இதுக்கு முந்தியாவது இங்கே பிறந்து வளர்ந்திருக்கணும்...... ஒவ்வொரு இடத்தையும் அவ்வளவு கரைக்டா சொல்றாரு. அது மட்டுமில்லீங்க இந்தச் சுற்று வட்டாரத்திலே இரு கிறவங்க பெயரெல்லாம் அவருக்கு நல்லா தெரியும். ஆனா, யாரையும் பேர் சொல்லிக் கூப்பிட மாட்டார். மத்தவங்ககிட்டே தான் 'இன்னார் வந்தான் போனான்'னு சொல்லுவார். திண்ணையிலே உட்கார்ந்திருந்தாலும் அவர் வேறே ரூபத்திலே எங்கெல்லாமோ போய் வரார்னு நினைக்கிறேனுங்க... பாருங்க, ஒரு நாள் எங்கிட்டே, 'ஸோமாஸ் மேட்டிலே ஒரே முள்ளு...காலெல்லாம் குத்திடுச்சி'ன்னாரு...'வாய்க்கால் அகலமா இருக்கு.. தாண்ட முடியலேன்'னாரு... அதோ பாருங்க வாய்க்கால்... இதோ பாருங்க முள்ளு. உட்கார்ந்த இடத்திலேருந்து இவரு இதையெல்லாம் எப்படிப் பார்த்திருக்க முடியும்? நீங்களே சொல்லுங்க....சுப்பிரமணி கூட ஒரு நாள் சாமி கால்லேருந்து முள்ளு எடுத்தேன்னு சொன்னான். அவரு ஒரு சித்தர் தானுங்க. சந்தேகமேயில்லை'' என்றார் ஞானம்.

ஒரு நாள் சாமியாரின் மடியில் லாடம், ஆணியெல்லாம் கிடந்ததாம். ''இதெல்லாம் ஏது?'' என்று கேட்ட போது ''வெளியே போயிருந்தேன்.

கீழே கிடந்தது, எடுத்தாந்தேன்'' என்றாராம்!

இதையெல்லாம் கேட்ட நண்பர் ராவ், 'திருதிரு'வென்று விழித்தார். இம்மாதிரியான செய்திகளை கேட்டால் அவர் நடுங்கி விடுகிறார்!

பூண்டி சாமியாரை அப் பகுதி மக்கள் தெய்வமாக வழிபடுகிறாகள். குழந்தையாக நேசிக்கிறார்கள். அவர் திருஷ்டி பட்டால் சகல துன்பங்களும் தீர்ந்து விடும் என்றும், அவர் திருநீறு கொடுத்தால் எலலா வியாதிகளும் மறைந்து விடும என்றும அனுபவத்தால் நம்புகிறார்கள்.

அவருக்கு இஷ்டமில்லை யென்றால் நின்றாலும் அவரிடமிருந்து நம்மால் பிரசாதம் வாங்கி விட முடியாது. அன்று காரில் வந்த ஒரு பக்தர் சாமியாருக்கு லஞ்சம் கொடுப்பது போல் என்னென்னவோ கொடுத்துப் பார்த்தார். எப்படியாவது அவர் கையால் திருநீறு வாங்கிச் சென்று விட வேண்டும் என்று படாதபாடு பட்டார். ஆனால், சாமியார் மசியவேயில்லை. 'எடுத்துக்கய்யா' என்று கிண்ணத்திலிருந்த திருநீற்றை வந்தவரையே எடுத்துக் கொள்ளும்படி கண்டிப்பாகக் கூறி விட்டார். பணக்காரன்—ஏழை, தெரிந்தவன்—தெரியாதவன் என்ற பாரபட்சமே அவரிடத்தில் காண முடியாது.

கலசபாக்கத்தில் செய்யாற்றின் கரையிலுள்ள இந்த அரசமரத்தடியில் சாமியார் தங்குவது வழக்கம்.

'தேவைகளே யற்ற ஒரு தூய்மையான துறவி. விருப்பு வெறுப்பற்ற உண்மையான ஞானி. சரீரத்தை மறந்து, ஆத்ம சிந்தனையில் லயித்திருக்கும் தவயோகி. நயனமொழியில் பேசி நன்மைகள் புரியும் சித்த மகா புருஷன்' என்றெல்லாம் இவரைப் பற்றிக் கூறிக் கொண்டே போகிறார்கள். ஆனால், எந்த விளக்கத்திற்குமே பிடிபடாத புதிராக இருக்கிறார் பூண்டி சாமியார்.

அன்று சாமியாரின் எதிரில் வந்து நின்ற ஒரு பால சந்நியாசியை சந்தித்துப் பேசினேன். அவர் வடநாட்டுக்காரர். பத்திரிநாத்திலிருந்து வந்தவர். முகத்தில் தேஜஸ் பொலிகிறது. அரைகுறை ஆங்கிலத்தில் பேசுகிறார்.

கார்த்திகை தீபத்திற்கு முன் திருவண்ணாமலைக்கு வந்தாராம். மலையின் உச்சி வரையில் ஏறினாராம். அருணாசலத்திலிருந்து பார்த்தபோது வடக்கே ஒரு ஜோதி தெரிந்ததாம். கீழிறங்கி, அதைத் தொடர்ந்து கொண்டே வந்தாராம். அந்த ஜோதி அவரைப் பூண்டிக்கு அழைத்து வந்து விட்டதாம். அருணாசலத்தின் மகிமையைக் கண்டு வியப்பதாகக் கூறினார் அந்த சந்நியாசி.


''நான் இத்துடன் மூன்று நான்கு முறை பூண்டிக்கு வந்து விட்டேன். நான் எங்கு சென்றாலும் இவர் என் முன் தோன்றி இங்கே அழைத்துக் கொண்டு வந்து விடுகிறார். இம்மாதிரி ஒரு மகானை நான் இதுவரை கண்டதில்லை. இவரைப் புரிந்து கொள்ளவே முடியாது. இவர் எல்லா நிலைகளையும் கடந்து மிக உயர்ந்த இடத்தில் ...'' என்றார் அவர்.

திரும்பும் வழியில் நான் கீழ் மின்னல் இரத்தினகிரிக்குப் போனேன். பூண்டியில் நான் கண்டதையும் கேட்டதையும் பால முருகனடிமையிடம் கூறினேன். அவர் ஸ்லேட்டை எடுத்து,

'எட்டாத கனி
லேசில் அறிந்து கொள்ள முடியாது.
Top

என்று எழுதி, கையை மிக உயர்த்திக் காட்டினார்.

பத்திரிநாத் சந்நியாசியும், இரத்தினகிரி சாமியாரும் பூண்டி மகானைப் பற்றி ஒரே மாதிரியான அபிப்பிராயம் கூறியதை நினைத்து ஆச்சரியப்பட்டுக் கொண்டே சென்னை வந்து சேர்ந்தேன். —தொடரும்.



அருணாசல மகிமை

10

இப்பரந்த உலகத்தை ஒரு தேவாலயமாகக் கருதினால், திருவண்ணாமலை தலத்தை அதன் கருவறையாகக் கொள்ளலாம். அருணாசல மலையே அக் கருவறையிலுள்ள சிவலிங்கம் ஆகும்.

முழு முதற் கடவுளான பரமசிவனே அருணாசலமாக அமர்ந்திருக்கிறார். நான்முகனுக்கும் திருமாலுக்கும் அக்னி மலையாகக் காட்சி தந்த ஞான குரு, உலகம் உய்யும் பொருட்டு ஜோதிர் லிங்க வடிவமாய்த் தரிசனம் தந்து கொண்டிருக்கிறார்.

மகேசனே மாமலையாக வீற்றிருப்பதால்தான், அருணாசலத்தை வலம் வருவது பிறவி எடுத்ததன் பெரும் பயனாகக் கருதப்படுகிறது. அம் மலையை ஒரு முறை சுற்றி வருவது சம்சாரக் கடலைக் கடக்கும் தோணியாகும். ஏழு நரகங்களையும் கடந்து முக்தி அடையும் ஏணியாகும். கிரிப் பிரதட்சணம் செய்வதால் நாம் செய்த பாவங்களெல்லாம் அகன்று, நமக்குக் கிட்டும் புண்ணிய பலன்களைப் பற்றி அருணாசல புராணத்தில் படிக்கும் போதே மெய் சிலிர்க்கிறது.

அருணாசலத்தை ஒருமுறை வலம் வரவேண்டும் என்று நினைத்து ஓரடி எடுத்து வைத்தால், ஒரு யாகம் செய்த பலன் கிட்டும்; இரண்டடி எடுத்து வைத்தால், ராஜசூய யாக பலன் உண்டாகும். மூன்றடி எடுத்து வைத்தால், அசுவமேத யாகத்தின் பலனும், நான்கு அடி எடுத்து வைத்தால், எல்லா யாகங்களும் செய்த பலனும் கிடைக்கும்.

பரணீதரன்

மலையை வலம் வரும் போது நாம் எடுத்து வைக்கும் முதலடி, உலகையே வலம் வந்த பலனைத் தரும். இரண்டாவது அடி, புண்ணிய தீர்த்தங்களில் நீராடிய பலனைத் தரும். மூன்றுவது அடி, எத்தனையோ தானங்கள செய்த பலனைத் தரும். நாலாவது அடி எடுத்து வைத்தால், அஷ்டாங்க யோகம் செய்த பலனைத் தரும்.

அருணுசலத்தை வலம் வருபவர்களின் காலில் பட்ட தூசி, பறந்து சென்று ஒரு நகரத்தில் விழுநதால், அது கைலாசமாகி விடும். அத் தூசி ஒரு மனிதர் மேல் பட்டால், அவர் பிறப்பு, இறப்பாகிய பிணி நீங்கி உயர் பதவி அடைவார்.

ஐப்பசி, கார்த்திகை, மார்கழி மாதஙகளிலும், வருடப் பிறப்பு அன்றும், சிவராத்திரியன்றும், கார்த்திகை தீபத்தன்றும் அருணுசலத்தை வலம் வந்தால் நிசசயம் நற்கதி கிடைக்கும என்று கூறப்பட்டுள்ளது.

அருணுசலத்தை ஞாயிறு அன்று வலம் வந்தால், சூரிய மண்டலத்தைப் பிளந்து சிவபதம் அடையலாம்; திங்களன்று, தேவேந்திரனைப் போல் ஏழு உலகத்தையும் ஆளலாம்; செவ்வாய் அன்று, தங்களுக்குண்டான கடனேயும் தரித்திரத்தையும் தொலேத்து, பிறவிப்பிணி நீக்கலாம்; புதன் அன்று, நானகு வேதங்களும், ஆறு சாத்திரங்களும், அறுபத்து நான்கு கலேகளும் தெரிந்த தேவர்களாகலாம்; வியாழன் அன்று, முனிவர்களுக்கும் மேலான பதவியை அடையலாம்; வெள்ளியன்று, விஷ்ணு பதமும், சனியன்று நவக்கிரக பலனும் பெறலாம்.

அருணுசலத்தை வலம் வந்தவர்கள் கைலாசத்திற்குள் நுழையும் போது சந்திரன் வெள்ளேக் குடைபிடிப்பான். சூரியன் தன் கைகளில் விளக்கேந்தி வருவான். தர்ம தேவதை கைலாகு கொடுப்பாள். நடக்கும் பாதையில் இந்திரன் மலர்களேத் தூவுவான். குபேரன் தண்டனிடுவான். அட்ட வசுக்கள் மலர்மாரி பொழிவார்கள்.

இது மட்டுமா? மேனகையும், அரம்பையும், ஊர்வசியும், திலோத்தமையும் வீணுகானம் செய்து கொண்டு, நடனமாடியபடியே வந்து நம்மை எதிர் கொண்டழைப்பார்கள். கங்கையும், யமுனேயும் சாமரம் வீசுவார்கள். அமிர்தத்தையும், மலேயளவு ஆடைகளேயும் எடுத்துக் கொண்டு வந்து



கௌதம ஆச்ரம மண்டபம்

மேகம் நம்மை வரவேற்கும்; இலக்குமி தேவி மலரும், கஸ்தூரியும் கொண்டு வருவாள். நான்கு வேதங்களும் முன்னே முழங்கிக் கொண்டு வரும்.


கிரிப் பிரதட்சண பலனைப் பற்றி இம் மாதிரியான விளக்கங்களேயும் வர்ணனேகளேயும் படித்து விட்டு வீட்டில் உட்கார்ந்திருக்க முடியுமா? விண்ணேரும் மண்ணேரும் சித்தர்களும் தவ யோகிகளும் வலம்வந்து மேன்மையுற்ற அருணுசலத்தை ஒரு சுற்றுச் சுற்றி வர வேண்டும் என்று தோன்றவே, நண்பர் விசுவநாதனுடனும் புகைப்படக்காரர் பாபுவுடனும் புறப்பட்டுச் சென்றேன்.

எங்களுடன் ஸ்ரீ சேஷாத்ரி சுவாமிகளின் ஆச்ரமத்தைச் சேர்ந்த திரு அருணுசலத்தின் மகன் மகாதேவன், மாப்பிள்ளே கிருஷ்ணமூர்த்தி, அவரது கடைக்குட்டி ரமேஷ் மூவரும் சேர்ந்து கொண்டனர்.

அருணுசலத்தை வலம் வருவதற்கு சில விதி முறைகள் இருக்கின்றன.

மலே சுற்றும் பாதையில் ஒரு கலே மண்டபம்






மாணிக்கவாசகர் கோயில்

நீராடி விட்டு, மடித் துணியுடுத்தி, விபூதி, ருத்ராட்சம் அணிந்து, தானங்கள் கொடுத்து விட்டு, உள்ளத்தில் சிவ நாமம் விளங்க, உதட்டில் பஞ்சாட்சரம் துலங்க, நிறை மாத கர்ப்பிணிகள் போல் மெள்ள நடந்து செல்ல வேண்டும். கைகளை வீசி நடக்கக் கூடாது. ஏனெனில், அருவமாக வலம் வந்து கொண்டிருக்கும் தேவர்களுக்கும் சித்தர்களுக்கும் அது இடைஞ்சலாக இருக்குமாம். குடை பிடித்துக் கொண்டோ, கால்களில் மிதியடி அணிந்தோ நடக்கக் கூடாது. வாகனங்களில் செல்லவும் கூடாது.

இதை வலியுறுத்த அருணாசல புராணத்தில் ஒரு கதை கூறப்பட்டுள்ளது:

வஜ்ராங்கத பாண்டிய மன்னன் ஒரு நாள் குதிரை மீதேறி வேட்டையாடப் புறப்பட்டான். அருணாசலத்தை அடுத்த காட்டில் ஒரு புனுகுப் பூனையைக் கண்டு அதைத் துரத்தினான். அது மிக வேகமாக ஓடி, அருணாசலத்தைச் சுற்றி வந்து, அரசனின் கண்ணெதிரே தரையில் விழுந்து இறந்தது. அடுத்த கணம் அப்பூனை, ஒளி மயமான தெய்வ உருவம் தாங்கி விமானத்தில் ஏறி, வானில் காட்சி தந்தது.

மலை சுற்றும் பாதையில் ஒரு தீர்த்தம்



சற்றைக் கெல்லாம், அரசன் குதிரை மீதிருந்து கீழே விழுந்தான். அடுத்த கணம் அந்தக் குதிரையும் தரையில் விழுந்து மரித்து, பூனையைப் போலவே தெய்வ வடிவம் தாங்கி, புஷ்பக விமானத்தில் அமர்ந்தது. ஒன்றும் புரியாத வஜ்ராங்கத பாண்டியன் அத் தேவ புருஷர்களைப் பார்த்து, "நீங்கள் யார்? நீங்கள் மிருகங்களாகப் பிறக்கக் காரணம் என்ன?" என்று கேட்டான்.

அதைக் கேட்டு ஒரு தேவ புருஷன் பதிலுரைத்தான்: "பாண்டியனே, பயப்பட வேண்டாம். என் பெயர் கலாதரன். இவன் பெயர் காந்திசாலி. நாங்கள் முற்பிறவியில் வித்யாதரர்களாக இருந்தோம். ஊழ்வினையின் காரணமாக, ஒரு சமயம் மேரு மலைச் சாரலிலிருக்கும் தூர்வாச முனிவரின் தபோவனத்திற்குச் சென்றோம். அங்குள்ள நந்தவனத்தில் நுழைந்து, மலர்களைப் பறித்தோம். அதைக் கண்ட மகரிஷி எங்கள் மீது கோபங்கொண்டு, என்னைக் குதிரையாகவும், என் நண்பனை புனுகுப் பூனையாகவும் பிறக்கும்படிச் சபித்து விட்டார். நாங்கள் செய்த குற்றத்திற்காக மனம் வருந்தினோம். முனிவரிடம் மன்னிப்புக் கேட்டு, சாபம் நீங்க வழியில்லையா என்று உள்ளத் தூய்மையுடன் கேட்டோம். எங்கள் நிலையைக் கண்டு மாமுனிவர் மனம் இறங்கி, 'நீங்கள் இருவரும் அருணாசலத்தை வலம் வாருங்கள். உங்கள் சாபம் நீங்கப் பெற்று நற்கதி யடைவீர்கள்' என்று கூறினார். அதன்படியே தங்களுடைய நன்முயற்சியால் எங்களுக்குக் கிரிப் பிரதட்சணமும், சாப விமோசனமும் கிடைத்தது. நீங்கள் கால் நடையாக வராமல், வாகனம் ஏறி மலையை வலம் வந்ததால் வீழ்ச்சி அடைந்தீர்கள். தாங்களும் அருணாசலத்தைக் கால் நடையாகவே வலம் வந்து நற்கதி அடைவீர்களாக" என்று கூறிக் கலாதரனும் காந்திசாலியும் மறைந்தார்கள்.

பின்னர், அப் பாண்டிய மன்னன், நாடாளும் பொறுப்பை இளவரசனை இரத்தினங்கதனிடம் ஒப்படைத்து விட்டு, துறவறம் பூண்டு, ஓர் ஆச்ரமம் அமைத்து, அருணாசலேச்வரரைத் தூய மனத்துடன் ஆராதித்து, தினமும் மலையை வலம் வந்து, கோயில் திருப்பணிகள் பல செய்வித்தான். ஒரு நாள் அர்த்தநாரீச்வரர் எருது மேல்

ஏறி வந்து, அரசனுக்குக் காட்சி தந்து, "அன்பனே, உன் குற்றம் அகன்றது. தேவேந்திரனை நீ, முன்பு எம்மை வஜ்ராயுதத்தினுல் தாக்கி அபசாரம் செய்ததால், மானிடனுகப் பிறக்க நேர்ந்தது. இப்போது உன் சாபம் நீங்கி விட்டதால் மீண்டும் தேவலோகம் செல்வாயாக" என்று ஆசி கூறி மறைந்தார்.



'பஞ்சமுக' தரிசனம்

ஸ்ரீ சேஷாத்ரி சுவாமிகளின் சமாதியையும் ஸ்ரீரமண மகரிஷியின் சமாதியையும் தரிசித்துக் கொண்டு, கிரிப் பிரதட்சணத்தைத் தொடங்கிஞேம். செங்கம் சாலையில் சிறிது தூரம் சென்றதும், வலப் பக்கம் ஒரு விநாயகர் கோயில் இருக்கிறது. இடப்புறம் தமிழக அரசின் கலைக் கல்லூரிக் கட்டடம் எழும்பிக் கொண்டிருக்கிறது. அதற்குப் பின்னுல் தொலைவில் சமுத்திர ஏரி தெரிகிறது. அதுதான் திருவண்ணுமலை டவுனுக்கு குடிநீர் 'சப்ளை' செய்கிறது என்று திரு கிருஷ்ண மூர்த்தி கூறிஞர்.

சற்று நடந்தால் வலப்புறம் சிம்ம தீர்த்தத்தையும், எதிரில் சிம்ம மண்டபத்தையும் காண்கிறேம்.


நடந்து கொண்டேயிருக்கும்போது இடப்புறம் இருந்த ஒரு பாறையையும் அதன் மீதிருந்த ஒரு சிறு மண்டபத்தையும் காட்டி, "அதுதான் வைரக்கல்" என்றுன் மகாதேவன். ஆனுல், அது என்னவென்று அவனுக்கே தெரியவில்லை. தெருவில் போய்க் கொண்டிருந்த ஒருவரைக் கேட்டேன். அந்த மண்டபத்தில் ஒரு கிழவி தயிர் விற்றதாக அவர் கூறிஞர். "அத்தனை உயரத்தில் உட்கார்ந்து அவள் தயிர் விற்கக் காரணம் என்ன?" என்று கேட்டேன் நான்.


"அங்கே ஒருத்தியும் தயிர் விற்கலே. தயிர் விற்ற பணத்தில் மிச்சம் பிடித்து, ஓர் அம்மாள் அந்த மண்டபத்தைக் கட்டிஞள்" என்று பக்கத்தில் வந்த மற்றேர் ஆசாமி கூறிஞர். வேறெருவரைக் கேட்டிருந்தால், நிச்சயம் வேறெரு கதையைக் கூறியிருப்பார்!

ஒன்றரை மைல் சென்றதும், மலைப் பாதை வலப்பக்கம் திரும்புகிறது. அங்கே, தூர்வாசர் ஆச்ரமம் இருந்ததற்கு அடையாளமாக ஒரு மண்டபம் இருக்கிறது. இம்மாதிரி மண்டபங்கள் வழி நெடுகிலும் நிறைய இருக்கின்றன. அந்தக் காலத்தில் அவை எதற்கு உபயோகிக்கப்பட்டனவோ தெரியாது; இப்போது, சோப்பு, பீடி விளம்பரம் செய்வதற்கு பெரிதும் பயன்படுகின்றன. அந்த மண்டபங்களைக் கட்டி வைத்தவர்களின் ஆத்மாக்கள் சாந்தி அடையட்டும்!

சட்டென்று மகாதேவன் எதிர்ப் புறத்திலுள்ள ஒரு புதரைக் காட்டி

அடி அண்ணுமலை ஆலய கோபுரம்





சாஸ்தாக்கள

''அங்கேதான் 'காட்டு சிவா ஆச்ரமம்' இருக்கிறது. அவர் பச்சிலை வைத்தியத்தில் கெட்டிக்காரர்'' என்றான்.

''அவர் இப்போது அங்கே இருக்கிறாரா?''

''இப்போது அந்த சாமியார் இல்லை. வேறொருத்தர் இருக்கார்.''


''காட்டு சிவா எங்கே போனார்?''

''அவரை மாடு முட்டிடுத்து. அதனாலே அவர் இங்கே யிருந்து போயிட்டார்'' என்றான் மகாதேவன். எனக்குச் சிரிப்பு வந்து விட்டது.

அருகிலிருந்த விநாயகர் கோயிலை அடுத்த குளத்தருகே அமர்ந்திருந்த ஒருவரிடம் கிருஷ்ணமூர்த்தி, காட்டு சிவாவைப் பற்றி விசாரித்துக் கொண்டு வந்தார்.

காட்டு சிவா, சிஷ்யரிடம் சண்டை போட்டுக் கொண்டு சேலத்துக்குப்

பைரவ மூர்த்தி



போய் விட்டாராம்! அங்கே ஏதோ ஒரு காட்டில் வசித்து வருகிறாராம். இன்னும் கொஞ்ச தூரம் சென்றதும் அவரைப் பற்றி புதியதொரு கதையைச் சொன்னார்கள்! அவரைப் பற்றி ஒருவருக்கும் சரியான விவரமே தெரியவில்லை.

இத்தனை நேரம மலையின் அமைப்பையும் தனமையையும் பற்றி ரொம்பவும் 'சீரிய'ஸாகப் பேசிக் கொண்டு வந்த நண்பர் விசுவநாதன், சாமியாரைப் பற்றிய கதைகளைக் கேட்டதும்தான் வாய் விட்டுச் சிரித்தார்.

நண்பர் ஒரு பூகர்ப விஞ்ஞானி. மலைப் பாறைகளைப பற்றி நன்றாகத் தெரிந்தவர். அருணாசலம், எரிமலையாக இருந்திருக்க வேண்டும் என்று முதலில் சந்தேகப்பட்டவர், மலையைச் சுற்றி மேற்குப் பக்கம் வருவதற்குள் தம் அபிப்பிராயத்தை மாற்றிக் கொண்டு விட்டார்! ''இது ரொம்பப் புராதனமான மலை. அதில் சந்தேகமில்லை'' என்று கூறினார்.

இம்மலை கிருத யுகத்தில் அக்னி மலையாகவும், திரேதாயுகத்தில் ரத்தின மலையாகவும், துவாபர யுகத்தில் பொன்மலையாகவும், கலியுகத்தில் மரகத மலையாகவும் இருப்பதாக அருணாசல புராணத்தில் கூறப்பட்டுள்ளதை நான் நண்பருக்கு எடுத்துச் சொன்னேன்.

மலைக்கு நேர் மேற்கில், செங்கல், சுண்ணாம்புக் காரையால் ஆன ஓர் அழகிய உயர்ந்த மண்டபம் இருக்கிறது. அது பழுதடைந்து, பாழ் மண்டபமாக நிற்பதைக் காணும் போது, மனம் மிக வேதனைப்படுகிறது.

அடுத்திருப்பது, வேடு பறி மண்டபம். முன்பு ஒரு சமயம் ஸ்ரீ அண்ணாமலையார் அவ்வழியே வீதி வலம் வந்த போது, திருடர்கள் வந்து நகைகளைப் பறித்துச் சென்று விட்டார்களாம். அந் நிகழ்ச்சியின் நினைவாக இன்றும், சுவாமி தை மாதம் அங்கு எழுந்தருளும்போது, தீவட்டிப் பிடிப்பவர் வேடன் போல் வேடம் தாங்கி, மலையிலிருந்து ஓடி வருவாராம். குருக்கள் சுவாமியின் மீது இருக்கும் பூ மாலையை எடுத்து அவரிடம் கொடுப்பாராம்.

எதிரிலுள்ள குகைக் கோயிலிலிருந்த கண்ணப்பர் சிலையை யாரோ எடுத்துக் கொண்டு போய் விட்டதாக வழிப் போக்கன் ஒருவன் வருத்தத்துடன் கூறி விட்டுச் சென்றான்.

வேடுபறி மண்டபத்துக்கு எதிரே ஒரு சிறுகல்லில் நின்று ''உண்ணுமுலைத் தாயே, பால் சோறு போடம்மா'' என்று கூவ வேண்டும் என்று மகா தேவன் கூற, ''சாமியே சரணம் ஐயப்பா, உண்ணுமுலைத் தாயே, பால் சோறு போடம்மா'' என்று பாபு உரக்கக் குரல் கொடுத்தார். அது மலையில் எதிரொலித்தது. அவ்வொலி உள்ளத்தில் பாய்ந்து உடலை உலுக்கியது.

அடுத்து, மலையை நோக்கியவாறு தண்டாயுதபாணி கோயில் கொண்டிருக்கிறார். அவரைத் தரிசித்து விட்டு அடுத்திருக்கும் கௌதம மகரிஷியின் ஆச்ரம மண்டபத்திற்குள் நுழைந்தோம்.

கௌதமர் ஆச்ரமத்தில் ஒரு டெலிபோன் இருப்பதைக் கண்டு வியந்தேன். அங்கு தற்போது ஒரு நாட்டு வைத்தியர் வியாபாரம் செய்து வருகிறார் என்று பின்னர் தெரிந்து கொண்டேன். இப்போது இருக்கும் சூழ்நிலையை மறந்து, கௌதமர் வாழ்ந்த காலத்தைக் கற்பனையில் கண்டு பெருமூச்சு விட்டுக் கொண்டே நகர்ந்தோம். அங்கிருந்து நோக்கினால் மூன்று சிகர தரிசனம் ஆகிறது. 'சிவன், பிரும்மா, விஷ்ணு' என்று மூன்று சிகரங்களைக் காட்டுகிறார்கள். கன்னத்தில் போட்டுக் கொண்டேன்.

அதையடுத்து, கட்டுச்சோறு மண்டபம். பின்னர், வருண லிங்க மண்டபம். மலைக்கு மேற்குப் புறம் நிலவளமும் நீர்வளமும் நிறைந்து செழுமையாக இருக்கிறது.

அடி அண்ணாமலை ஏரியையும் வளம் கொழிக்கும் இயற்கை யெழிலையும் ரசித்துக் கொண்டே நாம் அடி அண்ணாமலை கிராமத்திற்கு வந்து சேருகிறோம். அங்கு அணி அண்ணாமலை என்னும் ஆதி அருணாசலேச்வரர் ஆலயம் இருக்கிறது. பிரும்மா பிரதிஷ்டை செய்து வழிபட்ட லிங்கம் அது. திருவண்ணாமலையைப் போலவே இங்கும் அண்ணாமலையாரும் உண்ணாமுலை அம்மையும் திருக்கோயில் கொண்டிருக்கிறார்கள்.

கார்த்திகை தீபத்தின் இரண்டாம் நாளும், தை மாதம் மூன்றாம் நாளும் ஸ்ரீ அண்ணாமலையார் இக் கோயிலுக்கு எழுந்தருளுகிறார். இங்கிருக்கும் தெய்வ வடிவங்களில் கலையழகும், கருணையெழிலும் சொட்டுகின்றன. மேற்குப் பிராகாரத்தில் இருக்கும்



அடி அண்ணாமலை பிராகாரத் தோற்றம்

சாஸ்தாக்களின் வடிவங்களும் உள் பிராகாரத்தில் இருக்கும் பைரவமூர்த்தியும் சொல்லில் அடங்கா கலைச் செல்வங்கள்.

திருவண்ணாமலையிலேயே தங்கி திருவெம்பாவையும் திருவெம்மானையும் பாடி அருளிய மாணிக்க வாசகப் பெருமானுக்கு அக் கிராமத்தில் ஓர் ஆலயம் எழுப்பி இருக்கிறார்கள். தீந்தமிழில் தெய்வநெறி வளர்த்த தூயோனை வணங்கி விட்டு, மலையின் வடக்குப் பிராகாரத்தில் நுழைந்தோம். அங்கு ஐம்பது அறுபது குழந்தைகள், ''சாமீ... சாமீ'' என்று இசை நயத்தோடு கூவிக் கொண்டே கையேந்தி நம் பின்னாலேயே ஓடி வந்தார்கள். அரை மைல் தூரம் நம்மைத் தொடர்ந்து வந்து, உடல் சோர்ந்த பின் திரும்பி விட்டனர். அந்தப் பிஞ்சு உள்ளங்களைக் கண்ட போது அத்தனை பேருக்கும் கொடுத்துத் திருப்திப்படுத்த கையில் நிறைய சில்லறை கொண்டு வரவில்லையே என்று வருந்தினேன்.

வடப் பிராகாரத்தில் இருக்கும் 'பண்டாரத்தான் மண்டபம்' மிக மோசமான நிலையில் இருக்கிறது. 'மண்டபம் அபாய நிலையில் இருக்கிறது. உள்ளே ஒருவரும் பிரவேசிக்க வேண்டாம்' என்று எச்சரிக்கும் வாசகம் மண்டபச் சுவரில் காணப்படுகிறது.


கிழக்கு நோக்கி நடந்து வரும் போது, 'பஞ்சமுக தரிசனம்' என்ற அறிவிப்பைப் பார்த்துவிட்டு அருணாசலத்தை அண்ணாந்து பார்க்கிறோம். எட்டு மைல் நடந்து வந்த அலுப்பு ஒரு நொடியில் பறந்து போய் விடுகிறது. சிவபெருமானின் ஐந்து முகங்களையும் கண்டு விட்ட மகிழ்ச்சியில் உள்ளம் துள்ளுகிறது. பேரொளிச் சுடரில் கலந்து, பேரன்புக் கடலில் கரைந்து, பேரின்ப வானில் மிதக்கிறோம்.

—தொடரும்.

நடிகரும்...தோற்றமும்

சங்கு மார்க்

கைத்தறி லுங்கிகள்



நடிகரின தோறறம.
நீஙகளும் அடைய சஙகு மாாக லுஙகிகள.
பலவித கட்டஙகள. கணகவர் வணணஙகள
நேர்ததியான இழைபபு. நீடித்த உழைபபு.
சஙகு மாாக்கின தனிச்சிறப்பு.

சஙகு மாாககின இதர கைதநறி தயாரிப்புகள் :

கைக்குட்டைகள் ○ வேஷ்டிகள்
சோளிகள் ○ புடவைகள்.


முகம்மது அபூபக்கர் & கம்பெனி

95, தம்புச்செட்டி தெரு, சென்னை-1

கிளைகள் :
கல்கத்தா ○ மதுரை ○ பம்பாய் ○ கொல்லம்.

ஏற்றதோர் தோற்றம்...
அளிப்பதோ
சங்கு மார்க் லுங்கிகளே.

"எங்க மாமா" படததில் சிவாஜி கணேசன



அருணாசல மகிமை

11

திருவண்ணாமலை திருத் தலத்திற்கு ஞான நகரம் என்ற ஒரு சிறப்புப் பெயர் உண்டு. 'ஞான தபோதனரை வாவென்று அழைக்கும் அண்ணாமலை'யை நாடி வந்த அருளாளர்கள் அதன் நிழலில் மோன தவம் புரிந்து ஜீவன் முக்தர்களாகவும், ஆத்ம ஞானிகளாகவும், சித்த மகா புருஷர்களாகவும், கவி பாடி தெய்வ நெறி வளர்த்த சீலர்களாகவும், அறம் செழிக்க அருந்தொண்டு ஆற்றியவர்களாகவும் நீங்கா புகழ் பெற்று விளங்கி வருகிறார்கள். அப்புனிதர்களின் வ ழ்க்கைக் குறிப்புக்களையும், வரலாற்று நிகழ்ச்சிகளையு... படிக்கும் போது, அ... சோதி மலையான அருணா சலத்தின் மகிமையை நா... கண்கூடாகக் காண ... கிறது.

அருணாசலத்தை ... வந்து, வழி பட்டு, உ... வடையாத தேவர்களோ ... கிரகங்களோ, மகரிஷி... களோ இல்லை. அம்மலையின் எட்டு திக்குகளிலும் திக்கு... பாலகர்கள் இன்றும் வழி... பட்டுக் கொண்டிருக்கிறார்... கள். மலையை சுற்றி வரும் போது லிங்கங்களையும் நந்தி... கேசுவரரையும் அங்கங்கே காண முடிகிறது. மலையைச் சுற்றிலும் முந்நூற்று அறு... பதுக்கு மேலான தீர்த்தங்... கள் இருப்பதாக அருணாசல புராணம் கூறுகிறது. இப் போது பல தீர்த்தங்கள் கண்ணுக்கு மறைந்து அரு... மாக இருக்கின்றன.

அருணாசல புராணத்தில் முக்கியமான சில தீர்த்தங்... களின் பெயர்கள் கூறப்பட்... டுள்ளன. கிழக்கே இந்திர தீர்த்தம், தென் கிழக்கே அக்னி தீர்த்தம், தெற்கே யம தீர்த்தம், அகஸ்திய தீர்த்தம், தென் மேற்கே நிருதி தீர்த்தம், மேற்கே வருண தீர்த்தம், தென் மேற்கே வாயு தீர்த்தம், வடக்கே குபேர தீர்த்தம். வசிட்ட தீர்த்தம், வட கிழக்கே ஈசான்ய தீர்த்தம் அல்லது அசுவனி தீர்த்தம்: இப் புனித தீர்த்தங்களில் அந்தந்த தேவதைகளும் முனிபுங்கவர்களும் நீராடி, தங்கள் குறை நீங்கியவர்களாய் பேரின்ப நிலை அடைந்திருக்கிறார்கள்.

ஈசான்ய திக்கில் அசுவனி தேவர்களால் ஏற்படுத்தப் பட்ட தீர்த்தத்தில்

பரணீதரன்

திராடினால் 'நீசராயினும் நான்கு வர்ணங்களையும் விட மேம்பட்ட நிலையத்தி பரமனை அடைவார்கள்' என்று அருணாசல புராண தீர்த்த சருக்கத்தில் பலன் கூறப்பட்டுள்ளது.

அப்புனித தீர்த்தத்தின் தென் கரையில் அமைந்துள்ளதுதான் ஈசான்ய ஞான தேசிகர் மடாலயம். ஸ்ரீ ரோஞ்சி மாமுனிவரின் கட்டளையைத் தலைமேற்கொண்டு, அம்மடத்தைக் காணச் சென்றேன்.

போளூர் விட்டோபா சுவாமிகள் மடத்தில் நுழைந்த போது ஏற்பட்ட அனுபவம்தான் எனக்கு இங்கும் ஏற்பட்டது. கீழே இருந்த ஹால் வெறிச் சோடிக் கிடந்தது. இரண்டு மூன்று முறை குரல் கொடுத்த பிறகு ஒருவர் வந்தார். வந்த காரியத்தை நான் கூறியதும், அந்தப் பக்கம் வந்த ஒரு சிறுவனைக் கூப்பிட்டு 'சாமியிடம் சொல்லு' என்று கூறிவிட்டு அவர் போய் விட்டார். அச்சிறுவன் மாடிக்குச் சென்று இரண்டு நிமிடங்களுக்குள் திரும்பி வந்து, ''மேலே போங்க'' என்று கூறி, மாடிப்படி இருக்கும் இடத்தைக் காண்பித்தான்.

ஈசான்ய மடத்தின் தற்போதைய தலைவரான தவத்திரு இராமநாத சுவாமிகள் மெத்தென்ற கட்டிலில் அமைதியாக அமர்ந்திருந்தார். துளும்பாத குடம் போல் சலனமோ, சஞ்சலமோ சிறிதும் இன்றி, சாந்தம் தழுவிய புன்முறுவலோடு என்னை வரவேற்று இனிமையான தமிழில் சுவாமிகள் பேசியது என்னை மிகவும் கவர்ந்தது.

பல விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தபோது ஸ்ரீ ரமண பகவான் ஈசான்ய மடத்திற்கு ஒரு சமயம் அருகை தந்ததைப் பற்றி நாம் கேள்வியுற்ற ஒரு நிகழ்ச்சியைக் கூறினார் ஸ்ரீ இராமநாத சுவாமிகள்.

அப்போது மடத்தில் பகவத் கீதையைப் பற்றிய ஆராய்ச்சி வகுப்பு ஒன்று நடந்து கொண்டிருந்தது. ஒருநாள் பௌர்ணமியன்று கிரி வலம் வந்தபோது ஸ்ரீ ரமணர் ஈசான்ய மடத்திற்கு எழுந்தருளினார். இராமநாத சுவாமிகளுக்கு முன்பு தலைவராக இருந்த தவத்திரு நடேச சுவாமிகளின் வேண்டுகோளுக்கிணங்கி ஸ்ரீ ரமணர் இரண்டு, மூன்று கீதை சுலோகங்களுக்கு புதுமையான பொருள் கூறி கேட்போரை வியப்பில் ஆழ்த்தினாராம்.

பின்னர், ஈசான்ய மடம் தோன்றிய வரலாற்றைப் பற்றியும், தற்போது அது ஆற்றி வரும் பணிகளைப் பற்றியும் சுவாமிகளிடம் விசாரித்தேன். அவர் நிதானமாக எழுந்து தம் அறைக்குள் சென்று, இரண்டு புத்தகங்களைக் கொண்டு வந்து என்னிடம் தந்தார். ஒன்று ஈசான்ய ஞான தேசிகரின் வரலாற்றுக் குறிப்புக்கள் அடங்கிய சிறிய வெளியீடு. மற்றொன்று சேவாஸ்ரமத்தின் சிறப்பு மலர். ''இவற்றைப் படித்துப் பாருங்கள். எல்லாம் விளங்கும்'' என்று கூறி பேட்டியைச் சுருக்கமாக முடித்துக்கொண்டு விட்டார் சுவாமிகள். ''தாங்கள் ஏற்றுக் கொண்டுள்ள பணி சாலச் சிறந்தது, போற்றத் தக்கது. அதற்கு என்னாலான உதவியைச் செய்யக் காத்திருக்கிறேன். எது வேண்டுமானாலும் தயங்காமல் எழுதுங்கள்'' என்று அவர் விடை கொடுத்து அனுப்பிய போது எனக்கு ஒரு புதுத் தெம்பு ஏற்பட்டது. தூய உள்ளத்திலிருந்து கிடைக்கும் ஆதரவுக்கு அருளாசியின் சக்தியுண்டல்லவா?

ஈசான்ய மடத்தின் சார்பில், துறவியர் சிலரின் நிர்வாகத்தின் கீழ் 'சேவாஸ்ரமம்' உண்மையான சமூகப் பணி ஆற்றி வருகிறது. நன்கொடையாளர்களின் ஆதரவோடும் மெய்யடி

ஸ்ரீ ஈசான்ய மடத்தின் முன் தோற்றம்





ஸ்ரீ இராமநாத சுவாமிகள்

யார்களின் துணையோடும் அது புரிந்து வரும் அருட் தொண்டு போற்றத்தக்க தாகும். ஸ்ரீ இராமநாத சுவாமிகளைச் செயலாளராகக் கொண்டு இயங்கி வரும் சேவாஸ்ரமத்தில் அநாதைச் சிறுவர்களுக்காக ஓர் இல்லம் நடத்தி வருகிறார்கள். பிஞ்சு உள்ளங்களுக்கு அறிவோடு அறநெறியும் புகட்டி வரு கிறார்கள். உயர் துவக்கப் பள்ளி ஒன்றும், உணவு விடுதிகள், நூல் நிலையம், மருத்துவ நிலையம் முதலி யவையும் நிறுவி, வளரும் பிள்ளை களின் உடல் ஆரோக்கியத்தோடு அவர்களுடைய ஆன்மிக வாழ்க்கை யும் செம்மையுற அமைய வேண்டும் என்பதில் அக்கறை காட்டி வருகிறது சேவாஸ்ரமம். கல்வியோடு, நல் லொழுக்கத்தையும் தெய்வ நெறியை யும் புகட்டினால்தான், அவர்கள் பண் பும் பொறுப்பும் மிக்க குடி மக்களாக வாழ்ந்து பாரதத்திற்கு பெருமை யைத் தேடித் தர முடியும் என்ற உன்னத லட்சியத்தோடு அந்த ஆஸ் ரம நிர்வாகிகள் சேவை செய்து வருகிறார்கள்.

ஆதரவற்ற சிறுவர்களை அன்பால் அணைத்து, அவர்களுக்குத் தாயாகவும் தந்தையாகவும் ஆசானாகவும் இருந்து அரும்பணியாற்றி வரும் சுவாமிகளைத் தலைவராக கொண்ட ஈசான்ய மடம் தோன்றிய வரலாறு கேட்போரின் உள்ளத்தை தூய்மைப் படுத்தி நல் வாழ்வுக்கு வழி காட்டும் மணி விளக் காக அமைந்திருக்கிறது. .

சுமார் இருநூற்று நாற்பது வரு டங்களுக்கு முன், ராயவேலூரில், வேளாளர் குலத்திலே திருநீலகண்ட தேசிகருக்கு முருகன் அருளால் ஒரு குழந்தை பிறந்தது. அக குழந்தைக் குக் கந்தப்பன் என்று பெயர் சூட்டி னார் தந்தை.

வருங்காலத்தை முன்னரே அறிவிப் பவர் போல் கந்தப்பன், பிள்ளைப் பரு வத்திலேயே அரிய சக்திகள் பல பெற்றிருந்தார். ஆசிரியர் பாடங்களைக் கற்றுத் தருவதற்கு முன்பே அவர் அவற்றை அறிந்திருந்தார். எதைக் கேட்டாலும் தங்கு தடை யின்றி ஒப்புவித்து விடுவார். சில சமயங் களில் தவ யோகியைப் போல் மௌனமாகி விடுவார். இள வயதி லேயே உலகை மறந்து சமாதி நிலையில் ஆழ்ந்திருந்த இந்த அதிசய சிறுவனைக் கண்ட யாவரும் வியப்புற்றனர்.

இவ்வாறு அபூர்வமாக வளர்ந்த பிள் ளைக்கு ஏழாவது வயதில், சிவ தீட்சை செய்வித்து, 'தேசிகர்' என்ற பட்டத் தைச் சூட்டினார் தந்தை. கந்தப்பன் சிவ பூஜையில் எந்நேரமும் ஆழ்ந் திருப்பார்.

பதினாறு வயதில் மைந்தனுக்கு மணம் செய்விக்க வேண்டும் என்று கருதிய பெற்றோர் அவனுக்கு ஏற்ற கன்னிகையை தேடுவதில் முனைந்த னர். இதையறிந்த கந்தப்பன் மனம் வருந்தினார். சத்தியப் பொருளை நாடி தியானத்தில் ஆழ்ந்திருந்தவருக்கு இல்லறம் வேம்பாகக் கசந்தது. தமக்கு மண வாழ்க்கை வேண்டாம் என்று தாயிடம் மன்றாடினார்.

''தாயே, என்னை சம்சாரக் கடலில் தள்ளாதீர்கள். நான் பேரின்பக் கட லில் மிதக்கப் பிறந்தவன். சிவபெரு மானின் திருத் தலங்களைக் காண விழைகிறேன். எனக்கு உத்தரவு தாருங்கள்'' என்று கெஞ்சாத குறை யாகக் கேட்ட மகனின் விருப்பத் திற்கு அந்தத் தாய் தடையாயிருக்க வில்லை. ''உன் இஷ்டம் போல் செய்'' என்று கூறி, பொங்கி வந்த கண்ணீரை உள்ளடக்கிக் கொண்டு விட்டாள்.

கந்தப்ப தேசிகர் தீர்த்த யாத் திரைக்குப் புறப்பட்டார். சிவ ரூபத் தைத் தியானித்துக் கொண்டு, சிவ

நாமத்தை உச்சரித்துக் கொண்டு ஒவ்வொரு தலமாகத் தரிசித்துக் கொண்டு சிதம்பரம் வந்து சேர்ந்தார். பந்தங்களை அறுத்தெறிந்து பற்றற்ற நிலையில் ஆனந்தக் கூத்து ஆடும் தில்லைசனின திருவடிகளைச சேவித்தார். பந்தங்களற்ற துறவு வாழ்வுக்கு வழி பிறந்தது.

தில்லைநாதனின் தரிசனம் குரு நாதனின் தரிசனத்திற்கு காரணம் ஆயிற்று. சிதம்பரத்திற்கு தெற்கே யுள்ள ஆயி குளத்தின் வடகரையில், தட்சிணாமூர்த்தியாக ஞான தவம் மேற் கொண்டிருந்த சித்த புருஷரான ஸ்ரீ மௌன சுவாமிகளை நாடிச சென்றார். அம் மகானைக் கண்டதும், துறவு நிலையில் நாட்டம் சென்றது. அவர் திருவடிகளை 'சிக்' கெனப் பற்றிக் கொண்டு விட்டார்.

ஆனால், பக்குவம் போதவில்லை. வேளை பிறக்கவில்லை. குருவின் அருள் சுரக்கவில்லை. உபதேசம் கிடைக்கவில்லை. விரக்தி, வைராக்கியமாக பழுத்தது. கந்தப்ப தேசிகர், உடைகளைக் களைந்து கோவணாண்டியாக குருவின் சேவைக்குத் தம்மை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டார். வேளை வந்தது.

மார்கழி மாதம். கடும் பனியும் கன மழையும் பெய்தது. அதைச் சற்றும் பொருட் படுத்தாமல் சிலையாக குருவின் முன் அருள் வேண்டி அமர்ந்திருந்தார் கந்தப்பர். சீடரின் உறுதி கண்டு உள்ளம் நெகிழ்ந்த மௌன குரு, தம் மீது போர்த்தப்பட்டிருந்த கம்பளத்தை எடுத்து அவருக்குப் போர்த்தி விட்டார். அத்துடன் உண்மைத் தத்துவத்தையும் உணர்த்தி விட்டார். அருட் பார்வையாலேயே சீடரை ஆட்கொண்டு, தியான நிலையில் அவரை அமரச் செய்து விட்டார்.

ஞான சூரியன் உதித்து விட்டான். அஞ்ஞான இருள் அகன்றது. மருள் நீங்கியது. தூக்கம் கலைந்தது. துக்கம் தீர்ந்தது.

சஞ்சலமுற்றிருந்த மனம் சலனமற்று தெளிந்தது. அங்குமிங்கும் அலைந்த புலன்கள் அசையாமல் நின்றன. 'நான்' அகன்று, ஆத்ம தரிசனம் ஆயிற்று. சித்தர்களுக்குரிய யோக தண்டும், யோகப் பட்டையும் பெற்றுக் கொண்டு ஜடாமகுடம் தரித்து மௌன சுவாமிகளிடம்விடைபெற்றுக் கொண்டு ஞான யாத்திரைக்குப் புறப்பட்டு விட்டார் ஸ்ரீ கந்தப்ப தேசிகர்.

சிதம்பரத்திலிருந்து திருவாரூருக்கு வந்து, அங்கிருந்த ஸ்ரீ தட்சிணாமூர்த்தி சுவாமிகளிடம் சிறிது காலம் தங்கி அருளுபதேசம் பெற்றுக் கொண்டு, சிக்கில் தலத்திற்கு அருகிலுள்ள 'பொருள் வைத்த சேரிக்கு' வந்தார். அங்கிருந்த ஸ்ரீ உகந்தலிங்க ஞான தேசிகரோடு ஆன்மிக விஷயங்கள் பற்றி உரையாடிவிட்டு, மனத்தை ஒரு நிலைப் படுத்தி, மௌன நிட்டை கூடி தவமியற்ற ஒரு தக்க இடம் தேடி வட திசை நோக்கி நடந்தார். அந்த ஞான தபோதனரை வாவென்று அழைத்தது அண்ணாமலையெனும் கலங்கரை விளக்கம்.

திருவண்ணாமலையைஅடுத்த வேட்டவலத்திற்கு அருகேயுள்ள பாக்கத்து மலையிலுள்ள ஒரு குகையில் பல ஆண்டுகள் தவத்தில் ஆழ்ந்திருந்தார் கந்தப்ப தேசிகர். அவ்வூர் வாசியான முத்துசாமி உடையார், சுவாமிகளுக்கு பசும்பால் தந்து உபசரித்து வந்தார்.

ஒரு நாள் உடையார், வீடு கட்டுவதற்காக நிலத்தைத் தோண்டவே, அவருக்கு புதையல் கிடைத்தது. பெரும் பணக்காரரான உடையாரைக் கண்டு ஊர் மக்கள் பொறாமை கொண்டனர். பொறாமையே பேராசையாக மாறியது. கந்தப்பரின் அருளால்தான் உடையாருக்கு பெருந்தனம் கிடைத்தது என்று உறுதியாக நம்பி, சுவாமிகளிடம் சென்று தங்களுக்கும் பொருள் வாரி வழங்கும்படி அடிக்கடி தொந்தரவு செய்தனர்.

ஸ்ரீ ஈசான்ய ஞான தேசிகர்



ஜோதியில் கலந்ததால், கந்தப்ப தேசிகர் அவ்விடத்தை விட்டு நகர்ந்தார்.

பின்னர், ஸ்ரீ தேசிகர் திருவண்ணாமலைக்கு தென்மேற்கிலுள்ள கோரக்கநாதர் குளக் கரையில் நிட்டை கூடி இருந்தார். அங்கு மாடு மேய்க்கும் அன்பர்கள் பால் முதலிய பொருட்களைக் கொண்டு வந்து தேசிகருக்கு அன்புடன் அளிக்க, அவரும் உவகையோடு ஏற்றுக் கொண்டார்.

அவ்வூரிலிருந்த அருணாசல செட்டியார் என்பவர் புத்திர பாக்கியம் இல்லாமல் வருந்திக் கொண்டிருந்தார். தவக்கோலத்தில் இருந்த தேசிகரை வணங்கி, அவருக்கு தொண்டு புரிந்தால் தனது குறை நீங்கும் என்ற நம்பிக்கை அவருக்கு ஏற்படவே, மகானுக்கு கைங்கர்யம் செய்து வந்தார். அவரது நம்பிக்கை வீண் போகவில்லை. அருணாசலம் செட்டியார் விரைவிலேயே ஓர் ஆண் குழந்தைக்குத் தந்தையானார்.

பாக்கத்து மலைக் குகையை விட்டு ஸ்ரீதேசிகர் வந்ததிலிருந்து, முத்துசாமி உடையார் அவரை தரிசிக்காமல் மிகவும் வாடினார். அவர் கனவில் ஒரு நாள் அண்ணாமலையார் தேசிகர் போல் காட்சியளித்து, ''அன்பனே, நீ வருந்தாதே. நாம் அருணாசலத்தின் ஈசான்ய திசையில் இருக்கிறோம். அங்கு வந்து தரிசித்துக் கொள்'' என்று கூறி மறைந்தார். பின்னர், அண்ணாமலையார் ஸ்ரீதேசிகரின் கனவில் தோன்றி, ''ஞானதேசிகா, உன்னைக் காண ஈசான்ய திசைக்கு ஒரு பக்தனை வரச்

ஸ்ரீ நடேச சுவாமிகள்



சொல்லியிருக்கிறேன். நீ அங்கு போய் காத்திரு'' என்று கூறி மறைந்தார்.

அருட்சுடரின் ஆணையை ஏற்று, ஈசான்ய தீர்த்தத்தின் தென்கரையிலுள்ள ஒரு பெரிய ஆல மரத்தின் கீழே சிவயோக சமாதியில் அமர்ந்தார் ஞானதேசிகர். முத்துசாமி உடையாரும் அங்கு வந்து அவ்யோகியை தரிசித்து பெரும் பேறு எய்தினர்.

ஸ்ரீ ஞான தேசிகர் தம்மை மறந்து சமாதியில் ஆழ்ந்திருக்கும் போது அவருக்கு இடையூறு நேரா வண்ணம் புலியொன்று வந்து காவல் காத்துப் படுத்திருக்கும். அண்ணாமலையாரே புலி வடிவம் தங்கி தமக்கு காவலிருக்கிறார் என்று நம்பிய ஸ்ரீதேசிகர், 'அண்ணாமலையே, என்னரசே' என்று கூறி அப்புலியை அன்புடன் தடவிக் கொடுப்பது வழக்கம். 'புலியுடன் விளையாடும் புனிதர்' என்ற பெயரையும் பெற்றார் தேசிகர்.

தமது யோக சக்தியால் கொடிய வெம்புலி வாயையும் கட்டிய மகான் தம் பக்தர்களின் உடல் நோயையும் மன நோயையும் தீர்த்து வைத்ததில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. கூடலூரைச் சேர்ந்த புதுப்பாளையம் என்னும் கிராமத்தில் வசித்த நாயக்கர் ஒருவர் சூலை நோயால் அவதியுற்றார். அவர் இப்பெரியாரை அணுகி, அவரை [illegible] முறை வலம் வந்து வணங்கி, நோய் நீங்கப் பெற்றார்.

அந்தக் காலத்தில் அந்தப் பகுதிக்கு கலெக்டராக இருந்த [illegible] என்னும் வெள்ளைக்கார துரை, [illegible] தேசிகரின் மகிமையைக் கேள்வியுற்று, அவரை வந்து தரிசித்து, மகானின் அருளால் துரையின் [illegible] நோய் இருக்குமிடம் தெரியாமல் மறைந்தது. அதனால் மகிழ்ச்சியுற்ற ஐடன் துரை, தேசிகருக்கு நிலங்களை தானமாக அளிக்க விரும்பி அவரிடம் உத்தரவு கேட்டார். ஆனால் தேசிகரோ ''பரதேசிக்கு எதற்கு சொத்துக்கள்? அதோ, இரண்டு குழந்தைகளுடன் அங்கு ஒரு சம்சாரி இருக்கிறார். அவருக்கு எத்தனை பூமிதானம் செய்தாலும் தகும்'' என்று கூறி அருணசலேச்வரரிடம் போகச் சொன்னார்.

மற்றொரு சமயம் இந்தக் கலெக்டர் அலுவல் காரணமாக பெண்ணையாற்றின் தெற்குக் கரையில் முகாமிருக்கை


நேர்ட்டது. அச்சமயம் திருவண்ணு மலையில் ரதோற்சவத்தை நடத்தி வைக்கும் பொருட்டு அவர் புறப் பட்டார். ஆனல், பெரும் மழை யின் காரணமாக பெண்ணையாற்றில் வெள்ளம் கரை புரண்டோடியது. அதைக் கண்டு முதலில் திகைத்த துரை, குதிரையின் மீதேறி, மனத் தில் ஈசான்ய ஞான தேசிகரைத் தியானித்துக் கொண்டு அப்படியே ஆற்றில் இறங்கி விட்டார்.

அந்தக் கணம் ஓர் அதிசயம் நிகழ்ந் தது. திருவண்ணுமலையில் தமது பர்ணசாலையில் அமர்ந்திருந்த ஞான தேசிகர், திடீரென்று தமது கைகளை தென்புறமாக நீட்டி, இடப் பக்கம் தாழ்த்தினர். அருகிலிருந்து இதைக் கவனித்துக் கொண்டிருந்த ஒரு பக்தர் "தாங்கள் இவ்வாறு செய்யக் கார ணம் என்ன?" என்று கேட்கவே அதற்கு தேசிகர், "எவன் ஆற்றில் இறங்கினுலும் நாம் காப்பாற்ற வேண்டுமாம்" என்று கூறி மௌன மாயிருந்து விட்டார்.

ஐடன் துரை வெள்ளத்தில் சிக்கா மல் நலமாக வந்து சேர்ந்து, ஸ்ரீதேசி கரை வணங்கி "தங்களுடைய கிரு பையால் நான் பிழைத்தேன்" என்று கூறி ஆனந்தக் கண்ணீர் பெருக்கினர்.

இந்த மகானை தரிசிக்க பல பகுதி களிலிருந்தும் அன்பர்கள் வந்து கூடி னர். ஒரு சமயம் ஸ்ரீகோவிலூர் முத்துராமலிங்க ஞான தேசிகர் திருவண்ணுமலைக்கு வந்தார். அப் போது ஈசான்ய தேசிகருக்கு தொண்டு புரிந்து கொண்டிருந்த முத்துசாமி உடையார், கோவிலூர் தேசிகரின் விரலிலிருந்த மோதிரத் தைப் பார்த்து "ஆகா, எத்தனை பிரகாசம்?" என்று வியந்தார், உடனே முத்துராமலிங்க தேசிகர், "அப்படியானல் இந்தப் பிரகாசம் உனக்கே இருக்கட்டும்" என்று மோதிரத்தைக் கழற்றி உடையா ரிடம் கொடுத்து விட்டார். ஆசை களைப் பூண்டோடு ஒழித்து விட்ட அத் துறவி சிறிது காலம் ஈசான்ய தேசிகருடன் தங்கி விட்டுச் சென்ருர்.

திருவண்ணுமலையை அடுத்த மண்ட குளத்தூர் வாசியான சபாபதி சுவாமி கள் காஞ்சி காமாட்சியின் பூரண அரு ளோடு ஈசான்ய தேசிகரை அணுகி நல்லுபதேசம் பெற்று, மேட்டுப் பாளையத்தில் சீடர்களுக்கு வேதாந்த பாடங்கள் அருளி, தேசிகரின் மகிமைக் குச் சான்ருக விளங்கினர்.



ஸ்ரீ ஞான தேசிகரின் சமாதி ஆலயம்

தேசிகரின் மகிமையைப்பற்றிக் கேள்வி யுற்ற மக்கள், பெருங் கூட்டமாக வந்து அன்னாரை தரிசிக்கத் தொடங் கினர்கள். அவர்களுக்கு நல் வழி யைக் காட்டுவதற்காக 'ஞானக் கட்டளை' என்ற நூலை இயற்றினர். அத்துடன் தாம் முன்பு இயற்றிய அண்ணுமலையார் தோத்திர பாமாலை, வெண்பா, அந்தாதி, கண்ணி முதலிய நூல்களையும் ஸ்ரீதேசிகர் சீடர்களுக்கு உபதேசித்தருளினர்.

அருள் ஞான வடிவான இப்பெருந் தகையாளர், தாம் பரிபூரணமாகப் போகும் காலத்தை முன்பே அறிந்து அந்நாளை ஓர் ஓலையில் குறித்து, தமது இருக்கையின் கீழ் வைத்து விட்டார். பின்னர் அரைக் கண் மூடி சமாதியில் ஆழ்ந்து, சச்சிதானந்த பெருநிலை எய்தி, அண்ணுமலை அருள்சுடரோடு இரண்டறக் கலந்து விட்டார்.

ஸ்ரீஈசான்ய ஞானதேசிகர் அடிக்கடி தமது ஆச்ரமத்திற்கு அருகிலுள்ள ஒரு வில்வ மரத்தடிக்குச் சென்று, அங்கிருந்து அண்ணுமலையாரை தரி சித்து வருவதை கவனித்தவர்கள் அவர் திருமேனியை அவ்விடத்தி லேயே சமாதி வைத்தனர்.

நூற்று நாற்பது வருடங்களுக்கு முன் மறைந்த அந்த ஞான சித்த ரின் சமாதி ஆலயத்தை தரிசித்து விட்டு நான் ஈசான்ய மடத்திலிருந்து புறப்பட்டேன்.

—தொடரும்.

தமிழுக்கு எதிர்ப்பா?


மனோன்மணீயப் பாடல்- கடவுள் வாழ்த்தா? என்ற கேள்விக்கு மூவர் எதிர்வாதங்களைத் தந்திருக்கிறார்கள். 'TAMIL NAD' என்பதற்குப் பதில் 'TAMIL NADU' என்று ஆகுமானால் பிரிவினை வாதம்வந்து விடுமோ என்று பயந்த திரு இராஜாஜியும், 'அன்னைத் தமிழே வணக்கம்!' என்பது எப்படி இறைவணக்கப் பாடலாகும் என்று திரு டி. எம். எஸ். அவர்களைக் கேட்டிருக்கிறார். 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்ற ஆத்திச்சூடியைப் படித்த நாம், அன்னைத் தமிழே என்பதும் இறை வணக்கமே என்று கொள்வதில் தவறென்ன?

கடவுளும் தமிழும் நிகர் என்பதையே 'எல்லையறு பரம்பொருள் முன் இருந்தபடி இருப்பது போல்'— என்ற மனோன்மணீய வரி பேசுகின்றது. தமிழைத் தொழுதாலும் கடவுளைத் தொழுதாலும் ஒன்று என்பதே பொருள்— கடவுளர்களில் குட்டி தேவதை (தமிழ்) என்று பிரித்து 'ஜூனியர்-சப் ஜூனியர்' எனக் கூறி திரு கி. வா. ஜ. அவர்கள் புதிய வாதம் புரிகிறார். தமிழுக்குப் பின்னால் கடவுளே ஓடியதாகவும் ஒரு செய்தி தமிழ் இலக்கியத்தில் உண்டு. ''பழ மறைகள் முறையிட பசுந்தமிழ் பின் சென்ற பச்சைப் பசுங் கொண்டலே'' என்று கூறுவார்கள். ஆக, கடவுளே தமிழைத் தொழுகிறவர் என்று தெரிகிறது. அந்தத் தமிழைத் தொழுதல் இறை வணக்கமில்லையா?

'தமிழர் இல்லாத கூட்டங்களில் இந்தப் பாடல் பாடுவது பொருத்தமா?' என்று கேட்கிறார். தமிழர் அல்லாதோரும் தமிழ் நாட்டிலே குடியிருப்பதால் இதைத் தமிழ்நாடு என்று அழைக்க வேண்டாம்—'கதம்ப நாடு' என்று அழைப்போம்—என்று தமிழறிஞரான திரு. கி. வா. ஜ. அவர்கள் சொல்லாமல் இருந்தாரே?

கவி தாகூரின் 'ஜனகணமன' பாடலில் கேரளமும், ஹரியானாவும், மைசூரும் இல்லாமல்போனதால்—தாகூரை அந்த மாநிலத்தவர்கள் திட்டிக் கொண்டா யிருக்கின்றனர்? அந்தப் பாடலில் வரும் சிந்து மாநிலத்தின் பகுதி பாகிஸ்தானத்தில் இருக்கிறதே, அந்த வரிகளைப் பாடாமலா இருக்கிறோம்— திரு இராமமூர்த்தி தேசீய கீதத்தை ஏற்றுக் கொண்டிருக்கும்போது—நமது இறைவணக்கப் பாடலில் மட்டும் இவ்வளவு குறை காண்கிறாரே!

திருமதி வித்யா சங்கர் அமெரிக்கத் தூதரகத்தில் பாடிய உபநிஷத் பாடலைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்கள்.




புரியாத அந்தப் பாட்டைக் கேட்ட அமெரிக்கர்கள் வடித்த கண்ணீர் எதைப் புரிய வைக்கிறது என்பது தான் விளங்கவில்லை. மனோன்மணீயப் பாடல் இறைவணக்கப் பாடல் ஆக வேண்டும் என்ற முடிவை இருபது ஆண்டுகளுக்கு முன்பிருந்தே கரந்தை தமிழ்ச் சங்கம் போன்ற பல அமைப்புகள் ஏற்று செயல்பட்டு வருகின்றன.

தமிழக முயல்வர் கலைஞர், அந்த வழியே தொடர்ந்து செயல்பட்டுள்ளார் — ஆத்திகர்கள் — நாத்திகர்கள்— தமிழ்ப் புலவர்கள் அனைவருக்கும் ஏற்ற இப்பாடலை ஏற்போம்.

அன்பன்,

—இரா. சனார்த்தனம், எம். ஏ.

தலைவர்-உலகத்தமிழ் இளைஞர் பேரவை.



அருணாசலமும் பவழக்குன்றும்

அருணாசல மகிமை

12


அருணாசலத்திற்குக் கிழக்குப் புறத்தில் பவழக்குன்று இருக்கிறது. அந்தக் காலத்தில் காடாக இருந்த அப்பகுதியில்தான் கௌதம மகரிஷி பர்ணசாலை அமைத்துக் கொண்டு, ஸ்ரீ அருணாசலேச்வரரைக் குறித்து கடும் தவம் இருந்தார். அன்னை பராசக்தி, ஐயனின் இடப் பாகத்தைப் பெறும் பொருட்டு அருந்தவம் இயற்றிய தபோவனமும் அங்குதான் இருந்தது. அதற்குப் பிறகு அனேக யோகியரும், சித்தர்களும் அக்குன்றில் ஞானத்தவம் புரிந்திருக்கின்றனர்.

அக் குன்றின் அடிவாரத்தில் இருக்கும் துர்க்கையம்மன் கோயில் புராணச் சிறப்புப் பெற்றது. பொல்லாத மகிடாசுரனை வதம் செய்து, உலகின் அஞ்ஞான இருள் நீக்கிய அன்னையின் அம்சமான துர்க்கை அங்கு எருமைத் தலைப் பீடத்தின்மீது நின்ற கோலத்தில் கம்பீரமாகக் காட்சி தருகிறாள்.

உலக நாயகனின் உடலில் ஒரு பாகம் பெறுவதற்காக உலக நாயகி மேற்கொண்ட தவத்திற்கு இடையூறாக வந்தான் மகிடாசுரன். உமையவள், வல்லமை பொருந்திய அந்த அசுரனை முறியடிக்க துர்க்கா தேவியை ஏவினாள். ஜகன்மாதாவின் கணங்கள், பைரவர், காளி, துந்துமி முதலியவர்கள் புடைசூழ, ஏழு மாதர்களும் தங்கள் தங்கள் வாகனங்களில் ஏறிக்கொண்டு போருக்குப் புறப்பட்டாள்.

அண்ட சராசரங்களையும் கிடுகிடுக்க வைத்த அம்மகிடாசுரன், போரில் தன் அசுர கணங்கள் அழிந்து விட்ட கோபத்தில், கண்களில் தீப்பொறி பறக்க, ஆயிரம் யானைகள் பூட்டிய ரதத்தில் ஏறி, பயங்கரமாக கர்ஜித்துக் கொண்டு வந்தான். அவனுக்குத் துணையாக பதினொரு கோடி யானை பலத்தையுடைய காந்தன், நீலன், முதுகரன், குருதி, அண்டன்,

பரணீதரன்



பவழகிரீச்வரர் ஆலயம்

நீசகன், சண்டன், முண்டன், மதுகயிடவன், தீக்கண்ணன், புகைக கண்ணன், மாலி முதலிய பன்னிருவரும் தங்கள் தஙகள் ரதங்களில் ஏறிக்கொண்டு வந்தார்கள்.

போர்க்களத்தில்மகிடாசுரனுககு எதிரில் போய் நின்ற துர்க்கை, தன் கையிலிருந்த சஙகை எடுத்து மகாமேரு மலையே அசையும்படி ஊதினாள். அவ்வொலி கேட்டுஅசுராகள் மயங்கி விழுந்தனர். இருபுறத்திலிருந்தும் பாணங்கள் மழையாகப் பொழிந்தன. துர்க்கை விட்ட பாணங்களை, மறு பாணங்கள் விட்டு மகிடாசுரன முறியடித்தான. பின்னர், துர்க்கை தொடுத்த அர்தத சந்திர பாணங்கள் அசுரனின் தலையில் கொம்பு போல் செருகிக் கொண்டன. உடனே மகிடாசுரன் அமபிகையின வில்லை முறித்தான. கோபம் கொண்ட துர்க்கை வில்லால் அவன் முகத்தில் அடித்தாள். அவன அமபுகளை ஏவினான். அக்னிச் சுடா போன்ற சக்ராயுதத்தை விட்டு, அவன் தலையைக் கொய்தாள துர்க்கை.

ஆனால், அசுரனின் உயிர் போகவில்லை. அவன யானை முகத்தோடு வந்தான். அம்பிகையின் வாகனமான சிமமராஜன் சீறிப் பாய்ந்து யானையின் மண்டையைக் கிழிக்க, சினங் கொணட அசுரன் தன் தண்டாயுதத்தை எறிந்தான். துர்க்கை அவன மீது வேலாயுதத்தை வீசினாள்.

பின்னர் அந்த அசுரன் குதிரை முகத்தோடு வநதான. அது அழிந்த பின் புலியின் உருவெடுத்து வந்தான். இவ்வாறு தன் மாய சக்தியால் மாறி மாறிப் பல உருவஙகள் எடுதது வந்து துர்க்கையைத் துன்பப்படுத்தினான்.


செய்வதறியாது திகைத்த துர்க்கையமமன் இருகரம் கூப்பி, பார்வதி தேவியின் மலரடிகளை மனத்தில் தியானித்தாள். அடுத்த கணம் விண்ணில் அசரீரி கேட்டது:

''மகிடாசுரன் எல்லா மாய வடிவங்களும் எடுத்து முடித்து கடைசியில் எருமை உருவம் தாங்கி வரும் போது, நீ அவனது தலையை அறுத்துக் கீழே தள்ளி, உனது தூய பாதத்தால் மிதித்தால, தீமை பொருந்திய பாவம் தொலைநது போகும்.''

இதைக கேட்டதும் துர்க்காதேவி உற்சாகம் அடைந்தாள். மகிடாசுரனை சூலத்தினால் குத்திக் கொன்றாள். அவன பழைய எருமை முகத்தைப பெற்று, பலவிதமான ஆயுதங்களால துர்க்கையைத் தாக்கினான். அவற்றையெல்லாம விலக்கி, வாளாயுதத்தால அசுரனின தலையை வெட்டிச சாயத்துக் காலால மிதித்தாள் தேவி.

அம்பாளின் பாதத்தை நினைத்தாலே சகல பாவங்களும் தொலைந்து விடும். அப்படியிருக்க அவளுடைய பொற பாதஙகள பட்டால் மாயைத் திரை விலகி, அஞ்ஞான இருள் நீங்கி, மெய்ஞ்ஞான ஒளி பிரகாசிபபது ஓர் அதிசயமா? இந்தத் தத்துவத்தை விளக்குவது போல அமைந்திருக்கிறது அக் கோயிலிலுள்ள துர்க்கையம்மனின திருக்கோலம்

ஸ்ரீ துர்க்கையம்மன் ஆலயம்





ஸ்ரீ அம்பலவாண சுவாமிகள்

அக் கோயிலில் ஒரு சுனையும், பாப நாசனேச்வரர் என்ற ஒரு லிங்கமும் இருக்கின்றன. அவை தோன்றிய வரலாறும் சுவை மிகுந்தது.

ஒரு சமயம் அகத்தியர் முதலான ஐம்பது மாமுனிவர்கள், வரமுனிவரின் ஆச்ரமத்திற்கு எழுந்தருளினார்கள். ஆனால், அம் முனிவர் கர்வம் கொண்டு தம்மைத் தேடி வந்த பெரியோர்களை முறைப்படி உபசரிக்கத் தவறி விட்டார். அதனால் கோபங் கொண்ட அம்முனிவர்கள், ''எங்களை அவமரியாதை செய்ததற்காக நீ எருமைக் கடாவாகப் பிறக்க வேண்டும்'' என்று சபித்தனர். பின்னர், வரமுனி மனம் வருந்தி, ''என் பிழையைப் பொறுத்து, நீங்கள் அளித்த சாபத்திற்குப் பரிகாரம் கூற வேண்டும்'' என்று பணிவுடன் கேட்டார். அதற்கு அம்முனிபுங்கவர்கள் ''அருணாசலத்தில் சுவாமியின் இடப் பாகத்தைப் பெறுவதற்காகத் தவம் செய்து கொண்டிருக்கிற பராசக்தி உன் சாபத்தை நீக்கி உனக்கு நற்கதி அளிப்பாள்'' என்று கூறிச் சென்று விட்டனர்.

''...விட்டோபா இப்படித்தான் உட்காருவார்...''



வரமுனி, மகிடாசுரனாக மாறி, ஆகாரத்திற்காக காடுகளில் அலைந்து கொண்டிருந்த போது, மன்னத ரிஷி என்பவரைக் கண்டான். ஒரே பாய்ச்சலில் அவர் மீது பாய்ந்து, அவரை விழுங்கி விட்டான்.

அந்த ரிஷியின் கையிலிருந்த லிங்கம் மகிடாசுரனின் தொண்டையில் சிக்கிக் கொண்டுவிட்டது. படிக லிங்கம் அவன் கண்டத்தில் இருந்ததால், அவன் மேன்மையுற்றான்.

மகிடாசுரனைக் கொன்று, கழுத்தைத் துண்டித்த துர்க்காதேவி படிக லிங்கத்தைக் கண்டெடுத்து, அன்னை பார்வதியிடம் கொண்டு வந்து கொடுத்தாள். நாயகியின் மீது இருந்த அன்பினாலோ என்னவோ, சுவாமி அம்பாளின் கையிலேயே ஒட்டிக் கொண்டு விட்டார். எத்தனை உதறியும் லிங்கம் கீழே விழவேயில்லை. ஆச்சரியம் அடைந்த பார்வதிதேவி கௌதம ரிஷியிடம், ''இதற்குக் காரணம் என்ன?'' என்று கேட்டாள். அதற்கு கௌதமர், மகிடாசுரனின் கண்டத்தில் லிங்கம் இருந்ததால், அவனை சிவ பக்தனாகக் கருத வேண்டும் என்றும், அவனைக் கொன்ற பாவம் தொலைய வேண்டுமானால், ஒன்பது நதிகளின் தீர்த்தங்களில் நீராட வேண்டும் என்றும் கூறினார். உடனே அன்னை ஆணையிட துர்க்காதேவி வாளால் பாறையைப் பிளந்தாள்.... அங்கு ஒரு சுனை பொங்கி வந்தது. குற்றம் நீங்க வேண்டும் என்றுபிரார்த்தித்து அந்நீரில் அம்பாள் ஒரு மாதம் நீராடினாள். அதன்பலனாகக் கையைப் பற்றிக் கொண்டு விடாமல் இருந்த லிங்கமும் கையை விட்டு நீங்கிற்று. அந்த லிங்கத்திற்கு 'பாப நாசனம்' என்று பெயரிட்டு அங்கு பிரதிஷ்டை

செய்து வழிபட்டாள். அந்தச் சுனைக்குக் 'கட்க தீர்த்தம்' என்று பெயரிட்டாள். அச்சுனையில் நீராடி, அந்த லிங்கத்தை வழிபடுபவர்கள் சகல பாபங்களினின்றும் விடுபடுவதோடு எல்லா சித்திகளும் பெற்று விளங்குவர் என்றும் ஆசீர்வ[illegible]

துர்க்கா பரமேஸ்வரியின் கோயிலில் காசி விச்வேச்வரர், அன்னபூரணி சந்நிதிகளும் இருக்கின்றன.

அங்கு துர்க்கையம்மனின் பழைய சிலை ஒன்றும், ஒரு ஸ்ரீ சக்கரமும், காணப்படுகின்றன. இந்திராணி, சாமுண்டி, பிராம்மி, மகேச்வரி, கௌமாரி, வைஷ்ணவி, வராஹி முதலிய ஏழு மாதர்களின் சிற்ப உருவங்களும் சுவரில் பதிக்கப்பட்டிருக்கின்றன.

துர்க்கையம்மனைத் தரிசித்துவிட்டு பவழக்குன்று மடத்திற்கு வந்தோம். உள்ளடங்கி, படாடோபம் ஏதுமின்றி பார்க்க மிகச் சாதாரணமாக இருந்தது அது. கதவுகள் தாளிடப்பட்டு, மனித நடமாட்டமே அற்றதாகக் காட்சியளித்தது. 'தட்டினால் திறக்கப்படும்' என்ற ஒரே நம்பிக்கையில் கதவைத் தட்டினோம். அன்பும் பண்பும் நிறைந்த ஒரு சுவாமிகள் எங்களை இன்முகத்துடன் வரவேற்றார். அவர் பவழக்குன்று மடத்தின் ஆறாவது தலைவரான அம்பலவாண சுவாமிகள் என்பதை அறிந்து கொண்டோம். அம்மடத்தைப் பற்றிய வரலாறு அடங்கிய நூல் எதுவும் பிரசுரிக்கப்படவில்லை என்று கூறினார் அவர். அம்மடம் தோன்றக் காரணமாயிருந்த ஸ்ரீ அழகானந்தரைப் பற்றி தாம் கேட்டறிந்ததைக் கூறினார்.

வேட்டைவலத்திற்கு அருகில் கண்டாச்சிபுரம் என்ற சிற்றூர் ஒன்று இருக்கிறது. அவ்வூரில் செங்குந்த முதலியார் மரபில் தோன்றியவர் அழகானந்தர். அவர் நல்லொழுக்கமும், தெய்வ பக்தியும் கொண்ட ஆசார சீலர். இயல்பாகவே பற்றற்றவராகவும் பரம சாதுவாகவும் இருந்தார். ஒருநாள் அவர் தெருவில் தறி நெய்து கொண்டிருந்தபோது, தீண்டப்படாதப் பெண்மணி ஒருத்தி கொண்டு வந்து கொடுத்த ஆகாரத்தை வாங்கிச் சாப்பிட்டு விட்டார். அதைக் கண்ட உறவுக்



ஸ்ரீ அழகானந்த ஞானதேசிகர் சமாதி நிலையம்

காரர்கள் தாங்க முடியாத ஆத்திரம் அடைந்தனர். ஒருவர் அழகானந்தர் கன்னத்தில் ஓங்கி அறைந்தே விட்டார். அந்த ஆகாரத்தைத் துப்பி விடும்படி அனைவரும் கட்டாயப்படுத்தினர். அவரும் துப்பினார். என்ன அதிசயம்? அவர் வாயிலிருந்து நறுமணம் கமழும் மலர்கள் கீழே விழுந்தன! அவரை அடித்தவர் இதைக் கண்டு மிக்க வேதனைப் பட்டார். சுற்றியிருந்தவர்கள் அவர் காலில் விழுந்து கும்பிட்டனர். அவர் ஒரு மகான் என்பதை அறிந்து, தங்கள் தவற்றை மன்னித்தருளும்படி கேட்டனர்.

இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு அழகானந்தர் அந்த ஊரில் வெகு நாட்கள் இருக்கவில்லை. அடுத்த ஊரில், யோக சித்திகள் நிரம்பப் பெற்ற ஓர் அம்மையார் இருப்பதை அறிந்து, அவரைக் குருவாக அடைந்து, உபதேசம் பெற்றுக் கொண்டு திருவண்ணாமலைக்கு வந்து சேர்ந்தார். நான்கு வீடுகளில் உணவை யாசித்து உண்மையான துறவியாகப் பவழக் குன்றின் அடிவாரத்தில் வாழ்ந்து வந்தார். அழகானந்தரிடம் அபூர்வ சக்திகள்

இருப்பதை அறிந்த சிலர், அவரிடம் வந்து, உடல் நோயும், மன நோயும் நீங்கி, சாந்தி பெற்றுச் செல்வது வழக்கம்.

ஒரு சமயம் போளூரை அடுத்த முருகப்பாடி என்ற ஊரிலிருந்து ஒரு ராயர் அழகானந்தரைத் தரிசிக்க வந்தார். தீராத வயிற்று வலியால அவதிப்பட்ட அந்த ராயர், சுவாமிகளின் திருப்பாதங்களைப் பற்றிக் கொண்டு கண்ணீர் சொறிந்தார். ''உங்களைத்தான் தெய்வமாக நம்பியிருக்கிறேன். எப்படியாவது என் நோயைத் தீருங்கள்'' என்று கதறியழுதார்.

அழகானந்தர் அருகில் கிடந்த ஒரு எச்சில் சுருட்டை எடுத்துப் பற்ற வைத்து, அப் புகையை ராயரின் வாயில் ஊதினார். அவ்வளவுதான். மந்திரம் போட்டது போல் ராயரின் நெடு நாளைய வயிற்று வலி மாயமாக மறைந்து விட்டது. அவரது மகிழ்ச்சிக்குக் கேட்பானேன்?

ராயர் பெரும் செலவந்தர். பணத்தைக் கொண்டு வந்து அழகானந்தரின் காலடியில் கொட்டினார். சுவாமிகள் அதைத தொடவில்லை. மாறாக, பவழக் குன்றின் மீதுள்ள பவழகிரீச்வரர் ஆலயத்திற்குத் திருப்பணிகள் செய்யும்படி ராயரிடம் கேட்டுக் கொண்டார். அப்படியே செய்து வைத்தார் ராயர். பின்னர் வருடா வருடம் கோயில் ஆராதனைக்காக நெல் மூட்டைகளும் அனுப்பி வைத்தார்.

ஸ்ரீ ரமண பகவான் தவமிருந்த குகை



ஆனால், நாளடைவில் ராயர் குடும்பத்தினர் செய்து வந்த உதவி குறைய ஆரம்பித்தது, கடைசியில் அது நின்றே போய் விட்டது. தற்போது, மடம் தான் கோயிலை நிர்வகித்து வருகிறது. இடிந்து போயிருக்கும் இக் கோயிலில் திருப்பணி செய்ய வசதியில்லை என்று கூறிய ஸ்ரீ அம்பலவாண சுவாமிகள், ஸ்ரீ காமகோடி பெரியவர்களின் அருளாசி கிடைத்தால் ஆலயத்தில் திருப்பணியும் கூட முழுக்கும் நடந்தேறிவிடும் என்று கூறினார்.

பவழக்குன்று மடத்தில் இருக்கும் முருகானந்த சுவாமிகளையும் சந்தித்துப் பேசினேன். தொண்ணூறுக்கு மேல் வயதான அவர், போளூரில் விட்டோபா சுவாமிகளைத் தரிசித்த நிகழ்ச்சிகளை நினைவு கூர்ந்தார். அம் மகான் எப்படி உட்காருவார் என்று தாம் உட்கார்ந்து காட்டினார்.

ஸ்ரீ அழகானந்த ஞானதேசிகர் அவர்கள் 1884-ம் வருடம், சுபானு வருஷம் கார்த்திகை மாதம் உத்திர நட்சத்திரத்தில் விதேக முக்தி அடைந்தாரென்று அவரது சமாதி நிலையத்தில் பொறித்து வைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அவர் எப்போது திருவண்ணாமலைக்கு வந்தார் என்பதோ, எத்தனை வயது வரை வாழ்ந்தார் என்பதோ சரியாகத் தெரியவில்லை.

பின்னர் குன்றின் மீதுள்ள ஆலயத்தைத் தரிசிக்க நாங்கள் ஏறிச் சென்றோம். நூறுவது படி ஏறியதும், வடப்புறத்தில் காணப்பட்ட ஒரு போர்டை படித்தபோது எங்களுக்குத் தூக்கி வாரிப் போட்டது!

பஞ்ச மூர்த்தி கோயில்

பவளக் குன்று

1944-ம் வருஷம் முதல் இங்கிருக்கும் சாது இம் மலையில் தபஸ் செய்து கொண்டிருப்பவர்.


என்று அதில் எழுதியிருந்தது.

போர்டு போட்டு விளம்பரப்படுத்திக் கொண்டு தவம் செய்யும் சாதுவைக காண வேண்டும் என்று துடித்தோம்! ஆனால் 'கேட்' பூட்டப்பட்டிருந்தது.

''கூப்பிடலாமா?'' என்றார் பாப்ஜி.

''வேண்டாம், அவர் தவத்தைக் கலைத்த பாவம் நம்மைச் சேர்ந்து விடப் போகிறது'' என்று எச்சரித்தார் சுந்தரம்.

மத்தூர் மகிடாசுரமர்த்தனி



திருத்தணியிலிருந்து திருப்பதிக்குப் போகும் பாதையில், 'பொன் பாடி' என்ற ரயில் நிலையம் இருக்கிறது. அதை யடுத்திருக்கும் 'லெவல கிராஸிங்'கைக கடந்து மேற்கே ஒன்றரை மைல போனால் மத்தூர் கிராமம் வரும். அங்கு ஒரு சிறு குடிசையில் மகிடாசுரமர்த்தனி குடியிருப்பதையும் அந்தக் கிராமத்தின ஏழை மககள பக்தியுடன் அம்பாளுக்கு ஒரு கோயில எழுப்பிக் கொண்டிருப்பதையும் காணலாம்.

பத்து ஆண்டுகளுககு முன், பம்பாய்ககுப் புது ரயில் பாதை போடுவதற்காக நிலத்தைத் தோண்டியபோது அப் பகுதியில கிடைத்த சிலை அது. ஒன்பதடி உயரம். சிற்பியின் தெய்வக கலையார்வத்திற்குச் சான்றாக நிற்கும் அம்மை, சாந்தமே உருவாகக் காட்சி யளிககிறாள்.

திருத்தணி வட்டத்திலுள்ள மததூர தல புராணத்தில் அது சக்தி பீடமாகக கூறப்பட்டுளளது. அன்னை பராசகதியின் கருணை வெள்ளம் பாயும் புனித தலமாக மத்தூர விளங்கப் போவதில் எளளளவும் சந்தேகமில்லை.

ஆத்திகப் பெரு மககள புனித யாத்திரையாகக் கிளம்பி, மத்தூருக்குச சென்று, மகிடாசுரமாததனியைத் தரிசித்து, அன்னைக்காக எழும்பி வரும் கோயிலுககுத் தங்கள காணிக்கையையும் செலுத்திப் புண்ணியம் பெறலம்.

''சாமி!'' என்று உரக்கக் குரல் கொடுத்தார் பாப்ஜி. அடுத்தகணம் ஒரு சாமியார் வெளியே வந்து, பூட்டைத் திறந்து, எங்களை உள்ளே அழைத்துச் சென்றார். பாறையில் செதுக்கப்பட்டுள்ள பஞ்ச மூர்த்திகளுக்குத் தீபாராதனை காட்டி விட்டு நகர்ந்தார். நாங்கள் உடன் சென்றோம். அருகில் இருக்கும் ஒரு சுனையிலிருந்து ஒரு ரப்பர்க் குழாய் மூலம் தண்ணீர் வந்து ஒரு குடத்தில் நிரம்பிக் கொண்டிருந்தது. அருகில் சமையலுக்கான பாத்திரங்கள் காணப் பட்டன.

அந்த சாது குகை போன்ற ஓர் அறைக்குள் குனிந்தபடியே நுழைந்து, சட்டென்று அங்கிருந்த ஒரு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டார்.

''ரமணர் இங்கு தபஸ் செய்ததாக சொல்லுகிறார்களே, அந்தக் குகை எது?'' என்று கேட்டேன் நான்.

''இதுதான்'' என்று அந்தக் குகையைக் காட்டினார் சாது. அவரிடமிருந்து விடை பெற்றுக் கொண்டு, நாங்கள் வெளியே வந்து, குன்றேறிப் போய்க் கோயிலுக்குள் நுழைந்தோம்.

அதுமிகவும்புராதனமான கோயில். தமிழ் நாட்டில் கவனிப்பாரற்று இருக்கும் பல கோயில்களில் இதுவும் ஒன்று.

அங்கு சுவாமி பவழகிரீச்வரராக எழுந்தருளியிருக்கிறார். அம்பாளின் திருநாமம் முக்தாம்பிகை. ஆனால், அங்கு உற்சவ மூர்த்தி சுப்பிரமணியர் தான். வள்ளி தெய்வயானையுடன் ஆறுமுகர் சந்நிதியும் இருக்கிறது. அந்தக் கோயிலிலிருந்து பார்த்தால் அருணாசலமும், அண்ணாமலையார் ஆலயமும் இயற்கை அன்னையின் எழில் நடனமும் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுகின்றன.


அம்பாள் சந்நிதிக்கு அருகில் ஒரு சிறு குகை அறை இருக்கிறது. ஒருவர் உட்காருவதற்குக் கூட அதில் இடம் இருக்காது. ''இங்குதான் ஸ்ரீ ரமணர் தவம் இருந்ததாகச் சொல்வார்கள்'' என்று குருக்கள் கூறினார்.

அதைக் கேட்டதும் மனத்தில் பழைய நினைவுகள் சூழ்ந்தன. திருச்சுழியில் பிறந்த வேங்கடராமன், திருவண்ணாமலை வந்து, பவழக்குன்றில் மௌன தவயோகியாக வீற்றிருந்த போது, அருமை மைந்தனின் மனத்தை மாற்றி மீண்டும் குடும்பத்திற்கு அழைத்துச் செல்வதற்காக, அன்னை அழகம்மை குன்றேறி வந்து, அழுது புலம்பி, கடைசியில் ஏமாற்றத்துடன் ஊர் திரும்பிய நிகழ்ச்சியைப் படிக்கும் போது கல்நெஞ்சமும் கரைந்து விடும்.

—தொடரும்.

வர்சன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட், 151, மவுண்ட் ரோடு, சென்னை-2, தமிழ் நாடு, நிறுவனத்திற்காக ஆனந்த விகடன் அச்சகத்தில் அச்சிட்டு, வெளியிடுபவர்—ஆசிரியர்: எஸ். பாலசுப்ரமணியன்.

எனக்கு உறவே இல்லை!

ஒரு நாள் காலை, கல்வி மந்திரி கிஷின் சந்தின் பங்களாவின் வராந்தாவில் சுமார் முப்பது பேர் உட்கார்ந்திருந்தனர். ஆம், அவரைப் பேட்டி காணத்தான்.

''பத்து வருஷங்களுக்கு முன் இந்த ஆளுக்கு நான் நூறு ரூபாய் கடன் கொடுத்திருக்கிறேன். அதை மறந்து விட்டான்.''

''அடுத்த தேர்தலுக்கு ஓட்டுப் பிச்சைக்கு வரட்டும. வழி சொல்கிறேன்...''

மந்திரியைப் பேட்டி காணக் காத்துக் கொண்டிருந்தவர்கள் சிலரின் வாய்கள் இத்தகைய வாக்கியங்களை முணு முணுத்துக் கொண்டிருந்தன.

மந்திரியின் காரியதரிசி வராந்தாவுக்கு வந்து ''இன்னும் அரை மணிக்குள் அவர் சாப்பிட்டு விட்டுச் சட்ட சபைக் கூட்டத்திறகுப் போயாக வேண்டும். தயவு செய்து நாளைக்கு வருகிறீாகளா?'' என்று தெரிவித்து எல்லாரையும் அனுப்பி விட்டார்.

மந்திரியைப் பார்க்க வந்திருந்தவர்களுள், பழைய காலக் கோட்டு அணிந்து தலையில் தலைப்பாகை தரித்திருந்த ஒருவர் மட்டும் பங்களாவின் பின்புறமாக வீட்டுக்குள் நுழைந்தார்.

மந்திரி அவரைப் பார்த்ததும் ''வாருங்கள்! என்ன அவசர விஷயம்?'' என்று கேட்டார். வந்தவர் அவருக்குக் கல்லூரியில் பிரின்ஸிபாலா யிருந்த பவானந்தம்.

''ஒன்றுமில்லை வந்து...'' என்று பவானந்தம் ஆரம்பித்தார்.

அவர் என்ன கேட்கப் போகிறார் என்று ஊகித்துக் கொண்ட மந்திரி சொன்னார்:—

''ஸார்! யாருக்காவது வேலை கேட்பதைத் தவிர மற்ற விஷயத்தைப் பற்றிப் பேசுங்கள்.''

''இல்லை கிஷின், ஒரு பையன்...''

''ஸார்! உங்கள் பிள்ளை ஒருவனுக்கும் நான்கு மைத்துனர்களுக்கும், மூன்று மருமகன்களுக்கும் வேலை போட்டுக் கொடுத்திருக்கிறேன்.. '' என்றார்.

''கிஷின்! இப்போது நான் என் உறவுக்காரர் யாருக்கும் வேலை கேட்கவில்லை. இப்போது சிபாரிசு செய்வது கடைசித்தரம். முரளி என்ற பையன், பெரிய மேதாவி. அவன் இன்புளுயன்சா கிருமிகளின காதல் வாழ்க்கையைப் பற்றி ஆராய்ச்சிக் கட்டுரை எழுதி டாக்டர் பட்டம் பெற்றிருக்கிறான். அவனுக்காக ''

''சர்வகலாசாலை உப அத்யட்சகரைப் போய்ப் பாருங்கள். அவர் எந்தக் காலேஜிலாவது பேராசிரியர் வேலைக்கு ஏற்பாடு செய்வார்...'' என்றார் மந்திரி.

''அவன் பெற்றோருக்கு ஆசிரியர் வேலை பிடிக்கவில்லை. பையனுக்கு பூஞ்சை உடம்பு. மாணவாகள் 'கேலி' செய்தால் அவனால் தாங்க முடியாது. கல்வி இலாகாவில் நேரடியாக ஸ்கூல் இன்ஸ்பெக்டா வேலைக்கு எடுக்கிறார்களே, அதற்கு மனுப் போட்டிருக்கிறான். கிஷின், இந்தப் பையனுக்கு மட்டும் எனக்காக உபகாரம் செய்!'' என்று பவானந்தம் கெஞ்சினார்.

''சரி!'' என்றார் மந்திரி. பவானந்தம் திருப்தியாக வீடு திரும்பினார்.

சில மாதங்களுக்குப் பின்னர் மந்திரி பவானந்தத்தின் பெண் கீதாவின் கலியாணத்திற்குச் சென்றார்.

அங்கே பவானந்தம் தன் மாப்பிள்ளையை மந்திரிக்கு அறிமுகப்படுத்தினார்:—

''திஸ் இஸ் முரளி! கல்வி இலாகாவில் இன்ஸ்பெக்டர் ஆப் ஸ்கூல்ஸ் ஆக இருக்கிறான். இன்புளுயன்சா கிருமிகளின் காதல் வாழ்க்கையைப் பற்றி ஆராய்ச்சி செய்தவன்.''

— என். ஆர்.



ஸ்கந்தாச்ரமத்திற்குச் செல்லும் வழி.

அருணாசல மகிமை

13

அருணாசலத்தைச் சுற்றி கிரி வலம் வந்தாகி விட்டது. ஈசான்ய மடம், பவழக் குன்று மடம், துர்க்கையம்மன் கோயில், பவழகிரீச்வரர் ஆலயம் முதலியவற்றைப்பார்த்தாகி விட்டது. அடுத்துக் காண வேண்டியது குகை நமசிவாயர் கோயில். அது மலையின் மீது இருக்கிறது.

பேய்க் கோபுர வீதியில் நின்று பார்த்தால் மலைமீது ஒரு சிறு கோபுரம் தெரியும். அதுதான் குகை நமசிவாயரின் ஆலயம். அதற்கு வடப் புறத்தில் சில ஆச்ரமங்கள் இருக்கின்றன.

மலை மீது ஏறிச் செல்லும் போது நீராடி விட்டு வந்து கொண்டிருந்த ஒரு சாதுவைச் சந்தித்தோம்.

''தாங்கள் மலையில்தான் வாசம் செய்கிறீர்களா?'' என்று கேட்டேன் நான்.

''ஆமாம், நான் ஆலமரம் கீழ்க் குகையில் இருக்கிறேன். என் பெயர் மொட்டையப்பச் சாமி. ஆறு வருஷமா அங்கே தான் இருக்கிறேன்'' என்று கூறிவிட்டு அவர் வேகமாகப் போய் விட்டார்.

ஆல மரக் கீழ்க் குகையைப் போய் பார்த்தோம். அது ஒரு சிறு குகை. மழைக்காலத்திலும் குளிர் காலத்திலும் ரொம்ப அடக்கமா யிருக்கும். பாவம், கோடையில் அதில் எப்படித் தான் வாசம் செய்கிறார்களோ? அடுத்திருந்த ஆலமரம் மேல் குகையில் ஒருவரும் இல்லை. கதவு பூட்டப் பட்டிருந்தது.

அங்கிருந்து வடக்கே நடந்து சென்றோம். மலபாரைச் சேர்ந்த ஒரு சாது தோட்டத்தில் பூப்பறித்துக் கொண்டிருந்தார். அவர் எங்களை

பரணீதரன்



ஸ்கந்தாச்ரமம்

அன்புடன் வரவேற்று, அங்கு காண வேண்டிய இடங்களை விவரித்தார். அம் மலையில் மொத்தம் ஐந்து தீர்த்தங்கள் இருப்பதாகக் கூறினார்: ''அதோ, குகை நமசிவாயர் கோயிலுக்கு மேலே தெரிகிறதே, அதுதான் பாத தீர்த்தம். சங்கு தீர்த்தம் வற்றிப் போய் விட்டது. அதோ, அங்கே வெள்ளைச் சுவர் தெரிகிறதே, அதுதான் முலைப் பால் தீர்த்தம். அந்தக் கோடியில் இருப்பது அருட்பால் தீர்த்தம். மலை மேலே 'ஏழு சுனை' இருக்கிறது.''

''அந்தக் கட்டடம் என்ன?'' என்று கேட்டேன் நான்.

''அது தண்டபாணி கோயில். இங்கிருந்த ஓர் ஆந்திர சாமியார் அறுபது வருஷத்துக்கு முன்னே அந்தக் கோயிலைக் கட்டினார். அவர் இப்போது இல்லை. அடங்கி விட்டார்.'' என்றார் அந்த சாது.

ஆச்ரமம் மாதிரி இருக்கும் அந்தக் கோயிலில், கிழக்கு நோக்கி எழுந்தருளி யிருக்கும் முருகன், பெயருக்கேற்ற எழிலுடன் காட்சி தருகிறார்.

அதற்கு அடுத்து இருப்பது கிளி குகை. அதற்கு வலப் புறத்தில் ஒரு சிவ லிங்கம் இருக்கிறது. ''அது குகை நமசிவாயர் பூஜை செய்த லிங்கம்'' என்று அங்கிருந்த ஒரு சாமியார் கூறினார்.


அந்த லிங்கத்தை ஒட்டினாற் போல் இருப்பது மாமரத்துக் குகை. அங்கு ஸ்ரீ ரமண மகரிஷி சில காலம் தவம் இருந்திருக்கிறார். இப்போது அங்கு ஒரு சாது வாசம் செய்து வருகிறார்.


மாமரத்துக் குகைக்கு அடுத்து இருப்பது 'அடி முடி' கோயில். அயனும் மாலும் எத்தனை தேடியும் அடி முடி காண முடியாத அண்ணாமலையாரின் உருவச் சிலை அங்கு காணப்படுகிறது.

அடுத்தபடி நாங்கள் 'சடைச்சாமி' ஆச்ரமத்திற்குச் சென்றோம். அவருடைய இயற்பெயர் பத்மநாப சுவாமி. அவர் கொச்சியிலிருந்து தமது இருபதாவது வயதில் அங்கு வந்தவர். ஸ்ரீரமணருக்கு முன்பே அருணாசலத்தை நாடி வந்து விட்டவர். அவர் அடங்கி இப்போது நாற்பத்து மூன்று வருஷங்கள் ஆகின்றன. அவருக்குப் பல வருடங்கள் தொண்டு புரிந்து வந்த மாதவானந்தா என்பவர் தற்போது அங்கிருக்கிறார். ஸ்ரீ ரமண மகரிஷியும் பத்மநாப சுவாமியும் பல சமயங்களில் சந்தித்து வேதாந்த விசாரம் செய்திருக்கிறார்கள் என்றும், மகரிஷி மலையாளப் பயிற்சி பெறுவதற்கு இது மிகவும் உபயோகமாக இருந்தது என்றும் ஸ்ரீ மாதவானந்தா கூறினார்.

சடைச்சாமி ஆச்ரமத்திற்கு அடுத்து இருப்பது தவயோகி வடலூர் ராதாபாய் அம்மையாரின் ஆச்ரமம். ஒன்றரை மாதங்களுக்கு முன்புதான் தமது அறுபத்து மூன்றாவது வயதில் அந்த அம்மையார் மகா சமாதியடைந்தார்கள் என்று கேள்விப் பட்டோம். அவருக்குத் தொண்டு புரிந்து வந்த இரு பெண்மணிகள் அங்கே இருந்தனர். ராதாபாய் அம்மையாரின்

தண்டபாணி கோயில்





மாமரத்துக் குகை



சடைச்சாமி ஆச்ரமம்

முலைப்பால் தீர்த்தம்



இறுதி நாட்களை உணர்ச்சியுடன் நினைவு கூர்ந்த போது துயரம் தாங்காது ஒரு பெண்மணி கண் கலங்கி விட்டார்.

கடலூரைச் சேர்ந்த திரு வேலாயுதம் அவர்களின் குடும்பத்தாருக்கு வடலூர் வள்ளலார் மீது அளவு கடந்த பற்றும் பக்தியும் இருந்து வந்தது. ஆண்டு தோறும் அக் குடும்பத்தினர், வடலூருக்குச் சென்று, ஆராதனையும் அன்னதானமும் செய்வது வழக்கம். திரு வேலாயுதத்தின் மகளான திருமதி ராதாபாய் சிறு வயது முதலே ராமலிங்க அடிகளாரின் அருட்பாவில் மனத்தைப் பறி கொடுத்து வந்தார். உலக வாழ்க்கையில் அவருக்கு சிறிதும் இச்சை ஏற்பட வில்லை. திருமணம் செய்து கொள்ளவும் அவர் விரும்பவில்லை. அற நெறியும் அருட் தொண்டும் அவரை அழைக்கவே, தமது முப்பத்திரண்டாவது வயதில் வடலூருக்குச் சென்றார். அங்கு விசாலாட்சி அம்மையார் என்னும் சந்நியாசினியுடன் சிறிது காலம் தங்கி, உபதேசம் பெற்று அருணசலத்தை யடைந்தார். அருட்பெரும் சோதி அவருக்கு அடைக்கலம் தந்தது.

பன்னிரண்டு ஆண்டு காலம் மலையின் மீதுள்ள ஒரு குகையில் தன்னந் தனியாக, பொரிமாவே ஆகாரமாக தியானத்தில் ஆழ்ந்திருந்தார் ராதாபாய் அம்மையார். பின்னர் கீழிறங்கி வந்து, முலைப்பால் தீர்த்தத் தருகில் ஆச்ரமம் அமைத்துக் கொண்டார். வெள்ளை உள்ளத்திற்கு அடையாளமாக, வெண்ணிற ஆடை உடுத்து, தவயோகியாய், ஐயனின் தியானமும் அருட்பாவின் பாராயணமும் துணையாய் இருபது ஆண்டு காலம் அங்கு வாழ்ந்து, ஒளியுடன் ஒன்றி விட்டார் அந்த மாதரசி. திருவருட் பிரகாச வள்ளலார் காட்டிய சமரச சன்மார்க்கத்தை நாடெங்கும் ஓங்கச் செய்யும்

புனிதத்தொண்டையே தம் வாழ்க்கையின் ஒரே லட்சியமாகக் கொண்டிருந்த அம்மையார், ஆண்டு தோறும் தைப் பூசத்தன்று பல பிரசுரங்களை அச்சிட்டு அன்பர்களுக்கு வழங்கி தெய்வப் பணியாற்றி வந்திருக்கிறார். ஸ்ரீ ராமலிங்க அடிகளாரைப் பற்றி தாலாட்டு ஒன்றும் இயற்றியுள்ளார்.

கடைசியாக இருப்பது அருட்பால் குகை. அது அருட்பால் தீர்த்தத்திற்கு மேலே இருககிறது. அங்கு வசிப்பது யோகினி லட்சுமி தேவி அம்மையார். அவர் வர்க்கலையைச் சேர்ந்த சிவானந்த பரம ஹம்சரின் சிஷ்யை. அந்த மகானுடன் பினுங்கு சிஙகப்பூர் எல்லாம் யாத்திரை செய்துவிட்டு வந்தவர்.

மலைச் சுற்றுப் பாதையில் இருக்கும் கௌதம ஆசிரமத்தில் வசிக்கும் சித்த வைத்தியா சீனுவாசலு சுவாமிகள், சிவானந்த பரமஹம்சரின் பரிபூர்ண அருள் பெற்ற யோகியார் என்றும், அவர் ஏழை எளியவர்களுக்கு இலவச மருத்துவ உதவி செய்து வருகிறார் என றும் அங்கு அறிந்து கொண்டேன். அந்த மகானைப் பற்றி முன்பே சரிவர விசாரிககாமல் அவரை ஒரு சாதாரண மருந்து வியாபாரியாகக் கருதி விட்டோமே என்று மனம் வருந்தினேன்.

தலைச்சேரியில் பள்ளி ஆசிரியராக இருந்த லட்சுமி தேவி உற்றார் உறவினரை விட்டுப் பிரிந்து, துறவு வாழ்க்கையை மேற்கொண்டு அருணசலத்தில் குடியேறிவிட்டார். பன்னிரண்டு வருட காலம், அன்ன ஆகாரமின்றி மௌனமாகத் தியான நிலையிலேயே இருந்திருக்கிறார்.

அவரது ஆச்ரமத்தில் பாதாள அறை ஒன்று இருக்கிறது. அந்த பயங்கரக் குகையில் அவர் தவம் இருந்திருக்கிறார். அப்போது மேலேயிருந்து ஒரு சிறு கற் பாறை அவர் காலில் விழுந்து, அவரைச் சிறிது ஊனமாக்கி விட்டது. எண்பத்து நாலாவது வயதிலும் திடமாக நடமாடிக் கொண்டிருக்கும் அவர், தாமே சமையல் செய்து கொள்கிறார். உதவிக்கு மட்டும் ஓர் அம்மாள் வந்து போகிறாள். ஊரிலிருந்து மாதம் தவறாமல் மணியார்டர் வருகிறது.

அங்கிருந்து திரும்பி, முலைப்பால் தீர்த்தத்திற்குச் சென்றோம். அந்தக் குளத்தில் குளித்து அசுத்தம் செய்யாமல் இருக்கும் பொருட்டு ஓர்



அடிமுடி கோயில்



அருட்பால் குகை

வடலூர் ராதாபாய் அம்மையார் ஆச்ரம





வடலூர் ராதாபாய் அம்மையார்



சடைச்சாமி

விருபாட்ச தேவர் குகை



ஏற்பாடு செய்திருக்கிறார்கள். தனியாகக் கட்டப்பட்ட ஒரு மேடையில் நின்று கொண்டு, குளத்திலிருந்து தண்ணீர் எடுத்துக் குளிக்கிறார்கள். அங்கிருக்கும் ஒரு சுனை நீரையே அப் பகுதி மக்கள் குடி நீராகப் பயன்படுத்துகின்றனர்.

அங்கிருந்து விருபாட்ச தேவர் குகைக்குச் சென்றோம். குகை நமசிவாயரின் சீடர்களில் ஒருவரான விருபாட்ச தேவர், அந்த குகையில் தவமிருந்து, யோக சித்திகள் பெற்றவர். அவர் திருமேனி அங்கேயே அடக்கம் செய்யப் பட்டிருக்கிறது. அதன் மீது விபூதி லிங்கம் இருக்கிறது.

விருபாட்ச தேவர் குகையிலும் ஸ்ரீ ரமண மகரிஷி சில வருடங்கள் தங்கியிருக்கிறார். பவழக் குன்றில் ஏமாற்றமடைந்து திரும்பிய மகரிஷியின் தாயார், சில வருடங்கள் கழித்து அந்த குகையிலிருக்கும் மைந்தனைக் காண மீண்டும் வந்தார். உடல் நலம் குன்றி சிறிது காலம் அங்கேயே படுத்த படுக்கையாக இருந்தார். குணமாகி வீடு திரும்பியவர், ஓராண்டு கழித்துத் திரும்பி வந்தார். பின்னர், மைந்தனுடனேயே தங்கி விட்டார்.

விருபாட்ச தேவர் குகையிலிருந்து மேலே ஏறிச் சென்றோம். மாமரங்களும், பலா மரங்களும், தென்னையும், மலர்ச் செடிகளும அடர்ந்த சோலை வனம் எங்களை 'வா வா' என்று அழைத்தது.

கடும் வெயிலில் முதுகுத் தோல் உரிய நடந்து சென்ற எங்கள் உடலை ஸ்கந்தாச்ரமத்தின் பசுமை, தென்றலாக குளிர்வித்தது. உலக வாழ்க்கையில் உழன்று, துன்பம் என்ற வெப்பத்தில் தவிக்கும் உள்ளத்திற்கு ரமணர் என்ற பசுஞ்சோலை எத்தனை இதமாக இருக்கிறது!

அக்னி மலையான அருணாசலத்தில் அத்தனை குளுமை நிறைந்த ஒரு சோலையைக் கற்பனை செய்து கூடப் பார்க்க முடியாது. ஆறு ஆண்டுகளுக்கு மேல், அன்புத் தெய்வம் அருந் தவம் புரிந்த தபோவனம் அல்லவா அது? அண்டி வந்தவர்களுக்கெல்லாம் ஞானப்பிள்ளை அருளுபதேசம் செய்து ஆட்கொள்ளும்நேரத்தில், ஞானத் தாய் அறுசுவை உண்டி அளித்து உய்வித்த புனிதத லம் அல்லவா ஸ்கந்தாச்ரமம்? பிள்ளைப் பாசத்தை மறக்க முடியாமல், உறவு

தேடி வந்த அன்னையை துறவு நிலைக்கு மாற்றி, இறுதி காலத்தில் காலதேவன் வந்து பிடிவாதமாக நின்ற நேரத்தில், அன்புக் கடலென புரண்ட உள்ளத்தில் பொங்கி வந்த துயரத்தை ஞானத் தீயில் பொசுக்கி, கடமை மறவாத தநயனுக பெற்றவளுக்கு பெரு வாழ்வு அளித்த பெருந்தகை நடமாடிய ஆச்ரமத்தின் சூழ்நிலையில் ஆனந்தமும் சாந்தியும் குடி கொண்டிருப்பதில் வியப்பேது?

கீழேயுள்ள ஸ்ரீ ரமணுச்ரமத்திலிருந்து அவ்வப்போது பக்தர்கள் இங்கே வந்து, மௌனமாக அமர்ந்து விட்டுப் போகிருர்கள். அந்த வழியாக மலை ஏறி வருவது அத்தனை கடினமாக இருக்காது. நாங்கள் சென்றிருந்த போது வெளிநாட்டு ரமண பக்தர் ஒருவர் வந்திருந்தார். அவர் வேட்டி மட்டும்தான் கட்டியிருந்தார். திறந்த மார்புடன் இருந்த அவர், கீழேயுள்ள ஒரு பாறையில் அமர்ந்து, அண்ணுமலையார் ஆலய கோபுரங்களின் தெய்விக எழிலைப் பருகிக் கொண்டிருந்தார். உள்ளத்தில் பொங்கி வந்த ஆனந்தத்தை அவர் முகத்தில் காண முடிந்தது. எங்கோ பிறந்து, எத்தனையோ படித்து, செல்வம் கொழிக்கும் வாழ்க்கையில் புரண்டாலும், ஆன்மிக ஒளி பெற்று, சாந்தியின் நிழலில் நிம்மதி பெறுவதற்கு பாரதத்திற்குத் தானே இவர்கள் வர வேண்டியிருக்கிறது!

அருகிலிருக்கும் சுனையிலிருந்து பெருகும் நீர். ஒருகுழாய் வழியாகக் கொட்டிக் கொண்டேயிருக்கிறது. அதில் குளிப்பதற்காக நாலைந்து பேர் வந்திருந்தனர். அவர்களெல்லாம் அந்த ஊர் வாசிகள்.

''மலை உச்சிக்குப் போகும் வழியில் இருக்கும் குகைகளில் அநேக சித்தர்கள் இருப்பதாகக் கூறுகிருர்களே இவர்கள் 'ஓம் ஓம்' என்று ஜபிப்பது கூட இரவு நேரங்களில் சில சமயம் கேட்கும் என்று சொல்லுகிருர்களே'' என்று ஒருவரிடம் கேட்டேன்.

''அதென்னமோ ..நான் இதுவரை ஒருவரையும் பார்த்ததில்லை.''

''நீங்கள் உச்சிவரை போயிருக்கிறீர்களா?''


''யார் வேண்டுமானுலும் அங்கே போகலாமே! அது இரண்டாயிரத்து அறுநூறு அடி உயரம் தானே இருக்கிறது. கார்த்திகை தீபத்தின்போது சாரி சாரியாகப் போகும் கும்பலோடு நான் ஏறிப் போயிருக்கிறேன். எண்ணெய் கொப்பரையைக் கூட பத்து பேர் தூக்கிக் கொண்டு போவார்கள். அது உச்சிக்குப் போய்ச் சேருவதற்கு மூணு நாள் ஆகும்'' என்ருர் நண்பர்.



யோகினி லட்சுமி தேவி

ஸ்ரீ ரமண மகரிஷி அமர்ந்திருந்ததற்கு அடையாளமாக அங்கே ஒரு படம் வைத்து, விளக்கேற்றி வைத்திருக்கிருர்கள். அந்த இடத்தையும், அன்னை அழகம்மை தங்கியிருந்த அறையையும் காணும் போது, உடலில் புல்லரிக்கிறது. சிவபெருமானின் முடியிலிருந்து புனித கங்கையாக இறங்கி வரும் அருவியின் ஒலியில் பிரணவ மந்திரத்தின் ஓங்கார நாதம் கேட்கிறது. மரங்களின் 'சல சல'ப்பில் வேதததின் தேவ கீதம் கேட்கிறது. அங்கிருந்து அண்ணுமலையாரின் ஆலயம் கொலுப் பொம்மையாகத் தெரிகிறது. உச்சிகால பூசையை அறிவிக்கும் மங்கல மணி 'அருணுசலா அருணுசலா' என்று ஒலிக்கிறது. தொலைவிலிருந்து நம்மைத் தேடி வரும் அந்த நாதஅலைகள் ஒளி உருவமாக நம் முன் நிற்கிறது. 'நாம்' என்ற தனித்தன்மை மறைந்து 'அது' வாகி விடுகிறோம்.

— தொடரும்



குகை நமசிவாயா கோயில்.

அருணாசல மகிமை

14

மலையிலிருந்து இறங்கும் வழியிலிருக்கும் குகை நமசிவாயர் கோயிலைக் காணச் சென்றோம். அந்தக் குகையை மூடியிருக்கும் பாறை, பார்ப்பதற்கு ஒரு நந்தி படுத்திருப்பது போல் காட்சியளிக்கிறது.

தாழ்வாரத்திலுள்ள அறைக்கு வெளியே, 'கே. எஸ். கந்தசாமி முதலியார்—IN' என்ற போர்டு மாட்டப்பட்டிருந்தது. உள்ளே எட்டிப் பார்த்தோம். அங்கு ஒருவரும் இல்லை. கந்தசாமி முதலியார் 'உள்ளே' இல்லை; 'வெளியே'தான் ஒரு நாற்காலியில் உட்கார்ந்திருந்தார்.

அவரிடம் சென்று ''வணக்கம். தங்கள் பெயர்தான் கந்தசாமி முதலியாரா?'' என்று விசாரித்தேன்.

அவர் பேசவில்லை. ''ஆமாம்'' என்று தலையை மட்டும் அசைத்தார். அவர் மௌன விரதம் மேற்கொண்டிருக்கிறார் என்று புரிந்து கொண்டு, மேலும் சில கேள்விகளைக் கேட்டு, நோட்டு புத்தகத்தை அவரிடம் நீட்டினேன்.

கந்தசாமி முதலியார் சென்னை திருவல்லிக்கேணியைச் சேர்ந்தவர். ரெவின்யூ போர்டில் ஓர் ஐ. சி. எஸ். அதிகாரியிடம் ஸ்டெனோவாகப் பணியாற்றி விட்டு ஓய்வு பெற்றவர். ஒரு நாள் அகத்தியர் நாடி ஜோசியத்தில் தன்னைப்பற்றி என்ன கூறப்பட்டிருக்கிறது என்பதை அறிந்து கொள்வதற்காக மாம்பலத்திற்குச் சென்றார். அதில், 'திருவண்ணாமலையிலுள்ள குகை நமசிவாயர் கோயிலுக்குச் சென்று தங்கினால் உனக்கு தெய்வ தரிசனம் கிடைக்கும்' என்று எழுதப்பட்டிருந்தது. அதன்படியே அவர் புறப்பட்டு அருணாசலத்திற்கு வந்து விட்டார்.

பரணீதரன்

அவர் திருவட்டீச்வரர் ஆலயத்திலும், பரிபூரண விநாயகர் ஆலயத்திலும் அறக்காவலராக இருந்தவர். அவருடைய மூத்த மகன் ரயில்வேயில் உயர் பதவியில் இருக்கிறார். இவருக்கு முப்பத்து மூன்று ரூபாய் பென்ஷன் வருகிறது. சொற்ப ஆசாரத்தில் ஈச்வர தியானம் செய்து கொண்டு தெய்வ தரிசனத்தை எதிர்பார்த்து அங்கு நிம்மதியாக வாழ்ந்து வருகிறார்.

அவர் எங்களை குகைக்குள்ளே அழைத்துச் சென்றார். கும்மிருட்டு. திரி விளக்கை ஏற்றியதும் கிழக்கு நோக்கி அங்கு ஓர் அழகிய லிங்கம் இருப்பது தெரிந்தது.

''அதுதான் குகை நமசிவாயர். சிவ தியானத்தில அமர்ந்திருந்தவர் அப்படியே லிங்கமாக மாறிவிட்டார்'' என்று எழுதிக் காட்டினார் முதலியார்.


சிவலிங்கத்திற்கு இடப்புறத்தில் உண்ணாமுலையம்மையின் உருவச்சிலை இருக்கிறது. தெற்கே பார்த்தபடி தட்சிணாமூர்த்தியும் வீரபத்திரரும் எழுந்தருளியிருக்கிறார்கள்.

கந்தசாமி முதலியாரிடம் விடை பெற்றுக் கொண்டு கீழே இறங்கி வந்தோம். மலையடிவாரத்தில் பேய்க் கோபுர வீதியில், குகை நமசிவாயர் கோயிலில் தினப்படி பூஜை செய்யும் நமசிவாயம் என்ற இளைஞர் தம் தாயாருடன் வசித்து வருகிறார். நமசிவாயம், குகை நமசிவாய தேவரின் பதினாறாவது தலைமுறையைச் சேர்ந்தவர்.

குகை நமசிவாய தேவர் ஸ்ரீசைலத்திலிருந்து தெற்கே வந்த கன்னட தேசத்து வீர சைவர். சிவத்தலங்களை தரிசிப்பதற்காக குருவிடம் உத்தரவு பெற்று தமிழகத்தில் யாத்திரை செய்த போது, அவர் அருணாசலத்திற்கு வந்தார். அண்ணாமலையார் அவருக்கு குருவாகவே தரிசனம் தந்து தமமைப் பற்றி தோத்திரப் பாடல்கள் இயற்ற அவருக்கு ஆசி வழங்கினார். மலை மீதிருந்த அந்தக் குகையிலேயே தங்கி அவர் தவமியற்றி, யோக சித்திகள் பெற்றார். அவர் வாழ்ந்த காலத்தை சரியாக அறிய முடியவில்லை. ஆனால், அவர் அருணகிரிநாதருக்கு முன்பு இருந்ததாக மட்டும் தெரிகிறது.


நமசிவாய தேவர், குகைக்கருகில் உள்ள ஓர் ஆலமரத்தில் தூங்கும் ஊஞ்சலிட்டு யோக நித்திரை செய்வது வழக்கம். ஒரு நாள் அவருடைய சீடர்களில் ஒருவரான நமசிவாய மூர்த்தி அவருக்குப் பணிவிடை செய்து கொண்டிருந்த போது, திடீரென்று 'களுக்'கென்று சிரித்தார். சீடர் சிரித்ததற்குக் காரணம் என்னவென்று குரு வினவினார். அதற்குச் சீடர், ''குருநாதா, மன்னித்தருள வேண்டும். திருவாரூரில் தியாகராஜர் திருவீதிவலம் வரும் போது முன்னால்


குகை நமசிவாயர் லிங்கம்


குரு நமசிவாயர் சமாதி ஆலயம் (சிதம்பரம்)



குரு நமசிவாயர் மடம் (சிதம்பரம்)



திருப்பாற்கடல்

மாணிக்கவாசகர் ஆலயம்
திருப்பெருந்துறை (சிதம்பரம்)



நாட்டியமாடிக் கொண்டு வந்த தேவதாசிகளில் ஒருத்தி கால் தவறி கீழே விழுந்து விட்டாள். சுற்றி யிருந்த அனைவரும் நகைத்தனர். எனக்கும் சிரிப்பு வந்து விட்டது'' என்று பயந்து கொண்டே கூறினார்.

மற்றொரு நாள் குருவின் முன் நின்று கொண்டிருந்த சீடர் திடீரென்று தமது மேலாடையை கைகளால் தேய்த்து விட்டார். குருநாதர் அதன் காரணத்தை அறிய விரும்பினார். அதற்குச் சீடர் ''சுவாமி, தில்லையம்பதியில் சபேசனின் சந்நிதிக்கு அருகிலிருக்கும் விளக்குத் திரியை ஒரு எலி இழுத்து வந்து திரைச் சீலையின் மீது போட, அது பற்றிக் கொண்டு விட்டது. அருகிலிருந்தோர் உடனே திரையைத் தேய்த்து விட்டனர். அடியேனும் தீ பரவாமலிருக்க நன்றாகத் தேய்த்தேன்'' என்றார்.

சீடரின் ஞான திருஷ்டியைக் கண்டு வியந்தார் குகை நமசிவாய தேவர். குருவையும் மிஞ்சிய சீடனாக இருப்பதைக் கண்டு பெருமையடைந்தார். அவரை மேலும் சோதித்து விட வேண்டும் என்று ஒரு நாள், தாம் உட்கொண்ட ஆகாரத்தை வாயிலெடுத்து கையிலேந்தி, சீடரிடம் தந்து, ''நமசிவாயா, இதை மனிதனின் கால் படாத இடத்தில் போட்டு விடு'' என்று கட்டளை யிட்டார். அதைப் பெற்றுக் கொண்ட சீடர், எங்கே போடுவது என்று ஒரு கணம் யோசித்து விட்டு, அப்படியே விழுங்கி விட்டார்.

குகை நமசிவாயர் சீடரைப் பார்த்து, ''அதை மனித நடமாட்டம் இல்லாத இடத்தில் போட்டு விட்டாயா?'' என்று கேட்க, ''ஆம் சுவாமி, நான் அதை என் வயிற்றில் போட்டு விட்டேன். அங்கு ஒருவர் காலடியும் பட முடியாதே'' என்று விடை பகர்ந்தார். ஞான நிலையிலும் மனப் பக்குவத்திலும் தம்மை விட சீடன் உயர்ந்து விட்டான் என்று ஐயமின்றி தெளிந்த குருநாதர், இறுதியாக ஒரு வெண்பாவில் இரண்டு அடிகள் மட்டுமே பாடி அதை முடிக்கும்படி சீடரிடம் கூறினார். அந்த அற்புதத்தையும் செய்து முடித்தார் சீடரான நமசிவாயர். பின்னர், குகை நமசிவாயர் சீடரை நோக்கி, ''அப்பா, நீ

குருவுக்கே குருவாகி விட்ட சீடன். இனிமேல் அனைவரும் உன்னை குரு நமசிவாயர் என்றே அழைப்பார்கள். இரண்டு யானைகளை ஒரே கம்பத்தில் கட்டக்கூடாது. நாம் இரண்டு பேரும் ஒரே இடத்தில் இருக்கக் கூடாது. நீ சிதம்பரத்திற்குப் போ. உன் தவ வலிமையால் நடராஜனின் ஆலயத் திற்குப் பல திருப்பணிகள் நடை பெற்றாக வேண்டியிருக்கிறது'' என்று திருவாய் மலர்ந்தருளினார்.

அதைக் கேட்டு குருநமசிவாயரின் கண்கள் கலங்கி விட்டன. ''ஐயா, தங்களை விட்டு என்னால் தனியே வாழ முடியாது. தங்கள் தரிசனமும், தங்கள் திருவடிச் சேவையும் என் உயிர் மூச்சாக இருக்க, அவற்றை விடுத்து நான் வேறு எந்தத் தலத்திற்கும் செல்ல விரும்பவில்லை'' என்று பணி வுடன் கூறினார். சீடரின் சொல் கேட்டு நெஞ்சம் நெகிழ்ந்த குருநாதர், ''நமசிவாயா. நீ சிதம்பரம் போய் தில்லேசனை தரிசனம் செய். அங்கு நம்மைப் போல் அவர் உனக்கு தரிசனம் தந்தால் அங்கேயே இரு. இல்லாவிட்டால் மீண்டும் அருணாசலத் திற்கே வந்து விடு'' என்று பணித் தார். சிதம்பரத்திற்குப் போனாலும் குருவின் தரிசனம் கிடைக்கும் என்ற நம்பிக்கை வந்ததும் குரு நமசிவாயர், குருவை வணங்கி விட்டு, விடை பெற்றுக் கொண்டு, கிழக்கு நோக்கிப் பயணமானார். வழியில் இருட்டி விடவே ஓர் ஆலமரத்தடியில் அமர்ந் தார். சற்றைக் கெல்லாம் அவருக்கு பசி எடுத்தது. உண்ணாமுலையம்மை யைக் குறித்துப் பாடினார்:

அண்ணாமலையா ரகத்துக்கினியாளே
யுண்ணாமுலையே யுமையாளே—நண்ணு
நினைதோறும் போற்றுசெய நின்னடிய ருண்ண
மனைதோறும் சோறு கொண்டுவா

இவ்வெண்பாவை குருநமசிவாயர் இயற்றிய சமயத்தில், அண்ணாமலை யார் கோயிலில், தங்கத் தாம்பாளத் தில் சர்க்கரைப் பொங்கல் நிவேதனம் செய்துவிட்டு, குருக்கள் மறந்து போய் சந்நிதியிலேயே வைத்துப் பூட்டி விட்டுப் போய் விட்டார். பக்தனின் குரல் கேட்டு, உண்ணாமுலை பெருந்தேவி, தாம்பாளத்துடன் சர்க்கரைப் பொங்கலை எடுத்து வந்து, குருநமசிவாயரிடம் தந்து விட்டு



சமாதி நிலையத்திலிருக்கும் குருநமசிவாயர் உருவச்சிலை

மறைந்தார். அவரும் அதை நா யினிக்க உண்டு பசியாறினார்.

மறுநாள், குருக்கள் கோயில் கத வைத் திறந்து பார்த்தபோது, தங்கத் தாம்பாளத்தைக் காணாமல், அதைக் கள்வன் கவர்ந்து சென்று விட்டான் என்று கருதி, திகைத்துப் போனார். அப்போது ஓர் அந்தணச் சிறுவனின் மீது ஆவேசம் வந்து, சிதம்பரத்திற்கு செல்லும் வழியில் பசியால் வாடிய குருநமசிவாயமூர்த்திக்கு உண்ணாமுலை யம்மை அமுது அளித்தார் என்றும், தங்கத் தாம்பாளம் அங்குதான் இருக் கிறதென்றும் கூறினான். அதைக் கேட்ட குருக்களும் பிறரும் அதிசய முற்று, அண்ணாமலையாரை தோத்திரம் செய்து, குருநமசிவாயர் இருக்கு மிடம் தேடிச் சென்று தாம்பாளத்தை எடுத்து வந்தனர்.

இவ்வாறே போகும் வழியெல்லாம் அந்த மகான் உண்ணாமுலைத் தாயைக் குறித்து வெண்பா பாட, கருணையே வடிவான பராசக்தி தனயனின் பசி யைத் தீர்த்து வந்தாள். இறுதி யாக சிதம்பரத்தை அடுத்த புவன கிரிக்கு வந்த அடியா ருக்கு, நான்கு கோபுர தரிசனம் ஆயிற்று. அதைக் கண்டு ஆனந்தக் கூத்தாடி னார் குரு நமசிவாயர்.



கோபுரங்க ளுன்கிளையுங் கண்ட
மட்டிற்குற்ற மெலாந்
தீபரந்த பஞ்சதுபோற்
சென்றதே — நூபுரங்க
ளார்க்கின்ற செஞ்சரண
வம்பலவா நின்பாதம்
பார்க்கின்ருர்க்
கென்னே பலன்

என்ற நேரிசை வெண்பாவைச் சொல்லிக் கொண்டே சிதம்பரம் வந்து சேர்ந்தார். திருக்குளத்தில் நீராடிவிட்டு கனகசபாபதியைச் சென்று தரிசித்தார். அருணுசலத்தில் குரு தந்த வாக்குப்படியே சபாநாதர், குகை நமசிவாயரைப் போலவே அவருக்குத் தரிசனம் கொடுத்தார். அக் காட்சியைக் கண்டு பேரின்பத்தில் மூழ்கிய குரு நமசிவாயர் தம்மை மறந்த நிலையில் ஒரு நாழிகைக்குள் நூறு பாடல்களில் அம்பலவாணரை தோத்திரம் செய்து விட்டு ஓர் அறையில் அமர்ந்து நிட்டையில் ஆழ்ந்தார். அப்போது சபாநாயகர், தில்லை மூவாயிரவரிலே பல்லக்கு ஏறும் மூன்று குருக்கள்மாரை அழைத்து, "திருவண்ணுமலையிலிருந்து ஒரு பெரியவர் வந்திருக்கிருர். அவர் யோகத்தில் சிறந்தவர். அவராலே நமக்கு அதிகத் திருப்பணிகள் நடந்தாக வேண்டியிருக்கிறது. தவநிலையில் நிம்மதியாக இருக்கும் பொருட்டு அவருக்குத் தனியாக ஓர் இடம் தரவேண்டும். எனவே அவரை அழைத்துச் சென்று, வடப்புறம் உள்ள திருப்பாற்கடல் திருக்குளத்தருகில் அமர்த்தி விட்டு வாருங்கள்" என்று மொழிந்தார். ஒரு முறை மாணிக்கவாசகருக்கு திருவாசகம் எழுதுவதற்காகவும் மறுமுறை உபமன்னியருக்குத் திருப்பாற்கடல் வரவழைப்பதற்காகவும் தில்லேசனின் திருவடி பட்டு புனித மடைந்துள்ள தலம் அது. குரு நமசிவாயமூர்த்தியை அங்கு அழைத்துச் சென்று விட்டு விட்டு, குருக்கள்மார் கோயிலுக்குத் திரும்பி விட்டனர். அந்த இடத்திலும் சிவகாமி அன்னை, அவருக்கு தினமும் சோறு கொண்டு போய்க் கொடுத்து வந்தாள்.

எந்நேரமும் சிவயோக நிட்டையில் அமர்ந்திருந்த அந்த மகானின் தரிசனத்திற்கு வந்தவர்கள், அவர் காலடியில் பணத்தைக்கொண்டு வந்துகுவித்தனர். அதைக் கண்ட குருநமசிவாயர், "இதுஆட்கொல்லி. இது எனக்குத் தேவையில்லை. நீங்களே வாரிக் கொண்டு போங்கள்" என்று அங்கு வந்தவர்களுக்கு அள்ளித் தந்து விட்டார். இதைக் கண்ட தில்லை மூவாயிரவர், "திரவியங்களை யெல்லாம் மக்கள் வாரிக் கொண்டு போகிருர்களே, தாங்கள் கோயிலுக்குள் வந்து அமர்ந்தால், மக்கள் அளிக்கும் செல்வத்தைக் கொண்டு திருப்பணிகள் செய்யலாமே" என்று கூறினுர்கள். குரு நமசிவாயர் மறுத்துவிடவே, குருக்கள்மார் நடராஜப் பெருமானிடம் சென்று முறையிட்டனர். உடனே அம்பலவாணர் ஒரு வயோதிகர் போல் உருமாறி, குரு நமசிவாயரிடம் சென்று, தமக்கு தினமும் அன்னம் அளிக்கும்படி யாசித்தார். முதலில தயங்கிய மகான், 'அப்படியே செய்கிறேன்' என்று வர்க்களித்தார்.

மறுநாள் தமது விருதுகளையும் பல்லக்கையும் அனுப்பி வைத்து, குரு நமசிவாயரை சகல மரியாதைகளுடன் கோயிலுக்குள் அழைத்து வரச் செய்தார் சபேசன்.

ஆலயத்திற்கு வந்தது முதல் குரு நமசிவாய மூர்த்தியிடம் மக்கள் பொன்னும், பொருளுமாகக் கொண்டு வந்து கொட்டினர். அதைக் கொண்டு அவர் நடராஜருக்கு சிலம்பும் கிண்கிணியும் செய்து அணிவித்து, அவரை தோத்திரம் செய்து, அவரது ஆனந்த நடனத்தைக் கண்டு களித்து, ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார்.

பின்னர், குருநமசிவாயமூர்த்தி பல ஊர்களுக்கு யாத்திரை சென்று, சிதம்பரநாதனுக்கு பல அறக் கட்டளைகளும் செய்வித்து வைத்தார். பின்னர் திருப்பாற்கடல் திருக்குளக்கரையிலிருக்கும் திருப்பெருந்துறையில் அவர் மகா சமாதி அடைந்தார்.

ஸ்ரீ குகை நமசிவாய தேவர் 'அருணகிரியந்தாதி' என்ற நூறு பாடல்களும், ஸ்ரீ குரு நமசிவாயர் 'அண்ணுமலை வெண்பா' என்ற நூறு வெண்பாக்களும் செய்தருளி யிருக்கிருர்கள்.

சிதம்பர நடராஜா கோயிலுக்கு வடப்புறத்தில், வேங்கான் தெருவில் குருநமசிவாயமூர்த்தி சமாதி நிலையமும், ஸ்ரீமடமும் இருக்கின்றன. அவையெல்லாம் கால வெள்ளத்திற்குட்பட்டு மிகவும் பாழடைந்து போயிருப்பதைக் காணும்போது நெஞ்சம் குமுறுகிறது.

—தொடரும்.



எவ்விடம் செல்லினும்
எப்பணி புரிவினும்
நல்லதோர் நங்கைக்கு
ஏற்றதோர் புடவை
லக்ஷ்மியின்

பாலரீனு

வாயில்கள்

லக்ஷ்மியின் பாலரீனு
வசீகர அணி. பணிபுரியும் மங்கையோ! கடை கண்ணிக்குச் செல்லும் நங்கையோ!! இளம் தாயோ!!! எவருக்கும் ஏற்றது. எவ்விடமும் ஏற்றது. செலவோ குறைவு. மன நிறைவோ மிகுதி.

இறக்குமதி, செய்த 90s மற்றும் 100s உயர்தர எகிப்திய பருத்தியினுல் நெய்யப்பட்ட **பாலரீனு** வாயில்கள் மெர்சிரைஸ் செய்யப்பட்டது. நல்ல கடைகளில் கிடைக்கும். உங்கள் மனத்தை மகிழ்விக்கும்.




தி
லக்ஷ்மி
மில்ஸ்
கம்பெனி லிமிடெட்
கோயம்பத்தூர்

உயர்ந்த துணிகளின
உன்னத சின்னம்

விற்பனை ஏஜெண்டுகள் :
வெங்கடேஷ் வஸ்திராலயா, சென்னை-1 o ராம்கோ சுதேசிஸ், கோயம்புத்தூர்
சில்லறை ஷோரூம் : 17/93, ஒப்பணக்கார வீதி, கோயம்புத்தூா.
387, மெயின் ரோடு, கோவில் பட்டி.

Criterion-LM-2302



பசசையம்மன் கோயில்

அருணாசல மகிமை

15

சிதம்பரத்திலுள்ள குருநமசிவாய மூர்த்தி சமாதி ஆலயம் இருக்கும் நிலையைப் பார்த்து விட்டு மனம் வருந்தியதைப் போலவே, திருவண்ணாமலை பச்சையம்மன் கோயில் இருக்கும் பரிதாப நிலையைக் கண்டு நாங்கள் வேதனைப்பட்டோம். அருணாசலத்தின் வட கிழக்குப் பகுதியில், மலையை ஒட்டினாற் போல், தெருவிலிருந்து ஒதுங்கி, உள்ளடங்கி இருக்கிறது அந்தக் கோயில். மிகப் புராதனமான ஆலயம். அங்கு கௌதம முனிவரின் ஆச்ரமம் இருந்ததாகவும், அம்பாள் அங்கு தவம் புரிந்ததாகவும் ஒரு புராண வரலாறு உண்டு.


பச்சையம்மாளின் தரிசனம் எளிதில் கிடைத்து விடாது. மேடும், பள்ளமும், கல்லும், முள்ளும் நிறைந்த கரடு முரடான செம்மண் பூமியில் இரண்டு பர்லாங்கு நடந்தாக வேண்டும். அத்தனை சிரமப்பட்டுச் சென்றாலும் அம்மன் தரிசனம் கிடைக்கும் என்ற நிச்சயமில்லை. அங்கு பூசாரி இருந்தால் நம் அதிருஷ்டம். இல்லாவிட்டால் வெளியிலிருந்தபடியே இடிந்த சுவர்களையும், முட்புதர்களையும், உடைந்து சின்னா பின்னமாகி யிருக்கும் முனீச்வரர்களின் பிருமாண்டமான சிலைகளையும்தான் பார்த்து விட்டு வரவேண்டி யிருக்கும்!

ஆலயத்தினுள் நாம் அடி எடுத்து வைத்ததும், நமக்கு வடப்புறம் சப்த முனீச்வரர்களின் உருவச் சிலைகள் அலங்கோலமாகக் கிடப்பதை பார்க்கலாம். கைகால்கள் உடைந்து, மூக்கும் விழியும் மூளியாகி, சிதறுண்டு போய் கவனிப்பாரற்றுக் கிடக்கும் அந்தக் கலைச் செல்வங்களைக் காணும்போது நெஞ்சில் ரத்தம் கசிகிறது. அவற்றை அப்புறப்படுத்தி விட வேண்டும் என்ற எண்ணத்துடன் தான் சில அன்பர்கள் சேர்ந்து பெரும் முயற்சி செய்து அறுபது வருடங்களுக்கு முன் இடப்புறத்தில் புதிய சிலைகளைச் செய்து வைத்திருக்கிறார்கள். ஆனால், பழைய சிலைகள் அகற்றப்படவே யில்லை. காலம் அழித்து விட்ட அந்தக் கலைப் படைப்புக்கள், காண்போர் கண் கலங்கும்படி இன்னமும் அங்கேயே போட்டு வைக்கப்பட்டிருக்கின்றன.

அழிவுச் சின்னங்களிலிருந்து சிந்தையை அகற்றி, அழகு வடிவங்களை

பரணீதரன்

ஆராய்கிறோம். அவற்றின் பிருமாண்ட உருவமும் கம்பீரத் தோற்றமும் நம்மை பிரமிக்கவைக்கின்றன. கலைஞனின் கைவண்ணத்தை நினைத்து நினைத்துப் பூரித்துப் போகிறோம். சிலைகளின் அங்க அமைப்புக்களை அணு அணுவாக ரசித்துப் போற்றுகிறோம்.



சப்த முனிகள்


மலையின் பின்னணியில், மனத்தைக் கொள்ளை கொள்ளும் இந்த வடிவங்களைக் காணும் போது நமது சிந்தனை உயருகிறது; உள்ளம் விரிகிறது.

அன்று எங்களுடன் அக்கோயிலின் அறங்காவலர்களில் ஒருவரான திரு பி. பி. உத்தண்டி பிள்ளை வந்திருந்தார். அவர் நம் உணவு அமைச்சர் திரு ப. உ. சண்முகம் அவர்களின் தந்தையார். பரம்பரை பரம்பரையாக அவர்கள் பச்சையம்மன் கோயிலின் அர்ச்சகர்களாக இருந்து வந்திருக்கிறார்கள். தந்தையார் காலம்வரை அந்தப் புனிதக் கைங்கரியத்தைத் தாங்களே செய்து வந்ததாகவும் இந்தத் தலைமுறையில் அது விட்டுப் போய் விட்டதாகவும் உத்தண்டி பிள்ளை கூறினார். இருப்பினும் இன்றும் அவர்களது குடும்பம், அக்கோயிலின் ஆராதனைகளிலும், திருவிழாக்களிலும் பெரும் அக்கறையும் ஈடுபாடும் கொண்டுள்ளது. அவர்கள் அந்த அம்மனின் துணையுடன்தான் எந்த நல்ல காரியத்தையும் செய்கிறார்கள். குழந்தைகளின் காதணி விழாவானாலும், முடியிறக்கும் பிரார்த்தனையானாலும் அம்மனின் சந்நிதியிலேயே நடத்துகிறார்கள்.

திரு உத்தண்டி பிள்ளைக்கு எழுபத்தைந்து வயது ஆகிறது. உடல் நலமும் சரியில்லை. அப்படியிருந்தும் பச்சையம்மன் கோயிலை எப்படியாவது புதுப்பித்துத் திருப்பணி செய்துவிட வேண்டும் என்ற வயதைக் கடந்த துடிப்பும் ஆர்வமும் அவரிடம் இருப்பதைக் கண்டேன். அதைப்பற்றிப் பேசும்போது அவர் இளைஞராகி விடுகிறார். ‘‘அதுக்காக என்னென்னமோ முயற்சிகள் எல்லாம்



கோயிலின் வெளித் தோற்றம்



பசசையம்மாள்

செய்துக்கிட்டிருக்கேன். எப்படியாவது திருப்பணி நடந்துடும்னு நம்பிக்கை எனக்கு இருக்கு. முதல்லே கோயிலுக்குப் போக ஒரு நல்ல ரோடு போடணும். அப்போ தான் நிறைய ஜனங்க வந்து போக சௌகரியமாய் இருக்கும். அதுக்காக மெட்ராசுக்குக் கூட ஒரு நடை போயிட்டு வந்துட்டேன்'' என்றார் அவர்.

கருவறையில் சிற்ப வடிவங்கள்



பேசிக் கொண்டே கோயில் மண்டபத்தினுள் நுழைந்தோம். முன் தாழ்வாரத்தின் சுவர்களில் 'விளையாட்டுக் கலைஞர்கள்' கரிக் கட்டியினால் சித்திரம் தீட்டி வைத்திருப்பதையும், கைக்கு வந்தபடி கிறுக்கி வைத்திருப்பதையும் பார்த்து மனம் நொந்தோம். அந்த மணடபத்திலும் சப்த முனீவர்களின் வண்ண உருவச் சிலைகள் இருக்கின்றன. அத்தனையும் அற்புதமான சுதை வேலை. பாவம், அந்த முனீச்வரர்களும் மூளியும் முடமுமாகத்தான் அமர்ந்திருக்கிறார்கள்!


அடுத்து கருவறையினுள் அடியெடுத்து வைக்கிறோம். உலகிலுள்ள இருளெல்லாம் ஒன்று சேர்ந்து, அங்கு குடியேறி விட்டது போல், ஒரே கும்மிருட்டாக இருக்கிறது. பூசாரி ஒரு திரி விளக்கை ஏற்றினார். ''உன் ஒளி என்னை விழுங்கி விட முடியுமா? நான் எத்தனை காலமாக இங்கு இருக்கிறேன். என்னை அத்தனை எளிதாக விரட்டி விட முடியுமா?'' என்று அறையில் இருந்த இருள், அச் சுடருக்குச் சவால் .விட்டது. பயங்கர கும்மிருட்டும், நாசியைத் துளைக்கும் 'குப்' பென்ற நெடியும அசாதாரண அமைதியும் நம்மை சற்று திகிலடையச் செய்கின்றன. 'திக் திக்' என்று இதயம் அடித்துக் கொள்ள, அடி மேல் அடி எடுத்து வைக்கிறோம்.

சற்று நேரம் ஆனதும், பனிப் படலத்தினூடே தெரிவது போல் மங்கலாக ஒரு சிலை தெரிந்தது. அதுதான் பச்சையம்மனின் திருமேனி. அமர்ந்தகோலத்தில் அம்பிகை வீற்றிருக்கிறாள். அமைதியே உருவாக, அன்பே வடிவாக, தரணிக்காக தவமியற்றிக் கொண்டிருக்கிறாள் அந்தத் தாய். பச்சைக் கல்லினால் ஆன அந்தப் பதுமையைப் பார்த்துக் கொண்டேயிருக்க வேண்டும் போலிருக்கிறது. பச்சையம்மாள் நாம் கேட்ட வரத்தை நிச்சயம் தருவாள். அன்னை நம்முடன் நெருங்கிப் பழகுவாள். சிரித்துப் பேசுவாள். அதில் சிறிதும் சந்தேகமில்லை.

''அம்பிகைக்கு வலப்புறம் இருப்பது வசிஷ்ட முனிவர், இடப்புறம் இருப்பது காத்தாயி அம்மன்'' என்று கூறிக் கொண்டே பூசாரி, கைவிளக்கை வடக்கு நோக்கி எடுத்துச் சென்று ''இதுதான் மன்னூர்சாமி'' என்று காட்டுகிறார். அருகில் சென்று உற்று நோக்குகிறோம். அங்கு பரமேச்வரன் நான்கு கரங்களுடன், ஒரு காலை மடித்து ஒய்யாரமாக அமர்ந்திருப்பதைக் காண்கிறோம்.

ஞானகுரு நம் மீது கருணை கொண்டதாலோ என்னவோ நம்மைச் சூழ்ந்துள்ள அஞ்ஞான இருள் லேசாக விலகுகிறது. அதற்கு அடையாளமாக கனமான இருள் திரை சற்று விலகுகிறது. சுற்றிலும் பார்க்கிறோம். அப்பப்பா! எத்தனை தெய்வ வடிவங்கள், மகரிஷிகள், முனீச்வரர்கள், அம்மன்கள். அரைகுறை வெளிச்சத்தில் அத்தனை சிலைகளையும் சரிவர பார்க்க முடியவில்லை. ''இது யார், அது யார்?'' என்று ஆர்வத்துடன் விசாரிக்கிறோம். பூசாரிக்கு பாதிக்குப் பெயர் தெரிகிறது. பாதிக்குத் தெரியவில்லை. முருகன், வள்ளி, தெய்வயானை, கௌதமர் இப்படிச் சில நமக்கே புரிகின்றன. ஆனால், பல உருவங்கள் யார் என்றே புரியவில்லை.

கோயில்களைப் பற்றி ஆராய்ச்சி செய்பவர்களும் சிற்பக் கலையில் ஆர்வம் உள்ளவர்களும் பச்சையம்மன் கோயில் கருவறைக்குள் சென்று ஆராய்ச்சி செய்ய வேண்டும். அங்கு பாழடைந்து போயிருக்கும் கலைச் செல்வங்களைப் பழுது பார்க்க வேண்டும். அவற்றில் உள்ளடங்கிக் கிடக்கும் புராண வரலாறுகளை விரிவாக எழுத வேண்டும். இருள் போர்வையில் மறைந்து கொண்டிருக்கும் நம் இணையற்ற தெய்வக் கலையை உலகம் அறியச் செய்ய வேண்டும். தமிழனின் பண்டையப் பெருமைகளைப்பற்றி தொண்டை வலிக்கப் பேசிக் கொண்டிருந்தால மட்டும் போதுமா? அவன் சாதனைகளைப் பற்றி கை வலிக்க எழுதிக் கொண்டிருந்தால் நம் கடமை தீர்ந்து விடுமா? அவன் பெருமையுடன் படைத்த கலை அற்புதங்களை வருங்கால தலைமுறையினருக்குக் காத்துத் தரும் பொறுப்பு நமக்கிருக்க வேண்டாமா?



மன்னூர்சாமி

கருவறையிலிருந்து வெளியே வரும் போது இத்தகைய எண்ணங்கள் நெஞ்சில் பொங்கி எழுகின்றன.


ஆலய மண்டபத்தின் நுழைவாயில் நின்று மீண்டும் சப்தமுனிக்களின் சிலைகளை வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தேன். வேதமுனி, கரிமுனி, செம்முனி, வாள்முனி, முத்துமுனி, பூமுனி, கொடி முனி என்று உத்தண்டி பிள்ளை ஒவ்வொரு பெயராகச் சொல்லிக் கொண்டிருந்தார்.

ஐயனூர் யானை, குதிரைகள்





பி. பி. உத்தண்டி பிள்ளை



மண்டபத்திலுள்ள இரு முனிகள்

கோயிலுக்கு வலப்புறத்தில் பெரிய அளவில் ஐயனர் யானையும், குதிரைகளும் நிற்கின்றன.

''அந்த இடத்தில்தான் பலி போடுவார்கள். இன்னும் அந்த வழக்கம் முற்றிலும் மறைந்து விடவில்லை. மெள்ள மெள்ள அது நின்று விடும் என்று நினைக்கிறேன்'' என்று திரும்பி வரும் போது கூறினார் உத்தண்டி பிள்ளை.

இருமுறை திருவண்ணுமலையில் பிளேக் நோய் பரவிய போது ஸ்ரீ ரமண மகரிஷி பச்சையம்மன் கோயிலில் வந்து தங்கி யிருந்ததாக நான் கேள்விப் பட்டிருந்தேன். அதைப் பற்றி உத்தண்டி பிள்ளையிடம் விசாரித்தேன்.


''ஆமாம். ஸ்ரீரமணர், கோயில் மண்டபத்தில் உட்கார்ந்திருப்பார். நான் சிறுவனக இருந்தபோது அவரை இங்கே பார்த்திருக்கிறேன்'' என்று நினைவு கூர்ந்தார் பிள்ளை. 'மகரிஷியைத் தரிசித்திருக்கிறேன்' என்ற பெருமிதம் அவர் முகத்தில் படரக் கண்டேன்.

ஆகா! அருணுசலத்தின் மகிமைதான் என்ன! திருவண்ணுமலைத் திருத்தலத்தின் சிறப்புத்தான் என்ன! வரலாறு கண்டறியா காலம் முதல் மகான்களின் பாத தூளிபட்டு புனிதமடைந்துள்ள மண் அல்லவா அது!

எங்கோ பிறந்தவர்க ளெல்லாம், அருணுசல ஒளியைக் கண்டு, ஒலியைக் கேட்டு, ஓடோடி வந்து தவயோகத்தில் ஆழ்ந்து, தன்வயமாகி, ஆன்மதரிசனம் பெற்று, அருள்நெறி பரப்பி, அகிலமே வியக்கும் வண்ணம் வாழ்ந்து, பேரொளியுடன் ஒன்றிவிட்ட வரலாறுகள், நம் வாழ்வுக்கு வழிகாட்டியாக விளங்குகின்றன. அவ்வண்ணம் இந்த நூற்றுண்டில் வாழ்ந்து, தங்கள் திருமேனியை மறைத்துக் கொண்டு இன்றும் நம்முடன் அருவமாக வாழ்ந்து வரும் ஸ்ரீ சேஷாத்ரி சுவாமிகளையும், ஸ்ரீ ரமண மகரிஷியையும் நேரில் தரிசிக்கும் பேறு பெற்ற பலர் நம்மிடையே வாழ்ந்து வருகின்றனர். நம் கண்ணுக் குப் புலப்படாத அம் மகான்களைப் பற்றி நாம் எத்தனைதான் படித்தாலும், அவர்களுடன் நேரில் பழகியவர்கள் உணர்ந்து, உணர்ச்சியுடன் தம் அனுபவங்களைக் கூறும் போது, நம் உள்ளம் தூய்மை அடைகிறது. கரையை உடைத்துக் கொண்டு பெருகும் வெள்ளம் போல் கண்ணீர் பொங்குகிறது. அந்தக் கண்ணீரே நம் பாவங்களைக் கழுவி நம்மை புனிதமாக்குகிறது.

நம் பாவங்கள் நீங்கி, பிறவிப் பெருங் கடலில் நீந்திக் கரையேற வேண்டும் என்று திருவுளம் கொண்டுதான் காமாட்சியின் சந்நிதியில் இருந்து சேஷாத்ரியையும் மீனுட்சியின் சந்நிதியிலிருந்து வேங்கடராமனையும் அருணுசலம் தன்னிடம் அழைத்து, தன் மடியில் தவழ விட்டு, சிவயோகத்தில் திளைக்க வைத்து, பிரும்ம ஞானத் தபோதனர்களாக மலர வைத்திருக்கிறது. அம்மையப்பன் அழைத்ததும், அன்னையின் குரல் கேட்டு ஓடிவரும் இளங் கன்றுகளாக இவ்விரு இளைஞர்களும் அப்பனை நாடி வந்த வரலாறு நினைக்க நினைக்க இனிக்கும்; சொல்லச் சொல்ல சுவைக்கும்.

— தொடரும்.



திரு ஆரோக்கியசாமி. திரு ஜகந்நாதன்

புறப்பட்டோம். அவன் விடவில்லை.

''அண்ணே!'' என்று அழைத்தான்.

இருக்குமிடம், கோடம்பாக்கமா, தஞ்சையா என்று நமக்கு மிரட்சி.

''நம்ப சிவாஜி அண்ணனை மெட்ராஸிலே பார்த்தீங்கன்னு நான் டயலாக் பேசினதைச் சொல்லுங்க. ஒரு படத்தில் அவா கைதூக்கி விட்டார்னு...''

சாமர்த்தியமாக அவனைக் கை கழுவி விட்டு பச்சை தட்டி அடித்த ஒரு வீட்டைத் தேடி ஓடுகிறோம். அது தான் முன்னாள் நகர மன்றத் தலைவரும் சிவாஜியின் நண்பருமான திரு ஆரோக்கியசாமி நாடாரின் வீடு.

''சுகமில்லை. இரண்டு மூன்று நாள் ஷேவ் கூட பண்ணலை''—தன் இளந் தாடிக்கு விளக்கம் சொல்லிக் கொண்டே சாதுவாக எங்கள் காரில் ஏறி உட்கார்ந்தார், திரு ஆரோக்கிய சாமி.

தஞ்சாவூரிலிருந்து ஒரத்தநாட்டுக் குப் போகும் சாலையில் ஓடுகிறது கார். சுமார் எட்டு மைலில் சூரக்கோட்டை.

''சூரக்கோட்டையில் இருப்பது தம்பி (அதாவது சிவாஜி) அவங்க சகோதரங்க, எல்லாத்துக்குமா சேர்ந்த கூட்டுப் பண்ணை. 75 ஏக்கர் நெல்லு, கரும்பு, வாழை, கடலை... எல்லாம் பயிரிடறுங்க'' என்கிறார் திரு ஆரோக்கியசாமி.

''ஆமா, சிவாஜிக்கு இதிலே எப்படி ஆர்வம் ஏற்பட்டது?''

''தம்பிக்கு விவசாயம்னு ரொம்பப் பிடிக்கும். நானும் வற்புறுத்தினேன். சூரக்கோட்டையிலே பொருத்தமா அமைஞ்சுது.''

சினிமா நடிகரின் பண்ணையா என்று திகைக்கிறோம். படாடோபமில்லாத அமைதியான சூழ்நிலையில் அமைந்திருக்கிறது பண்ணை. வயல்களுக்கு நடுவே கோயில் ஒன்று. விருந்தினர்களை உபசரிக்க அழகான வீடு. அதன் நடு ஹால் நிறைய படங்கள். சினிமா நடிகர்கள், அரசியல்வாதிகள் படங்களா? இல்லை. எல்லாம் அவருடைய குடும்பத்தினர், உறவினர் படங்கள்.

''சிவாஜிக்கு குடும்பப்பற்று ரொம்ப அதிகம். அதே மாதிரி அமைதியான கிராம வாழக்கையும் ரொம்பப் பிடிக்கும். என்னமோ பட்டணத்தில் மாட்டிக்கிட்டாரு. பலமுக்கியமான குடும்ப நிகழ்ச்சிகளை இங்கேதான் நடத்தியிருக்கிறார். சாந்தி பூப்பெய்திய விழா இங்கேதான் நடந்தது. ஒவ்வொரு வருஷமும் தவறும இங்கே வந்து பண்ணையாட்களோடதான் பொங்கல் கொண்டாடுவார்.''

தட்டு தட்டாக பழங்கள், ஸ்வீட், காரம், காப்பிஎல்லாவற்றையும் தள்ளி விட்டுக் கொண்டு அமைதியான சிரிப்புடன் ''சாப்பிடுங்க!'' என்று உபசரிக்கிறார் திரு ஜகந்நாதன். சிவாஜியின் மாமன் பிள்ளை. இவர்தான் சூரக்கோட்டை பண்ணை நிர்வாகி. 'சூராதி சூரர்' என்றார் திரு ஆரோக்கியசாமி நம் காதுக்குள். ''ஆமாம்: எவ்வளவு பலகாரம்! எவ்வளவு பழம்; சூரர் தான்!'' என்று ஆமோதிக்கிறார் புகைப்பட நிபுணர்.

''பண்ணையில் விளையும் நெல்லை யெல்லாம் வெளியே விற்கப்படாது. அரசாங்கத்துக்குத்தான் அளக்கணும்னு சிவாஜி கண்டிப்பா உத்தரவு போட்டிருக்கிறார்'' என்கிறார் அவர்.

வாழைத் தோப்பில் துப்பாக்கியுடன் பிரமாண்டமான சிவாஜியின் 'கட்அவுட்' உருவம்.

''காக்கா, குருவிகளை விரட்ட!'' —ஜகந்நாதன்.


''அதுக்கு துப்பாக்கி எதற்கு? சிவாஜியின் சிங்கப் பார்வை ஒன்று போதாதா?''—நாம்.

ஓரிடத்துக்கு வரும்போது பயபக்தியுடன் துண்டை கையில் எடுத்துக் கொள்கிறார் திரு ஜகந்நாதன்.

''ஏன்?''

''இந்த இடம் காஞ்சி காமகோடி சுவாமிகள் காலடி எடுத்து வைத்த புண்ணிய பூமி. சுவாமிகள் பாத யாத்திரையாக வரும்போது திடீரென்று ஒரு நாள் யாரும் எதிர் பார்க்காமல் இங்கும் எழுந்தருளினார்கள்!''- ஜகந்நாதன் கண்களில் பரவசம் பொங்குகிறது. நமக்கும் புல்லரிக்கிறது.

(இன்னும் வரும்)



ஸ்ரீ காமாட்சியம்மன் ஆலயம், காஞ்சீபுரம்.

அருணாசல மகிமை

16

பாரத நாட்டின் பழம் பெரும் நகரங்களில் தலை சிறந்து விளங்குவது ஸ்ரீ காஞ்சி. ஸ்ரீ பராசக்தியின் ஸ்ரீ சக்கர பீடத்தின் உருவாகவே அது அமைந்திருக்கிறது. காமராஜ பீடம் என்று போற்றப்படுகிற ஸ்ரீ காமகோடி பீடத்தை ஸ்ரீ சக்கரத்தின் நடுவிலுள்ள பிந்துஸ்தானமாக உடையது.

மகா திரிபுர சுந்தரியும், ஸ்ரீ வித்யா சொரூபிணியுமான ஸ்ரீ காமாட்சி, காமகோடி நற் பீடத்தின் அதி தேவதையாகக் கொலு வீற்றிருப்பதால் இத்தலம் ஸ்ரீ வித்யையின் இருப்பிடமாக விளங்குகிறது. அத்வைத ஞானத்திற்கு ஸ்ரீ வித்யா உபாசனை அடிப்படை சாதனமானதால், இத்தலம், அத்வைத தத்துவத்திலும், பிரம்ம ஞானத்திலும் உயர்ந்தோங்கி வந்திருக்கிறது. இங்கு தர்ம தேவதை ஆனந்த நடம் புரிகிறாள்.

எனவேதான் யோகீச்வரர்களும், ஞான வள்ளல்களும், சித்த புருஷர்களும், மாமுனிவர்களும் ஸ்ரீ காஞ்சியை நாடி வருகிறார்கள்.

அம்பிகையின் கடாட்சத்தை நாடி அடியார் திருக் கூட்டம் ஸ்ரீ காஞ்சிக்கு வருகிறது. அன்னையோ, ஐயனின் அருள் வேண்டி அருணாசலத்திற்குச் சென்றாள். இங்கு பார்வதிதேவி கம்பா நதி தீரத்தில் மணலில் லிங்கம் செய்து, ஏகாம்பரநாதனை வழிபட்டு, பின்னர் திருவண்ணாமலைத் திருத்தலம் சென்று, மெய்த்தவம் இயற்றி, சாபம் நீங்கி, ஈசனின் இடப் பாகத்தைப் பெற்றாள். இது புராண வரலாறு. ஸ்ரீ காமாட்சி தேவியின் பரிபூரண அருள் பெற்று விளங்கிய ஸ்ரீ சேஷாத்ரி சுவாமிகள் ஸ்ரீ காஞ்சியில் தவம் இயற்றி, அருணாசலம் சேர்ந்து, ஒளியுடன் கலந்தது சரித்திர நிகழ்ச்சி.

பரணீதரன்

காலச் சக்கரம் சுழலும் போது, புராணம் சரித்திரம் ஆகிறது; சரித்திரம் புராணம் ஆகிறது.

நம் வேத தர்மத்தின் கலங்கரை விளக்கமாய்ப் பட்டொளி வீசி, பாரதத்தின் ஆன்மிக ஒளி பாரெங்கும் பரவக் காரணமாய் இருந்த ஸ்ரீ ஆதி சங்கர பகவான், காஞ்சிக்கு எழுந்தருளினார்கள். வேதத்தைக் காக்கவும் பிரம்ம ஞானத்தைப் பரப்பவும், குரு பீடம் ஒன்றை அமைத்தார்கள். ஸ்ரீ வித்யையின் ரகசியங்களையும், மந்திரங்களையும், யந்திரங்களையும் பல சீடர்களுக்கு உபதேசம் செய்து அருளினார்கள். தேவி உபாசனையின் பல அம்சங்களை உலகம் அறியும்பொருட்டு பல தோத்திரப் பாடல்களை இயற்றினார்கள்.


ஸ்ரீ காமாட்சியை ஆராதிப்பதற்காக சில உபாசனா முறைகளைத் தோற்றுவித்த ஸ்ரீ ஆதிசங்கரர், அவற்றைச் சரிவர நடத்தி வருவதற்காக நர்மதா நதிக் கரையிலிருந்து முப்பது தேவி பக்தர்களை, அவர்களுடைய குடும்பங்களுடன் காஞ்சிக்கு அழைத்து வந்தார். அவர்கள் ஸ்ரீ காமாட்சி தேவியை குல தெய்வமாகக் கொண்டு ஸ்ரீ வித்யையைப் பரப்பினார்கள். அவர்கள் காலத்திலிருந்து தேவி பக்தி செழித் தோங்கத் தொடங்கியது. அவர்களுக்கு 'காமகோடியார்' என்ற பெயரும் வழங்கப் பெற்றது.

காமகோடியாரின் வம்சத்தைச் சேர்ந்தவர்கள் யாவரும் காமாட்சி தாசர்கள். வேதத்தை முறைப்படி அத்யயனம் செய்தவர்கள். சகல சாஸ்திரங்களையும் கற்றவர்கள். இதிகாச புராணங்களை அறிந்தவர்கள். கலியின் கொடுமையால் இந்தப் பாரம்பரை, சிறிது சிறிதாக மறைந்து கொண்டே வந்து, மூன்று நான்கு குடும்பங்களே எஞ்சி நின்றன. அதர்மம் மேலோங்கி யிருந்த போதிலும் அக் குடும்பத்தினர் மன உறுதி தளராமல் தங்கள் முன்னோர் வாழ்ந்து காட்டிய தூய வாழ்வுக்கு ஓர் எடுத்துக் காட்டாக அறநெறியை விட்டு வழுவாமல் வாழ்ந்து வந்தனர். அவர்களில் பலர் ஜோசிய சாத்திரத்தில் தேர்ச்சி பெற்று விளங்கியதால், ஸ்ரீ வரதராஜர் கோயிலில், இவர்களுக்குப் பஞ்சாங்கம் வாசிக்கும் உரிமையும், அதற்கான மான்யங்களும் அளிக்கப்பட்டிருந்தன.


காமகோடியார் மரபில், அஷ்ட சகஸ்ர வகுப்பில் சுமார் நூற்று எண்பது ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு மகான் அவதரித்தார். அவருக்கு காமகோடி சாஸ்திரிகள் என்று பெயர். ஸ்ரீ வித்யையில் சிறந்து விளங்கிய அவர், இளம் வயதிலேயே சகல சாத்திரங்களையும் கற்றறிந்தார். வேத, வேதாந்தங்களில் ஆழ்ந்த ஞானம் உடையவராக இருந்ததால் யாவரும் இவரிடம் வந்து தங்கள் சந்தேகங்களைக் கூறித் தெளிவு பெற்றுச் சென்றனர்.

அம்பிகையின் அருள் பரிபூரணமாக நிரம்பப் பெற்றவர் ஆதலால், சங்கீத தேவதை காமகோடி சாஸ்திரிகளுக்கு ஏவல் புரிந்து நின்றாள். தேவி பூஜையின் போது தேனினும் இனிய சாரீரத்தில், கல் மனமும் கரைந்து உருகும் வண்ணம் கண்ணீர் மல்கி கான மழை பொழிவார். சிவபெருமானையும் பெருமாளையும் அம்பிகையையும் போற்றி வடமொழியிலும் தெலுங்கிலும் பல பாடல்களை இயற்றியிருக்கிறார் இவர்.

காமகோடி சாஸ்திரிகள் ஓர் ஆசார சீலர். எந்நேரமும் அம்பிகையின்



ஸ்ரீ காமாட்சியம்மன் ஆலய கோபுரம்.



ஸ்ரீ ஏகாம்பரேச்வரர் ஆலய கோபுரம்.

தியானத்திலும், காயத்திரி ஜபத்திலும் ஈடுபட்டிருந்த அவரது வதனம் அருட் பிரகாசத்துடன் பொலிந்தது. வேத நெறிக்கு உட்பட்ட நியம நிட்டைகளிலும், ஆசார அனுட்டானங்களிலும் ஆழ்ந்திருந்த அவர், ஒரு மகரிஷியைப் போலவே வாழ்ந்து வந்தார். அவரது குடில், ஒரு தபோவனமாகவே காட்சி யளித்தது. அங்கு தெய்வம் கோயில் கொண்டிருந்தது. தர்ம தேவதை குடியிருந்தாள். தம்மை நாடி வந்தவர்களுக்கெல்லாம் நன்னெறியைக் காட்டி, நல்லுபதேசம் செய்தருளினர் அந்த மகான். அவரது நன் முயற்சியால் பக்தி தழைத்தது. வளம் கொழித்தது. பல அன்பர்கள் மெய்யன்புடன் மீண்டும் மீண்டும் அழைத்ததால், காமகோடி சாஸ்திரிகள் வந்தவாசி தாலூகாவிலுள்ள வழூர் என்ற சிற்றூருக்குச் சென்று தங்கினர்.

ஆனல், அவரது வம்சம் வளர, அம்பிகை சாஸ்திரிகளுக்கு ஆண் மகவை அருள வில்லை. சேஷம்மாள் என்ற பெண் குழந்தைக்குத் தந்தையான அவர், தமது மூத்த சகோதரர் சிதம்பர சாஸ்திரிகளின் குழந்தைகளை தம் சொந்தச் செல்வங்களைப் போல வளர்த்து வந்தார். சிதம்பர சாஸ்திரிகளுக்கு இரண்டு திருக் குமாரர்களும் இரண்டு திருக் குமாரத்திகளும் இருந்தனர்.


அவர்களுள் கடைக் குட்டியான மரகதம், அம்பிகையின் அம்சமாகவே விளங்கினள். அழகோடு, நற்குணங்களும், நல்லியல்புகளும் கொண்ட நங்கையாக வளர்ந்தாள். சிறிய தந்தையான காமகோடி சாஸ்திரிகள், பெற்ற தாயைக் காட்டிலும் கண்ணும் கருத்துமாக அவளை வளர்த்தார். சீராட்டினர்; பாராட்டினர். கற்புக்கரசியாகத் திகழ்வதற்கேற்றவாறு புராணக் கதைகளையும் தர்ம சாத்திரங்களையும் அடிக்கடி கூறி, அவள் சிந்தனையை உயர்த்தினர். சங்கீதமும் கற்றுத் தந்தார். துதிப் பாடல்களை மகள்மெய்யுருகப் பாடக் கேட்டு, ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார். பன்னிரண்டு வயதிலேயே 'சாகித்ய சங்கீத கலாநிதி' என்ற பட்டத்தைப் பெற்றாள் மரகதம்.

மரகதத்திற்கு மணம் புரியும் பருவம் வந்தது. மகளுக்கேற்ற கணவனைத் தேடி அலைந்தார் காமகோடி சாஸ்திரியார். இறுதியாக தமது மாணக்கரான வரதராஜனே ஏற்ற வரன் என முடிவு செய்தார். அவரது தந்தையான சேஷாத்ரி ஜோசியரை அணுகிக் கல்யாணம் பேசினர். எல்லாப் பொருத்தமும் பார்த்த பிறகு பெரியோர்கள் மனமகிழ்ந்து திருமணத்தை நிச்சயம் செய்தனர். ஒரு நல்ல முகூர்த்தத்தில் வரதராஜன், அக்னி சாட்சியாக மரகதத்தை மனைவியாக ஏற்றுக் கொண்டார். அத் தெய்வத் தம்பதி அம்மி மிதித்து, அருந்ததி பார்த்தனர்.

இருவரும் இல்லறம் தொடங்கினர். ஒழுக்க சீலரான கணவருக்கு அல்லும் பகலும் பணிவிடைகள் செய்து புனிதம் அடைந்தாள் மரகதம். தினந்தோறும் கணவரை நாடி வந்த சான்றோர்களை வரவேற்று, உபசரித்து, விருந்து படைத்து பண்பட்ட கிரக லட்சுமியாக விளங்கினள். கணவ

ரோடு சேர்ந்து தர்ம நூல்களையும் புராணக் கதைகளையும் படித்துயர்ந் தாள். மாலை வேளைகளில இருவரும் ஸ்ரீ வரதராஜ ரையும் ஸ்ரீ காமாட்சியை யும் ஸ்ரீ ஏகாம்பரநாதரை யும் தரிசித்து விட்டு வந்த பிறகே, உணவருந்தி உறங்கச் செல்வார்கள்.

தெளிந்த நீரோடை போன்ற நிம்மதியான வாழ்வில் துயரம் கலந்து அவர்களைக் கலக்கியது. தங்கள் வாழ்வை மலரச் செய்யவும், தங்கள் வம் சத்தை விளங்கச் செய்ய வும் ஒரு மகன் பிறக்க வில்லையே என்று வரத ராஜ ஜோசியரும் மரகத மும் ஏக்க முற்றனர். 'அம் பிகையின் அருள் நமக்குக் கிட்டாதோ, சந்ததி யில் லாமலேயே நாம் மரித்து விடுவோமோ?' என்று இரு வரும் தனிமையில் இருந்த போதெல்லாம் எண்ணி, எண்ணி மருகினர்.



ஸ்ரீ வரதராஜர் ஆலய கோபுரம்.

அவர்கள் விரதம் இருந் தனர். தான தர்மங்கள் செய்தனர். புனிதத் தலங்களுக்கு யாத்திரை சென் றனர். புண்ணிய நதிகளில் நீராடினர். அவர்கள் போகாத கோயில் இல்லை, தொழாத தெய்வம் இல்லை. அத்தனை செய்தும் ஒருவித பலனும் இல்லை.

காமகோடி சாஸ்திரியாரும் மன வேதனைப்பட்டார். மரகதமும் மாப் பிள்ளையும் உள்ளுக்குள்ளேயே குமைந்து, உள்ளம் குமுறும் காட்சி அவர் நெஞ்சை அறுத்தது. காமாட்சி யின் சந்நிதிக்குச் சென்றார். கண்கள் கலங்க, அன்னையைத் தோத்திரம் செய்தார். "நான் செய்த பூஜைகள் போத வில்லையா அம்மா? ஆசாரத்தில் தவறி யிருந்தாலோ, என் வழிபாட் டில் குறை யிருந்தாலோ எனக்குத் தண்டனை கொடு. என் குழந்தைகளை தண்டிக்க வேண்டாம். உன்னைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன்...... லோக நாயகியே! கருணைக் கடலே! குலக் கொழுந்து ஒன்று யாசிக்கிறேன். உன் திருக் கடாட்சம் பட்டால் பட்ட மரமும் துளிர்க்குமே, தாயே!" என்று வெகு நேரம் கண்ணீர் விட்டுக் கதறினர்.

குல தேவி கருணை காட்டினுள். பராசக்தி பக்தர்களை கை விடுவாளா? அன்று இரவே, காமாட்சியன்னை சாஸ் திரியாரின் கனவில் தோன்றி, "தம்ப திக்கு வெண்ணெய் கொடு. ஞானக் குழந்தை பிறக்கும்" என்று கூறி மறைந்தாள். அக்கணமே விழித்துக் கொண்டு விட்டார் பெரியவர். விடி யும் வரை காமாட்சி தேவியின் அருள் வெள்ளத்தில் மூழ்கித் திளைத் துக் கொண்டிருந்தார்.

காலையில் நீராடி விட்டு, அநுட்டா னங்களையெல்லாம் முடித்துக்கொண்டு தம்பதியை அருகில் அழைத்து தாம் கண்ட கனவைப் பற்றிக் கூறினர். இருவரும் மெய் சிலிர்த்துப் போய், செய்வதறியாது திகைத்து, மகானின் பாதங்களில் விழுந்து வணங்கினர். ஆனந்தக் கண்ணீர் பெருக்கெடுத்து ஓட, கரங் கூப்பி அம்பிகையைத் தொழுத வண்ணம் இருந்தனர். பின் னர் காமகோடி சாஸ்திரியார், நவ நீதம் எடுத்து, பராசக்திக்குப் படைத்து விட்டு, துதி செய்து, மந்தி ரங்கள் ஜபித்து அதை இருவருக்கும் கொடுத்து, உண்ணும்படிக் கூறினர்.

பிடி அரிசித் திட்டம்

யாவர்க்குமாம் இறைவற்கொரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவிற்கொரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கின்னுரை தானே

(திருமூலர்-திருமந்திரம்)

ஒவ்வொரு வீட்டிலும் ஒரு கலயம் வைத்து தினந்தோறும் சமையலுக்கு முன் ஒரு பிடி அரிசியும் இரண்டு காசுகளும் போடும்படியாக ஸ்ரீ காஞ்சி ஆசாரிய சுவாமிகள் அருட் கட்டளை யிட்டுள்ளார்கள்.

தன் வீட்டின் பக்கத்திலுள்ள பத்து வீடுகளில் இதை செய்யும்படியும் கேட்டுக் கொள்ள வேண்டும்.

அமாவாசையன்று பிடி அரிசி கலயத்தில் சேர்ந்திருக்கும் அரிசியையும் காசுகளையும் ஏதாவது ஒரு கோயிலுக்கு கொடுத்து விட வேண்டும். முதல் மாதம் இப்படிச் செய்ய வேண்டியது. அடுத்த அமாவாசை தினத்தன்று சேரும் அரிசி, காசுகளை ரொம்பவும் கஷ்டப்படும் ஒரு குடும்பத்திற்குக் கொடுக்க வேண்டும். இவ்விதம் ஒரு மாதம் கோயிலுக்கும், ஒரு மாதம் ஓர் ஏழைக் குடும்பத்திற்கும் மாறி மாறி எல்லோரும் வம்ச பரம்பரையாக கொடுத்து வர வேண்டும்.

ஒவ்வொரு மாதமும் நடந்த விவரங்களை காஞ்சீபுரம் ஸ்ரீமடத்திற்குத் தெரிவித்துக் கொள்ளலாம்.

தேவியின் பிரசாதத்தைப் பரம பக்தியுடன் பெற்று, இருவரும் உட்கொண்டனர்.

அன்னையின் அருட் பிரசாதம் அருமருந்தன்றோ? மரகதம் கருவுற்றாள். உற்றார் உறவினர் பெரும் மகிழ்ச்சியுற்றனர். ஞானக் குழந்தை வளர்பிறை போல் வயிற்றில் வளர்ந்து வந்தது. வளைகாப்பு, சீமந்த வைபவங்கள் இனிது நடந்தேறின. மங்கையர் மரகதத்திற்கு மலர் சூடி மகிழ்ந்தனர். புண்ணியனைச் சுமந்த புண்ணியவதியின் திருமேனி பூரண சந்திரன் போல் பொலிவுற, தந்தத்தில் கடைந்தெடுத்த பதுமை போல் தோற்றம் அளித்தாள்.



நாளும் கோளும் கூடின. விண்ணோர் ஆசி கூற, மண்ணோர் ஆசி பெற, கண்ணனுக்கு இணையான ஆண் மகவை ஈன்றெடுத்தாள் மரகதம். 1870-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 22-ம் நாள், சனிக்கிழமை ஹஸ்த நட்சத்திரம் கூடிய மங்கள நாளில் காமாட்சி தேவி அளித்த வரப் பிரசாதமாக அக்குழந்தை அவனியில் அவதரித்தது.

பாட்டனாரின் பெயராக அமைந்ததாலும், குல தெய்வமான வேங்கடாசலபதிக்கு உரிய சனிவாரத்தில் பிறந்ததாலும் அத் தெய்வக் குழந்தைக்கு சேஷாத்ரி என்ற திரு நாமம் சூட்டப்பட்டது.

வளரும் குழந்தையின் திருவிளையாடல்களில், பின்னர் வாழப் போகும் மகானுக்குரிய அருமை பெருமைகளைக் காண முடிந்தது. பராசக்தி அளித்த ஞானப் பிள்ளையாதலால், தெய்வ சிந்தனையும் இறை வழி பாடும் அதற்கு இயற்கையாகவே அமைந்து விட்டது.

அன்னை மரகதத்தின் இடுப்பில் அமர்ந்து, ஆலயங்களுக்குச் சென்ற போது, பிறரைப்போலவே கைகூப்பித் தொழுதார் குழந்தை சேஷாத்ரி. தாய் பக்திப் பரவசத்துடன் துதிப் பாடல்களைப் பாடும் போது மெய்ம்

மறந்து கேட்ட சேஷாத்ரி, மழலை மொழியிலேயே சங்கீதப் பயிற்சி பெற்றார். நான்கு வயது நிரம்புவதற்குள்ளேயே அந்தத் தாய், மகனுக்கு கிருஷ்ணாஷ்டகம், ராமாஷ்டகம், மூகபஞ்சசதி, குருஸ்துதி முதலிய தோத்திரப் பாடல்களைக் கற்றுத் தந்தாள். தத்தித்தத்தி நடை பயிலும் போதும், தடுக்கித் தடுக்கி விழும் போதும், சேஷாத்ரி தோத்திரங்களை முணு முணுத்துக் கொண்டிருப்பார்.



வரதராஜ ஜோசியருக்கு ஆனந்தம் தாங்க முடியவில்லை. 'குழநதை பிறக்குமா?' என்று ஏங்கியவர், 'ஞானக் குழந்தை பிறக்க என்ன பாக்கியம் செய்தேனோ?' என்று புளகிதம் அடைந்தார். சீடர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கும் போது பையனை மடியில் வைத்துக் கொள்வார். வேதாந்த பாடங்களானாலும், சேஷாத்ரி கவனமாகக் கேட்பார்.

தந்தை கண்களைமூடித் தியானத்தில் அமர்ந்திருப்பதைப் பார்க்கும் குழந்தை சேஷாத்ரி, தானும் அவ்வாறே அமர்ந்து, சின்முத்திரை காட்டித் தவம் இருப்பது போல் காட்சி தருவார். பார்ப்பவர்கள் பிரமித்துப் போவார்கள்!

தங்கப் பதுமையாக நடமாடிக் கொண்டிருந்த சேஷாத்ரிக்கு நான்கு வயது நிரம்பியது. ஒரு நாள் தாயுடன் வரதராஜப் பெருமாள் ஆலயத்திற்குச் சென்றார். அப்போது திருவிழாக் காலம். விற்பனைக்காக ஒருவன் ஒரு சாக்கு நிறைய பாலகிருஷ்ண விக்ரகங்களைக் கொண்டு வந்திருந்தான். அதைக் கண்ட சேஷாத்ரி தனக்கு ஒரு பொம்மை வேண்டும் என்று தாயிடம் கெஞ்சினார். அன்னை அதைக் காதில் வாங்கிக் கொள்ளவே இல்லை. கடைக்காரன் குழந்தையின் அழகைக் கண்டு சொக்கிப் போனான்.

''அம்மா, உங்க குழநதையைப் பார்த்தா கிருஷ்ணனைப் போலவே இருக்குது. அது ஆசைப்பட்டு கேட்குது. ஒரு பொம்மையை எடுத்துக் கொள்ளட்டும்''...... என்று சொல்லி சேஷாத்ரியை அருகில் அழைத்து தன் கையாலேயே ஒரு பொம்மையை எடுத்துக் கொள்ளும்படி கூறினான். மகிழ்ச்சி அடைந்த சேஷாத்ரி, சாக்குப் பையில் தனது சிறு கையை விட்டு, ஓர் அழகிய கிருஷ்ண விக்ரகத்தை எடுத்துக் கொண்டு, துள்ளிக் குதித்து ஓடினார். மரகதம் பணத்தை எடுத்துக் கொடுத்தாள். ஆனால், கடைக்காரன் அந்தக் காசை பெற்றுக் கொள்ள மறுத்து விட்டான்.

என்ன ஆச்சரியம்! அன்று மாலைக்குள் அவன் கொண்டு வந்திருந்த ஓராயிரம் வெண் கல விக்ரகங்களும் விற்பனை ஆகிவிட்டன!

— தொடரும்.



இந்த முறை மயிலாப்பூர் கபாலி கோயிலில் நடந்த அறுபத்து மூவர் உற்சவம் ஞாயிற்றுக்கிழமை வரவே, வழக்கத்தைவிட அதிகமான கூட்டம்! மாலை நான்கு மணிக்கு 'வைரசாமி' அங்கு வந்த உடன், அத்தனை கூட்டமும் அவரைப் பார்க்கச் சென்றது. சுமார் 40 வருடங்களாக அறுபத்து மூவர் உற்சவத்தில் கலந்து கொள்ளும் 'வைரசாமி'; சிந்தாதிரிப்பேட்டை ஐயா முதலித் தெரு கோயிலில் உள்ள சுப்பிரமணிய சுவாமிதான்! பிரபல துணி வியாபாரிகள் பி. பி. லட்சுமணஷா குடும்பத்தினரின் பாதுகாப்பில் உள்ள இந்தக் கோயில், அவர்கள் குடும்பம் வழங்கிய கொடைகளால வளம் பெற்று இருக்கிறது.

மாசி மகத்தன்றும், அறுபத்து மூவரன்றும் சுப்பிரமணிய சுவாமியை, முன்னும் பின்னும் முழுக்க முழுக்க வைர நகைகளாலேயே அலங்கரித்து பவனி வரச் செய்கிறார்கள்! நாலைந்து லட்ச ரூபாய்க்கு மேல் மதிப்புள்ள நகை அணிந்து, போலீஸ் காவலுடன் வருவதால் குமாரசுவாமிக்கு 'வைரசாமி' என்ற பெயரே நிலைத்து விட்டது!

அசோகா ஓட்டலில் சிதார் மன்னர், ரவிசங்கரை, டிபன் வேளையில் பார்க்கும் வாய்ப்புக் கிடைத்தது. இட்லி, வடை, போண்டாக்களையே நிறைய சாம்பாரில் நனைத்து நம்மைப் போல சாப்பிட்டுக் கொண்டிருந்தார் அவர்! பிறகு விசாரித்ததில் சென்னைக்கு வந்தால் ரவிசங்கர், வட இந்திய உணவுகளையே தொடுவதில்லை என்று தெரிந்தது. தமிழ் நாட்டு உணவைத்தான் விரும்பிச் சாப்பிடுவாராம்.

எஸ். ஐ. ஈ. டி. மகளிர் கல்லூரியின் அரங்கத்தில் பண்டிட் ரவிசங்கருக்கு ஐம்பது வயது நிறைந்ததற்கு ஒரு பாராட்டு விழாவை நடத்தினர், பாலசுப்பிரமணிய சங்கீத சபாவினர். அதில் செம்மை வைத்தியநாத பாகவதர் எழுந்து நின்று பாராட்டிப் பேசியதும், சென்னையில் இருக்கும் பல இசைக் கலைஞர்கள் இந்த விழாவிற்கு வராமல் போனதும் வந்திருந்த ரசிகர்களுக்கு வியப்பை அளித்தது.

திருமதி சௌகார் ஜானகி தனது சொந்த உபயோகத்திற்கென்று எப்போதும் ஒரு முகம் பார்க்கும் கண்ணாடியை வைத்துக்கொண்டிருக்கிறார். அதில் பார்த்தபடி தனது மேக்கப்பை சரி செய்து கொண்டிருந்தார் ஒரு நாள். எதிரே வந்தவருக்கு ஓர் ஆச்சரியம்! கண்ணாடியின் பின்புறம் சௌகார் ஜானகியின் படமே ஒட்டப்பட்டிருந்தது! "நான் கண்ணாடியில் பார்த்துக் கொண்டிருக்கும் போது, எதிரில் இருப்பவர்களுக்கு என் முகம் தெரியாமல் போய் விடுமே! அதற்காக இப்படி என் படத்தையே பின்புறம் ஒட்டி வைத்திருக்கிறேன்" என்றார் அவர்!

கல்பாக்கத்தில் அணு மின்நிலையம் அமையப் போகும் இடத்தை சுற்றிப் பார்க்கச் சென்ற போது, முதலில் கண்களில் பட்டது கல்லில் உருவாகியிருந்த 'நந்தி'! திட்ட வேலைகள் ஆரம்பித்து நிலப் பகுதிகளை சரிசெய்த போது, இந்த நந்தி கிடைத்ததாம்! அதைப் 'பிரதிஷ்டை' செய்து அடிக்கடி எண்ணெய் தடவி மொழுமொழுவென்று வைத்திருக்கிறார்கள். அதோடு அங்கே பணி புரியும் ஊழியர்கள் அங்குள்ள காமாட்சி அம்மன் கோயிலையும் புதுப்பிக்கிறார்கள்.

பார்த்தசாரதிசாமி சபாவின் 70-ம் ஆண்டு விழாவில் சிட்டிபாபுவின் வீணைக் கச்சேரி நடந்து கொண்டிருந்தது. தமிழக அமைச்சர் நெடுஞ்செழியன் கலந்து கொண்ட அந்த விழாவில், தமிழக செய்திப் படம் எடுப்பவர்களும் படம் பிடித்துக் கொண்டிருந்தார்கள். இவர்கள் சிட்டிபாபுவை படம் எடுக்க முயன்றபோது அவர் தடுத்து விட்டார். பிறகு அவரிடம் காரணம் கேட்டோம். "என் அனுமதியின்றி என்னைப் புகைப்படம் எடுப்பதையே நான் விரும்புவதில்லை. அதோடு நியூஸ் ரீல் எடுப்பவர்கள் எங்களைப் படம் பிடிக்கிறார்களே தவிர, அதைப் பிறகு திரையிடுவதில்லை. என் படத்தை குப்பைக் கூடையில் எறிவதற்கு நான் ஏன் அனுமதிக்க வேண்டும்" என்றார் சிட்டிபாபு!

கடுமையான கோடையிலும் குளுமை தந்திடும் புதுமை

புரூட்னிக்





ஆர்ப்பரிக்கும் அலைகள்! உடல் தழுவும் கடல் காற்று! பகல முழுவதும் சூரிய வெப்பம் ஏற்றதால பொனமயமாக மின்னும் மணல்...மாலை நேரக கடறகரை மனோகரமாக, மகிழ்வூட்டுவ தாகத் திகழகிறது.

கடற்கரையில் பெறும் ஆனந்தம் முழுமைபெற உதவுவது புருடனிக்! பழச்சத்து நிறைநத, கியாஸ கலவாத (Non-aerated) நயமான பானம் புருடனிக. உஙகள் உற்சாகம் அதிகரிக்க உதவு கிறது. மாஙகோ, பைனாபபிள், கிரேப என மூனறு ரகஙகளில புரூட்னிக் கிடைககிறது.

fp புரூட்னிக் ப்ராடக்ட்ஸ்

(உரிமையாளர்கள் : தி அமால்கமேடடட் காபி எஸடேடஸ லிமிடெட், கோயமுத்தூர்)

பூநதமல்லி நெடுஞ்சாலை, சென்னை-10

தநதி: 'FRUITNIK' போன் : 62126

கடற்கரையில், கோடைச்சோர்வு நீங்கி குதூகலம் பெற புரூட்னிக்

EP.FP.35



வராகேச்வரர் ஆலயம் (தாமல்).

அருணாசல மகிமை

18

மங்கல வாழ்விழந்த மரகதத்திற்கு உலகமே இருண்டிருந்தது. வாழ்க்கையே சூன்யமாகி விட்டது. அவளுக்கு இரவில் உறக்கமே வரவில்லை. தப்பித் தவறி அசதியால் சற்றுக் கண்ணயர்ந்தால், வரதராஜர் கனவில் வந்து அவள் பக்கத்தில் அமருவார்; அன்புடன் பேசுவார். அந்தக் காட்சிகள் உண்மை போலவேயிருக்கும். கண் விழித்ததும் மாயத் தோற்றம் மறைந்து, மனவேதனை அதிகமாகும்.

சில சமயம், விழித்துக் கொண்டிருக்கும் போதே கணவர் அழைப்பது போல் அவளுக்கு ஒரு பிரமை தட்டும். 'இதோ வந்துட்டேன்(ஞ)' என்று குரல் கொடுத்துக் கொண்டே ஓடுவாள். பிறகு, தன் நிலை அறிந்து புலம்புவாள். பாவம், இப்படியொரு நரக வாழ்க்கை.

ஆகாரத்தைக் குறைத்துக் கொண்டாள் மரகதம். எந்நேரமும் தியானமும் ஜபமுமாக சந்நியாசினியாக காலம் கடத்தினாள். கண்ணீர் சிந்தியபடியே இருந்த தாய்க்கு, கண்ணின் மணிகளான சேஷாத்ரியும் நரசிம்மனும் சற்று ஆறுதல் அளித்தார்கள். இருவரையும் கட்டித் தழுவுவாள். ஒரு கணம் பாசத்தால் கட்டுண்டு, பேரின்பத்தில மிதப்பாள். அடுத்த கணம், 'நம் செல்வங்களின் அறிவைப் பாராட்ட கணவன் இல்லையே' என்று நினைத்துக் கொள்வாள். துக்கம் தொண்டையை அடைக்கும். அடி வயிற்றைக் கலக்கும். பொங்கி வரும் கண்ணீரை புடவைத் தலைப்பால் துடைத்துக் கொள்வாள்.

மரகதத்தின் கோலமும் அவள் படும் வேதனையும் ஞானக் கிழவரான காமகோடி சாஸ்திரிகளையே உலுக்கியது. இடம் மாறினால் இதய கனம் சற்று குறையலாம் என்று கருதி, மரகதத்தையும் குழந்தைகளையும் காஞ்சீபுரத்திலிருந்து வழூருக்கு அழைத்துச் சென்றார். அமைதி தவழ்ந்த அந்தக் கிராமத்தின் சூழ்நிலை, துயரத்தில் ஆழ்ந்தவளுக்கு சற்று மனச் சாந்தியை அளித்தது.

சேஷாத்ரிக்கு அப்போது பதினான்கு வயதே நிரம்பி இருந்தது. அறிவுச் சுடராகப் பிரகாசித்த சிறுவனுக்கு

பரணீதரன்

டபநிடதங்கள், பிரும்ம சூத்திரங்கள், பகவத் கீதை யாவற்றையும் போதித்தார் பாட்டனார். தம் வம்சத்திற்குரிய மந்திர ரகசியங்களை உபதேசித்தார். வேதாந்த சாஸ்திரங்களைப் புகட்டினார். தாம் அறிந்த வித்தைகளை யெல்லாம் குலவிளக்குக்கு கற்றுத் தந்தார். ஒளியிலிருந்து ஒளி பிறந்தது.

பதினைந்தாவது வயது நிரம்புவதற்குள்ளேயே சேஷாத்ரி, புராண இதிகாசங்களைக் கற்றுணர்ந்து விட்டார். அச்சமயத்தில் நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சி இதற்கோர் எடுத்துக் காட்டாக விளங்குகிறது.

திருவாங்கூர் திவானாயிருந்த சர் சி. பி. ராமசாமி ஐயரின் தாய்வழி பாட்டனாரான வெங்கடசுப்பையர் அப்போது வந்தவாசியில் தாசில்தாராக இருந்தார். ஸ்ரீமத் பாகவதமும் ராமாயணமும் கேட்க வேண்டும் என்று அவர் காமகோடி சாஸ்திரிகளை நாடி வந்தார். மரகதத்தையும் சேஷாத்ரியையும் அழைத்துக் கொண்டு வந்தவாசிக்குச் சென்று, வெங்கடசுப்பையர் இல்லத்திலேயே ஓராண்டு தங்கினார் சாஸ்திரிகள். மூப்பின் காரணமாக உடல் தளர்ச்சியுற்றிருந்ததால் சேஷாத்ரியைக் கொண்டே தாசில்தாரின் விருப்பத்தை நிறைவேற்றி வைத்தார். சிறுவன் சேஷாத்ரி சுலோகங்களைப் படித்து, பொருள் கூறியதைக் கேட்டு அதிசயிக்காதவர்களே இல்லை.

காமகோடி சாஸ்திரிகளுக்கு தொண்ணூறுக்கு மேல் வயதாகி விட்டது. ஆன்ம பலம் இருந்தாலும், உடல் பலம் குன்றி விட்டது. ஏதாவது ஒரு நோய் அவரை வாட்டிக் கொண்டே யிருந்தது. அதனால் எல்லோரும் புறப்பட்டு காஞ்சீபுரம் வந்து விட்டார்கள்.


காஞ்சீபுரம் வந்த சில நாட்களுக்குள்ளேயே தமது இறுதிக் காலம் நெருங்கி விட்டதை உணர்ந்தார் காமகோடி சாஸ்திரிகள். அவர் ஆபத் சந்நியாசம் பெற்றுக் கொள்வது என்று முடிவு செய்து, காஞ்சியிலுள்ள உபநிஷத் பிரும்ம மடத்திற்குச் சென்றார். அப்போது மடாதிபதியாயிருந்த ஸ்ரீ கிருஷ்ணானந்த சரஸ்வதி சுவாமிகள் சாஸ்திரியாருக்கு முறைப்படி சந்நியாச தீட்சையளித்து, பிரும்மானந்த சரஸ்வதி என்ற யோகப் பட்டத்தையும் வழங்கினார்.

துறவுக் கோலம் பூண்ட பிறகு ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோயிலில், சக்கரத்தாழ்வார் சந்நிதியிலேயே தங்கி யிருந்தார் பிரும்மானந்த சரஸ்வதீ என்ற காமகோடி சாஸ்திரிகள். மரகதம், பிள்ளைகளுடன் சென்று தினமும் பெரியவருக்கு பிட்சை யளித்து வந்தாள்.

சேஷாத்ரி சுவாமிகளின் அத்தை வெங்கலட்சுமி அம்மாள் தம் கணவர் சுந்தரமய்யருடன் காஞ்சிக்கு மேற்கே எட்டாவது மைலிலிருக்கும் தாமல் என்ற கிராமத்தில் வசித்து வந்தாள். சுந்தரமய்யரின் சகோதரரான பரசுராம சாஸ்திரிகள் காஞ்சீபுரம் வந்து பிரும்மானந்த சரஸ்வதி சுவாமிகளை தாமலுக்கு அழைத்துச் சென்றார். பத்து தினங்களுக்கெல்லாம் சுவாமிகள் ஸித்தி யடைந்து விட்டார். அவரை அங்குள்ள பாம்புக் கால்வாய் என்று அழைக்கப்படும் சர்ப்ப நதிக் கரையிலேயே அடக்கம் செய்தார்கள்.

ஸ்ரீ காமகோடி சாஸ்திரியாரின் அதிஷ்டானத்தைத் தரிசித்து வரலாம் என்று தாமலுக்குச் சென்றேன். ஆனால், சமாதிக் கட்டடம் இருக்கும் இடத்தைக் கண்டு பிடிக்கவே முடியவில்லை. அந்த ஊரில் தற்போது உள்ள வயோதிகர்களுக்குக் கூட அதிஷ்டானத்தைப் பற்றி நிச்சயமாக ஒன்றும் தெரியவில்லை. அந்த ஊர் மணியக்காரர், சர்ப்ப நதிக் கரையில் ஓர் இடத்தைக் காட்டி, "இங்கு ஒரு சமாதிக் கட்டடம் இருந்துதுங்க. இந்த மனையை வாங்கினவரு, மேலே இருந்த

ஸ்ரீ சேஷாத்ரி சுவாமிகளின் உறவினர் வசித்ததாகக் கூறப்படும் வீடுகள் (தாமல்).



கட்டடத்தை இடிச்சுட்டாரு... தோண்டி பார்த்தால் உள்ளே ஒரு வேலை கட்டடம் இருக்கலாம்'' என்று கூறினர். தற்போது சேஷாத்ரி சுவாமிகளின் உறவினர் யாருமே அந்த ஊரில் இல்லை. ஒரு காலி மனையையும் இரண்டு பழைய ஓட்டு வீடுகளையும் காண்பித்து, ''இங்கே தான் சேஷாத்ரி சுவாமிகளின் பந்துக்கள் வசித்ததாகக் கேள்வி'' என்று ஓரிருவர் கூறினர்.

ஸ்ரீ காமகோடி சாஸ்திரிகள் சில வருஷங்கள் தங்கியிருந்த வழூர் கிராமத்திற்கும் சென்றேன். காஞ்சீபுரம்—வந்தவாசி பாதையில், வந்தவாசிக்கு இரண்டு மைல்களுக்கு முன்னால் கிழக்கே திரும்பும் பாதையில் நான்காவது மைலில் அந்த அமைதியான கிராமம் இருக்கிறது. உள்ளே நுழையும் போதே அழகான குளமும், அதன் கரையில் ஒரு பெருமாள் கோயிலும் கண்ணில் படுகின்றன. கோயில் சிதலமாகி, பூஜை யெல்லாம் நின்று போய் பாழடைந்து காணப்படுகிறது. முட்புதர்களும் அசுத்தங்களும் நிறைந்த கோயிலில் மூலவர் மாத்திரம் பரிதாபமாக நின்று கொண்டிருக்கிறார்.

அக்கோயிலுக்குத் தெற்கே ஒரு காலத்தில் அக்ரகாரம் இருந்திருக்கிறது. அதை அகரம் என்கிறார்கள். அங்கிருந்த பத்து பதினைந்து வீடுகளில் ஒரு வீட்டில்தான் காமகோடி சாஸ்திரிகள் வசித்திருக்க வேண்டும். அந்த வீடுகள் ஒன்று கூட இப்போது இல்லை. காலி மனைகளைக் காட்டி, ''இங்கே ஐயமாருங்க இருந்ததாகச் சொல்லுவாங்க. வீடெல்லாம் இடிஞ்சி போச்சு. இந்த இடத்தை வாங்கினவங்க இங்கேயிருந்த நாலஞ்சு துளசி மாடங்களை எடுத்து, அதோ அங்கே போட்டாங்க. அந்தப் புதருக்குள்ளே பார்த்தா தெரியும்'' என்று ஓர் அம்மாள் கூறினாள்.

திக்கற்ற மரகதத்திற்கு மைத்துனர் ராமசுவாமி ஜோசியரும், ஏரகத்தி கல்யாணியும் பெரும் ஆதரவாக இருந்தனர்.

கணவனை யிழந்ததிலிருந்தே ஊண், உறக்கம் குறைந்து விட்ட மரகதம், தந்தையின் பிரிவுக்குப் பிறகு ஆகாரத்தை அடியோடு குறைத்துக் கொண்டு விட்டாள். பாதி நாள் உபவாசம் இருந்தாள். ஜபத்திற்கும் தியானத்திற்கும் அதிக நேரத்தை ஒதுக்கினாள்.

சேஷாத்ரிக்கு பதினாறு நிரம்பி பதினேழாவது வயது நடந்து கொண்டிருந்தது. மகனை அழைத்துப் பக்கத்தில் அமர்த்தி, தான் கற்றுத் தந்த சுலோகங்களைச் சொல்லச் சொல்லி கேட்பாள். வேத மந்திரங்களை ஓதச்

குளமும் பெருமாள் கோயிலும் (வழூர்).



சொல்லி, சன்னமான குரலைக் கேட்டு மகிழ்வாள். வேதாந்தக் கருத்துக்களுக்குப் பொருள் கேட்டு பூரிப்பாள். பக்தி, ஞான யோகங்களைப் பற்றி விவாதிப்பாள். காமகோடி சாஸ்திரிகள் தேவியின் மீது இயற்றியுள்ள கீர்த்தனங்களை இருவரும் சேர்ந்து பாடுவார்கள். சேஷாத்ரியைப் பொறுத்த வரையில் அன்னை காமாட்சி வேறு, அன்னை மரகதம் வேறு இல்லை; தாயைக் கண்டால் அவருக்கு அத்தனை பக்தி, அத்தனை அன்பு, அத்தனை பரவசம்.

உடல் மெலிந்து, உள்ளம் தளர்ந்து அணுஅணுவாக மரித்துக் கொண்டிருந்த மரகதம், அன்பு மகனுக்குத் திருமணம் செய்து பார்க்க வேண்டும் என்று விரும்பினாள். ஆனால், அந்த ஆசையை அவள் யாரிடமும் கூற வில்லை.

தாமலில் இருந்த அத்தை வெங்கலட்சுமிக்கு காகினி என்று ஒரு பெண் இருந்தாள். அந்தப் பெண்ணை சேஷாத்ரிக்குக் கொடுத்து விட வேண்டும் என்று தாய்க்குக் கொள்ளை ஆசை. வரதராஜருக்கும் அப்படியொரு எண்ணம் இருந்ததை அவள் அறிவாள். ஒரு நாள் வெங்கலட்சுமி புறப்பட்டு காஞ்சிபுரம் வந்தாள். ராமசுவாமி அண்ணாவிடம் மெள்ள பேச்சைத் தொடங்கினாள். ஆனால், இந்த சம்பந்தம் வேண்டவே வேண்டாம் என்று கண்டிப்பாகக் கூறி, சகோதரியின் அந்த எண்ணத்தை முளையிலேயே கிள்ளி எறிந்து விட்டார் ராமசுவாமி ஜோசியர்.

''ஏன் அண்ணா அப்படிச் சொல்றே?'' என்று கவலையுடன் கேட்டாள் வெங்கலட்சுமி.

''வெங்கு, சேஷுவின் ஜாதகத்தை நான் அலசிப் பார்த்துட்டேன். அது சந்நியாச யோக ஜாதகம். அவனுக்குக் கல்யாணமோ குடும்ப வாழ்க்கையோ கிடையவே கிடையாது. அதனால்தான் அப்படிச் சொன்னேன். நீ வேறு இடம் பார்ப்பதுதான் நல்லது'' என்று அடித்துக் கூறி விட்டார் அவர். வெங்கலட்சுமிக்குத் தூக்கி வாரிப் போட்டது. முறைப் பையன் கிடைக்க வில்லையே என்ற ஏக்கம் அவளுக்கு இருந்தாலும், நல்ல வேளையாக அண்ணன் உண்மையைச் சொன்னாரே என்ற மகிழ்ச்சியும் முகத்தில் பளிச்சிட்டது.



எல்லையம்மன முததுநாயகி ஆலயம் (வடூர்).

அண்ணனுக்கும் தங்கைக்கும் இடையே கூடத்தில் நடைபெற்ற இந்தக் 'கல்யாண'ப் பேச்சு, முற்றத்தில், வாத மரத்தடியில் ஜபம் செய்து கொண்டிருந்த மரகதத்தின் தலையில் பேரிடியாக விழுந்தது. மைத்துனர் கூறியது அவள் இதயத்தை சுக்கு நூறாக உடைத்தெறிந்தது. மகனைப் பற்றி அவள் கட்டிய கோட்டைகளெல்லாம் தவிடு பொடியாயின. ''ஐயோ! என் தலையில் பெரிய கல்லாகத் தூக்கி போட்டுவிட்டார்களே'' என்று கதறி அப்படியே அம்மரத்தடியில் மூர்ச்சையாகி விழுந்து விட்டாள் மரகதம்.

கோயிலிலிருந்து திரும்பிய சேஷாத்ரி, மயக்கம் தெளிந்து, பேயறைந்தது போல் படுத்திருந்த தாயை அணுகி, ''அம்மா, உனக்கு என்னம்மா உடம்பு?'' என்று பரிவுடன் விசாரித்தார்.

''கண்ணே. எனக்கு இனிமேல் என்னடா இருக்கிறது? என்னைப்போல் ஒரு பாவி பிறக்கவே வேண்டாம்: உனக்கொரு கல்யாணம் செய்து பார்க்கலாம் என்று நினைத்தேன். அந்த ஆசையிலும் மண் விழுந்து விட்டது. இனிமேல் இந்த உடம்பில் உயிர் எத்தனை நாள் ஓட்டிக் கொண்டிருக்குமோ, தெரியாது'' என்று கூறி விட்டு குமுறிக் குமுறி அழுதாள். தாயின் துயரத்திற்கான காரணத்தை அறிந்த சேஷாத்ரி, சிறிய தந்தை அத்தனை வெளிப்படையாக விஷயத்தை

உடைத்துச் சொல்லி யிருக்க வேண்டாம்'' என்று வருத்தப்பட்டார். வேறு என்ன செய்வார், பாவம்!

பத்து நாட்களுக்கெல்லாம், காகிலிக்கும் திருப்பத்தூர் வெங்கடரமணனுக்கும் தாமலில் திருமணம் நடந்தேறியது. அத் திருமணத்திற்கு காஞ்சீபுரத்திலிருந்து ஒருவரும் போகவில்லை!

மரகதம் தன் பயணத்திற்குத் தயாராகி விட்டாள். அவள் வந்த காரியம் முடிந்து விட்டது. பிடிவாதமாக உபவாசம் இருந்து உடலை வாட்டி வருத்தினாள். கணவனைப் பிரிந்து, மகனுக்காக உயிரைப் பிடித்துக் கொண்டிருந்தவள், இப்போது பறந்து போய் விடத் துடித்தாள். 'இந்தப் பேரழகை, குணக் குன்றை, குலக்கொழுந்தை குடும்பம் நடத்த வேண்டிய பருவத்தில் துறவிக் கோலத்தில் எப்படிக் காண்பது? மனத்தை எத்தனை கல்லாக்கிக் கொண்டாலும், அந்தக் கோலத்தைக் காணும் போது வயிறு பற்றி எரியாதா? ஐயோ, என்னால் முடியாது, முடியவே முடியாது.'

உரித்த நாராக உடல் மெலிந்து வாட, படுத்த படுக்கையாகி விட்டாள் மரகதம். மருந்து உட்கொள்ளவும் மறுத்தாள். தம்பி நரசிம்மனோடு அருகில் நின்ற சேஷாத்ரி, கண்ணீர் மணிகளை மாலைகளாகத் தொடுத்து, அன்னையின் திருவடிகளுக்குச் சார்த்திக் கொண்டிருந்தார்.

அன்று ஏகாதசி புண்ணிய தினம். சேஷாத்ரியை தன்னருகில் அழைத்து அணைத்துக் கொண்டாள் மரகதம். 'அம்ப சிவே' என்ற காமகோடி சாஸ்திரிகளின் கீர்த்தனத்தை தாயும் மகனும் சேர்ந்து சுருதி சுத்தமாக, உள்ளம் உருகப் பாடினர்.

பின்னர் மரகதம், ஆதிசங்கரரின் பஜகோவிந்தத்திலிருந்து,

சத்ஸங்கத்வே நிஸ்ஸங்கத்வம்
நிஸ்ஸங்கத்வே நிர்மோகத்வம்
நிர்மோகத்வே நிஸ்சலதத்வம்
நிஸ்சலதத்வே ஜீவன் முக்தி :

என்ற சுலோகத்தை, மூன்று முறை சேஷாத்ரியின் மார்பில் அடித்து அடித்துக் கூறினாள்.

சான்றோருடன் நெருக்கமுடன் பழகப் பழக உலகப் பற்றும் பாசமும் குறையும். பற்றற்று வைராக்கியமாக வாழ்ந்தால், மனத்தை மறைக்கும் மாயை விலகி விடும். அஞ்ஞானத் திரை விலகினால், உண்மைப் பொருள் புலப்படும். சத்திய தரிசனம், இந்த வாழ்விலேயே முக்தியை அளிக்கும்.

தாய், மகனுக்கு ஜீவன்முக்த நிலைக்கான வழியைச் சுட்டிக் காட்டினாள். பிரும்ம ஞான தத்துவத்தை உபதேசித்தருளினாள்.

பின்னர், 'சிதம்பரத்தைக் கண்டால் முக்தி, திருவாரூரில்பிறந்தால் முக்தி, காசியில் மரித்தால் முக்தி, அருணாசலத்தை நினைத்தாலே முக்தி' என்ற வடமொழி சுலோகத்தை மைந்தன் நெஞ்சில் கையை வைத்து மூன்று முறை கூறினாள். அந்த ஒலி, அருணாசல ஒளியாக சேஷாத்ரியின் உடலில் பாய்ந்தது. 'அருணாசல, அருணாசல, அருணாசல' என்று மும்முறை வாய் விட்டுக் கூறினாள் மரகதம். அண்ணாமலையை நினைத்த மாத்திரத்திலேயே மோட்ச சாம்ராஜ்யத்தின் மணிக் கதவம் மரகதத்திற்காகத் திறந்தது. மங்கல மணியோசை அந்த மாதர் குல மாணிக்கத்தின் வருகையை முழங்கியது. சேஷாத்ரியைப் பெற்றெடுத்த பெண்ணரசியைக் கண்டு

வழூரில் அந்தணர் வீதி இருந்த இடம்




புண்ணியம் பெற விண்ணரசர்கள் எல்லாம் அங்கு கூடி விட்டனர்.

தாயின் புனித உடலை தன் மார்பில் தாங்கிக் கொண்டார் சேஷாத்ரி. திட வைராக்கிய யோகத்தில் திளைத்திருந்த போதிலும் அந்த ஒருகணம் துடித்தே போய் விட்டார். 'அம்மா' என்று அலறியே விட்டார். அம்மூன்றெழுத்து மாமந்திரத்தில் அடங்கியுள்ள சக்திக்கு, ஈரேழு உலகத்திலும் ஈடு இணை உண்டோ?

தாய் தந்தையரை இழந்த சேஷாத்ரியையும் நரசிம்மனையும் குழந்தைகளற்ற ராமசுவாமி தம்பதி கண்ணும் கருத்துமாக காத்து வந்தனர். பெற்றோர் இல்லாத குறை அவர்களுக்கு இருக்கக் கூடாது என்பதற்காக அவர்களை எப்போதும் மகிழ்ச்சியாக வைத்துக் கொண்டனர். இருப்பினும் சேஷாத்ரிக்கு குடும்ப வாழ்க்கையில் பற்றோ, பாசமோ ஏற்படவில்லை. மரணப்படுக்கையில் அன்னை உபதேசித்த தத்துவம் அவரை ஆட்கொண்டது. ஞான வைராக்கியம் அவர் சிந்தையோடு கலந்து விட்டது. அருணாசலம் அவரை அழைத்தது.

பெற்றவளைப் பறிகொடுத்த சேஷாத்ரி, பேரருளின் துணையை நாடினார். பெரும் பொழுதை பூஜையறையில் கழித்தார். அங்கு அன்னை காமாட்சி, ஸ்ரீராமர் படங்களுடன் ஐந்து சிகரங்களுடன் கூடிய அருணாசலத்தின் சித்திரமும் இருந்தது. அருணாசல மலையை அவர் நேரில் கண்டதில்லை. அன்னை கூறிய சொல் உள்ளத்தில் புகுந்து சிந்தையில் குடியேற, அதன் வடிவத்தை கற்பனையில் கண்டு அதை அப்படியே சித்திரமாகத் தீட்டி வைத்து விட்டார்.

காலையில் ஐந்து மணிக்கு பூஜையறையில் நுழைந்து, கதவைத் தாளிட்டுக் கொண்டால், பகல் ஒரு மணிக்கோ இரண்டு மணிக்கோதான் வெளியே வருவார். எந்நேரமும் 'அருணாசலேசா', 'சோணாத்திரி நாதா' என்று உரக்கச் சொல்லிக் கொண்டிருப்பார். விடிய விடிய துர்க்கா ஸூக்தத்தை ஜபித்துக் கொண்டிருப்பார். அன்ன ஆகாரத்தை மறந்து விட்டார். உறக்கத்தை துறந்து விட்டார். சிறிய தந்தையும் சிற்றன்னையும் கவலை கொண்டனர். "சேஷு, பட்டினி கிடந்து, கண் விழித்து இப்படி ஓயாமல் பூஜை செய்தால் அப்புறம் உடம்புக்கு ஏதாவது வந்து விடும். வேண்டாமப்பா! உன் வயதுக்கு இத்தனை தீவிரமான உபாசனை கூடாது. குறைத்துக் கொள்" என்று அடிக்கடி கூறினார்கள்.



பிரும்மபுரீச்வரர் ஆலயம் (வழூர்).

வீட்டில் தொந்தரவு அதிகரிக்கவே, ஆலயங்களில் பொழுதைக் கழிக்கத் தொடங்கினார் சேஷாத்ரி. காலையில் ஸ்ரீ வரதராஜர் கோயிலில் சக்கரத்தாழ்வார் சந்நிதியில் அமர்ந்து ஜபம் செய்வார். மாலையில் காமாட்சி கோயிலைச் சுற்றிச்சுற்றி வருவார். சந்நிதியில் அமர்ந்து மூக பஞ்சசதியை கண்ணீர் மல்க சொல்லித் தோத்திரம் செய்வார். அம்பாளுக்கு நமஸ்காரம் செய்தபடியே யிருப்பார்.

சில சமயம் இரண்டு நாட்கள் சேர்ந்தாற் போல் வீட்டுக்கு வரவே மாட்டார். ராமசுவாமி ஜோசியர் ஊரெல்லாம் தேடி, ஏதாவது ஒரு வீட்டுத்திண்ணையிலோ கோயில் மண்டபத்திலோ அவரைக் கண்டு பிடித்து நல்ல வார்த்தைகள் கூறி, வீட்டுக்கு அழைத்து வருவார். சிறிய தந்தையின் அன்புக் கட்டளைக்குக் கீழ்ப் படிந்து இரண்டு மூன்று நாட்கள் வீட்டில் தங்கியிருப்பார். மறுபடியும் தெருவில் சுற்றக் கிளம்பி விடுவார்.

அழுக்குத் துணி. எண்ணெய் காணாத தலைமுடி. தாடி வளர்ந்த முகம். அதில் குங்குமப் பூச்சு. இந்தக் கோலத்துடன், வாயில் எதையோ முணு முணுத்துக்கொண்டு, சித்தப் பிரமை பிடித்தவன் போல் இளைஞர் சேஷாத்ரி வீதிகளில் திரிந்து கொண்டிருந்ததைக் கண்ட தாய்க்குலத்தின் பெற்ற வயிறு பற்றி எரிந்தது.

—தொடரும்

ஆண்களின் தேவைகளை நிறைவேற்றுகிறது ஒகாஸா



வாழ்விலே வெற்றி காண்பதற்கு வேண்டிய வலிமையை ஆண்களுக்கு அளிக்கிறது ஒகாஸா. வயதுக்கு மிஞ்சிய முதுமையைத் தடுத்து, ஆரோக்கியத்தைக் கூட்டி இளமைத் துடிப்பையும் வலிமையையும் மீட்டுத்தருகிறது ஒகாஸா. உலகெங்கிலும் இலட்சக் கணக்கான வயது வந்தவர்கள் இன்று ஒகாஸா சாப்பிடுகிறார்கள். இழந்த வலிமையை மீட்டுத் தரும் நவீன டானிக்-மாத்திரைகள் அவை.

ஒகாஸா-ஹார்மோ-பார்மா லிமிடெடின் லண்டன்-பெர்லின் தயாரிப்பு.


எல்லா பிரபல மருந்துக் கடைகளிலும் கிடைக்கிறது. அல்லது நேரகவும் பெறலாம்.

OKASA CO. PVT. LTD
P.O. BOX 396, BOMBAY-1.

இளமையின் எழிலுக்கும் கவர்ச்சிக்கும் மிகச் சிறந்த

"கிரேஸ்புல் ப்ரேஸியர்ஸ்"

ஸ்பெஷல் கட்பாடிகளையே கேட்டு வாங்குங்கள்.



விலை மலிவானது, அதிக காலம் நீடித்து உழைக்கிறது. உயர்ந்த பருத்தியிலுலான ஹார்வி—டுவின் டஸ்கர் சூப்பர் பைன் 2 X 2 பாப்லின் துணிகள் கொண்டு தயாரிக்கப் படுகிறது

நான்கு வித கப் சைஸ்களில் தமிழக பெண்களுக்கென்றே தயாரிக்கும் தனிப் பெரும் ஸ்தாபனம் எமது ஒன்றே. இதன் தரம் பற்றி பல சகோதரிகளின் பாராட்டுகளே நிரூபிக்கின்றன

நீங்களும் இன்றே வாங்குங்கள்.

1 VIJAYA (Cut Bodice)
Sharp Cup — A.B.C Cup sizes

2 NIRMALA (Cut Bodice)
Round Cup — AA, A.B.C Cup sizes

Available at:

ALL SUPER MARKETS AND LEADING SHOPS

'GRACEFUL BRASSIERS'

5-B South Usman Road,
(Near T.Nagar Main Bus Stand)
Madras-17

ஏன் அங்கீகரிக்கக்கூடாது?


பாரத நாடு சுதந்திரம் அடைந்தவுடன் நேருஜியின் தலைமையில் உலக சமாதானத்தை கருத்தில் கொண்டு ஆக்க முறையில் ஒரு நடு நிலைமைக் கொள்கையைக் கடைப்பிடித்து வந்தது. அதோடு புதிதாக சுதந்திரம் பெற்ற நாடுகளின் நல்லெண்ணத்தைப் பெறுவதற்கும், அண்டையிலுள்ள நாடுகளின் நட்பை வளர்த்துக் கொள்வதற்காகவும் குறிப்பிட்ட சில கொள்கைகளை பின்பற்ற வேண்டி யிருக்கிறது. உதாரணமாக அரபு நாடுகளின் நட்பை இழக்காமலிருப்பதற்காக இந்திய அரசு இஸ்ரேலை அங்கீகரிக்கவில்லை. இதே போல்தான் கம்யூனிஸ்டு சீனவுக்கு ஐ. நா.வில் இடம் தரவேண்டும் என்று கோருவதற்காக தேசிய சீனவை அங்கீகரிக்கவில்லை.


இருபதாண்டுகளுக்குப் பிறகு, இப்போது உலக அரசியல் சூழ்நிலை பெரிதும் மாறி விட்டது. அரபு நாடுகள் நாம் எதிர்பார்த்தபடி இந்தியாவுக்கு நண்பர்களாக நடந்து கொள்ளவில்லை. நண்பனு யிருந்த கம்யூனிஸ்ட் சீன நமது முதல் விரோதியாக மாறி விட்டது. இந்த நிலையிலும் நமது அரசு பழைய அயல் நாட்டுக் கொள்கையை விடாப் பிடியாகப் பின் பற்றி வருவதுதான் வியப்பாக இருக்கிறது.

கடந்த வாரம் பாராளுமன்றத்தில் பல கட்சிகள் பார்மோசாவிலுள்ள தேசிய சீன சர்க்காரை இந்தியா ஏன் அங்கீகரிக்கக் கூடாது என்று கேட்டனர். அதற்கு நமது அயல் நாட்டு மந்திரி அங்கீகரிக்க 'முடியாது' என்று பதில் சொல்லி யிருக்கிறார்.

தேசிய சீன இந்தியாவுக்கு எந்தத் தீங்கும் இழைக்கவில்லை. உண்மையில் செஞ்சீன நம்மீது படையெடுத்த போதும் பாகிஸ்தான் போர் தொடுத்த போதும் அது இந்தியாவின் பக்கம்தான் சாய்ந்திருந்தது.

அரசியல் நேர்மையை நோக்கும்போதும் தேசிய சீன கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக ஒரு தனி நாடாகவே நிலைத்திருந்து வருகிறது. அதே போல் தான் இஸ்ரேலும், உலக நாடுகளிடையே ஒரு நிலையான இடத்தைப் பிடித்து விட்டது. நமக்குப் பிடித்தாலும் பிடிக்கா விட்டாலும் வட வியட்நாம், தென் வியட்நாம், வட கொரியா, தென் கொரியா, கிழக்கு ஜெர்மனி, மேற்கு ஜெர்மனி ஆகிய நாடுகளை ஒப்புக் கொண்டிருப்பது போல், தேசிய சீனவையும் இஸ்ரேல் நாட்டையும் ஒப்புக் கொண்டுதான் ஆகவேண்டும்.





கைலாசநாதர் கோவில், காஞ்சீபுரம்.

அருணாசல மகிமை

19

உறவினரும ஊரிலுள்ளவர்களும் ராமசுவாமி ஜோசியரிடம் வந்து சேஷாத்ரியைப் பற்றி ஓயாமல் ஏதாவது சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

''வர வர ரொம்ப மோசமாயிண்டிருக்கான். தெருவுலே யார் போனாலும் அவா கால்லே விழுந்து நமஸ்காரம் பண்றான். சூரியனைப் பார்த்துப் பார்த்துக் கும்பிடறான். நீர்க் காக்கைப் போல் சும்மா குளத்திலே முழுகி முழுகி எழுந்திருக்கிறான். ஏதாவது கேட்டா உரக்கச் சிரிக்கிறான். வாய்லே ஏதாவது உளறிண்டே யிருக்கான். நேத்து காமாட்சிகோயில்லே எனக்கு மானமே போயிடுத்து'' என்று உறவினர் ஒருவர் கூறி வருத்தப்பட்டுக் கொண்டார்.

''ஆமா, நான் கூடப் பார்த்தேன். முந்தாநாள் ஏகாம்பரேச்வரர்கோயில் மண்டபத்திலே உட்கார்ந்துண்டு என்னமோ ஜபம் பண்ணிண்டிருந்தான். 'என்னடா சேஷு பண்ணிண்டிருக்கே' ன்னு நான், கேட்டேன். ''கர்மம் தொலையறத்துக்காக தபம் பண்றேன் மாமா''ன்னான். 'என்ன ஜபம்டா பண்றே?'ன்னு கேட்டேன். உடனே **'காமோ கார்ஷீத்மன்யுர கார்ஷீத்-காம; கரோதி நாஹம் கரோமி'** என்ற வேத மந்திரத்தைச் சொல்லி அதைத்தான் ஜபிக்கிறேன்னான். அப்புறம் என்னை உட்காரச் சொல்லி அந்த மந்திரத்தின் அர்த்தத்தை எடுத்து ரொம்பத் தெளிவா சொன்னான். அடேயப்பா! என்ன படிப்பு, என்ன ஞானம்! நான் அப்படியே திகைச்சுப் போயிட்டேன். 'மாமா, இதுவரைக்கும் நான் இந்த மந்திரத்தை லட்சம் தடவை ஜபிச்சுட்டேன். இன்னும் அரை லட்சம் பாக்கியிருக்கு. நீங்களும் சொல்லுங்கோ. அப்போதான் கர்மம் தொலையும். கர்மம் தொலைஞ்சாத்தான் மோட்சத்துக்குப் போகலாம். மோட்சத்துக்குப் போகணும்னு உங்களுக்கு ஆசையில்லையா?''ன்னு என்னைக்கேட்டான். ''ரொம்ப நன்னா பேசறான். அவன் பைத்தியம் இல்லே. வயசுக்கு மீறின ஞானம் வந்துடுத்து. வேறே ஒண்ணுமில்லே'' என்று குடும்ப நண்பர் ஒருவர் ஜோசியருக்கு தைரியம் சொல்லி விட்டுப் போனார்.

பரணீதரன்

சிறுவன் ஒருவன் ஓடி வந்தான். ''மாமா, மாமா, வந்து பாருங்கோ. நம்ம சேஷு, பெருமாள் வரார்னு வீதியிலே இருக்கிற எச்சில் இலையை யெல்லாம் எடுத்து ஓரமா போட்டிண்டிருக்கான். தனக்குத்தானே என்னமோ பேசிண்டிருக்கான். எல்லாரும் பார்த்துச் சிரிக்கிறு'' என்று ராமசுவாமி ஜோசியரை அழைத்தான். அவர் தலையில் அடித்துக் கொண்டார். உலகத்துக்கு ஒரு அதிசயப் பிள்ளையாயிருக்க வேண்டியவனின் கதி, ஊர் சிரிக்கும்படி ஆகி விட்டதே என்று நினைத்துக் குமைந்தார்.

இரண்டு வாரங்கள் கடந்தன. கோயில்களுக்குச் சென்று ஜபம் செய்வதை சேஷாத்ரி நிறுத்திக் கொண்டு விட்டார். காலையிலும் பகல் பொழுதிலும் வீட்டில் இருப்பார். அந்தி வேளையில் வீட்டை விட்டுப் போனுல் பிறகு மறு நாட் காலையில்தான் வீடு திரும்புவார். இரவில் எங்கு போகிருர், எங்கு படுக்கிருர் என்று ஒருவருக்கும் தெரியவில்லை.... ராமசுவாமிக்குப் பெருங் கவலையாகி விட்டது. சேஷாத்ரியை விசாரித்துப் பார்த்தார். ஒரு பயனுமில்லை. பதில் சொல்லாமல் அவர் சிரித்து விட்டுப் போய்விட்டார்.

பத்து நாட்கள் கழித்து அந்த மர்மம் புரிந்தது. சேஷாத்ரி தினமும் இரவில் மயானத்திற்குச் சென்று ஜபம் செய்கிருர் என்ற செய்தி ஜோசியரின் காதில் விழுந்த போது அவர் மிகவும் வேதனை யடைந்தார். ஜனங்களுடைய தொந்தரவு பொறுக்க முடியாமல் தனிமையை, நாடி சுடுகாட்டிற்கே சென்று விட்டார் சேஷாத்ரி!

ஒரு நாள் சிறிய தந்தை சேஷாத்ரியிடம் கெஞ்சிக் கேட்டுக் கொண்டார்:

''அப்பா சேஷு! மயானத்திற்கெல்லாம் போகாதே? அந்த அசுத்தமான இடத்தில் ஜபம் செய்வானேன்? வீட்டிலேயோ, கோயிலிலேயோ ஜபம் செய்தால் போதாதா?''


சேஷாத்ரி சிரித்தார். ''அதுவா அசுத்த பூமி? அது ஸ்ரீ ருத்ரரின் பூமி. அங்கு ஜபம் செய்தால் ஈசுவரன் சீக்கிரம் பலனை அளிப்பார். வெளியில் ஆயிரம்தடவை மந்திரத்தை ஜபித்துப் பெறும் பலனை மயானத்தில் ஒரே ஒரு தரம் ஜபித்துப் பெற்று விடலாம்'' என்று அவர் கூறவே, ராமசுவாமி ஜோசியருக்குக் கோபம் வந்து விட்டது. அன்று மாலை சேஷாத்ரி வெளியே கிளம்ப முடியாமல் அவரை ஓர் அறையில் அடைத்துப் பூட்டிவிட்டார்.

ஆனுல், எதிர்பாராதது நடந்து விட்டது. சேஷாத்ரி உள்ளுக்குள்ளே தாழ்ப்பாள் போட்டுக் கொண்டு, ஜபத்திலும், தியானத்திலும் ஆழ்ந்து விட்டார். நான்கு நாட்கள் வெளியே வரவேயில்லை. உணவு உட்கொள்ளவும் மறுத்து விட்டார்.

சேஷாத்ரியின் உண்ணுவிரதத்தையும் சத்தியாக்கிரகத்தையும்கண்டு ராமசாமி பயந்தே போய் விட்டார். பட்டினி கிடந்து இறந்து விட்டால் பழி அவரைத் தானே சேரும். வேறு வழியில்லாமல் கதவைத்திறந்து விட்டு விட்டார். சேஷாத்ரி மயான ஜபத்தை மீண்டும் தொடங்கிவிட்டார். தீவிரமான உபாசனையில் இறங்கிவிட்டார். கடுமையான உபவாசம் இருந்தார். உடலை மேலும் வருத்திக் கொண்டார். உள்ளத்தில் ஒளி பிறந்தது. அது முகத்தில் பிரதிபலித்தது. அதைக் கண்டு உலகம் வியந்தது.

ஆனுல், சிறிய தந்தைக்கோ சேஷாத்ரியின் போக்கு சிறிதும் பிடிக்கவில்லை. சமயம் வாய்த்தபோதெல்லாம் அவரிடம் தன் கோபத்தை வெளிப்படுத்தினுர்.

ஏகாம்பரேச்வரர் ஆலயத்திலுள்ள மாமரம்



அன்று சனிக்கிழமை. வீட்டில் எல்லோரும் எண்ணெய் தேய்த்து நீராடும் தினம். மணி பத்தாகி விட்டது. சேஷாத்ரி இன்னும் மயானத்திலிருந்து வீடு திரும்பவில்லை. ராமசுவாமி ஜோசியருக்குத் தாங்க முடியாத கோபம். அதை யாரிடம் காட்டுவது? 'இன்று எண்ணெய் தேய்த்துக் கொள்ளப் போவதில்லை' என்று வெறுப்புடன் ஒரு மூலையில் போய் உட்கார்ந்து விட்டார்.

சேஷாத்ரி வந்தார். அவர்தான் சிற்றப்பாவுக்கு எண்ணெய் தேய்ப்பது வழக்கம். எண்ணெய்க் கிண்ணத்தை கையிலெடுத்துக் கொண்டு ஜோசியரிடம் சென்றார். அவர் திரும்பிக் கூட பார்க்கவில்லை.

''சேஷு. உன் சித்தப்பா இன்னிக்கு எண்ணெய் தேய்ச்சுக் கொள்ளப் போறதில்லையாம்'' என்றாள் சித்தி கல்யாணி அம்மாள்.

''ஏன் சித்தி?'' என்று ஆச்சரியத்துடன் கேட்டார் சேஷாத்ரி.

''உன்னைப் பற்றித்தான் அவருக்கு வருத்தம். வர வர நீ சொன்ன பேச்சையே கேட்க மாட்டேங்கறயாம்'' என்றாள் சித்தி.

''இதென்னடா வம்பாப் போச்சு. என்னைப் பத்தி இவர் ஏன் வருத்தப்படணும்? நான் என் நிலையிலே இருக்கேன். அவரவர் நிலையிலே அவரவர் இருந்துட்டா உலகத்திலே ஒருத்தருக்கும் வருத்தமே இருக்காது'' என்று சிரித்துக் கொண்டே கூறிய சேஷாத்ரி, சிற்றப்பாவின் அருகில் சென்று ''என் மேலே கோபமா சித்தப்பா?'' என்று வேடிக்கையாகக் கேட்டுக் கொண்டே அவர் தலையில் எண்ணெயை வைத்துத் தேய்த்தார்.

திடீரென்று எண்ணெய் தேய்ப்பதை சற்று நிறுத்தி விட்டு, முற்றத்திற்கு வந்து ஆகாயத்தை அண்ணாந்து பார்த்து விட்டு, கூடத்திற்குத் திரும்பி வந்தார் சேஷாத்ரி.

''வானத்திலே என்ன பார்த்து விட்டு வந்தே?'' என்று கேட்டார் ராமசுவாமி.

''ஒன்றுமில்லை சித்தப்பா. ஆகாயத்தில் தேவதைகள் பாடிக் கொண்டு போனார்கள். சத்தம் கேட்டது, போய்ப் பார்த்தேன்'' என்று வெகு சாதாரணமாகப் பதில் கூறி விட்டு, சிற்றப்பாவின் தலையில் தாளம் போட்டுக் கொண்டே அழுத்தித் தேய்த்தார்.

சேஷாத்ரி ஏதோ பிதற்றுகிறார் என்று நினைத்த ராமசுவாமி, ''தேவதைகள் மட்டும் தான் போகிறார்களா? கந்தர்வர்கள் போகவில்லையா?'' என்று நகைத்துக் கொண்டே ஏளனமாகக் கேட்டார்.

''ஓ! கந்தர்வர்களும் போகிறார்களே. சிலருக்கு இறக்கையும் இருக்கு. ரொம்ப அழகா இருக்கா... கந்தர்வ கானம் கேட்க தேனாயிருக்கு...''

''என்ன ராகம் பாடிண்டு போறா?''

''பிலஹரி... அற்புதமாயிருந்தது.''

''உனக்கு சரியான பைத்தியம் பிடித்து விட்டது? அவா பாடிண்டு போனா உன் காதுலே மட்டும்தான் விழுமா? ஏன் என் காதுலே விழலே?''


சேஷாத்ரி லேசாகச் சிரித்தார். ''சித்தப்பா, உலகப் பந்தத்துலே சிக்கிண்டு இருக்கிற கர்மிகள் காதுலே அதெல்லாம் விழாது... எல்லாத்தையும் துறந்துட்டு, சுதந்திரமா, தன் நிலையிலே இருக்கிறவா காதுலே தான் அது விழும்'' என்று கூறி விட்டுப் போய் விட்டார் சேஷாத்ரி.

பையனுக்குப் பைத்தியம் முற்றி விட்டது என்று தீர்மானித்து விட்டார் ராமசுவாமி. சேஷாத்ரி ஆகாயத்தில் கந்தர்வ கானம் கேட்ட செய்தியை அவர் நான்கு பேரிடம் சொல்ல, அது ஊரெல்லாம் பரவ, 'சேஷாத்ரிக்கு மூளை குழம்பி விட்டது' என்பதே காஞ்சீபுரம் முழுவதும் பேச்சாகி விட்டது.

சேஷாத்ரியின் நிலையைப் பற்றி அவரவர் புத்திக்கு எட்டிய வரையில் விதவிதமாக விளக்கம் தந்ததோடு, ஆளுக்கொரு வைத்தியமும் சொன்னார்கள். சிலர் 'அவனுக்குக் கல்யாணம் செய்து விட்டால் பைத்தியம் தெளிந்து விடும்' என்றும் யோசனை கூறினார்கள்.

அதை ஒருவர் ராமசுவாமி ஜோசியரிடமே நேரில் வந்து சொன்னார்:

''நான் சொல்றேன்னு கோவிச்சுக்காதீங்கோ ஜோசியரே. சேஷாத்ரி இப்படிப் பித்தனா அலையறதுக்குக் காரணம் நீங்கதான்'' என்று அவர் ஒரு கல்லைத் தூக்கிப் போட்டார்.



சர்வ தீர்த்தம், காஞ்சீபுரம்.

ஜோசியருக்குத் தூக்கி வாரிப் போட்டது! ''நான் காரணமா?'' என்று கேட்பது போல் வந்தவரை பார்த்து விழித்தார் அவர்.

''ஆமா! நீங்க எதையோ சொல்லி அவன் கல்யாணத்தை நிறுத்திட்டேள். சந்நியாச யோகமாவது, முண்ணுங்கட்டியாவது! கல்யாணம் நடந்திருந்தா அவன் தலையெழுத்தே மாறிப் போயிருக்கும். அது நின்னு போனதிஞலேதான் அவன் புத்தி நிலை தடு மாறிப் போச்சு...நீங்க செய்தது ரொம்பத் தப்பு. சொந்த அப்பன் இருந்திருந்தா இப்படிச் செய்திருக்கவே மாட்டார். முதல்லே ஒரு பொண்ணைப் பார்த்து சேஷுவுக்கு கல்யாணத்தைப் பண்ணி வையுங்கோ. அப்புறம் அவன் போக்கே மாறிப் போயிடும், பாருங்கோ'' என்று அவர் அடித்துப் பேசினுர். உறவினர்களில் சிலரும் இதே அபிப்பிராயத்தைத் தெரிவித்தனர்.

ராமசுவாமி ஜோசியருக்கு உண்மையிலேயே நெஞ்சு வெடித்து விடும் போலாகி விட்டது. ஜாதகத்தைப் பார்த்து ஏதோ ஜோசியம் சொல்லப் போக, இப்படியொரு பழி வந்து சேர்ந்து விட்டதே என்று இடிந்து போனுர் அவர். பையனுக்கு ஒரு கல்யாணத்தை செய்து விட்டால் அந்தப் பழியைத் துடைத்து விடலாம் என்று தீர்மானித்து, தீவிரமாக பெண்ணைத் தேட ஆரம்பித்தார். பாவம், எங்கு போய் பெண் கேட்டாலும் அவருக்கு ஏமாற்றமே காத்திருந்தது. பித்துப் பிடித்து, பேய் போல் மயானத்தில் அலைபவனுக்கு யார் துணிந்து பெண்ணைக் கொடுப்பார்கள்? மரியாதையுடன் ஏதோ சாக்குப் போக்கைச் சொல்லி ஜோசியரை அனுப்பி விட்டார்கள்.

தம் உள்ளக் குமுறலை ஒரு நாள் ஜோசியர் சேஷாத்ரியிடம் தெரிவித்தார். தமக்கேற்பட்ட அவப் பெயரைக் கூறி வருந்திஞர். சேஷாத்ரி சிறிய தந்தைக்கு ஆறுதல் கூறிஞர்:

''சிற்றப்பா, நீங்கள் ஏன் வீணுக வருத்தப் படறேள்? ஊரில் நாலுபேர் நாலு விதமாத்தான் பேசுவா. கல்யாணம் பண்ணிக்கலேயேன்னு நான் வருத்தப்பட்டாத்தானே அந்தப் பழி உங்களைச் சேரும். எனக்கு கல்யாணத்திலே கொஞ்சமும் ஆசை கிடையாது. நீங்கள் உண்மையைச் சொல்லி எனக்கு ரொம்ப ஒத்தாசை பண்ணியிருக்கேள். ஊரார் சொல்ருன்னு என் கல்யாணத்துக்கு ஒருவித முயற்சியும் செய்ய வேண்டாம். கல்யாணம் பண்ணிக்கச் சொல்லி நீங்க என்னைக் கட்டாயப் படுத்திஞ, நான் அப்புறம் வீட்டுப் பக்கமே வர மாட்டேன்; ஊரை விட்டே போயிடுவேன்'' என்று சுய புத்தியோடு, தெளிவாகவே பேசிஞர்.

இதைக் கேட்டு சமையலறையிலிருந்த கல்யாணி அம்மாள் பதறிப் போய் ஓடி வந்தாள்.

''அப்பா சேஷு, அப்படியெல்லாம் இன்னொரு தரம் பேசாதே. எனக்கு நெஞ்செல்லாம்'படபட'ன்னு அடிச்சிக்கிறது. உன் கல்யாணத்தைப்

ஸ்ரீ சேஷாத்ரி சுவாமிகள் பூஜித்த இந்த கிருஷ்ண விக்ரகம் தற்போது சென்னை திருவல்லிக்கேணி பெரிய தெருவில் ஓர் இல்லத்தில் இருப்பதை 'அருணாசல மகிமை' யின் மூலம் அறிந்த பல அன்பர்கள் அதை தரிசிக்க வேண்டும் என்று விருப்பம் தெரிவித்திருக்கிறார்கள். அந்த இல்லத்தின் முகவரி: 167, பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5.



பத்தி இனிமே ஒருத்தரும் பேசமாட்டோம். நீ கல்யாணமே பண்ணிக்க வேண்டாம். ஆத்துலே இருந்தா போதும். மன்னி சாகற போது உன்னை கவனிச்சுக்கச் சொல்லிட்டுப் போயிருக்கா. நீ எங்கேயாவது போயிட்டேன்னா, நான் ஒரு நிமிஷம் கூட உயிரோடு இருக்க மாட்டேன்'' என்று கூறி தேம்பித் தேம்பி அழுதாள். பின்னர் கணவரைப் பார்த்து, ''இதோ பாருங்கோ, நீங்க உங்க வேலையைக் கவனியுங்கோ, இனிமே குழந்தை கிட்டே கல்யாணத்தைப் பற்றிப் பேசாதீங்கோ. உங்களுக்குப் புண்ணியமா போகட்டும்'' என்று கெஞ்சாத குறையாக மன்றாடினாள். அத்துடன் அந்த வீட்டில் கல்யாணப் பேச்சே அடியோடு நின்று விட்டது.

ஒரு நாள தாமலிருந்து வந்த பரசுராம சாஸ்திரிகள் சேஷாத்ரியைத் திருத்தும் நோக்கத்துடன் அவரை தம் அருகில் அழைத்தார்.

''அப்பா, உன் பக்தியையும் ஜப தபங்களையும் ரொம்ப மெச்சறேன். ஆனால், நீ சுடுகாட்டுக்குப் போய் ஜபம் பண்றது சரியில்லே. அது சாஸ்திரத்திற்கு விரோதம். அதை மட்டும் நிறுத்தி விடு'' என்று கேட்டுக் கொண்டார்.

சேஷாத்ரி தாம் செய்வது சரியே என்று வாதம் செய்யத் தொடங்கினார். இருவரும் சமஸ்கிருதத்திலேயே மூன்று மணி நேரம் தர்க்கம் புரிந்தனர். கடைசியாக சேஷாத்ரி ''நான் நைஷ்டிகப் பிரம்மசாரி. உபாசகன். உபாசகனுக்கு இன்ன நேரத்தில், இன்ன இடத்தில் ஜபம் செய்ய வேண்டும் என்கிற கட்டுப்பாடெல்லாம் கிடையாது'' என்றுஅடித்துக் கூறி சாஸ்திரியாரை மேற்கொண்டுபேசவொட்டாமல் செய்து விட்டார். கோபங் கொண்ட சாஸ்திரிகள் ''நீ என்ன சொன்னாலும், தினமும் சுடுகாட்டிற்குப் போய் விட்டு வீட்டிற்குள் வந்து நுழைவது அநாசாரம்'' என்று கடுமையாகக் கூறினார். ''சரி, இனிமேல் வீட்டுக்குள் வர வில்லை'' என்று வெளியேறி விட்டார் சேஷாத்ரி. அன்றையலிருந்து கோயில்களிலும், குளக்கரைகளிலும், மரத்தடியிலும் அவர் பொழுதைக் கழித்தார். வீட்டுக்கே வருவதில்லை.

அச்சமயத்தில் ஹரித்வாரத்திலிருந்து காஞ்சிபுரத்திற்கு ஒரு யோகீச்வரர் வந்திருந்தார். அவருக்கு பாலாஜி சுவாமிகள் என்று பெயர். நான்கு சீடர்களுடன், சர்வ தீர்த்தக்கரையிலுள்ள விசுவநாத சுவாமி ஆலயத்தில் தங்கியிருந்த அவர், பார்ப்பதற்கு தட்சிணாமூர்த்தியைப் போலவே இருந்தார்.

சர்வ தீர்த்தக் கரையில் அனைவருக்கும் தரிசனம் தந்து கொண்டிருந்த பாலாஜி சுவாமிகளைக் கண்டதும் சேஷாத்ரி, உணர்ச்சி வசப்பட்டு கண்கள் கலங்க காலில் விழுந்து வணங்கினார். ஞான குருவின் அருட் பார்வையில் மெய்ம் மறந்து போனவர், தட்சிணா மூர்த்தி அஷ்டகத்தை 'கணீர்' என்று சொன்ன போது அவரையும் அறியாமல் கன்னங்களில் கண்ணீர் வழிந்து கொண்டேயிருந்தது. அம் மகான் சாந்தமுடன் பால உபாசகனை நோக்கி, ''குழந்தாய், வருந்தாதே! இப்படியே உட்கார்'' என்று சமஸ்கிருதத்தில் மொழிந்தார்.

சேஷாத்ரியும் கட்டுண்ட நாகம் போல், சுவாமிகளின் அருகிலேயே அமர்ந்தார். அக்கணமே அம்மகானுக்கு அடிமையானார்.

இருவரும் சாஸ்திர சம்பந்தமான விஷயங்களைப் பற்றி வெகு நேரம்


ப்பலக கொண்டிருந்தனர். குருவின் அருள் நோக்கு சீடனின் மீது கருணை மழையைப் பொழிந்து கொண்டிருந்தது. பார்வையாலேயே உபதேசித்தருளி விட்டார் அந்த பரமஹம்சர்.

சுவாமிகள் உத்தரவு கொடுத்தும் கூட அந்த இடத்தை விட்டு சேஷாத்ரி நகரவேயில்லை. அக்கணமே சுவாமிகளுக்கு ஐந்தாவது சீடராகி அவருக்குப் பணிவிடைகள் செய்யத் தொடங்கி விட்டார்.

சேஷாத்ரிக்கு பட்டண்ணு என்றொரு நண்பர் இருந்தார். அவரும் பாலாஜி சுவாமிகளின் சேவையில் தம்மை அர்ப்பணித்துக் கொண்டார். இருவரும் ஒருநாள் சுவாமிகளின் பாதங்களில் விழுந்து, தங்களுக்கு உபதேசம் செய்தருளும்படி வேண்டினர். சுவாமிகள் பட்டண்ணுவுக்கு தேவி மந்திரத்தை உபதேசித்தார். சேஷாத்ரியின் வைராக்கியத்தைக் கண்டு அவர் ஞான சந்நியாசத்திற்கு மிகவும் ஏற்றவர் என்று தீர்மானித்து, முறைப்படி சந்நியாசம் கொடுத்து, மகா வாக்கியங்களை உபதேசித் தருளினார்.

உள்ளத்தில் என்றோ சந்நியாசியாகிவிட்ட சேஷாத்ரி, உருவிலும் உடையிலும் தற்போது அந்த ஆச்ரமத்தை ஏற்றுக் கொண்டு விட்டார். உலக இச்சைகளைத் துறந்தவர், பேரின்பத்தில் லயித்து, ஜீவன் முக்தராய், யோக சித்தராய், ஞானப் பித்தராய் தன் நிலை உணர்ந்து தன்னிச்சையாய் திரியும் தவப் பெருநிதியாய் பிரும்மானந்தக் கடலில் நீந்தித் திளைத்துக் கொண்டிருந்தார்..

அன்று வரதராஜ ஜோசியருக்கு சிரார்த்த தினம். தந்தையின் திதியில் சேஷாத்ரி எப்படியாவது கலந்து கொள்ள வேண்டும் என்று கல்யாணி அம்மாள் மிகவும் பிடிவாதமாயிருந்தாள். எங்கிருந்தாலும் குழந்தையைத் தேடிக் கண்டு பிடித்து, எப்படியாவது வீட்டுக்கு அழைத்து வரும்படி முதல் நாள் அவள் கணவரிடம் அழுது புலம்பினாள். வேறு வழியில்லாமல் பையனைத் தேடிச் சென்ற ராமசுவாமி ஜோசியர், தெருவில் அலைந்து கொண்டிருந்த சேஷாத்ரியைக் கட்டிப் பிடித்து, இரண்டு பேர் உதவியுடன் வீட்டுக்கு இழுத்து வந்தார். இந்தக் காட்சியை ஊரே வேடிக்கை பார்த்தது,



ஸ்ரீ காமகோடி சங்கராசாரியார் மடம்.

''நான சந்நியாசி, கர்மமெல்லாம் தொலைந்து விட்டது. சந்நியாசிக்கு இந்தச் சடங்குகளெல்லாம் கிடையாது'' என்று சத்தம் போட்டுக் கொண்டே வந்தார் சேஷாத்ரி.

''அதெல்லாம் தெரியாது. இதுஉன் சித்தியின் கட்டளை. இன்று பூராவும் நீ வீட்டை விட்டுப் போகக் கூடாது. என்ன ஆனாலும் நான் உன்னை விடப் போவதில்லை'' என்று கூறிய ராமசுவாமி ஜோசியர், சேஷாத்ரியை ஓர் அறையில் தள்ளிப் பூட்டி விட்டு, சாவியை தம் இடுப்பில் பத்திரமாகச் செருகிக் கொண்டார்.

சுமார் இரண்டு மணி இருக்கும். சிரார்த்தம் முடிந்தது. வலம் வந்து மூதாதையரின் ஆசியைப் பெற வேண்டிய சடங்கு நடைபெற வேண்டும். அதற்காக சேஷாத்ரியை அழைத்து வர ஜோசியர் அறைக் கதவைத் திறந்தார். அக்கம் பக்கத்திலிருப்பவர்களும் வேடிக்கை பார்க்க குழுமியிருந்தனர். வைதிகர்களும் ஆவலுடன் காத்திருந்தனர்.

ராமசுவாமி ஜோசியர் மெள்ள அறைக்குள் நுழைந்தார். சுற்றிப் பார்த்தார். மூலைமுடுக்குகளிலெல்லாம் தேடினார். சேஷாத்ரியைக் காணவில்லை.

பூட்டிய அறையிலிருந்து யோக சித்தர் சேஷாத்ரி மாயமாய் மறைந்து விட்டார்.

— தொடரும்

கோபுரம் தந்த கலைஞர்!


சென்னையில் அடித்த 'கத்திரி வெயிலில் ஒரு நாள், நிலா வெளிச்சத்தில் போவது போல எதையோ ரசித்தபடி சைக்கிளில் போய்க் கொண்டிருந்தார் ஒருவர். அவர்தான், சென்னையிலுள்ள கலைத் தொழில் கல்லூரியின் முதல்வரான கிருஷ்ணு ராவ். மிகச் சிறந்த ஓவியக் கலைஞர்களில் ஒருவரான இவர், ''இயற்கை அழகை ரசிப்பதற்கு சைக்கிள் பயணம் போல் வேறு எதுவும் உதவாது. இந்த வெயில் என்னை என்ன செய்யும்?'' என்கிறார். எந்தக் காட்சியாவது இவரைக்கவர்ந்தால் அதே இடத்தில் அமர்ந்து ஓவியங்களைத் தீட்டத் தொடங்குகிறார் இவர்.

சைக்கிள் பயணத்தில் மட்டுமல்ல. மதுரை நகர் மீதும் இந்த கலைஞருக்கு மிகுந்த 'மோகம்' உண்டு. அது அவர் சொந்த ஊர். ''ஆகா! மதுரை எப்பேர்பட்ட இடம்! இலக்கியமும், சங்கீதமும், கலையும் சேர்ந்து வளர்ந்த மதுரையில் இருந்ததால் தான், நான் கலைஞன் ஆனேன்'' என்று உணர்ச்சிப் பெருக்குடன் கூறினார் கிருஷ்ணு ராவ்.

சென்னை கோட்டையில் அமைச்சர்கள் மந்திராலோசனை செய்யும் 'காபினெட்' அறை இருக்கிறது. இதில் இவருடைய ஆறு ஓவியங்கள் இருக்கின்றன. அதில் ஐந்து, மதுரையின் அழகைக் காட்டுபவை! ''ஏன், தமிழக அரசின் ராஜாங்க முத்திரையில் உள்ள கோபுரமும், மதுரை மீனாட்சிக் கோயிலின் மேற்கு கோபுரம் தான்'' என்கிறார் இவர். ''இந்த முத்திரையை செய்தவன் நான் தான், ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் முதலமைச்சராக இருந்த போது, ராஜாங்க முத்திரையை எப்படி அமைப்பது என்பதைப் பற்றி ஆலோசனை நடந்தது. தமிழ்நாடு என்றால் கோயில் கோபுரங்கள் தான் நினைவிற்கு வரும் என்பதால் இந்த மாடலை அளித்தேன். அரசும் ஏற்றது'' என்றார் கிருஷ்ணுராவ். மதுரைக்குப் பிறகு, சைனு பஜார் இவர் கவனத்தைக் கவர்ந்திருக்கிறது. சுமார் ஐம்பது படங்களில் அப்பகுதியை சித்திரித்திருக்கிறார் இவர். லாட்டரிச் சீட்டு 'சின்னமும்' இவரது கற்பனையில் தோன்றியதே!

சுவர் சித்திரங்கள் (Mural) அமைப்பதில் இவர் கைவண்ணம் அபாரமாக இருக்கும். சென்னை நகரில் உள்ள ஃபஸ்ட் சிடி நேஷனல் பாங்கில், இவருடைய இந்த கைவண்ணத்தைப் பார்க்கலாம். சில சமயம், இவர் நீண்ட ஓவியங்களை வரையத் தொடங்கினால் குடும்பத்து உறுப்பினர்களும் துணைக்கு வருவது சுவாரசியமான காட்சி!

'மாடர்ன் ஆர்ட்' முறையிலும் இவர் பல ஓவியங்களை வரைந்திருக்கிறார். ''மாடர்ன் ஆர்ட்' கூட கண்டபடி அமையாமல் அர்த்த பூர்வமாக அமைய வேண்டும்'' என்பது இவர் கருத்து.



கிருஷ்ணு ராவ் இந்த கல்லூரியிலே படித்து, இங்கேயே முதல்வராகவும் ஆகியிருக்கிறார். விடுதலைப் போராட்ட காலங்களில் இந்தக் கல்லூரியின் வாசலில் மறியல் செய்தவர் இவர்! இவரைப் பார்த்தால் ஓர் ஓவியக்கலைஞர் என்று எளிதில் அறிய முடியாது!

கரையில், மண்டபத்தில், மயானத்தில், சத்திரத்தில், மரத்தடியில் எங்கு தேடியும் அவரைக் காணவில்லை. சிறிய தந்தையும் சித்தியும் வேதனையால் மனம் வெதும்பிப் போனார்கள். 'தாங்கள் கண்டிப்புடன் நடந்து கொண்டதால் தான் பிள்ளை ஊரை விட்டே ஓடி விட்டான்' என்ற பழிக்கு ஆளானோமே என்று நெஞ்சு வெடிக்கக் குமுறி அழுதார்கள்.

சில நாட்கள் கழித்து சேஷாத்ரி காவேரிப்பாக்கத்தில் இருப்பதாகச் செய்தி வந்தது. காஞ்சீபுரத்திலிருந்து மேற்கே இருபதாவது மைலில் இருக்கும் அந்த ஊருக்குச் சுவாமிகள் எப்படிப் போனார், ஏன் போனார் என்று ஒருவருக்குமே தெரியவில்லை. அவ்வூரில் சேஷாத்ரியின் பெரிய தாயாரான 'சுந்தரக்கா' என்ற சுந்தரம்மாள் வசித்து வந்தார். வேறு சில உறவினரும் இருந்தனர். ஆனால், சுவாமிகள் அவர்களுடைய வீடுகளுக்குச் செல்லவில்லை. அங்குள்ள முக்தீச்வரர் ஆலயத்திலேயே தங்கியிருந்தார். அவருடைய ஒன்று விட்ட தம்பியான சேஷு என்பவர், சுவாமிகளைப் பார்த்து விட்டு, வீட்டுக்குச் சென்று, 'அண்ணா கோயிலில் இருக்கிறார்' என்று சொல்லவே, அவர்கள் எல்லோரும் ஓடோடி வந்து, அவர் இருந்த கோலத்தைக் கண்டு பதறித் துடித்தனர். எத்தனை அழைத்தும், அவர்களுடன் வீட்டுக்கு வர அவர் மறுத்து விட்டார். எனவே, தினமும் கோயிலுக்கு உணவு கொண்டு வந்து அவருக்கு அளித்து வந்தனர்.

ஒரு நாள் தம்பியுடன் சேஷாத்ரி கோயிலை வலம் வந்து கொண்டிருந்தார். வடக்கு மதிற்சுவரின் ஓரமாக இருந்த புன்னை மரத்தடியிலிருந்து ஒரு பாம்பு அப்போது சீறிக் கொண்டு வந்தது. தம்பி சேஷு அதைப் பார்த்துப் பயந்து, ''அண்ணா, பாம்பு, பாம்பு'' என்று கத்தினார். சேஷாத்ரியோ, சிறிதும் பதட்டம் அடையாமல், ''இங்கே வா'' என்று அந்தப் பாம்பை வாஞ்சையுடன் அழைத்தார். தாய் அழைக்க, துள்ளிக் குதித்து ஓடி வரும் குழந்தையைப் போல் அப்பாம்பு வேகமாக ஊர்ந்து வந்து, சேஷாத்ரியின் மேல் ஏறி, அவர் கழுத்தை மூன்று முறை சுற்றிக் கொண்டு தலையின் மீது குடையைப் போல் படம் எடுத்து நின்றது.

சேஷுவுக்கு வியர்த்துக் கொட்டியது. நடுநடுங்கிப் போனவர், ''ஐயோ! அண்ணாவைப் பாம்பு கடித்து விட்டது'' என்று அலறிக் கொண்டு வெளியே ஓடினார்.

சற்று நேரத்தில் அங்கு ஒரு பெரும் கூட்டமே கூடி விட்டது. சுந்தரம்மாள் வயிற்றிலும் வாயிலும் அடித்துக் கொண்டாள். உறவினரெல்லாம் வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டு செய்வதறியாது திகைத்து நின்றனர்.

சற்றைக் கெல்லாம் அந்தப் பாம்பு சேஷாத்ரியின் உடலிலிருந்து இறங்கி மெள்ள ஊர்ந்து சென்று எங்கோ மறைந்து விட்டது.

-தொடரும்.

காஞ்சிபுரத்திலே இருக்கிறதாகச் சொன்னாரு.''

''பெரிய காஞ்சிபுரத்திலே எங்கே இருந்தாங்க, தெரியுமா?''

''எங்கே இருக்கிங்கன்னு நான் கேட்கலே. நமக்கு எதுக்கு அதெல்லாம்...அது ஆவுது, எத்தினியோ வருஷம். சும்மா நோண்டி நோண்டி கேள்வி கேட்டா, எனக்கு ஞாபகமா இருக்கு?'' என்று அலுத்துக் கொண்டு விட்டு அந்தக் கிழவர் மீண்டும் திண்ணையில் முடங்கிக் கொண்டார். பழைய நாட்களைக் கிளறி சற்று நினைவு படுத்திக் கொண்டதால் மூளைக்கு ஏற்பட்ட களைப்பு அவரை மேலும் பலவீனம் அடையச் செய்தது. ''போய் வரோம் தாத்தா'' என்று நாங்கள் கூறியபோது கண்ணைத் திறந்து பார்க்கக் கூட முடியாமல் அவருக்கு அத்தனை அசதி, இயலாமை. ஒரு வேளை அன்று முழுவதும் பொறுமையுடன் காத்திருந்தால், சிறிது சிறிதாக நினைவு படுத்திக் கொண்டு தெரிந்தவற்றையெல்லாம் கூறி யிருப்பாரோ என்னவோ! நாங்கள் கொடுத்து வைத்தது அவ்வளவுதான்.

அந்தச் சிறிய ஓட்டு வீட்டில்தான் சேஷாத்ரி சுவாமிகள் வசித்திருக்க வேண்டும் என்று என் உள்ளுணர்வு கூறவே, அந்தச் சிறிய வீட்டினுள் நுழைந்தோம்.

வாசற் கதவு சற்று திறந்திருந்தது ரேழியில் ஒரு பெரியவர் படுத்துக் கொண்டிருந்தார். அவரை எழுப்பி, வீட்டைப் பார்க்க வேண்டும் என்று கூறினோம். அவரும் உடனே எழுந்து எங்களுக்கு வழி விட்டார்.

அந்த வீட்டை முன் பக்கம் இடித்துக் கட்டி யிருக்கிறார்கள். வலப்புறம் இருந்த அறைக்குள் எட்டிப் பார்த்தேன். 'ஸ்ரீ சேஷாத்ரி சுவாமிகளை, அவருடைய சிறிய தந்தை ராமசுவாமி ஜோசியர் இந்த அறையில்தான் பூட்டி வைத்திருந்தாரோ? இங்கிருந்துதான் சுவாமிகள் மாயமாய் மறைந்தாரோ?' அவ்வாறு நான் எண்ணிய உடனேயே உடலில் மின்சாரம் பாய்ந்தது போன்ற ஓர் அதிர்ச்சி ஏற்பட்டது.

உள்ளே சென்றோம். இரண்டாம் கட்டு பாழடைந்து கிடந்தது. முற்றத்தில் இருக்கும் கிணறு மூடப்பட்டிருந்தது. இடிந்த செங்கற் சுவர்களையும், உதிர்ந்த காரையையும் பார்த்த



மதுரைக்கும் திருப்பரங்குன்றத்திற்கும் இடையே ஓடுகின்ற ஒரு ரயிலுக்கு டிக்கெட் கிடையாது. புகை வண்டி நிலையத்திலேயே நிற்காது. மதுரை ஆர்வி மில் நிர்வாகத்தினர் சார்பில் அந்த மில் தொழிலாளர்களுக்காக ரயில்வேயினால் விடப்படும் ரயில் அது. இது ஓடுகின்ற தூரம் கூட ஐந்து மைல் தான்!

ந. க. மங்களமுருகேசன்.



போது நூறு வருஷங்களுக்கு முன் கட்டப்பட்ட வீடாகத்தான் இருக்க வேண்டும் என்று தோன்றியது. 'ஸ்ரீ சேஷாத்ரி சுவாமிகள் இந்த வீட்டிலேதான் வசித்திருக்க வேண்டும்' என்ற எண்ணம் வேரூன்றியது.

''இதையெல்லாம் கூட நல்லா இடிச்சுட்டுப் புதுசாக் கட்டப் போகிறோம்....'' என்றார் அங்கு இருந்தவர்.

எனக்குப் பகீர் என்றது. சரித்திரச் சின்னங்களை அழிக்கிறார்களே என்று உள்ளூர வருந்தினேன். நமக்குப் புனித சரித்திரம். அவர்களுக்குச் சாதாரண வீடுதானே!

அந்த அழிவுச் சின்னங்களை புகைப்படம் பிடித்துக் கொண்டு, நேரே கொல்லா சத்திரத்திற்குச் சென்று, சுவாமிகளிடம் நாங்கள் கேட்டவற்றையும், பார்த்தவற்றையும் கூறினேன். 'அந்த வீடுதானா?' என்ற சந்தேகம் மட்டும் மனத்தின் ஒரு மூலையில் ஏனோ என்னைக் குழப்பிக் கொண்டிருந்தது.

சுவாமிகள் நான் கூறியவற்றைப் புன்னகையுடன் மௌனமாகக் கேட்டுக் கொண்டார். என் மன நிலையை அறிந்து, 'அந்த வீடாகத்தான் இருக்கணும்' என்று கூறி என் சந்தேகத்திற்கு முற்றுப் புள்ளி வைத்தார்.

வீட்டிலிருந்து மாயமாய் மறைந்த சேஷாத்ரியை ஊரெல்லாம் தேடிப் பார்த்தார்கள். கோயிலில், குளக்



பாழடைந்து, பரிதாபமாகக் காட்சி தரும் வீட்டின் பின்புறம்

"எது...அந்த மாடி வீடா...? அது நான் கட்டினதுதான். அது பஞ்சாங்க கார ஐயர் வீடு" என்றார் கிழவர்.

அம் முதியவரின் பெயர் கிருஷ்ணப்ப முதலியார். கொத்தனார் மேஸ்திரி யாக இருந்திருக்கிறார்.

"அதுக்குப் பக்கத்து வீட்டிலே யார் இருந்தாங்க?"

"அங்கேயும் அவங்க மனுஷாதான் இருந்தாங்க. பெரியவரு இறந்துட் டாரு... அப்பறம் அவங்களெல்லாம் வீடுங்களை வித்துட்டு எங்கேயோ போயிட்டாங்க."

"இந்த வீட்டிலே சேஷாத்ரின்னு ஒருத்தர் இருந்தாரே. நீங்க பார்த் திருக்கீங்களா?"

கிழவர் ஞாபகப் படுத்திப் பார்க்கி றார். அவருக்கு ஒரு பெயரும் நினை வுக்கு வரவில்லை.

"அவரு கூட சின்ன வயசுலேயே சாமியார் ஆயிட்டாராமே. உங்க ளுக்கு ஞாபகம் இல்லையா...?"

எங்கேயோ 'மினுக்' என்று மின்னு வது போல் கிழவருக்கு ஒரு கணம் லேசாகப் பழைய நினைவு வருகிறது.

"சிவப்பா, ஒடிசலா ஒரு புள்ளை யாண்டான் இருந்தாரு... அவரு... வீட்டை விட்டுப் போயிட்டாரு...... அப்புறம் பெரியவங்களும் செத்துட் டாங்க. மத்தவங்க, வீடு, தோட்டம் துரவு எல்லாத்தையுமே வித்துட்டுப் போயிட்டாங்க. அப்புறம், ரெண்டு தரம் ஐயரைப் பார்த்தேன். பெரிய

சென்றூர். படிப்பும், படிப்புக் கேற்ற பண்பும் நிறைந்த முகப் பொலிவு. வீடுதேடி வந்தவர்களை இன்முகத்துடன் வரவேற்று, உதவி புரியத் துடிக்கும் உயர்ந்த குணம். நாங்கள் நாடி வந்த விஷயத்தைப் பற்றி அவரிடம் கேட்டோம். படுத்திருந்தவர் உற்சாகத்துடன் எழுந்து உட்கார்ந்தார். எங்களையும் உட்காரச் சொன்ஞர்.

''நான் சொல்லும் வீடு தெற்கு வீதியின் கீழ்க் கோடியில் இருக்கிறது. இப்போது அது நாலு கை மாறிவிட்டது. நாற்பது வருஷங்களுக்கு முன் என் நண்பர் ஒருவர் அந்த வீட்டில் குடியிருந்தார். 'நான் குடியிருக்கும் வீடு சேஷாத்ரி சுவாமிகள் இருந்த வீடு' என்று அவர் சொல்லி யிருக்கிருர். அதனுல்தான் அத்தனை நிச்சயமாகக் கூறுகிறேன். வாருங்கள், அந்த வீட்டைக் காட்டுகிறேன்'' என்று அவர் எங்களை அழைத்தார். நேரத்தைக் கடத்தாமல் நாங்கள் புறப்பட்டுச் சென்ருேம்.

ஒரு மாடி வீட்டைக் காட்டி,''இது தான் நான் சொன்ன வீடு. இதில் தான் என் நண்பர் குடியிருந்தார்'' என்று சுட்டிக் காட்டிஞர் ஜீயப்பங்கார் சுவாமி.

அந்த வீட்டுக்குச் சென்று கதவைத் தட்டினேம். நான்கைந்து குழந்தைகளைத் தவிர அந்த வீட்டில் பெரியவர்கள் ஒருவரும் இல்லாததால் ஒன்றுமே விசாரிக்க முடியவில்லை: பின்புறம் சென்று பார்த்தோம்: தென்னை மரங்கள் அடர்ந்த பெரிய தோப்பாக இருந்தது. திருரங்கநாதன் கூறிய அடையாளங்களைக் கொண்டு இந்த இடமாகத்தான் இருக்க வேண்டும் என்று தீர்மானித்தோம்: இருப்பினும் சந்தேகம் தீரவில்லை. மனத்திற்கு முழுமையான திருப்தி ஏற்படவில்லை. அந்த மாடி வீட்டிற்குக் கிழக்கில், அதை ஒட்டினுற் போல் ஓர் ஓட்டு வீடு இருந்தது. அதுவாக இருக்குமோ என்ற சந்தேகம் தோன்றியது.

அந்தச் சிறு வீட்டுக்குப் பக்கத்தில் ஒரு காலி மனை.அதையடுத்து ஒரு சிறு திண்ணை. அதில் ஒரு கிழவர் சுருண்டு படுத்திருந்தார்.

''அவரைக் கேட்டுப் பாருங்க: அவரு இதே ஊர்தான். அவருக்கு தொண்ணூறுக்கு மேலே வயசாவுது. ஒரு வேளை அவருக்குத் தெரிஞ்சிருக்கும்...'' என்று ஓர் அம்மாள் சொன்னுள்.

அந்தக் கிழவரை குரல் கொடுத்து எழுப்பினேம். அவர் மெள்ள எழுந்து உட்கார்ந்தார். எங்களையும் எங்கள் கேள்வியையும் புரிந்து கொள்ளவே அவருக்கு பத்து நிமிடங்கள் ஆயின:

''பெரியவரே, இதோ இந்தப் பக்கத்து வீட்டிலே யார் இருந்தாங்கன்னு உங்களுக்கு ஞாபகம் இருக்கா?''

ஸ்ரீ சேஷாத்ரி சுவாமிகள் வசித்த வீடு (சின்ன காஞ்சீபுரம்)



என்று மெள்ள பேச்சைத் தொடங்கினேன் நான்.

சுவாமிகள் யோசனையில் ஆழ்ந்தார்.

''எதிர் வீடு என்று சொல்லுகிறீர்களே, அதுவாக இருக்குமோ?'' என்று கேட்டேன்.

'அது இருக்காது' என்பது போல் தலையை அசைத்துவிட்டு மீண்டும் சிந்திக்க ஆரம்பித்தார் சுவாமிகள். (அந்த வீட்டில் ஸ்ரீ சேஷாத்ரி சுவாமிகளின் சகோதரரான ஸ்ரீ நரசிம்ம ஜோசியரின் குடும்பம் வசித்ததாகப் பின்னர் கேள்விப் பட்டேன்.)

ஸ்ரீ ஆசாரிய சுவாமிகளிடம் விளக்கம் கேட்டு விட்டுக் காத்திருந்தால் போதும். விடை எப்படியோ கிடைத்து விடும். அனுபவத்தில் ஏற்பட்டுள்ள நம்பிக்கை அது. அந்த நம்பிக்கையோடு காத்திருந்தேன்.

சுவாமிகள் மெள்ளப் பேசினார்: ''ஸ்ரீ உபநிஷத் பிரும்ம மடத்துக்குப் பின்னாலே அஞ்சாறு சின்ன வீடுகள இருக்கு. ஏதோ ஒரு வீட்டிலே ரங்கநாதன்னு ஒரு புரோகிதர் இருக்கார். அவர் அஷ்டசகஸ்ர வகுப்பைச் சேர்ந்தவர். அவரைப் போய்க் கேட்டுப் பாரு. அவருக்கு ஒருவேளை தெரிஞ்சிருக்கலாம்.''

காஞ்சிப் பெரியவர் இவ்வாறு சாதாரணமாகப் பேசித்தான் அற்புதங்களை நிகழத்திக் காட்டுவார். அவர் குறிப்பால் உணர்த்துவார். கோடி காட்டுவார். பொறுமையோடு நாம் தேடிக் கொண்டு போனால், இருள் விலகி, உண்மை பிரகாசிப்பதைக் காணலாம்.

அவசர அலுவலகள் காரணமாக உடனேயே காஞ்சீபுரத்தை விட்டுப் புறப்பட வேண்டியிருந்ததால் அன்று நான் திரு ரங்கநாதனை சந்திக்க இயலவில்லை. இரண்டு மாதங்கள் கழித்துத்தான் அவரை சந்திக்க முடிந்தது.

''இந்த ஏழையைத் தேடி எப்படி வந்தீர்கள்?'' என்று கேட்டார் திரு ரங்கநாதன். அவரைப் பார்த்து விசாரிக்கும்படி சுவாமிகள் என்னை அனுப்பி வைத்ததைப் பற்றி நான் கூறியபோது அவர் கண்கள் கலங்கி விட்டன.

''என்னையும் ஒரு பொருட்டாக மதித்து, என்னை நினைவு வைத்துக் கொண்டு உங்களை என்னிடம் அனுப்பி வைத்த அவர் கருணையே கருணை.

அந்த மகான் இருக்கிறதினாலேதான் ஊர்லே கொஞ்சமாவது மழை பெய்கிறது'' என்று கூறியவர், உணர்ச்சி வசப்பட்டு சிறிது நேரம எதுவுமே பேச முடியாமல் திணறினார். நான் வந்த காரியத்தை மீண்டும் நினைவு படுத்திய பினனர்தான் திரு ரங்கநாதன் பேசினார்:

''ஸ்ரீ சேஷாத்ரி சுவாமிகள் வசித்த வீடு எது என்று எனக்கு நிச்சயமாகத் தெரியாது. சின்ன காஞ்சீபுரததிலே யானை கட்டித் தெருவுலே இருக்கிறதாக எங்க பெரியவா சொல்லிக் கேள்விப பட்டிருக்கேன். பெரிய தோபபும் துரவுமாக இருக்குமாம்.''


அதற்கு மேல் அவருக்கு ஒன்றும் தெரியவில்லை. அவருக்கு நன்றி தெரிவித்து விட்டு அங்கிருந்து கிளம்பி, நேரே சின்ன காஞ்சீபுரம் சென்றோம். யானை கட்டித் தெருவில் அப்படியொரு இடமோ, வீடோ இல்லை எனக் கூறி விட்டார்கள். அப்படியிருந்தும் நான் நம்பிக்கையை இழக்க வில்லை.

வயது முதிர்ந்த வைணவப் பெரியார்கள் ஓரிருவரைத் தேடிச் சென்று விசாரித்தேன். அவர்களும் கையை விரித்து விட்டனர். சேஷாத்ரி என்ற பெயரையே கேள்விப்பட்டதில்லை என்று கூட ஒருவர் சொல்லி விட்டார்! அப்படியும் நான் நம்பிக்கையை இழக்க வில்லை.

உடன் வந்த உள்ளூர்வாசி பத்மநாபன் என்னை நல்லப்பா ஜீயப்பங்கார் என்ற பெரியவரிடம் அழைத்துச்

ஸ்ரீ சேஷாத்ரி சுவாமிகள்





ஸ்ரீ காமாட்சி அம்மன ஆலயம், காஞ்சீபுரம்

அருணாசல மகிமை

20

ஸ்ரீ சேஷாத்ரி சுவாமிகள், பூட்டப்பட்டிருந்த அறையிலிருந்து மாயமாய் மறைந்து விட்ட செய்தி ஒரு நொடியில் ஊரெங்கும் பரவி விட்டது. அந்த அற்புத நிகழ்ச்சியைப் பற்றித்தான் எல்லோரும் பேசிக் கொண்டிருந்தனர். ராமசுவாமி ஜோசியரும், கல்யாணி அம்மாளும் 'பிள்ளையின் யோக மகிமையைப் புரிந்து கொள்ளாமல், அவன் மனம் நோகும்படி நடந்து கொண்டோமே' என்று வருத்தப்பட்டனர்.

ஸ்ரீ சேஷாத்ரி சுவாமிகளின் வரலாற்றில் இந்த நிகழச்சியைப் பற்றி படித்த போது எனக்குப் புல்லரித்தது. அத் திருவிளையாடலை அவர் நிகழ்த்திக் காட்டிய அந்த வீட்டையும், அந்த அறையையும் காண வேண்டும் என்ற பேரவா என்னுள் எழுந்தது. காஞ்சீபுரம் சென்று யார் யாரையோ கேட்டுப் பார்த்தேன். ஒருவருக்கும் அந்த வீடு இருக்குமிடம் தெரியவில்லை.

வயதானவர்களையெல்லாம் விசாரித்துப் பார்த்தேன். ஒரு பயனுமில்லை. நண்பர் மாத்ருபூதம், கொல்லா சத்திரத்திற்கு எதிரிலுள்ள ஒரு சிறு ஓட்டு வீட்டைக் காட்டி, "இங்கேதான் சேஷாத்ரி சுவாமிகளின் மனுஷா இருந்ததாகச் சொல்லுவா" என்று கூறினார். அந்த வீட்டுக்குள் சென்று பார்த்தேன். அது மிகப் பழைய வீடுதான். ஆனால், 'ஸ்ரீசேஷாத்ரி சுவாமிகள் வசித்த வீடு அதுதான்' என்று எப்படி உறுதிப் படுத்திக் கொள்வது? நேரே ஸ்ரீ காஞ்சி மாமுனிவரிடம் சென்றேன். வேறு எங்கு செல்வேன்?

"ஸ்ரீ சேஷாத்ரி சுவாமிகள் வசித்த இல்லம் எது என்று சரியாகத் தெரியவில்லை. பெரியவாளுக்கு தெரிஞ்சா..."

பரணீதரன்

ஆனி மாத முதல் இதழ் (21·6·70)

தென் ஆற்காடு

ஆடி மாத முதல் இதழ் (19·7·70)

திருநெல்வேலி

ஆவணி மாத முதல் இதழ் (16·8·70)

கோவை

புரட்டாசி மாத முதல் இதழ் (20·9·70)

இராமநாதபுரம்

ஐப்பசி மாத முதல் இதழ் (18·10·70)


வட ஆற்காடு

கார்த்திகை மாத முதல் இதழ் (22·11·70)


சேலம்

மார்கழி மாத முதல் இதழ் (20·12·70)


திருச்சி




பட்டம் பெற்ற மாணவர்கள் ஏன் நக்சல்பாரிகளாக மாறிக் கொண்டிருக்கிறார்கள் என்பது தமக்குப் புரியவில்லை என்று மத்திய கல்வி அமைச்சர் கூறினார்.



ஐ.நா பயனற்ற தீர்மானங்களை நிறைவேற்றிக்கொண்டிருக்கிறது என்று கனடாவின் முன்னாள் பிரதமர் கூறினார்.





ஸ்ரீ முக்தீச்வரர் ஆலயம், காவேரிப்பாக்கம்.

அருணாசல மகிமை

21

ஸ்ரீ அலங்காரவல்லி சமேத முக்தீச்வரர் எழுந்தருளியிருக்கும் காவேரிப்பாக்கம், புராணச் சிறப்புப் பெற்ற தலமாகும்.

அகத்திய முனிவரிட்ட சாபம் நீங்கும் பொருட்டு, அன்னை காவேரி அங்கு ஏரி வடிவில், கைலாசநாதனைக் குறித்துத் தவம் இருந்தாள். ஸ்ரீ பத்ம புராணத்தில் 'கவேர நகரம்' என்றும் வரலாற்றில் 'சதுர்வேதி மங்கலம்' என்றும் இது குறிப்பிடப்பட்டுள்ளது.

பரமனும் பார்வதி தேவியும் சோமகன் என்ற அரசனுக்கு வேடுவன், வேடுவச்சியாகக் காட்சி தந்து திருவிளையாடல் புரிந்த புண்ணிய பூமி இது. கைலாசபதி மானாக மாறிய போது அம்பிகை அதன் கழுத்தை அலங்கரிக்கும் நவரத்ன மாலையாக மாறியதால், சிருங்கார நாயகி என்றும் அலங்காரவல்லி என்றும் திருநாமம் பூண்டாள். அம்பிகை, ஐயனின் ஒப்புதல் பெற்று, அரசனின் வளர்ப்பு மகளாக அந்தப்புரத்தில் வளர, பரமன் பிரும்மசாரி வேடம் புனைந்து, நாட்டியம் பயிற்றுவிக்கும் ஆசானாக உள்ளே புகுந்து அவளை மயக்கி, . மணம் புரிந்து கொண்ட தலம் இது. முக்தீச்வரர், காவேரியின் சாபத்தைப் போக்கி அவளை அகத்திய முனிவருக்கு மணம் முடித்து வைத்ததாகவும் இத்தல வரலாறு கூறுகிறது.

இத் திருத்தலத்தில் சேஷாத்ரி அலங்காரவல்லியைக் குறித்து கடும் தவம் இருந்ததால், அம்பிகை, அவருக்குக் காட்சி தந்து பூரண ஞானம் அருளியதாகக் கூறப்படுகிறது.

ஸ்ரீ முக்தீச்வரர் ஆலயத்திலுள்ள நவராத்திரி மண்டபத்தில் அன்ன ஆகாரமின்றி ஸ்ரீ சேஷாத்ரி சில நாட்கள் நிட்டையிலிருந்தார்.

பரணீகான்

அப்போது ஒரு நாள் சுவாமியின் பெரியம்மாவான சுந்தரக்கா வந்து அவரை சாப்பிட வரும்படி வீட்டுக்கு அழைத்தார். சுவாமி, தயிர் சாதமும், புளியஞ்சாதமும் செய்து வரும்படி பெரியம்மாவிடம் கூறினர். சுந்தரக்கா அவ்விதமே செய்து கொண்டுவர, சேஷாத்ரி தயிர் சாதத்தை லிங்கமாகச் செய்து, புளியஞ் சாதத்தினல் அர்ச்சனை செய்தார். பிறகு அந்த லிங்கத்தை கையில் எடுத்துக் கொண்டு, எதிரிலுள்ள குளத்தில் இறங்கி கழுத்தளவு நீரில் நின்று இரண்டு நாட்கள் தவமிருந்தார்.

இச்செய்தி கேட்டு காஞ்சீபுரத்திலிருந்து சிறிய தந்தை ராமசுவாமி ஜோசியரும் சிற்றன்னை கல்யாணி அம்மாளும் வந்து சேர்ந்தனர்.

உலகத்தையும் உடலையும் மறந்து, அற்புத சமாதியில் ஆழ்ந்திருந்த புத்திரனைக் கண்டு இருவரும் பக்திப் பரவசத்தில் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தனர். அவர் நிட்டை கலைந்து கண்களைத் திறக்கும் வரை அருகிலேயே காத்திருந்தனர்.

பிரும்மானந்தத்தில் திளைத்திருந்த சேஷாத்ரி, கண்களைத் திறந்து அருளொளி படர, சுற்றி யிருந்தவர்களைப் பார்த்தார். சிற்றப்பாவும் சித்தியும், கலங்கிய கண்களுடன் தம் அருகில் நிற்பதையும் கவனித்தார். ஆனல், அந்தப் பார்வையில் பாச உணர்வு இல்லை; வைராக்கிய பொலிவு இருந்தது. ராமசுவாமி ஜோசியர் ஆவேசம் வந்தவர் போல் கத்தினர்:

''குழந்தே! எங்களை மன்னித்து விடப்பா. உன் மகிமை தெரியாமல் உன்னைத் துன்புறுத்தி விட்டோம். நீ எங்களை விட்டு எங்கும் போய் விடாதே. நீ இல்லாமல் எங்களால் வாழ முடியாது'' என்று கதறிக் கொண்டே சேஷாத்ரியின் கால்களில் விழுந்து நமஸ்கரித்தார்.

கல்யாணி அம்மாளும் உணர்ச்சி வசப்பட்டாள். அழுது கொண்டே பேசினள்:

''அப்பா, சேஷு. உன்னை இந்தக் கோலத்தில் பார்க்கவா மன்னி எங்கிட்டே ஒப்படைச்சுட்டுப் போனள்? நீ வீட்டை விட்டுப் போனதிலிருந்து எனக்கு சோறு தண்ணி இறங்கலேடாப்பா. நான் தூங்கி எத்தனை நாளோ ஆச்சு. நீ எங்களோட வந்துடு. உன்னை கோவில்லே வெச்சு கும்பிடறேன். எப்படியோ இருக்க வேண்டியவன், இப்படிப் பரதேசி மாதிரி, அன்ன ஆகாரம் இல்லாமெ சுத்திண்டிருக்கியே! ராஜா மாதிரி இருப்பியே! கன்னம் ஒட்டி, கண்கள் இடுங்கி, தாடியும் மீசையுமா அநாதை மாதிரி ஆயிட்டியே! நாங்க உயிரோட இருக்கிற போது நீ ஏன் இப்படியெல்லாம் இருக்கணும்? வந்துடு. இப்பவே புறப்படு'' என்று தாய்க்குரிய ஆதங்கத்துடன் புலம்பினள் கல்யாணி அம்மாள்.

சேஷாத்தி சிரித்தார். தமக்கு இனி குடும்ப வாழ்க்கையோ வீட்டு வாசமோ கிடையாது என்று அவர்களுக்கு எடுத்துக் கூறினர். ஆறுதல் வார்த்தைகள் கூறி அவர்களை தேற்றினர். திரும்பிப் போகும்படி மன்றுடிக் கேட்டுக் கொண்டார்.

ஆனல், அஞ்ஞானத்தில் சிக்குண்டவர்கள், அந்த பிரும்மஞானியை மீண்டும் மீண்டும் சம்சார பந்தத்தில் சிக்க வைக்க முயன்றுர்கள்.

பேச்சு பயனற்றுப் போகவே, சேஷாத்ரி மௌன விரதம் ஏற்றுக் கொண்டார். 'பிள்ளையின் மனம் மாறுதா, உடன் வர மாட்டாரா?' என்ற அசட்டு நம்பிக்கையுடன் வெகு நேரம் அங்கேயே நின்றிருந்து விட்டு, ராமசுவாமி ஜோசியரும் கல்யாணி அம்மாளும் ஏமாற்றத்துடன் காஞ்சீபுரம் திரும்பி விட்டனர்.

கடும் தவமியற்றிக் கொண்டிருந்த சேஷாத்திரியை தரிசிக்கவும், அவரது ஆசியைப் பெறவும், அக்கம் பக்கத்திலிருக்கும் கிராமங்களிலிருந்து

இடப்புறம் இருப்பது தான் சேஷாத்ரி சுவாமி அமர்ந்திருந்த நவராத்திரி மண்டபம்.





திருப்பத்தூரில அத்தை மாப்பிள்ளை வெங்கடரமணய்யர் வசித்த வீடு.

மக்கள் காவேரிப்பாக்கம் வந்த வண்ணம் இருந்தனர். நாளுக்கு நாள் பக்தர் கூட்டம் பெருகவே, தனிமையை நாடி ஒரு நாள் அங்கிருந்து புறப்பட்டு விட்டார் அவர்.

இரண்டு மூன்று மாதங்கள் கடந்தன. சேஷாத்ரி இருக்குமிடம் ஒருவருக்கும் தெரியவில்லை. 'இந்த ஊரில் பார்த்தேன்' 'அந்த ஊரில் பார்த்தேன்' என்று செய்திகள் வந்து கொண்டிருந்தன. 'செங்கற்பட்டிலிருக்கிறார்' என்ற செய்தியைக் கேட்டு அங்கு போனால், 'வந்தவாசிக்குப் போய் விட்டார்' என்று சொல்லுவார்கள். வந்தவாசிக்குப் போனால், 'காலையில் கோவிலில் பார்த்தேன். அப்புறம் எங்கே போனாரோ, தெரியவில்லை' என்பார்கள். இப்படி தமது யோக மகிமையால் பல இடங்களில் தோன்றி மறைந்து கொண்டிருந்தார் சேஷாத்ரி.

எங்கெல்லாமோ சுற்றித் திரிந்து விட்டு கடைசியில் திண்டிவனம் வந்து சேர்ந்தார். அப்போது அவர் மௌனமாக இருந்தார். யாருடனும் பேசுவதில்லை. முக்கியமான விஷயமாயிருந்தால் எழுதித்தான் காட்டுவார். எல்லோரும் அவரை 'மௌன சுவாமிகள்' என்றே குறிப்பிட்டனர்.

ஒரு நாள் மௌன சுவாமிகள் அந்த ஊரில் தம்மை ஆதரித்து வந்தவர்களிடம் தமக்கு நிட்டையில் இருக்க தனிமையான இடம் வேண்டுமென்று கேட்டார். டி. கே. கண்ணய்யர் என்பவர் திந்திரிணீச்வரர் கோயிலைச் சேர்ந்த குப்புசாமி குருக்களிடம் இதைக் கூறி, கோயிலிலுள்ள யாக சாலையைத் திறந்து விடும்படி கேட்டுக் கொண்டார். குப்புசாமி குருக்களும் அவ்வாறே செய்தார். சேஷாத்ரி அந்த அறைக்குள் சென்று அமர்ந்தார். வெளியே பூட்டிக் கொள்ளும்படியும், ஒரு மாதம் கழித்துக் கதவைத் திறக்கும்படியும் கூறிவிட்டு, தியானத்தில் ஆழ்ந்து விட்டார். அவரது பக்தர்களும் சுவாமிகளின் ஆணைப்படியே செய்தனர்.

நான்கு நாட்கள் சென்றன. ஐந்தாவது நாள் காலையில் குப்புசாமி குருக்களுக்குக் கவலை வந்து விட்டது. ''இப்படி ஆகாரமில்லாமல் இவர் தியானத்தில் இருக்கிறாரே, உயிருக்கு ஆபத்து ஏற்பட்டால் என்ன செய்வது? அந்தப் பழி நம்மைத்தானே வந்து சேரும். அது மட்டுமா? அவர் இறந்து விட்டால் கோயில் அசுத்தமாகி விடுமே! அதைப் போக்குவதற்கான சடங்குகளைச் செய்ய யார் பணம் கொடுப்பார்கள்? கடைசியில் நான்தான் கஷ்டப்பட வேண்டியிருக்கும்'' என்றெல்லாம் நினைத்து மனத்தைக் குழப்பிக் கொண்டார். அது அச்சமாக மாறியது. கதவைத் திறந்து சுவாமிகளை வேறு எங்கேயாவது அழைத்துப் போகும்படி பக்தர்களிடம் மன்றாடினார்.

கண்ணய்யர் வேறு வழியில்லாமல் கதவைத் திறந்தார். சேஷாத்ரி மரக்கட்டையைப் போல் தியானத்தில் ஆழ்ந்திருந்தார். அதைக் காண ஊர் ஜனங்களெல்லாம் கூடி விட்டனர். அரை மணி கழித்து சேஷாத்ரி நிட்டை கலைந்து கண் விழித்துப் பார்த்தார். குருக்களின் எண்ணத்தை மெள்ள அவரிடம் தெரிவித்தார் கண்ணய்யர்.

முக்தீச்வரர் சந்நிதித் தெரு (காவேரிப்பாக்கம்).





முத்துக்குமாரசுவாமி ஆலயம் (திருப்பத்தூர்)


உடனே சேஷாத்ரி அவ்விடத்தை விட்டு எழுந்து வெளியே வந்து விட்டார்.

பக்தர்களும் சீடர்களும் சேஷாத்ரி சுவாமியைப் பின் தொடர்ந்தனர். 'இது திருவண்ணுமலைக்குப் போகிறது' என்று எழுதிக் காட்டிவிட்டு வேகமாக நடந்தார் சுவாமி. மார்செட்டிக்குளத்தின் வழியே போகும் போது கரையிலுள்ள கிளாக்காயைப் பறித்து தரும்படி கேட்க, உடன் வந்தவர்கள் பறித்துக் கொடுத்தனர். அதில் கொஞ்சம் புசித்துக் கொண்டே ஐயன் தோப்பு என்ற கிராமத்திற்கு வந்தார் சுவாமி. அப்போது காலை வேளையானதால், பின் தொடர்ந்து வந்த மூவரும் நீராடச் சென்றனர். அவர்கள் திரும்பி வருவதற்குள் சேஷாத்ரி சுவாமி எங்கேயோ மாயமாக மறைந்து விட்டார்!

அடுத்த சில மாதங்கள் சுவாமி எங்கே சஞ்சரித்துக் கொண்டிருந்தார் என்பது தெளிவாகத் தெரியவில்லை. காஞ்சீபுரத்திற்கு தெற்கேயுள்ள தூசி,

ஸ்ரீ பிரும்மேச்வரர் சுவாமி ஆலயம் (திருப்பத்தூர்)





திந்திரிணீச்வரர் ஆலயம் (திண்டிவனம்).

மாமண்டூர் கிராமத்திலுள்ள பாண்டவர் குகையில் அவர் தவமிருப்பதாக செய்தி பரவவே, கூட்டம் கூட்டமாக மக்கள் அங்கு சென்றார்கள். சுவாமியின் சகோதரரான நரசிம்ம ஜோசியரும் தமையனைக் காண வேண்டும் என்ற ஆவலில் ஓடி வந்தார். ஆனால், அங்கே சுவாமியைக் காண முடியவில்லை. அவர் அதற்குள் வேறு எங்கோ சென்று விட்டார்!

அடுத்து, சுவாமி வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள திருப்பத்தூரில் காணப்பட்டார். அங்குள்ள முத்துக்

யாகசாலை.



குமாரசுவாமி ஆலயத்திலும், கோட்டை வீதியிலுள்ள பிரும்மேச்வர சுவாமி ஆலயத்திலும் அவர் சிறிது காலம் தங்கி யிருந்தார்.

பிரும்மா தவம் புரிந்த தலம் அது. மிகப் புராதனமான கோயில். அன்னை திரிபுரசுந்தரியைக் காணக் கண் கோடி வேண்டும். அக் கோயில் தற்போது இருக்கும் நிலையைக் காணும்போது மிகவும் வேதனையா யிருக்கிறது. அறங்காவலர்களின் நன் முயற்சியால் அங்கு திருப்பணியும் குடமுழுக்கும் நடக்க ஏற்பாடாகி வருகிறது என்பதை அறிந்தபோது மனத்துக்கு சற்று ஆறுதலாக இருந்தது.

சேஷாத்ரி சுவாமி திருப்பத்தூருக்குச் சென்ற காரணம் அந்த ஆண்டவனுக்கே வெளிச்சம்! ஆனால், சேஷாத்ரியின் அத்தை வெங்கடலட்சுமியின் பெண் காகினி, தன் கணவருடன் குடித்தனம் நடத்திக் கொண்டிருந்த திருப்பத்தூருக்கு அவரை விதிதான் அழைத்துச் சென்றதோ?

காகினிக்கும் சேஷாத்ரிக்கும் நடந்திருக்க வேண்டிய திருமணம் முறிந்தது. பின்னர் அவள் வெங்கடரமண ஐயரை மணந்து திருப்பத்தூரில் குடித்தனம் நடத்தி வந்தாள். சேஷாத்ரியோ, இல்லற வாழ்க்கை

யைத் துறந்து, மனம் போன போக்கில் அலைந்து திரிந்து, அதே திருப்பத்தூருக்கு வந்து சேர்ந்தார்.

காஞ்சீபுரத்திலிருந்து ராமசுவாமி ஜோசியர் தம் சகோதரியின் மாப்பிள்ளைக்கு எழுதிய கடிதத்தில், ''சேஷாத்ரியைத் திருப்பத்தூரில் கண்டால் எனக்குத் தெரிவிக்கவும்'' என்று கேட்டுக் கொண்டிருந்தார். கடிதம் வந்த ஒரு வாரத்திற்கெல்லாம், சேஷாத்ரியைக் கடைத் தெருவில் கண்டார் வெங்கடரமணய்யர். அவரிடம் நல்ல வார்த்தைகள் பேசி வீட்டுக்கு அழைத்துச் சென்முர். காஞ்சீபுரத்திலிருந்து சிறிய தந்தை எழுதியிருந்த கடிதத்தைக் காட்டினுர். பின்னர் வீட்டுக்குள் வரும்படி அழைத்தார்.

ஆனுல், சுவாமி உள்ளே வர முடியாது என்று கண்டிப்பாகக் கூறி, வெளித் திண்ணையிலேயே உட்கார்ந்து விட்டார்.

அவரது வாடிய முகத்தையும் ஒட்டிய வயிறையும், பரட்டைத் தலையையும் கண்ட வெங்கலட்சுமி மனம் புழுங்கினுள். அத்தை என்ற உறவைக் கூட பாராட்டாமல், கேட்ட கேள்விக்கு அவர் விட்டேத்தியாக பதில் கூறியதைக் கேட்டு அவள் நெஞ்சு குமுறியது. பொங்கி வந்த கண்ணீரை அடக்கிக் கொண்டு, ''உள்ளே வாயேம்ப்பா'' என்று அழைத்தாள். அதை சேஷாத்ரி காதில் சரியாகப் போட்டுக் கொண்டதாகவே தெரியவில்லை. தெருவை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தவர் லேசாகப் புன்னகை புரிந்தார்.


காகினிக்கு மார்பு படபடவென்று அடித்துக் கொண்டது. தன் கணவராக இருக்க வேண்டிய 'அம்மாஞ்சி' பரதேசியாய், பரப் பிரும்மமாய் திண்ணையில் அமர்ந்திருக்கும் கோலத்தைக் கண்டு துடித்துப் போனுள். ''ஐயோ, பாவம்'' என்று அவள் பெண் மனம் வருந்தியது. அவரை ஏதாவது விசாரிக்க வேண்டும் என்று அவளுக்குத் தோன்றியது. பேசினுல் குற்றமோ என்று அஞ்சி, பேசாமலிருந்து விட்டாள். அவள் இருந்த பக்கம் கூடத் திருப்பிப் பார்க்கவில்லை சேஷாத்ரி.

ஏதோ ஆகாரம் கொண்டு வந்து கொடுத்தார்கள். அதை உண்டு திண்ணையிலேயே படுத்து விட்டார் சேஷாத்ரி. அவருக்குத் துணையாக வெங்கடரமண ஐயரும் பக்கத்திலேயே படுத்துக் கொண்டார்.

விடியற் காலையில் வாசலில் நீர் தெளித்து,கோலம் போட வந்த வெங்கலட்சுமி திண்ணையில் சேஷாத்திரியைக் காணுமல் திடுக்கிட்டுப் போனுள். வெங்கடரமணய்யரும் எழுந்து, தெருவெங்கும் தேடினுர். ஊரெல்லாம் சுற்றிப் பார்த்தார்.

சேஷாத்ரி சுவாமி திருப்பத்தூரிலேயே இல்லை! அவர் அருணுசலத்தை நாடிச் சென்று கொண்டிருந்தார்.

— தொடரும்.





'மூன்று மணி நேரம் கண்ணுக்கு குளிர்ச்சியான பொழுது போக்கு; இடையிடையே மனத்தைத் தொட்டு நெருடிக் கொண்டிருக்கும் பாசப் பிணைப்பான காட்சிகள்'—இவற்றின் சேர்க்கை 'என் அண்ணன்.'

உற்சாகமாக வண்டியை ஓட்டி வருவது, 'புல்லுக் கட்டு' காதலியுடன் சரசமாக விளையாடுவது, ஜெயிலில் தர்மலிங்கம் 'சர்க்கரை'யாகப் பேசும் போது அப்பாவித்தனமாகப் பரவசம் அடைவது, பின் காதலியை துணைக்கு வைத்துக் கொண்டு பெரும் புள்ளிகளிடையே குறும்புத்தனமாக கலகமூட்டி விடுவது... அத்தனை காட்சிகளிலும் அழகு கொழிக்க அனாயாசமாக நடித்திருக்கிறார் எம். ஜி. ஆர்.

ஜெயலலிதா நன்றாக சிணுங்குகிறார். எம். ஜி. ஆருடன் அழகாகச் சண்டை பிடிக்கிறார். நடிக்கும் வாய்ப்பு சில படங்களிலேயே அவருக்குக் கிட்டுகிறது; அதில் ஒன்று என் அண்ணன். அதை மிகச் சிறப்பாக உபயோகப்படுத்தி இருக்கிறார்.

நகைச் சுவைப் பாத்திரம், நகைச் சுவைதானே என்று ஒதுக்கப்பட்டு விடாமல், நல்ல சதைப் பற்றுடன் கொடுக்கப் பட்டிருக்கிறது. அதைப் புரிந்து கொண்டுதானோ என்னவோ, சக்கை போடு போடுகிறார் 'சோ'. அவருக்கு மிஞ்சிதான் மற்றவர்கள் என்று நினைக்கும்படி செய்கிறார் அவர் வரும் காட்சிகளில்.

ஆனால், நகைச்சுவைக் கென்றே பிறந்தவர்களையே விழுங்கிச் சாப்பிட்டு விடுகிறார்களே எம். ஜி. ஆர்., ஜெயலலிதா ஜோடி; நகைச் சுவை நடிப்பில்; சுந்தரிபாயிடம் வந்து கலக மூட்டி அழும்போது: அதற்கு தனியாக ஒரு சபாஷ் சொல்ல வேண்டாமா?

க்ளைமாக்ஸ் காட்சிகளில், ஜீப்பை ஜட்கா துரத்தட்டும்; வேண்டாம் என்று சொல்லவில்லை. சினிமாவுக்காக விட்டு விடுகிறோம். ஆனால், தங்கள் வாழ்க்கை ரகசியங்களைத் தாங்கி இருக்கும் அந்த 'டேப்'பை, அந்தக் காட்டில் எங்கு வேண்டுமானாலும் வீசி எறிந்திருக்கலாமே! இது கூடவா வில்லன் நம்பியாருக்குத் தெரியாமல் போய் விட்டது. ஆனாலும் நம்பியார் வர வர ரொம்ப மோசம். ஐடியாவே இல்லை அவருக்கு! சின்ன சின்ன விஷயங்களைக் கூடத் தெரிந்து கொள்ளாமல் இருக்கிறாரே! ஆனால், வசனகர்த்தா சொர்ணம், இதை நன்றாக சப்பைக் கட்டு கட்டுகிறார்; 'உனக்கும் வேண்டாம், எனக்கும் வேண்டாம்' என்று கடைசியில் நம்பியாரை விட்டு சொல்லச் சொல்லி! சபாஷ், சொர்ணம்!

வண்ணமும் காட்சியமைப்பும் கண்ணுக்கு நிறைவாக இருக்கின்றன. காதல் காட்சிகளை செழுமை மிக்க இயற்கை அமைப்பின் பின்னணியில் ஜனரஞ்சகமாகப் படமாக்கி யிருக்கிறார், ஒளிப்பதிவாளர் ராமமூர்த்தி.

மொத்தத்தில் கல்யாண வீட்டு விருந்து.



ஸ்ரீ ரேணுகாம்பாள் ஆலயம் (படவேடு)

அருணசல மகிமை

22

போளூரிலிருந்து வேலூர் செல்லும் பாதையில், பத்தாவது மைலில், 'சந்தவாசல்' என்ற சிற்றூர் இருக்கிறது. அதைக் கடந்து மேற்கே மூன்று மைல்கள் சென்றால், 'படவீடு' என்ற கிராமத்தை அடையலாம். அங்கு அன்னை பராசக்தி ரேணுகாம்பாளாகக் கோயில் கொண்டிருக்கிறாள். தென்னகத்திலுள்ள முக்கியமான பிரார்த்தனை தலங்களில் இதுவும் ஒன்று.

பண்டைக் காலத்தில் அங்கு மாமன்னர்களின் ராணுவம் தங்கியிருந்ததால் அவ்விடத்திற்கு 'படைவீடு' என்ற பெயரும் உண்டு. அப்பகுதியிலுள்ள மலைக்காடுகளில் வேடுவர்கள் தங்கியிருந்த காரணத்தால் 'படைவேடு' 'படவேடு' என்ற பெயர்களையும் அது பெற்றுள்ளது.

அகில உலக நாயகி அருளாட்சி செலுத்தும் திருச் சந்நிதியில் இயற்கையன்னை எழில் நடம் புரிவதில் வியப்பில்லை. மண் வளமும், நீர்வளமும் நிறைந்த பூமி அது. தென்னையும், வாழையும், மா மரங்களும், பசுமையான சோலைகளும் கண்களுக்கு விருந்தளித்து உள்ளத்தைக் குளிர்விக்கின்றன. இந்த ரம்மியமான சூழ்நிலையில், சுற்றிலும் கம்பீரமாக நிற்கும் மலைகளுக்கு மத்தியில், மலைமகள் மோனத் தவம் புரிந்து கொண்டிருக்கிறாள்.

ஸ்ரீ ஜமதக்னி முனிவரின் ஆச்ரமம் விளங்கிய அந்த மண்ணில் கமண்டல நதி பாய்ந்தோடுகிறது. ஸ்ரீ ராமபிரானும் பக்த ஆஞ்சநேயரும் அங்கு எழுந்தருளி யிருக்கிறார்கள். சிறு குன்று ஒன்றின் மீது முருகப் பெருமான் கோயில் கொண்டிருக்கிறார்.

ஸ்ரீ ரேணுகாம்பாளை இன்றைக்கெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கலாம். மிகப் பெரிய உருவம். நான்கு கரங்களிலும் உடுக்கை, கத்தி, சூலம், கபாலம் ஏந்தி, ராஜசிம்மாசனப் பீடத்தில் அமர்ந்திருக்கும் திருக்கோலம். அஞ்ஞானத்தைச் சுட்டெரித்து கலைஞானம் வழங்கும் அருள் நோக்கு.

கீழே அன்னை சுயம்பு மூர்த்தியாக வீற்றிருக்கிறாள். வலப்புறத்தில் ஸ்ரீ ஆதிசங்கரர் பிரதிஷ்டை செய்த பாண லிங்கத்தை குருக்கள் நமக்குக் காட்டுகிறார். உற்று நோக்கி, உள்ளம் சிலிர்க்கக் கன்னத்தில் போட்டுக் கொள்கிறோம்.

பாணிகான்

திருப்பத்தூரை விட்டுக் கிளம்பிய ஸ்ரீசேஷாத்ரி சுவாமிகள், ஸ்ரீ ரேணுகா தேவி யம்மனைத் தரிசிக்க ஜவ்வாது மலைக் காடுகளைக் கடந்து, கல்லும் முள்ளும் நிறைந்த பாதைகளில் நடந்து, கழனிக் காடுகளில் புகுந்து படவேடு புனிதத் தலத்திற்கு வந்து சேர்ந்தார்.

இரண்டு நாட்கள் அன்னையின் அரவணைப்பில் மூழ்கித் திளைத்தார். காஞ்சியில் காமாட்சியாகக் காட்சி தந்த அம்பிகை, காவேரிப்பாக்கத்தில் அலங்காரவல்லியாக அருள் புரிந்த ஜகன்மாதா, படவேட்டில் ரேணுகாம்பாளாக ஸ்ரீ சேஷாத்ரி சுவாமிகளை ஆட் கொண்டாள்.

படவேட்டிற்கு ஏழாவது மைலில் ஆத்துவாம்பாடி என்ற ஒரு குக்கிராமம் உள்ளது. போளூரிலிருந்து எட்டாவது மைலில் உள்ள கேளூரைக் கடந்து நான்கு மைல்கள் சென்றால் அந்தக் கிராமத்தை அடையலாம். அடுத்து சுவாமிகள் அக்கிராமத்திற்குச் சென்றார்.


ஸ்ரீ சேஷாத்ரி சுவாமிகளின் பெரிய அத்தை லட்சுமி அம்மாள். அவளுடைய பிள்ளை வெங்கடரமண சாஸ்திரி. அவர் அப்போது ஆத்துவாம்பாடியில் கிராம முனிசீப்பாக இருந்தார். ஆனால், அவர் வீட்டுக்கு சுவாமிகள் போகவில்லை. அந்த கிராமத்தின் வழியாக எங்கோ சென்று கொண்டிருந்தவர், அத்தானின் கண்களில் பட்டார். அவ்வளவுதான்!

குடும்பத்தைத் துறந்து, வீட்டை விட்டு திருவண்ணாமலையை நோக்கிப் புறப்பட்ட சேஷாத்ரி சுவாமிகள், வழியில தம் உறவினர் வசித்த ஊர்களுக்கெல்லாம் சென்றிருக்கிறார். அதன் ரகசியம் புரியவில்லை. அவர்கள் எல்லோரும் தம்மைக் காணும்படி செய்தாரே யொழிய, அவர்களுடன் உறவாடவில்லை. பிறப்பால் பிணைக்கப் பட்டவர்களுக்குப் பரகதி கிடைக்க வேண்டும் என்று அவர்களுக்கெல்லாம் தரிசனம் தந்தருளவே அவர் அங்கெல்லாம் சென்றதாகத் தோன்றுகிறது.

ஆத்துவாம்பாடி கிராமத்தில் ஆயக்குட்டை என்றொரு குளம் இருக்கிறது. ஒரு நாள் அதில் கிராம முனிசீப் வெங்கடரமண சாஸ்திரி நீராடிக் கொண்டிருந்தார். அப்போது சேஷாத்ரி சுவாமிகள் கையில் ஒரு குச்சியைச் சுழற்றிக்கொண்டே கரையோரமாக நடந்து போய்க் கொண்டிருந்தார். அம்மாஞ்சியை அடையாளம் கண்டு கொண்டு விட்டார் அத்தான். "சேஷு...குழந்தே..." என்று கையைத் தட்டிக் கூப்பிட்டார். சுவாமிகள் திரும்பிப் பார்த்தார்.



ஸ்ரீ ரேணுகாம்பாள் ஆலயத்தின் உட்புறத் தோற்றம்



ஆயக்குட்டையில் ஸ்ரீ வெங்கடரமண சாஸ்திரியாரின் கொள்ளுப்பேரன் குளிக்கிருன்.

ஆனால், நிற்கவில்லை. வேகமாக நடந்து கொண்டேயிருந்தார்.

அத்தான் வெங்கடரமண சாஸ்திரி அவசரம் அவசரமாகத் தலையைத் துவட்டிக் கொண்டு அவர் பின்னுலேயே ஓடினுர். சுவாமிகளின் கையைக் கெட்டியாகப் பற்றிக் கொண்டு வீட்டுக்கு வரும்படி கெஞ்சாத குறையாக அழைத்தார். வீட்டுக்கு வர முடியாது என்று அவர் கண்டிப்பாக மறுத்து விட்டார்.

"உன்னைப் பார்த்து எத்தனையோ நாள் ஆறது. ரொம்ப நேரம் இருக்க வேண்டாம். இத்தனை தூரம் நடந்து வந்திருக்கியே. கொஞ்சம் வந்து ஒரு வாய் பால் சாப்பிட்டு விட்டுப் போயேன்...வாப்பா..." என்று அத்தான் அன்போடு அழைத்தார். அன்புக்குக் கட்டுண்டவர் போல் அவர் பின்னுலேயே நடந்து வந்து அத்தானின் வீட்டு வாசலிலேயே நின்று விட்டார் சுவாமிகள்.

வீட்டுக்குள் சென்று பால் எடுத்துக் கொண்டு வருவதற்குள் சுவாமிகள் அங்கிருந்து புறப்பட்டு விட்டார். பால் பாத்திரத்துடன் ஓட முடியாத காரணத்தால், தலையாரியை விரட்டினுர் கிராம முனிசிப். "வேகமாகப் போய், அவரை எப்படியாவது இங்கு அழைச்சிண்டு வா."

தலையாரி வேகமாக நடந்தார். அதைவிட வேகமாக நடந்தார் சுவாமிகள். அடுத்துள்ள துரிஞ்சிக்குப்பம் என்ற கிராமத்தை நோக்கிப் போய்க் கொண்டிருந்தார்.

இது நடந்து இப்போது என்பது வருடங்கள் ஆகி விட்டன. சுவாமிகளும் வெங்கடரமண சாஸ்திரியாரும் மறைந்து விட்டார்கள். ஆனால், ஆத்து வாம்பாறும் ஆயக்குட்டையும் அப்படியேயிருக்கின்றன.

நாங்கள் ஆயக்குட்டையைக் காணச் சென்றபோது, அதில் ஒரு சிறுவன் குளித்துக் கொண்டிருந்தான். புதிதாக யாரோ கிராமத்திற்கு வந்திருக்கிருர்களே என்று ஆச்சரியத்துடன் பார்த்து விட்டு, எங்களிடம் விசாரித்தான்:

"நீங்கௌெல்லாம் யாரு? எங்கேயிருந்து வந்திருக்கேள்? உங்களுக்கு யாரைப் பார்க்கணும்?"

"எங்களுக்கு ஊர் மெட்ராஸ். இந்த ஊர் மணியக்காரரைப் பார்த்து சில விஷயங்கள் விசாரிக்கலாம்னு வந்திருக்கோம். அவர் வீட்டிலே இல்லே; வசூலுக்குப் போயிருக்கிருராம்."

"நான் அவர் பிள்ளைதான். உங்களுக்கு என்ன வேணும்?"

"சேஷாத்ரி சுவாமிகள்னு ஒருத்தர் இருந்தார். அவர் இந்த ஊருக்கு வந்திருக்கார். அதைப் பற்றி விசாரிக்கணும்னுதான் வந்திருக்கோம்."

"எனக்கு அவரைத் தெரியுமே... எங்களுக்கு அவர் உறவு. அவரைப் பற்றி அப்பா எனக்கு நிறைய சொல்லி யிருக்கார்."

"எப்படி உறவு?"

"அதாவது, எங்க அப்பாவுக்கு வெங்கடரமண சாஸ்திரின்னு ஒரு தாத்தா இருந்தார். அவர் சேஷாத்ரி சுவாமிகளோட சொந்த அத்தான்."

எங்களுக்குத் தூக்கி வாரிப்போட்டது. என்ன ஆச்சரியம்? குளத்தில் குளித்துக் கொண்டிருந்த ஒரு பையனிடம் எதையோ விசாரிக்கப் போக,

அவன் சுவாமிகளுக்கு உறவு என்கிறானே! என்பது வருடங்களுக்கு முன் இந்த ஆயக்குட்டையில், வெங்கடரமண சாஸ்திரி குளித்ததைப்பற்றிப் படித்துவிட்டு இங்கு வந்தால், அதே ஆயக்குட்டையில் அவருடைய கொள்ளுப் பேரன் இன்று குளித்துக் கொண்டிருக்கிறானே!



ஸ்ரீ வெங்கடரமண சாஸ்திரியார் வசித்த வீடு

ரவீந்திரன் புத்திசாலிப் பையன். சரியான அரட்டை. வாய் ஓயாத பேச்சு. பெரிய அனுபவசாலி போல் பேசுகிறான். வேதாந்தமாகப் பொழிந்து தள்ளுகிறான்: கேட்டால், எல்லாம் பாட்டி சொல்லிக் கொடுத்தது என்று பெருமிதத்தோடு கூறுகிறான்.

பேசிக் கொண்டே வீட்டுக்கு வந்து சேர்ந்தோம். வெங்கடரமண சாஸ்திரி என்பது வருடங்களுக்கு முன்பு வசித்த வீடு அப்படியே இருக்கிறது. அதாவது அதில் காலம்தான் கை வைத்திருக்கிறது. மனிதர் கை வைக்கவேயில்லை!

பழமையான சின்னங்களைப் பார்க்கும் போது அதைச் சுற்றி நிகழ்ந்த சரித்திர நிகழ்ச்சிகள் கண்முன் பசுமையாகக் காட்சியளிக்கின்றன. அந்த வீட்டைப் பார்த்த போது வாசலில் ஸ்ரீ சேஷாத்ரி சுவாமிகள் நிற்பதும், பால் கொண்டு வர வெங்கடரமண சாஸ்திரிகள் பரக்கப் பரக்க உள்ளே ஓடுவதும் கண் முன் நிழற்படம் ஆடின.

சிற்றைக்கெல்லாம் வசூலுக்குச் சென்றிருந்த மணியக்காரர் வந்தார். அவர் பெயரும் வெங்கடரமணன் தான். அத்தான் வெங்கடரமண சாஸ்திரியின் புத்திரர்களில் ஒருவரான அருணாசல சாஸ்திரியின் குமாரர். சுவாமிகளைப் பற்றித் தம் தாயாரும், பாட்டியும் சொல்லியுள்ள கதைகளைப் பெருமையோடும் பூரிப்போடும் கூறினார் அவர்.

ஆத்துவாம்பாடியிலிருந்து ஸ்ரீ சேஷாத்ரி சுவாமிகள் அடுத்திருக்கும் துரிஞ்சிக்குப்ப கிராமத்திற்குச் சென்றதாகவும் அங்குள்ள 'சந்நியாசிப் பாறை' என்று அழைக்கப்படும் ஒரு மகானின் சமாதியைத் தரிசித்ததாகவும் நான் படித்திருந்தேன். அதைப் பற்றி வெங்கடரமண ஐயரிடம் விசாரித்தேன். அந்த மகானைப் பற்றி அவர் கூறிய வரலாறு என் நெஞ்சை அள்ளியது. அதைப் பற்றி நினைக்கும் போதெல்லாம் புல்லரிக்கிறது.

முந்நூறு வருடங்களுக்கு முன் சோழ தேசத்திலிருந்து ஒரு சந்நியாசி காசி யாத்திரைக்குப் புறப்பட்டார். அவருக்கு பூர்வாசிரமத்தில் ஒரு பெண் உண்டு. இளம் வயதிலேயே கணவனை இழந்தவள் அவள். காசிக்கு தன்னையும் அழைத்துச் செல்லும்படி தந்தையிடம் மன்றாடினாள். அவர் மறுத்தார். அது தாம் ஏற்றுக் கொண்டுள்ள ஆசிரமத்திற்கு உகந்ததல்ல என்று எத்தனையோ எடுத்துச் சொன்னார். ஆனால் அந்தப் பெண் கேட்கவில்லை. கண்ணீர் விட்டு அழுதாள். உலகத்தைத் துறந்தவருக்கு, உறவை உதறித் தள்ள முடியவில்லை. சம்மதித்தார். இருவரும் யாத்திரையாகத் துரிஞ்சிக்குப்பம் வந்து சேர்ந்தார்கள்.

அந்தக் கிராமத்தில் நிறைய அந்தணர் குடும்பங்கள் இருந்தன. அவர்களிடம் பிட்சை பெற்றுச் சிறிது காலம் அங்கு தங்கலாம் என்று அந்தப் பெரியவருக்கு ஏனோ தோன்றியது. ஊரின் எல்லையில் மலை அடிவாரத்தில்



வெள்ளைக் கோட்டுக்குள் தெரிவதுதான் சந்நியாசிப் பாறை

தமக்கு ஒரு பர்ண சாலையை அமைத்துக் கொண்டார். சற்றுத் தொலைவில் 'பெண்'ணுக்கும் ஒரு குடில் அமைத்துக் கொடுத்தார். தினமும் ஊருக்குள் சென்று, அந்தணர் வீதியில் அன்னம் பெற்று வந்து, தாமும், உண்டு 'மக'ளுக்கும் அளித்து வந்தார்.

ஒரு நாள் அவர், கையில் கப்பரை ஏந்தி அன்னம் யாசிக்கச் சென்ற போது எல்லார் வீட்டுக் கதவுகளும் அடைக்கப்பட்டிருந்தன. தினமும் அன்போடும் பரிவோடும் உணவு அளித்தவர்கள் எல்லாம் அன்று வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடந்தார்கள்.

'இப்படியும் ஒரு நாள் கழிய வேண்டும் என்பது ஆண்டவனின் திருவுள்ளம் போலும்' என்று நினைத்து பட்டினியோடு அமர்ந்திருந்த துறவியிடம் மாடு மேய்க்கும் சிறுவர்கள் நான்கைந்து பேர் வந்தனர்.

"சாமீ, இன்னிக்கு உனக்கு யாரும் சோறு போடலே, இல்லியா?" என்று ஒருவன் கேட்டான்.

"ஆமாண்டா தம்பி! எல்லார் வீட்டுக் கதவு களும் சாத்தி யிருந்தது" என்றார் பெரியவர் வெகுளித்தனமாக.

"அது ஏன் தெரியுமா சாமி? நீ ஒரு பாப்பாத்தியை வெச்சுக்கிட்டிருக்கியாம். உனக்கு இனிமே சோறே போடப் போறதில்லையாம். நேத்து எல்லாரும் பேசிக்கிட்டாங்க" என்றான் சிறுவன் சிரித்துக் கொண்டே. எத்தனை பயங்கரமான குற்றச்சாட்டை எத்தனை சாதாரணமாகச் சொல்லி விட்டான்?

தர்ம வழி நின்றவர் தர்ம சங்கடப்பட்டார். சத்திய நெறி தவறாதவராக யிருந்தும், தவறான ஓர் எண்ணம் பரவக் காரணமாய் இருந்து விட்டோமே என்று குமுறி விட்டார். சத்தியத்தில் மாசு படிந்து விட்டது.

அந்தச் சிறுவர்களை அருகில் அழைத்து, வறட்டியும் சுள்ளியும் எடுத்து வரச் சொன்னார் சந்நியாசி. அதைச் சிதையாக அடுக்கினார். அதில் தம் பெண்ணைப் படுக்கும் படி கூறினார். கையிலிருந்த தண்டத்தை உயரே தூக்கி ஏதோ மந்திரத்தை ஜபித்தார். சத்திய தேவன் அக்னி ஜ்வாலையாகத் தோன்றினான். மறுகணம், அவர் மாசுபடக் காரணமாய் இருந்த மங்கையைச் சாம்பலாக்கி விட்டு மறைந்து விட்டான். அப்பெண் எரிந்து போன இடத்தை இன்றும் 'பாப்பாத்திக்குளம்' என்று அழைக்கிறார்கள்.

'பெண்' மறைந்த மறு கணம் அருகிலிருந்த வற்றிப் போன பெரிய ஏரியில் இறங்கினார் அந்த சந்நியாசி. அதில் ஒரு குழியைத் தோண்டும்படி அச் சிறுவர்களை பணித்தார். விளையாட்டுப் பிள்ளைகள், அதையும் ஒரு விளையாட்டாகவே நினைத்து 'மள மள' வென்று பள்ளம் தோண்டினார்கள். அதில் இறங்கினார் சந்நியாசி. சிறுவர்களிடம் அருகிலிருக்கும் கற்பாறையை எடுத்து

அக் குழியை மூடிவிட்டு மணலை அள்ளிக் கொண்டு போகும்படி கூறினர். அச் சிறுவர்கள் அதையும் ஒரு விளையாட்டாக எண்ணி அப்படியே செய்தனர். மடியில் அள்ளி வைத்துக் கொண்ட மணல், கடலையாகவும், கற்கண்டாகவும் மாறின. சிறுவர்களின் குதூகலத்துக்குக் கேட்கவேண்டுமா?

சந்நியாசி மறைந்து விட்டார். அதற்கு அடையாளமாக சந்நியாசிப் பாறை இன்றும் இருக்கிறது.

'சந்நியாசிப் பாறை' ஒரு ஜீவசமாதி. அப் பகுதி மக்கள் பய பக்தியுடன ஆண்டு தோறும் ஆடி மாதத்தில் அதற்குப் பூசை போடுகிறார்கள். பூசை செய்து விட்டு திரும்புவதற்குள் பேய் மழை கொட்டி, அப் பகுதியே வெள்ளக் காடாகி விடுகிறதாம்!

அந்த மகானின் நற்பெயருக்குக் களங்கம் கற்பித்த அந்தணர் குடும்பம் ஒன்றுமே தற்போது துரிஞ்சிக்குப்பத்தில் இல்லை. ஆண் வழிச் சந்ததியே பூண்டோடு அழிந்து விட்டதாகவும் பெண் வழிச் சந்ததிகள் சிலர் இருப்பதாகவும் மணியக்காரர் கூறினர்.

இந்த வரலாற்றைக் கேட்டதிலிருந்து சந்நியாசிப் பாறையைத் தரிசிக்காமல் திரும்ப எங்கள் மனம் இடம் தரவில்லை. ஆத்துவாம்பாடி வாசி ஒருவரின் துணையோடு, கடும் வெய்யிலில், வயற் காடுகளையும், வரப்பு மேடுகளையும் கடந்து இரண்டு மைல்கள் நடந்து சென்று பெரிய ஏரி மைதானத்தை அடைந்தோம். அதன் மத்தியில் தரை மட்டத்தில் இருக்கும் அந்தப் பாறையைக் கண்டதும் உடலில் ஒரு சிலிர்ப்பு ஏற்படுகிறது. சத்தியத்தின் தூய்மையைக் காத்த மகான் ஒருவரின் காலடியில் நிற்கும் உணர்வு நம்மைப் பற்றிக் கொள்கிறது. வெகு அருகில் செல்லவோ, அப் பாறையைத் தொடவோ துணிவு பிறப்பதில்லை.

உடன் வந்தவர், நீராடிவிட்டு மடித் துணியுடன், தேங்காய் உடைத்து, சூடம் கொளுத்தி, வணங்கி எழுந்தார். நாங்களும் பய பக்தியுடன் அந்த சத்தியப் பாறையை வலம் வந்து, கீழே விழுந்து, வணங்கி எழுந்தோம்.

சத்திய ஒளி பரப்பும் இந்தப் பாறையை தரிசித்து விட்டு, நித்திய ஒளி பரப்பும் அருணுசலத்தை அடைந்தார் ஸ்ரீ சேஷாத்ரி சுவாமிகள்.

—தொடரும்.


ஒரு தங்கமான புத்தகம்

சென்ற ஆண்டு, ஏப்ரல் மாத விகடன் இதழில், குழந்தைகளுக்கான 'கோல்டன் ரீடர்ஸ்' என்ற ஆங்கிலப் பாடப் புத்தகம் ஒன்றைப் பாராட்டி, இரண்டு தலைமை ஆசிரியைகள் அளித்திருந்த பேட்டி வெளியாகியிருந்தது.

இதைப் போல தமிழிலும் ஒரு புத்தகம் வர வேண்டும் என்று ஒரு தலைமை ஆசிரியை அப்போது விருப்பம் தெரிவித்திருந்தார்.

அவருடைய விருப்பம் இப்போது நிறைவேறி விட்டது. குழந்தைகளுக்கு அறிவோடு, பண்பும் பக்தியும் ஊட்டும் வண்ணப் படங்கள் நிறைந்த தங்கப் புத்தகம் ஒன்று 'அறவழி வாசகம்' என்ற பெயரில் வெளி வந்திருக்கிறது.

'அ' என்ற எழுத்துக்கு 'அரம்' என்று எடுத்தவுடனேயே குழந்தைகளுக்கு 'ஆயுதப் பயிற்சி'யைக் கற்றுத் தராது இப்புத்தகம்! மாறாக தமிழ் அளித்த அகத்தியரைக் குழந்தைகள் நாவில் தவழ விடும்! 'ஆ' என்ற எழுத்திற்கு, சோம்பித் திரியும் ஆட்டைக் காட்டித் தராது இப்புத்தகம்! அழகு தெய்வமான ஆறுமுகனையும் சூடிக் கொடுத்த ஆண்டாளையும் அறிமுகப் படுத்துகிறது. 'இ'க்கு இளங்கோ அறிமுகமாகிறார்.



புத்தகம் முழுவதும் தெய்வ பக்தியும், இலக்கிய மணமும், பாரத கலாசாரமும் பரவியிருக்கிறது. நல்ல குடிமக்களாக வாழ்வதற்கான நற்பண்புகள் பால பருவத்திலிருந்தே வளர்வதற்கு இம் மாதிரியான தங்கப் புத்தகங்கள் நிறைய வெளி வர வேண்டும்.

புத்தகம் கிடைக்குமிடம்,

'புராதன கலாசாரக் கல்வி ஸ்தாபனம், 20,I கால்வாய் குறுக்குத் தெரு, காந்தி நகர், சென்னை-20'.



வயலின்+ புல்லாங்குழல் கிருஷ்ணன்

நாற்பதாண்டு காலம் வக்கீலாக பணி புரிந்து வரும் ஒருவர் திடீரென்று ஒருநாள் டாக்டராக மாறி விட முடியாது. ஆனால், முப்பத்தைந்து ஆண்டுகளாக வயலின் ஒன்றினையே தன் உயிர் மூச்சாகக் கொண்டிருக்கும் டி. என். கிருஷ்ணன், இம்மாதம் இருபத்தைந்தாம் தேதி 'நாதோபாசன'வின் ஆதரவில் நடைபெற விருக்கும் ஐம்பதாவது கச்சேரிக்கு புதுமைப் பொலிவு புகுத்த, கையில் புல்லாங்குழலுடன் கோபி கிருஷ்ணனாகக் காட்சி தரப் போகிறார்.

தனது பதினாறாவது வயதில், உறவினர் வீட்டு சமையற்காரர் கொடுத்த புல்லாங்குழலை, அது மிகவும் எளிமையான, கையாளுவதற்கு சுலபமான ஒரு கருவியாக தென்பட்ட காரணத்தால், வாயருகே எடுத்துச் செல்ல, ஏற்கெனவே தனது ஐந்தாவது வயதிலிருந்தே வயலினுடன் உறவு கொண்ட 'அனுபவம்' குழலிலிருந்து கீத வெள்ளம் பெருக்கெடுத்து வர உதவியாக அமைந்தது. மாய கிருஷ்ணனின் அருள் டி. என். கிருஷ்ணனுக்குக் கிடைத்தது. அவராகவே நேரம் கிடைத்த பொழுதெல்லாம் சாதகம் செய்து இன்று மேடைக் கச்சேரி செய்யும் அளவிற்கு வெற்றி கண்டுள்ளார்.

''மாலியின் கச்சேரிக்கு அநேகம் தடவை வயலின் வாசித்தது நான் புல்லாங்குழல் கற்றுக் கொள்ள பெரும் அளவிற்கு உதவியது. தவிர மாலி தனது மாணவர்களுக்கு 'பாடம்' கற்றுக் கொடுக்கும் சமயங்களில் அருகிலிருந்து 'டெக்னிக்க'லாக சில அம்சங்களையும் கற்றுக் கொண்டேன்'' என்று கூறும் கிருஷ்ணன், அரங்கேற்றத்தை முன்னிட்டு இப்பொழுதெல்லாம் தினமும் விடாமல் சாதகம் செய்து வருகிறார்—கல்லூரி தேர்வுக்குச் செல்லவிருக்கும் ஒரு மாணவனைப் போல!

''இனி உங்கள் புல்லாங்குழல் கச்சேரிகளை நிறைய எதிர் பார்க்கலாமா?''

''அது என் முதல் கச்சேரியைப் பொறுத்திருக்கிறது!''

''சரி...வயலின் — புல்லாங்குழல் சேர்க்கையில் ஏதாவது புதுமை...?''

''அதுவும் முதல் கச்சேரியைப் பொறுத்த ஒரு விஷயம்தான்!''

—வீயெஸ்வி.



23

ஸ்ரீ சேஷாத்ரி சுவாமிகள எங்கெல்லாமோ சென்று விட்டு திருவண்ணாமலைக்கு வந்து சேர்ந்ததும், சொந்த வீட்டிற்கே திரும்பி வந்து விட்டதைப் போல் உணர்ந்தார்.

அன்னை மரகதம் மரணப் படுக்கையில் கூறிய 'அருணாசலா' என்ற சொல், மைந்தனின் இதயத்தில் ஓங்கார நாதமாய் ஒலித்து, எதிரொலித்தது. அந்த ஒலியே உள்ளொளியாக உருமாறி, பேரண்டப் பெரு வெளி யெங்கும் படரும் பேரொளியாய் வழிகாட்ட, அருணையம்பதி வந்து, அருளொளி பரப்பும் அருணாசலத்தை அடைக்கலம் அடைந்தார் அவர்.

தாம் கற்பனையில் கண்டு, சித்திரமாகத் தீட்டி, தியானத்தில் இறுத்தி வழிபட்ட மாமலையைக் கண்ணெதிரில் கண்டதும், தன்நிலை உணர்ந்து, தன்னை மறந்து, 'தான்' கரைந்து, 'அது'வாகி விட்டார்.

மலையாக வீற்றிருக்கும் அருணாசலமே, அர்த்தநாரீச்வரராக, உண்ணாமுலையம்மன் சமேத அண்ணாமலையாராக ஆலயத்தினுள் அமர்ந்திருக்கும் திருக்கோலத்தைக் கண்டு மனத்தைப் பறிகொடுத்தார் ஸ்ரீ சேஷாத்ரிசுவாமிகள். அம்மையையும் அப்பனையும் எந்நேரமும் கண்டு களித்துக் கொண்டிருந்தார். சிவலிங்கமாய்க் கோயிலில் சமாதி நிட்டையில் அமர்ந்திருப்பார். சட்டென்று எழுந்து, உற்சவ மூர்த்தியாய்த் தெருவில் அலையத் தொடங்கி விடுவார். உலகைத் துறந்து, உடலை மறந்து, உன்மத்தராய், ஞானப் பித்தராய் மோன தவமியற்றிக் கொண்டிருந்தார்.

அருணாசலத்துடன் ஐக்கியமாகி விட்ட பிள்ளையைப் பற்றி அஞ்ஞானத்தின் காரணமாக சிற்றப்பா ராமசுவாமி ஜோசியரும், சித்தி கல்யாணி அம்மாளும் கவலைப் பட்டுக் கொண்டிருந்தனர். 'குழந்தை எங்கு இருக்கிறானோ? எப்படி இருக்கிறானோ? சாப்பிட்டானோ? தூங்கினானோ?' என்று எந்நேரமும் ஏக்கமுற்றிருந்தனர். பெற்றவனைக் காட்டிலும் அதிகமாக பாசம் வைத்து வளர்த்து விட்டதால், பிரிவாற்றாமை தாங்காமல் கலக்கமுற்றாள் கல்யாணி அம்மாள். சேஷாத்ரியின் 'கதி'யை நினைத்து நினைத்து மனத்திற்குள் மறுகினாள், உருகினாள், உருக் குலைந்து போனாள். ஊண், உறக்கம் மறந்து, உடல் மெலிந்து, உள்ளம் நலிந்து உயிருக்காகப் போராடியவளை, உற்றார் உறவினர் துயரக் கண்ணீரோடு சூழ்ந்து நின்றனர். காலனுக்குக் கருணை பிறந்தது. கடிதில் வந்து கல்யாணியை அழைத்துச் சென்று விட்டான்.

மனைவியை இழந்து, மனமுடைந்து ஆறுதல் கூறுவாரின்றி அமர்ந்திருந்த ராமசுவாமி ஜோசியருக்கு,

பரணீதரன்

அத்தான் ஆத்துவாம்பாடி வெங்கடரமண சாஸ்திரியாரிடமிருந்து வந்த ஒரு கடிதம் சற்று மன நிம்மதியை அளித்தது. அக் கடிதத்தில் அவர், ஸ்ரீ சேஷாத்ரி திருவண்ணாமலையில் சுற்றிக் கொண்டிருக்கும் செய்தியைத் தெரிவித்திருந்தார். உடனே பறந்து சென்று 'குழந்தையைக் காண வேண்டும்' என துடித்தார் ஜோசியர். எப்பாடு பட்டாவது அவரை மீண்டும் காஞ்சீபுரத்திற்கே திரும்ப அழைத்து வந்து விட வேண்டும் என்று முடிவு செய்தார்.

மறுநாளே ராமசுவாமி ஜோசியரும் சேஷாத்ரியின் தம்பி நரசிம்ம ஜோசியரும் திருவண்ணாமலைக்குப் புறப்பட்டுச் சென்றனர். கோயில் குளமெல்லாம் தேடினர். சத்திரம், சாவடிகளிலெல்லாம் நுழைந்து புறப்பட்டனர். எங்கும் சேஷாத்ரியைக் காண முடியவில்லை. கடைசியில் ஏதோ ஒரு தெருவில் அவரைக் கண்டனர். அவர் அப்போது இருந்த கோலம் ராமசுவாமி ஜோசியரின் வயிற்றைக் கலக்கியது. தம்பியின் கண்களைக் குளமாக்கியது.

அழுக்குத் துணி, பரட்டைத் தலை, ஒட்டிய கன்னங்கள், குழி விழுந்த கண்கள், வாடிய வயிறு. சோறு தண்ணீர் இல்லாமல், பைத்தியக்காரனைப் போல் தனக்குத் தானே ஏதோ பேசிக் கொண்டு கவனிப்பாரற்று சென்ற சேஷாத்ரியை அப்படியே கட்டிக் கொண்டு 'ஓ' வென்று கதறிவிட்டார் ராமசுவாமி ஜோசியர். "சேஷு, குழந்தே, உன் சித்தி போயிட்டாடா. அவ கொடுத்து வச்சவ. உன்னை இந்தக் கோலத்திலே பார்க்காமெ போய்ச் சேர்ந்துட்டா அந்த மகராசி. நான் என்ன பாவம் பண்ணி இன்னும் உயிரோட இருக்கேனோ தெரியலே... அப்பனே.. நீ என்னோட இப்பவே காஞ்சீபுரத்துக்கு வந்துடு. இன்னும் கொஞ்ச நாள்தான் நான் உயிரோட இருப்பேன். அதுக்கப்புறம் நீ எங்கேயாவது போ!...... இப்படி நீ அநாதை மாதிரி பட்டினியா அலைஞ்சிண்டிருக்கறபோது எனக்குச் சோறு இறங்குமா?...வந்துடு...சொல்றத்தைக் கேளு!..." என்று நடுத்தெருவில் நாலு பேர் பார்க்கிறார்களே என்ற கூச்சம் கூட இல்லாமல் கதறினார். நரசிம்ம ஜோசியரோ, "அண்ணா, அண்ணா" என்று அலறியபடி சுவாமிகளைத் தழுவிக் கொண்டார். கன்னத்தைத் தடவிக் கொடுத்தார். அவிழ்ந்திருந்த வேஷ்டியை கட்டி விட்டார். தலையைக் கோதி விட்டார்.

சேஷாத்ரி சுவாமிகள் உணர்ச்சி வசப்பட்டதாகவே தெரியவில்லை.. கண்கள் சூன்ய வெளியை வெறித்துப் பார்க்க, உதடுகள் ஏதோ முணுமுணுத்தன. பந்தபாசங்களை என்றோ அறுத்துக் கொண்டு விட்டவருக்கு, உறவினரின் அன்பும் பரிவும் இரும்புத் தளைகளாக கனத்தன. அவர்கள் பிடியிலிருந்து தப்பித்துக் கொண்டு மனம் போன போக்கில் நடக்க ஆரம்பித்தார் அவர்.


ஊர் ஜனங்கள் வேடிக்கை பார்த்து நின்றனர். அவர்களுக்கு ஒன்றுமே புரியவில்லை. "பாவம், பையனைப் பார்த்தால், களையா நல்லா இருக்கான். புத்திசுவாதீனம் இல்லாமல், வீட்டை விட்டு ஓடி வந்துட்டான் போலிருக்கிறது. பெத்தவங்க வயிறு பத்தி எரியாதா?" என்று பேசிக் கொண்டார்கள். அன்றுதான் முதன் முதலில் திருவண்ணாமலைவாசிகள் தங்கள் ஊரில் இப்படியொரு ஜீவன் நடமாடிக் கொண்டிருப்பதை தெரிந்து கொண்டார்கள்.

ராமசுவாமி ஜோசியர் கடையில் பட்சணம் வாங்கி வைத்திருந்தார். "இதையாவது சாப்பிடேன்" என்று சேஷாத்ரியிடம் வாஞ்சையுடன் கொடுத்தார். அதில் கொஞ்சம் எடுத்துச் சாப்பிட்டு விட்டு, கையை அழுக்கு வேட்டியில் துடைத்துக் கொண்டே திரும்பிப் பார்க்காமல் வேகமாய்ப் போய் விட்டார் அவர்.

ராமசுவாமி ஜோசியரும், நரசிம்ம ஜோசியரும் நம்பிக்கையை இழக்கத் தயாராயில்லை. சேஷாத்ரி மனம் மாறி

ஸ்ரீ சேஷாத்ரி சுவாமிகள்





ஸ்ரீ காமகோடி சுவாமிகள் பிறந்த இல்லம் (மாற்றி யமைக்கப்பட்டது.)

ஒரு வேளை காஞ்சீபுரம் திரும்பி விடலாம் என்று நினைத்து இரண்டு நாட்கள் திருவண்ணாமலையிலேயே தங்கி, சேஷாத்ரியைப் பார்த்த போதெல்லாம் அவர் எதிரில் போய் நின்றனர். அமிருதக் கடலில் மிதப்பவரைச் சம்சாரக் குட்டையில் அமிழ்த்தி விட முயன்றூர்கள்.

பேரருளின் திட்டம் வேருக இருக்கும் போது, பெற்றவரின் திட்டம் பலிக்குமா? இறுதியில் நம்பிக்கையை இழந்து இருவரும் காஞ்சீபுரத்துக்கே திரும்பி விட்டனர். திருவண்ணாமலையிலிருந்து புறப்படுவதற்கு முன், ராமசுவாமி ஜோசியர் அன்ன சத்திரத்தின் மணியக்காரரிடம் சென்று, சேஷாத்ரி அங்கு வரும் போதெல்லாம் அவருக்கு வயிறு நிறையச் சோறு போடும்படி கேட்டுக் கொண்டார். மக்களின் ஆன்மிகப் பசியைப் போக்குவதற்காக அவதரித்தவர்களின் வயிற்றுப் பசியைப் பற்றி உலகம் கவலைப் படத்தான் செய்கிறது!

இத்துடன் சுவாமிகளுக்கு உறவினரின் தொந்தரவு தீர்ந்து விட்டது. அவருடைய மகிமை புரியப் புரிய ஊர் மக்களின் தொந்தரவு அதிகமாயிற்று. உள்ளத்தால் அவர் வாழ்ந்த உலகத்திற்கும், உடலால் வாழ்ந்த உலகத்திற்கும் தான் எத்தனை வேற்றுமை! அவரது சிந்தனை, சொல், செயல் மூன்றும் அவர் கண்டு களித்த உலகத்திற் கேற்ப அமைந்திருந்தன. மனமும், புத்தியும் பிரும்மத்தில் லயித்து விடும் பெரு நிலை அது. அந்நிலையைப் புரிந்து கொள்ள முடியாத உலகம், இத்தகைய மகான்களுக்குப் 'பைத்தியம்' என்று எளிதாகப் பட்டம் சூட்டி விடுகிறது. இந்தப் பைத்தியக்கார உலகத்தைக் கண்டு அந்த மகான்கள் பரிதாபப் படுகிறூர்கள்.

இப்படிப்பட்ட 'பைத்தியம்' இந்தப் 'பைத்தியக்கார' உலகத்தில் நாற்பது ஆண்டு காலம் நடமாடி விட்டு, லீலைகள் பல புரிந்து விட்டு, தன் சத்திய நிலையை பல்லாயிரம் மக்களுக்கு உணர்த்தி விட்டு, நம் கண்களிலிருந்து மறைந்து விட்டார். நூறு ஆண்டுகளுக்கு முன் ஸ்ரீ காஞ்சியில் அவதரித்து, பராசக்தியின் மடியில் தவழ்ந்து, தபோதனராய் அருணசலத்தை வலம் வந்து, அந்த ஒளியுடன் ஒன்றி, அவனிக்கோர் அருட் சுடராய், கருணைக் கனலாய் இன்றும் ஒளி வீசிக் கொண்டிருக்கிறூர்.

வேத பாடம் நடைபெறுகிறது.



ஸ்ரீ சேஷாத்ரி சுவாமிகள் தமது பத்தொன்பதாவது வயதில், அதாவது 1889-ம் ஆண்டில் அருணசலத்திற்கு வந்தார். ஏழு ஆண்டுகள் கழித்து, 1896-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் தேதி, மார்க்கண்டேயனின் வயது நிரம்பிய ஒரு சிறுவர் மதுரையிலிருந்து திருவண்ணாமலைக்கு வந்து சேர்ந்தார். அவரும் அருணசல ஒலி உள்ளத்தில் ஒலிக்க, அதைத் தேடி வந்தவர்தான். ஐம்பது ஆண்டுகளுக்கு மேல் 'அப்ப'னின் அரவணைப்பில் திளைத்து விட்டு, சரீரத்தைச் சட்டையென களைந்தெறிந்து

விட்டு, அருட்பெரும் ஜோதியோடு கலந்து விட்டவர்.


அவர் அருணாசலம் நாடி வரப் போகிறார் என்பதை அறிந்திருந்தவர் போல், ஏழாண்டுகளுக்கு முன்பே ஸ்ரீ சேஷாத்ரி சுவாமிகள் அங்கு வந்து விட்டிருந்தார்! சேஷாத்ரி சுவாமிகள் பராசக்தியின் அம்சம். ஸ்ரீ ரமண மகரிஷிகள் குமரக் கடவுளின் அம்சம். மைந்தனின் தவயோகத்திற்கு உறு துணையாக இருந்து, இடையூறின்றி நடத்தித் தர உமையவள் மிக அக்கறையோடும், பரிவோடும் முன்பே அங்கு வந்து காத்திருந்தாளோ?

அந்தச் சிறுவர் மதுரையிலிருந்து சென்னைக்குச் செல்லும் புகை வண்டியில் பயணம் செய்து கொண்டிருந்தார். அவர் தம் 'தந்தை'யைக் காண திருவண்ணாமலைக்குச் செல்கிறார். ஆனால், திருவண்ணாமலை எங்கிருக்கிறது, அதற்குச் செல்ல வழியென்ன என்றெல்லாம் அவருக்குத் தெரியாது. வீட்டில் ஏதோ ஒரு 'அட்லா'ஸைப் பார்த்ததில், திண்டிவனத்தின் அருகில் திருவண்ணாமலை இருப்பதைக் கண்டு, அந்த ஸ்டேஷனுக்கு ஒரு டிக்கெட் வாங்கியிருந்தார். கையிலிருந்த மூன்று ரூபாயில் இரண்டு ரூபாய் பதின்மூன்று அணாவுக்கு டிக்கெட் வாங்கி, மீதி சில்லறையை மடியில் செருகி யிருந்தார். அது பத்திரமாக இருக்கிறதா என்று அடிக்கடி தொட்டுப் பார்த்துக் கொண்டிருந்தார்.

ஆறும் பாரம் படித்துக் கொண்டிருந்த அந்தப் பள்ளிச் சிறுவர் வீட்டில் ஒரு கடிதத்தை எழுதி வைத்து விட்டு, யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் 'ஓடி' வந்து விட்டார். 'அப்பா' அவசரமாக அழைத்து விட்டாரே! யாரிடமும் சொல்லிக் கொள்ள நேரமில்லை அவருக்கு!

ரயிலில் தூங்கி தூங்கி வழிந்து கொண்டிருந்தார் அந்தச் சிறுவர். அது அவருடைய இயல்பு. அது சாதாரணமான தூக்கம் அல்ல. தூங்காமல் தூங்கும் யோக நித்திரை. உடலை மறந்த சமாதி நிலை. ஊனக் கண்ணால் பார்ப்பவர்களுக்கு அது சாதாரண தூக்கம்தான்!

அந்தப் பெட்டியில் ஒரு முஸ்லிம் பெரியவர் பிரயாணம் செய்துகொண்டிருந்தார். அவர் அரிய விஷயங்களைப் பற்றி எல்லோருடனும் பேசிக் கொண்டிருந்தார். ஆனால், அந்தச் சிறுவர் மட்டும் எதுவுமே பேசாமல் மௌனமாய் அமர்ந்திருந்தார். அந்தப் பெரியவர் சிறுவரின் அருகில் போய் உட்கார்ந்து பேச்சுக் கொடுத்தார்:



ஸ்ரீ ஆசாரிய சுவாமிகள் பிறந்த அறைக்கு முன் வேதம் பயிலும் மாணவர்கள்

''தம்பி, எங்கே போறே?''

''திருவண்ணாமலைக்கு.''

''அப்படியா? நானும் அங்கேதான் போறேன்.''

''என்ன, திருவண்ணாமலைக்கா?''

''இல்லை. அதற்கு முன்னாலேயே இறங்கிடுவேன். நான் திருக்கோவலூருக்குப் போறேன்.''

''என்ன, இந்த ரயில் திருவண்ணாமலைக்குப் போகிறதா?'' என்று ஆச்சரியத்துடன் கேட்டார் சிறுவர்.

''சரியாப் போச்சு போ! நீ எந்த ஸ்டேஷனுக்கு டிக்கெட் வாங்கியிருக்கே, தம்பி'' என்று சிரித்துக் கொண்டே கேட்டார் பெரியவர்.

''திண்டிவனத்திற்கு''.

''திண்டிவனத்திற்கா? எதுக்கு அந்த ஊருக்கு டிக்கெட் வாங்கினே? நாம்



ஸ்ரீ கைலாச நாதர் ஆலயம் (விழுப்புரம்)

விழுப்புரம் ஜங்ஷனில் இறங்கி, திருவண்ணுமலைக்கு போக வேறே ரயில் மாறனும்'' என்ருர் அந்த முஸ்லிம் அன்பர்.

அந்தச் சிறுவருக்கு இது புது செய்தியாக இருந்தது. 'எந்த வழியாக இருந்தால என்ன? போக வேண்டிய இடத்திற்குப் போய்ச் சேர்ந்தால் சரி' என்று நினைத்துக் கொண்டார். இந்தக் கருத்து அவரது சிந்தனையைக் கிளற, உட்கார்ந்திருக்கும் ரயில், சுற்றியிருக்கும் பிரயாணிகள், அவர்கள் பேசும் பேச்சு எல்லாம் மறந்து உணர்வற்றவராய் உறக்கத்தில் ஆழ்ந்து விட்டார்.

கண் விழித்த போது அச் சிறுவருக்கு பசி வயிற்றைக் கிளறியது. காலையில் சாப்பிட்டதுதான், பாவம்.

திருச்சி ஸ்டேஷனில் ரயில் நின்றது. ஒருவன் பேரிக்காய் விற்றுக் கொண்டு போனன். அரையணு கொடுத்து இரண்டு பேரிக்காய்களை வாங்கினர். ஒன்றைச் சாப்பிட்ட உடனேயே அவருடைய பசி அடங்கி விட்டது. அது அவருக்கு ஆச்சரியத்தை அளித்தது. 'மதுரையில் மூன்று வேளை தின்றலும் பசி அடங்காதே. இப்போது ஒரு காயைத் தின்றதுமே பசி யடங்கி விட்டதே!'

விடியற்காலை மூன்று மணிக்கு ரயில் விழுப்புரம் வந்து சேர்ந்தது. முஸ்லிம் பெரியவருடன் சிறுவரும் கீழே இறங்கினர். சற்று நேரம் ஸ்டேஷனிலேயே தங்கிவிட்டு, விடிந்ததும் ஊருக்குள் சென்ருர். எங்கெல்லாமோ சுற்றினர். திருவண்ணுமலைக்குச் செல்லும் சாலை எதுவென்று தெரியவில்லை. ரயிலில் போக கையில் காசும் இல்லை. வழி கேட்கலாம் என்ருல, வெட்கம் ஒருபுறம்; 'நீ யார்? எங்கிருந்து வருகிருய்?' என்று யாராவது கேட்டு விட்டால் என்ன செய்வது என்ற பயம் மறுபுறம். எல்லோருக்கும் வழி காட்டப் போகிறவர், யாரையும் வழி கேட்கவில்லை!

ஓயாத அலைச்சலால் அவருக்கு களைப்பு மேலிட்டது. பசி யெடுத்தது. புதுச் சத்திரத்தில் இருந்த ஓர் ஓட்டலுக்குச் சென்று உணவு கேட்டார். ஓட்டல்காரா பகல் ஒரு மணிக்குத் தான சாப்பாடு கிடைக்கும் என்ருர். திண்ணையில் சுருண்டு படுத்திருந்த சிறுவர் 'அருணுசலம்' 'அருணுசலம்' என்று முனகிக கொண்டிருந்தார்.

ஒரு மணிக்கு எழுந்து வயிருரச் சாப்பிட்டார். கையிலிருந்த இரண்டரையணுவை எடுத்து முதலாளியிடம் கொடுக்க, அவர் அதை வாங்கிக் கொள்ள மறுத்து விட்டார். அந்த ஒட்டல்காரர் கொடுத்து வைத்தவர். தன்னையுமறியாமல் பெரிய புண்ணியம் செய்து விட்டார். அது அவருடைய முன்னோர்கள் செய்த தவப் பயன்.

விழுப்புரத்திலிருந்து திருவண்ணுமலைக்குப் போகும் ரயிலில் ஏறினர் அந்தச் சிறுவர். பத்து மைலில் இருக்கும் 'மாம்பழப்பட்டு' ஸ்டேஷனுக்கு ஒரு டிக்கெட் வாங்கி யிருந்தார். கையில் இருந்தது இரண்டரையணு தானே! இரண்டணு சார்ஜில் மாம்பழப்பட்டு வரையில் தான் பிரயாணம் செய்யலாம். இறங்கி, திருவண்ணுமலைக்கு நடக்க வேண்டியதுதான்!

ஸ்ரீ ரமண பகவான் இளவயதில் விழுப்புரம் மண்ணை மிதித்து விட்டுத்தான் திருவண்ணுமலை திருத்தலத்திற்கு சென்ருர். அந்தப் புனித மண்ணை மிதித்து விட்டு வரலாம் என்று புறப்பட்டுச் சென்றேம். அந்தப் புண்ணிய மண்ணிலேதான் ஸ்ரீ காமகோடி ஆசாரிய சுவாமிகள் அவதரித்தார். 'நடுநாடு சான்றேர் உடைத்து' என்ற முதுமொழி சத்தியவாக்கு அன்றே!

ஸ்ரீ ரமணர் அங்கு வந்தபோது, சுவாமிகள் இரண்டு வயது குழந்தை யாக மழலை பழகிக் கொண்டிருந் திருக்க வேண்டும் என்பது நினைவுக்கு வரவே, அவர் பிறந்த இல்லத்தை தரிசிக்கச் சென்றோம்.

அனுமார் கோயில் தெருவில், மாற்றியமைக்கப் பட்டுள்ள அந்தப் புனித இல்லத்தை நெருங்கும் போதே வேத கோஷம் விண்ணை முட்டியது. வேதம் காக்கப் பிறந்தவரின் இல்லம் இன்று சிறுவர்கள் வேதம் பயிலும் குருகுலமாக மாறியிருப்பது எத்தனை பொருத்தம்!

மூலைக்கு மூலை, பால்மணம் மாறாத பாலகர்கள் ஆசானுக்கு முன் அடக்க முடன் அமர்ந்து வேதம் ஓதிக் கொண் டிருந்ததைக் கண்டதும், வாழையடி வாழையாக தழைத்து வரும நம் வேத கங்கை, வற்றாத ஜீவ நதியாய் பாரதத்தை வளப்படுத்தி, பாரெல்லாம் புனிதப்படுத்தும் காட்சி என் கண்முன் ஓடியது.

வேத நாதம் செவியில் ஒலிக்க வேதப் பொருளாம் கைலாச நாதனை தரிசிக்க ஆலயத்திற்குச் சென்றோம். அப்போது காலை ஒன்பதரை மணி யிருக்கும். கோயில் வெறிச் சோடிக் கிடந்தது. தீபாராதனை காட்டவோ விபூதி பிரசாதம் தரவோ அங்கு ஓர் அர்ச்சகர் கூட இல்லை. மாறாக, இரண்டு மூன்று சிறுவர்கள் முன் மண்டபத்தில் 'நெட்'கட்டி ஆனந்த மாக 'ரிங் டென்னிஸ்' விளையாடிக் கொண்டிருந்தார்கள்! அதைக் கண்டு மனம் ஒரு கணம் வேதனைப் பட்டது.

மறுகணம், 'நாமெல்லோருமே ஆண்டவன் ஒருவன் இருப்பதை மறந்து, விளையாட்டுப் பிள்ளைகளாகத் தானே வாழ்நாளை வீணாக்கிக் கொண் டிருக்கிறோம். பரமனின் கருணையை நமக்கு நினைவூட்டி, ஆன்மிக ஒளியை நமக்குக் காட்டி, நம்மை நல்வழியில் நடத்திச் செல்லத்தானே சேஷாத்ரி களும், ரமணர்களும், சந்திரசேகரர் களும் நம்மிடையே அவ்வப்போது அவதரிக்கிறார்கள் என்று நினைத்து நிம்மதியடைந்தேன்.

உள்ளத்தில் நம்பிக்கையொளி பிறந்தது.

— தொடரும்.



ஒளி இழந்த வீடூர் அணை!

தென்னாற்காடு மாவட்டத்தில், இருக்கும் ஒரே ஓர் அணைக்கட்டு வீடூர் அணைக்கட்டுதான்! அதிலும் பாதி தண்ணீரை பாண்டிச்சேரி மாநிலத்துக்கு தர வேண்டிய கட் டாயத்தில் இருக்கும் அணை இது! இந்த அணைமீது நடக்கும்போது சற்று அச்சம் ஏற்படும்! 1967-ல் அடித்த புயலில் வீடூர் அணை உடைந்து, ஊரில் வெள்ளம் புகுந்ததை யாரால் மறக்க முடியும்?

தமிழகத்தில் 2200 ஏக்கரா வும், பாண்டிச்சேரியில் 1000 ஏக்கரா நிலங்களும் இந்த அணையால் பாச னம் பெறுகின்றன. தொண்டி. சங்கராபரணி ஆறுகள் சேருமிடத்தில் அணைக்கட்டு கட்டப்பட் டிருக்கிறது.

முன்பு ஒளி வெள்ளத்தில், விருந்தினர் மாளிகை எல் லாம் நிரம்பி இருக்க காட்சி அளித்த இடம் இது! அணை உடைந்த போது, எல்லா வற்றையும் அடித்துக் கொண்டு போய் நிர்மூலமாக்கி விட்டது. விருந்தினர் மாளிகை மட்டுமல் லாது அந்த மின்சார ஒளிகளை யும் திருப்பிப் பெறாமல் வாடி நிற்கிறது வீடூர்!

கொடுத்து வைத்தவர், சார்......'' என்றான்.

ஜெயராமனுக்கு நிலை கொள்ளாத திகைப்பு: ''என்ன?''

''இந்தக் காலத்தில் வீட்டோடு இருக்கும் மனைவிமார்கள் கூட கணவன் வேலை முடிந்து வீடு திரும்பும் சமயத்தில், தான் வீட்டில் இருக்க வேண்டும் என்று எண்ணுவதில்லை. இருப்பதும் இல்லை. ஆனால் இன்னிக்கு பாருங்க'' என்று ஆரம்பித்து வத்சலா பார்ட்டியையே அவனுக்காகத் துறந்து வந்த சம்பவத்தை எடுத்துரைத்தான், பரமகுரு.

''அப்படியா? வத்சலா அப்படியா சொல்லிவிட்டு வந்தாள். ஆமாம்...... அவளுக்கு என் மீது ரொம்ப அன்பு... மதிப்பு..... மரியாதை!'' என்றான் ஜெயராமன்.

சில நிமிஷங்கள் பேசிக் கொண்டிருந்துவிட்டு பரமகுரு திரும்பினான்.

இரவு மணி பத்து.

களைத்த முகத்துடன் உள்ளே வந்தாள் வத்சலா.


''வத்சலா, உன் ஆபீஸ்-மேட் பரமகுரு வந்துவிட்டுப் போனார்'' என்றான் ஜெயராமன்.

''ஆங்......'' என்ற வத்சலா, ''என்ன... பரமகுரு இங்கே வந்தாரா? ஐயையோ அவரிடம் நான் வேறு விதமாக அல்லவா சொல்லிவிட்டு வந்தேன்... நீங்கள்... நீங்கள்!'' என்று பதறினாள்.

''பதறாதே வத்சலா, எனக்குத் தெரியாதா, உன்னைப் பற்றி? நீ பாத்ரூமில் இருப்பதாக ஒரு பொய்யைச் சொல்லிப் பரமகுருவை நம்ப வைத்தேன். அவரும் அதை நம்பிக் கொண்டு போய்விட்டார். அது இருக்கட்டும், சினிமா எப்படி இருந்தது?'' என்றான் பக்குவப் பட்டுப் போன அந்தக் கணவன்!

''ஒண்டர் ஃபுல் பிக்சர்: நிச்சயம் நீங்கள் பார்க்க வேண்டும்'' என்றாள் வத்சலா.





அறையணி நல்லூர் ஸ்ரீ அதுல்ய நாதேசவரர் ஆலயம

அருணாசல மகிமை

24

விழுப்புரத்தில் ரயில் ஏறி பத்து மைல் தொலைவிலுள்ள மாம்பழப் பட்டு ஸ்டேஷனில் வந்து இறங்கினார் சிறுவர் வேங்கடராமன். பின்னர், ரயில் பாதை ஓரமாகவே நடக்க ஆரம் பித்தார். அது திருவண்ணாமலைக்குப் போய்த்தானே ஆக வேண்டும்!

'அருணாசலம், அருணாசலம்' என்று வாய் முணு முணுக்க, வேறெந்த சிந் தனையும் இன்றி, பத்து மைல்களுக்கு மேல் நடந்து விட்டார் வேங்கட ராமன். மாலை நேரமாகி விட்டது. சூரி யன் இன்னும் முழுமையாக மறைய வில்லை. உயரமான பாறையின் மீது தெரிந்த ஒரு கோபுரத்தின் உச்சி யில் பொற் கிரணங்கள் பட்டுப் பள பளத்ததைக் கண்டு, அதை நோக்கி வெகு வேகமாக நடந்தார். அறை யணிநல்லூருக்கு வந்து சேர்ந்தார்.

பாறைகளால் அழகு செய்யப்பட்ட ஊராதலால் அதற்கு அப் பெயர் வந் தது. இப்போது அது அரகண்ட நல் லூர் என்று வழங்கப்படுகிறது. ஆனால், அதன் பொருள் விளங்கவில்லை. அறை கண்டநல்லூர், அரகண்ட நல்லூராக மருவியிருக்கலாம்!

அந்த ஆலயத்தில் ஸ்ரீ அதுல்ய நாதேச்வரர், சௌந்தர்ய கனகாம் பிகையுடன் வீற்றிருக்கிறார். தீந்தமி ழில், ஒப்பிலாமணீச்வரர் என்றும், ஸ்ரீ அழகிய பொன்னம்மை என்றும் அவர் கள் அழைக்கப்படுகிறார்கள்.

அந்தக் கோயிலின் தென் பிராகா ரத்தில் 'சம்பந்தர் பாதம்' என்று நாலடி உயரமுள்ள பீடம் ஒன்று இருக்கிறது. அதன் மீது பாதங்கள் பதிக்கப்பட்டிருக்கின்றன. அதனருகி லிருந்து பார்த்தால் அருணாசல மலை; சாட்சாத் சிவபெருமானின் திருமுக மண்டலத்தைப் போலவே தோற்றம் அளிக்கிறது. அறையணி நல்லூர் ஆலயத்திலிருந்து அண்ணாமலையைத் தரிசிக்கும் போது உள்ளத்தில் பேரா னந்தம் பொங்குகிறது. அத்தோற்றம் ஆன்மிக கிளர்ச்சியைத் தூண்டுகிறது. சொல்லில் அடங்கா சுகானுபவமும் சாந்தியும் ஏற்படுகிறது. வாழ்க்கை யில் ஒரு முறையாவது காண வேண் டிய அற்புதக் காட்சி அது.

அறையணிநல்லூர் ஆலயத்திற்கு திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் வந்த போது அவருக்கு அருணாசல ஜோதி தரிசனம் ஆயிற்று. உவகை மேலிட்டவராய், 'அது என்ன மலை?' என அருகிலிருந்தவர்களிடம் கேட்டார். "அதுதான் அருணாசலம்" என்று கூறினார்கள். அங்கிருந்த படியே, "உண்ணாமுலை உமையாளொடும்" என்ற பதிகத்தைப் பாடிப் பரவசமானார். அக்கணமே, அவருக்கு அருணையம்பதி செல்ல வேண்டும் என்ற ஆவல் மேலிட்டது. ஆனால், எப்படிப் போவது என்று அவருக்குத் தெரியவில்லை.

அப்போது அங்கு ஓர் அந்தணப் பெரியார் வந்தார். அவர் கையில் பூக் குடலை ஒன்று இருந்தது.

அம் முதியவரை அணுகி, கெஞ்சாத குறையாகக் கேட்டார் திருஞான சம்பந்த சுவாமிகள்.

"ஐயா, தங்களுக்கு அருணாசலத்திற்கு வழி தெரியுமா?"

"தெரியுமே. நான் தினமும் காலையில் அருணாசலத்திலிருந்துதான் வந்து சுவாமி பூஜைக்காக பூப் பறித்துச் செல்கிறேன்."

"அப்படியா? என்னை அங்குஅழைத்துச் செல்கிறீர்களா? சோணாசல நாதனை நான் தரிசிக்க வேண்டும்."

"வாருங்களேன் போகலாம் ....." என்று கூறி, அப் பெரியவர் திருஞான சம்பந்தரைஅருணாசலத்திற்கு அழைத்துச் சென்றார். செல்லும் வழியில் 'அருணாசல மகிமை' பற்றி அவருக்கு விரிவாக எடுத்துக் கூறினார்.

அந்த அந்தணப் பெரியார் வேறு யாருமல்ல; அருணாசலேச்வரரே பூப் பறிக்கும் பிராமணராக வந்து, தம் பக்தனை அருணாசலம் அழைத்துச் சென்றார்.


ஞான சம்பந்தர் பாதம் பட்டு புனிதமடைந்துள்ள அறையணி நாதேச்வரரின் ஆலயத்திற்குத்தான் வேங்கடராமன் வந்து சேர்ந்தார். அவர் வந்த போது, கோயில் கதவு திறந்திருக்கவில்லை. எனவே, கோபுர வாயிலிலேயே அமர்ந்து விட்டார்.


சிறிது நேரம் கழித்து கோயில் அர்ச்சகரும் பிறரும் வந்தனர். அவர்களுடனேயே வேங்கடராமனும்கோயிலுக்குள் நுழைந்து, மண்டபத்தில் அமர்ந்து, தியானத்தில் ஆழ்ந்தார். சற்றைக்கெல்லாம் 'பளிச்'சென்று ஆயிரம் கோடி சூரியர்கள் பிரகாசித்தது போல், அவருக்கு ஒரு 'ஜோதி தரிசனம்' ஆயிற்று. கண் விழித்துப் பார்த்தார். எந்த திசையிலிருந்து அவ்வொளி வந்ததென்று தெரியவில்லை. சுவாமி சந்நிதிக்குள் சென்று பார்த்தார். அங்கும் அந்தப் பேரொளியைக் காண முடியவில்லை. மீண்டும் வெளியே வந்து சுற்றிலும் பார்த்தார். மேற்கில் ஒரு மலைச் சிகரம் தெரிந்தது. சற்றுமுன் கண்ணுக்குத் தெரிந்த ஜோதி, அந்தச் சிகரத்தில் அடங்குவதைக் கண்டார். 'அப்பன்' உறையுமிடம் அவருக்குத் தெரிந்து விட்டது. திருஞான சம்பந்தரை அழைத்துக் கொண்ட அருணாசல ஜோதி, வேங்கடராமனையும் ஆட்கொண்டது.

பூஜை முடிந்து எல்லோரும் வெளியில் வரும் போது, வேங்கடராமனும் வெளியே வந்தார். அவருக்குப் பசி எடுத்தது. 'பிரசாதம் கிடைக்குமா?' என்று ஏங்கினார். கூச்சத்தை விடுத்து கையை நீட்டிக் கேட்டும் விட்டார்.

ஆனால், அந்த சுயம்பாகி கொடுத்து வைக்காதவர். அஞ்ஞானம் அவர் கண்களை மறைத்து விட்டது. ஏதோ ஒரு சோம்பேறிச் சிறுவன் சோறு கேட்கிறான் என்று நினைத்து, "கொடுக்க முடியாது" என்று சிறுவரை விரட்டி

கோபுரத்தின் உட்புறத் தோற்றம்





மாம்பழப்பட்டு ரயில நிலையம்

விட்டார். விழுப்புரத்தில் இருந்த ஓட்டல்காரருக்கு கிடைத்த புண்ணியம், ஆண்டவனின் அருகில் இருந்தவருக்கு கிடைக்க வில்லையே!

அறையணிநல்லூர் ஆலயத்தில் பூஜையை முடித்துவிட்டு, அர்ச்சகரும் குழுவினரும் ஸ்ரீ பெரியநாயகி சமேத வீரட்டேச்வரர் ஆலயத்திற்கு வந்தனர். வேங்கடராமனும் அவர்களைத் தொடர்ந்தார். சுயம்பாகி அவரை முறைத்துப் பார்த்துக்கொண்டே வந்தார். கோயிலுக்குள் நுழைந்ததும் வேங்கடராமன் சுவாமி சந்நிதிக்கு நேரே அமர்ந்து சமாதியில் ஆழ்ந்து விட்டார்.

அறையணிநல்லூர் தென்பெண்ணை ஆற்றின் வடகரையில் இருக்கிறது. அங்கிருந்து ஒன்றரை மைல் தூரம் சென்றால் ஆற்றின் தென்கரையிலுள்ள கீழையூரை அடையலாம். அது திருக்கோயிலூர் என்னும் திருக்கோவலூரைச் சேர்ந்தது. அங்குதான் வீரட்டேச்வரர் ஆலயம் இருக்கிறது.

சிவபெருமான் வீரநகை புரிந்து, தமது வீரச் செயலால் துட்டர்களை அழித்து அன்பர்களுக்கு அருள் புரிந்த தலங்கள் எட்டு. அதில் இரண்டாவதாகக் குறிப்பிடப்படுவது திருக்கோவலூர் வீரட்டானம்.

முத்துகிருஷ்ண பாகவதர் வசித்த இல்லம்



இந்தத் தலத்தில் ஈச்வரன் இருள் அரக்கனை வதம் செய்துள்ளார். சிவபெருமான் அந்தகாசுரனை அழித்ததால் இங்கு அந்தகாந்தர் என்ற காரணப் பெயரோடு எழுந்தருளியுள்ளார்.

இக்கோயிலில் 'பெரியானை கணபதி' வீற்றிருக்கிறார். இந்த விநாயகரைத்தான் ஔவைப் பாட்டி மலர்களால் அர்ச்சனை செய்து, தெய்விகப் பாடல்களால் துதி செய்து வந்தாள். ஒரு நாள் சுந்தரமூர்த்தி நாயனாரும், சேரமான் பெருமாளும் கைலாயம் செல்லப் போகிறார்கள் என்பதை அறிந்து, தாமும் அவர்களோடு போவதற்குத் துடித்தாள் ஔவைப் பாட்டி. அவசர அவசரமாகக் கணபதியை துதி செய்தாள்.

பெரியானை கணபதி சிரித்தார். "அம்மா, ஏன் அவசரப்படுகிறாய்? அவர்களுக்கு முன் உன்னை நான் கைலாயம் கொண்டு சேர்க்கிறேன். நீ வழக்கம் போலவே நிதானமாகப் பூஜை செய்" என்று சொன்னார். ஔவைப் பாட்டியும் 'சீதக்களப' என்ற அகவலைப் பாடி, யானைமுகத்தானைத் தோத்திரம் செய்தாள்.

கணபதி விசுவரூபம் எடுத்து, தமது தும்பிக்கையால் ஔவைப் பாட்டியைத் தூக்கி அப்படியே கைலாயத்தில் கொண்டு போய்ச் சேர்த்து விட்டார். தங்களுக்கு முன்னால், கைலாயத்தில் வந்து காத்திருந்த தமிழ்ப் பாட்டியைக் கண்ட சுந்தரரும் சேரமான் பெருமாளும் அதிசயித்தனர்.

முருகப் பெருமான் சூரபத்மனை இரண்டு கூறுகளாக்க, ஒன்று மயிலாகவும், மற்றொன்று சேவலாகவும் மாற, மயிலை வாகனமாகவும், சேவலைக் கொடியாகவும் ஆக்கிக் கொண்டார். பின்னர், அசுரனைக் கொன்ற பாவம் நீங்க, திருக்கோவலூர் வந்து, சிவபெருமானை லிங்க வடிவில் பூஜை செய்து, பாபம் நீங்கப் பெற்றார்.

ஆலயத்தின் உள்பிராகாரத்தில் இருக்கும் அந்தகார சம்ஹார மூர்த்தி விக்ரகம் ஓர் அழகு வடிவம். அதை முழுமையாகக் கண்டு ஆனந்திக்க

எங்களுக்குக் கொடுத்து வைக்கவில்லை. அது இருளில் இருந்தது. ஒரு கைவிளக்காவது ஏற்றிக் காட்டும்படி அங்கு இருந்த அர்ச்சகரிடம் வேண்டிக் கொண்டேன். அதை எளிதாக அவர் செய்திருக்கலாம். ''விளக்குப் போடுகிறவர் இன்னும் வரவில்லை'' என்று, முருகனின் தலையில் தண்ணீரைக் கொட்டிக் கொண்டே அலட்சியமாகக் கூறிவிட்டார் அவர். அந்தகாந்தர் அந்தகாரத்தில் மூழ்கி கிடப்பதுதான் பொருத்தம் என்று அந்த அர்ச்சகர் நினைத்து விட்டாரோ என்னவோ!


ஸ்ரீ பெரியநாயகி அம்மை சுவாமிக்கு இடப்புறம் தனிக் கோயில் கொண்டு அருள் பாலிக்கிறாள்.

பூஜை முடிந்து எல்லோரும் புறப்பட்டனர். வேங்கடராமனுக்குப் பசி தாங்க முடியவில்லை. மீண்டும் அன்னம் யாசித்தார். சுயம்பாகி மறுபடியும் மறுத்து விட்டார். சிறுவரின் முகம் கருங்கி விட்டது.

இதையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த மேளக்காரருக்கு மனம் இளகியது. பட்டினியால் வாடும் சிறுவரின் மீது இரக்கம் பிறந்தது. அர்ச்சகரைப் பார்த்து, ''ஐயா, என் பங்கை இந்தச் சிறுவனுக்குக் கொடுத்துடுங்க. எனக்கு சாதம் வேண்டாம்'' என்று கூறி விட்டார். சுயம்பாகி முகத்தைச் சுளித்துக் கொண்டே அன்னத்தை வேங்கடராமனுக்கு அளித்தார்.

விழுப்புரம் ஓட்டல்காரரை விட, ஒரு படி உயர்ந்து விட்டார் அறையணி நல்லூர் மேளக்காரர்.

உணவு வியாபாரி, பணம் பெற்றுக் கொள்ளாமல் உணவளித்தார். கோயில் சுயம்பாகி ஆண்டவன் பிரசாதத்தை அடியாருக்குக் கொடுக்க மறுத்தார். மேளக்காரரோ, தன் பங்கைத் தியாகம் செய்து, தான் பட்டினி கிடந்து, பசித்தவருக்கு அன்னம்



ஸ்ரீ வீரட்டேச்வரர் ஆலயம்
(திருககோயிலூர்)

அளித்தார். பிறர் பசியைப் போக்குவதில் மிகவும் உயர்ந்த நிலை எது என்பதை உலகிற்கு எடுத்துக் காட்டவே, பகவான் பசித்தவர் போல் நடித்ததாகத் தோன்றுகிறது.

கையில் சாதத்துடன் வீதியிலுள்ள சாஸ்திரிகள் ஒருவர் வீட்டிற்குச் சென்றார் வேங்கடராமன். குடிக்க நீர் கேட்டார். அதைக் கொண்டு வருவதற்குள் சமாதியில் ஆழ்ந்து, 'உறக்கத்'தில் சற்று தூரம் நடந்து சென்று கீழே விழுந்து விட்டார். விழிப்பு ஏற்பட்டதும், சிதறிய அன்னத்தை எடுத்துப் புசித்து, நீரருந்தி, நித்திரையில் ஆழ்ந்து விட்டார்.

மறுநாள், ஆகஸ்ட் 31-ம் தேதி. கோகுலாஷ்டமி புண்ணிய தினம். வேங்கடராமன் அருணாசலத்திற்குப் புறப்பட்டாக வேண்டும். எப்படிப் போவது? இருபது மைல்கள் நடப்பதா? அது முடியாத காரியம்.

ஸ்ரீ உலகளந்த பெருமாள் ஆலயம் (திருக்கோயிலூர்)



ரயிலில் செல்ல வேண்டுமானுல், பணம் வேண்டுமே! சிந்தித்தார் சிறுவர் வேங்கடராமன். அப்போது காதில் இருந்த தங்கக் கடுக்கன் அவரது நினைவிற்கு வந்தது. அதை யாரிடமாவது அடகு வைத்து விட்டால் என்ன?

அந்த ஊரில் முத்துகிருஷ்ண பாகவதர் என்று ஒருவர் இருந்தார். அவர் தேர்ச்சி பெற்ற சங்கீத வித்துவான். அவருடைய இல்லத்திற்குச் சென்ருர் வேங்கடராமன். ஸ்ரீ கிருஷ்ணஜயந்தி அன்று கிருஷ்ணனே தங்கள் வீடு தேடி வந்து விட்டதாக மகிழ்ச்சி அடைந்தாள் பாகவதரின் மனைவி.

வேங்கடராமனுக்கு மகிழ்ச்சியுடன் உணவளித்து உபசரித்தனர் அத் தம்பதி. பின்னர்மெள்ளக் கடுக்கனைப் பற்றிய பேச்சை எடுத்தார் வேங்கடராமன். திருவண்ணுமலைக்குப் போக தமக்குப் பணம் வேண்டும் என்றும், தம் கடுக்கனை வைத்துக்கொண்டு, பணம் தரும்படியும் பாகவதரிடம் கேட்டார். கடுக்கனை வாங்கிப் பார்த்தார் பாகவதர். அது இருபது ரூபாய் பெறும் என்று மனத்துக்குள்ளேயே எடை போட்டு, வேங்கடராமனிடம் நான்கு ரூபாய் கொடுத்தார். கடுக்கனைப் பிறகு மீட்டுக் கொள்வதற்காக தமது விலாசத்தையும் ஒரு சீட்டில் எழுதிக் கொடுத்தார்.

விசாரித்துப் பார்த்ததில் முத்து கிருஷ்ண பாகவதரின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் ஒருவரும் தற்போது அந்த ஊரில் இல்லை என்று தெரிய வந்தது. அந்தக் கடுக்கன் இப்போது யாரிடம் இருக்கிறது என்பதும் ஒருவருக்கும் தெரியவில்லை.

வேங்கடராமன் பாகவதரின் வீட்டை விட்டுப் புறப்படுவதற்கு முன், பாகவதரின் மனைவி அவரிடம் கோகுலாஷ்டமிக்காகச் செய்த பட்சணங்களை ஒரு காகிதத்தில் கட்டிக் கொடுத்தாள். மாலையில் கண்ணனுக்கு நைவேத்தியம் செய்வதற்கு முன்பே சிறுவருக்கு அதைக் கட்டிக் கொடுத்து விட்டாள். அப்படிச் செய்வதை அந்த அம்மாள் அபசாரமாகக் கருதவில்லை. வீடு தேடி வந்த பிள்ளை, சாதாரணமான பிள்ளையாக அவள் தூய உள்ளத்திற்கு தோன்றவில்லை.

வெளியே வந்த வேங்கடராமன், பாகவதர் எழுதிக் கொடுத்த விலாசத்தைக் கிழித்துப் போட்டார். எவரிடம் போனுல் பிறகு வேறெந்த விலாசத்தையும் தேடி அலைய வேண்டாமோ, அந்தப் பரம்பொருளிடம் போகிறவருக்கு மனிதரின் விலாசம் எதற்கு? பிறவி எடுத்தவர்களை பாவப் படுகுழியிலிருந்து மீட்கப்போகிறவர், சாதாரணக் கடுக்கனை மீட்பதற்காகவா திரும்பி வரப் போகிருர்?

அன்று இரவு திருக்கோயிலூர் ரயில் நிலையத்தில் உறங்கினுர் வேங்கடராமன். ஸ்ரீ உலகளந்த பெருமாளும், ஸ்ரீ வீரட்டேச்வரரும் ஸ்ரீ ரகோத்தம சுவாமிகளின் 'பிருந்தாவனமும் துலங்கும் ஞான பூமியில் இரண்டு இரவுகள் கழித்தார் அவர்.

திருக்கோயிலூர் சென்ருல், தபோவனத்தின் ஞான நிழலில் சிறிது நேரமாவது தங்காமல் வர முடியுமா? தவ கங்கையாம் ஸ்ரீஞானுனந்தகிரி சுவாமிகளின் அருள் நோக்கைப் பருகாமல் திரும்ப முடியுமா?

ஸ்ரீ ரகோத்தம சுவாமிகளின் பிருந்தாவனத்தை வலம் வந்து விட்டு, நாங்கள் தபோவனம் சென்ருேம். ஓராண்டுக்கு முன், முதன் முறையாக நான் சுவாமிகளை தரிசனம் செய்வதற்குக் காரணமாயிருந்த நண்பர் ஸ்ரீராம்

தபோவனம்



அங்கு இருந்தது தெய்வச் செயலாக அமைந்தது. நான் பூண்டி சாமியாரை தரிசித்ததையும், அவர் என்னை தபோவனம் போகச் சொன்னதையும் பற்றி சுவாமிகளிடம் நேரிலேயே கூற வேண்டும் என்ற பேராவலுடன் உட்கார்ந்திருநதேன். அப்போது ஸ்ரீராம் என்னருகில் வந்து, என் உள்ளக்கிடக்கையை அறிந்து, ஏகாந்தத்தில் வீற்றிருந்த தவச் செல்வரிடம் என்னை அழைததுச் சென்ளுர்.

பளபளக்கும் திருமேனியுடன் மோகனப் புன்னகை தவழ அமர்ந்திருந்த மகானின் பாதங்களில் விழுந்து எழுந்தேன். அந்த வசீகர வதனத்தின் ஆன்மீகக் கவர்ச்சியில் கட்டுண்டு, பேச்சிழந்து அவர் எதிரில் கை கட்டி நின்றிருந்தேன். என்ன ஆச்சரியம்! என் மனத்தில் இருந்ததை, நான் சொல்ல எண்ணியதை, சுவாமிகளே கூறிவிட்டார்.

திருவண்ணுமலை சரித்திரம் எழுதுவதும், பூண்டி சாமியாரை தரிசித்ததும், அவர் தபோவனம் போகச் சொன்னதும் அறிந்து மகிழ்ந்தோம்.

எல்லாம் அறிந்தவர்கள், நாம் சொல்லித் தெரிந்துகொள்ளப்போவது ஒன்றுமில்லை. இருப்பினும் மனத்தில் பொங்கும் ஆசையால் அவர்களுக்குத் 'தெரியாத' செய்திகளை நாம்சொல்ல நினைக்கிறோம். எத்தனை பெரிய மடமை!

மகான் மதுரக் குரலில் அருள்மாரி பொழிந்தார்:

மகான்களின் ஜீவிய சரித்திரங்கள் நிறைய எழுதி, மக்களிடையே மறுமலர்ச்சி ஏற்பட ஒரு தூண்டுகோலாக இருக்க வேண்டுகிறோம். கலைமகளின் கடாட்சம் பரிபூரணமாக இருக்கவும், அருள் தொண்டு புரியவும், வெற்றி பெறவும் பிரார்த்திக்கின்றோம்.



ஸ்ரீ ஞானனந்த கிரி சுவாமிகள்

தேன் தமிழையும் ஞானப் பாலையும் குழைத்து ஆசி அமிருதமாக வழங்கினுர் குருநாதன். அந்த அருள வெள்ளத்தில் மூழ்கித் திளைத்த என உள்ளம் பேரானந்தத்தில் கரைந்து, கண்ணீராகப் பெருக்கெடுத்தது.

திருவண்ணுமலைக்கு ரயிலில் சென்றுகொண்டிருந்த வேங்கடராமன், தம் வீட்டைப் பற்றி ஒரு கணம் நினைத்துக் கொண்டார். 'அலமாரியில் வைத்துவிட்டு வந்த அந்தக் கடிதத்தைப் படித்துவிட்டு வீட்டில் இருந்தவர்கள் எங்கெல்லாம் தேடினுர்களோ? துக்கம் தாங்காமல் அம்மா ரொம்பவும் அழுதிருப்பாளோ?...' ரயிலோடு வேங்கடராமனின் சிந்தனையும் ஓடியது. சிறுவரின் கன்னத்தில் ஒரு கண்ணீர் முத்தும் உருண்டோடியது.

தொடரும்.

ஸ்ரீ ரகோத்தம சுவாமிகள் பிருந்தாவனம்




இன்ப வாழ்வு, இனிய குடும்பம், இந்நலமெலாம் விவசாயி முருகனுக்கு வாய்த்தது எப்படி?



ஏரா்ள விளைச்சல் தாராளமாக அளித்திடும் ஒர்த்திங்டன்- சிம்ப்ஸன் பம்புசெட் அளித்த வளமையிது.

முருகன் வாழ்வில் ஈடில்லாத
இன்பநாள், ஒர்த்திங்டன்-சிம்ப்ஸன்
பம்புசெட் பொருத்திய அந்தநாள்.
குறைந்த சிலவில் நிறைந்த
பயன் தரும் முதலீடு,
ஒர்த்திங்டன்-சிம்ப்ஸன் பம்புசெட்.
பெஸ்ட் அண்ட் கம்பெனியின்
ஓர் ஒப்பற்ற தயாரிப்பு அது.

ஈடு இணையற்றது என்று புகழ் பெற்ற
'மானோபிளாக்' பம்பு செட்டுகள் உட்பட
பலவகை 'சென்டிரிப்யூகல்
பம்புகளையும் **பெஸ்ட்** அளிக்கிறது.
ஒர்த்திங்டன்-சிம்ப்ஸன் பம்பு செட்டுகள்
கண்டிப்பான தரக்கட்டுப்பாட்டுடன்
தயாரிக்கப்படுபவை. விற்பனைக்குப்
பிறகும் சேவை செய்ய, நாடெங்கும்
ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
மேலும், தக்க பம்புகளை தேர்ந்தெடுப்
பதற்கு ஆலோசனைகளையும்
அளிக்கிறது **பெஸ்ட் !**






பெஸ்ட் & கம்பெனி பிரைவேட் லிட்.

(ஸ்தாபிதம்: 1879)
13/15 நார்த் பீச்ரோடு, சென்னை-1

தமிழ் நாட்டில் கிளைகள்:
6/434, திருச்சிரோடு,
கோயமுத்தூர்.
49-D, மதுரைரோடு, திருச்சி-1.

Focus-BC-493 Tam (a)





பூமிநாதர் கோயிலும் திருக்குளமும் (திருச்சுழி)

அருணாசல மகிமை

25

வேங்கடராமன் பிரயாணம் செய்த புகை வண்டி திருவண்ணாமலையை நெருங்கிக் கொண்டிருந்தது. அருணாசலத்தைத் தரிசிக்கத் துடித்துக் கொண்டிருந்த சிறுவரின் மனம், 'ரயில் இன்னும் வேகமாகப் போகக் கூடாதா?' என்று ஏங்கியது.

புது ஊரைப் பார்க்கப் போகிறோம் என்ற ஆர்வமும் ஆவலும் இருந்த போதிலும், பிறந்த ஊரைப் போல் அது இருக்குமா என்ற சந்தேகம் அச் சிறுவருக்குத் தோன்றாமல் இல்லை. 'திருச்சுழியைப் போல் உலகில் வேறு ஊர் இருக்க முடியுமா? அந்தக் கோயிலையும் குளத்தையும் போல் வேறு எங்காவது காண முடியுமா?' என்று தமக்குத் தாமே கேட்டுக் கொண்டார் அவர்!

பூமிநாதர் கோயிலிலுள்ள 'கௌவைக் கடல்' என்ற திருக்குளத்தில் இளவயதில் ஆசை தீரக் குளித்தும் நீச்சலிட்டும் கும்மாளம் அடித்தது அவர் நினைவுக்கு வந்தது. அந்தத் தண்ணீரில் கந்தகம் கலந்திருப்பதால் அதில் குளிக்கும்போதெல்லாம் அவர் கால்களில் அணிந்திருந்த வெள்ளிக் காப்பு சற்றுக் கருத்து விடும். அதை அம்மா பார்த்து விட்டால், 'குளத்தில் குளித்தாயா?' என்று கோபித்துக் கொள்வாள். அதற்காக, குளித்து கரையேறியதும் அந்த வெள்ளிக்காப்பைத் துணியால் தேய்த்துத் தேய்த்து சுத்தம் செய்வார். அந்த நாட்களை நினைத்த போது அவருக்கு சிரிப்பு வந்தது.

கருவறையில் திருமேனிநாதர்தான் எத்தனை கம்பீரமாக வீற்றிருப்பார்! துணைமாலையம்மை என்ற சகாயவல்லி அம்பிகையின் கண்களில்தான் எத்தனை கருணை! ஒரு சமயம் வேங்கடராமனுக்கு தாங்க முடியாத துக்கம்

பரணீதரன்

வந்து விட்டது. அழுகையழுகையாக வந்தது. அதற்கு என்ன காரணம் என்று கூட அவருக்குத் தெரியாது. சின்ன வயதுதானே! என்ன செய்வது என்று புரியாமல், நேரே கோயிலுக்குச் சென்றார். சகாயவல்லி அன்னையின் சந்நிதியில் போய் அமர்ந்தார். கண்களை மூடி, கைகளைக் கூப்பி, ''அம்மா, எனக்கு அழுகையா வரது. என்னைக் காப்பாத்து, தாயே'' என்று வேண்டிக் கொண்டார். சற்றைக்கெல்லாம், அவரையும் அறியாமல் ஓர் ஆனந்த ஊற்று அவருள் பெருக்கெடுத்து பொங்கி வழிந்தது. அது உடலெங்கும் பரவி, அவரை உலுக்கியது. பரவசத்தில் மேனி யெல்லாம் சிலிர்த்தது. எல்லாமே அவருக்கு இன்பமயமா யிருந்தது. எல்லாருமே சந்தோஷப்படுவது போல் தோன்றியது. துள்ளிக் குதித்தபடி சிரித்துக் கொண்டே வீட்டுக்கு ஓடி வந்தார்.

இத்தனை ஆண்டுகள் கழித்து அந்த நிகழ்ச்சியை நினைத்துக் கொண்டவர், அன்று அனுபவித்த அதே ஆனந்த லயிப்பில் ஒரு கணம் ஆழ்ந்தார்.

பெற்ற தாயையும் பிறந்த மண்ணையும் நன்றியுடன் நினைக்காதவர்கள் இருக்க முடியுமா? முற்றும் துறந்தவர்களானாலும், தம் தாய்க்கு நெஞ்சில் ஓர் ஆலயம் அமைத்து வழிபட்டுத்தான் ஆக வேண்டும். உலகத்தையே வீடாகக்கொண்ட துறவிகளும், பிறந்த ஊரை பெருமையுடன் போற்றாமல் இருக்க மாட்டார்கள்.

ஸ்ரீ ரமண பகவான் தம்மை உலகிற்கு முதன் முதலில் அறிமுகப்படுத்திக் கொண்ட போது, 'வேங்கட ராமன், திருச்சுழி' என்றே எழுதிக் காட்டினார். தாய் அழகம்மை முக்தியடைந்த போது, அன்னைக்கு மாத்ருபூதேச்வரர் என்ற பெயரில் ஓர் ஆலயம் எழுப்பி வழிபட்டார்.

ஸ்ரீரமணமகரிஷி பிறந்த ஊரையும், பிறந்த இல்லத்தையும், அவர் இளவயதில் வழிபட்ட திருமேனிநாதரையும் துணைமாலை யம்மையையும் தரிசித்து வருவதற்காகப் புறப்பட்டுச் சென்றோம்.

திருச்சுழி மதுரையிலிருந்து தென் கிழக்கே முப்பது மைல் தொலைவில், ராமநாதபுரம் மாவட்டத்தில் இருக்கிறது. மதுரையிலிருந்து அருப்புக் கோட்டைக்குப் போகும் பாதையில் இருபது மைல் சென்றால், கரியாபட்டி





ஸ்ரீ நடராஜர்

என்ற ஊரையடுத்து திருச்சுழிக்கு ஒரு பாதை பிரிகிறது. அப்பாதையின் கடைசி மூன்று நான்கு மைல்கள் கரடு முரடாக இருக்கிறது. சிறிது சுற்றிக் கொண்டு போனாலும் சீரான பாதையில் செல்ல வேண்டும் என்று நினைப்பவர் அப்பாதையில் திரும்பாமல் நேரே அருப்புக்கோட்டைக்குச் சென்று அங்கிருந்து கிழக்கே எட்டு மைல் வந்தால் திருச்சுழியை அடையலாம். ரயிலில் செல்ல விரும்புகிறவர்கள் விருதுநகர் மானாமதுரை ரயில் பாதையிலுள்ள 'திருச்சுழி' ஸ்டேஷனில் இறங்க வேண்டும்.

தல புராணங்களிலும், தேவாரப் பாடல்களிலும் இவ்வூர் திருச்சுழியல் என்றே குறிப்பிடப் பட்டுள்ளது. பெரும் பிரளயம் வந்த போது, தேவர்கள் முறையிட்டுக் கொண்டதன் பேரில், சிவபெருமான் பிரளயத்தைச் சுழித்து, திருக்குளத்தின் அடியில் புகச் செய்தார். அப்பிரளய விடங்கருக்கு, பூமிநாதர் ஆலயத்தில் ஒரு தனி சந்நிதி இருக்கிறது.

பிரளயவிடங்கர் சந்நிதி





திருச்சுழியின் மகிமையை
ஸ்ரீ சுந்தரர் முதல் பாட
லேயே வெகு அழகாக விலக்கி
யிருக்கிறார்!

உலகும், உயிராவும்
உயிர்க்குப் புகலிடமாயும்
நிலமாகவும், நிலத்தை ஆ
ரிக்கும் மழையாகவும், ம
யாகவும், விதியாகவும்
உள்ள பெருமான் உறையு
திருச்சுழியலை-மலர்ச் சோலை
களில் தேன் உண்ண வரு
வண்டினங்கள் இசை பாடு
திருச்சுழியலை - மனத்தா
நினைப்பவர்கள் காலனை
கண்டு அஞ்ச வேண்டி
தில்லை. அவர்களுக்கு முக்தி
கிடைப்பது நிச்சயம்.

சுந்தர மந்திரம்
(ஸ்ரீ ரமணர் பிறந்த இல்லம்)

திருச்சுழியல் திருத்தலம் புராதனப் பெருமை வாய்ந்தது. திருமேனி நாதரை கிரேதாயுகத்தில் பூமி தேவி பூசித்தாள். திரேதா யுகத்தில் பிரளயஞ் சுழித்த வரலாறு நடைபெற்றது. துவாபர யுகத்தில் கௌதமரும் அகலிகையும் சிவபெருமானின் திரு நடனமும், திருமணக் கோலமும் கண்டு களித்தனர். கலியுகத்தில் கடைச் சங்கத்து தமிழ்ப் புலவர்கள் திருமேனிநாதரை வழிபட்டனர்.

காசி, திருக்காளத்தி, திருக்கழுக்குன்றம், சிதம்பரம், கும்பகோணம், திருவாரூர் முதலிய தலங்களில் ஆயிரம் அச்வமேத யாகம் செய்தால் என்ன பலன் கிடைக்குமோ, அந்தப் பலனை, திருச்சுழியில் சிவனடியார் ஒருவருக்கு ஒரு பிடி சோறு வழங்குவதன் மூலம் பெற்று விடலாம். திருச்சுழியில் பிறந்தவர்களுக்கு மறு பிறவியே கிடையாது.

திருச்சுழியில் உறையும் பரமனை, பார்வதி தேவியும், தேவர்களும், மாமுனிவர்களும், பேரரசர்களும், நாயன்மார்களும், சிவனடியார்களும் வழிபட்டு புண்ணியம் பெற்றிருக்கிறார்கள்.

சுந்தரமூர்த்தி நாயனார் இத்தலத்தைப் பற்றி ஒரு பதிகம் பாடியருளியிருக்கிறார். மாணிக்க வாசகப் பெருமான் திருக்கோவையாரில் திருச்சுழி பற்றி சிறப்பித்துள்ளார். நாவுக்கரசரும் ஞானசம்பந்தரும் இத்தலத்திற்கு வருகை தந்து வழிபட்டிருக்கிறார்கள்.

நினைத்ததும் முக்தி தரும் இரு
சுழியில் பிறந்த வேங்கடராமன்
நினைத்தாலே முக்தி தரும் தி
வண்ணாமலையை நோக்கி ரயிலி
போய்க் கொண்டிருக்கிறார். அதோ
திருவண்ணாமலையின் சிகரம் கண்ணு
குத் தெரிகிறது. ரயில் பெட்டியிலுள்
வர்கள் கன்னத்தில் போட்டுக் கொ
கிறார்கள். சிறுவர் வேங்கடராமனு
எட்டிப் பார்த்து பரவசத்துடன்
கும்பிடுகிறார். அம் மாமலை அப்படியே
பறந்து வந்து அவர் இதயத்தி
அமர்வது போல் அவருக்கு பிரமை
தட்டுகிறது. சமாதியில் ஆழ்ந்து
விடுகிறார்.

நாம் திருச்சுழி பூமிநாதர் கோயி
லைச் சுற்றிப் பார்த்துக் கொண்டிருக்கி
றோம். சபா மண்டபத்தில் ஆனந்த
நடம் புரிந்து கொண்டிருக்கும் நடே
சன் நம்மை 'வா வா' என்று அழை
கிறார். அருகில் செல்கிறோம். ஆனந்த
கூத்தனின் 'ஜல் ஜல்' என்ற சதங்கை
ஒலி நம் காதுகளில் விழுகிறது.

எதிர்ப்புறத்தில் பக்தியுடன்
அறுபத்து மூன்று நாயன்மார்களு
அத் தெய்வக் கூத்தைக் கண்டு, மெய்
யுருகி, கண்ணீர் மல்கி நிற்கிறார்கள்
அவர்களிடையே கௌதம முனிவ
யும் அகலிகையையும் காண்கிறோம்.

கோயில் உள் மண்டபத் தூண்களி
உள்ள வெள்ளையன் சேர்வை, ஆண்
யணன் சேர்வை, முத்துக் கருப்பன்
சேர்வை, வேலாயுதசுவாமி இவர்
களின் உருவச்சிலைகள் கலையழகோடு
சிற்பச் சிறப்போடும் விளங்குகின்றன

சுயம்புமூர்த்தியான திருமேனி நாதரைத் தரிசித்துக் கொண்டு, கருவறையை வலம் வரும்போது, மேற்கே சோமாஸ்கந்தர், விக்னேச்வரர், காசி விசுவநாதர், பூமி, நீளாதேவி சமேத சுழிகைக் கோவிந்தர் முதலியோர் வீற்றிருக்கக் காண்கிறோம்.


ஆடி வீதி யென்றழைக்கப்படும் வெளிப் பிராகாரத்தின் வடகிழக்கில், பிரளய விடங்கரின் சந்நிதிக்கு நேரே, தண்டபாணி சுவாமி கோயில் கொண்டிருக்கிறார். பார்க்க பதினாயிரம் கண்கள் வேண்டும்.

அம்மன் கோயில் மண்டபத்தின் முதல் இரு தூண்களிலும், அம்மண்டபத்தைக் கட்டிய தாசிகளின் அழகிய சிற்ப உருவங்களைக் காண்கிறோம். வட பகுதியிலுள்ள மற்றொரு தூணில் தாசி திருவுமுத்தருளியின் சிற்ப வடிவம் இருக்கிறது. அதை 'மூச்சுப் பிடிப்பு' அம்மன் என்றும் அழைக்கிறார்கள். மூச்சுப் பிடிப்பு உள்ளவர்கள் அந்த அம்மனை மூன்று முறை வலம் வந்து, மஞ்சள் எண்ணெய் சாற்றினால் மூச்சுப் பிடிப்பு விட்டு விடுகிறது என்று அர்ச்சகர் கூறினார்.

அர்த்த மண்டபத்தின் உத்திரத்தில் ஸ்ரீ சக்கரம் ஒன்று இருக்கிறது. ஆனால், அதில் அட்சரங்கள் பொறிக்கப் படவில்லை.

''சுவாமி கோயிலில் இருந்த உற்சவ விக்ரகங்களை யெல்லாம் தற்போது இந்த அறையில் வைத்துப் பூட்டியிருக்கிறோம். அங்கு காவல் போதாது. இப்போதெல்லாம் கோயில்களில் திருட்டு பயம் அதிகமாயிருக்கு. காலம் கெட்டுக் கிடக்கிறது பாருங்கள்'' என்று அர்ச்சகர் கூறியபோது என் உள்ளம் விம்மிற்று. மனிதன் தன்னை திருடிக் கொண்டு போய் விடப் போகிறானே என்று தெய்வமே பயந்து, ஒளிந்து கொள்ளும் நிலை நம் நாட்டில் ஏற்பட்டதை நினைத்து வெட்கப்படுவதா? வேதனைப் படுவதா?

பரமனையும் பராசக்தியையும் தரிசித்து விட்டு, பகவான் பிறந்த இல்லத்தைக் காணச் சென்றோம். வடக்கு கார்த்திகை வீதியிலிருக்கும் 'சுந்தர மந்திரம்', அழகு தேவதை நர்த்தனம் புரியும் ஓர் ஆலயம். 'நான்' அழிந்த பிறகு 'தான் யார்?' என்பது புரியும். தான் யார் என்பது புரிந்து விட்டால், பின்னர் புரிந்து கொள்வதற்கு வேறொன்றுமே இருக்காது என்ற



ஸ்ரீ ரமணர் பிறந்த அறை
[அமர்ந்திருப்பவர்
கற்பூர சுந்தர சிவாசாரியார்]

உன்னத தத்துவத்தை விளக்குவதற்கென்றே அழகுத் தெய்வமாம் முருகனின் அம்சமாகத் தோன்றியவர் பிறந்த இல்லம், அழகுக்கோர் ஆலயமாகத் திகழ்வதில் வியப்பில்லை. சுந்தரம் ஐயரையும், அழகம்மையையும் தந்தை தாயாக அடைந்து, அழகோடு அழகு இணைந்ததால் எழில் குமரனைத் தோன்றி, மழலை பேசி விளையாடி மகிழ்ந்த இல்லம் அழகுத் தெய்வம் உறையும் ஆலயமாகத் தானே இருக்க வேண்டும்!

சுந்தரமய்யர் சுய முயற்சியாலும், கடின உழைப்பாலும் வாழ்க்கையில் உயர்ந்தவர். சாதாரண கணக்குப் பிள்ளை குமாஸ்தாவாக இருந்தவர், பிறருக்கு விண்ணப்பங்கள் எழுதி தருபவராக மாறி, பட்டம் பெறாத வக்கீலாகி, செல்வம் ஈட்டியவர். கட்சிக்காரர்களையும், உதவி நாடி வருபவர்களையும் வரவேற்பதற்காக அவர் இல்லம் எப்போதும் திறந்திருக்கும்.

இல்லத்தைப் போன்றே அவர் இதயமும் திறந்திருந்தது. செல்வம் குவிந்தாலும், செருக்கோ சிறுமைத்தனமோ இல்லாமல் வாழ்ந்தவர் சுந்தரமய்யர். ஏழைகள் கண்ணீர் சிந்தினால் அவர் பொறுக்க மாட்டார்; எந்த வேளையாயிருந்தாலும் ஏழைகளின் துயரைத் துடைக்க ஓடோடிச்

செல்வார். ஒரு சமயம் நள்ளிரவில் குடிசைகள் தீப்பற்றி எரிந்த போது, திக்கற்று நின்றவர்களுக்கு ஆறுதல் மொழி கூறி, வீடுகள் கட்டிக் கொடுத்திருக்கிறார்.

செல்வாக்கும் மதிப்பும் பெற்று ஊருக்குப் பெரிய மனிதராக வாழ்ந்த போதிலும் என்றுமே சுயகௌரவத்தை விட்டுக் கொடுத்து சுயவிளம்பரம் செய்து கொண்டதில்லை.

ஒரு சமயம் ராமநாதபுரம் ராஜா திருச்சுழியில் முகாம் செய்திருந்தார். அப்போது ஊரிலுள்ள முக்கியபுள்ளிகளெல்லாம் சென்று, அவர் எதிரில் பல்லை இளித்து, கை கட்டி நின்றனர். சுந்தரமய்யர் மட்டும் வீட்டிலேயே இருந்தார். அவர் வராததைக் கவனித்த ராஜா ஆள் விட்டு அனுப்பினார். அந்த ஆசாமி வந்து, ''ஏன் ராஜாவை வந்து பார்க்கவில்லை? அவர் உங்களைக் கையோடு அழைத்து வரச் சொன்னார்'' என்று அழைத்த பிறகே சேதுபதியை காணச்சென்றார் சுந்தரமய்யர்.

தெய்வ பக்தியும், ஆசார அனுட்டானங்களும் நிரம்பப் பெற்ற சுந்தரமய்யருக்கு ஏற்ற மனைவியாகத் திகழ்ந்தார் அழகம்மை. கணவரின் கண் பார்வையிலிருந்தே குறிப்பறிந்து, முணுமுணுக்காமல், முகம் கோணாமல் வந்த விருந்தினரை யெல்லாம் உபசரிப்பார்.

உலகிற்கொரு ரமணரைப் பெற்றுத் தரப் போகும் உத்தமி, எந்நேரமும் தெய்வச் சிந்தனையிலேயே ஈடுபட்டிருந்தார். மௌன விரதம் ஏற்று, கண் நோக்காலேயே நாடி வந்தவர்களுக்கெல்லாம் நல்லுபதேசம் செய்து, மனச்சாந்தி நிலவச் செய்த ஞானப் புதல்வனை ஈன்றெடுக்கப் போகும் அந்தத் தாய், கிணற்றிலிருந்து தண்ணீர் எடுக்கும் போதும், சமையல் செய்யும் போதும், புடவையைக் கொடியில் உலர்த்தும் போதும் தட்சிணாமூர்த்தி அஷ்டகத்தைத்தான் சொல்லிக் கொண்டிருந்தார்.

அந்த ஞான குருநாதர் பிறந்த வீட்டிற்குள்தான் தற்போது நுழைந்து கொண்டிருக்கிறோம்.

'சுந்தர மந்திர'த்தை நிர்வகித்து வருபவர் பெயரிலும் 'அழகு' இருக்கிறது. கற்பூர சுந்தர சிவாசாரியார் எங்களை வரவேற்க, அந்த இல்லத்தில் காலடி எடுத்து வைக்கிறோம். துன்பமெல்லாம் தொலைந்து, பாபமெல்லாம் விலகி, பிறவி யெடுத்த பயனைப் பெற்று விட்ட உணர்வோடும், அவ்வுணர்வினால் தோன்றும் நிம்மதியோடும், நிம்மதி தரும் நிறைவோடும், நிறைந்து விட்ட உள்ளத்தில் பொங்கும் பேரானந்தத்தோடும், பேரானந்தம் பிரதிபலிக்கும் முகப் பொலிவோடும் உள்ளே நுழைகிறோம்.

''இந்த அறையில்தான் பகவான் பிறந்தார்'' என்று கூறுகிறார் கற்பூர சுந்தர குருக்கள். அடுத்த கணம் கற்பூர மணம் அந்த அறை யெங்கும் பரவுகிறது. பேரழகு, அங்கே அருளாட்சி புரிகிறது. பேரொளி, மின்னலாய் பாய்கிறது. அன்பு, மழையாய்ப் பொழிகிறது. கருணை, அருவியாய்க் கொட்டுகிறது.

வீதியில் மங்கள வாத்தியம் முழங்குகிறது. அது திக்கெட்டும் தேவகானமாய் சூழ்கிறது.

அன்று திருவாதிரைத் திருநாள். ஆருத்திரா தரிசனத்திற்காக சுவாமி வீதி வலம் வந்து, கோயிலுக்குள் நுழையப் போகும் நேரம். நடு நிசியைக் கடந்து ஒரு மணியாகி விட்டது.

அந்தப் புனித வேளையில், அந்த அறையில், பச்சைக் குழந்தையின் அழுகுரல் கேட்கிறது. அது வான வெளியில், 'அருணாசல, அருணாசல' என்று எதிரொலிக்கிறது.

அந்த ஒலி பக்கத்து வீட்டில் இருக்கும் ஒரு குருட்டுக் கிழவியின் காதில் விழுகிறது. 'பளிச்'சென்று ஒரு ஜோதி அவளுக்கு தரிசனமாகிறது. அந்த அதிர்ச்சி தாங்காமல் அவள் பதை பதைக்கிறாள்.

''அப்பனே, சண்முகா, கந்தா, வேலா'' என்று உச்ச ஸ்தாயியில் அவள் உணர்ச்சி வசப்பட்டு கூக்குரலிடுகிறாள்.

அருட்பெருஞ் ஜோதி தனிப் பெருங் கருணை தொண்ணூறு ஆண்டுகளுக்கு முன் மனித உருவில் தோன்றிய அறையில் நாம் நிற்கிறோம் என்று நினைக்கும் போது, ஆன்மிக மின்சக்தி உடலெங்கும் பாய, அங்கமெல்லாம் தளர்கிறது. அலைமோதும் அருள் வெள்ளத்தில் கரைந்து, நாம் மறைந்து விடுகிறோம்.

அருணாசல நாமம், அவனியெங்கும் ஓங்கார நாதமாய், வேத கீதமாய் ஒலிக்கிறது.

—தொடரும்



19-7-70

விகடன் இதழ்

திருநெல்வேலி

மாவட்ட

மலரில்

டபிள்யூ. ஆர். ஸ்வர்ணலதா

எழுதும்

பிருந்தாவனம்

மர்மத்

தொடர் கதை

ஆரம்பமாகிறது



மாயா.



ஸ்ரீ ரமணர் சிறு வயதில் ஓடியாடி விளையாடிய திண்டுக்கல் மலைக்கோட்டை

அருணாசல மகிமை

26

சுந்தரம் ஐயருக்கு மூன்று குமாரர்கள். மூத்தவரின் பெயர் நாகசாமி. அடுத்தவர் வேங்கடராமன். நாகசாமிக்கும் வேங்கடராமனுக்கும் இரண்டு வயதுதான் வித்தியாசம். நாகசுந்தரம் வேங்கடராமனுக்கு இளையவர். ஆறு வயது சிறியவர். இவர்களுக்கு அலமேலு என்று ஒரு சகோதரியும் உண்டு.

நாகசாமியும் வேங்கடராமனும் திருச்சுழி மேல ரத வீதியிலுள்ள சேதுபதி ஆரம்பப் பள்ளியில் படித்து வந்தார்கள். அண்ணன், படிப்பில் அக்கறை காட்டினார். தம்பி, விளையாட்டில் அக்கறை காட்டினார். வேங்கடராமன் புத்திசாலிதான். ஒரு தரம் புத்தகத்தைப் புரட்டினால், அந்தப் பாடம் அவருக்கு அப்படியே மனப்பாடம் ஆகி விடும். ஆசிரியர் கூறுவதும் மனத்திலே பசுமையாகப் பதிந்து விடும். ஆனால், புத்தகத்தைக் கண்டால் ஏனோ அவருக்கு வேம்பாகக் கசந்தது.

குழந்தைகள் ஆங்கிலக் கல்வி கற்க வேண்டும், பெரிய உத்தியோகம் பார்க்க வேண்டும், கை நிறையச் சம்பாதிக்க வேண்டும் என்று சுந்தரம் ஐயருக்குக் கொள்ளை ஆசை. இருக்காதா?

ஆனால், தந்தைக்கு நாகசாமியின் மீது இருந்த 'நம்பிக்கை' வேங்கடராமனின் மீது இல்லை. 'இந்தப் பையன், பசங்களை யெல்லாம் கூட்டி வைத்துக் கொண்டு எப்போதும் தெருவிலேயே விளையாடிக் கொண்டிருக்கிறானே, இவனுக்கு எப்படிப் படிப்பு வரும்?' என்று வேங்கட

பரணீதரன்

ராமனைப் பற்றி சுந்தரம் ஐயர் அடிக்கடி கவலைப்பட்டுக் கொண்டிருந்தார். தம்முடைய குழந்தை பிற்காலத்தில் ஞான சூரியனைப் பிரகாசிக்கப் போகிறார் என்றோ, பெரும் படிப்புப் படித்தவர்கள் எல்லாம் அவர் காலடியில் வந்து அமர்ந்து மெய்யறிவு பெறப் போகிறார்கள் என்றோ அவர் அப்போது கண்டாரா? 'இவன் படித்துப் பட்டம் பெற்று குடும்பத்தைக் காப்பாற்றுவானோ?' என்று எந்தச் சிறுவரை நினைத்து தந்தை எந்நேரமும் ஏங்கினாரோ, அந்தச் சிறுவர் உலகத்தையே தம் குடும்பமாக ஏற்று, அத்தனை பேர் துயரத்தையும் துடைக்கப் போகிறார் என்று அவர் கனவு கண்டிருக்கத்தான் முடியுமா?

சுந்தரம் ஐயரின் முன்னோர்களுக்கு ஏற்பட்டிருந்த ஒரு சாபத்தின் காரணமாகத் தம் பிள்ளைகளில் ஒருவர் குடும்பத்தை விட்டு ஓடப் போகிறார் என்று அந்தப் பெரியவருக்கு எப்படித் தெரியும்?

சுந்தரம் ஐயரின் பரம்பரையில் யாரோ ஒருவர், வீடு தேடி வந்த சந்நியாசியை உணவளித்து உபசரிக்காமல் உதாசீனப்படுத்தி விட்டாராம்! கோபம் கொண்ட அந்தச் சந்நியாசி, 'உங்கள் வம்சத்தில் ஒவ்வொரு தலைமுறையிலும் ஒருவர் குடும்பத்தைத் துறந்து, வீட்டை விட்டு வெளியேறி, உணவுக்காக நாலு பேரிடம் கையேந்தி வாழ வேண்டும்' என்று சபித்து விட்டுப் போய் விட்டார். சுந்தரம் ஐயரின் தந்தையோடு பிறந்தவர், காஷாயம் தரித்து, தண்டமும் கமண்டலமும் ஏந்தி, ஊர் ஊராக அலைந்து கொண்டிருந்தார். அதற்கு அடுத்த தலைமுறையில், ஐயரின் மூத்த சகோதரர் திடீரென்று ஒரு நாள், கிராமத்தை விட்டு எங்கோ ஓடிப் போய் பரதேசியைப் போல் திரிந்து கொண்டிருந்தார். இந்தத் தலை முறையில், தமது இரண்டாவது பிள்ளை, பதினாறாவது வயதில் எல்லாவற்றையும் உதறி விட்டு, அருணாசலத்தில் போய் அமரப் போகிறார் என்று தந்தைக்குத் தெரிந்திருந்தால் அவருடைய பள்ளிப் படிப்பைப் பற்றிக் கவலைப்பட்டிருப்பாரா?

பகவான் ரமணர் பிள்ளைப் பருவத்தில் படித்த பள்ளிக்கு எங்களை அழைத்துச் சென்றார் கற்பூரசுந்தர சிவாசாரியார். நாங்கள் அங்கு சென்ற போது, அப் பள்ளிச் சிறுவர்கள் தாழ்வாரத்தில் மதிய உணவு சாப்பிட்டுக்கொண்டிருந்தார்கள். பாவம், அவர்கள் ஒழுங்காக, வயிறாரச் சாப்பிடுகிறார்களா என்று கவனிக்க அங்கு ஓர் ஆசிரியரைக் கூடக் காணோம். அநாதைப் பிள்ளைகள் போல் நம் செல்வங்கள் தங்களுக்குத் தாங்களே பரிமாறிக் கொண்டு சாப்பிட்டதைப் பார்க்க பரிதாபமாயிருந்தது.


அந்தப் பள்ளியில் ஸ்ரீ ரமண பகவானின் திருவுருவப் படம் மாட்டப்பட்டிருக்கிறது. வருங் காலத்தில் திருச்சுழியில் எத்தனையோ பெரிய பள்ளிகளும், கல்லூரிகளும் தோன்றலாம். ஆனால், அந்தச் சிறிய ஆரம்பப் பள்ளிக்குக் கிடைத்த பெருமை இனி வேறெந்த கல்விக்கூடத்திற்காவது கிடைக்குமா?

திருச்சுழியில் ஆரம்பக் கல்வி முடிந்ததும், நாகசாமியையும் வேங்கடராமனையும் 'மேல்' படிப்புக்காகத் திண்டுக்கல்லுக்கு அனுப்பினார் சுந்தரம் ஐயர். வேங்கடராமன் திண்டுக்கல்லில் ஓராண்டு படித்ததாகத் தெரிகிறது. ஆனால், 'இந்த வருடத்தில் தான் படித்தார், இந்த வகுப்பில்தான் படித்தார், இந்த வீட்டில்தான் இருந்தார்' என்று நிச்சயமாக யாராலும் சொல்ல முடியவில்லை.

ஸ்ரீ ரமணரின் திண்டுக்கல் வாழ்க்கையைப் பற்றி பகவானின் பேரன் திரு விசுவநாதன் என்பவரிடமிருந்துதான் சிறிது அறிந்து கொள்ள முடிந்தது.

ஸ்ரீ ரமணரின் அத்தை பிள்ளை பி. கே. ராமசுவாமி ஐயர். அவர் திண்டுக்கல்லில் வக்கீலாயிருந்தார். ராமசுவாமி ஐயரின் பிள்ளைகளில் ஒருவர்தான் விசுவநாதன்.

ஸ்ரீரமணர் படித்த தொடக்கப் பள்ளி
(திருச்சுழி)




காஷாயம் கட்டாத துறவியாய் வாழ்ந்து கொண்டிருக்கிறார். எந்நேரமும் ரமணாம்ருதத்தை சுவைத்துக் கொண்டு, ரமணானந்தத்தில் திளைத்துக் கொண்டிருப்பவர். நிறை குடம். அதனாலேயே அவர் அதிகம் பேசுவதில்லை; ரமணரின் தத்துவங்களையும், வாழ்க்கை வரலாற்று நிகழ்ச்சிகளையும் உள்ளடக்கிக் கொண்டிருக்கும் ஒரு சுரங்கம் அவர். பொறுமையும் விடாமுயற்சியும் இருந்தால் அவரிடமிருந்து நமக்கு விலை மதிப்பற்ற ரத்தினங்கள் கிடைக்கும்.

அவர் ஒரு பிரம்மசாரி. காந்திஜியின் ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபடுவதற்காக, கல்லூரிப் படிப்பை பாதியில் நிறுத்தி விட்டார். பின்னர், மன அமைதி இழந்து, ரமணாச்ரமத்திற்குச் சென்றார். சற்று சாந்தி பெற்று ஓராண்டில் வீடு திரும்புவதாகத் தந்தையிடம் கூறிச்சென்றவர், ஆச்ரமத்திலேயே தங்கி விட்டார். பகவான் விதேக முக்தி அடைந்த பின் ஆச்ரமத்தை விட்டு வெளியேறிய சாதுக்களில் விசுவநாதனும் ஒருவர். அவரிடம் மதிப்பும் மரியாதையும் கொண்ட நண்பர்கள் அவரை விசுவநாதசுவாமி என்றே அழைக்கிறார்கள்.

ஸ்ரீ ரமண பகவானின் இள வயது வாழ்க்கையைப் பற்றி அவரிடம் ஒரு நாள் நான் பேசிக் கொண்டிருந்தேன். அப்போது, தம் தந்தைக்கும் ஸ்ரீ ரமணருக்கு மிடையே நடைபெற்ற ஒரு சுவை மிக்க, பொருள் செறிந்த நிகழ்ச்சியை அவர் கூறினார்.

முனிசிபல உயர் நிலைப்பள்ளி (திண்டுக்கல்)



ராமசுவாமி ஐயா திருச்சி செயிண்ட் ஜோசப் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த போது, திருச்சுழியிலிருந்து அம்மாஞ்சி வேங்கடராமன் தன் அத்தானுக்கு ஒரு கடிதம் எழுதினார். அம்மாஞ்சி, அத்தானை விட நான்கு, ஐந்து வயது இளையவர். அப்படியிருந்தும் 'அன்புள்ள அத்தானுக்கு அநேக ஆசீர்வாதம்' என்று வேங்கடராமன் அக் கடிதத்தைத் தொடங்கியிருந்தாராம். இது அத்தானுக்கு ஆச்சரியத்தை அளித்தது.


அடுத்த முறை அவர் திருச்சுழிக்குச் சென்ற போது, அம்மாஞ்சியிடம் கடிதத்தைக் காட்டி, ''ஏண்டா, நீ என்னை விடச் சின்னவன். 'அநேக நமஸ்காரம்'னு போடாமெ 'அநேக ஆசீர்வாதம்'னு போட்டிருக்கியே'' என்று குற்றம் கண்டு பிடிப்பது போல் கேட்டாராம். அதற்கு வேங்கடராமன், ''அதென்னவோ எனக்குத் தெரியாது. லெட்டர் எழுதற போது, சாதாரணமா 'நமஸ்காரம், ஆசீர்வாதம்'னு எழுதறதைப் பார்த்திருக்கேன். எனக்கு அதுக்கெல்லாம் அர்த்தம் தெரியாது. என்னமோ எழுதினேன்'' என்று அலட்சியமாக பதில் கூறி விட்டாராம்.

பின்னர் பல வருடங்கள் 1923-ம் ஆண்டு ராமசுவாமி ஐயர் தம் மனைவியுடன் ரமணாச்ரமத்திற்குச் சென்றார். ஓராண்டில் திரும்பி வருவதாகச் சொல்லி விட்டுச் சென்ற விசுவநாதன் திரும்பி வராததால், அவரை வீட்டுக்கு அழைத்துப் போக அவர்கள் அங்கு வந்திருந்தார்கள். ஆச்ரமத்திற்குள் நுழைந்ததும், ஒரு மரத்தடியில் அமர்ந்திருந்த பகவானைக் கண்டார் ராமசுவாமி ஐயர். அடுத்த கணம் தம் வயதையும் மறந்து, அப்படியே 'அம்மாஞ்சி'யின் கால்களில் விழுந்து நமஸ்கரித்தார்.

வயதில் இளையவரானாலும், 'பெரியவரா'கவே பிறந்து விட்ட வேங்கடராமன், தம்மையும் அறியாமலேயே அன்று கடிதத்தில் தமக்கு மூத்தவராக இருந்த அத்தானை ஆசீர்வதித்தார். இன்று அதே அத்தானை ரமண மகரிஷியாக ஆசீர்வதித்தார்!

அன்று ராமசுவாமி ஐயர் சென்ற பிறகு தாம் சிறு வயதில் எழுதிய கடிதத்தைப் பற்றியும், அத்தான் கோபித்துக் கொண்டதைப் பற்றியும் பகவானே விசுவநாதசுவாமியிடம் வேடிக்கையாகக் குறிப்பிட்டாராம்.

விசுவநாத சுவாமியிடம் ரமணரின் திண்டுக்கல் வாழ்க்கையைப் பற்றி விசாரித்துப் பார்த்தேன். ‘‘எங்கள் வீட்டுக்குவந்து அவர்விளையாடுவார் என்று சொல்லுவார்கள். ஆனால், எங்க வீட்டில் அவர் தங்கியிருக்க வில்லை. யாரோடு இருந்தார் என்பதும் எனக்கு நிச்சயமாகத் தெரியவில்லை’’ என்று அவர் கூறி விட்டார். பகவான்எந்த வகுப்பில்படித்தார், எந்த ஆண்டு படித்தார் என்பதும் அவருக்குத் தெரியவில்லை. தன் தோழர்களுடன் வேங்கடராமன் திண்டுக்கல் மலையில் ஓடியாடி விளையாடுவாராம். அந்தக் கோட்டையிலுள்ள ரகசிய வழிகளெல்லாம் அவருக்கு மிக நன்றாகத் தெரியுமாம். போய் ஒளிந்து கொண்டால் யாராலும் கண்டு பிடிக்க முடியாதாம்! பகவான் திண்டுக்கல் முனிசிபல் உயர் நிலைப் பள்ளியில் படித்ததைப் பற்றிக் கூறி விட்டு, அப்போது பகவானுக்கு ஆசிரியராக இருந்த D. V. கிருஷ்ணய்யரைப் பற்றி பெருமையுடன் பேசினார் விசுவநாதசுவாமி.



அபிராமாம்பிகை ஆலயம் (திண்டுக்கல்)

ஒரு சமயம் டி. வி. கிருஷ்ணய்யர், பாடம் படிக்காததற்காக பகவானை பெஞ்சியின் மேல் ஏறச் சொன்னார். அப்போது சிறுவர் ரமணர் அந்த ஆசிரியரை ஒரு மாதிரியாக முறைத்துப் பார்த்தார். உடனே ஆசிரியர் உறுதி குலைந்து, ‘‘நீ பெஞ்சு மேலே ஏற வேண்டாம். பேசாமல் உன் இடத்திலேயே உட்காரு’’ என்று கூறி விட்டார்!

பின்னர், டி. வி. கிருஷ்ணய்யர் ஆசிரியர் தொழிலை விட்டு விட்டு வக்கீலாகி விட்டார். பகவானுக்கு ஓராண்டு காலம் ஆசிரியராக இருக்க வேண்டும் என்று பேரருள் திட்டமிட்டிருந்ததால்தான் அவர் ஆரம்பத்தில் ஆசிரியர் தொழிலை ஏற்க நேர்ந்ததோ என்னவோ!


ரமண பகவானுக்கு தம் ஆசிரியரின் மீது இருந்த மரியாதையும் அன்பும் இறுதி வரை குறையவே இல்லை. திண்டுக்கல்லிலிருந்து ரமணாச்ரமத்திற்கு யார் வந்தாலும், தம்முடைய ஆசிரியர் டி. வி. கிருஷ்ணய்யரைப் பற்றி பகவான் விசாரிக்காமல் இருக்க மாட்டார்.

பகவானின் இறுதி நாட்களின் போது, டி. வி. கிருஷ்ணய்யர், தமது ‘சீட’ரைக் காண வந்தார். நோயின் வலி தாங்காது அமர்ந்திருந்த பகவானிடம் சென்று, ‘‘என்னைத் தெரிகிறதா?’’ என்று கேட்டாராம். அப்போது பகவான், தம் வலியையும் மறந்து, மந்தகாசம் புரிந்து, ‘‘தெரியாமல் என்ன, சௌக்கியமா?’’ என்று ஆசிரியரை விசாரித்தாராம்.

ஞானச் ‘சீடர்’ மறைந்த நான்கு ஆண்டுகள் கழித்து, 1954-ம் ஆண்டில் தொண்ணூறு வயதைக் கடந்த குருவும் மறைந்து விட்டார்.

ஸ்ரீ ரமண மகரிஷியைப் பற்றிய வாழ்க்கை வரலாற்று நூல்களிலும் அவர் திண்டுக்கல்லில் படித்த விவரங்கள் தெளிவாகக் குறிக்கப் பட...

திரு பி.வி. நரசிம்ம சுவாமி எழுதியுள்ள நூலில் ‘பகவான் திண்டுக்கல்லில் முதல் பாரம் படித்தார்’ என்று



சுந்தரம் ஐயரின் பிள்ளை எஸ. வேஙகடராமன் என்னும் 13 வயது சிறுவர் 1891-ம் ஆண்டில் நான்காவது வகுப்பில் படித்ததாக இந்தப் பழைய ஏட்டில் காணப்படுகிறது.

எழுதியுள்ளார். சுவாமி சுத்தானந்த பாரதியார் எழுதியுள்ள நூலில், 'ஐந்தாவது வகுப்பு படித்தார்' என்று குறிப்பிட்டுள்ளார். பகவான் இரண்டாவது பாரத்தில் படித்தார் என்று ஆசிரியர் டி. வி. கிருஷ்ணய்யர் கூறியதாக 1950-ம் ஆண்டில் 'சண்டே டைம்ஸ்' பத்திரிகையில் வெளியான ஒரு கட்டுரையில் காணப்படுகிறது. ஒருவரும் அவர் எந்த வருடம் படித்தார் என்பதைப் பற்றிக் குறிப்பிடவில்லை.

திரு விசுவநாதசுவாமி கூறியதை ஆதாரமாக வைத்துக் கொண்டு நான் திண்டுக்கல் முனிசிபல் உயர் நிலைப் பள்ளிக்குச் சென்று விசாரித்துப் பார்த்தேன். ஸ்ரீ ரமணர் அப் பள்ளியில் படித்தார் என்பதைக் கேட்டதும் அங்கிருந்த ஆசிரியர்களின் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. பெருமையின் பூரிப்பு அவர்கள் முகங்களில் பொலியக் கண்டேன்.

''உங்க பள்ளியில் பழைய 'ரெகார்டு' ஏதாவது இருக்குமா? ரமணர் 1890-ம் ஆண்டுக்குப் பிறகு ஒரு வருடம் உங்கள் பள்ளியில் படித்திருப்பதாக தெரிய வருகிறது. கொஞ்சம் தேடிப் பார்க்க முடியுமா?'' என்று ஓர் ஆசிரியரிடம் கேட்டேன்.

''கிடைப்பது சந்தேகம்தான். இருந்தாலும் முயன்று பார்க்கிறோம்'' என்று உற்சாகத்துடன் கூறினார் திரு என். மனோகரன். அந்தப் பணியைத் தம் வாழ்க்கையில் கிடைத்த ஒரு பெரும் பாக்கியமாகவே அந்த இளம் ஆசிரியர் கருதினார் என்பதை உணர்ச்சி வசப்பட்ட அவர் பேச்சிலிருந்து உணர முடிந்தது.

மூன்று நான்கு பேர் இரவெல்லாம் தேடி, பழைய ரிகார்டைக் கண்டு பிடித்ததாக மறுநாள் உற்சாகத்துடன் கொண்டு வந்து காட்டினார் திரு மனோகரன்.

தொடக்கத்திலிருந்து அந்தப் பள்ளியில் வந்து சேர்ந்த மாணவர்களின் பெயர் பட்டியல் அது. அதில் 37-வது நம்பரில் எஸ். வேங்கடராமன்(வயது 13, தந்தையின் பெயர் சுந்தரம் ஐயர், திண்டுக்கல்), நான்காவது ஸ்டாண்டர்டில் 1891-ம் ஆண்டு ஜனவரி 27-லிருந்து ஜூன் மாதம் வரை படித்ததாகவும், இடம் மாறியதால் பள்ளியை விட்டுச் சென்று விட்டதாகவும் குறிக்கப்பட்டிருந்தது.

அந்தப் பட்டியல் முழுவதும் தேடிப் பார்த்தோம். அதில் வேறொரு வேங்கடராமனின் பெயரே இல்லை. அப்படியானால், நாங்கள் பார்த்த

'வேங்கடராமன்' ரமணரைத்தான் குறிக்கிறதா? அதை உறுதிப்படுத்துவதற்கோ, மறுப்பதற்கோ தற்போது திண்டுக்கல்லில் ஒருவரும் இல்லை.

'அது ரமணர்தான்' என்று முடிவு செய்வதற்கு மூன்று விஷயங்கள் தடையாக இருந்தன:

1. அப்போது ரமணருக்கு பதினொரு வயதுதான் நிரம்பி யிருந்தது. ஆனால், ஏட்டில் 13 வயது என்றிருந்தது.

2. தந்தையின் உத்தியோகம் 'வக்கீல்' என்றிருப்பதற்குப் பதிலாக 'அதிகாரி' (அஃபிஷியல்) என்றிருந்தது.

3. அவர் ஐந்தாம் வகுப்போ, முதல் பாரமோ, இரண்டாவது பாரமோ படித்ததாகக் காணப்படவில்லை. நான்காம் வகுப்பில், அதுவும் ஆறு மாதங்களே படித்ததாகக் குறிக்கப்பட்டிருந்தது.

பகவானின் வாழ்நாளிலேயே அவருடைய வாழ்க்கை வரலாற்றை எழுதியவர்கள், இம்மாதிரி தகவல்களை சந்தேகத்துக்கு இடமில்லாமல் எளிதாக எழுதி வைத்திருக்கலாம். ஏனோ அவர்கள் அப்படிச் செய்யவில்லை!

பின்னர், அபிராமாம்பிகை கோயில் தெருவுக்குச் சென்றேன். கோயிலுக்கு நான்கு வீடுகள் தள்ளி ஒரு வீட்டில் டாக்டர் முனியப்பன் வசிக்கிறார். அந்த வீட்டில் பகவானின் அத்தான் பி. கே. ராமசுவாமி ஐயர் சில வருடங்கள் குடியிருந்ததாகக் கூறினார்கள். அங்கு ரமணர் வந்து விளையாடியதாகக் கேள்விப்பட்டிருந்ததால் உள்ளே சென்று எட்டிப் பார்த்துவிட்டு வந்தோம். மகான்கள் காலடிபட்ட இடமெல்லாம் புனிதத் தலங்கள் அல்லவா?

எதிர் வீட்டில் ரமணன் என்பவரை சந்தித்தேன். அவருடைய தந்தையின் பெயர் கே. ரங்கநாதய்யர். அவர் திருச்சுழியிலும், மதுரையிலும் பகவானின் பள்ளித் தோழராக இருக்கும் பாக்கியம் பெற்றவர். ரங்கநாதய்யரும், அவரது குடும்பமும் ரமண பக்தியில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டவர்கள். தன் தந்தைக்கும், தாய்க்கும், சகோதரனுக்கும் ரமண பகவான் தனிப்பட்ட முறையில் கருணை காட்டி அருள் புரிந்த நிகழ்ச்சிகளை ரமணன் தன் கண்கலங்கக் கூறினார்!



டி. வி. கிருஷ்ணய்யர்

ஒரு சமயம் ஸ்ரீ ரமண மகரிஷியும் ரங்கநாதய்யரும் திருவண்ணாமலையில் கிரிப் பிரதட்சணம் செய்யும் போது, நண்பரின் காலில் முள் தைத்ததைப் பகவான் பார்த்து விட்டார். வலி பொறுக்க முடியாமல் துடித்தவரிடம் பரிவோடு வந்து, அவரை உட்காரச் சொல்லி, பாதத்தில் தைத்த முள்ளை சாமர்த்தியமாக எடுத்து விட்டாராம் பகவான். சிறிது நேரம் கடந்த பிறகு பகவானின் பொற்பாதத்தில் முள் தைத்ததைக் கண்டார் ரங்கநாதய்யர். தன் இதயத்தில் முள் தைத்தது போல் அவருக்கு வலித்தது. உடனே பகவானை அணுகி, "கொஞ்சம் காலைக் காட்டுங்கள். அந்த முள்ளை எடுத்து விடுகிறேன்" என்றாராம். உடனே பகவான் "எந்த முள்ளை எடுக்கப் போறே? புது முள்ளையா? பழைய முள்ளையா?" என்று சிரித்துக் கொண்டே கேட்டாராம்.

ரங்கநாதய்யருக்கு ஒன்றுமே புரியவில்லை. விழித்தார்.

பகவான் கீழே அமர்ந்து, பாதத்தைத் திருப்பிக் காட்டினார். பக்தர் உற்று கவனித்தார். அதில் அப்போது குத்திய முள்ளைத் தவிர இன்னும் எத்தனையோ முட்கள் இருந்தன!

'என்ன? முள் தைத்த வலியைச் சிறிதும் வெளியில் காட்டாமலா இந்நேரம் பகவான் நம்முடன் நடந்து வந்திருக்கிறார்?' என்று உள்ளம் குமுறிய ரங்கநாதய்யரின் கண்களில் ரத்தம் கசிந்தது.

—தொடரும்

14. அவளுடைய ஆசை!

'மாயா மச்சேந்திரா' படப்பிடிப்பு கல்கத்தாவில் நடைபெற்றது. என். எஸ். கே. அவர்களுடன் நானும் மற்றவர்களும் நடிக்கச் சென்றிருந்தோம்.

ஒரு நாள் ஒத்திகை நடந்து கொண்டிருந்தபோது, படத்தில் நடிக்க வந்திருந்த நடிக நடிகையர் அனைவரும் அங்கிருந்தோம்.

என். எஸ். கே. அவர்கள் உரையாடலைப் பற்றித் தன் கருத்தினைச் சொன்னார். வாத்தியாருக்கும் (திரு. லட்சுமணதாஸ்) என்.எஸ்.கே. அவர்களுக்குமிடையில் சர்ச்சை உண்டாயிற்று.

''இப்போ நான்தான் வாத்தியாரு!''

என்.எஸ்.கே. அவர்கள் பேசினால், பிறரால் சிரிக்காமலிருக்க முடியாதே! அவருடைய இயற்கைப்படி நகைச்சுவையோடு வாதம் செய்து கொண்டிருந்தார்.

நாங்கள் அவ்வப்போது சிரித்துக் கொண்டிருந்தோம்.

பதில் சொல்ல முடியவில்லையோ என்னவோ, வாத்தியாருக்குக் கோபம் வந்துவிட்டது!

''ஏண்டா! எங்கிட்டேயாடா எதிர்த்துப் பேசறே?'' என்றார். இதைக் கேட்டதும் துணுக்குற்றேன்.


வாத்தியார் தொடர்ந்தார்:

''ஏண்டா, சுண்டைக்கா நீ!... என் வசனத்தையாடா கேலி பண்றே?...'' என்றதும், என்.எஸ். கே. அவர்கள், ''நான் கொழம்புக்குத்தான் பிரயோசனம்கிறீங்க! இல்லையா? இருந்துட்டுப் போகட்டும்!... நான் கேக்குறது வசனத்தைப் பத்திய்யா! சாப்பாட்டைப் பத்தியில்லே! ஏன் வாத்தியாரய்யா! தமிழ்ப் படம்தானே எடுக்குறோம்! பேசறது சமஸ்கிருதமா இருந்தா எப்படி?'' என்றார்.

''ஏண்டா, தமிழைப் பத்தி எங்கிட்டேயாடா கேக்குறே? முந்தாநாள் பேஞ்ச மழையிலே நேத்து முளைச்ச காளான் நீ! சினிமாவிலே நீ செய்யற முட்டாள்தனத்தைப் பார்த்துச் சிரிக்கிறாங்கன்னதும் நீ பெரியவன்னு நெனப்போ!...இந்தாடா! நீயே...... திருத்தி ஒத்திகையை நடத்து'' என்று புத்தகத்தை அவர் மீது எறிந்து விட்டு எழுந்து போய் விட்டார் வாத்தியாரய்யா.

போகும்போது சும்மாவா போனார்? இங்கே எழுத முடியாத சில வார்த்தைகளையும் சொல்லிக் கொண்டே போனார்.





பத்மகிரி என்னும் திண்டுக்கல் மலை.

அருணாசல மகிமை

27

தென் கங்கை என்று போற்றப் படும் காவிரி நதிக்கும் வைகை யென்னும் மகா நதிக்கும், இடையே உள்ள பிரதேசத்தில், சந்தானவர்த்தினி, கும்பநதி என்ற இரு ஆறுகளின் நடுவில் இருப்பதுதான் 'நெல்லிவனம்.' பல வண்ண மலர்களைக் கொண்ட செடிகளும், பலவகை பழங்களைக் கொண்ட மரங்களும் அடர்ந்து, வனப்பும் வளமும் மிகுந்த அந்தப் பகுதியில் பத்ம தீர்த்தம் என்ற தாமரைக் குளம் ஒன்றுண்டு. அதன் நடுவில் ஆயிரம் இதழ்கள் கொண்ட தாமரை ஒன்று தோன்றி, அதன் காய் வளர்ந்து, நிமிர்ந்து ஒரு மலையாக நின்றது. அதுதான் பத்மகிரி என்னும் திண்டுக்கல் மலை.

மகாதேவனே அம்மாமலையாய் உருக் கொண்டிருக்கிறார். சிவலிங்க வடிவில் எழுந்தருளி யிருக்கும் அந்த சுயம்பு மூர்த்தியை தேவர்களும், யட்ச கின்னரர்களும், மாமுனிவர்களும், சித்தர்களும், யோகிகளும் வந்து தரிசனம் செய்து நற்கதி அடைகின்றனர்.

பிரும்மதேவன் இம்மலையின் சிகரத்தில் அமர்ந்து தவம் செய்திருக்கிறார். அகத்திய முனிவர், தெற்கு நோக்கி வந்த போது, முக்கண் முதல்வனே இங்கு மலையாய் எழுந்தருளியுள்ளதை ஞானக் கண்ணால கண்டு, அதை வலம் வந்து தோத்தரித்திருக்கிறார்.

அசுரர்களால் துன்புறுத்தப்பட்ட தேவர்கள், இம்மலையை அடைக்கலம் அடைந்தனர். அவர்கள் மீது பத்மகிரீசன் இரக்கம் கொண்டு, மலையின் அகண்ட அடிவாரத்தில் ஒரு குகையை அமைத்து அதில் தேவர்கள் வாழ்வதற்கான எல்லா சௌகரியங்களையும் செய்து தந்தார். பின்னர், மலை உச்சியில் மற்றொரு லிங்கமாக வளர்ந்தார். இது இறைவனின் சூட்சும லிங்கமாகும்.

ஒரு சமயம் 'திண்டி' என்ற ஓர் அசுரன், பத்மகிரி காடுகளில் வேட்டையாட வந்தான். பின்னர், நெல்லிவனத்தின் இயற்கையெழிலைக் கண்டு அங்கேயே தங்கிவிட எண்ணம் கொண்டான். அங்கு ஒரு நகரத்தை அமைத்து, அதற்கு 'திண்டீச்சரம்' எனப் பெயர் வழங்கினான். திண்டிமாசுரன் தினமும் பத்ம தீர்த்தத்தில் நீராடி, பத்மகிரீச்வரரை வழிபட்டு வந்தாலும் அசுர தர்மத்திற்கு ஏற்ப,

பரணீதரன்

முனிவர்களையும் அந்தணர்களையும் சிவனடியார்களையும் கொடுமைப் படுத்தி வந்தான். அவனது போதாத காலம், பத்மகிரியின் குகையில் வாசம் செய்து வந்த தேவர்களை அழிக்கும் பொருட்டு அவர்கள் மீது படை யெடுத்தான்.

தேவர்கள் பத்மகிரிசனிடம் முறையிட்டனர். சிகரத்தினின்றும் வெளிப்பட்ட ஈசன், கால பைரவராக உருக்கொண்டு திண்டிமாசுரனை முறியடிக்கப் புறப்பட்டார். இருவருக்கும் கடுமையான போர் மூண்டது. இறுதியில் அசுரன் தோல்வியுற்று, மூச்சுத் திணற மண்ணில் சாய்ந்தான். அவனது இறுதி மூச்சு பிரிவதற்கு முன் பரமேசவரன் பராசக்தியுடன் அவனுக்குக் காட்சி யளித்தார். ''உன் விருப்பம் என்ன, கேள்'' என்று கருணை மூர்த்தி திருவாய் மலர்ந்தருளினார்.

அசுரனாய் வாழ்ந்தாலும் சிவ பக்தனாய் திகழ்ந்த திண்டிமாசுரன் கண்களில் நீர் சுரக்கக் கேட்டான்:

''கருணாகரா, அகில உலக நாயகா, நான் அமைத்த நகரம் என் நினைவாக திண்டீச்சரம் என்றே அழைக்கப்பட வேண்டும். இங்கு வாழ்பவர்கள் சிவனடியார்களாய்த் திகழ வேண்டும். பத்மகிரீசா, தாங்கள் அபிராமாம்பிகை சமேதராய் எக்காலமும் இங்கு வாசம் செய்ய வேண்டும். என்னைப் போன்ற பாவிகளும் தங்களது தரிசனத்தால் உய்ய வேண்டும். என் வரலாற்றைக் கேட்பவர்கள், படிப்பவர்கள், சொல்பவர்கள் யாவரையும் தங்களது அடியார்களாகக் கருதி, கருணை காட்டி, நற்கதி தந்தருள வேண்டும்.''

''அப்படியே ஆகட்டும்'' என்று மகேசுவரன் வரம் தந்தருளினார். அவரது மலரடிகளில் திண்டிமாசுரனின் ஆவி பிரிந்தது.


அன்னை பராசக்தி, பத்ரகாளியாய் போர்க் கோலம் பூண்டு, அனலாட்சன் என்ற அசுரனை ஒழித்துக் கட்டி, பரமேச்வரனின் ஆணைக்குட்பட்டு, அபிராமா சுந்தரி எனும் சௌந்தர்ய தேவதையாகக் காட்சியளித்தாள். பின்னர், தேவர்களின் விருப்பத்திற்கிணங்க, பரமசிவன், பரதேவதையை வேத முறைப்படி திருமணம் புரிந்து கொண்டு, அவளை இடப் பாகத்தில் அணைத்துக் கொண்டு விருடப வாகனத்தில் அமர்ந்து, பத்மகிரி சிகரத்தில் மறைந்து விட்டார். இத் திருக்கல்யாணம் சித்திரா பௌர்ணமியன்று, ஹஸ்த நட்சத்திரம் கூடிய நன்னாளில், கடக லக்கினத்தில் நடந்ததாகப் புராணம் கூறுகிறது.

தல, மூர்த்தி மகிமைகள் போன்று பத்மகிரிக்கு தீர்த்த மகிமையும் உண்டு. இங்கு, வருண தீர்த்தம், கதம்ப தீர்த்தம், சிவகங்கா தீர்த்தம், பாண்டவ தீர்த்தம், திரௌபதி தீர்த்தம் என்ற ஐந்து புண்ணிய தீர்த்தங்கள் உள்ளன.

திண்டிமாசுரனும் அவனுடைய வம்சமும் அழிந்த பின், திண்டிமாபுரி அரசனற்று இருந்தது. தங்களுக்கு அடைக்கலம் தந்து, திண்டிமாசுரனிடமிருந்துகாப்பாற்றி உதவிய பத்மகிரீசனுக்கு தேவர்கள் அபிஷேக ஆராதனைகள் செய்தனர். பின்னர், அவரது திருவுளம் அறிந்து, கேரள தேசம் சென்று, அங்கு நீதி தவறாமல் அரசு புரிந்து வந்த சிவ பக்தனான தர்மபாலனை திண்டீச்சரத்திற்கு அழைத்து வந்தனர். பத்மகிரியின் புராணப் பெருமைகளை அவனுக்கு எடுத்துக் கூறி, அப்பகுதியை அரசாளும் பொறுப்பை அவனிடம் ஒப்படைத்து விட்டு, தேவலோகம் சென்று விட்டனர். இந்த தர்மபால மன்னன்தான் பத்மகிரியின் சிகரத்தில் பத்மகிரீச்வரருக்கும் அபிராமாம்பிகைக்கும் ஓர் அழகிய ஆலயம் எழுப்பினான் என்று தல புராணம் கூறுகிறது.

அந்த ஆலயத்தை, நானூற்று முப்பது வருடங்களுக்கு முன் அப்

திண்டுக்கல் மலைக் கோட்டையின் மதிற்சுவர்





சுந்தரம் ஐயர்

பகுதியை அரசாண்ட விஜயநகர அரசரான அச்சுதராயர் பழுது பார்த்து திருப்பணி செய்து வைத்ததாக அங்குள்ள ஒரு கல்வெட்டு சாசனம் கூறுகிறது.

இந்த அச்சுதராயர்தான் தற்போது ஊர் நடுவில் இருக்கும் அபிராமாம்பிகைக் கோயிலைக் கட்டினார். கோயில் இருக்கும் இடத்தில் முன்பு ஒரு பெரிய மண்டபம் இருந்தது. மலை மீதுள்ள ஆலயத்தில் சித்திரை மாதம் பிரும்மோற்சவம் தொடங்கியதும் உற்சவ மூர்த்திகளை இந்த மண்டபத்தில் எழுந்தருளச் செய்து, உற்சவம் முடிந்த பிறகு மீண்டும் மலைக் கோயிலுக்கு எடுத்துச் செல்லும் பழக்கம் இருந்து வந்தது. அச்சுதராயர் இந்த மண்டபத்தை மாற்றியமைத்து அவ்விடத்தில் ஓர் ஆலயத்தைக்கட்டி, அங்கு காளஹஸ்தீச்வரரையும் ஞானாம்பிகையையும் பிரதிட்டை செய்தார். பின்னர், 1788-ம் ஆண்டில் திப்புசுல்தான் காலத்தில் பத்மகிரீச்வரரும், அபிராமாம்பிகையும் மலை மீதிருந்து இறங்கி வந்து, காளஹஸ்தீச்வரர் ஆலயத்தில் குடி புகுந்தனர்.

திண்டுக்கல் மலைக் கோட்டையை சுமார் முந்நூற்று அறுபது வருடங்களுக்கு முன் முத்துகிருஷ்ணப்ப நாயக்

ஸ்ரீரமணர் படித்த பள்ளி (மதுரை).





அழகம்மாள்

கர் என்னும அரசர் கட்டியதாகத் தெரிகிறது. பின்னர், அவர்கள் வம்சத்தில் தோன்றிய மங்கம்மாள் காலத்தில்தான் மலைக்கு ஏறிச் செல்லுவதற்கு சௌகரியமாக அறுநூறு படிகள் வெட்டப்பட்டன.

1772-ம் ஆணடில், திண்டுக்கல் சீமை மைசூர் சமஸ்தானத்திற்கு உட்பட்டிருந்தது. அப்போது அங்கு கவர்னராக நியமிக்கப்பட்ட மீர்சாகிப் என்பவர், மேனாட்டு எஞ்சினீயர்களின் உதவியால் கோட்டையை பழுது பார்த்து, சில மாறுதல்களும் செய்து, முன்பிருந்த கிழக்குக் கோட்டை வாசலை மூடிவிட்டு இப்போது இருக்கும் வாசலைக் கட்டினார். அந்த வாசலின் மேற் புறத்தில் காணப்படும் இஸ்லாமிய பிரார்த்தனையை பாரசீக மொழியில் பொறித்து வைத்தவர் இவரே.

இந்தக் கோட்டைக்குள் சுரங்கப் பாதைகளும், ரகசிய அறைகளும் இருக்கின்றன. தினமும் மாலை வேளைகளில் பள்ளிச் சிறுவர்கள் அங்கெல்லாம் ஒளிந்து, ஓடிப் பிடித்து விளையாடுகிறார்கள். அதைப் பார்த்த போது, இள வயதில் ஸ்ரீ ரமணரும் இப்படித்தானே விளையாடி யிருப்பார் என்று நினைக்கத் தோன்றியது.

மகான்களின் விளையாட்டெல்லாம் திருவிளையாடல்களே! ஸ்ரீ ரமண மகரிஷி ஓராண்டு பள்ளியில் படிப்பதற்காகவா திண்டுக்கல் வந்திருப்பார்? புராணச் சிறப்புப் பெற்ற பத்மகிரியின் நிழலில் சிறிது காலம் தங்கி, சித்தர்கள் வாழும் அந்தப் பகுதியில் நடமாடவே அவர் அங்கு வந்திருக்க வேண்டும். அந்த ஓராண்டில் எத்தனை மகான்களைத் தரிசித்தாரோ, எத்தனை

[illegible] அரர்களின் [illegible] பெற்றுரோ, யார் [illegible]

[illegible] ஆண்டுகளுக்கு முன் அம்மலையடிவாரத்தில் ஒரு சுவாமிகள் என்ற [illegible] திரிந்து, கொண்டிருந்ததாகக் கூறப்படுகிறது. யோக மகிமைகள் நிறைந்த அந்த ஞான சித்தரை தரிசித்து, அவரது ஆசியைப் பெறத்தான் வெங்கடராமன் திண்டுக்கல் வந்தாரோ? மலையைச் சுற்றி வரும்போது ஒரு நாள் அந்த மகானை இவர் சந்திக்கவில்லையென்றோ, அம்மகானின் திருஷ்டி இவர் மீது படவில்லையென்றோ யாரால் அதை மறுத்துக் கூற முடியுமா?

அது மட்டுமல்ல. பத்மகிரி என்ற திண்டுக்கல் மலைக்கும், முருகப் பெருமானுக்கும் சம்பந்தம் இருக்கிறது.

சந்திரனுக்குப் புத்திர செல்வம் இல்லாக் குறையைப் போக்க கிருத்திகைப் பெண்கள், பத்மகிரீசனைக் குறித்துத் தவம் இருந்தனர். பத்ம தீர்த்தத்தில் நீராடி, மகாலிங்கமான பத்மகிரியை வலம் வந்து, பத்ம தீர்த்தத்தின் வடகரையிலுள்ள அரச மரங்களைப் பிரதட்சிணம் செய்து ஒரு மண்டலம் வழிபட்டனர்.

முக்கண்ணன் கண் திறந்தான். சூரபத்மனை ஒழித்துக் கட்டவும், தேவர்களைக் காக்கவும் ஒரு தெய்வக் குழந்தையைத் தந்தருளுவது என்று முடிவு செய்தான். அக்குழந்தைக்குப் பாலூட்டி வளர்ப்பதற்காக, நெல்லிவனத்தில் தவமியற்றும் கிருத்திகைப் பெண்களை சரவணத்திற்கு வரும்படி பணித்தான். அங்கு இறைவனின் நெற்றிக் கண்களிலிருந்து கிளம்பிய ஆறு பொறிகளும் ஆறு குழந்தைகளாக உருமாறின. கிருத்திகைப் பெண்கள் ஆளுக்கொன்றாக அவற்றை ஆவலுடன் கையில் எடுத்தார்கள். அக்கணமே அவர்கள் மார்பில் அமுது சுரந்தது.

பத்மகிரியில் தவமிருந்ததால் தாய்மை நிலை அடைந்து, ஆறுமுகப் பெருமானுக்குப் பாலூட்டி வளர்க்கும் பேறு பெற்ற கிருத்திகைப் பெண்கள் நடமாடிய இடங்களைக் காணவும், அவர்களுக்கு அருள் புரிந்த ஈசனைத் தரிசிக்கவும், ஸ்ரீ முருகனின் அம்சமாகக் கருதப்படும் ஸ்ரீரமணர் திண்டுக்கல் வந்தார் என்று கூறுவதும் தவறாகாது.



ஸ்ரீ அபிராமாம்பிகை ஆலயம் (உட்தோற்றம்)

சிறுவர் வேங்கடராமன் திண்டுக்கல்லில் படித்துக் கொண்டிருந்த போது திருச்சுழியில் தந்தை சுந்தரம் ஐயர் உடல்நலம் குன்றி, உயிருக்கு மன்றாடிக் கொண்டிருந்தார். உயிரோடு தந்தையைக் காண்பதற்காக பிள்ளைகள் திருச்சுழிக்கு வரவழைக்கப் பட்டார்கள். தம செல்வங்களைக் கண்டு ஆசி வழங்கிய பிறகே அவர் இறைவனடி சேர்ந்தார்.

அன்புத் தந்தை பேசாமல், கண்களை மூடி அசையாமல் படுத்திருப்பதையும், அவரைச் சுற்றி உற்றார் உறவினர் அமர்ந்து அழுது புலம்புவதையும் கண்டார் சிறுவர் வேங்கடராமன். மரணத்தின் முழுப் பொருள் அவருக்கு விளங்கவில்லையாயினும், அங்கு நிலவிய துயரமிக்க சூழ்நிலை அவர் வயிற்றைக் கலக்கியது. எல்லோரும் அழுவதைக் கண்டு அவருக்கும் அழுகை வந்தது. அதிலும் 'அம்மா, வயிற்றிலும், மார்பிலும் அடித்துக் கொண்டு அலறியதை அவரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அம்மாகூட சின்னக் குழந்தையைப் போல் கேவிக் கேவி அழுவாள் என்று அவரால், நம்பவே முடியவில்லை. 'அம்மா தினமும் கோயிலுக்குப் போவாளே! பூமிநாதரும் துணைமாலை அம்மனும் ஏன் அவளுக்கு இந்த துக்கத்தைக் கொடுத்தார்கள்' என்பதும் அவருக்குப் புரியவில்லை.

அந்த வீட்டிலிருக்கவே அவருக்கு பயமாக இருந்தது. பக்கத்து வீட்டில்

அருணாசலா, அருணாசலா, அருணாசலா!

பதினைந்து நாட்கள் லீவு எடுத்துக் கொண்டு மந்த்ராலயம், திருப்பதி, திருவண்ணாமலை, திருத்தணி, இரத்தினகிரி, பூண்டி ஆகிய இடங்களைத் தரிசித்து விட்டு வந்தேன். பூண்டி சாமியார் எனக்கு பிரசாதம் வழங்கினார். நான் அவரிடம் ஒன்றுமே கேட்கவில்லை; அவரும் பேசவில்லை. அவருக்குப் பலவற்றை வாங்கித் தந்தேன். சிலவற்றை வாங்கிச் சாப்பிட்டார். சிலவற்றைக் கையில் வாங்கிக் கீழே வைத்துவிட்டார்.

இரத்தினகிரியில், 'கற்பூரத்துக்குக் கூட கதியில்லாமலிருக்கும் முருகன்' என்று தன்னைப் பழித்தவரையே தொண்டனாக அமர்த்திக் கொண்டு, பழனியைப் போல் ஒரு கோயிலை உருவாக்கி வருவதைக் கண்டு வியந்தேன்.

அருணாசல மகிமையைப் படித்து விட்டு, அருணாசலத்தை வலம் வரவேண்டும் என்று சென்றேன். சுவாமி தரிசனம் செய்து விட்டு, ரமணாச்ரமம் வரை சென்ற நான், தனிமையில் எட்டு மைல் எப்படிச் சுற்றுவது என்று நினைத்து சற்றுத் தயங்கினேன். அப்போது, என்னைப் போலவே, தங்கள் கட்டுரையைப் படித்து விட்டு மலையைச் சுற்றுவதற்காக வந்திருந்த அன்பர் ஒருவர், என் நிலையிலேயே இருப்பதை அறிந்தேன். பின்னர், இருவரும் சேர்ந்தே மலையை வலம் வந்தோம். அந்தப் புண்ணியம் உங்களைத்தான் சேரும்.

நான் ஒரு சாதாரண ஓட்டல் தொழிலாளி. பதினைந்து வருடங்களாகப் பல ஊர்களில் வேலை செய்து, எனக்குக் கிடைக்கும் சொற்ப ஊதியத்தில் முந்நூறு ரூபாய் வரை சேமித்து, இத்தனை இடங்களுக்கும் சென்று தரிசித்து வந்தேன். என் உள்ளத்தில் தெய்வ பக்தியை ஏற்படுத்தியதற்காக, 'அருணாசல மகிமை' புத்தகமாக வந்ததும், அதை கையில் எடுத்துக் கொண்டு மறுபடியும் எல்லா இடங்களுக்கும் போவதாக இருக்கிறேன். வாழ்க தங்கள் பக்திப் பணி.

என். ராம ஐயர்,
சப்ளையர், மாடர்ன் லாட்ஜ்,
ஹால்பர்ன், உதகமண்டலம்.

போய் சற்று நேரம் உட்கார்ந்திருந்தார். அப்போது அந்த சிறிய உள்ளத்தில் பல கேள்விகள் பிறந்தன.

'எல்லாரும் அப்படியே இருந்தால் என்ன? ஏன் 'செத்து'ப் போக வேண்டும்? செத்துப் போவதென்றால் என்ன? இதுக்குப் பிறகு அப்பா எங்கே போவார்? எது இருந்ததால் இத்தனை நாள் 'அப்பா' இருந்தார்? எது போனதால் அப்பாவும் போய் விட்டார்? 'அது' எங்கேயிருந்து வந்தது? இப்போது எங்கே போயிற்று? அதை எடுத்துக் கொண்டு போனது யார்?'


ஆனால், வேங்கடராமனின் பிரச்னைக்கு விடை கிடைக்கவேயில்லை. தந்தையின் மரணம் அவருள் ஒரு பயத்தைத் தோற்றுவித்திருந்தது. அத்துடன், மரணத்தைப் பற்றிய உண்மையை அறிந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணமும் வேரூன்றியிருந்தது.

சுந்தரம் ஐயர் மறைந்த பிறகு, அவருடைய இளைய சகோதரர்களான நெல்லையப்பையரும், சுப்பய்யரும் அழகம்மாளின் குடும்பத்திற்கு பெரும் ஆதரவாக இருந்தனர். நெல்லையப்பையர் மானாமதுரையில் இருந்தார்; சுப்பய்யர் மதுரையில் இருந்தார். நாகசாமியும் வேங்கடராமனும் தங்கள் படிப்பைத் தொடருவதற்காக மதுரைக்கு வந்தார்கள். சிறிய தந்தை சுப்பய்யரின் வீட்டில் தங்கி இருவரும் பள்ளியில் படித்து வந்தார்கள்.

வேங்கடராமன் ஸ்காட் மிடில் ஸ்கூலில் ஓராண்டு படித்து விட்டு, அமெரிக்கன் மிஷன் உயர்நிலைப் பள்ளியில் நான்காவது பாரம் சேர்ந்தார்.

அவர் படித்துப் பட்டம் பெற்று, உத்தியோகம் பார்த்து, குடும்பத்தைக் காப்பாற்றுவார் என்றுதான் எல்லோரும் எதிர்பார்த்தார்கள். ஆனால், பேரருள் வேறொரு திட்டம் வகுத்திருந்தது. படிப்பைப் பாதியில் நிறுத்தி விட்டு, வேங்கடராமன் மதுரையிலிருந்து திருவண்ணாமலைக்கு ஓடிப்போன கதை நெஞ்சையள்ளும் நிகழ்ச்சியன்றோ!

—தொடரும்.



ஸ்ரீ மீனாட்சி ஆலயத்தின் மேற்கு கோபுரம்

அருணாசல மகிமை

28

மதுரைக்கு வந்த பிறகு வேங்கடராமன் தன்னிஷ்டம் போல் சுற்றித் திரிய ஆரம்பித்தார். 'பெரியவனாகி விட்டோம்' என்ற எண்ணம் அவருக்கு. பையன்களைச் சேர்த்துக் கொண்டு விளையாடுவதும் கொட்டம் அடிப்பதும் அதிகமாகி விட்டது.

ஏரி குளங்களைக் கண்டால் அவருக்கு ஒரே குஷி. பந்தயம் போட்டுக் கொண்டு நீச்சல் அடிப்பார்: சுழித்து ஓடும் வைகையின் வெள்ளத்தில் இக்கரைக்கு அக்கரை நீந்திக் கொண்டே இருப்பார். சம்சார சாகரத்தைக் கடக்கப் பழகினாரோ?

கோடை காலத்தில் வைகை மணலில் குதித்து கும்மாளம் போடுவார். 'சடு குடு' விளையாடுவார். குஸ்தி பயில்வார். இதெல்லாம் அலுத்த பிறகு அரட்டை யடிப்பார். நேரம் போவதே தெரியாது. சில நாட்களில் இந்த விளையாட்டு நடு நிசியையும் கடந்து விடும்.

நேரம் கழித்து வந்தால் சிறிய தந்தை கோபித்துக் கொள்வார். அதற்காக ஒரு தந்திரம் செய்தார். பள்ளிச் சிறுவர்களுக்கே கைவந்த கலை அது. வீட்டில் படுக்கையை விரித்து, தலையணையைக் குறுக்கும் நெடுக்குமாக வைத்து, போர்வையால் போர்த்தி விடுவார். பார்ப்பவர்களுக்கு பையன் படுத்துத் தூங்கிக் கொண்டிருப்பது போல் தோன்றும்! நள்ளிரவிலோ, விடியற்காலையிலோ பின் புறம் வழியாக சுவரேறிக் குதித்து வந்து, 'இந்தப் பூனையும் பாலைக் குடிக்குமா?' என்று படுக்கையில் சாதுவாகப் படுத்து விடுவார்!

பரணீதரன்

படுத்தால் ஒரே தூக்கம்தான். கும்பகர்ணன் கெட்டான்! காலையில் எழுப்ப பத்து பேர் வேண்டும். 'அதென்ன தூக்கமோ? சரியான சோம்பேறி' என்று வீட்டிலுள்ளவர்கள் அலுத்துக் கொள்வார்கள். சாதாரண தூக்கமா அது? ஆழ்ந்த சமாதி நிலை என்று அவர்கள் கண்டார்களா?

பாதி தூங்கியும் பாதி தூங்காமல் இருக்கும் நிலையும் உண்டு. அது போன்ற சமயங்களில் அவர் நண்பர்களின் 'விளையாட்டுப் பொருள்' ஆகி விடுவார். அவர்கள் வேங்கடராமனை எழுப்பிக் கொண்டு போய் படாத பாடு படுத்துவார்கள். சீண்டுவார்கள். கன்னத்தில் அடிப்பார்கள். தலையில் குட்டுவார்கள். பல வகையிலும் துன்புறுத்துவார்கள். பாவம், வேங்கடராமன் பேசாமல் இருப்பார். அவருக்கு உடல் உணர்வே இருக்காது. காலையில் எழுந்த பிறகு முதல் நாள் நடந்ததையெல்லாம் நண்பர்கள் சொல்லுவார்கள். அவருக்கு ஒன்றுமே தெரியாது!

விழித்துக் கொண்டிருக்கும் போது ஒருவரும் வேங்கடராமனிடம் வாலை ஆட்ட மாட்டார்கள். விஷமம் செய்தாலோ, சீண்டினாலோ சரியாக வாங்கிக் கட்டிக் கொள்வார்கள். காலையில் வாங்கும் குத்துக்களுக்கும் உதைகளுக்கும் 'உறங்கும்' போது அவர்கள் நண்பனைப் பழி வாங்கினார்கள்.

வேங்கடராமன் நல்ல பலசாலி. 'உடம்பு' என்று படுத்ததே கிடையாது. பள்ளிப் படிப்பை விட விளையாட்டில்தான் ஆசை அதிகமாயிருந்தது. கால்கள் நீளமாகவும் வலுவுள்ளனவாகவும் இருந்ததால் கால்பந்தாட்டத்தில் வல்லவராக இருந்தார்.

அப்துல் வகாப் என்ற மூஸ்லிம் பையன் அவருடைய இணை பிரியாத நண்பன். தன் பள்ளித் தோழனை 'சப்ஜான்' என்று செல்லப் பெயரிட்டு அழைப்பார் வேங்கடராமன். அவனுக்கும் ஃபுட்பால் பழக்கி வைத்தார். பள்ளியில் நடைபெற்ற கால் பந்தாட்டப் போட்டிகளில் வேங்கடராமனின் குழுவில் அப்துல் வகாப் நிச்சயம் இடம் பெறுவான்.


ஒரு நாள் விளையாட்டின் மும்முரத்தில் வேகமாகப் பந்தை உதைக்கும் போது வேங்கடராமனுக்கு காலில் அடிபட்டு விட்டது. சற்றைக்கெல்லாம் கால் 'குபு குபு' என்று வீங்கி விட்டது. வலி தாங்க முடியவில்லை. 'சப்ஜான்' நண்பனைத் தூக்கிக் கொண்டு அருகிலுள்ள மருத்துவ மனைக்கு ஓடினான்.

விடுமுறை நாட்களில் வேங்கடராமன் அருகிலுள்ள ஆலயங்களுக்குச் செல்வார். மலையடிவாரங்களுக்குப் போவார். சனி, ஞாயிறுகளில் திருப்பரங்குன்றம் முருகனை தரிசிக்கப் போகும் போது சப்ஜானையும் அழைத்துக் கொண்டு போவார். இருவரும் சேர்ந்தே முருகனை தரிசிப்பார்கள்.

'எல்லா தெய்வங்களும், மதங்களும் ஒன்றுதான். மனிதன்தான் இந்த வேற்றுமைகளை ஏற்படுத்தியிருக்கிறான்' என்று பதினைந்தாவது வயதிலேயே வேங்கடராமன் வேதாந்தம் பேசுவார். சப்ஜானும் அதை ஒப்புக் கொள்வான். அவனுக்கு முருகன் கோயிலுக்குப் போவதும், மசூதிக்குப் போவதும் ஒன்றாகத்தான் தோன்றியது.

இந்தப் பரந்த மனப்பான்மையில் வளர்ந்த அந்த முஸ்லிம் அன்பர், வயதாகி உத்தியோகம் பார்த்த போது, காஞ்சீபுரம் கருட சேவை திருவிழாவில் பல வருடங்கள் ஸ்ரீ வரதராஜரைத் தோளில் சுமக்கும் பாக்கியம் பெற்றார்.

சொக்கப்ப நாய்க்கர் தெரு
(தென்கோபுரத்தின் மீதிருந்து எடுத்த படம்





ஸ்ரீ ரமணமந்திரம்

விடு முறை நாட்களில் திருச்சுழிக் குப போகும் போதெல்லாம், முஸ்லிம் தோழனையும் உடன் அழைத்துப் போவார் வேங்கடராமன். வேறு மதத்தைச் சேர்ந்தவனுயிற்றே என்று அழகம்மாள் அவனை அலட்சியப் படுத்த மாட்டாள். 'கண்டவனை யெல்லாம் அழைத்து வந்து இந்தப் பிள்ளை கழுத்தையறுக்கிறனே' என்று முணு முணுக்க மாட்டாள்; முகத் தைச் சுளிக்க மாட்டாள். இருவருக் கும் சேர்ந்தே சாப்பாடு போடுவாள். ஊருக்குப் போகும் போது கையில் தின்பண்டங்கள் கட்டித் தருவாள்.

அப்துல் வகாப் பின்னர் போலீஸ் இலாகாவில் சேர்ந்து உயர் பதவிக்கு வந்தார். திருவண்ணுமலைக்குச் சென்று பள்ளித் தோழன் வேங்கட ராமனை குரு ரமணராகத் தரிசிப் பார். அப்போதெல்லாம் பகவான், அருமை சப்ஜானை தம் பக்கத் தில் உட்கார வைத்துக் கொள்வார். இருவரும் சேர்ந்தே சாப்பிடுவார் கள். திருச்சுழிப் பழக்கம் திருவண்ணு மலையிலும் தொடர்ந்தது.

வேங்கடராமன் சுமாரான மாண வர்தான். ஆங்கிலத்தில் 'அப்படி இப்படி'தான். மற்ற பாடங்களிலும் பரவாயில்லை என்றுதான் சொல்ல வேண்டும். ஆனுல், தமிழில் அவ ருக்கு ஆர்வம் அதிகமிருந்தது. நிறைய மார்க்குகள் வாங்குவார்: நன்னூல் சூத்திரம் அவருக்குத் தலைகீழ்ப் பாடம்.

வேங்கடராமனுக்கு பதினைந்து வயது நிரம்பி விட்டது. ஐந்தாவது பாரத்தில் படித்துக் கொண்டிருந் தார்; அவருள்ளே நீறு பூத்த நெருப் பாக கனன்று கொண்டிருந்த அருணு சல பக்தி அப்போதுதான் கொழுந்து விட்டு எரிய ஆரம்பித்தது.

அருணுசல நாமம் அவரையும அறியாமல் அவருள்ளத்தில் பதிந்து விட்டிருந்தது. அதன் ஒலியை மட்டும் லேசாக அவர் கேட்டுக் கொண்டிருந் தாரே யொழிய, அது என்னவென்றே அவருக்குத் தெரியாது. 'அது தெய்வமா, மலையா, ஊரா, எங்கிருக் கிறது?' என்பதெல்லாம் அவருக்குத் தெரியவே தெரியாது. இந்த உலகத் திற்கும் அதற்கும் சம்பந்தமிருப்ப தாகக் கூட அவர் நினைத்துப் பார்த் தது கிடையாது.

ஒரு நாள் உறவினர் ஒருவர் மதுரை க்கு வந்தார். சிறுவர்கள் ஊரிலிருந்து வருபவர்களை சாதாரணமாகக் கேட் பது போல் ''நீங்க எங்கே யிருந்து வரேள், மாமா?'' என்று கேட்டார் சிறுவர் வேங்கடராமன்.

''அருணுசலத்திலிருந்து வரேன்'' என்று சாதாரணமாக பதில் கூறினுர் வந்தவர்.

'அருணுசலம்!'' ஆகா! அச்சொல்லைக் கேட்டதும் மயிர்க் கூச்செறிந்தது வேங்கடராமனுக்கு. பல ஆண்டு களாக இதயத்தின் அடித்தளத்தில் ஒலித்துக் கொண்டிருந்த திருநாமம் எதிரொலியாக இப்போது அவர் காது களில் பாய்ந்தது. அந்த ஒலி எழுப் பிய சின்னஞ் சிறு அலைகள், மெள்ள மெள்ள வளர்ந்து, மங்கல மணியோ சையாக முழங்கி, அகிலத்தையே நாத வெள்ளத்தில் மூழ்கடித்தன. எங்கும் 'அருணுசலா அருணுசலா' என்ற நாத பிரும்மமே நிறைந்திருந்தது.

''அருணுசலமா? அது எங்கிருக் கிறது மாமா?'' என்று கேட்டார் வேங்கடராமன், ஆவலும் ஆர்வமும் ஆச்சரியமும் கலந்த குரலில்.

வந்தவருக்கும் ஆச்சரியம் தாங்க வில்லை. ''என்ன இப்படிக் கேட்கறே? உனக்கு திருவண்ணுமலை தெரியாதா? அதுதான் அருணுசலம்'' என்று கூறி னுர் அவர்.

வேங்கடராமன் ஒரு கணம் திகைத்துப் போய் நின்றார். 'உள்ளத்தில் ஒலித்துக் கொண்டிருந்த திருநாமம், ஓர் ஊரின் பெயரா? அதுவும் இத்தனை அருகில் இருக்கிறதா? அங்கு போக வேண்டுமே! நம்மால் முடியுமா?' —சிதம்பரத்தை தரிசிக்க வேண்டும் என்று ஏங்கிய நந்தனாராகவே மாறினார் வேங்கடராமன்.

ஒலியாக இருந்து அருள் வழங்கிய அருணாசலம், ஒளியாக நின்று வழி காட்டினார். வேங்கடராமனின் ஆன்மிக வாழ்க்கை மலரத் தொடங்கி விட்டது. வீட்டிலிருந்த பெரிய புராணப் புத்தகம் அவரது கவனத்தைக் கவர்ந்தது. இத்தனை நாள் அது அந்த அலமாரியில்தானே இருந்தது! அதை அவர் திரும்பிக் கூடப் பார்த்ததில்லையே! எல்லாவற்றுக்கும் வேளை வர வேண்டாமா?

அவருக்குப் பாடப் புத்தகங்களில் கவனம் குறைய ஆரம்பித்தது. பெரிய புராணத்தை ஆர்வமுடன் படித்தார். நாயன்மார்களின் பக்தி யுணர்ச்சியும், தியாக உணர்வும், ஆண்டவனிடம் அவர்கள் தங்களை அடிமையாக்கிக் கொண்ட வரலாறும் வேங்கடராமனின் இள மனத்தைக் கவர்ந்தன. அந்த மெய்யடியார்கள் மீது அவருக்கு மரியாதை மிகுந்தது. பக்தியால் இவர் உள்ளம் மெழுகாக உருகியது. 'இவர்களைப் போல் என்னால் ஆக முடியாதா?' என்ற எண்ணம், ஏக்கமாக வளர்ந்தது.

வேங்கடராமன் ஆறும் பாரம் வந்து விட்டார். அந்த வருடம் மெட்ரிகுலேஷன் பரீட்சை எழுத வேண்டும். 'எப்படியாவது பாஸ் செய்து விட வேண்டும்' என்று அண்ணன் நாகசாமியும், சிறிய தந்தை சுப்பய்யரும் அடிக்கடி அவரிடம் சொல்லிக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்காக புத்தகத்தைப் பிரித்துக் கொண்டு உட்கார்ந்திருப்பார் அவர். ஆனால், எண்ணமெல்லாம் வேறு எங்கோ அலைந்தது. அதற்கு அவரா பொறுப்பு? அவருள் இயங்கிய சக்தியல்லவா அவரை அப்படி அலைக்கழித்தது! உள்ளத்தில் பக்தித் கனலைத் தூண்டிய அருணாசல குருநாதர் ஞானோபதேசம் செய்யவும் நினைத்து விட்டார்.


ஒரு நாள் மாடியறையில் தனிமையில் அமர்ந்திருந்தார் வேங்கடராமன். அவர் உடம்புக்கு ஒன்றுமில்லை. சாதாரணமாகத்தான் இருந்தார். ஏனோ, திடீரென்று அவரை மரண பயம் பற்றிக் கொண்டது. 'சிறிது நேரத்தில் சாகப் போகிறோம்' என்று அவருக்குத் தோன்றியது. ஏன் திடீரென்று அப்படியோர் எண்ணம் தோன்றியது என்றே அவருக்குப் புரியவில்லை.

மார்பு 'படபட'வென்று அடித்துக் கொண்டது. 'கீழே இறங்கிப் போய் பெரியவர்களிடம் சொல்லலாமா? டாக்டர் யாரிடமாவது உடம்பைக் காட்டலாமா?' என்று ஒரு கணம் நினைத்தார். அடுத்த கணம், 'வேண்டாம். சாவு என்றால் என்னவென்று தான் பார்த்து விடுவோமே' என்று மனத்தை ஒருவாறு திடப்படுத்திக் கொண்டார்.

தந்தை இறந்தபோது அந்தப் பிஞ்சு உள்ளம் மரணத்தைப் பற்றி தீவிர

ஸ்ரீ ரமணமந்திரத்திலுள்ள பகவானின் திருவுருவப் படம்.





'நான் யார்?' பிறந்த அறை

'நான்' மறைந்து விடுவேனு? இந்த உடல் பிணமான பின்னும், 'நான்' இருப்பதை உணர்கிறேன். எனவே, 'நான்' இறக்கவில்லை. அது பிறப்பதும் இல்லை, அழிவதுமில்லை.'அது' தான் உண்மையான 'நான்'. இந்த உடல் 'நான்' இல்லை. உடலுக்கும் வேறுபட்ட ஆவி தான் 'நான்.' உடலைத் தீண்டும் மரணம், என் ஆவியைத் தொட முடியாது.

எங்கும் நிறைந்துள்ள பரமாத்ம தத்துவமே, தன்னுள் அழிவற்ற ஆத்மாவாக இயங்கிக்கொண்டிருக்கிறது" என்பதை உணர்ந்த மறுகணமே, வேங்கடராமனை விட்டு மரண பயம் நீங்கி விட்டது. 'நான் யார்' என்று அறிந்து கொண்ட பிறகு துக்கமேது? மரணம் ஏது? இதை அவர் படிப்பால் உணரவில்லை. புத்தியால் அறிந்து கொள்ளவில்லை. அருணாசலத்தின் அருளால் அவருக்கு அந்த ஞானம் வந்தது.

மாக சிந்தித்துப் பார்த்தது. நான்கு வருடங்கள் ஆகியும் அதற்கு விடை காண முடியவில்லை. 'இப்போது நமக்கு அந்த மரணம் வரப்போகிறது. அது என்னவென்று புரிந்து கொண்டு விடுவோம்!'

தன் மரணக் காட்சியைக் கண் முன்னல் கண்டார் வேங்கடராமன். அதை உள்ளத்தால் உணர்ந்து விடுவது என்றும் முடிவு செய்தார். அப்படியே தரையில் படுத்துக் கொண்டார். கண்களை இறுக மூடிக் கொண்டார். மூச்சை அடக்கிக் கொண்டார். வாயை மூடிக் கொண்டார். விறைத்துப் போன மாதிரி, கைகால்களை நீட்டிக் கொண்டார். பிணம் மாதிரியே அசையாமல் கிடந்தார்.


'நான் இப்போது இறந்து விட்டேன். எது சாகிறது? இந்த உடல் தானே! ஆமாம்! உடல் செத்து விட்டது. இதைக் கொண்டு போய் கொளுத்தி சாம்பலாக்கி விடுவார்கள். ஆனல், இந்த உடல் மறைந்ததும்

மதுரை சொக்கப்ப நாய்க்கர் தெருவிலுள்ள 11-ம் நம்பர் வீட்டின் மாடியில்தான் வேங்கடராமன் 'நான் யார்?' என்பதை உணர்ந்து, மரணத்தை வென்று, ரமணராக மாறிய நிகழ்ச்சி நடைபெற்றது. அந்த இல்லம் இப்போது 'ரமண மந்திர'மாக மாறியிருக்கிறது.

மாடியிலுள்ள அந்த அறை எட்டடிக்கு எட்டடிதான் இருக்கும். அறைக்கு அடுத்தபடி மொட்டை மாடிதான். அங்கிருந்து பார்த்தால் ஸ்ரீ மீனுட்சி ஆலயத்தின் மேற்கு கோபுரம் தரிசனம் ஆகிறது.

ஸ்ரீ ரமணருக்கு மரண பயம் நீங்கிய அந்த அறையில் சற்று நேரம் கண் மூடி அமர்ந்திருந்தேன். மார்க்கண்டேயர் காலனை வென்ற கதை என் நினைவில் நிழற்படமாக ஓடியது. சட்டென்று மார்க்கண்டேயர் மறைந்தார். பதினுறு வயது வேங்கடராமன் அங்கு கை, கால்களை நீட்டிப் படுத்திருப்பது போலவும், காலன் அவர் மலரடிகளில் விழுந்து வணங்குவது போலவும் எனக்கு பிரமை தட்டியது.

—தொடரும்



மார்டின்



தமிழக சட்ட மன்றத்தில், சாத்தான்குளம் உறுப்பினரான டி. மார்டின் பேச எழுந்தால், ஒரு பரபரப்பு ஏற்படும். அமைச்சர்களும் அவர் பேச்சை உற்று கவனிப்பது வழக்கம். அரசு மீது குற்றம் சாட்டிப் பேசுவதில் வல்லவரான இந்த சாத்தான்குளம் உறுப்பினர், "ஆளும் கட்சி செய்யும் தவறுகளை துணிவாக எடுத்துரைக்க வேண்டும் என்பது என் தொகுதி மக்களின் ஆணை" என்கிறார். சென்னை உயர்நீதி மன்றத்தில் வக்கீலாக இருக்கும் இவர், தனது தொகுதியில் உள்ள எல்லா கிராமங்களின் பிரச்னைகளையும் சட்டசபையில் அலசியிருக்கிறார். வறண்ட மணற்பாங்கான இவருடைய தொகுதியில் விவசாயம் செழிக்க பட்டு செட்டுகளை ஏராளமாக அமைக்க வழி செய்திருக்கிறார். டாக்டர் ராம்சுபாக்சிங் மத்திய தபால் தந்தி அமைச்சராக இருந்த போது, அவருடன் நேரிடையாகத் தொடர்பு கொண்டு தொகுதியில் பல இடங்களில் தபால் நிலையங்களை அமைக்கச் செய்தார். அதைப் போல டெல்லியை வலியுறுத்தி ஸ்டேட் பாங்க் கிளைகளை பல இடங்களில் திறக்கச் செய்திருக்கிறார்.

தனது தொகுதிக்கு வளம் கூட்ட புத்தன் தருவை அடிக்கால் திட்டம், தாங்கைக்குளம் வெட்டும் திட்டம், கவிசேகரபுரம் குளத் திட்டம், சிருடையான் குளம் அகலப்படுத்தும் திட்டம் ஆகியவற்றை நிறைவேற்ற மாநில அரசுடன் கடுமையாகப் போராடி வருகிறார். ஓய்வு பெற்ற சர்க்கார் ஊழியர்களுக்கு, மணியார்டர் மூலம் உதவித் தொகையை அனுப்ப வேண்டும் என்று சட்ட சபையில் வாதாடியவர் இவர். இப்போது தமிழக அரசு இதை ஏற்றுக் கொண்டு விட்டது.



இரத்தின சபாபதி


கோவில்பட்டியிலிருந்து விளாத்திகுளத்தைப் பிரித்து தனிவட்டமாக அமைக்கச் செய்தவர், அதன் சட்டமன்ற உறுப்பினரான மு. இரத்தின சபாபதி. நீண்ட காலமாக தி.மு.க.வில் இருந்து வரும் இவர், குளத்தூர் ஊராட்சியின் தலைவராகவும் இருக்கிறார். வறட்சிப் பகுதியான தனது தொகுதியை செழிக்கச் செய்ய புதிய குளங்களை அமைக்க முயற்சிக்கிறார் இவர். ஆற்றங்கரை என்ற கிராமத்திற்கு அருகில் 23 லட்ச ரூபாய் செலவில் வைப்பாறு நதியின் குறுக்கே அணைகட்டி அதிலிருந்து பதினொன்கு குளங்களுக்குத் தண்ணீர் கிடைக்கும் திட்டம் ஒன்று இவர் முயற்சியால் செயல்பட இருக்கிறது.



துரைராஜ்

பதினெட்டு ஆண்டுகள் ஆசிரியராக பணியாற்றியவர், சங்கரன்கோயில் தொகுதியின் தி. மு. கழக உறுப்பினராக உள்ள பி. துரைராஜ். தன்னுடைய தொகுதியின் பிற்பட்ட நிலையில் உள்ள மக்கள் வாழும் கிராமங்களில், முப்பதுக்கு மேற்பட்ட குடி தண்ணீர் கிணறுகளை வெட்டித்தரச் செய்திருக்கிறார். கீரியாற்றுத் திட்டத்திற்காக ஒவ்வொரு சட்ட மன்றக் கூட்டத்திலும் விடாப்பிடியாகப் பேசி வருகிறார் இவர்.

(இன்னும் வரும்)



அழகர் கோயில்

அருணாசல மகிமை

29

மரணத்தின் மடியில், 'நான் யார்?' என்ற தத்துவ விளக்கம் பெற்ற ஞானக் குழந்தையான வேங்கடராமன் அந்தக் கணத்திலிருந்து முற்றிலும் மாறி விட்டார். சத்திய நிலையை உணர்ந்து கொண்டு விட்ட பிறகு, மனமோ புத்தியோ உலக விவகாரங்களில் நாட்டம் கொள்ளுமா?

பாடப் புத்தகங்களைக் கண்டாலே அவருக்கு வேம்பாகக் கசந்தது. முன்பு போல் விளையாட்டிலும் விருப்பம் இல்லை. வகுப்புப் பிள்ளைகள் வந்து கூப்பிட்டால் ஏதோ சாக்கு போக்குச் சொல்லி அனுப்பி விடுவார்.

முன்பு, மீனாட்சி ஆலயத்திலுள்ள காளியின் மீது சாத்தப்பட்ட வெண்ணெயை வழித்து எடுத்து, கடையில் வாங்கிய இட்லியில் தோய்த்து, நண்பர்களோடு சேர்ந்து சாப்பிட்டிருக்கிறார்; கூடலழகர் ஆலயத்திற்குச் சென்று, மேல் மாடங்களில் ஏறி ஓடிப் பிடித்து விளையாடியிருக்கிறார்; அழகர் கோயிலுக்குச் சென்று சர்க்கரைப் பொங்கல் பிரசாதத்தை ரசித்திருக்கிறார். அவை யெல்லாம் இப்போது பழங் கதைகளாகி விட்டன.

குளத்தைக் கண்டால் குதித்து, நீச்சலடித்து அட்டகாசம் செய்வாரே! வைகையில் சுழித்து ஓடும் வெள்ளத்தில் எதிர் நீச்சல் போடுவாரே! எல்லாமே ஓய்ந்து விட்டன.

சாதாரணமாக பையன்கள் கேலி செய்தால் அவருக்குக் கடும் கோபம் வந்து விடும். 'ஜாக்கிரதை' என்று மிரட்டுவார். இப்போதெல்லாம் அவர்கள் என்ன செய்தாலும் தணிந்தே போனார். எத்தனை வம்புக்கிழுத்தாலும் அவர்களோடு சண்டைக்குப் போவதில்லை. 'வேங்கடராமனா இப்படி மாறி விட்டான்?' என்று நண்பர்கள் ஆச்சரியப்பட்டார்கள்.

வீட்டில் தனக்கு அதிகமாக வேலை கொடுத்தால் முன்பெல்லாம் முணுமுணுப்பார்; சிணுங்குவார். இப்போது சித்தி எத்தனை வேலை வாங்கினாலும் வாயை மூடிக் கொண்டிருந்தார். எதிர் வீட்டிலிருந்து பெரிய அண்டாவில் தண்ணீரைச் சுமந்து கொண்டு வந்து கொட்டச் சொல்வாள் சித்தி! அவருக்குத் தோள் வலிக்கும்; கைகள் கடுகடுக்கும். இருப்பினும் பொறுமையுடன் இருந்தார்.

பரணீதரன்

வேங்கடராமனுக்கு எப்போதும் சமையல் ருசியாக இருக்க வேண்டும். "மூளைச்சு இரண்டு இலை விடலே. உனக்கு நாக்கு ரொம்ப நீளம்" என்று சித்தி கூட சொல்லிக் காட்டுவாள். இப்போதோ, எதைப் போட்டாலும் பேசாமல் சாப்பிட்டார். பண்டத்தில் உப்பு இருந்தாலும் இல்லாவிட்டாலும், அது நன்றாக இருந்தாலும் ஊசிப் போயிருந்தாலும் விழுங்கி விடுவார்.

நண்பர்களுடன் எந்நேரமும் கொட்டம் அடித்துக் கொண்டிருந்தவர் தனிமையை நாடத் தொடங்கினர். வெளியுலகிலிருந்து சிந்தையை இழுத்து, நேரம் கிடைத்த போதெல்லாம் கண்களை மூடி தன்னுள்ளே பிரகாசித்த அருணாசலத்தைப் பற்றிய தியானத்தில் ஆழ்ந்து விடுவார். பிரித்த புத்தகம் தன் மடியில் கிடக்க, ஆத்மாவான ஆதார சுருதியோடு இணைந்து, இரண்டறக் கலந்து, பால யோகியாகக் காட்சி யளிப்பார்.

சிறிய தந்தை சுப்பய்யருக்குக் கோபம் பற்றிக் கொண்டு வரும். "இப்படியிருந்தால் நீ எங்கே உருப்படப் போறே? பரீட்சையில் சுழி தான்" என்று திட்டி விட்டுப் போய் விடுவார்.

நாகசாமியும் தம்பியின் பேரின்ப நிலையை புரிந்து கொள்ளவில்லை. வேங்கடராமன் தியானத்தில் இருப்பதைப் பார்க்கும்போதெல்லாம், அவர் படிப்பில் கவனம் செலுத்தாமல் சோம்பேறித்தனமாகப் பகற் கனவு கண்டு கொண்டிருப்பதாகவே நினைத்தார். இதைக் குறித்து தம்பியைக் கேலி செய்வார். "ஞானியாரே, சாப்பிட வருகிறீர்களா?" என்று அழைப்பார். "யோகீச்வரரே, பள்ளிக்கூடத்திற்கு நாழியாகவில்லையா?" என்று கேட்பார். இந்த கிண்டல் பேச்சை எல்லாம் வேங்கடராமன் சிறிதும் பொருட்படுத்த மாட்டார். எதிர்த்து ஒரு வார்த்தை கூடப் பேசமாட்டார். "வேங்கடராமா, உனக்கு தபஸ் பண்ணனும்னு, மகரிஷிகள் மாதிரி காட்டுக்குப் போய் விடறதுதானே" என்று கூட நாகசாமி தம்பியைப் பார்த்து வேடிக்கையாக புத்திமதி கூறுவார்!

'புது விழிப்பு' ஏற்படுவதற்கு முன்பு மீனாட்சி சுந்தரேச்வரர் கோயிலுக்கு எப்போதாவதுதான் போவார் வேங்கடராமன். அதுவும் பையன்களோடு சேர்ந்து கொண்டு ஏதோ வேடிக்கை பார்க்கப் போவது போலத்தான் செல்வார். இயந்திரம் போல எல்லா சந்நிதிகளுக்கும் போய், விபூதி, குங்குமம் பெற்றுக் கொண்டு வந்து விடுவார்.


இப்போதோ, ஒரு நாள் கூட கோயிலுக்குப் போகாமல் இருப்பதில்லை. உடல் மீது உரிமை கொண்டாட மறுத்த ஆத்மா, பரம்பொருளிடம் சொந்தம் கொண்டாட விரும்பியது போலும்!


அன்னை மீனாட்சி சந்நிதியில் மணிக் கணக்காக நிற்பார். பக்தி உணர்ச்சி உள்ளத்தில் அலை பாயும். இன்ப வெள்ளம் பொங்கிப் பெருகும். கண்ணீர் மாலை கன்னத்தை அலங்கரிக்கும். 'ஏன் அழுகிறோம்?' என்று அவருக்கே தெரியாது!

ஸ்ரீ சுந்தரேச்வரரின் சந்நிதியில் போய் நிற்பார். ஒன்றுமே வேண்டிக் கொள்ள மாட்டார். கண்களை மூடி தியானத்தில் ஆழ்ந்து விடுவார். தந்தையை மகன் அடையாளம் கண்டு கொள்வார். சுவாமி இவர் உள்ளத்தில் குடியேறுவார். மறு கணம் இவர் உள்ளம் பாகாய் உருகி, சுவாமியுடன் கலந்து விடும். கண்களில் நீர் முட்டி நிற்கும். தேம்பித் தேம்பி அழுது கொண்டிருப்பார்.

மகா மண்டபத்திற்கு வருவார். இரஜத சபையில், ராஜசேகர பாண்டியனுக்காக கால் மாறி ஆடிய வெள்ளியம்பல நடராஜப் பெருமானைக் கண்டு மெய்ம் மறந்து நிற்பார். ஆனந்தக் கூத்தனின் அருள் வடிவத்தைக் கண்டு

கடிதத்தையும் பணத்தையும் இந்த அலமாரியில்தான் வைத்து விட்டுச் சென்றார்.





திருப்பரங்குன்றம் ஆலயம்

அவர் ஆனந்தத்தில் ஆழ்ந்து விடுவார். சிவகாமி, வியாக்ரபாதர், பதஞ்சலியுடன் வேங்கடராமனும் அங்கே பக்தியுடன் அசையாமல் நின்று கொண்டிருப்பார். அந்தப் பக்கம் போகிறவர்களெல்லாம் அவரது தெய்வ பக்தியைக் கண்டு வியந்து கொண்டே செல்வார்கள்.

பின்னர், அவர் எதிரிலுள்ள அறுபத்து மூவரைத் தரிசிக்கச் செல்வார். பெரிய புராணத்தில் படித்த கதைகளெல்லாம் ஒவ்வொன்றாக அவர் நினைவுக்கு வரும். ஒவ்வொரு நாயன்மாராக, நிதானமாக தரிசிப்பார். அவர்களுடைய தூய்மையான பக்தியை நினைத்து மெய்யுருகுவார். அவை யெல்லாம் சாதாரண சிலைகளாக அவருக்குத் தோன்றாது. அவர்கள் உயிரோடு நிற்பதாகவே கருதி அவர்களோடு உள்ளன்புடன் பேசுவார்: 'உங்களைப் போல் எனக்கும் பக்தி வரக் கூடாதா? உங்களோடு என்னையும் சேர்த்துக் கொள்ள மாட்டீர்களா?' என்று ஏங்குவார். சிறு பிள்ளையைப் போல் 'விக்கி விக்கி' அழுவார்.

அல்லும் பகலும் தியானத்தில் ஆழ்ந்தும், பக்தியால் உருகியும் மெய்ம் மறந்திருந்த வேங்கடராமனுக்குப் பள்ளிப் படிப்பில் கவனம் செல்லாததில் ஆச்சரியமில்லை. இது அண்ணனை மட்டுமல்ல; ஆசிரியர்களையும் ஆத்திரமடையச் செய்தது. பாடத்தை ஒழுங்காகப் படித்துக் கொண்டு வராததற்காக அவருக்குத் தண்டனையளித்தார்கள். பெஞ்சின் மீது நிற்க வைத்தார்கள். அல்லது அந்தப் பாடத்தை திருப்பித் திருப்பி எழுதச் சொல்லி வேங்கடராமனை அழ வைத்தார்கள். அவருக்கு துக்கம் நெஞ்சை அடைக்கும். அவரையும் மீறி அழுகையே வந்து விடும். கோவிலில் வந்த அழுகைக்கும், பள்ளியில் வந்த அழுகைக்கும் எத்தனை வேற்றுமை!

பாவம், வேங்கடராமன் தவியாய்த் தவித்தார். அவர் உள்ளம் எதையோ நாடி ஏங்கியது. உறவினரோ அவரிடம் எதையோ எதிர்பார்த்தனர். அவர் நிலையை ஒருவரும் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை. புரியும்படி பிறருக்கு அதை எடுத்துச் சொல்லவும் அவருக்குத் தெரியவில்லை. வீட்டில் சிறிய தந்தையும், சகோதரரும் தூற்றுகிறார்கள். பள்ளியிலோ, ஆசிரியர் கோபித்துக் கொள்கிறார். அவருக்கு மதுரையிலேயே இருக்கப் பிடிக்கவில்லை.

தனயனின் துயரம் தந்தைக்குப் புரிந்தது. அருணசலேசனே அதற்கு ஒரு திட்டம் வகுத்துத் தந்தார். திக்குத் தெரியாத காட்டில் மாட்டிக் கொண்டு வெளியேற முடியாமல் திண்டாடிய சிறுவனுக்கு வெளியேறும் வழியைக் காட்டினார்.

அன்று மாடி அறையில் உட்கார்ந்து பாடம் எழுதிக் கொண்டிருந்தார் வேங்கடராமன். முதல் நாள் வகுப்பில் ஆங்கில இலக்கணத்தில் ஆசிரியர் கேட்ட கேள்விகளுக்கு அவர் சரியான விடை அளிக்கவில்லை. அதற்காக ஆசிரியர் அவருக்கு ஒரு தண்டனை அளித்திருந்தார். பெயின்ஸ் ஆங்கில இலக்கணப் புத்தகத்திலிருந்து அந்தப் பாடத்தை மூன்று முறை எழுதிக் கொண்டு வர வேண்டும் என்று கூறியிருந்தார். அந்தப் பாடத்தை இரண்டு முறை எழுதி விட்டார் வேங்கடராமன். மூன்றாவது முறையாக எழுத ஆரம்பித்தார். அவருக்கு அலுப்புத் தட்டியது. 'சே, நாம் என்ன காரியம் செய்து கொண்டிருக்கிறோம்? இதனால் நம் ஜன்மத்திற்கு என்ன லாபம்?' என்று ஒரு கணம் சிந்தித்தார். இலக்கணப் புத்தகத்தையும், நோட்டுப் புத்தகத்தையும் பென்சிலையும் ஒரு மூலையில் தூக்கி யெறிந்தார். அடுத்த கணம் கண்களை மூடி ஆத்ம தியானத்தில் ஆழ்ந்து விட்டார்.

அப்போது ஏதோ வேலையாக மாடிக்கு வந்த நாகசாமிக்கு தம்பியிருந்த நிலையைக் கண்டு ஆத்திரம் பொங்கியது. 'பணத்தைக் கொட்டிப் படிக்க வைத்தால் தம்பி இப்படி

நேரத்தை வீணடிக்கிருனே!" என்று உள்ளுக்குள்ளேயே பொருமினுர். பொறுமையை யிழந்தார். தன்னேயு மறியாமல் உரக்கக் கத்தி விட்டார்:

"இப்படியெல்லாம் இருக்கிறவனுக்கு இதெல்லாம் என்னத்துக்கு?"

இதன் பொருள் வேங்கடராமனுக்கு நன்ருகப் புரிந்தது. 'படிப்பில் அக்கறையோ குடும்பப் பொறுப்போ சிறிதும் இல்லாமல், நிஷ்டையிலும் தியானத்திலும் நேரத்தைக் கழித்துக் கொண்டிருப்பவனுக்கு, பள்ளிக்கூடமும் வீடும் எதற்கு? படிக்கப் பிடிக்காதவன் பணத்தைப் பாழாக்குவானேன்? குடும்பத்தைப் பற்றிக் கவலேப் படாதவன், வீட்டில் தங்கியிருப்பானேன்?'

அண்ணன் சொன்ன வார்த்தைகள் அவர் இதயத்தில் 'சுருக்'கென்று தைத்தன. இந்தப் பேச்சுக்குப் பிறகு அந்த வீட்டில் ஒரு கணமும் தங்கியிருக்கக் கூடாது என்று தோன்றியது வேங்கடராமனுக்கு. ஏன் தோன்ருது? அதற்கான வேளேதான் வந்து விட்டதே!

எங்கே போவது? சொந்த வீட்டிற்குப் போவதைத் தவிர வேறு வழியில்லே. தாயும் தந்தையும் உறையும் அருணுசலம் தான் அவருக்கு சாந்தி தரக் கூடியஒரே இடம். 'அருணுசலம் அருணுசலம்' என்று உள்ளத்தில் ஒலித்துக் கொண்டிருந்த பேரொலி இப்போது பன் மடங்கு உரக்க ஒலித்தது. 'வா, வா' என்று அவரை வற்புறுத்தி அழைத்தது.

எப்படிப் போவது? ரகசியமாகத்தான் செல்ல வேண்டும். சொல்லி விட்டுச் சென்ருல் இருக்குமிடத்தைத் தேடிக் கொண்டு வந்து விடுவார்கள்! மீண்டும் குடும்ப பாசத்தில் சிக்க வைத்து விடுவார்கள். வேண்டவே வேண்டாம்!

எல்லாம் மின்னல் வேகத்தில் தீர்மானம் ஆகி விட்டது. புறப்பட வேண்டியதுதான். பயணம் தொடங்க வேண்டியதுதான்.

"அண்ணு, எனக்கு பன்னிரண்டு மணிக்கு ஸ்பெஷல் கிளாஸ் இருக்கு. மின்சாரம் பற்றிய பாடம். நான் போயிட்டு வரேன்" என்று கூறிக் கொண்டே எழுந்தார் வேங்கடராமன்.


ஆம். அருணுசலேச்வரர் இவரை 'ஸ்பெஷலா'கத்தானே அழைத்திருக்கிருர்!

"சரி, போய் வா. சித்தியிடம் ஐந்து ரூபாய் பணம் வாங்கிக் கொண்டு போய் அப்படியே என் காலேஜ் சம்பளத்தையும் கட்டி விடு"

அருணுசலேச்வரர் அழைப்பு விடுத்ததோடு, ரயில் டிக்கெட்டுக்குப் பணமும் கொடுத்து விட்டார்!

கீழே இறங்கி சென்று சித்தியிடம் ஐந்து ரூபாயைப் பெற்றுக் கொண்டு, அவசர அவசரமாக ஒரு கடிதத்தை

வீட்டை விட்டு வெளியேறிய போது எழுதி வைத்து விட்டுச் சென்ற கடிதம்



எழுதி, கூடத்தில் இருக்கும் அலமாரியில், அண்ணனின் புத்தகங்களுக்கிடையிலே வைத்து விட்டு, ஓட்டமும் நடையுமாக ஸ்டேஷனுக்கு விரைந்தார் வேங்கடராமன்.

1896-ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29-ம் தேதி சனிக்கிழமையன்று, வேங்கடராமன் பென்சிலில் எழுதிய கடிதத்தை கண்ணாடி போட்டு, திருவண்ணாமலை ரமணாச்ரமத்தில் பாதுகாத்து வைத்திருக்கிறார்கள். காகிதம் அங்கங்கே கிழிந்திருப்பதாலும், பென்சில் எழுத்து மறைந்து போயிருப்பதாலும், அக்கடிதத்தைப் படிப்பது மிகவும் கடினமாயிருக்கிறது. அந்தக் கடிதம் பகவானின் தாய் மாமன் கீழ்ப்பசலை ராமச்சந்திர ஐயரிடம் இருந்தது. அதை வரவழைத்து, கீழே அதன் வாசகங்களைத் தெளிவாக மையினால் எழுதி வைத்திருக்கிறார்கள்.

நான் என் தகப்பனாரைத் தேடிக் கொண்டு அவருடைய உத்தரவின்படி இவ்விடத்தை விட்டுக் கிளம்பி விட்டேன். இது நல்ல காரியத்தில்தான் பிரவேசித்திருக்கிறது. ஆகையால் இந்தக் காரியத்திற்கு ஒருவரும் விசனப்பட வேண்டாம். இதைப் பார்ப்பதற்காகப் பணமும் செலவு செய்ய வேண்டாம்.

உன் சம்பளத்தை இன்னும் செலுத்த வில்லை. ரூ. 2 இதோடு கூட இருக்கிறது.

இப்படிக்கு,

....

சொல்லிக் கொள்ளாமல் வீட்டை விட்டு ஓடும் பதினாறு வயது சிறுவன் எழுதும் கடிதமா இது? ஞான விழிப்புற்று, ஆத்ம தரிசனம் பெற்ற தவ யோகி வரைந்த தத்துவ சாசனம் அன்றோ இது!


'ஆத்மஜோதியாகிய நான், எந்தப் பேரொளியிலிருந்து தோன்றினேனோ, அதனுடன் கலக்கப் புறப்பட்டு விட்டேன். பற்ற வேண்டியதைப் பற்றி விட்ட பிறகு, பற்றியிருந்த இந்த உடலுக்கும் ஆத்மாவுக்கும் சம்பந்தமில்லையாதலால் அதுவரை, 'நான்' என்று சொல்லிக் கொண்டிருந்த உடல், 'இது'வாகி விட்டது. ஆண்டவனின் அருள் கிடைத்த பிறகு நாம் செய்வது எல்லாமே நல்லகாரியமாகத் தான் இருக்கும். மானிடப் பிறவி எடுத்ததன் பெரும் பயனை அடைந்தானே என்று மகிழ்ச்சியடைய வேண்டுமே தவிர, அதற்காக விசனப்படுவது அறிவீனம் அல்லவா? மெய்ப் பொருளை அடைவதற்காகக் கிடைத்த ஜன்மத்தை அழியப் போகும் இந்தக் கட்டையைத் தேடுவதில் வீணாக்க வேண்டாம். 'நான்' அகன்று, 'தான்' 'தனது' 'என்' 'எனது' எல்லாம் ஒழிந்து, தனித்தன்மை அழிந்து, சுத்த பிரம்மமாகவே ஆகிவிட்ட பிறகு தனிப் பெயரேது? அவரவர் இஷ்டப்படி எந்தப் பெயரிட்டாவது அழைத்துக் கொள்ளலாம்.'

வியர்க்க விறு விறுக்க, ஸ்டேஷனை வந்தடைந்தார் வேங்கடராமன். மணி பன்னிரண்டுக்கு மேல் ஆகி விட்டது. 'நேரமாகி விட்டதே! ரயில் போயிருக்குமோ?'


என்ன ஆச்சரியம்! அன்று ரயிலும் நேரம் கழித்தே வந்தது. இல்லை, அன்பு மகன் வரும் நேரம் அறிந்து, அருணாசலேச்வரர் அந்த ரயிலையும் சற்று நேரம் கடத்தியே கொண்டு வந்து நிறுத்தினார். அதில் ஏறி அமர்ந்து கொண்டார் சிறுவர் வேங்கடராமன்.

— தொடரும்

கூடலழகர் ஆலயம்







ஐயன்குளம் - ஆலய கோபுரம் - அருணாசலம்.

அருணாசல மகிமை

30

திருவண்ணாமலை ஸ்டேஷனில் ரயில் வந்து நின்றது. தில்லையைக் கண்ட நந்தனைப் போல் பரவச மெய்தினார் சிறுவர் வேங்கடராமன். ரயிலை விட்டிறங்கி, வேகமாக ஊருக்குள் நடந்தார்.

இந்திர தீர்த்தம் என்று புராணத்தில் கூறப்படும் ஐயன் குளத்தருகில் வந்ததும், கீழூர் முத்து கிருஷ்ண பாகவதரின் மனைவி கட்டிக் கொடுத்திருந்த பட்சணப் பொட்டலத்தைத் தண்ணீரில் வீசி யெறிந்தார். 'இந்தக் கட்டைக்கு இது இல்லாமல் குறைந்து விட்டதோ?" என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டே, நாலடி நடந்தார். அப்போது, ஒருவர் வழி மறித்து, "மொட்டை அடித்துக் கொள்ளலாமா?" என்று கேட்டார். அதுவும் அருணாசல குருநாதரின் கட்டளையா யிருக்குமோ என்று கருதி, வேங்கடராமன் மறுக்காமல் ஒப்புக் கொண்டார். கேட்டவர் இவரை ஒரு நாவிதரிடம் அழைத்துச் சென்றார். மறு விநாடி துறவுக் கோலத்திற்குத் தயாராகி விட்டார் வேங்கடராமன்.

துறவியிடம் பணம் இருக்கலாமா?' முத்துகிருஷ்ண பாகவதரிடம் கடுக்கனை

பரணீதரன்

ஆடையாகச் சுவைத்து வாங்கிய நான்கு ரூபாயில் ரயில் கட்டணம் போக மீதி மூன்றரை ரூபாய் இருந்தது. அதையும் எடுத்து குளத்தில் எறிந்தார். தன் வேட்டியை இரண்டு மூன்றாகக் கிழித்தார். அதில் ஒரு துண்டை எடுத்து கோவணமாகக் கட்டிக் கொண்டார். மீதி துணியையும் சட்டையையும் சுருட்டி நீரில் விட்டெறிந்தார். உள்ளத்தை மாற்றிய அருணாசலேசன் அவரி உருவத்தையும் மாற்றி விட்டார்.

நேரே கோயிலுக்குள் நுழைந்தார் அந்த பாலசந்நியாசி. சாதாரணமாக பக்தர் கூட்டம் நிரம்பி வழியும் அண்ணாமலையார் ஆலயம் அன்று வெறிச்சோடிக் கிடந்தது. மைந்தனுக்குத் தனிமையில் உபதேசம் செய்ய வேண்டும் என்பது தந்தையின் திருவருட் சித்தமோ என்னவோ, யார் கண்டது?

கருவறையில் போய் நின்றார் மைந்தன். மதுரையில் சொக்கப்பனை தரிசித்ததும் பொங்கியெழும் கண்ணீர், அருணாசலேசனைக் கண்டதும் பன்மடங்காகப் பெருக்கெடுத்து, உடலை நனைத்தது. குளத்தில் நீராடாமல் உடலை நனைத்தது கண்ணீரால் புனித ஸ்நானமும் ஆகி விட்டது!

'தந்தையே, தாங்கள் என்னை அழைத்தீர்கள். இதோ வந்து சேர்ந்து விட்டேன். இனி உங்கள் அடிமை. ஏற்றுக் கொள்ளுங்கள்'' என்று கூறாமல் கூறி, அசையாமல், ஆடாமல் அவர் சந்நிதியில் நின்றிருந்தார் பால ரமணர்.

தந்தை மகனை கருணையோடு நோக்கினார். மௌன மொழியிலே மகனுக்கு ஞானோபதேசம் செய்தார். தந்தையும் மகனும் ஒருவும் சேரும் ஆனார்கள். சீடர், அந்தக் கணமே ஞான வைராக்கியம் பெற்றார். பந்த பாசத்தை அறவே துறந்தார். உலகமும், உற்றாரும், உறவினரும், இன்பமும், துன்பமும் இனி அவருள் எந்நிலையிலும் சலனத்தை ஏற்படுத்த முடியாது.


திருச்சுழியிலே தொடங்கிய ஞான யாத்திரை, திருவண்ணாமலையில் முடிவு பெற்று விட்டது. மதுரையில் பாண "சிஷ்யன்" சரித்திர

ஆம், விருப்பு' திருநாளி புறப்பட்டு வந்தார். அங்கிருந்து மாம்பழப்பட்டுக்குப் பயணமாகி பழுத்த பழமானார். உள்ளம் பழுத்ததும், அறையணிநல்லூர் அதுல்ய நாதேச்வரர் ஆலயத்திலிருந்து அருணாசலத்தின் தரிசனம் கிடைத்தது. அம் மாமலையின் தரிசனம் ஞானத்தை அருளித்தானே ஆகவேண்டும்! அஞ்ஞானம் அழிவது தானே ஞானம்! அடுத்து, கீழூர் வீரட்டேச்வரர் ஆலயத்தில் அந்தகார சம்ஹார மூர்த்தியை தரிசித்து, அஞ்ஞானத்தை விரட்டி, திருவண்ணாமலைக்கு வந்து ஞானச்சுடராகவே பிரகாசித்தார்.

மௌன உபதேசம் பெற்ற பால ரமணர் தானும் மௌனியாகி, தவத்தில் ஆழ்ந்து, தன் உடலை மறந்த சமாதி நிலையில் பல மணி நேரங்கள் லயித்திருந்தார். முதலில் கோயில் ஆயிரங்கால் மண்டபத்தை தன் இருப்பிடமாகக் கொண்டிருந்தார். அவருக்கு ஆகாரம் கிடையாது. கல்தரையே பாயாக, மடித்த கையே தலையணையாக உருண்டு படுத்து விடுவார்.

பாலயோகியின் மகிமை சிறு பிள்ளைகளுக்கு எப்படித் தெரியும்? அவர்களுக்கு எல்லாமே வேடிக்கை தானே? 'பித்துப் பிடித்துப் போன ஒரு சிறுவன், சோறு தண்ணி இல்லாமல், சோம்பேறியாய் எந்நேரமும் கண்ணை மூடிக் கொண்டு உட்கார்ந்திருக்கிறான்' என்று அவர்கள் நினைத்ததில் வியப்பில்லை. தவராஜன் ஞானப் பித்துப் பிடித்து, ஆத்ம தியானத்தில் மூழ்கியிருப்பதை அவர்கள் கண்டார்களா?


குருமூர்த்தி



வருகிறார்கள். "அதைப் போலவே இதுவும் ஒரு பைத்தியம். அது தெருக்களில் சுற்றுகிறது. இது கோயிலில் முடங்கிக் கிடக்கிறது' என்று நினைத்தார்கள். இவருக்கு 'சின்ன சேஷாத்ரி' என்று இவர்களே ஒரு பெயரையும் சூட்டினார்கள்!

'சின்ன சேஷாத்ரி'யைப் பெரிய சேஷாத்ரியிடம் துரத்தியதே இந்த சிறுவர்கள்தான். தங்களையும் அறியாமல் ஒரு நல்லதைச் செய்தார்கள். 'எது நல்லது? எது தீயது?'' என்று யார் தீர்மானிப்பது?

மோன தவத்துக்கு இடையூறுகள் அதிகமாயின. இறுதியில் ஒரு நாள் சிறுவர்களின் தொந்தரவு கட்டுக்கடங்காமல் போகவே, தியானம் செய்ய முடியாமல், ஆயிரங்கால் மண்டபத்திலுள்ள பாதாள லிங்கத்தை அடைக்கலம் அடைந்தார் பால ரமணர். அது கீழே ஒரு பள்ளத்தில் இருந்தது. அங்கு இருள் மண்டிக் கிடந்தது. எறும்பும், பூச்சியும், பல்லியும், பூரானும், குளவியும், தேளும் குடியிருந்தன. உடல் உணர்ச்சியே அற்று சமாதியில் ஆழ்ந்திருந்த பால ரமணரின் ரத்தம் அவற்றுக்கு நல்ல உணவாயிற்று. அவர் தொடையைக் கடித்தன, கொட்டின, உறிஞ்சின. அந்த இடமெல்லாம் புண்ணாகி விட்டது. இரத்தமும் சீழும் வடிந்தன. தபோதனருக்கு ஒன்றுமே தெரியாது. அவருக்குத் தெரிந்ததெல்லாம் அருணாசலத் தியானம். அப்பனின் நினைவு. ஆத்ம தரிசனம். பரிபூரண சச்சிதானந்த அனுபவம்.



அண்ணாமலையார் திருச்சந்நிதிக்குப் போகும் வழி

பையன்கள் என்ன கேலி செய்தாலும் அந்தத் தவராஜன் பேசாமல் இருந்தார். அவர்களை ஒரு பொருட்டாகவே அவர் நினைக்காததால் அவர்களை விரட்டியடிக்கவில்லை. மாறாக, எங்கேயோ வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார். இது சிறுவர்களை மேலும் உற்சாகப்படுத்தியது. கூட்டமாகச் சேர்ந்து கொண்டு, 'ஆய் ஊய்' என்று கத்திக் கொண்டு ஓட்டுச் சல்லிகளையும், சிறு கற்களையும் அவர் மீது விட்டெறிந்தார்கள்; சித்திரவதை செய்தார்கள்; கை கொட்டிச் சிரித்தார்கள்.


திருவண்ணாமலைக்கு மற்றொரு பைத்தியம் வந்திருப்பதாகவே அவர்கள் கருதியிருக்க வேண்டும். ஐந்தாறு வருடங்களாக சேஷாத்ரி என்பவர் பைத்தியமாக தெருக்களில் அலைந்து கொண்டிருப்பதை அவர்கள் பார்த்து

அந்த நிலையிலும் விளையாட்டுச் சிறுவர்கள் அவரை விடுவதாயில்லை. அவர்களுடைய அஞ்ஞானத்தை விட பயங்கரமான ஓர் இருட்டில் அமர்ந்திருந்த ஞானச்சுடரின் மீது கற்களை வீசினர். கையில் கிடைத்ததையெல்லாம் வாரிப் போட்டனர்.

அந்த வழியே சென்ற வெங்கடாசல முதலியார் என்பவர் இந்தக் காட்சியைக் கண்டார். அவருக்குக் கோபம் தாங்கவில்லை. கையில் ஒரு குச்சியை

எடுத்துக் கொண்டு அந்தப் பையன்களை யெல்லாம் விரட்ட, அவர்களெல்லாம் ஓடி விட்டனர். அச்சமயத்தில் பாதாள லிங்கத்தின் இருளிலிருந்து சேஷாத்ரி சுவாமிகள் வெளியே வந்ததைப் பார்த்த வெங்கடாசல முதலியாருக்குத் தூக்கிவாரிப் போட்டது. 'இவர் எங்கே இந்த இடத்திலிருந்து வருகிறார்? இங்கே என்ன செய்கிறார்?'

''மகானை மகான்தான் அறிவார். அருணாசலத்தின் ஒலி கேட்டு, அருணாசலத்தை நாடி வந்து, அருணாசலமாகவே ஆகிவிட்ட பால யோகியை சேஷாத்ரி சுவாமிகள் அடையாளம் கண்டு கொண்டு, அவர் தவத்தைக் காக்கும் பொருட்டு அங்கு வந்திருக்கிறார். பையன்கள் எறிந்த கற்களை யெல்லாம் தான் தாங்கிக் கொண்டார். பராசக்தி, திருவண்ணாமலையில் தவமிருந்தபோது, குமரன் தாய்க்குத் துணை புரிந்திருக்கிறான். இது அருணாசல புராணம். பின்னர் அந்தப் பராசக்தியின் அம்சமான சேஷாத்ரி சுவாமிகள், குமரனின் அம்சமான பால ரமணரின் தவத்திற்குத் துணை நின்றிருக்கிறார். இது அருணாசல மகிமை.



உண்ணாமுலையம்மையின் திருச்சந்நிதிக்குப் போகும் வழி

பாதாள லிங்க குகையிலிருந்து வெளியே வந்த சேஷாத்ரி சுவாமிகளை வெங்கடாசல முதலியார் அணுகி, ''சுவாமி, பசங்க எறிஞ்ச கல்லு உங்க மேலே பட்டுதா?'' என்று கவலையுடன் கேட்டார். சேஷாத்ரி சுவாமிகள் வழக்கப்படி பலமாக சிரித்தார். தலையை வேகமாக ஆட்டினார்.

''இல்லை...இல்லை... ஊஹூம் ... என் மேல் படலே...உள்ளே போய்ப் பாரு, சின்னசாமி உட்கார்ந்துண்டிருக்கு'' என்று கூறிவிட்டு ஓட்டமும் நடையுமாக விரைந்து விட்டார் அவர். மெள்ள நடந்து சென்று கீழே எட்டிப் பார்த்தார் முதலியார். அங்கு மை யிருட்டாக இருந்ததே தவிர ஒன்றுமே கண்ணுக்குத் தெரியவில்லை. சாதாரணமாக அது இருள் கவிந்த இடம். அதுவும் வெளிச்சத்திலிருந்து போனால் கேட்கவே வேண்டாம்!

சற்றைக்கெல்லாம் மெல்லிய திரை விழுந்தாற்போல் வெளிச்சம் படர்ந்தது. அதில் லேசாக ஓர் இளமுகம் தெரிந்தது. அது கண்களை மூடி, அசையாமல் இருந்தது. அதைக் கண்டு திடுக்கிட்டுப் போனார் வெங்கடாசல முதலியார்.

மறுகணம், மார்பு படபடக்க வெளியே வந்தார். நேரே நந்தவனத்திற்கு ஓடினார். அங்கிருந்த ஒரு சாதுவிடம் தாம் கண்ட காட்சியைக் கூறினார். அந்த சாது நாலைந்து சீடர்களை அழைத்துக் கொண்டு வேகமாக முதலியாரைப் பின் தொடர்ந்தார்.

எல்லோரும் அந்தப் பள்ளத்தில் இறங்கினார்கள். ஆடாமல் அசையாமல் கற்சிலையைப் போல் அமர்ந்திருந்த பாலரமணரை அப்படியே தூக்கிக் கொண்டு, மண்டபத்தைக் கடந்து கோபுரத்து இளையனார் என்று அழைக்கப்படும் சுப்பிரமணிய சுவாமி சந்நிதி



பால ரமணர்

...மண்டபத்திற்கு வந்து, அவரை அதே நிலையில் உட்கார வைத்தார்கள். அப்போதுதான் அவர் தொடையிலும் பின்புறத்திலும் இருந்த புண்களைப் பார்த்தார்கள். அவர்களுடைய கண்களில் ரத்தம் கசிந்தது. அவரது ...தைக் கலைக்க மனமில்லாமல், ... செய்யாமல் அவ்விடத்தை விட்டு நகர்ந்து விட்டார்கள்.

அங்கு வந்தது முதல் பாலரமணரை 'பிராம்மண சுவாமி' என்றே எல்லோரும் அழைத்தார்கள். அவரை அங்கிருந்த சாமியார்கள் 'கவனித்து'க் கொண்டார்கள். முக்கியமாக அந்த மண்டபத்திலிருந்த 'மௌன சுவாமிகள்' மிக அக்கறையோடும் ...டும் கவனித்துக் கொண்டார்.

அந்த மௌன சுவாமிகள் யார் என்று பி. வி. நரசிம்ம சுவாமிகள் தமது நூலில் குறிப்பிடவில்லை. திருக் குற்றாலத்தில் அநேக ஆண்டுகள் வாழ்ந்து, 'தத்தாத்ரேய மந்திர'த்தில் ஸித்தேச்வரி பீடத்தை ஸ்தாபித்து, 1943-ம் ஆண்டு ஸித்தி யடைந்த ஆந்திரத்தைச் சேர்ந்த மௌன சுவாமிகளாக இருக்கலாம் என்று தோன்றுகிறது. சிவய்யா என்று அழைக்கப்பட்ட அவர், குடும்பத்தை விட்டு சந்நியாசம் ஏற்று, வட நாட்டில் தல யாத்திரை செய்து விட்டு, தெற்கு நோக்கி வந்த போது, அருணாசலத்தின் நிழலிலும் சில வருடங்கள் தங்கி இருந்ததாக வரலாறு கூறு... அவர் திருவண்ணாமலை கோயிலிலுள்ள பாதாள லிங்க குகையில் சிறிது காலம் தங்கி யிருந்தார் என்றும், ஸ்ரீ ரமணரையும் ஸ்ரீ சேஷாத்ரி சுவாமிகளையும் சந்தித்திருப்பதாகவும் தெரிய வருகிறது.

குற்றாலம் ஸ்ரீ மௌனானந்த சுவாமிகளின் சரித்திரத்தை எழுதியுள்ள திரு எஸ். வெங்கடசுப்பிரமணிய ஐயர் 1921-ம் ஆண்டு தமது குடும்பத்தாருடன் திருவண்ணாமலைக்குச் சென்று ஸ்கந்தாஸ்ரமத்தில் ஸ்ரீ ரமண பகவானை தரிசித்த போது, பகவான் குற்றாலம் மௌனசுவாமிகளைத் தமக்கு மிகவும் நன்றாகத் தெரியும் என்றும், அவரைக் கேட்டதாகச் சொல்லும் படியும் அவரிடம் கூறியிருக்கிறார். மௌனசுவாமிகளும், தாம் பாதாள குகையில் சிறிது காலம் வாசம் செய்த போது, ஸ்ரீரமணரும் ஸ்ரீ சேஷாத்ரி சுவாமிகளும் அங்கு வந்திருப்பதாகக் கூறியிருக்கிறார்.

அந்த மௌன சுவாமிகள் உண்ணாமுலையம்மனுக்கு அபிஷேகமான தீர்த்தத்தை ஒருபாத்திரத்தில் ஏந்தி வந்து, பால ரமணருக்குக் கொடுப்பார். அதில், பலவித அபிஷேகப்பொருட்கள் கலந்து இருக்கும். அதை பால ரமணர் ஆனந்தமாகப் பருகுவார்.

பார்க்கிறவர்களுக்குப் பரிதாபமாக இருந்தது. அவருக்கோ அது பஞ்சாமிர்தமாக இருந்தது. அம்பாளின் பிரசாதமல்லவா?

இரண்டு மாதங்களுக்கெல்லாம் பால ரமணர் அங்கிருந்து எழுந்து சென்று, கோயிலில் பல இடங்களில் அமர்ந்திருந்தார். நந்தவனத்தில் அரளிச்செடியின் அடியிலும், வாகன மண்டபத்தில் வாகனங்களுக்கடியிலும், இலுப்பைமரத்தடியிலும் தியான சமாதியில் ஆழ்ந்திருப்பார். அங்கெல்லாமும் சிறுவர்களின் தொந்தரவு தொடர்ந்து வந்தது. சோதனைகள், மகான்களைத் தொடரும் நிழலன்றோ!

அந்த ஆண்டு கார்த்திகை தீபத்தின் போது, தரிசனத்திற்கு வந்த பக்தர் கூட்டம் ஸ்ரீ பால ரமணரையும் காண வந்தது. ஓயாத கூட்டம் எந்நேரமும் தரிசனத்திற்கு வந்ததால் பால ரமணரின் தவ வாழ்வுக்கு அது பெரும் தடையாக இருந்தது. அவருக்கு உதவி புரிய ஒருவரை இறைவன் அனுப்பி வைத்தான்.

அப்போது, அங்கு ஒரு புது 'சீடர்' வந்து சேர்ந்தார். அவர் பெயர் உத்தண்டி நயினார். அவர் ஆத்மிக...

திருக்குறள் போட்டி

கல்லூரி மாணவர்களுக்காக காஞ்சி காமகோடி ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகள் அறிவிக்கும் திட்டம்:

தமிழ் நாட்டில் உள்ள எல்லா கல்லூரிகளிலும் பயிலும் மாணவர்களும் இதில் கலந்து கொள்ளலாம். கீழ்க்கண்ட அதிகாரங்களில் அடங்கிய குறட்பாக்களைப் பொருளுடன் மனப்பாடம் செய்ய வேண்டும். அந்தந்தக் கல்லூரியில் முதன்மையாகத் தேறிய மாணவர்க்கு ரூபாய் 100-ம் இரண்டாவதாகத் தேறியவர்க்கு ரூபாய் 75-ம் போட்டியில் கலந்து கொண்ட எல்லா மாணவர்களுக்கும் பாராட்டுப் பரிசும் வழங்கப்படும்.

போட்டி அந்தந்த ஊரில் செப்டம்பர் முதல் வாரத்தில் நடத்தப்படும். போட்டியில் கலந்து கொள்ளும் கல்லூரி மாணவர்கள் தங்கள் விண்ணப்பத்தை கல்லூரி பேராசிரியர், அல்லது முதல்வரின் கையெழுத்துடன் 15-8-70க்குள் கிடைக்கும்படி வி. என். சதாசிவ ராவ், 45-ஏ. ராஜ வீதி, காஞ்சிபுரம்-2. என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேணும்.

1, 3, 4, 8, 10, 11, 12, 13, 14, 16, 18, 19, 20, 21, 23, 26, 29, 31. 33, 79, 81, 82, 83, 90, 94 முதலிய அதிகாரங்களில் பரீட்சை நடத்தப்படும்.

துறையில் அதிகம் படித்திருந்தார். ஆனால், மனச் சாந்தி கிடைக்கவில்லை. அதைத் தேடி அலைந்தவர், இலுப்பை மரத்தடியில் ஞானமே உருவான பால ரமணரைக் கண்டதும், 'இவர் நிழலில்தான் நமக்கு சாந்தி கிடைக்கும்' என்று உணர்ந்து அவரைத் தஞ்சம் அடைந்தார். அவர் அருகில் நின்று 'யோக வாசிஷ்ட'த்தையும், 'கைவல்ய நவநீத'த்தையும் பாராயணம் செய்து கொண்டிருப்பார். மகான் மௌனத்

குருமூர்த்தத்தில் உள்ள கருவறை



[illegible] ஓர் உபதேச மொழியாவது அருளமாட்டாரா, அதனால் பரிபூரண சாந்தி கிடைக்காதா என்று காத்திருப்பார்.

சில நாட்கள் வேறு அலுவல் காரணமாக அவர் பால ரமணரைத் தனிமையில் விட்டு விட்டுச் செல்ல வேண்டி நேர்ந்தது. அப்போது குறும்புக்காரர்களின் தொந்தரவு அவர் தியானத்தைக் கலைத்தது. இதை விட தனிமையான இடம் கிடைக்காதா என்று நினைத்தார் பால ரமணர். உடனே அவரை அழைத்துச் செல்ல ஒருவர் வந்தார்.

ஒரு நாள் உத்தண்டி நயினாருடன் அண்ணாமலை தம்பிரான் என்பவர் வந்தார். வேட்டை வலம் பாதையில், குன்றக்குடி - திருவண்ணாமலை ஆதீனத்தின் ஆதி குருவினுடைய சமாதி ஆலயம் ஒன்று இருக்கிறது. அதற்கு குருமூர்த்தம் என்று பெயர். குருவின் சமாதிக்குப் பூஜை செய்து கொண்டிருந்த தம்பிரான், கோஷ்டியாக தேவாரம் பாடிக் கொண்டு, பிச்சையெடுத்து, ஏழைகளுக்கு அன்னதானம் செய்வது வழக்கம்.

அவர், இலுப்பை மரத்தடியில் இருந்த பால ரமணரின் தியானத்திற்குக் குறுக்கே நின்ற இடையூறுகளைக் கண்டு கலங்கினார். அவரை நெருங்கி, குருமூர்த்தத்தில் வந்து அமரும்படி கண் கலங்க வேண்டினார். பால ரமணரும் அவரது வேண்டுகோளை மறுக்க மனமில்லாமல், குருமூர்த்தத்திற்குச் சென்றார்.

—தொடரும்.

நேயர் தபால்



அகத்தியர் மகள் நடந்த அன்னநடை, என் பழைய நினைவுகளை எழுப்பி விட்டது. தாமிரவருணி தீரத்தில் மீண்டும் சஞ்சரித்த பிரமை. சில இடங்களை அவள் பார்த்தும் பாராதது போல் நடந்து விட்டாளோ?

மாத்தளை (இலங்கை): வயலா தானியேல்

அகத்தியர் மகள், அழகாகத்தான் நடந்தாள்; ஆனால் வழியில் இன்னும் பல ஊர்களைக் கண்ணெடுத்துப் பார்க்காமல் போய் விட்டாளே!

நெல்லை. அ. சேதுப்பிள்ளை

நாடக காப்பியம் இயற்றி தமிழுக்கே பொலிவூட்டிய பேராசிரிய பெருமகனார் சுந்தரம் பிள்ளை, தாகூரின் குரலை தமிழுக்கு தந்த பேராசிரியர் திரு ஸ்ரீனிவாசராகவன் ஆகியவர்களைப் பற்றி ஒரு வரி—காணோம்...? ஏன் ஐயா இப்படி?

பம்பாய் ஜி. ரா. சுப்பிரமணியன்

இலக்கை நிலங்களைப் பற்றி நயம்பட எழுதி அழகுபடத் தொகுத்தளித்த அருமையே அருமை! விகடன், விகடன் தான்!

பாளையங்கோட்டை மு. முத்துக்குமாரசாமி

மின்வெறி மகத்தான கதை; கவசின் நாயகன், நல்ல பொதுஜனசேவை செய்யும் மனிதர் ஒவ்வோர் ஊரிலும் இருந்து விட்டால், அவ்வூரின் மேன்மைக்கு எத்தனை பெரிய வரப்பிரசாதமாகி விடும்?

நெல்லை. சி. சரஸ்வதி கணேசன்

'முத்துக் குளிக்க' தென் கடலுக்குப் போக வேண்டாம் — விகடன் மலரில் ஒவ்வொரு பக்கமும் முத்துக்கள் தானே?

சென்னை. இரா. ஜெயலட்சுமி

மாவட்ட படத்தில் எங்கே தூத்துக்குடி தாலுகாவைக் காணோம்!

ஸ்ரீவைகுண்டம். டி. ராஜேஸ்வரி.

"ஏ ஏஏஏலே... தம்பி... அந்தத் திருநெல்வேலி மலரைப் படிச்சிட்டு இங்கெட்டு கொண்டாலே...!"

"அண்ணாச்சி போவ்... அதுக்கு மதியம் ஆவும். நீங்க கொஞ்சம் பொறுக்கணும்!"

புளியங்குடி. பா. முத்தையா.

பிறவிப் பாடகன் — சங்கீத மாமேதை இட்டப்பாவை ஏன் மறந்து விட்டீர், செங்கோட்டை சிங்கம் ஐயா அவர்?

சென்னை-5. விசாகன்.

நெய்வேலி அனல் மின் நிலையத்திலுள்ள ஒன்பதாவது யூனிட் நமது பிரதம மந்திரிக்காகக் காத்திருக்கவில்லை. சில பொறியியல் பிரச்னைகள் தவிர்க்கப்பட்டு வெள்ளோட்டமான பிறகே இந்த யூனிட் துவக்கப்பட இருக்கிறது.

நெய்வேலி : சி. வெங்கடராமன், எஸ். இ. பவர் ஜெனரேஷன்.

அரசியலுக்கும் அப்பால்...

"மிஸ்டர் காந்தி! உங்கள் ஒத்துழையாமை இயக்கத்தில் எங்களுக்குத் துளிகூட நம்பிக்கை கிடையாது!" என்று மகாத்மாவுக்கு அளித்த ஒரு வரவேற்புப் பத்திரத்தில் நேருக்கு நேர் சொன்னவர் ஸர் ஆர். கே. சண்முகம் செட்டியார்.

"வெறும் முகஸ்துதிக்குப் பதிலாக உண்மையைச் சொன்னதற்கு மிக்க நன்றி. உங்கள் ஒளிவு மறைவற்ற தீரத்தைப் பாராட்டுகிறேன்!" என்று பதிலளித்தார் காந்தி மகான.

ஸர் ஆர். கே. எஸ்ஸுக்குப் புகழ் சேர்த்தது சுதந்திர இந்தியாவின் முதல் நிதி மந்திரி என்னும் பெயரா, அல்லது அவர் நெஞ்சை எல்லாம் கவர்ந்திருந்த சிலப்பதிகாரமா என்பதில் அபிப்பிராயபேதம் இருக்கக்கூடும்.

ஆனல், கொங்கு நாட்டுக்குப் பெருமை சேர்த்த பெரியார்களில் ஸர் ஆர். கே. எஸ்ஸும் ஒருவர் என்பதில் இரு வித கருத்துக்களே இருப்பதற்கில்லை.

"ஆஹா, யார் சொன்னது அப்படி—சுக்ரீவன் தான் உயர்த்தி என்று? விபீஷணன் என்ன சாமான்யப் பட்டவனு?" என்று எங்காவது கர்ஜனை கேட்டால்—

அது நிச்சயமாகக் கொங்கு நாட்டுக் குரலாகத்தான் இருக்கும். ஆமாம், அது எதிர்க்கட்சித் தலைவர் திரு பி. ஜி. கருத்திருமனின் குரல்தான்.

திரு பி. ஜி. கருத்திருமனின் அரசியல் முகம் சதா காங்கிரசையே பக்தியுடன் பார்த்துக் கொண்டிருக்கிறது என்றால், அவருடைய இலக்கிய முகமோ சதா கம்ப நாட்டாழ்வாரையே தரிசித்துக் கொண்டிருக்கும்.

பிரபல தேச பக்தர் திரு நாச்சிமுத்து கவுண்டரின் குமாரரான பொள்ளாச்சி திரு மகாலிங்கத்திற்கு இன்று இரண்டு இடங்களில் உயிர்: ஒன்று, தொழிலபி விருத்தி. அடுத்தது, வடலூர் வள்ளலார் பெருமான். வள்ளலார் அருட் பெருக்கின் காரணமாகவோ என்னவோ, அரசியலில் இருந்த பற்றை துறந்து விட்டதாக அறிவித்து விட்டார்.

வடலூரைச் சுற்றி மூன்று மைலுக்கு 'கொல்லாமை' தடை விதித்து இன்னெரு சாஞ்சி மாதிரி ஆக்கி விட வேண்டும் என்பது அவருடைய துடிப்பு.

இன்னெரு புகழ் பெற்ற கொங்கு நாட்டுத் தலைவர் திரு சி. சுப்பிரமணியம். அறுபது வயதிலும் இருபது பிராயத்து துடிப்புள்ளவர்.

அவருக்கும் ஓர் இரட்டைப் பெருமை உண்டு: ஒன்று, அரசியல். அடுத்தது, நிர்வாகத் திறன். அவருடைய அரசியல் கொள்கைகளுக்கு முரணனவர்கள் கூட அவருடைய நிர்வாகத் திறனைப் போற்றத் தவறுவதில்லை.



ஆர். கே. சண்முகம் செட்டியார்.




கருத்திருமன்



நா. மகாலிங்கம்



சி. சுப்பிரமணியம்



அண்ணமலையார் ஆலயம்

அருணசல மகிமை

31

திருக்கைலாயத்தில் இருக்கும் கல்லால மரத்தடியில் ஞான வடிவாய் அமர்ந்திருக்கும் ஸ்ரீ தட்சிணு மூர்த்தி, நந்தி தேவருக்கு சிவஞான போதத்தை உபதேசித்தருளினர். தாம் பெற்ற செல்வத்தை நந்தி பெருமான் தமது அருமைச் சீடர் சனற்குமார முனிவருக்கு அருளினர். அவர் தமது தலை சிறந்த மாணவரான சத்திய ஞானதரிசனி முனிவருக்குக் கூறினர். அவனே அவர் பரஞ்சோதி முனிவருக்கு அருளிச் செய்தார்.

சிவஞான போத உபதேசம் பெற்ற பரஞ்சோதி முனிவர், அகத்திய முனிவரைத் தரிசிக்க பேராவலுடன் பொதிகை மலைக்குச்செல்லும் வழியில் நடு நாட்டிலுள்ள திருவெண்ணெய் நல்லூர் தலத்திற்கு வந்தார். அங்கு காங்கேய பூபதியின் இல்லத்தில் ஒரு தெய்வக் குழந்தையைக் கண்டார். அது அவருடைய சகோதரரின் குழந்தை. திருவெண்காடு ஈசனின் அருளால் பிறந்த அக் குழந்தைக்கு சுவேதவனப் பெருமான் என்று பெயர்.

தமது ஞான திருஷ்டியால் அக குழந்தையின் மகிமையை அறிந்து, பரஞ்சோதி முனிவர் அதற்கு மெய் கண்டார் என்று திருநாமம் சூட்டி பரம்பரைச் சொத்தான சிவஞான போதத்தை அவருக்கு உபதேசித்தருளினர். மெய்கண்டார் தமிழகத்துக்கு சிவஞான போதத்தை அளித்தார்.

பின்னர், மெய்கண்டார் அருள் நந்தி என்பவருக்கு இதை உபதேசித்து, அந்நூலை விரித்துரைக்கவேண்டும் என்று கட்டளையிட்டார். குருநாதனின் கட்டளையைத் தலை மேற்கொண்டு, அருள் நந்தி 'சிவஞான சித்தியார்' என்ற நூலைத் தந்தருளினர். அம் மகானின் சீடர்களில் ஒருவரான ஸ்ரீ தெய்வசிகாமணி தேசிக

பரணீதரன்

பரமாசாரிய மூர்த்திகள்தான் திரு வண்ணுமலைக்கு ஒன்றரை மைல் தொலைவில் வேட்டைவலம் பாதையி லுள்ள குருமூர்த்தத்தில் சமாதிக் கோயில் கொண்டிருக்கிருர்.

ஆண்டவனைத் தீண்டி ஆராதனை செய்யும் பேறு பெற்ற ஆதி சைவ பரம்பரையில் திருவண்ணுமலை திருத் தலத்தில் அவதரித்தவர் ஸ்ரீ தெய்வ சிகாமணி சுவாமிகள். அவரது காலத்தை நிச்சயமாகக் குறிப்பிட முடியவில்லை. அம்மகான் சுமார் ஐந் நூறு ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த தாகக் கூறப்படுகிறது.

தெய்வசிகாமணிக்கு அப்போது பதினுறு வயதிருக்கும். ஸ்ரீரமண பகவான், பாலரமணராக திருவண்ணு மலைக்கு வந்த அதே வயது. ஒரு நாள் மாலை நேரம். தெய்வசிகாமணி யின் தந்தையார் ஆலயத்தில் அண்ணு மலையாருக்கு திரு முழுக்கு செய் வித்து வழிபாடு செய்து கொண் டிருந்தார். தெய்வ மகன் திருக் கொடி மரத்தின் கீழ், பக்தியால் மனம் கசிந்துருக தன்னை மறந்த நிலை யில் நின்றிருந்தார். பரவசம் மேலிட் டது. கண்ணீர் பொங்க, கானம் பொழிந்தார். கல்லும் கரைந்தது. சட்டென்று கொடி மரம் 'பளிச்' சென்று மின்னியது. தெய்வ அமைதி மண்டபத்தை சூழ்ந்தது. மணியோசை முழங்கியது. அண்ணுமலையார் இடப வாகனத்தில் அமர்ந்தவராய் அங்கு தரிசனம் தந்தார். அடுத்த கணம் குருமுனி வடிவத்தில் எதிரில் தோன் றினுர். மெய் சிலிர்த்து நின்ற தெய்வ சிகாமணி, முனிவரது கால்களில் விழுந்தார்; எழுந்தார்; ஆனந்தத்தில் கூத்தாடினுர். ''அன்பனே நீ அருள் நந்தியை அடைவாயாக'' என்று கூறி இறைவன் மறைந்து விட்டான்.

முனிவர் உருவில் திருக்காட்சி யளித்த இறைவனைக் காணுது தெய்வ சிகாமணி திகைத்தார். அங்குமிங்கும் தேடினுர். பித்துப் பிடித்தவர் போல் காணப்பட்டார்.

அப்போது பூஜையை முடித்து விட்டு வந்த தந்தை, மைந்தனை வீட் டுக்கு வரும்படி அழைத்தார். பேரின்ப வீட்டுக்குச் செல்ல வழி தெரிந்து விட்ட மகன் பெற்ருேர் வீட்டிற்கா வருவார்? எனவே தந்தையுடன் செல்ல மறுத்து விட்டார். ஆண்ட வன் காட்டிய ஞாஞசிரியனைத் தேடிக் கொண்டு திருத்துறையூருக்குப் புறப் பட்டு விட்டார்.

திருத்துறையூரிலிருந்து அருள் நந்தி சிவாசாரியாரிடமும் இறைவன் கன வில் தோன்றி, அருணுசலத்திலிருந்து அருட்சீடர் வரும் செய்தியைத் தெரி வித்து, அவருக்கு ஞானுேபதேசம் செய்யும்படி கூறி மறைநதார். சீடருக் காக ஆண்டவன் கட்டளையை சிர மேற் கொண்டு காத்திருந்தார் அருள் நந்தி. அருணையம்பதியிலிருந்து தெய்வ சிகாமணி வந்ததும், அவரை இரு கரம் நீட்டி, அன்புடன் வரவேற்ருர் அருள் நநதி சிவாசாரியார். ஆசிரிய ரது திருவடிகளைக் கண்ணீரால் நனைத் தார் சீடர். தமது நாற்பத்தெட்டு சீடர்களில் ஒருவராக அவரை ஏற்றுக் கொண்டார். திருக் கைலாய பரம் பரையில் வந்த சிவஞான போதத்தை உபதேசித்தருளினுர்.



ஸ்ரீமத் தெய்வசிகாமணி
தேசிக பரமாசாரிய சுவாமிகள்


தெய்வசிகாமணி சுவாமிகள் இறை வன் சுயம்பு மூர்த்தியாக தமது ஆத் மார்த்த பூஜைக்கு எழுந்தருள வேண்டும் என்று ஒரு பேராவல் கொண்டார். அதை ஆசிரியரிடம் தெரிவித்தார். அவரைத் திருக்காளத் திக்குச் செல்லுமாறு பணித்தார் குருநாதர்.

திருக்காளத்திக்குச் சென்ற தெய்வ சிகாமணி சுவாமிகள், காளத்தியப்பர் சந்நிதியில் கண்ணீர் மல்க நின்று

தொழுதார். அவர் முன் காளத்தியப்பர் தோன்றி, "அன்பனே, கோயிலின் அருகேயுள்ள புற்றில் நாம் சிவலிங்க வடிவமாய்த் திகழ்கிறோம். அங்கு வருவாயாக" என்று கூறி மறைந்தார். பரபரக்க ஓடினார் தெய்வசிகாமணி சுவாமிகள். காளத்தியப்பர் கூறிய வாறே அங்கு ஒரு சிவலிங்கம இருக்கக் கண்டு கையிலெடுத்து, மார்போடு அணைத்து மட்டிலா மகிழ்ச்சியுற்றார். தற்போது குன்றக்குடி—திருவண்ணாமலை ஆதீன மடத்தில் எழுந்தருளியிருப்பது அந்தக் காளத்தி பெருமானே.

ஸ்ரீதெய்வசிகாமணி தேசிக குருமூர்த்தியால் நிறுவப் பெற்றதே திருவண்ணாமலை ஆதீனம். இந்த குரு பரம்பரையில் பதினேழாவது பட்டத்தில் எழுந்தருளிய குருமுனிவர் ஸ்ரீ நாகலிங்க தேசிக குருமூர்த்திகள், தென்னாட்டில் திருத் தல யாத்திரை செய்து விட்டு, ஸ்ரீ ரமணர் பிறந்த திருத்தலமான திருச்சுழியலுக்கு வந்தார்கள். அப்போது இராமநாதபுரம் அரசரின் வேண்டுகோளுக்கிணங்கி, அம் மாவட்டத்திலுள்ள பிரான் மலையில் குரு பீடத்தை நிறுவினார்கள். அங்கு தமது சீடர் ஒருவரை மடாதிபதியாக்கி விட்டு, குருநாதர் திருவண்ணாமலைக்கு எழுந்தருளி விட்டார்கள். நாளடைவில் இந்த ஆதீனத்தின் குருமார்கள் குன்றக்குடியில் வந்து தங்கினார்கள். காளத்தியப்பரை மடாலயத்தில எழுந்தருளச் செய்தார்கள். அன்று முதல் திருவண்ணாமலை ஆதீன மடாலயம் குன்றக்குடியில் அருளாட்சி புரிந்து வருகிறது. தற்போது ஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிக சுவாமிகள் 45-வது பட்டத்தில் எழுந்தருளி இறைப் பணியாற்றி வருகிறார்கள்.

குருமூர்த்தத்திலுள்ள சிவலிங்கம்




குன்றக்குடி - திருவண்ணாமலை ஆதீனத்தின ஆதி குருநாதரான தெய்வசிகாமணி தேசிக சுவாமிகள் திருவருணையிலிருந்த போது பல அற்புதங்களைச் செய்திருக்கிறார். ஒரு சமயம் அரசனின் பட்டத்துக் குதிரை திடீரென்று கீழே விழுந்து மாண்டது. அவ்வழியே வந்த குருநாதரை, அடிபணிந்து, குதிரையைப் பிழைக்க வைக்கும்படி கோரினார். குருமுனிவர், புன்னகை அரும்ப, திருமந்திரத்தை ஓதி, திருநீற்றைத் தெளித்தார். உறக்கத்திலிருந்து விழிப்பது போல் குதிரை எழுந்து நின்றது.

ஞானாசிரியனும், யோகசித்தருமான தெய்வசிகாமணி தேசிக சுவாமிகள் சமாதிக் கோயில் கொண்டிருக்கும் குருமூர்த்தத்தில் ஸ்ரீ பால ரமணர் ஒன்றரை யாண்டு காலம் தங்கி, தவம் புரிந்திருக்கிறார். அந்த மகானின் அருளாசி பால ரமணரின் ஞான வைராக்கிய நிலைக்கு உறுதுணையாக இருந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

உடல் மெலிந்து, தலை முடி சடையாகி, நகங்கள் நீளமாக வளர்ந்து, ஜடப் பொருளாக அமர்ந்து, சமாதியில் ஆழ்ந்திருந்த பால ரமணரைக் கண்டு உலகம் வியந்தது.

அந்த மண்டபத்தின் சுவரில் சாய்ந்தபடி உட்கார்ந்து கொண்டிருந்ததால், அவருடைய முதுகின் அடையாளம் இன்னும் அங்கே லேசாகத் தெரிகிறது. அவர் அமர்ந்திருந்த போது தரை யெல்லாம் ஒரே எறும்புப் புற்று. தரிசிக்க வந்தவர்களெல்லாம் 'ஐயோ, அப்பா' என்று எறும்புக் கடி பொறுக்க முடியாமல் கதறிக் கொண்டு ஓடினர். ஆனால், எத்தனை எறும்புகள் கடித்தாலும், ரத்தம் கசிந்தாலும் ரமணர் அப்படியே உட்கார்ந்திருந்தார்.

அண்ணாமலைத் தம்பிரானும், உத்தண்டி நயினாரும் பால ரமணரை அக்கறையோடு கவனித்துக் கொண்டனர். தம்பிரான் சமாதிக் கோயிலின்



குருமூர்த்தமும், வற்றிய குளமும்.

நைவேத்தியத்தில் ஒரு பிடியை ரமணருக்கு ஆகாரமாக அளித்து வந்தார். சில நாட்களில் பக்தர்கள் கொண்டு வந்து கொடுத்த ஆகாரங்களையெல்லாம் கலந்து ஒரு கவளத்தை அவருக்குக் கொடுப்பார்.

அண்ணுமலைத் தம்பிரானுக்கு பால ரமணரின் மீது பெரும் பக்தி ஏற்பட்டு விட்டது. இவருக்கு சேவை செய்வதிலும், உணவளிப்பதிலும் அவருக்குத் திருப்தி ஏற்படவில்லை. சிவலிங்கத்திற்குச் செய்வது போல் ரமணருக்கு அபிஷேகம் செய்ய வேண்டும் என்று தீர்மானித்து எண்ணெய், பால், சந்தனம் போன்ற பொருள்களை சேகரிக்க ஆரம்பித்தார். இது பால ரமணருக்குப் பிடிக்கவில்லை. உடனே ஒரு கரிக் கட்டியை எடுத்து **'இதற்குத் தொண்டு இதுவே'** என்று சுவரிலஎழுதி வைத்து விட்டார். மறு நாள் தம்பிரான் உணவு கொண்டு வந்த போது, ரமணர் சுவரில் தாம் எழுதி வைத்திருந்ததைக் காட்டினுர். 'உணவு கொடுப்பதோடு நிறுத்திக் கொள்ளுங்கள். அபிஷேக ஆராதனைகள் எல்லாம் எனக்கு வேண்டாம்' என்பதைத் தெளிவாகக் கூறி விட்டார்.

இதற்குப் பிறகுதான் 'பிராம்மண சுவாமி'க்கு நன்ருக எழுதப் படிக்கத் தெரியும் என்பது எல்லோருக்கும் தெரிந்தது. அவர் யார் என்பதை எப்படியாவது தெரிந்து கொள்ள வேண்டும் என்று அநேகருக்கு விருப்பம் இருந்தது. எத்தனையோ முறை கேட்டுப் பார்த்தார்கள். பால ரமணர் பேசவும் இல்லை; எழுதிக் காட்டவும் இல்லை. கடைசியாக ஒரு நாள் வேங்கடராமய்யர் என்பவர் மீண்டும் மீண்டும் கேட்டபோது. பால ரமணர் **'வேங்கடராமன் திருச்சுழி'** என்று எழுதிக் காட்டினுர். திருச்சுழி எங்கே இருக்கிறது என்று வேங்கடராமய்யருக்குப் புரியவில்லை. அப்போது ரமணர் பக்கத்தில் இருந்த பெரிய புராண புத்தகத்தைப் பிரித்துக் காட்டி, அதில் சுந்தரமூர்த்தி சுவாமிகளால் பாடப் பெற்ற தலமான திருச்சுழியின் பெயரைச் சுட்டிக் காட்டினுர்.

— **தொடரும்.**

19.

இளகிய மனத்தில் துணிவு!

நண்பர்களை எப்படியோ துணிந்து சந்தித்தேன். எனது திருமணத்தைப் பற்றி ஒரு சிலரைத் தவிர, மற்றவர்கள் யாரும் அத்தனை அக்கறையோ, முக்கியத்துவமோ காண்பித்தாகளில்லை.

அன்றாடம் சர்வ சகஜமாக நடப்பவைகளில் இதுவும் ஒன்றாகக் கருதிப் பேசாதிருந்தனரே தவிர, நான் எண்ணியது போல் எனது திருமணம் நடக்கக் கூடாத ஒன்று என்றோ, இப்படி நடந்திருக்கக் கூடாது என்றோ வீண் கலவரமோ, கவலையோ மற்றவர்கட்கு ஏற்படவில்லையென்று அறிந்ததில் எனக்குப் பெரிய ஏமாற்றமே உண்டாயிற்று.

சிலரைப் போல் தோல்வியை வெற்றியாகக் கூறும் பழக்கத்தை நான் பெறாவிடினும், மற்றவர்கள் என்னைக் கேலி செய்யவில்லை என்பதிலே ஒரு பெரிய நிம்மதியும் மகிழ்ச்சியும் அடைந்தேன்.

தங்கமணியின் சைவம்!

எனது மனைவி தங்கமணி என்னுடைய வீட்டில் பழகுவதற்குச் சில நாட்கள் பிடித்தன. காலையில் ஐந்து மணிக்குள் குளித்து விடுவது, பூசை செய்தல், வீட்டைச் சுத்தமாக வைத்துக் கொள்வது முதலியவை அவளின் கடமைகளில் ஒன்று எனறு கருதுவது போல் செயற்பட்டாள்.

அசைவத்தைத் தொடக் கூட மாட்டாள். அதோடு அதன் வாடையையே அவளால் சகித்துக் கொள்ள முடியாமல் தவித்தாள். அப்படிப்பட்ட சமையல் இருந்து விட்டால் அன்று அநேகமாக அவள் பட்டினி என்று கூடச் சொல்லி விடலாம்.

சில சமயம் பின்கட்டில் போய், குமட்டலின் விளைவாக வாந்தி யெடுப்பதையும் காணுவேன்; அவளைச் சமாதானப்படுத்துவேன். என் தாயும் அவளுக்கு ஆறுதல் கூறுவார்கள்.

‘தங்கம்’ என்றழைக்கப்பட்ட அண்ணியார் தான் அவளோடு ‘நகமும் சதையுமாக ஒன்றிப் போனவர்கள்’ என்றால், அது பொருத்தமான உதாரணமேயாகும். அவர்கள்தான் அவளைத் தேற்றி மன அமைதி பெறச் செய்வார்கள்.

நான்

ஏன்

பிறந்தேன்?



உலக அமைதிக்கு உடன்பாடு

ருஷ்யாவுக்கும் மேற்கு ஜெர்மனிக்குமிடையே ஏற்பட்டுள்ள போர் தவிர்ப்பு ஒப்பந்தத்தை உலக மக்கள் அனைவருமே மகிழ்ச்சியுடன் வரவேற்பார்கள். ஏனென்றால், இன்று உலக வல்லரசுகளிடையே அரசியல் புகைச்சலும் ஆயுதப் போட்டியும் வளர்ந்து, உலக சமாதானத்துக்கு உலைவைக்கும் அபாய நிலை தோன்றி யிருப்பதற்குக் காரணமே இந்த ஜெர்மன் பிரச்னைதான்.

கடந்த உலக யுத்தத்தில் தோழர்களாகத் தோளோடு தோள் நின்று ஹிட்லரை எதிர்த்து வெற்றி கண்ட அமெரிக்கா, ருஷ்யா, பிரிட்டன், பிரான்சு ஆகிய நேச நாடுகளிடையே தோல்வியுற்ற ஜெர்மனியில் யாருடைய செல்வாக்கு நிலைக்க வேண்டுமென்பது பற்றித்தான் தகராறு துவங்கியது. ஜெர்மனியின் கிழக்குப் பகுதியை கம்யூனிஸ்டுகள் ஆக்கிரமித்துக் கொண்டு அதை ருஷ்யாவின் பிடியில் கொண்டு வந்தனர். மற்றொரு பகுதி மேற்கு வல்லரசுகளின் ஆதிக்கத்தில் இயங்கலாயிற்று. இந்த இரு கூறுகளையும் பற்றிய தகராறு வல்லரசுகளிடையே பலப்பரீட்சையாக மாறி, அவை ராணுவத்தையும், அணுகுண்டுகளையும் ஐரோப்பாவில் குவிக்கலாயின.

மேற்கு ஜெர்மனியின் புதிய தலைவர் பிராண்ட் இந்த நிலை நீடிப்பதில் யாருக்கும் பயனில்லை என்பதை உணர்ந்தார். ருஷ்யாவுடன் பேச்சு வார்த்தை நடத்த இசைந்தார். பல நாள் பேச்சு வார்த்தைக்கும் பேரங்களுக்குமிடையே ருஷ்யாவுக்கும் மேற்கு ஜெர்மனிக்குமிடையே ஓர் ஒப்பந்தம் உருவாயிற்று.


அந்த ஒப்பந்தப்படி ருஷ்யாவும் மேற்கு ஜெர்மனியும் எந்தத் தகராறையும் பலாத்கார முறையில் தீர்த்துக் கொள்ள முனைவதில்லையென்றும், ஐரோப்பிய நாடுகளிடையே தற்போது உள்ள எல்லைக் கோடுகளை மதித்து நடப்பதென்றும் ஒப்புக் கொண்டுள்ளன.

உள்ளத் தூய்மையோடு இரு நாடுகளும் இந்த ஒப்பந்தத்தை மதித்து நடக்குமானால் ஐரோப்பாவில் குவிந்துள்ள ராணுவமும் அணுகுண்டுகளும் வாபஸ் பெறப் படலாம். சண்டையிட்டவர்களே சமாதானமாகி விட்டதால்,
பார்களின்
யீடோ
யல்லவா? உலகின் மற்ற முனைகளிலும் தகராறு நீங்க இந்த ஒப்பந்தம் வழிகாட்டியாக இருக்கும்



ரஷியா வெளியிட்டுள்ள தேசப் படத்தில் சில இந்தியப் பகுதிகள் சீனாவினுடையதாகக் காண்பிக்கப் பட்டிருக்கின்றன. — செய்தி.

பி



அருணாசலத்திலிருந்து அண்ணாமலையார் ஆலயத் தோற்றம்.

அருணாசல மகிமை

32

தானந் தனியாக வீட்டை விட்டு வெளியேறி அருணாசலத்திற்கு வந்து, ஆத்மானுபவத்தில் லயித்து, சமாதி கூடி, சச்சிதானந்த சொரூபமாய் பிரகாசித்துக் கொண்டிருந்த பால ரமணரைத் தரிசிக்க வரும் அன்பர்கள் நாளும் பெருகிக் கொண்டு வந்ததால், கூட்டத்தைக் கட்டுப்படுத்த அவரோடு யாராவது இருக்க வேண்டியது மிகவும் அவசியமாயிற்று. குருமூர்த்தத்திற்கு வந்த பிறகு அண்ணாமலைத் தம்பிரானும், உத்தண்டி நயினாரும் அவருக்குத் தொண்டு புரிந்து வந்தனர். ஒரு நாள் அண்ணாமலைத் தம்பிரான் மடத்திற்குப் புறப்பட்டுச் சென்றார். பின்னர் ஒரு வருடத்திற்கு அவர் திரும்பி வரவேயில்லை. அவர் அங்கு இல்லாதபோது காவல் காத்து வந்த உத்தண்டி நயினாரும் தம் மடத்திற்குச் சென்று விட்டார். அச் சமயத்தில் தான் மலையாளி அன்பரான பழனி சுவாமி அருட்தொண்டு புரிய குருமூர்த்தத்திற்கு வந்து சேர்ந்தார்.

பழனிசுவாமி ஐயன்குளம் விநாயகர் கோயிலில் பூஜை செய்து கொண்டிருந்தார். பூஜை முடிந்ததும், கணபதிக்குப் படைத்த நைவேத்தியத்தையே உண்பார். அந்த ஒரு வேளை உணவுதான். அதில் உப்பு கூட இருக்காது. பழனிசுவாமியிடம் ஒரு நாள் சீனுவாச ஐயர் என்ற அன்பர் வந்தார். ''சுவாமி, நீங்கள் இந்தக் கல்லுச் சாமிக்கு இத்தனை வருடங்களாகத் தொண்டு புரிந்து வருகிறீர்களே, என்ன பிரயோஜனம்? குருமூர்த்தத்தில் ஒரு உயிருள்ள சாமி உட்கார்ந்து கொண்டிருக்கார். துருவனைப் போல் மாசில்லா தவத்தில் அவர் ஈடுபட்டிருக்கிறார். அவருக்குத் தொண்டு புரிய தற்போது ஒருவருமில்லை. நீங்கள் அங்கு போய் சேவை செய்து வாருங்கள். போகிற வழிக்காவது புண்ணியமுண்டு.'' என்று கூறினார். அதைக் கேட்ட பழனிசுவாமி ஒருநாள் குருமூர்த்தத்திற்குச் சென்று பால ரமணரை தரிசித்தார். அந்தக் கணமே அவருக்கு அடிமையானார். தம் உடல், பொருள், ஆவியை அன்னாருடைய சேவைக்கே அர்ப்பணித்து விடுவது என்று உறுதி பூண்டார். சிறிது நாட்கள் கோயிலுக்கும், குருமூர்த்தத்திற்குமாக அலைந்து கொண்டிருந்த பழனிசுவாமி, இறுதியாக அந்த பாலயோகியிடமே தஞ்சமடைந்து விட்டார். அந்த ஞான குருவை சம்சாரக் கடலைக் கடக்கும் ஓடமாகக் கருதி, நிழல் போல் அவரைப் பின் தொடர்ந்தார். சுமார் இருபத்தோரு வருடங்கள் அவருக்கு உள்ளத் தூய்மையுடன்


பரணீதரன்

கைங்கர்யம் செய்யும் பாக்கியத்தைப் பெற்ருர்.

பக்தர்கள் கொண்டு வரும உணவுப் பண்டங்களையெல்லாம் ஒன்ருகக் கலந்து பகவானுக்கு ஒரு கவளம் கொடுத்துவிட்டு, மீதியை சுற்றியிருப்பவர்களுக்கு பிரசாதமாகக் கொடுக்கும் பழக்கத்தை பழனிசுவாமிதான் தொடங்கிஞர். பால ரமணருடைய தவத்திறகு ஓர் இடையூறும் ஏற்படக் கூடாது என்பதில் கண்ணும் கருத்துமாகஇருந்த பழனிசுவாமி, சில சமயங்களில் அவரை உள்ளே வைத்துப் பூட்டி விட்டுப் போய் விடுவார்.

குருமூர்த்தத்தைச் சுற்றிலும் நிறைய புளிய மரங்கள் உண்டு. ஒரு நாள் ஒரு மரத்தடியில் பால ரமணர் அமர்ந்திருந்தார். அப்போது அங்கு புளியம்பழத்தைத் திருடுவதற்கு இரண்டு பேர் வந்தார்கள். அதில் ஒருவன் கல்நெஞ்சுக்காரன். ஒரு ஜீவனுக்கும் எந்த வித தீங்கும் நினைக்காமல் சாந்த மூர்த்தியாக அமர்ந்திருந்த ரமணரைக் கண்டான் அவன். அவனுக்கு விபரீத எண்ணம் ஒன்று தோன்றியது. அதை நண்பனிடம் கூறினுன்: ''அதோ கொட்டு கொட்டுன்னு முழிச்சிகிட்டு பேசாமெ ஒண்ணு உட்கார்ந்துகிட்டிருக்கு பார். வா, கள்ளிப் பாலைக் கொண்டு வந்து அதோட கண்லே ஊத்தலாம். அப்போதாவது பேசுதா பார்க்கலாம்''— அவன் உள்ளத்தில் புகுந்த பேய் பயங்கர யோசனையைக் கூறிற்று. ஆனுல், நண்பனே சற்று இரக்கம் உள்ளவன். அவன் சொன்னுன்: ''வேண்டாம்டா, பாவம். அந்தப் புள்ளை நம்மை என்ன செய்யுது? நாம வந்த காரியத்தை முடிச்சுகிட்டுப் போவோம்.''

எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டும் கேட்டுக் கொண்டும் பரப்பிரும்மமாக அமர்ந்திருந்தார் பால ரமணர். இந்த நிகழ்ச்சியைக் கேள்வியுற்ற பழனிசுவாமிக்கு கவலை அதிகரித்தது. அதை விட பாதுகாப்பான இடத்திற்கு ஞானகுருவை அழைத்துச் சென்று விட வேண்டும் என்று அப்போதே முடிவு செய்து விட்டார் அவர்.



அண்ணுமலையார் ஆலயத்தில் உண்ணுமுலையம்மை திருச்சந்நிதி மண்டபம்.

அது மட்டுமல்ல; வர வர பால ரமணருக்கு உடல் சக்தி குறைந்து கொண்டே வந்தது. உட்கார்ந்தால், எழுந்திருக்க முடியவில்லை. எழுந்து நின்ருல், நாலடி கூட நடக்க முடிவதில்லை. சுருண்டு சுருண்டு விழுந்தார். அப்போதெல்லாம் பழனிசுவாமிதான் கீழே விழுந்து விடாமல் அவரைத் தாங்கிப் பிடித்துக் கொள்வது வழக்கம்.

பால ரமணருக்கு ஓய்வு கொடுக்கவும், பார்க்க வருபவர்களின் தொந்தரவைக் குறைக்கவும் பழனிசுவாமி அவரை அருகிலுள்ள மாந்தோப்பிற்குள் அழைத்துச் சென்ருர்.

ஆலயத்தின் எழில்மிகு உட்தோற்றம்.





ஸ்ரீ ரமண பகவான்.

பொறித்திருக்கக் கண்டார் தம்மை நாடி வந்தவர்களின் சந்தேகங்களைப் போக்கவும், உணர்ந்து விட்ட தெளிந்த ஞானத்தை, உலகத்தாரின் உள்ளத்தில் எளிதாகப் பதிய வைப்பதற்கும் அந்நூல்களில் மேற்கோள்கள் பரவியிருக்கக் கண்டார். இவ்வாறே புலமை மிக்கவர்களோடு பால ரமணர் பழகப் பழக, சம்ஸ்கிருதத்திலும், மலையாளத்திலும் பிரமிக்கத் தக்க தேர்ச்சி பெற்று தம் கருத்துக்களை அம்மொழிகளில் எடுத்துரைக்கவும் தொடங்கினார்.

மதுரையில் படித்துக் கொண்டிருந்த வேங்கடராமன், திருவண்ணாமலைக்கு ஓடி வந்து இரண்டாண்டுகளுக்கு மேல் ஆகி விட்டது. இது வரையில் ஓர் உறவினராவது அவரை வந்து பார்க்கவில்லை. எப்படிப் பார்ப்பார்கள்? 'ஓடிப் போனவர்' இருக்குமிடம் அவர்களுக்குத் தெரிந்தால்தானே!

'என் தகப்பனாரைத் தேடிக் கொண்டு அவருடைய உத்தரவின்படி இவ்விடத்தை விட்டுக் கிளம்பி விட்டேன்' என்று சாதாரணமாக ஒரு கடிதத்தை எழுதி வைத்து விட்டு மூன்று ரூபாய் பணத்துடன் வேங்கடராமன் எளிதாக ஊரை விட்டுப் புறப்பட்டு விட்டார். ஆனால், சிறிய தந்தையையும், சித்தியையும், மூத்த சகோதரர் நாகசாமியையும் அச் செய்தி இடியெனத் தாக்கியது. படிப்பதற்காகத் தன் பராமரிப்பில் விட்ட பையனை வீட்டை விட்டு வெளியேறும்படி விட்டு விட்டோமே என்று சுப்பய்யர் தவியாய்த் தவித்து விட்டார். மன்னி அழகம்மாளுக்கு என்ன பதில் சொல்லப் போகிறோம் என்று துடித்து விட்டார். எங்கெல்லாமோ சென்று தேடினார். போலீசில் எழுதி வைத்தார்: யார் யாருக்கோ கடிதம் எழுதினார். ஒன்றும் பயனில்லை.

அண்ணன் நாகசாமியின் மனச்சாட்சி உறுத்தியது. 'நாம் கடிந்து

அங்குள்ள ஒரு பரணில் இருவரும் குடி புகுந்தனர். தோப்பின் சொந்தக்காரரான வெங்கடராம நாய்க்கரின் அனுமதியின்றி ஒருவரும் உள்ளே நுழைய முடியாததால், ஞானத் தவ யோகிக்குத் தேவையான தனிமை கிடைத்தது.

மாந்தோப்பில் இருந்த ஆறு மாதங்களையும் பயனுடன் கழித்தார் பழனி சுவாமி. ஊருக்குள் சென்று நூல் நிலையத்தினின்று கைவல்ய நவநீதம், யோக வாசிஷ்டம், விவேக சூடாமணி போன்ற புத்தகங்களை எடுத்து வந்து, ஒவ்வொரு வரியாக நிதானமாகப் படித்துக் கொண்டிருப்பார். பால ரமணர் அதை உன்னிப்பாக கவனிப்பார். சில சமயங்களில் அப்புத்தகத்தை வாங்கி, ஒரு புரட்டு புரட்டுவார். அதில் புதைந்துள்ள கருத்துக்களெல்லாம் படம் பிடித்தாற்போல் அவரது மனத்தில் அப்படியே பதிந்து விடும். சுய உணர்வாலும், ஆன்மிக அனுபவத்தாலும் பரிபூரண ஞானம் பெற்றவருக்குப் படித்து அறிந்து கொள்ள வேண்டியது ஒன்றுமேயில்லை. இருப்பினும், உணர்வோடு ஒன்றிவிட்ட தன் அனுபவங்களுக்கான விளக்கங்களை அவர் படித்த நூல்களில் கண்டார். எண்ணக் குவியல்களின் வடிவங்கள் எழுத்தில்

பேசியதால தானே தமபி ஓடி விட டான்! இப்படிச் செய்வான் என்று தெரிந்திருந்தால் அப்படிப் பேசி யிருக்க மாட்டேனே. .அப்படி என்ன பேசி விட்டேன்? சாதாரணமாக தினம் சொல்வது போலத்தானே சொன் னேன்! ஓர் அண்ணனுக்கு இநத உரிமை கூடக் கிடையாதா? .எங்கே போய் விடப் போகிருன்? கையிலிருக்கும் பணம் தீர்ந்ததும் திரும்பி வந்து விடு வான். .ஒரு வேளை வரா விட்டால் ..? அம்மாவுக்கு என்ன பதில் சொல்லு வது? அவள் முகத்தில் எப்படி விழிப் பது...? ஈச்வரா, எனக்கு இப்படி ஒரு சோதனையா?'

அப்போது அழகம்மாள் மாஞ மதுரையில், மைத்துனர் நெல்லையப் பையர் இல்லத்தில் இருந்தார். அந்த அம்மாளுக்குச் செய்தி எட்டியதும் வேதனையால் வெதும்பினர். நெஞ்சு குமுறினர். வயிற்றில் அடித்துக் கொண்டார். வாய்விட்டு அலறினா. எப்படியாவது குழந்தை இருக்குமிடத் தைக் கண்டு பிடித்து, அவனை அழைத்து வரும்படி மைத்துனர்களிட மும், பிள்ளையிடமும் வேண்டினர். எந்நேரமும் ஏக்கத்தில் மூழ்கி யிருந் தார். உணவு செல்லவில்லை. உறக்கம் கொள்ளவில்லை.

திருவனந்தபுரததில முகாமிட டிருந்த ஒரு நாடகக் கம்பெனியில் வேங்கடராமன் சேர்ந்து விட்டதாக யாரோ சொன்னர்கள். அது அழகம் மாளின் காதில் விழுந்தது. பெற்ற மனம் பித்தாயிற்றே! உடனே நெல்லை யப்பையரை திருவனந்தபுரம் போய் தேடிப் பார்க்கச் சொன்னர். பையன் அங்கு இருப்பான் என்ற நம்பிக்கை அவருக்குச் சிறிதும் இல்லை. என்ன செய்வது? மன்னியின் ஆசைக்குக் குறுக்கே நிற்க முடியுமா? திருவனந்த புரம் போய் இரண்டு நாள் சுற்றி விட்டு வந்தார். நாடகக் கம்பெனிகளி லெல்லாம் ஏறி இறங்கினர். எங்குமே வேங்கடராமனைக் காண முடிய வில்லை. ஏமாற்றத்துடன் திரும்பி வந்தார். அந்த ஏமாற்றச் செய்தியை தாயாரால் ஏற்றுக் கொள்ள முடிய வில்லை. தானே நேரில் சென்று பார்த்து விட்டு வந்து விடுவது என்று முடிவு செய்தார். தாயின் உணர்ச் சிக்கு யார் தடை போட முடியும்? துணைக்கு யாரையோ அழைத்துக் கொண்டு திருவனந்தபுரம் புறப் பட்டு விட்டார். பிள்ளைப் பாசம் லேசானதா?



அன்னை அழகம்மாள.

தெருவில் அலைந்து கொண்டிருநத அழகம்மாள் ஒரு கணம் திடுக்கிட்டு நின்ருர். 'அது யார்? ஆமாம், சந் தேகமில்லை. அது வேங்கடராமனே தான். அதே உயரம், அதே நிறம், அதே சுருண்ட கேசம்!' ஒரே பாய்ச்ச லில் அவனருகில் ஓடினர். "வெங் கடராமா... டேய், வெங்கடராமா" கன்றைத் தேடித் திரியும் பசு போல் உணர்ச்சிக் குரலெழுப்பினர்.

தன்னை யாரோ அழைப்பதைக் கேட்டு திரும்பினன் அந்தப் பையன். அழகம்மாளுக்கு வயிற்றில் புளியைக் கரைத்தது போலாயிற்று. அது வேங் கடராமன் இல்லை. வேறு யாரோ? ஏமாற்றத்தின் எல்லைக்கே போய் விட் டார் அவர். அழுது புலம்பினர். கீழே விழுந்து புரண்டார். உடன் வந்தவர்கள் பரிதாபப்பட்டார்கள். தாயன்பைக் கண்டு அவர்கள் தலை வணங்கி நின்றார்கள்.

இப்படி எத்தனையோ நிகழ்ச்சிகள். எல்லோரும் எங்கெல்லாமோ தேடிப் பார்த்து ஓய்ந்து விட்டார்கள்.

இரண்டு ஆண்டுகள் உருண்டோடி விட்டன. சுப்பய்யர் காலமானர்.

அதற்காக உறவினர்கள மதுரையில் கூடி யிருந்தார்கள். சடங்குகளில் கல ந்து கொள்ளுவதற்காக திருச்சுழியி லிருந்து வந்த ஓர் இளைஞன்தான், வேங்கடராமன் திருவண்ணுமலையில் இருக்கும் செய்தியை முதன் முதலில் எல்லோருக்கும் தெரிவித்தான்.

அவன் முதல் நாள் மதுரையிலுள்ள திருஞானசம்பந்தர் மடத்திற்குச் சென்றிருந்தான். அங்கு வந்திருந்த குன்றக்குடி ஆதீனத்தைச் சேர்ந்த அண்ணுமலைத் தம்பிரான், குருமூர்த் தத்தில் அமர்ந்திருக்கும் பாலயோகி யின் மகிமையைப் பற்றி யாரிடமோ உணர்ச்சிப் பெருக்குடன் பேசிக் கொண்டிருந்தார். அவர் பெயர் வேங்கடராமன் என்றும், அவர் திருச் சுழியைச் சேர்ந்தவர் என்றும் தம்பிரான் கூறியதைக் கேட்ட இளை ஞன் மறு நாள் அந்தத் தகவலை உற வினர்களிடம் கூறி யிருக்கிருன்.

சகோதரரின் இறுதிச் சடங்குகள் முடிந்ததும் நெல்லையப்பையர் நண் பர் ஒருவருடன் திருவண்ணுமலைக்குப் புறப்பட்டுப் போனுர்.

அவர்கள் இருவரும் வந்தபோது, பால ரமணர் மாந்தோப்பில் இருந் தார். சொந்தக்காரரின் அனுமதி யின்றி ஒருவரும் உள்ளே நுழைய முடி யாது என்று அறிந்த நெல்லையப்பை யர் வெங்கடராம நாய்க்கரிடம் தன் உறவைக் கூறி, பாலயோகியைப் பார்த்துத்தான் ஆக வேண்டும் என்று பிடிவாதம் பிடித்தார். ஒரு துண்டு காகிதத்தை எடுத்து "**மானுமதுரை வக்கீல் நெல்லையப்பையர் தரிசனம் செய்ய விரும்புகிறுர்**" என்று எழுதி, நாய்க்கரிடம் கொடுத்து "இதைக் கொண்டு போய் அவரிடம் காட்டுங் கள். அவர் வரச் சொன்னுல், உள்ளே விடுங்கள்" என்று கூறினுர். அந்தச் சீட்டை எடுத்துக் கொண்டு போய் பால ரமணரிடம் மரியாதையுடன் கொடுத்தார் நாய்க்கர்.

அந்தச் சீட்டை வாங்கிப் பார்த் தார் பிராம்மண சுவாமி என்னும் பால ரமணர். அது ரிஜிஸ்ட்ரார் ஆபீஸ் காகிதம். அதில் ஏதோ எழுதியிருந் தது. அது தமையனுர் நாகசாமியின் கையெழுத்துதான். அவருக்குச் சந்தேகமில்லை. 'நாகசாமி ரிஜிஸ் ட்ரார் ஆபீசில் வேலை செய்கிறுன் போலிருக்கிறது' என்று நினைத்துக் கொண்டார். பின்னர், சிறிய தந்தை யின் கையெழுத்தைப் பார்த்தார் அவரை உள்ளே அனுமதிக்கும்படி கூறினுர்.

உள்ளே நுழைநததும, 'வேங்கட ராமன்' இருந்த கோலத்தைக் கண்டு நெல்லையப்பையருக்கு கண்கள் கலங்கி விட்டன. வாடிய வயிறு, எலும்புகள் தெரியும் அங்கங்கள், சடை விழுந்த முடி, நீண்டு சுருண்ட நகங்கள். தன் சகோதரனின் பிள்ளை ஞானநிலை அடைந்து விட்டானே என்ற பூரிப்பு ஒரு புறம்; அநாதை மாதிரி கிடக்கி ருனே என்ற அஞ்ஞானத் துயரம் ஒரு புறம். 'சுவாமி'களிடம் என்ன பேசுவது என்றே புரியவில்லை அவருக்கு. வெங்கடராம நாய்க்க ரையும் பழனிசுவாமியையும் பார்த்துப் பேசினுர். "எங்கள் குடும் பத்தில் பிறந்த ஒருவர் சந்நியாசியாகி யோக நிலையில் இருப்பதைக் குறித்து எங்களுக்கு மகிழ்ச்சிதான். இருந்தா லும் இன்னும் கொஞ்சம் வசதிக ளோடு இருக்கலாமே என்பதுதான எங்கள் ஆசை. இவர் துறவு வாழ்க் கையை விட வேண்டாம். நான் வசிக் கும் மானுமதுரையில் ஒரு மகானின் சமாதிக் கோயில் இருக்கிறது. அங்கு வந்து தாராளமாகத் தங்கலாம். நாங் கள் எல்லா சௌகரியங்களையும் கவ னித்துக் கொள்கிறோம்."


நெல்லையப்பையர், ஒரு கண்ணை 'வேங்கடராம'னைப் பார்த்துக் கொண்டேதான் பேசினுர். ஆனுல், அதில் ஒரு வார்த்தையாவது பால ரமணரின் இதயத்தைத் தொட்ட தாகத் தெரியவில்லை. அவர் கற்சிலை யைப்போல, ஒருவித முகபாவமுமின்றி அமர்ந்திருந்தார். கண்ணுல் கூட தன் மனத்தில் இருந்ததைத் தெரியப் படுத்தவில்லை. அவருடைய திட சித்தத்தையும் வைராக்கிய யோகத் தையும் நன்கு புரிந்து கொண்ட நெல்லையப்பையர் வேறு வழியில்லா மல் ஊர் திரும்ப வேண்டியதாயிற்று. அழகம்மாளிடம் நடந்ததை யெல் லாம் சொன்னுர். அவருக்கு மைத் துனரின் சாமர்த்தியத்தின் மீது நம் பிக்கை யில்லை. தானே புறப்பட்டுச் சென்று, அன்புடன் அழைத்தால், மகன் தன்னுடன் புறப்பட்டு வந்து விடுவான் என்று நினைத்தார். மூத்த மகன் நாகசாமியை அழைத்துக் கொண்டு திருவண்ணுமலைக்குப் புறப் பட்டார். ரயிலில் போகும் போது அந்தத் தாயின் உள்ளத்தில் நம் பிக்கை யொளி படர்ந்திருந்தது.

— **தொடரும்**

டெலிபோன் ஆசிரியர்!

டெலிபோனிலோ அல்லது டேப் ரிகார்டர் மூலமாகவோ மாணவர்களுக்கு டியூஷன் சொல்லிக் கொடுக்கும் அதிசய ஆசிரியரைச் சந்திக்க வேண்டுமா?

மயிலாப்பூர் பி. எஸ். உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியராகப் பணி புரியும் திரு ஆர். நடேசன் தான் அந்தஅதிசய மனிதர்.



இதைப் பற்றி அவர் கூறியது:

''ஒரு சமயம், மயிலாப்பூர் எட்வர்ட் எலியட்ஸ் சாலையிலுள்ள ஒரு வீட்டில் டியூஷன் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தேன். அப்போது அடையாற்றிலிருந்து என் டியூஷன் மாணவன் ஒருவன் டெலிபோனில் பேசினான்.

அவன், ''சார்! நான் பரீட்சைக்குப் புறப்பட்டுக் கொண்டிருக்கிறேன்... விஞ்ஞான பாடத்தில் எனக்குச் சில சந்தேகங்கள் இருக்கின்றன. தாங்கள் உடனே ஒரு டாக்ஸியில் புறப்பட்டு வர முடியுமா?'' என்று கேட்டான்.

இந்த மாணவனும் பரீட்சைக்குப் போவதால் டியூஷனைப் பாதியில் நிறுத்திவிட்டு எப்படிச் செல்ல முடியும்? எனக்கு ஒரு யோசனை தோன்றியது. அதன்படி, அந்த மாணவனுடைய சந்தேகங்களையெல்லாம் போனிலேயே கூறச் சொல்லிக் கேட்டுத் தெளிவாக விளக்கினேன். இதற்கு சுமார் இருபது நிமிடம் பிடித்தது. அந்த மாணவனுக்குப் பரம திருப்தி.

இதற்குப் பின்னர் கொஞ்சம் எட்டியுள்ள என் மாணவர்களுக்குப் போனிலேயே டியூஷன் சொல்லிக் கொடுக்க ஆரம்பித்தேன். எழும்பூர், சைதாப்பேட்டை போன்ற தொலைவு இடங்களிலுள்ள மாணவர்களுக்கு வாரத்தில் மூன்று நாள் டியூஷன். இரண்டு நாள் போனிலும், ஒரே ஒரு நாள் மட்டும் நேரிடையாகவும் நடக்கும்.

அநேகமாகப் பெரிய மனிதர்கள் வீட்டு டியூஷன்களாதலால், அவர்கள் வீடுகளில் டெலிபோன் வசதி இருக்கும். என்னுடைய டெலிபோன் டியூஷன் மாணவர்கள் ஒருவர் கூட இதுவரையில் பெயிலானதே இல்லை. ஆனால், இந்த டெலிபோன் டியூஷனில் ஓர் இடைஞ்சலும் உண்டு. என்னிடம் டியூஷன் பயிலாத சில மாணவர்கள் கூட சில சமயம் போனில் என் டியூஷன் மாணவர்களின் பெயர்களில் ஒன்றைக் கூறி சந்தேகங்களைப் போக்கிக் கொண்டு விடுவார்கள். இந்த இடைஞ்சலினால் போன் டியூஷனைக் குறைத்துக் கொண்டு விட்டேன்.

சில வருடங்களுக்கு முன்பு திரு எம். ஜி. ஆரின் சகோதரர் திரு சக்ரபாணியின் குமாரர்களுக்கு டியூஷன் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தேன். நான் செல்கின்ற நேரத்தில் அவர்கள் வீட்டில் இல்லாவிட்டால், கேள்வி-பதில், விளக்கங்களை டேப் ரிகார்டரில் பதிவு செய்து வைத்து விட்டு வந்து விடுவேன். அவர்கள் வந்து போட்டுக் கேட்டுக் கொள்வார்கள்!''

— எஸ். ரமணி.



அண்ணாமலையார் ஆலயத்தின் கோபுர வாயிலில்

அருணாசல மகிமை

33

தனிமையை நாடி குருமூர்த்தத்தை யடுத்துள்ள மாந்தோப்பிற்குள் புகுந்த பால ரமணருக்கு அங்கும் நிம்மதியில்லை. சிறிய தந்தை நெல்லையப்பையர் வந்து போனதிலிருந்து அங்கிருந்து ஓடி விட வேண்டும் என்ற எண்ணம் அவரிடம் வேரூன்றத் தொடங்கி விட்டது. தம் அருகில் பழனிசுவாமி கூட இருக்க வேண்டாம் என்று தோன்றியது. ஒரு நாள் அவரை அழைத்து, ''நீங்க ஒரு திசையில் போய் பிச்சை யெடுங்க. நான் வேறொரு திசையில் போய் பிச்சை யெடுக்கிறேன். ரெண்டுபேரும் ஒண்ணாயிருந்தது போதும்'' என்றார். பழனிசுவாமி ஏதோ சொல்வதற்கு முயன்றார். அதற்குள் பால ரமணர், ஒன்றுமே பேசாமல் அங்கிருந்து கிளம்பி விட்டார். வேறு வழியில்லாமல் பழனிசுவாமியும் வேறொரு திக்கில் நடையைக் கட்டினார்.

மாந்தோப்பை விட்டுக் கிளம்பிய பால ரமணர், ஐயன் குளத்தருகில் உள்ள அருணகிரிநாதர் ஆலயத்தில் போய் அமர்ந்துவிட்டார். அன்றிரவே பழனிசுவாமி பகலில் பிச்சை யெடுத்த சோற்றுடன் அங்கு வந்து சேர்ந்தார். குருவின் பாதங்களில் விழுந்தார். அவரது கண்ணீர், தரையை நனைத்தது. ''சுவாமி, என்னை உதறித் தள்ளாதீர்கள். தங்களை விட்டால் எனக்கு வேறு கதியேது? தங்களது அருள் நோக்கைக் காணாது நான் வாழ முடியாது'' என்று கதறித் தீர்த்து விட்டார். மௌன குருவும் இள நகை புரிந்து, தம்முடன் இருக்க அவருக்கு அனுமதி தந்தார். சரணாகதி அடைந்தவனை குருவும்

பரணீதரன்

தெய்வமும் என்றுமே கை விட்ட தில்லை!

சில வாரங்கள் அருணகிரிநாதர் ஆலயத்தில் தங்கிவிட்டு, மீண்டும் அண்ணாமலையார் ஆலயத்தில் குடியேறினார் பால ரமணர். அங்குள்ள கோபுரங்களில் தங்கி, சமாதி கூடினார். பூந்தோட்டத்திலும் அவ்வப்போது வந்து அமர்ந்து, தவமியற்றினார். அங்கும் நிம்மதி குலையவே, பவழகிரீச்வரர் உறையும் பவழக்குன்றிற்கு குடி பெயர்ந்தார். அன்று கௌதம முனிவர் தவம் புரிந்த குன்றில், குமரனும் ரமணப் பெருந்தகை அருந்தவம் ஆற்றப் புகுந்தார்.

அன்பு மகன் இருக்குமிடம் அறிந்து அன்னை அழகம்மை, மூத்த மகன் நாகசாமியுடன் வந்த போது, பால ரமணர் பரட்டைத் தலையுடன், வாடிய வயிற்றோடு, கோவணாண்டியாக ஒரு பாறையில படுத்திருந்தார். அதைக் கண்ட தாயின் வயிறு பற்றி எரிந்தது. துயரம் தாங்காது, தொண்டைக் குழியில் பேச்சு அடைத்துப் போக, பீறிட்ட கண்ணீருடன் கலக்க முற்று நின்றார் அழகம்மை! தம்பியின் 'பரிதாப' நிலை கண்டு உள்ளம் குமைந்தார் நாகசாமி. அவர்களிருவரையும் பார்த்துவிட்டு, ஒரு வித முக பாவமுமின்றி தன்னில் லயித்திருந்தார் மௌன குரு.

அழகம்மாள் மகனுடன் பேசினார். கெஞ்சினார், குழைந்தார், குமுறினார், குழந்தையைப் போல் தேம்பித் தேம்பி அழுதார். "அப்பா, என் கண்ணே, செல்வமே, உன்னை இந்தக் கோலத்தில் பார்க்கவா பத்து மாதம் சுமந்து பெற்றேன்? எனக்குக் கல் மனசுடா. இல்லா விட்டால் உன்னை இரண்டு வருஷம் பிரிந்து இருந்தும் நான் உயிர் வாழ்ந்து கொண்டிருப்பேனா? நீ கல் தரையில் படுத்திருக்கும் போது, நான் பாயில் படுப்பேனா? நீ பட்டினி கிடக்கும் போது நான் வயிறு புடைக்கத் தின்பேனா? இனிமேலும் என்னால் தன்னந்தனியாக இருக்க முடியாது. நீ என்னுடன் புறப்பட்டு வந்து விடு. நீ வராமல் நான் ஊர் திரும்பப் போவதில்லை" -உணர்ச்சி கொப்புளிக்க, அடிவயிற்றிலிருந்து கதறினாள் அன்னை. அருள் மகன் அசைந்து கொடுக்கவில்லை. தவ மலைமீது, தாய்ப் பாசம் முட்டி மோதி, தோல்வியே கண்டது.

மூன்று நாட்கள் முயன்று பார்த்தாள் அன்னை. முற்றும் துறந்த முனிவனைப் பாசவலையில் சிக்க வைக்க முடியவில்லை. கருணையே வடிவானவர், அன்புக்கு அடிமையானவர், மனத்தைக் கல்லாக்கிக் கொண்டு பாச அலைகளைத் தாங்கிக் கொண்டார். உள்ளம் இளகவில்லை. கண் கலங்கவில்லை. அன்னைக்கு ஆறுதலாக மறுமொழி ஒன்றும் கூறவில்லை.

அருணாசலமாகவே அமர்ந்திருந்த அருமை மைந்தனை விட்டுப் பிரிய மனம் வரவில்லை தாய்க்கு. தன் வேண்டுகோளுக்கு செவி சாய்க்காத

ஆலயத்தின் கண்கவர் தோற்றம்



மகன், பிறர் பேச்சுக்கு இரங்கலாம் என்று நினைத்தார். அங்கிருந்தவர்களிடம் பரிதாபமாக முறையிட்டார்.

''நான் இந்தப் பிள்ளையைப் பெற்றவள். எத்தனை கதறியும் ஒரு வார்த்தை கூடப் பேச மாட்டேன் என்கிறான். நீங்களாவது எனக்காக அவரிடம் பரிந்து பேசக் கூடாதா? மூன்று நாட்களாக நான் தூக்கமின்றி, அன்ன ஆகாரமின்றி, அழுது புலம்பிக் கொண்டிருப்பதைப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்களே, உங்கள் மனமும் கல்லா?'' என்று உரிமையுடன் கடிந்து கொண்டார் அன்னை அழகம்மாள்.

அங்கிருந்தவர்களில் பச்சையப்பப் பிள்ளை பச்சையுள்ளம் படைத்தவர். தாயின் கண்ணீர் அவரை உலுக்கி விட்டது. குருநாதரிடம் சென்றார். பாதங்களில் விழுந்தார். கண்ணீருக்கிடையே விசும்பினார்:

''சுவாமி, உங்கள் வைராக்கியம் எங்களுக்குப் புரிகிறது! பெற்ற தாய்க்குப் புரியுமா? நீங்கள் தாயோடு ஊருக்குத் திரும்பிப் போக வேண்டாம். உங்கள் மனத்தில் உள்ளதை யாவது தெரிவிக்கக் கூடாதா? உங்கள் மீது உயிரை வைத்திருக்கும் இந்த அம்மாளுக்கு ஆறுதலாக ஒரு வார்த்தையாவது பேசக் கூடாதா''

இதைக் கேட்டு லேசாக புன்முறுவல் பூத்தார் பால ரமணர்.

அதன் பொருளைப் புரிந்து கொண்டார் பச்சையப்பப் பிள்ளை. தொடர்ந்து பேசினார்:

''சுவாமி, நீங்கள் இதற்காகத் தங்கள் மௌன விரதத்தைக் கலைக்க வேண்டாம். உங்கள் தாய்க்கு பதிலளிக்கும் வகையில் இரண்டு வரிகளாவது எழுதிக் காட்டுங்களேன்'' என்று பேப்பரையும் பென்சிலையும் அவரிடம் கொடுத்தார்.

அதை வாங்கி தவப் புதல்வர் தெளிவாக எழுதினார்.

அவரவர் பிராப்தப் பிரகாரம் அதற்கானவன் ஆங்காங்கிருந்து ஆட்டுவிப்பன். என்றும் நடவாதது என் முயற்சிக்கினும் நடவாது. நடப்பதென்றடை செய்யினும் நில்லாது; இதுவே திண்ணம். ஆகலின், மௌனமாயிருக்கை நன்று.

'முற்பிறவியின் நல்வினை தீவினையை யொட்டி நம்மை யெல்லாம் ஒரு சக்தி ஆட்டுவிக்கிறது. நாம்நடக்க வேண்டும் என்று நினைப்பது நடக்காது. நடக்கப் போவதை தடுத்து நிறுத்த ஒருவராலும் முடியாது. இது நிச்சயம். எனவே, மௌனமாயிருப்பதே நல்லது.'

மகன் எளிதாகக் கூறி விட்டார். அவர் அடைந்த பக்குவ நிலையை, தாய் இன்னும் அடையவில்லையே!

மகன் கூறிய சமாதானம் தாயின் உள்ளத்தைத் தொடவில்லை. இருப்பினும் அவர் மனத்தை மாற்ற முடியாது என்பது அந்தத் தாய்க்கு நன்றாகப் புரிந்து விட்டது. இனி அங்கிருப்பதில் பயனில்லை என்று உணர்ந்து, நாகசாமியை அழைத்துக் கொண்டு மானாமதுரைக்கே திரும்பி விட்டார்.

அழகம்மாளின் துயரத்திற்கு முடிவு இருப்பதாகத் தெரியவில்லை. ஒரு பிள்ளையை அருணாசலம் அழைத்துக் கொண்டு விட்டார். திருவண்ணாமலையிலிருந்து திரும்பிய ஓராண்டுக்கெல்லாம் நாகசாமி இறந்து விட்டார். சம்பாதித்துத் தன்னைக் காப்பாற்ற வேண்டிய மூத்த பிள்ளை போய் விட்டான். அன்னையின் வேதனைக்கு அளவேயில்லை.

இனி அவளுக்குக் கடைசிப் பிள்ளை நாகசுந்தரம்தான் கதி. கோயிலில் கணக்குப் பிள்ளை உத்தியோகம் பார்த்துக் கொண்டிருந்தார். அண்ணனைப் பார்க்க வேண்டும் என்று ஒரு நாள் அவருக்கு ஆவல் பிறந்தது. உடனே திருவண்ணாமலைக்குப் புறப்பட்டு வந்தார். சகோதரரைக் கண்டு மனம் கலங்கினார். கண்ணீர் பொங்க அவரைத் தழுவிக் கொண்டார். அந்நேரத்திலும் பால ரமணர் உணர்ச்சி வசப்படவில்லை.

அப்போது பால ரமணர் பவழக் குன்றை விட்டு அருணாசலத்தின் குகையொன்றில் வாசம் செய்து கொண்டிருந்தார். அதற்கு சத்குரு சுவாமி குகை யென்று பெயர். விரூபாட்ச தேவர் குகையிலிருந்து அங்கு வந்திருந்தார். விரூபாட்ச குகையில், ரமணரைக் காண வருகிறவர்களிடமிருந்து அதன் நிர்வாகிகள் பணம் வசூல் செய்தார்கள். தன்னைக் கருவியாக்கிக் கொண்டு பணம் சம்பாதிப்பதை இளம் சுவாமிகள் வெறுக்கவே, அங்கிருந்து புறப்பட்டு இந்தக் குகைக்கு வந்தார். மலர்த் தேனை நாடி வரும் வண்டுகள் போல் அங்கும் பக்தர்கள் அவரைச் சூழ்ந்து கொண்டார்கள்.

தம்பி நாகசுந்தரம், அண்ணனோடு தங்கி சேவை செய்ய வேண்டும் என்று விரும்பினார். தம விருப்பத்தை அண்ணனிடம் தெரிவித்தார். அவர் 'கூடாது' என்று தலையை அசைத்து விட்டார். அண்ணன் அபிப்பிராயத் திற்குத் தலை வணங்கிவிட்டு, தம்பி யும் ஊர் திரும்பி விட்டார்.

பின்னர், அழகம்யாளும் இதர உறவினர்களும் ஓரிரு முறை திரு வண்ணாமலைக்கு வந்து போனார்கள். ஒரு சமயம் காசி யாத்திரை சென்ற போது, மகனை தரிசித்து விட்டுப் போனார். 1914-ம் வருடம் வேங்கட ரமண சுவாமியை தரிசிகக திருப்பதி சென்று திரும்பிய போது, திருவண் ணாமலையில் இறங்கி, விருபாட்ச குகை யில் இருந்த பால ரமணருடன் சில நாட்கள் தங்கினார். அப்போது அழ கம்மாளுக்கு டைபாயிடு காய்ச்சல் கண்டது. அன்னையின் உடல்நிலை கண்டு அண்ணல் வேதனைப் பட்டார். பெற்ற தாயைப் பொறுமையுடனும் அக்கறையுடனும் பேணிக காத்தார்.

ஒரு சமயம் தாயின் உடலநிலைமோச மாகியது. நிலைமை கவலைக்கிடமாகி விட்டது. அத்தருணத்தில், தெய்வ மகன், அப்பன் அருணாசலேசனைக் குறித்து பிரார்த்தித்தார். அது தீந்தமிழ்ப் பாக்களாக மலர்ந்தது.

1. அலையா வருபிறவி
யத்தனையு மாற்ற
மலையா யெழுந்த மருந்தே—
தலைவா நின்
றாள்கதியாய் வாழுமென்
றாய்தாப மாற்றியே
யாளாவதுவு முனகடனே யாம்.

2. காலகா லாவுன் கமல
பதஞ்சார்ந்த
பால னெனையின்றாள் பாலந்தக்—
காலன்றான்
வாரா வகையுன்கால்
வாரிசமே காட்டுவா
யாராயிற் காலனுமே யார்?

3. ஞானங்கி யாயோங்கு
நல்லருண வோங்கலே!
ஞானங்கி யாலன்னை
நல்லுடலை—ஞானங்க
மாகச்செய் துன்பதத்தி
லைக்கியமாக் கிக்கொள்வாய்
சாகத்தீமூட்டுவதேன் சாற்று

4. மாயா மயக்கமதை
மாறறருண மாமலையென்
றாயார் மயக்ககற்றத்
தாமதமேன்—றாயாகித்
தன்னையடைந் தார்வினையின்
றக்கறுத்தாள் வாருலகி
லுன்னையாலா லுண்டோ வுரை!

ஞானமகனின் வேண்டுகோளுக்கு ஞானத் தந்தை செவி சாய்த்தார்.



அன்னையின் உடல்நிலை தேறியது. மக னிடம் விடை பெற்றுக் கொண்டு ஊருக்குத் திரும்பி விட்டார்.

பாசத் துடிப்புடன் மகனை நாடிப் போன தாயை அருணாசல ஞானமலை தன் வயப்படுத்திக் கொண்டு விட்டது; மகனை அழைத்துக் கொண்ட தந்தை அன்னையையும் அழைத்துக் கொள்ள திட்டம் வகுத்து விட்டார். அதற் கான சூழ்நிலையும் விரைவில் உரு வாகியது. அழகம்மாளின் குடும்பத் திற்குப் பெரும் ஆதரவாக இருந்த நெல்லையப்பையரும் இறைவனடி சேர்ந்தார். அதை யடுத்து நாகசுந் தரத்தின் இளம் மனைவியும் போய்ச் சேர்ந்து விட்டாள். மரணம் அடுத்து அடுத்து கொடுத்த அடி, அன்னையின் விரக்திக்கு வித்தூன்றியது. அது வைராக்கியச் செடியாக வளரத் தொடங்கியது.

வாழ்க்கையில் இனி அழகம்மா ளுக்கு என்ன இருக்கிறது? இறுதி நாட்களை அருள்மகன் சேவையில் கழிக்க நினைத்தார். திருவண்ணா மலைக்குப் பயணமானார். எச்சம்மாள் என்ற லட்சுமி அம்மாளுடன் தங்கி, விருபாட்ச குகையில் இருந்த மகனை அடிக்கடி தரிசித்து வந்தார். அன்னை மீண்டும் வந்த செய்தி பக்தர்களுக்கு அச்சத்தை அளித்தது. உறவு ஒட் டிக் கொண்டு விடுமோ என்று பயந்து உத்தம குரு வேறு எங்காவது சென்று விட்டால்...?

சேஷய்யா என்ற பக்தர் இதைப் பற்றி அழகம்மாளிடம் மனம் விட்டுப் பேசினார். சொந்த மகனிடமிருந்து தன்னைப் பிரிக்க நினைக்கும் விதியை நினைத்து மனம் குமுறினார் அன்னை. அருணாசலேசன் விரைவிலேயே விதி யைத் தகர்த்தெறிந்தார். இறுதியில் அன்னையின் ஆசை நிறைவேறியது. மகனிடம் போய் தங்கியவர், விரூ பாட்ச குகையிலிருந்த ஆச்ரமத்தோடு இணைந்து விட்டார்.

தாய்க்கு எல்லா குழந்தைகள் மீதும் அன்பும் பாசமும் இருப்பது இயற்கைதானே! தன்னந் தனியாய் தவித்துக் கொண்டிருந்த நாகசுந்த ரத்திற்கும் ஆள்விட்டு அனுப்பி தன் னிடம் வரவழைத்துக் கொண்டார். எந்தக் குடும்பத்தை விட்டு வேங்கட ராமன் பிரிந்து வந்தாரோ, அந்தக் குடும்பம் அவரைத் தேடி வந்து விட் டது. ஆனால், நிலைமை முற்றிலும் தலை கீழாக மாறிவிட்ட நிலையில்தான் இந்த சேர்க்கை ஏற்பட்டது. எல் லாமே ஈச்வரனின் லீலைகள்தானே!

நாகசுந்தரம் அண்ணனின் பக்தர் களில் ஒருவரானார். நாளடைவில் காஷாயம் ஏற்றுக் கொண்டு நிரஞ்சனா னந்த சுவாமிகளானார்.


அன்னைக்கு ஆச்ரமத்தில் வேலை சரியாக இருந்தது. தன் பிள்ளைகளுக் கும், தனக்கும், அங்கு வரும் அன்பர் களுக்கும் அவர்தான் சமையல் செய் தார். ரமணாச்ரமத்தில் இன்றும் நடந்து கொண்டிருக்கும் அன்ன வேள்வி, அன்னை அழகம்மாள் எழுப் பிய அக்னியாகும்.

அன்னை வந்த சில மாதங்களுக்குள் ரமணா, மேலேயுள்ள ஸ்கந்தாச்ரமத் திற்கு இடம் மாறி விட்டார். இன்றுள்ள ரமணாச்ரமத்திற்கு அடி கோலியது ஸ்கந்தாச்ரமம்தான்.

அங்கிருந்த ஆறு ஆண்டுகளும் அன்னைக்கு ஞான பாடம் நடந்து கொண்டிருந்தது. விரக்தி ஏற்பட்ட நிலையிலும் அவருக்கு அஞ்ஞானம் முழுமையாக மறையவில்லை. பாசத் திரை சத்திய தரிசனத்திற்குத் தடை யாக நின்றது. உலகிற்கெல்லாம் ஞான குருவாக விளங்கியவரை இன் னும் 'தன்மகன்' என்றே நினைத்தார். தன்னிடம் தனி அன்போடு மகன் பழக வேண்டும் என்று எதிர்பார்த்தார்.

தன் அன்னையின் மனத்திலிருந்து 'சொந்த பந்த' எண்ணங்களை அகற்று வதில் முனைந்திருந்தார் ரமணர். அவர் தாயிடம் நேராகப் பேசுவது கிடையாது. எச்சம்மாள் போன்றவர் களுடன் மட்டும்தான் பேசுவார். இது அன்னையை வாட்டியது. ஒரு நாள் ஆதங்கம் தாங்க முடியாமல் மகனிடம் இதைப் பற்றி கேட்டும் விட்டார். அதற்கு ரமணர் "எல் லாரும் எனக்குத் தாயார்தான். நீ மட்டுமல்ல" என்று பதில் கூறினார். அன்னையை ஆன்மிகத்துறையில் படிப் படியாக உயர்த்திக் கொண்டிருந்தார் அந்த உத்தம மைந்தன்.

இள வயது முதற் கொண்டே தெய்வ பக்தியில் திளைத்திருந்த அழகம்மாளுக்கு சிறுக சிறுக வேதாந்த மனப்பான்மையும் ஏற் பட்டது. அதற்கேற்ப, அவரது உள்ளம் மாறியது. உடையும் மாறி யது. அவரும் காஷாயம் தரித்துக் கொண்டார். அந்தக் குடும்பத்திற் கும் காவியுடைக்கும் மிக நெருங்கிய உறவு இருந்தது. — தொடரும்.



எல்லோருக்கும் சைவ உணவையே தயார் செய்து கொடுத்தார்கள.

பிராமண நண்பர்கள் மட்டும சமையல் கட்டிற்கு அருகிலேயிருந்த அறைக்குள்ளும் மற்றவர்கள் வெளியே தாழ்வாரத்திலும் சாப்பிடுவது வழக்கப் படுத்தப்பட்ட ஒன்ருக இருந்தது. பாய்ஸ் கம்பெனியிலிருந்த எங்களுக்குச் சிறிதும் பிடிக்காத இந்த நிலைமையை யார் முன்னின்று தடுப்பது என்பதில் எங்களால் வழி காண இயலாதிருந்தது.

திரு என். எஸ். கே. அவர்கள் இதைப் பற்றி மணி அய்யர் அவர்களிடமே கேலியாகக் கேட்டார்: "நீங்களும் நாங்களும் ஒருவரைப் போலத்தான் சாப்பாட்டிற்குப் பணம் கொடுக்கின்ருேம். அப்படியிருந்தும ஏனிப்படிப் பாகுபாடு?" என்று கேட்டார்.

"அப்படி ஒரு பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டு விட்டோம் என்ன செய்வது?" என்ருர் மணி.

சுயமரியாதைப் பிரசாரம்!

என்.எஸ்.கே.: பழக்கத்தை நாம தானே கொண்டாந்தோம். நாமே மாத்திடலாமே!

மணி: அதெப்படி? இதெல்லாம் நாமா கொண்டாந்தோம்? நமக்கு முன்னலே இருந்தவங்கல்லே இதுக்கு பதில் சொல்லணும்?

என்.எஸ்.கே.: அவங்க செய்த காரியத்துக்கு அவங்கதான் பதில் சொல்லணும். நியாயம். ஆனா, அனுபவிக்கிறது நாமதானே. இதுக்கு வழி செய்ய வேணடியதும நமம பொறுப்புதானே!

மணி. இதெல்லாம விதி. அதுக்கென்ன செய்யறது?

என.எஸ்.கே.: இதையும் விதின்னு சொனனேம்னு இனிமே நடக்கப் போறதையும் விதின்னு எடுத்துக்க வேணடியதுதான்!

மணி: ஓஹோ! என்ன, இங்கேயும் சுயமரியாதைப் பிரசாரம் பண்ணப போறியா?

என்.எஸ்.கே.: பிரசாரம் பண்றதுக்கு இந்தக் குறுகிய இடத்தைத தானு நான தேர்நதெடுக்கணும்.. ... இனிமே நான சொல்லித்தானு நீங்க புரிஞ்சுக்கணும்!

மணி: அநாவசியமா ஏன் பேச்சை வளர்த்தணும? விதியையே மாத்தப் போற நீங்களளாம் அதிகமாப் பேசறதை நிறுத்திட்டு, ஏதாவது நாட்டுக்கு வேண்டியதைச் செய்து காட்டுங்க.

என்.எஸ்.கே.: ஆகா! முதல்லெ இந்த வீட்டைச் சரி பண்ணிட்டு நாட்டுக்குப் போவோம்.

இவ்வாறு சொல்லியவாறு போய் விட்டார்.

மணி அவர்கள் எப்போதும் போல் படிக்கத் தொடங்கி விட்டார்.

(தொடரும்)



அருணகிரிநாதர் ஆலயம் (திருவண்ணாமலை).

அருணாசல மகிமை

34

சத்தியப் பொருளைத் தரிசித்து விட்ட ஆத்ம ஞானிகள் கருணைக் கடலாகக் காட்சி தருவார்கள். தங்களை நாடி வரும் எல்லா ஜீவன்களிடமும் வேற்றுமையின்றி மாசற்ற அன்போடு பழகுவார்கள். 'அனைவருக்கும் ஞானம் வர வேண்டும், அதனால் துயரம் தீர்ந்த பெருவாழ்வு வாழ வேண்டும்' என்ற பேரன்போடு ஆசி வழங்குவார்கள். உபதேச மொழிகள் கூறி நம்மை உயர்த்துவார்கள்; கண்ணால் பார்த்தே கரையேற்றுவார்கள்; கரத்தால் தீண்டி நற்கதி யருளுவார்கள்.

பாசத்தோடும் பெற்று வளர்த்தவளின் உரிமையோடும் தம்மைத் தேடி வந்த அன்னை அழகம்மாளின் மீது ஸ்ரீ ரமணர் எல்லையற்ற கருணையைப் பொழிந்தார். தாயின் அஞ்ஞானத்தைக் களைவதில் தீவிரமாக ஈடுபட்டார். அருள் விழியாலேயே, மௌன மொழியாலேயே மேலான நிலைக்கு அழைத்துச் சென்றார்.

குமரக் கடவுளும் தந்தைக்குத் தான் ஞான உபதேசம் செய்தார். அன்னைக்கு உபதேசம் செய்யும் உரிமை தெய்வத்திற்கே இல்லாத போது, மானிடப் பிறவி யெடுத்தவர்களுக்கு அந்த உரிமை இருக்க முடியுமா? அதனால்தான் ரமணரும் தம் தாய்க்கு நேரடியாக உபதேசம் செய்யவில்லை போலும்!

ஆச்ரமத்திற்கு வருபவர்களிடம் ரமணர் பேசுவதை அழகம்மை உன்னிப்பாக கவனிப்பார். சஞ்சலத்தோடும், சந்தேகங்களோடும் தம்மிடம் வருபவர்களுக்கு, உலக பந்தங்களிலிருந்து விடுபட்டு, தியானத்தாலும், தியாகத்தாலும் ஞானநிலை எய்தும் வழிமுறைகளை மகன் எடுத்துக்கூறும் போது, எல்லா அறிவுரைகளும் தனக்காகத்தான என்று அந்தத் தாய்

பரணீதரன்

நினைப்பாள். உள்ளத்தில் எழும் கேள்விகளுக் கெல்லாம் உறுதியான விடை கிடைப்பதை உணர்வாள்.

தன் மகனை வீட்டுக்கு அழைத்துப் போகலாம் என்ற சுயநல எண்ணத் தோடு வந்த அழகம்மாளுக்கு, ஆச்ர மத்திலுள்ள அனைவருமே தன் பிள்ளை கள்என்ற எண்ணம் ஏற்படும்படி செய் தார் ரமணர். 'நீ மட்டும் எனக்குத் தாய் இல்லை; நான் மட்டும் உனக்கு மகன் இல்லை' என்று தாய்க்கு உணர்த் தியதன் மூலம் மாபெரும் தத்துவத் தையே விளக்கி விட்டார்.

ஞானச் செல்வனின் அமிர்த மொழிகளைக் கேட்டு, பற்றும் பாச மும் மெள்ள மெள்ள விலகி, 'நான்' 'எனது' என்ற அகங்காரம நீங்கி, 'தாய்' 'மகன்' என்ற மாயத்திரை அகன்று, தோத்திரப் பாடல்களில் மூழ்கி, அழகம்மாள் எந்நேரமும் ஆத்ம தியானத்தில் ஈடுபட்டிருந்தார். தவச் செம்மலை ஈன்றெடுத்த தெய் வத்தாய், தன்னை மறந்து தவமியற் றிக் கொண்டிருந்தார்.

தன்னில் ஆழ்ந்து, தன்னலமற்ற தொண்டு புரிவதும் ஞானப பெரு வாழ்வுக்கு ஒரு சாதனமே. எனவே தான், ஆச்ரமத்திலிருந்தவர்களுக் கும் தரிசனத்திற்கு வருபவர்களுக் கும் உணவளிக்கும அருந் தொண் டாற்றி வந்தார் அழகம்மை. அன்புப் பணி, அவருடைய ஆன்மிக மலர்ச் சிக்குப் பெருந் துணையாய் நின்றது.

உள்ளம் உறுதியாய் இருந்த போதி லும், மூப்பின் அயர்ச்சியும் உடலின் தளர்ச்சியும் அவரது அன்றாட அலுவல் களில் நன்ருகத் தெரியத் தொடங்கி யது. தெம்பு குறைந்தது. அசதி மேலிட்டது. உடல் நலம் குன்றியது. தன் இறுதிக் காலம் நெங்கி விட்டது என்பதை அன்னை ஒருவாறு உணரத் தொடங்கிஞர். பற்று அற்று விட்டதால் மரணத்தைக் குறித்து அவர் சிறிதும் சலனப்பட வில்லை. 'நம் உடல் தான் மடிகிறது; உண்மைப் பொருளுககு அழிவே யில்லை' என்று உணர்ந்தவர்களிடம் காலன் தோல்வி யுற்று ஓட வேண்டி யவன் தானே?

அன்னை இறுதிக் காலத்தை நெருங்கிக் கொண்டிருக் கிருள் என்பது ரமணருக்குத் தெரிந்து விட்டது. சில மாதங்களாக கவே, தாய் அசதியால் சுருண்டு சுருண்டு படுப்பதையும், ஆயாசம் தாங் காமல் பெருமூச்சு விடுவதையும்அவர் கவனித்து வந்தார். அவ்வப்போது தாயை அன்புடன் விசாரிப்பார். ஓய்வு எடுத்துக் கொள்ளும்படி கூறுவார். அருகில் அமர்ந்து பணிவிடைகள் செய்வார். தம் உடலைப்பற்றி பகவான் கவலைப்பட்டதேயில்லை. ஆனல், பிற ருக்கு உடல் நலம் சரியில்லை யென்ருல் அவரால் தாங்கவே முடியாது.

அழகம்மாளுக்கு மருத்துவ சிகிச்சை யளிக்கப்பட்டது. அவையெல்லாம் தாற்காலிக நிவாரணமாக இருந்ததே தவிர, பிணியைக் குணப்படுத்திய தாகத் தெரியவில்லை. அன்னையின் உடல் நிலை வர வர மோசமாகிக் கொண்டே வந்தது. தெய்வ மகனின் கவனிப்பு அதிகமாகிக் கொண்டே போயிற்று. இரவெல்லாம் கண் விழித் திருப்பார். 'ஏம்மா முனகுகிறாய்? வலிக்கிறதா? எங்கேம்மா வலிக்கி றது?' என்று பரிவோடு விசாரித்துத் தடவிக் கொடுப்பார்.

1922-ம் ஆண்டு, மே மாதம், 19-ம் தேதி. ஸ்கந்தாச்ரமத்தில் எல்லோரும் அன்னையின் உடல நிலையைப் பற்றித் தான் பேசிக் கொண்டிருந்தாகள். 'இன்று தாண்டுவது கஷ்டம்தான்' என்று ஒருவருக்கொருவர் ரகசிய மாகச் சொல்லிக் கொண்டார்கள். இனி மருந்துகளால் பயனில லை. மனித முயற்சியும் முடிவடைந்து விட் டது. தற்போது இயற்கையின் ஆதிக் கத்திற்குட்பட்டிருந்தாள் அன்னை.

ரமண பகவான் பொறுமையே உரு வாக அருகில் அமர்ந்திருந்தார். கர்ம வினையில் முழு நம்பிக்கையிருந்தும்,

ஸ்கந்தாசரமம்



பறந்து செல்லும் உயிரைப் பிடித்து வைக்க முடியாது என்று தெரிந்தும் அன்னைக்கு அருட் தொண்டு புரிந்து கொண்டிருந்தார் அவர். 'அருணாசலா, அருணாசலா' என்று வாய் முணு முணுக்க, பெற்றவள் பேரமைதி கொண்டு அடங்குவதை அண்ணல் அருள் நோக்கோடு பார்த்துக் கொண் டிருந்தார்.

காலன் மிக நெருங்கி விட்டான்.

ஆச்ரமத்தினைச் துயர மேகம் சூழ்ந்திருந்தது. செய்து வைத்த சமையலை அன்று ஒருவரும் சாப்பிட வில்லை. பகவான் நீராகாரம் கூட உட்கொள்ள வில்லை.

அன்னைக்கு சுவாசம் கண்டு விட்டது. அடங்கப போகும் பிராணசக்தி மெள்ள மெள்ள ஒடுங்கிக் கொண் டிருந்தது. இறுதி மூச்சு மார்புக் கூட்டினுள் துடித்துக் கொண்டிருந்தது.

சுற்றிலும் நின்றிருந்த சீடர்கள் ராமநாம தாரக மந்திரத்தை உரக்க ஜபித்துக் கொண்டிருந்தனர். ஓரிருவர் வேதம் ஓதிக் கொண்டிருந்தனர். தேவார திருப்புகழ் பஜனை ஒரு புறம். தாயுமானவர், பட்டினத்தார் பாடல்களை அன்பர் ஒருவர் முணு முணுத்துக் கொண்டிருந்தார்.

அருணாசலத்திற்குப் பின்னால் அருணனும் மறைந்து விட்டான்.

அண்ணாமலையார் ஆலய கோபுரம்



அருணாசல ஜோதியோடு அழகம்மாளின் ஜீவன் கலந்து கொண்டிருந்தது.

அன்னையின் புனித ஜீவனை முக்தி புரிக்கு அழைத்துச் சென்று கொண்டிருந்தார் ரமணர். தெய்வங்களும், தேவர்களும் ஆசி வழங்க அங்கு அருவமாக எழுந்தருளியிருந்தார்கள்.

மணி எட்டு அடிக்க ஐந்து நிமிடங்கள்.

பகவானின் வலக்கரம் அன்னையின் இதயக்கமலத்தில இருந்தது. இடக்கரம் நெற்றியில் பதிந்திருந்தது. திருக்கரங்களிலிருந்து அருட் சக்தி பாய, அன்னைக்கு 'ஹஸ்த தீட்சை' அளித்துக் கொண்டிருந்தார் அருணை வள்ளல். ஜீவாத்மாவை பரமாத்மாவுடன் இணைத்துக் கொண்டிருந்தார். உயிரீந்தவள் உயர் நிலையடைய உதவிக் கொண்டிருந்தார். மாமுனிவருக்கும் தாயை மிஞ்சிய தெய்வமில்லை என்று உலகிற்கு உணர்த்திக் கொண் டிருந்தார் அந்த உத்தம மைந்தன்.

மணி எட்டு. ஜோதியோடு ஜீவன் கலந்து, உள்ளுக்குள்ளேயே ஒடுங்கி விட்டது.

அன்னை அழகம்மாள் புனிதனைப் பெற்றதனால் புண்ணியவதியானாள். இறுதிக் காலத்தில், ஜீவன் முக்தரின் அருட்கரம் தீண்டப்பட்டதால், புண்ணிய லோகம் பெற்றாள். மா தவத்தின் பயனாய் மகனையே குருவாகப் பெற்ற அந்த மாதரசி, மரணத்தை வென்று, மாத்ருபூதேச்வரர் ஆனார்.

அன்னை அடங்கிய பிறகுதான் அவ் விடத்தை விட்டு எழுந்தார் பகவான். மரணத்தின் உண்மை நிலையை உணர்ந்திருந்த மகானுக்கு மன சஞ்சலம் இருக்கக் காரணம் இல்லை. ஒரு தெய்வப் பணியை வெற்றிகரமாக முடித்து விட்ட நிம்மதியை அவர் திருமுகத்தில் காண முடிந்தது.

பின்னர் எல்லோரையும் அழைத்து, "வாருங்கள், சாப்பிடுவோம். அழுவதற்கோ துக்கம் கொண்டாடுவதற்கோ ஒன்றுமில்லை. நமக்குத் தீட்டும் கிடையாது" என்று கூறிய போது, அவர் எந்த நிலையிலிருந்து அப்படிப் பேசுகிறார் என்று புரியாதவர்கள் சற்றுத் திகைத்துப் போனார்கள்.

முதலிலேயே தகவல் போய்ச் சேர்ந்து விட்டிருந்ததால் ஊரிலிருந்து உறவினர்கள் எல்லோரும் அங்கு வந்து கூடியிருந்தார்கள். சீடர்கள் அன்னையின் திருமேனியைச் சுமந்து



கொண்டு மலையிலிருந்து இறங்கி, தெற்கில், பாலி தீர்த்தத்தின் அருகில் கொண்டு வந்து வைத்தார்கள். துறவியாக வாழ்ந்த அன்னையின் உடலுக்கு எரியூட்டாமல், அடக்கம் செய்வதுதான் முறை என்று மகரிஷி கொண்டிருந்த கருத்தை அறிந்தவர்கள் அவ்வாறு தீர்மானித்தார்கள்.

சமாதிக் குழியில் சடலம் இறக்கப் பட்டு, அதில் விபூதி, கற்பூரம், உப்பு, சாம்பிராணி எல்லாம் நிறைக்கப்பட்டது. பின்னர், பகவானின் முன்னிலையில், சாத்திர முறைப்படி அன்னை அடக்கம் செய்யப்பட்டார். அதன் மீது ஒரு கட்டடம் கட்டப்பட்டு, சிவலிங்கம் ஒன்றும் பிரதிஷ்டை செய்யப்பட்டது. அதைக் கருவறையாகக் கொண்டு, பின்னர் மாத்ருபூதேச்வரர் ஆலயம் எழும்பியது. நிரஞ்சனனந்த சுவாமிகளின் இடையறாத நன்முயற்சியினாலும், ரமண பகவானின் நல்லாசியாலும் அக் கோயில் சிறுகச் சிறுக வளர்ந்தது.

அன்னை அடக்கமான ஆறு மாதங்களுக்கெல்லாம், ரமணரின் மலைவாசமும் முடிவுற்றது. அவ்வாண்டு இறுதியில், ஸ்கந்தாச்ரமத்திலிருந்து புறப்பட்டு, அன்னையின் ஆலயத்தின் அருகிலேயே வந்து தங்கி விட்டார் அவர்.

அருணுசலத்தின் இதயக் குகைகளில் வாசம் செய்த நாட்களில்தான், 'பிராம்மணசுவாமி' என்று அழைக்கப் பட்டுவந்த வேங்கடராமன், 'பகவான்' ஆனார். ரமணர் என்றும், ரமண மகரிஷி என்றும் உலகிற்குஅறிமுகமானார். அத் திருநாமங்களை அவருக்குச் சூட்டியவர் காவ்யகண்ட கணபதி சாஸ்திரிகள் என்ற முனிவர். வேத உபநிடதங்களிலும், சகல சாஸ்திரங்களிலும், காவியங்களிலும், இதிகாசப் புராணங்களிலும் ஈடு இணையற்ற பண்டிதராக விளங்கிய அவர், பகவானுடன் தொடர்பு கொண்டு உன்னத நிலையடைந்தது மறக்க முடியாத வரலாறு ஆகும்.

— தொடரும்.

அன்புள்ள ஆசிரியருக்கு...

✶ 'நினைக்க முத்தி தரும்' திருவருணையில் நான் இளமைப் பருவத்தில் படித்திருந்த காலத்தில் ஸ்ரீ ரமண பகவானைப் பல தடவைகள் மிக அருகில், தரிசிக்கும் பேறு பெற்றுள்ளேன். ஆனால் அவர் யார், எந்த ஊர், எங்கிருந்து இங்கு வந்தார் என்ற விவரங்களை நான் அறியவில்லை. 'அருணாசல மகிமை' என் நீண்ட நாள ஐயத்தை நீக்கியது. தொடர்ந்து இது போன்ற பல மகான்களின் வரலாற்றை விகடனில் வெளியிட்டு வந்தால் நலமாக இருக்கும்.

களம்பூர். **பனைநகர். அ. சண்முகம் பிள்ளை.**

✶ பல வாரங்களாக எங்களைப் பக்திப் பரவசத்தில் ஆழ்த்தி, போகாத ஊர்களுக்கும், தெரியாத இடங்களுக்கும், காணாத கோயில்களுக்கும் அழைத்துச் செல்லும 'அருணாசல மகிமை' இன்னும் ஐந்து ஆறு வாரங்களில் முடிந்து விடுமோ என்ற ஏக்கம் என்னை வாட்டத் தொடங்கி விட்டது.

திருக்கழுக்குன்றம். **டி. எஸ். குப்புசாமி.**

✶ பரணீதரன் பாணி பக்தர்களைப் பரவச மூட்டுகிறது. நுட்பமான விஷயங்களையும் தெளிவான தமிழில் எழுதுகிறார் அவர்.

திருக்கருகாவூர். **டி. எஸ். கோபாலன்.**

✶ இதற்கு முன் ரமண மகரிஷியைப பற்றி நான் பல முறை படித்திருந்தாலும், 23-8-'70 இதழில் 'அருணாசல மகிமை'யில் படித்தபோது, எல்லையற்ற பரவசத்தில் மூழ்கினேன். மற்ற ஞானிகளைப் பற்றியும் எழுத வேண்டும்.

பம்பாய்-22. **பானுமதி சேஷன்.**

✶ பரணீதரன் என் உள்ளம் கவர் கள்வன். அவர் கட்டுரையில் கண்டறியாதன கணடேன். அன்னையாம் அழகம்மையுடன், நம்மையும் ரயிலில் அழைத்துச் செலவது போன்ற உணர்ச்சியை உண்டாக்கிய அவர் எழுத்து நயம், விண்ணை அளக்கும் நாள் தொலைவில் இல்லை.

அருப்புக்கோட்டை. **என். சுந்தரராஜன்.**

✶ திருவண்ணாமலை சேஷாத்ரி சுவாமிகள் ஆச்ரமத்திற்குச் சென்றேன். இந்தக் கட்டுரையின் தொடக்கத்தில் அறிமுகமாகிய திரு அருணாசலம் அவர்களை அங்கே சந்தித்தேன். தாம் ஏதோ சாதாரணமாக எழுதச் சொன்ன கட்டுரை, இவ்வளவு மகிமையுடன் வெளிவரும் அற்புதத்தைச் சொல்லிச் சொல்லி ஆனந்தக் கண்ணீர் வடிக்கிறார் அவர்.

பெங்களூர்-1. **ராஜம் சுப்பிரமணியன்.**

✶ 'அருணாசல மகிமை'யின் ஒரு பக்கத்தைப் படித்து முடிக்க எனக்கு ஒரு மணி நேரம் ஆகிறது. சில வரிகளைப் படித்தவுடன் புத்தகத்தை மார்போடு அணைத்து, தேம்பித் தேம்பி அழுகிறேன்.

திருநெல்வேலி-6. **ஏ. முத்துகிருஷ்ணன்.**

✶ முதலில் 'அருணாசல மகிமை'யைப் படிக்கத் தவறி விட்டேன். பின்பு எனது தாத்தா அவர்கள் 'இதை நீ கட்டாயம் படிக்க வேண்டும். உனக்குத் தெரிய வேண்டியவை ஏராளமாக இதில் இருக்கின்றன' என்றார். பின்பு படிக்கத் தொடங்கினேன். எப்போது வெள்ளிக்கிழமை வரும் என்று இப்போது காத்திருக்கிறேன். உங்கள் தொண்டு மகத்தானது.

காட்டூர். **மு. விசயகுமாரி.**

✶ 'இந்து' பத்திரிகையின் 12-8-70 தேதி இதழில், வடகிழக்கு எல்லைப்புற (நேஃபா) பகுதிக்கு 'அருணாசல பிரதேசம்' என்று பெயரிடப் போவதாக ஒரு செய்தி வந்திருக்கிறது. 'அருணாசல மகிமை'யின் பெருமை இமயத்தையே எட்டி விட்டது!

சென்னை-2. **என். பழனிகோபு.**

✶ 'அருணாசல மகிமை' கட்டுரையில் குன்றக்குடி ஆதீனத்தின் குருமூர்த்த விஷயமாக எழுதிய விவரங்களுக்கு என் நன்றி.

ஸ்ரீவைகுண்டம். **எஸ். ஜி. எம். திருஞானசம்பந்தம்.**

என்று எண்ணத் துவங்கினேன். அது வரையில் எனது தாயார் எதைச் சொல்கிறார்களோ அதுதான் வேத வாக்காக எண்ணிப் பேசாமலிருந்த நான், அன்றுதான் என் தாயாரின் கருத்து (பதில்) என்னைத் திருப்திப் படுத்தவில்லை யென்பது மட்டுமல்லாது, தாயாருக்குச் சரியாக எழுதப் படிக்கத் தெரியாததால் ஏதோ தன் மனத்தில் பட்டதைச் சொல்கிறார்கள் என்று நம்பினேன்.

பாதுகாப்போடு வளர்க்கப்பட்டேன்!

அதுவரையில் சைக்கிள் ஓட்டிக் கற்றுக் கொள்ள எனது தாயார் அனுமதித்ததில்லை. கோலி கூட விளையாடத் தெரியாது. எதிலும் முரட்டுத்தனமாக ஈடுபடும் என் குணத்தினால்தான் நான் அனுமதிக்கப்படவில்லையென்பதல்ல; நான் வேண்டாத சிலருடன் பழக வேண்டியேற்பட்டு, வேறு சில கெட்ட பழக்கங்களுக்கு ஆட்பட்டு விட்டால் என்னாவது? அவ்வளவு பாதுகாப்போடு வளர்க்கப் பட்டதால் எனக்கு எல்லாமே அதிசயமாயிருந்தது.

நான் இன்ஸ்பெக்டர் வேடம் ஏற்று நடிக்க வேண்டியவனானேன். ஒரு காட்சியில் நான் போலீஸ்காரருடன் சைக்கிளில் வந்து இறங்கி, சைக்கிளை விட்டு விட்டு ஓடுகிறவனைத் துரத்திப் போக வேண்டும்.

டைரக்டர் திரு. டங்கன் அவர்கள் என்னிடம் சைக்கிளை ஓட்டிப் போகச் சொன்னார்கள். எனக்குத் தெரியாதென்றேன். அவரால் நம்பவே முடியவில்லை.

சைக்கிள் கூட ஓட்டத் தெரியாத ஒருவன் நடிகனா!

வேறு வழியின்றி என்னை ஒரு சைக்கிளின் மீது உட்கார வைத்து இருவர் பிடித்துக் கொள்ள காமெரா ஓடத் துவங்கியதும் சைக்கிள் மீதிருந்த என்னோடு சைக்கிளைத் தள்ளி விட்டார்கள். ஒரு மரத்தடியில் அது போனதும் பிரேக்கைப் போட்டு, சாய்ந்து இறங்கி சைக்கிளை நிறுத்தி விட்டு ஓட வேண்டும். நான் தான் முரட்டுத் தனமுள்ளவனாயிற்றே!

தள்ளி விட்டவர்கள் பயந்ததற்கு நேர்மாறாகச் சைக்கிளை பிரேக் போட்டு, சாய்ந்த பக்கம் இறங்கி அதை அப்படியே மரத்தின் மீது எறிந்து விட்டு ஓடினேன்.

காட்சி முடிந்தது. ஒரு வகையில் எல்லோருக்கும் திருப்தி. ஆனால், ஒல்லியான ஒரு இளைஞர் வந்தார்.

''எவன் என் சைக்கிளை எடுத்தது? யாரெக் கேட்டு எடுத்தாங்க?'' என்று ஆத்திரத்தோடு கத்தினார்!


இயக்குநர் கிருஷ்ணன்

திரு. டங்கனுக்குத் தமிழ் தெரியாதாகையால் அவர் யாரோ எதற்கோ கத்துகிறார் என்பது போல் நெற்றியைச் சுளித்துப் பார்த்துக் கேட்டார், ஏன் சத்தம் போடுகிறார் என்று. அருகிலிருந்த திரு கே. எஸ் மணி அவர்கள் விவரத்தைச் சொல்ல, விழுந்து விழுந்து சிரிக்கத் துவங்கினார்



சின்னஞ் சிறு நகைச் சுவையையும் ரசித்து அனுபவிக்கும் அவர், சைக்கிளின் சொந்தக்காரர் கோணிப் போன நிலையிலுள்ள சைக்கிளைப் பார்த்து ஆத்திரப்படுவதைக் கண்டு எப்படிச் சிரிக்காதிருக்க முடியும்? அந்த சைக்கிளின் சொந்தக்காரர் தான் இப்போதைய பிரபல இயக்குநர்களான திருவாளர்கள் கிருஷ்ணன், பஞ்சு என்றழைக்கப் படுபவர்களில் முதல்வரான திரு. கிருஷ்ணன் அவர்களாவார்.

(தொடரும்)





அருணாசல மகிமை

35

சுமார் இருநூறு வருடங்களுக்கு முன், கும்பகோணத்திற்கு அருகிலுள்ள வலங்கைமானிலிருந்து கௌண்டின்ய கோத்திரத்தைச் சேர்ந்த ஒரு குடும்பம் ஆந்திராவில் குடியேறியது. அக் குடும்பத்திற்கு 'அய்யல ஸோமயாஜி' என்ற குலப் பெயர் வழங்கப்பட்டது.

அப்பரம்பரையைச் சேர்ந்தவர்களுக்கு ஸ்ரீவித்யா உபாசனை உண்டு. அவர்கள் ஜோதிஷ சாஸ்திரத்திலும், தந்த்ர சாஸ்திரத்திலும், ஆயுர்வேதத்திலும் தேர்ச்சி பெற்றவர்கள். வேத சாஸ்திரங்களிலும் கரைகண்டவர்கள்.

அந்த வம்சத்தில் வந்தவர் நரசிம்ம சாஸ்திரியார். அவர் விசாகப்பட்டணத்திற் கருகில், பொப்பிளி சமஸ்தானத்தில் 'கலவராயி' என்ற சிற்றூரில் வசித்து வந்தார். ஒரு சமயம் அவர் தமது மனைவியுடனும், மூத்த பையனுடனும் காசிக்குச் சென்றார். அங்குள்ள ஒரு விநாயகர் கோயிலுக்கு தரிசனத்திற்காக நரசிம்மசாஸ்திரியார் சென்ற போது, மூலஸ்தானத்திலிருந்து ஒரு குழந்தை புறப்பட்டு, மெள்ள இவரை நோக்கித் தவழ்ந்து வந்தது. அதை அப்படியே வாரி அணைத்துக் கொள்வதற்காகக் குனிந்தார் அவர். ஆனால்,



அக்குழந்தை அவர் கண்களிலிருந்து மறைந்து விட்டது. அந்த நிகழ்ச்சி சாஸ்திரியாரை உலுக்கி விட்டது.

ஊருக்குத் திரும்பியதும் சாஸ்திரியாரின் மனைவி கருவுற்றாள். பத்து மாதங்கள் கழித்து ஓர் ஆண் மகவை ஈன்றாள் அந்தப் பெண்மணி. காசியில் நடந்த அதிசயத்தை மறக்க முடியாத சாஸ்திரியார் அக்குழந்தைக்கு கணபதி என்று பெயரிட்டார். ஸ்ரீமகா கணபதியின் அம்சமாகவே அந்தக் குழந்தை பிறந்திருப்பதாக அவர் நம்பினார்.

ஆறு வயது ஆகும்வரையில் அந்தப் பாலகன் சரியாகவே பேசவில்லை. மழலைச் சொல்லில் உளறிக் கொட்டிக் கொண்டிருந்தான். எப்போதும் ஏதாவது ஒரு நோய் அவனை வாட்டிக் கொண்டிருந்தது. இடையிடையே வலிப்பு வந்து கஷ்டப்படுவான். அதைக் கண்டு பெற்றோர் பெரும் வேதனைக்குள்ளானார்கள்.

எந்த மருந்திலும் குணமாகாத நோய்க்கு அசுர வைத்தியம் செய்தார்கள். அவன் உடம்பில் சூடு போட்டார்கள். மறுநாளிலிருந்து அவன் உடல் நலம் தேறியது. நன்கு தடையின்றிப் பேசும் திறனும் பெற்றவனாய் பொழிந்து தள்ளினான்.

எட்டாவது வயதில் பள்ளிக்கூடத்தில் நல்ல தேர்ச்சி பெற்றான். இலக்கண நூல்களைக் கற்றுத் தேர்ந்தான். பத்தாவது வயதிலேயே குலத்திற்குரிய சாஸ்திரங்களில் வல்லவனானான். பஞ்சாங்கம் கணிக்கும் அளவுக்கு ஜோதிஷத்திலும் கணிதத்திலும் திறமை மிக்கவனானான்.

பின்னர், காவியங்களிலும் இலக்கிய நூல்களிலும கணபதியின் மனம் நாட்டங் கொண்டது. காளிதாசனின் படைப்புக்களில் உள்ளத்தைப் பறிகொடுத்தான். கவியின் மேகசந்தேசத்தைப் போலவே 'பிருங்கசந்தேசம்' என்ற நூலை இரண்டு காண்டங்களாகப் பாடிமுடித்தான்.

பதினான்காவது வயதில், வியாகரணத்திலும் அலங்கார சாஸ்திரங்களிலும் பயிற்சி பெற்று விட்டு ராமாயணம், மகாபாரதம் முதலிய புராணங்களையும் இதிகாசங்களையும் ஆராய்ச்சி மனப்பான்மையோடு பல முறை படித்து முடித்தான்.

பதினெட்டாவது வயதில் விசாலாட்சி என்ற உத்தமியைக் கணபதி கரம் பற்றினார். அவள் பஞ்சதசீ மகாவித்தையை அறிந்தவள். பராசக்தியின் அருள் பரிபூரணமாக நிரம்பப் பெற்ற நல்லாள். கணவனின் அருள் வாழ்வுக்கு உற்ற துணையாக நின்ற தூயவள்.

இள வயதிலேயே தந்தையிடம மந்திரோபதேசம் பெற்றிருந்தார் கணபதி. அப்போதிருந்தே ஜபதபங்களில் அவருக்கு ஈடுபாடு உண்டு. மந்திர ஜபத்தினால் பல ஸித்திகளைப் பெறலாம் என்ற நம்பிக்கை அவருக்கு இருந்தது. தவசக்தியால் துருவனைப் போலவும் விசுவாமித்திரரைப் போலவும் உன்னத நிலையை அடைய வேண்டும் என்ற வேட்கை அவருள் கொழுந்து விட்டு எரிந்தது. அந்த எண்ணத்துடன் ஒரு நாள் வீட்டை விட்டே வெளியேறி விட்டார்.

கோதாவரி கங்கை, யமுனை முதலிய புண்ணிய நதிகளின் கரையோரங்களிலுள்ள ஆலயங்களில் அமர்ந்து, சிவ பஞ்சாட்சரி மந்திர ஜபம் செய்தார். அதன் பலனாக பல சாஸ்திரங்களில் இவருக்குப் பிரமிக்கத் தக்க புலமை ஏற்பட்டது. பல மந்திரங்களின் பொருள் விளங்கியது

புவனேச்வரத்தில் அவர் தங்கியிருந்த போது, ஒரு நாள் கனவில் ஒரு பெண்மணி வந்து இவர் நாவில் தேன் துளிகளைச் சொட்ட விட்டுச் சென்றாள். கலைவாணி கருணை மழை பொழிந்தாள். கவிதை வெள்ளம் கரை புரண்டோடியது. கணபதி ஆசு கவியானார்.

விருபாட்சதேவர் குகை



சமஸ்கிருத [illegible] ஞானமும் கவிதைத் திறனும் [illegible] கணபதி, பண்டிதர்களைப் போற்றி வணங்கும் காசித்தலம் சென்றார். அங்கிருந்த சிவகுமார பண்டிதர் இந்த 'சிவகுமார'ருக்குப் பழக்கமானார். அப்போது வங்காளத்திலுள்ள நவத்வீபத்தில் நடைபெற விருந்த வித்வத் சபைக்கு கணபதியை அனுப்புவது என்று முடிவு செய்த சிவகுமார பண்டிதர், அந்த சபையின் காரியதரிசிக்கு சிபாரிசு கடிதம் கொடுத்தனுப்பினார். அதை எடுத்துக் கொண்டு வங்காளம் சென்றார் கணபதி சாஸ்திரி. அப்போது அவருக்கு வயது இருபத்தொன்று.

வயதில் சிறியவராகவும் உடலமைப்பில் மெலிந்தவராகவும் இருந்த கணபதி, சபையினுள் நுழையும் போதே தன்னை மிஞ்ச இங்கு ஒருவரும் இல்லையென்ற தன்னம்பிக்கையுடன் கம்பீரமாக நடந்து சென்றார். அங்கு அனைவரையும் பரீட்சை செய்ய வீற்றிருந்த ஆசு கவியான அம்பிகா தத்தரைச் சுட்டிக் காட்டி, 'இவர் யார்?' என்று வினவினார். அதைச் செவி மடுத்த அந்த வயதான பண்டிதர், "நான் கௌடன், சீக்கிரமாகக் கவிதை புனைவதில் சூரியனைப் போன்று பிரகாசிப்பவன். அம்பிகா தத்தன் என்று பெயர்" என்று ஓர் அழகான அனுஷ்டுப் விருத்தத்தில் கூறினார்.

அதற்கு ஆரியா விருத்தத்தில் 'பட்'டென்று பதில் கூறினார் கணபதி: "நான் கணபதி. தெற்கு தேசத்திலிருந்து வந்திருக்கிறேன்"—அதாவது 'நீ கேவலம் அம்பிகையின் தத்துப் பிள்ளைதானே! நான் அம்பிகையின் சொந்தப் பிள்ளையாயிற்றே' என்ற பொருள் அவர் வாசகத்தில் தொக்கி நின்றது. பிரமித்துப் போனார் அம்பிகாதத்தர்.

பின்னர் சில சுலோகங்களின் இரண்டாவது அடியைக் கூறி அதற்கு முதல் அடியைக் கற்பனை செய்யும்படி கணபதியைப் பார்த்துக் கூறினார் அம்பிகா தத்தர். உதாரணமாக,—

அம்பிகா:— மேலாடையை எடுத்து விட்டு நாட்டுப் பெண் மாமனைரை விரும்பினாள்.

கணபதி:— பீமசேனனின் மனைவி, கோடைக் காலத்தில் வெய்யில் தாங்காமல் மேலாடையை விலக்கி விட்டு, மாமனாரை (வாயு பகவான்) விரும்பினாள்.

அம்பிகா:— எறும்புகள் சந்திர மண்டலத்திற்குச் சென்றன.

கணபதி:— தட்சனின் யாகத்திற்கு பார்வதி தேவி சென்ற சமயத்தில் பிரிவாற்றாமையில் சிவபெருமான் துயரத்துடன் படுத்துக் கொண்டிருந்த போது, அமிருதத்தை சாப்பிடுவதற்காக எறும்புகள் அவர் முடியிலிருந்த சந்திரனிடம் சென்றன.

பின்னர் காவிய பிரகாசத்திலிருந்து ஒரு சுலோகத்தையும், ரகுவம்சத்திலிருந்து ஒரு சுலோகத்தையும் கூறி, பொருள் கேட்டார் அம்பிகா தத்தர். அவற்றுக்குப் பிழையின்றி விளக்கம் கூறினார் கணபதி சாஸ்திரி.

கணபதி சாஸ்திரியின் எல்லையற்ற புலமையைக் கண்டு அம்பிகா தத்தர் அதிசயித்த போதிலும், அவரைத் திணற அடிப்பதற்காக அவரிடம் ஓர் இலக்கணப் பிழையைக் கண்டு பிடித்தார். 'சர்வாஸாம்' என்று பெண்பாலில் உபயோகிக்க வேண்டியதற்கு மாறாக 'சர்வேஷாம்' என்று ஆண்பாலில் பயன்படுத்தி விட்டார். அதைச் சுட்டிக்காட்டி "உனக்கு அம்பிகையின் அருள் இருக்கிறது என்று கூறுகிறாயே, இந்தப் பிழை எப்படி வந்தது?" என்று கேட்டார் அம்பிகா தத்தர். அதற்கு நேரடியாகப் பதில் கூறாமல், அம்பிகா தத்தரின் கேள்வியிலேயே ஒரு தவற்றைக் கண்டு பிடித்து மடக்கினார் கணபதி சாஸ்திரி: "தாங்கள் மகா பண்டிதர் ஆயிற்றே. 'ஸார:' என்று இருக்க வேண்டிய ஆண்பாலுக்குப் பதில் 'ஸாரா' என்ற பெண்பாலை எதுகை மோனைக்காகப் பயன்படுத்தி விட்டீர்களே. உங்கள் வாக்கில் இந்தப் பிழை எப்படி வந்தது? தங்களுக்கு ஈச்வரனின் அருள் இல்லை போலும்" என்று ஏளனம் செய்தார்.

அம்பிகா தத்தருக்குக் கோபம் வந்து விட்டது. "யானையைப் போல் மதம் பிடித்து அலையாதே. உன் மண்டையைப் பிளந்து மாமிசத்தை உண்ணக் காத்திருக்கும் சிங்கம் நான்" என்று கர்ஜித்தார். அதைக் கண்டு கணபதி சாஸ்திரி பயந்து விடவில்லை. அம்பிகா தத்தரின் அந்த சுலோகத்திலும் வியாகரணத்தின் அடிப்படையில் ஒரு தவற்றைச் சுட்டிக் காட்டினார்.

இவ்வாறு இவ்விரு கவிகளுக்கிடையே வாக்குவாதம் வலுக்க ஆரம்பிக்கவே, சபையின் காரியதரிசி குறுக்கிட்டு, நடுவராக நின்று இருவருக்குமிடையே சமாதானம் செய்து வைத்தார்.

இறுதியாக அம்பிகா தத்தர் கணபதி சாஸ்திரியை அவமானப் படுத்தவேண்டும் என்ற எண்ணத் துடன், ‘‘தெற்கு தேசத்தவர்கள் கள்ளைக் குடித்து விட்டு திண்ணையில் உருண்டு கொண்டிருப்பார்கள்’ என்று ஒரு சுலோகமாகப் பாடினார். அதைப் பூர்த்தி பண்ணுவது போல் கணபதி சாஸ்திரி, ‘‘கௌடர்கள் உயிர் போனாலும், செல்வத்தை இழந்தாலும் மீன் தின்னும் பழக் கத்தை மட்டும் ஒருபோதும் விட மாட்டார்கள்’’ என்று ஓர் அடியை எடுத்துச் சொன்னார்.

அம்பிகா தத்தர் திணறிப் போய் விட்டார். பண்டிதர்கள் நிறைந்த சபை கைகொட்டி ஆரவாரம் செய்தது.

வாக்குவாதத்தின் போது தாம அவமரியாதையாக நடந்து கொண் டதற்கு தலைவரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார் கணபதி சாஸ் திரி. ‘‘கடைசிசுலோகத்தில்நீ பயன் படுத்திய ‘அமீ ந மீனம்’ என்ற இரண்டு‘மீ’க்களும் உன் குறைகளை யெல்லாம் மறைத்து விட்டன’’ என்று கூறிய அம்பிகா தத்தர், மகிழ்ச்சியில் திளைத்துப் போய் கணபதி சாஸ்திரியைக் கட்டித் தழுவிக் கொண்டு, அவருக்கு **‘காவிய கண்டர்’** என்ற விருதைக் கொடுத்து, உளமாரப் பாராட்டி அனுப்பி வைத்தார்.



காவிய கண்ட கணபதி முனிவர்

காவிய கண்ட கணபதி சாஸ்திரி கள், பின்னர் தமிழ் நாட்டை நோக்கிப் பயணமானார். ஸ்ரீகாமாட்சி யின் அருளாட்சி நடக்கும் காஞ்சிக்கு வந்தார். அங்கிருந்து, அன்னை தவ மிருந்து ஐயனின் இடப்பாகம் பெற்ற அருணாசலத்திற்குச் சென்றார்.

1903-ம் வருடம் அருணையின் கருணை நிழலில் வந்து தங்கிய கணபதி சாஸ் திரிகள், புத்துணர்ச்சி பெற்றார். அருணேசனின் தரிசனம் அவரைப் பரவசப்படுத்தியது. அதனால் அவ ருக்கு ரமணரின் தரிசனம் கிடைத்தது.

மலை மீதுள்ள விருபாட்ச குகையில் மெய்த்தவம் இயற்றிக்கொண்டிருந்த பிராம்மண சுவாமியைப்பற்றி யாரோ ஒருவர் அவரிடம் கூற, அம் மகானைத் தேடிச் சென்றார் கணபதி சாஸ் திரிகள். அங்கு தட்சிணாமூர்த்தியாக அமர்ந்திருந்த குருநாதரைக் கண்ட தும் விநாயகமூர்த்திக்கு உரிய வணக் கத்தைக் கூறினார்:

சுக்லாம் பரதரம் விஷ்ணும்
சசிவர்ணம் சதுர்புஜம்
ப்ரஸன்ன வதநம் த்யாயேத்
சர்வவிக்நோப ஸாந்தயே!

இந்த மந்திரம் தாம் கண்ட சுவாமி களுக்கும் பொருத்தமாக அமைந்துள் ளதை விளக்கினார் கணபதி சாஸ்திரி.

சுவாமிகளும் வெள்ளை ஆடை யைக் கோவணமாகக் கட்டி யிருக் கிறார்; பிரும்ம சொரூபமாக இருப் பதால் எங்கும் வியாபித்திருக்கிறார். நிலவைப் போன்ற தேக காந்தி யுடன் சோபிக்கிறார். மனம், புத்தி, சித்தம், அகங்காரம் நான்கையும் வசப்படுத்தி அடக்கி யிருக்கிறார்; இன்முகத்துடன் கூடியவராயிருக் கிறார்; ஆத்ம தரிசனத்துக்கு இடை யூறாக இருக்கும் நம் சந்தேகங்களைக் களைகிறார். தம்மை நாடி வரு பவர்களுக்கு மனச் சாந்தி யளிக்கிறார்.

இதையெல்லாம் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தார் ரமணர். அருள் வெள்ளம்பொங்கிப்பாய்ந்தது. கணபதி சாஸ்திரிகளின் நாவில் கலைவாணி நர்த்தனம் புரியத் தொடங்கினாள். அடுத்த கார்த்திகை தீபப் பெருவிழாவின்போது காவிய கண்டர் அருணாசலேச்வரரின் மீது பக்தி மேலிட, பல கவிதைகள் இயற்றினார்.

அருணையில் ஓராண்டுக் காலம் வசித்த பிறகு வேலூர் கல்லூரியில் தெலுங்கு ஆசிரியராகப் பணி புரியச் சென்றார் கணபதி சாஸ்திரிகள்.

ஆசிரியராகப் பணி புரிந்து கொண்டிருந்த நேரத்திலும் தல யாத்திரை போவதை அவர் விட்டுவிட வில்லை. பல ஆலயங்களுக்குச் சென்று, தவம் இருந்தார். சக்தி உபாசனை அவருக்கு ஆத்ம சக்தியைக் கொடுத்தது. ஆனால், எதிர்பார்த்தது போல் அவருக்கு தெய்வ தரிசனம் கிட்டவில்லை. தாம் புரியும் தவத்தில் ஏதோ குறை இருக்க வேண்டும் என்று மனச்சஞ்சல முற்றார். பக்தன் துயருற்றால் பரமன் பார்த்துக் கொண்டிருப்பானா? அருணாசலேசனிடமிருந்து அவருக்கு அழைப்பு வந்தது. அடுத்த கணம் வேலையை ராஜினாமா செய்து விட்டு மீண்டும் அருணாசலத்திற்கே வந்து சேர்ந்தார்.

அருணாசலத்தில், அருணாசலேசனை மனத்தில் இருத்தி, சிவ பஞ்சாட்சரி மந்திரத்தை ஜபித்துக் கொண்டு கடுந் தவம் மேற்கொண்டார் காவிய கண்ட கணபதி முனிவர்

அன்று கார்த்திகை மாதம், மிகவும் வாய்ந்த புண்ணிய நாள். தவத்தில் ஆழ்ந்திருந்த கணபதி முனிவரின் இதயக் குகையில், 'அருணாசலா அருணாசலா' என்ற தெய்வ ஒலி எழும்பி, 'புறப்படு புறப்படு' என்று அவருக்கு ஆணையிட்டது. சட்டென்று எழுந்தார். அருணாசல மலையை நோக்கி ஓடினார். காடு முரடான பாதையில் வேகமாக ஏறினார். விரூபாட்ச தேவர் குகையில் கோவணாண்டியாக, தனிமையில் வீற்றிருந்த பிராம்மண சுவாமியின் மலரடிகளில் சரணாகதியாக விழுந்து கும்பிட்டார்.

எப்போதும் பக்தர்களால் சூழப்பட்டிருக்கும் சுவாமிகள் அன்று தம்மை எப்படியோ தனியனாக்கிக் கொண்டார். தபஸைப்பற்றி கணபதி சாஸ்திரிகளுக்குத் தனிமையில் உபதேசம் செய்தாக வேண்டும்! தூய பக்தனின் ஏக்கத்தைப் போக்க கடவுள் ஓடோடி வருவார். அன்புச் சீடனின் துயரைத் துடைக்க குரு, கருணையோடு காத்திருப்பார். இது சத்தியம்!

முதல் தரிசனத்திலேயே ஞான குருவை விநாயகனோடு ஒப்பிட்டு மகிழ்ந்த கணபதி சாஸ்திரிகளின் உள்ளம் தற்போது பாகாய் உருகியது. கண்ணீர் பெருகியது. தமது இடக் கையால் ரமணரின் இடப் பாதத்தையும், வலக் கையால் அவரது வலப் பாதத்தையும் பற்றிக் கொண்டு, சாஸ்திர முறைப்படி சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்தார். பின்னர் மெள்ள எழுந்தார். கைகளைக் கட்டிக் கொண்டு, ஏதோ பேச முயன்றார். அழுகைதான் வந்தது. பேச்சு வரவில்லை.

அன்புக் கனல்தெறிக்க சாஸ்திரிகளை ஒரு கணம் நோக்கினார் ரமண சுவாமிகள். அருளொளி இவரை ஆட்கொண்டது. ஆனந்த சிலிர்ப்பு ஏற்பட்டது.

நா தழுதழுக்கப் பேசினார் கணபதி சாஸ்திரிகள்!

"ஸ்வாமி, நான் வேத, வேதாந்தங்களையும சகல சாஸ்திரங்களையும் கசடறக் கற்றிருக்கிறேன். இதிகாசப் புராணங்களைக் கரைத்துக் குடித்திருக்கிறேன். நான் போகாத ஆலயம் இல்லை! தரிசிக்காத தெய்வம் இல்லை. அந்த சந்நிதிகளிலெல்லாம் அமர்ந்து கோடிக் கணக்கில் மந்திர ஜபம் செய்திருக்கிறேன். சிரத்தையுடன் தவத்தில் ஆழ்ந்திருக்கிறேன். இத்தனை இருந்தும் என் மனத்தில் சாந்தி ஏற்படவில்லை. தவத்தின் பலனை நான் அனுபவிக்க முடியவில்லை. உண்மையான தபஸ் என்னவென்றே எனக்குப் புரியவில்லை. நாங்கள், தவமலையாக, அருணாசலமாகவே எனக்குக் காட்சி தருகிறீர்கள். தபஸ் என்றால் என்னவென்று சுவாமிகள் இந்தச் சிறியேனுக்குச் சொல்லி அருள வேண்டும்."


ஞான மலையின் எதிரில் சிறு அறிவுக் குன்றாக, உடல் குன்றிப்போய் நின்றிருந்தார் கணபதி சாஸ்திரிகள்.

குருநாதனின் கமலக் கண்கள் கருணையைப் பொழிந்தன.

பின்னர், மௌனத்தைக் கலைத்துத் தேனினும் இனிய குரலில் குழந்தையைப் போல் பேசினார் பகவான்.

—தொடரும்.





இன்னும் உறங்குதியோ!

உற்றுப் பார்க்கின்றன. அந்த உருவங்களுக்குள் யாரையோ தேடுகிறோம். கடைசியில் கண்டு கொள்ளவும் செய்கிறோம்.


இப்படித்தான பெரியாழ்வாரும், அந்தச் 'சூடிக் கொடுத்த சுடர்க்கொடி'யும் அருகருகே இருந்து கண்ணனுக்காக பூமாலையும் பாமாலையும் தொடுத்துக் கொண்டிருந்தார்களோ!

ஸ்ரீவில்லிப்புத்தூர் தெரு வழியே நடக்கிறோம். நம் கால்கள் புல்லரிக்கின்றன. அது ஒரு தெய்வ மகளின் புனிதமான காதல், தேனினும் இனிய பண்ணோடு வெளிப்பட்டு கற்பனைக்கெட்டாத காவியமாக உலாவிய பூமி.

அதைத் தொட்டுக் கண்ணில் ஒற்றிக் கொள்கிறோம். காலங்களைக் கடந்த ஓர் நினைவுச் சிலிர்ப்பில் மெய்ம் மறந்து நிற்கிறோம்!

வேதபிரான் பட்டர் ஸ்ரீநிவாச ஐயங்காரும், கோதை நாச்சியாரும்.





தியாகராஜ சுவாமி ஆலயம், திருவொற்றியூர்.

அருணாசல மகிமை

36

பகவத் கீதையில், ஸ்ரீ கிருஷ்ண பகவான், குழப்பமுற்றிருந்த அர்ஜுனனுக்கு வேத சாரத்தையும், வேதாந்த தத்துவத்தையும் பிழிந்து, ஞான ரசமாகத் தந்தருளினர். அது உலக மக்களுக்குச் சாந்தி தரும் அரு மருந்தாக அமைந்தது.

ஸ்ரீ ரமண பகவான், கலக்கமுற்றிருந்த காவிய கண்ட கணபதி முனிவருக்கு, தவயோகத்தின் உண்மைப் பொருள் பற்றி நல்லுபதேசம் செய்தார். அதில் வேதசாரம் அடங்கியிருந்தது. உப்நிடதங்களின் தத்துவம் மிளிர்ந்தது. அருணசலத்தின் ஞான ஒளி பளிச்சிட்டது. உலக மாந்தர் ஆன்ம விடுதலை பெறும் அருமருந்தாக அது அமைந்தது.

பகவான் சொன்னர் :

'நான்' 'நான்' என்பது எங்கிருந்து புறப்படுகிறது என்பதை உன்னிப்பாகக் கவனித்தால், அந்த இடத்தில் நம் மனம் லயித்து விடும். அதுதான் தபஸ்.

ஒரு மந்திரத்தை உச்சரிக்கும் போது, அந்த மந்திரத்தின் ஒலி எங்கிருந்து புறப்படுகிறது என்பதை உன்னிப்பாகக் கவனித்தால், அங்கே நம் மனம் லயித்து விடும். அதுதான் தபஸ்.

இரண்டே வரிகளில், இதுவரை இத்தனை தெளிவாக யாருமே சொல்லாத வகையில் தபசின் பொருளையும் பயனையும் ஞானகுரு எடுத்துரைத்து விட்டார். அதைக் கேட்ட சீடர் மெய்ஞ்ஞானம் பெற்று விட்டார்.

காதால் கேட்ட சொற்களை விட, அச்சொற்களில் அடங்கியிருந்த சத்தியப் பொருள் அவர் உள்ளத்தை நிறைத்தது. ரமண பகவானின் அருள் நோக்கும், ஆன்ம ஒளியும் சீடருக்கு அப் பொன்மொழிகளைப் புரிய வைத்து, அவர் மனத்தில் பசுமரத்து ஆணி போல் பதிய வைத்தன.

உபதேசம் பெற்ற உத்தமச் சீடர் ஞான குருவின் சந்நிதியிலேயே வெகு நேரம் அமர்ந்திருந்தார். வாய் திறந்து பேசவோ, வேறெதுவும் கேட்கவோ அவருக்குத் தோன்றவில்லை. அவரது சந்தேகங்களெல்லாம் அறவே மறைந்து, உள்ளத்தை அரித்த சஞ்சலமெல்லாம் ஒழிந்து, பேரமைதியும் பேரானந்தமும் அவரிடம் குடி கொண்டன.

அருகில் இருந்த பழனிசாமியிடம் பிராம்மண சுவாமியின் திருநாமம் என்னவென்று கேட்டார் கணபதி முனிவர். 'வேங்கடராமன்' என்று அவர் ரகசியமாகச் சொல்ல, அக்கணமே கணபதி முனிவர், 'ரமணன்' என்ற புதுப் பெயரைச் சூட்டினார். ஆனந்த மயமாகவே ஆகி விட்டவருக்கு எத்தனை பொருத்தமான பெயர் அமைந்து விட்டது! 'ரமண மகரிஷி' யென்றும், 'ரமண பகவான்' என்றும் அழைத்து, அந்தத் திருநாமமே நிலைக்கும்படி செய்தவர் கணபதி முனிவரே.

பகவானிடம் தாம் பெற்ற உபதேசத்தைத் தமது சீடர்களுக்கும் உறவினருக்கும் தெரியப்படுத்தினார் கணபதி முனிவர். அவர்களையெல்லாம் மகரிஷியிடம் ஈடுபாடு கொள்ளும்படி செய்தார்.

காவிய கண்ட கணபதி முனிவர், சக்தி உபாசகர். சக்தியின் ஆவேசம் அவரை உள்ளிருந்து இயக்க, அவர் கவிதைமாரி பொழிந்தார். அந்த பராசக்தியின் அருளாலேயே தமக்கு ரமணரின் தரிசனமும், தபசைப் பற்றிய அரிய விளக்கமும் கிடைத்ததாக அவர் நம்பினார். உலக நாயகியின் மகிமையைப் போற்றி வணங்க வேண்டும் என்ற ஆர்வம் அவருள் பொங்கியது. மூன்று வாரங்களில் உமா தேவியைப் பற்றி ஆயிரம் சுலோகங்கள் இயற்றுவது என்று முடிவு செய்தார். கவிதை ஊற்றுப் பெருக்கெடுத்தது. அருட்பாக்கள் பிறந்தன. சீடர்கள் அப்படியே எழுதிக் கொண்டார்கள்.

பத்தொன்பது நாட்கள் பக்தி மழை பொழிந்தது. எண்ணூறு சுலோகங்கள் உருவாகி விட்டன. மறுநாளுக்குள் ஆயிரம் முடித்தாக வேண்டும். ஒரு நாளுக்குள் இருநூறு சுலோகங்கள் எழுதியாக வேண்டும்.

அப்போது மாமரத்துக் குகையில் பகவான் அமர்ந்திருந்தார். அவர் சந்நிதியில் பாக்கியுள்ள சுலோகங்களை இயற்றலாம் என்ற எண்ணத்துடன் அங்கு சென்றார் கணபதி முனிவர்.

கண்களை மூடி, நிஷ்டையில் ஆழ்ந்திருக்கும் பகவானின் எதிரில் அமர்ந்து கொண்டார் கணபதி முனிவர். நான்கு





மாமரக் குகை

அதற்கு, கணபதி முனிவரின் மாணவ மாமணியான கபாலி சாஸ்திரிகள், சமஸ்கிருதத்திலேயே மிக அருமையான விளக்கவுரை ஒன்று எழுதி யிருக்கிறார்.

'உமா சகஸ்ரம்' உருவான மறு வருடம்-அதாவது 1908-ம் ஆண்டு, முதல் மூன்று மாதங்கள் கணபதி முனிவர், ரமண மகரிஷியுடன் பச்சையம்மன் கோயிலில் தங்கியிருந்தார். நேரம் கிடைக்கும் போதெல்லாம் சுலோகங்களை அங்குமிங்கும் சற்றுத் திருத்தி யமைத்து, 'உமா சகஸ்ர'த்தைப் பூர்த்தி செய்ததோடு பகவானின் உபதேசத்திற் கிணங்க கடும் தவத்திலும் ஈடுபட்டிருந்தார்.

பச்சையம்மன் கோயிலில் பகவான் தங்கி யிருந்த போது ஓர் அதிசயம் நடந்தது. ஒரு நாள் பகவானுக்கு எதிரில் அமர்ந்து தியானம் செய்துகொண்டிருந்தார் கணபதி முனிவர். அப்போது வான மண்டலத்திலிருந்து புறப்பட்ட நட்சத்திரம் ஒன்று பகவானின் நெற்றியை வந்து தொட்டு விட்டுச் சென்றது போல் கணபதி முனிவருக்குத் தரிசனம் ஆயிற்று. பிரமையோ என்று சந்தேகித்த முனிவர், கண்களைத் துடைத்துக் கொண்டு உற்றுக் கவனித்தார். அந்த நட்சத்திரம் மீண்டும் இறங்கி வந்து, முன் மாதிரியே மகரிஷியின் சிரசைத் தொட்டு விட்டுச் சென்றது. அம் மாதிரி ஆறு முறை நடந்தது. இந்த அபூர்வக் காட்சியைக் கண்டு அதிசயித்துப் போனார் கணபதி முனிவர்.

இது மாயைத் தோற்றமல்ல, சத்திய தரிசனமே என்பது பின்னர் உறுதி ஆயிற்று. மகரிஷியே இந்த அதிசயத்தைத் தம் கண்ணால் கண்டதாகக் கூறிய போது கணபதி முனிவர் தாம் பெற்ற பெரும் பேற்றை நினைத்துப் புளகிதம் அடைந்தார்.

ஆறுமுகனை நினைவு படுத்துவது போல் வான மண்டலத்திலுள்ள கிருத்திகா நட்சத்திரங்கள் ஒவ்வொன்றாக வந்து பகவானின் நெற்றியைத் தொட்டு விட்டுச்

சீடர்கள் மாறிமாறி எழுதிக் கொள்ள, சுலோகங்களை வேகமாகக் கூறினார். அவரா கூறினார்? எந்தச் சக்தியாலோ உந்தப்பட்டு, கவிதை ஊற்று வெள்ளம் போலப் பாய்ந்து வந்தது. இரவு எட்டு மணிக்குத் தொடங்கி, பன்னிரண்டு மணிக்குள் இருநூறு சுலோகங்களை இயற்றி விட்டார் அவர். கடைசி சுலோகம் முடிந்ததும், உவகை மேலிட, நிறைவு பெற்ற மனத்துடன், ரமண மகரிஷியின் பாதங்களில் விழுந்து எழுந்தார். பகவான் லேசாகக் கண்களைத் திறந்து ''என்ன சாஸ்திரிகளே, முடிந்து விட்டதா? நான் சொன்னதை யெல்லாம் எழுதி விட்டீரா?'' என்று திருவாய் மலர்ந்தருளினார்.

குருநாதரின் கருணையை எண்ணி எண்ணிப் பரவசமானார் கணபதி முனிவர்.

அந்த ஆயிரம் சுலோகங்களும் 'உமா சகஸ்ரம்' என்ற பெயரில் ஒரு தெய்விக நூலாக உருவெடுத்தது.

மாமரக் குகை (உட்புறத் தோற்றம்)



சென்றிருக்க வேண்டும் என்று தோன்றியது கணபதி முனிவருக்கு.

ஸ்ரீ ரமண மகரிஷியை சுப்பிரமணியரின அம்சமாகவே கருதினார் கணபதி முனிவர். அவ்வாறே பல முறை அவருக்குத் தோற்றம் அளித்திருக்கிறார் பகவான்.

கணபதி சாஸ்திரிகள், ஸ்ரீ ரமண மகரிஷியிடம் தாமும் இதர பக்தர்களும் கேட்ட சந்தேகங்களையும், அவற்றுக்கு பகவான் அவ்வப்போது அளித்த விடைகளையும் முந்நூறு சுலோகங்களாக எழுதி, பதினெட்டு அத்தியாயங்களாகப் பிரித்து, பகவத் கீதையைப் போலவே 'ரமண கீதை' யாக உருவாக்கி யிருக்கிறார். 'ரமண கீதை'யின் பதினேராவது அத்தியாயத்தில் ''ஈச்வரன் கொடுத்த ஞான திருஷ்டியால் உங்களை முருகப் பெருமானுகவே நான் காண்கிறேன்'' என்று கூறி யிருக்கிறார் கணபதி முனிவர்.

ஒரு சமயம் விரூபாட்சி குகையில், மகரிஷியைத் தரிசிக்க வந்த கணபதி முனிவருக்கு, பகவான் வாயாலேயே இந்த உண்மையை அறிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவல் மேலிட்டது. ஆனால், அதை வெளியில் சொல்லவே யில்லை. வாயைத் திறந்து சொன்னால் தான் குருவுக்குப் புரியுமா? சீடரின் உள்ளக் கிடக்கையைத் தாமே அறிந்து, தக்க சமாதானம் சொல்லுவது அன்றோ உத்தம குருவுக்கு அடையாளம்?

விருபாட்சி குகையிலிருந்த மாடம் ஒன்றில் ஒரு பிள்ளையார் விக்கிரகம் இருந்தது. அதன் மீது ஆளுக்கொரு வெண்பா பாடலாம் என்று அப்போது அங்கிருந்த ஈசுவர சுவாமிகள் கூறினார். அவர் கூறிய யோசனையைப் பகவான் ஏற்றுக் கொண்டு மாடத்துப் பிள்ளையார் மீது ஒரு வெண்பா இயற்றினார்:

பிள்ளையாப் பெற்றவனைப்
பிச்சாண்டி யாக்கி யெங்கும்
பிள்ளையாப் பேழ்வயிற்றைப்
பேணினீர்—பிள்ளையான்
கன்னெஞ்சோ மாடத்துப்
பிள்ளையரே கண்பாரும்
பின்வந்தான் தன்னை நீ பெற்று

விளையாட்டாக ஒரு வெண்பா பாடி கணபதி முனிவரின் சந்தேகத்தைத் தீர்த்து வைத்து விட்டார் பகவான். பின் வந்தான் தன்னை என்று தம்மை கணபதிக்கு இளைய சகோதரராகச் சொல்லிக் கொண்டது கணபதி முனிவரைப் பரவசத்தில் ஆழ்த்தியது. இனி அதைப் பற்றி அவருககுச் சந்தேகம் தோன்றுவதற்கே சிறிதும் இடமின்றி உறுதியாய்க் கூறி விட்டார் மகரிஷி.



பசசையம்மன்


வயதைக் கொண்டு பார்த்தால், கணபதி முனிவருக்கு பகவான் இளையவர்தான். இருவருக்கும் ஒரு வயது வித்தியாசம்.

காவிய கண்ட கணபதி சாஸ்திரிகள் கணபதியின் அம்சம் என்று கூறுவதற்கு ஒரு நிகழ்ச்சியுண்டு.

கொண்டய்யா என்பவர் ஒரு சமயம் கணபதி ஹோமம் செய்தார். அப்போது அக்கினி ஜ்வாலைகளுக்கிடையே முனிவர் போன்ற திருமேனியை உடைய ஒரு மகானின் உருவத்தைக் கண்டு அவர் பிரமித்துப் போனார். அந்த உருவத்தை அதற்கு முன் கொண்டய்யா பார்த்ததேயில்லை.

சில மாதங்களுக்குப் பிறகு கொண்டய்யா, அருணாசலத்திற்கு வந்து கிரிப் பிரதட்சணம் செய்தார். மலையைச் சுற்றி முடிக்கும் சமயத்தில் ஏதோ ஒரு சக்தி அவரைப் பச்சையம்மன் கோயிலுக்கு இழுத்துச் சென்றது.

ஆலயத்தில் நுழைந்த கொண்டய்யா, அங்கு கணபதி சாஸ்திரிகளைக் கண்டு ஒரு கணம் திகைத்துப் போய் அப்படியே நின்று விட்டார். அவரை அதற்கு முன் எங்கேயோ பார்த்திருப்பது போல் தோன்றியது அவருக்கு. சிந்தித்துப் பார்த்தார். 'ஆம்.



தேர்களின் ராஜா

ஸ்ரீவில்லிபுத்தூர் தேர்தான் தென்னிந்தியாவிலேயே ஒரு விதத்தில் 'ராஜா தேர்'. எல்லா தேர்களுக்கும் எட்டு சக்கரங்கள்தாம். இந்த ராஜா தேருக்கு மட்டும் ஒன்பது சக்கரங்கள். இந்த தேரின் உயரம் 70 அடி. இது ஓடிக்கொண்டிருந்தவரை ஊரில் மழை கொட்டு கொட்டென்று கொட்டியதாகக் கூறுகிறார்கள். —நா. சங்கரதாஸ்

சந்தேகமில்லை, அவரே தான்.. கணபதி ஹோமத்தின் போது அக்கினி ஜ்வாலைகளுக்கிடையே காட்சியளித்த அதே மகான்தான்' என்று நிச்சயமான பின்னர், அவர் காலில் விழுந்தார். அன்று முதல் முனிவரின் சீடரானார் கொண்டய்யா.

'உமா சகஸ்ரத்'தில் வரும் ஒரு சுலோகத்தில், அருணாசலேச்வரரை அர்த்த நாரீச்வரராகத் தரிசித்து, அவர் மடியில் கணபதியும் சுப்பிரமணியரும் அமர்ந்திருக்கும் கண் கொள்ளாக் காட்சியையும் கண்டு களிக்கிறார் கணபதி முனிவர். வலது மடியில் (அதாவது ஈச்வரனின் பாகத்தில்) கணபதி வீற்றிருக்கிறார் என்றும், இடது மடியில் (அம்பிகையின் பாகத்தில்) சுப்பிரமணியர் வீற்றிருக்கிறார் என்றும் கூறி, விநாயகர் பிரணவ சொரூபமான சிவனின் அம்சம் பொருந்தியவர் என்பதையும், சுப்பிரமணியர் பராசக்தியின் அம்சம் பொருந்தியவர் என்பதையும் வெகு அழகாக எடுத்துக் காட்டியுள்ளார்.

ரமண மகரிஷிகள், கணபதி முனிவரின் தவ நெறிக்கு ஆன்ம பலம் தந்து அவரை ஆட்கொண்டிருக்கிறார் என்பதற்கு எத்தனையோ நிகழ்ச்சிகள் கூறப்படுகின்றன.

அவற்றில் ஓரிரண்டு அதிசயத்திலும் அதிசயமாக இருக்கின்றன.

ஒரு சமயம் கணபதி சாஸ்திரிகள் தவம் புரிவதற்காக சென்னையை அடுத்துள்ள திருவொற்றியூருக்கு வந்தார். தியாகராஜப் பெருமானையும், வடிவுடையம்மனையும் தரிசித்துவிட்டு அத் தலத்திலுள்ள விநாயகர் கோயில் ஒன்றில் தவத்திற்காக அமர்ந்தார். பதினெட்டு நாட்கள் மௌன விரதம் ஏற்று கடும் தவம் புரிந்தார். கடைசி தினத்தன்று, முனிவர் கண் விழித்துப் படுத்துக் கொண்டிருந்த போது ஓர் அதிசயத்தைக் கண்டார்.

ரமண மகரிஷிகள் மெள்ள வந்து அவர் பக்கத்தில் அமர்ந்தார். தூக்கி வாரிப் போட்ட கணபதி முனிவர், உடனே எழுந்திருக்க முயன்றார். ஆனால், மகரிஷி தம் கரத்தை அவர் தலையில் வைத்து அழுத்தி எழுந்திருக்க விடாமல் தடுத்து விட்டார். அக்கணம் தம்முள் அருட்சக்தி புகுந்து பரவசப் படுத்தியதை உணர்ந்தார். பகவான் தமக்கு ஹஸ்த தீட்சை தந்து அருளியதை நினைத்து உளம் மகிழ்ந்தார்.

இது நடந்து பல ஆண்டுகள் கழித்து, இதுவும் மாயத் தோற்றம் அல்ல என்பதை பகவான் உறுதிப் படுத்தினார். மகரிஷியின் மொழியையே கேட்போம்:

'ஒரு நாள் இது படுத்துக் கொண்டிருந்தது. ஆனால், சமாதியிலில்லை; திடீரென்று உடல் மேலே தூக்கிச் செல்லப் பட்டது; சற்றைக் கெல்லாம் சுற்றிலுமுள்ள பொருள்கள் யாவும் மறைந்து, பேரொளி எங்கும் சூழ்ந்தது. பின்னர், உடல் கீழே இறங்கியது. பொருள்கள் மீண்டும் கண்ணுக்குத் தெரிந்தன. திருவொற்றியூரிலிருப்பதாக எண்ணம் தோன்றியது. பெரிய வீதியில் நடந்து கொண்டிருக்கும் போது, கொஞ்சம் தூரம் சென்றதும் ஒரு விநாயகர் கோயில் தென்பட்டது; உள்ளே சென்றது. அங்கு ஏதோ பேசியது. ஆனால், என்ன பேசியது, செய்தது என்று சரியாக நினைப்பில்லை. திடீரென்று கண் விழித்த போது, விரூபாட்ச குகையில் இது படுத்திருந்தது. அருகில் இருந்த பழனிச்சாமியிடம் நடந்ததை எல்லாம் சொன்னது. இப்படித் தான் சித்தர்களும் உலவுவார்கள் என்று தெரிந்தது.'

—தொடரும்.

இதயம் பேசுகிறது (II)



கீழை
நாட்டுப்
பயணக்
கதை



இயற்கையன்னை திருநடம் புரியும் ஸ்கந்தாசிரமம்

அருணசல மகிமை

37

காவிய கண்ட கணபதி முனிவர் பராசக்தியின் பரிபூரண அருளுக்கும் ஆசிக்கும் பாத்திரமா யிருந்ததோடு, உச்சிஷ்ட கணபதியின் உபாசகராகவும் இருந்து வந்தார். அத்துடன் மந்திர ஜபத்தாலும், தியானத்தாலும், தவத்தாலும் அரும் பெரும் சக்திகளைப் பெற்றிருந்தார். ஸ்ரீ ரமண பகவானின் ஆனமிக ஒளி அவரது தவ வலிமையைப் பன் மடங்காகப் பெருக்கியது.

இளைஞராக திருவண்ணுமலைக்கு வந்த கணபதி சாஸ்திரிகளின் புகழ் நாடெங்கும் பரவியது. அவரது கல்வியறிவும், வாதத் திறனும், புத்திக் கூர்மையும் கேட்போரை வியக்கச் செய்தன. இதைக் கண்டு வயதான பண்டிதர்கள் சிலர் பொறுமை கூட அடைந்தார்கள்.

திருவண்ணுமலையிலிருந்த வேத சாஸ்திரப் பாடசாலையில் கணபதி சாஸ்திரிகள் சிறிது காலம் பண்டிதராக இருந்தார். அப்போது வயதான பண்டிதர் ஒருவர் இவருடன் தர்க்கம் புரிந்து தோற்கடிக்கும் எண்ணத்துடன் திருவண்ணுமலைக்கு வந்தார். பாடசாலையின் வாயிலில் நின்று பேசிக் கொண்டிருந்த இளைஞர்களை அணுகி, ''கணபதி சாஸ்திரிகள் எங்கே யிருக்கிருர்?'' என்று கேட்டார். அவர்களில் ஓர் இளைஞர், ''நான்தான், கணபதி. உங்களுக்கு என்ன வேண்டும்?'' என்று கேட்டார். தன்னை அந்தப் பையன் ஏளனம் செய்கிருன் என்று நினைத்து முகத்தைச் சுளித்துக் கொண்டார் வயோதிகப் பண்டிதர். பின்னர் உண்மையை அறிந்து ஆச்சரியப்பட்டுப் போனுர்.

''கணபதி சாஸ்திரிகள் என்ருல் ரொம்ப வயதானவராக இருக்கும் என்று நினைத்து வந்தேன். இத்தனை இள வயதில் உன் புகழ் இத்தனை

பரணீதரன்

ஆரா[illegible] பரா[illegible] நப்பா ஆச்சரியத்தி லாழ்த்தியது. [illegible] ஆரம்ப புத்தி [illegible]! [illegible] சில [illegible] விசா[illegible] கேட்கலாமென்று நான் வந்தேன்" என்று அந்தப் பையன் [illegible]. "சாதாரணமாக [illegible] [illegible] எனக்குத் தெரிந்த வரையில் [illegible] கூறுகிறேன்" என்று [illegible] கூறினார் கணபதி முனிவர்.

[illegible] அவர் ஒரு சிறு கேள்வியைக் கேட்டான். [illegible] நிமிஷம் சற்றும் யோசியாமல், [illegible] முனிவர் உபநிடதங்கள், சாஸ்திரங்களிலிருந்தும் மேற்கோள்கள் காட்டி [illegible] விடாமல் பேசத் தொடங்கி விட்டார். பல ஆதாரங்களைக் காட்டி, பலவித அர்த்தங்களை எடுத்துக் கூறி பெரியவரின் சந்தேகத்தைத் தீர்த்து வைத்தார். [illegible] அவற்றை [illegible] யெல்லாம் சரிவரப் புரிந்து கொள்ளக் கூட முடியாமல் அந்தப் பெரியவர் திக்கு முக்காடிப் போனார். கணபதி சாஸ்திரிகள் ரொம்பவும் [illegible]யவராகவும், அவர் எதிரில் தாம் [illegible] [illegible]யவராகவும் அவருக்குத் தோன்றவே, மெல்லெழுந்து [illegible] [illegible] [illegible] கை[illegible] [illegible].

"[illegible], [illegible] நான் [illegible] [illegible] பாட்டு [illegible]. [illegible] [illegible] வேண்டும் என்று [illegible] தட்ட வேண்டும் என்றும் நான் [illegible] வந்தேன். ஆனால், உன் [illegible]வின் ஆழத்தைக் கண்டதும் என் [illegible] சிறுமைத்தனம் எனக்கு [illegible] புரிந்து விட்டது. நீ மகா[illegible] [illegible] பண்டிதர்களுக்கெல்லாம் [illegible]. [illegible] மன்னித்து விடு" என்று [illegible] [illegible] குறையாகக் கூறி[illegible].

கண[illegible] [illegible] [illegible] [illegible]. "[illegible] [illegible] சொல்லக்கூடாது. நான் [illegible] [illegible] அறைகுறான்; [illegible] [illegible]. உங்களைப் போன்ற பெரியவர்களிடமிருந்து நான் கற்றுக் கொள்ள வேண்டியது இன்னும் எத்தனையோ இருக்கிறது" என்று மிக மிகப் பணிவுடன் கூறினார்.

தீவிரமாக ஸ்ரீ வித்யையை உபாசனை செய்ததால், முனிவரின் குண்டலினி சக்தி பிரமிக்கத் தக்கதாயிருந்தது. அது அவர் உடலை வாட்டி வதைத்தது. எப்போதும் எறும்பு கடிப்பது போன்று ஓர் எரிச்சல்இருந்து கொண்டே யிருக்கும். அவ்வப்போது தம்மால் தாங்க முடியாத கொதிப்பும் ஏற்படும். மண்டையே பிளந்து விடுவது போல் பயமான தலைவலி வரும். அப்போதெல்லாம் அவர் படும் வேதனையை விவரிக்கவே முடியாது.

ஒரு நாள் முனிவர் மண்டைக் கொதிப்பு தாங்க முடியாமல் பாடாய்ப் படுத்தார். "சாஸ்திரிகளே, உங்களுக்கு ஒரு ஆபத்தும் நேராது, கவலைப் பட வேண்டாம்" என்று கூறிய பகவான், கணபதி முனிவரின் தலையைத் தமது கரத்தால் தடவிக் கொடுத்தார். உடனே கொதிப்பு அடங்கி விட்டது. அன்று மாமரக் குகையில் வந்து தியானத்தில் அமர்ந்த முனிவரின் நடு மண்டையிலிருந்து ஒரு திவ்ய ஜோதி வெளிச் சென்றதைச் சிலர் கண்டு அதிசயித்தார்கள். அன்றையிலிருந்து முனிவருக்கு மண்டையைப் பிளப்பது போன்ற உணர்வு ஏற்படவே இல்லை.

ஆச்ரமத்திலிருந்த பிரம்மசாரி விசுவநாத சுவாமி, கணபதி முனிவரிடம் [illegible] கொண்டிருந்தார். ஒரு [illegible] [illegible] [illegible] விருப்பம் கொண்ட அவரை பகவான், கணபதி முனிவரிடம் சென்று பாடம் கேட்டுக் கொள்ளும்படி அனுப்பி வைத்தார். மறு நாள் மாமரக் குகையில் முனிவரைக் காணச் சென்றார் விசுவநாத சுவாமி. முனிவர் அவரை இன்முகத்துடன் வரவேற்றார். அவர் எதிரில் அமர்ந்ததுமே தன்னுள் ஒரு தெய்வீக சக்தி புகுந்ததை உணர்ந்தார் விசுவநாத சுவாமி. பின்னர், மைத்ரேய உபநிடதத்தில் திரிசங்குவின் பெருமையை விவரிக்கும் பகுதியைத் [illegible] விளக்கிக் கூறும்படி அவர் [illegible] [illegible]க் கொண்டார். [illegible] [illegible] தெளிவாகவும் [illegible] எடுத்து விளக்கிய[illegible] கேட்ட விசுவநாத சுவாமி அவரை மாமுனிவராகவே மதித்தார். அன்று முதல் அவர் காலடியில் அமர்ந்து சாஸ்திரங்களை யெல்லாம் [illegible] கொள்ள வேண்டும் என்று எண்ணம் கொண்டார்.

ஒரு நாள் குண்டலினி சக்தியைப் பற்றி விசுவநாத சுவாமி கணபதி முனிவரிடம் பேசிக் கொண்டிருந்தார். அப்போது முனிவர் அதைப் பற்றி தமது அனுபவங்களைக் கூறி விட்டு, அதன் சக்தியையும் அவருக்கு உணர்த்திக் காட்டினார். விசுவநாத சுவாமியைத் தம் தலைக்குமேல் கையை உயர்த்திப் பிடிக்கச் சொன்னார் முனிவர்.

சற்றைக் கெல்லாம், அவரது உச்சி மண்டையிலிருந்து நீராவியைப் போல் வெப்பம் நிறைந்த சக்தி புறப்பட்டு தம் உள்ளங் கையைத் தாக்கியதை விசுவநாத சுவாமி உணர்ந்தாராம்.

மின் சக்திக்கு அதி தேவதை இந்திரன். அதற்கு அவனே தலைவன். கணபதி முனிவர் 'உலகம் மின் சக்தியினால் இயங்குகிறது' என்ற 'இந்திர மத'த்தில் பெரும் நம்பிக்கை கொண்டிருந்தார். நம் பண்டைய மகரிஷிகள் தங்களுக்குள் மின் சக்தியைப் பெருக்கியே அநேக காரியங்களைச் சாதித்திருக்கின்றனர். காவிய கண்ட கணபதி முனிவரும் அத்தகைய அதிசய சக்தியைப் பெற்றிருந்தார். அவரைத் தரிசிக்கச் சென்ற பலர் தங்கள் உடலில் மின் அதிர்ச்சி ஏற்படுவதை உணர்ந்திருக்கிறார்கள்.

ஒரு சமயம் திருவண்ணாமலை ஜில்லா முன்சீப் கோர்ட்டில் சரஸ்வதி பூஜையில் கலந்து கொள்ள கணபதி முனிவர் அழைக்கப் பட்டிருந்தார். அப்போது தன் இந்திரமதக் கொள்கையை விளக்கியதோடு, அதன் சக்தி எத்தகையது என்பதையும் அங்கிருந்தவர்களுக்கு நிரூபணம் செய்து காட்டினார் அவர்.

ஒருவரை யொருவர் கை கோத்துக் கொண்டு பத்து நபர்களை வரிசையாக நிற்க வைத்தார். பிரார்த்தனை செய்து விட்டு, முதல் நபரைத் தொட்டார். உடனே அந்தப் பத்து பேருக்கும் மின் அதிர்ச்சி ஏற்பட்டது.

வேதகால ரிஷிகளும் முனிவர்களும் சந்நியாசத்தை ஏற்றுக் கொள்ள வில்லையாதலால் தாமும் அம் மகரிஷிகளைப் போல் தர்ம பத்தினியுடன் இல்லறம் நடத்துவதாக அவர் அடிக்கடி கூறுவதுண்டு. திருவண்ணாமலையில், மனைவி விசாலாட்சி அம்மையாருடனும், மகன் மகாதேவனுடனும், மகள் வஜ்ராம்பாளுடனும் அவர் குடித்தனம் நடத்தி வந்தார். குடும்பத்துடன் இருந்தாலும், உருவத்திலும், நடை யுடை பாவனைகளிலும், ஆத்ம சக்தியிலும் மாமுனிவர்களையே நினைவு படுத்தி வந்தார் அவர். பாதக் குறடு இல்லாமல் நடக்க மாட்டார்; மான் தோல் இல்லாமல் உட்கார மாட்டார்.

கடந்த நூற்றாண்டில் பாரதம் பெற்றெடுத்த தவப் புதல்வர்களில் கணபதி முனிவரும் ஒருவர். நாட்டுப் பற்று மிக்க அந்த மகான், கதராடையைத்தான் அணிவார். பாரதம் எல்லாத் துறைகளிலும் சிறந்தோங்க வேண்டும் என்று கனவு கண்டார் அவர். காலத்திற்கொவ்வாத பழக்க வழக்கங்களைக் களைந்தெறிந்து விட்டு, வேத நெறியையும் நம் புராதன கலாசார நெறிகளையும் தழைக்கச் செய்ய வேண்டும் என்பது தான் அவருடைய எண்ணமாக இருந்து வந்தது.

காவிய கண்ட கணபதி முனிவருக்கு வேதம் தான் பிரமாணம். வேதத்தில் தீண்டாமையைப் பற்றிக் கூறவில்லை என்று அவர் அடிக்கடி வாதிப்பார். பெல்காமில் நடந்த காங்கிரசுக்கு திருவண்ணாமலைப் பிரதிநிதிகளில் ஒருவராகச் சென்ற அவர், தீண்டாமையை எதிர்த்து சமஸ்கிருதத்தில் ஓர் அரிய சொற்பொழிவை நிகழ்த்தினார். அவருடைய வாதத் திறமையையும், மன உறுதியையும் கண்டு மகாத்மா காந்தி, இவரைக் கட்டித் தழுவிக் கொண்டாராம்.

நம்முடைய பண்டைய பழக்க வழக்கங்களைப் பற்றி அரிய ஆராய்ச்சிகள் செய்து வைத்திருந்த அவர், அத்தனைக்கும் விஞ்ஞான முறையில் விளக்கம் தருவாராம்.

நாட்டின் மேம்பாட்டைப் பற்றியே எந்நேரமும் எண்ணிக் கொண்டிருந்த முனிவர், அந்த எண்ணம் ஈடேறும் பொருட்டு தீவிரமாக மந்திர ஜபத்தை மேற்கொண்டார். ஒவ்வொருவரும் தம் ஆத்ம சக்தியைப் பலப்படுத்திக் கொண்டாலன்றி, பாரத சமுதாயத்தை மாற்றி யமைக்கும் வலிமையைப் பெற முடியாது என்று உணர்ந்து, அதற்கென பல சீடர்களைச் சேர்த்துக் கொண்டு, சங்கம் அமைத்து ஜபதபங்களில் ஈடுபடும்படி பணித்தார் அவர்.

கணபதி முனிவரின் தீராத 'வேட்கை'யை பகவான் அறிவார். உள்ளத்தில் உறுதியும், மனத்தில் சாந்தியும் ஏற்படும் பொருட்டு அவ்வப்போது அவருக்கு நல்லுபதேசங்கள் செய்து வந்தார். 'நான் யார்?' என்ற ஆத்ம தியானத்தில் ஆழ்ந்து, எல்லா பாரங்களையும் ஈச்வரனிடம் விட்டு விடும்படி அவருக்கு அறிவுரை கூறினார். 'ஈச்வரன் எல்லா பாரங்களையும் தாங்குவான். பிறகு நாம் பாரமின்றி நிம்மதியாக இருக்கலாம். அவன், அவன் காரியத்தைச் செய்வான்' என்று ஒரு சமயம் சந்தேகத்துடன் வந்த முனிவருக்கு அருள்மொழி கூறி அனுப்பினார் பகவான்.

காவிய கண்ட கணபதி முனிவர் நினைத்த போது, சுலோகங்கள் இயற்றும் திறன் படைத்தவர். பிறருடன் பேசும் போதும், சொற்பொழிவுகள் ஆற்றும் போதும் அக் கணமே சொந்தமாக சுலோகங்களை இயற்றி, எல்லோரையும் பிரமிக்க வைப்பாராம்.

ரமணகீதையை அவர் எழுதுவதற்கு முன்பே, தமது உபந்நியாசங்களின் போது சில சுலோகங்களைக் கூறி, அவை அதில் வருவதாகச் சொல்லியிருக்கிறார். ''இது ரமண கீதையில் மூன்றும் அத்தியாயத்தில் ஐந்தாவது சுலோகம்'' என்று கூசாமல் கூறி விடுவாராம். இப்படிப் பல சுலோகங்களை முதலில் சொல்லிய பின்னரே ரமண கீதையை எழுதி முடித்தார் அவர்.


இந்த அதிசயத்தைப் பற்றி பகவான் ஒரு சமயம் பக்தர்களிடம் பேசிக் கொண்டிருந்த போது, ஒருவர், ''அந்தக் கூட்டத்தில் யாராவது 'ரமண கீதை எங்கே யிருக்கிறது?' என்று கேட்டிருந்தால் 'நயனு' என்ன செய்திருப்பார்?'' என்று கேட்டார்.

''அவரை அப்படிக் கேட்பதற்கு யாருக்கு தைரியம் இருக்கு?'' என்று திருப்பிக் கேட்ட பகவான் மற்ருெரு விஷயத்தையும் கூறினர்.

ரமண கீதை வெளியான பிறகு அவர் பல சமயங்களில் அதில் இல்லாத சுலோகங்களை உதாரணமாக எடுத்துக் காட்டுவார். யாராவது அந்த சுலோகங்கள் ரமண கீதையில் இல்லையே என்று சுட்டிக் காட்டினல், ''இது மகா ரமண கீதையில் இருக்கிறது'' என்பார்! அப்படி யொரு நூல் எழுதுவதாக அவர் திட்டமிட்டிருந்தது என்னவோ உண்மை. அது நிறைவேருமலே போய் விட்டது.

ஒரு சமயம் திருவண்ணுமலையில் நடைபெற்ற சைவ சித்தாந்த மகா நாட்டில் கணபதி முனிவரைப் பேசும் படி அழைத்தார்கள். அவர் திருவண்ணுமலைக்குப் புதிதாக வந்திருந்த சமயம் அது. அவருக்கு சைவ சித்தாந்தத்தைப் பற்றி அப்போது ஒன்றுமே தெரியாது. மகா நாட்டை ஏற்பாடு செய்திருந்தவர்களோ, 'கணபதி சாஸ்திரிகள் சைவ சித்தாந்தத்தைப் பற்றி விரிவாகப் பேசப் போகிருர்' என்று விளம்பரப்படுத்தி யிருந்தார்கள்.

அவர் பேசவேண்டிய நாள் வந்தது. காலையில் பகவானிடம் சென்று, ''எனக்கு சைவ சித்தாந்தத்தைப் பற்றி ஒன்றுமே தெரியாது. இவர்கள் என்னைப் பேச அழைத்திருக்கிருர்கள்; என்ன செய்வது என்றே புரியவில்லை'' என்ருர். பகவான் 'சிவ ஞான போத'த்தை எடுத்து, சில பகுதிகளைப் படித்துக் காட்டி, பொருள் கூறி விளக்கினர். பின்னர், சைவ சித்தாந்தத்தின் சாரத்தைச் சுருக்கமாக எடுத்துரைத்தார். அது போதும் அவருக்கு.



காவிய கண்ட கணபதி முனிவர்

மகா நாட்டில் கணபதி முனிவரின் பேச்சுதான் மிகச் சிறப்பாக இருந்தது. தாமே செய்யுட்களை இயற்றி, தமிழில் அரியதொரு சொற்பொழிவாற்றி விட்டார். அவருடைய புலமையையும், மதி நுட்பத்தையும் கண்டு அத்தனை பேரும் வியந்தார்கள்.

மகாநாடு முடிந்த பிறகு கணபதி முனிவர் பகவானிடம் வந்து, ''உண்மையில் இன்று நான் பேசவேயில்லை. எனக்கு ஒன்றுமே தெரியாது. எல்லாம் பகவானின் அனுக்ரக விசேஷம் தான். இதுவரை சைவ சித்தாந்தத்தையே படிக்காத எனக்கு அதைப் பற்றி யெல்லாம் ரொம்ப நாட்களாகத் தெரிந்து வைத்திருப்பது போல் மனத்தில் தோன்றியது'' என்ருர்.

ஆச்ரமத்திற்கு கணபதி முனிவர் வந்த பிறகுதான் பகவானுக்கு சமஸ்கிருத மொழியில் பெரும் ஆர்வம் ஏற்பட்டது. வேத சாஸ்திரங்களைப் பற்றியும், இதர காவியங்களைப் பற்றியும் கணபதி முனிவரிடம் அடிக்கடி பேசி, பயனுள்ள பல ஆராய்ச்சிகள் செய்திருக்கிருர் மகரிஷி. சமஸ்கிருத சுலோகங்களை இயற்றி இலக்கணப்

பாலிருக்குது பழனி மலையிலே

மலையின்மேல் 'இருளை நீக்கிப் பத்தை ஓட்டி ஒர் உணவு இருக்கிறது. அதில் குழந்தை 'பாட்டிலை' எடுத்துக் கொண்டு போய் பால் வாங்கினால், வாங்க மறுத்து விடுகிறார்கள்... குழந்தைக்கு' என்று எத்தனை முறை வாங்கினாலும் சரி, காசு வாங்க மறுத்து விடுகிறார்கள். பாலிருக்குது பழனி மலையிலே......உண்மைதானே!

—கே. வி. சந்துரு.

ரமண மகரிஷி இருக்கிறது என்று மகரிஷி கேட்பது 'அருணாசல பஞ்சரத்னம்' என்ற கவிதையை இயற்றும்படி தூண்டியவர் கணபதி முனிவர்தான். மகரிஷி இயற்றிய 'உபதேச உந்தியார்' நூலை கணபதி முனிவர் 'உபதேச சாரம்' என்ற பெயரில் சமஸ்கிருதத்தில் மொழி பெயர்த்திருக்கிறார். ...ருக்கு பாலி ... ... எழுதியிருக்கிறார். ...ன் 'உபதேச சாரம்' என்ற ... கணபதி முனிவர் வியாக்கியானம் எழுதியிருக்கிறார். மகரிஷியின் அவர் ... பல சுலோகங்களை எழுதியிருக்கிறார். ஆச்ரமத்தில் காலை வேளையில் நடைபெற்ற பாராயணத்தின் போது இந்தப் பாடல்களும் பாடப் பெற்றன.

முதலில் 'சாஸ்திரிகளே' என்று கணபதி முனிவரை அழைத்துக் கொண்டிருந்தார் பகவான். ஒரு நாள் கணபதி முனிவர், தம்மை சாதாரணமாகவே அழைக்கும்படி பகவானிடம் கேட்டுக் கொள்ளவே, எல்லோரையும் போல் தாமும் அவரை 'நயனா' என்றே அழைப்பதாகக் கூறினார். 'நயனா' என்றால் தெலுங்கில் தந்தை என்று பொருள். அந்தச் சொல்லில் ... அன்பும், கனிவும், மதிப்பும் அடங்கி யிருந்தது. 'நயனா தந்தையைப் போன்றவர்' என்று மகரிஷி அடிக்கடி கூறுவது வழக்கம்.

1902-ம் ஆண்டு முதன் முதலில் ஸ்ரீ ரமணரை பிராமண சுவாமியாக தரிசித்து விட்டுச் சென்ற கணபதி சாஸ்திரிகள், 1907-ம் ஆண்டு மீண்டும் திருவண்ணாமலைக்கு வந்து சேர்ந்தார். அதற்குப் பிறகு சுமார் இருபத்து மூன்று வருடங்களுக்கு மேல் பகவானுடன் தொடர்பு கொண்டிருந்தார். பெரும்பாலும் மலையிலுள்ள மாமரக் குகையிலேயே வாசம் செய்து வந்த அவர், பல உபாசகர்களுக்கு உறுதுணையாயிருந்து உன்னதத் தொண்டு புரிந்திருக்கிறார்.

பின்னர், வட கானராவிலுள்ள ஸிரஸி என்ற இடத்தில் ஆனந்தாச்ரமம் அமைத்து, சிறிது காலம் அங்கே தங்கி யிருந்தார். இறுதியில் காரக்பூரில் குடியேறி, உடல் நலம் குன்றி, 1936-ம் ஆண்டு தமது ஐம்பத்தெட்டாவது வயதில், நிம்பூரா நதிக்கரையில் இயற்கை எய்தினார்.

அந்தத் துயரச் செய்தியைத் தாங்கி வந்த கடிதத்தைக் கையில் வைத்துக் கொண்டு ரமண பகவான் உள்ளம் உருகிய காட்சியைக் கண் முன் நடப்பது போல் விசுவநாதசுவாமி விவரித்த போது, கணபதி முனிவரின் மகிமையும், மகரிஷியின் கருணையும் ... உணர முடிந்தது.

... பமறந்து விட்டு முதலில் ... ஒரு வார்த்தையும் பே... ... மாலை வேதபாராயணம் ... பிறகு, எல்லோரையும் அருகில் அழைத்து, "இந்த ... செய்தி தாங்க முடியாத அதிர்ச்சியைத் தருகிறது. நயனா போய்விட்டாரா!" என்று கூறிய பகவான், சற்றுத் தயங்கி "அவர் எங்கே போயிட்டாரா? எங்கே போயிட்டார்?" என்று கேட்டார். அதாவது 'அவர் எங்கும் போகவில்லை. அவருக்கு மரணமே இல்லை' என்று கூறாமல் கூறினார். பேச்சில் கலக்கமில்லை. ஆனால், பகவானின் கண்கள் கலங்கின. உணர்ச்சியால் நெகிழ்ந்து உள்ளத்தோடு கண்ணீர் மாலை கன்னங்களை நனைக்க, "நயனாவைப் போல் இன்னொருத்தரை இனி பார்க்க முடியுமா?" என்று உருக்கமுடன் கூறினார் மகரிஷி.

—தொடரும்.

அதிசய ஓவியர்!

சென்னை, மேற்கு மாம்பலம், கோதண்டராமசாமிக்கோயில்தெருவில் உள்ள ஓர் ஓவியர், மௌனமாக இருந்துகொண்டே, பிறரை அதிசயத்தில் ஆழ்த்தும் காரியத்தைச் செய்து வருகிறார்!

அந்த ஓவியரின் பெயர் ஸ்ரீபதிஸ்ரீதர். ஏழுமலையான் மீது திருப்பள்ளி எழுச்சியாகப் பாடப்பட்டுள்ள ஸ்ரீசுப்ரபாத தோத்திரங்கள் அனைத்தையும் ஓவியங்களாகத் தீட்டிக் கொண்டிருக்கிறார் இவர். மங்களா சாஸனம் முடிய அந்த சுலோகங்கள் மொத்தம் அறுபத்தொன்பது இருக்கின்றன. இதுவரை ஓவியர் ஸ்ரீதர் வரைந்திருப்பது எவ்வளவு?

அவரைக் கேட்டால், அவர் மகன், ''இருபத்தெட்டு'' என்று பதில் தருகிறார். ''என் அப்பா பேச மாட்டார். சுப்ரபாத தோத்திரங்களுக்கு படம் போடுவது என்று முடிவு செய்த நாளிலிருந்து, அவர் மௌன விரதத்தை மேற்கொண்டிருக்கிறார்'' என்கிறார் மகன். ஓவியர் ஸ்ரீதர், கடந்த மூன்று ஆண்டுகளாக இப்படி மௌனமாக இருக்கிறார். பேச வேண்டியதை எல்லாம் எழுதியும், சைகை மூலமும் சொல்லி விடுகிறார் அவர்!

ஒரு காலத்தில் திரைப் படக் கொட்டகை, பொருட்காட்சி முகப்பு, திருமண மண்டபம் ஆகியவற்றிற்கு அலங்கார அமைப்புக்களைச் செய்து வந்தார் இந்த ஓவியர். ராஜமகேந்திரபுரத்தில் நடந்த துளசி பூஜையிலிருந்து கடவுள் படங்கள் வரையத் தொடங்கினார். இவர் வரைந்துள்ள கோடிலிங்கம் ஆந்திரர் இல்லங்கள் தோறும் பூஜை அறையில் இருக்கிறது.



ஸ்ரீபதிஸ்ரீதர்


தெலுங்கைத் தாய் மொழியாகக் கொண்டிருக்கும் இந்த ஓவியர், வீட்டுக்கு ஒரு சுப்ரபாதப் படம் கிடைக்க, புதிய திட்டம் ஒன்றையும் செயல் படுத்தி வருகிறார். 'மாத்ருகலா கேந்திரம்' என்ற ஓர் அமைப்பை நடத்துகிறார் இவர்; இதில் நூறு உறுப்பினர்கள், ஆண்டுக்கு 21 ரூபாய் கொடுத்து சேர்ந்திருக்கிறார்கள். ஒவ்வொரு மாதமும் சீட்டு குலுக்கிப் போட்டு, ஒரு சீட்டு எடுக்கப்படுகிறது. அந்த சீட்டுக்கு உரியவரிடம், அந்த மாதம் வரைந்த ஸ்ரீ சுப்ரபாத தோத்திரப் படத்தைக் கொடுத்து விடுகிறார். இப்படி 69 படங்களையும் எழுதி முடித்து விட இருக்கிறார் இவர்.

ஓவியர் ஸ்ரீதரின் சுப்ரபாதப் படங்கள் திருப்பதி தேவஸ்தானத்தின் கவனத்தையும் கவர்ந்தது. தேவஸ்தானத்திடமிருந்து ஏழாயிரம் ரூபாய் பெற்று, முதல் இருபத்தெட்டு சுலோகங்களுக்கான ஓவியங்களை அவர்களுக்குத் தனியாக வரைந்து கொடுத்திருக்கிறார்.

ஐதராபாத்திற்கு ஜனாதிபதி வி. வி. கிரி வந்திருந்த போது, இந்த சுப்ரபாத படங்களைப் பக்தியுடன் பார்த்திருக்கிறார். புது டெல்லிக்குத் திரும்பிச் சென்ற பிறகு, ஸ்ரீதரைப் பாராட்டி ஒரு கடிதமும் எழுதியிருக்கிறார் ஜனாதிபதி.

இந்தப் படங்களை வரைந்து முடித்த பிறகு, ஸ்ரீஆதிசங்கரரின் கனகதாரா தோத்திரங்களுக்குச் சித்திரம் வரைய முடிவு செய்திருக்கிறார். இதற்காக ஸ்ரீ காஞ்சி ஆசாரிய ஸ்வாமிகளை அடுத்த மாதம் சந்தித்து ஆசி பெறப் போகிறார் இவர்.

அருணாசல மகிமை



38

இளம் துறவியான பிராம்மண சுவாமியின் மகிமையை அறிந்த காவிய கண்ட கணபதி முனிவர், அவரது மலரடிகளில் சரணடைந்து, அருளாசியை வேண்டி, அதிசயிக்கத்தக்க சக்திகளைப் பெற்று மேன்மையடைந்தார். அவ்வாறே பல சம்சாரிகள், ரமணானுபவத்தில் திளைத்து, உள்ளத்தால் துறவறம் பூண்டு, பேரமைதி தந்த பேரானந்தத்தில் ஆழ்ந்திருந்தார்கள். ஆனால், விபூதி, உருத்திராட்சங்களால் ஒப்பனை செய்து கொண்டு, 'சாது' வேடம் புனைந்து, ஆன்மிக நாடகமாடிய ஓரிருவர், இளம் சுவாமிகளின் உன்னத நிலையைப் புரிந்து கொள்ளாமல், அவரை மிகவும் துன்புறுத்தினார்கள். தங்கள் பிழைப்பைக் கெடுக்க வந்தவராகவே நினைத்து, அவரை மலையிலிருந்து விரட்டியடிக்க படாதபாடு பட்டார்கள். புகழ்ச்சியையும் இகழ்ச்சியையும் சம நோக்கோடு ஏற்றுக் கொண்ட ஜீவன் முக்தரான ரமணர் இந்தச் சோதனைகளுக்கு உட்பட்டு, தீயிலிட்ட தங்கமென புத்தொளி வீசி, புனித மெருகுடன் பிரகாசித்த வரலாறு படிப்போர் நெஞ்சத்தை உருக்கும்; உள்ளத்தைத் தூய்மை படுத்தும்.

நல்லதையே நினைத்து, நல்லதையே செய்யும் நல்லோர்களின் பெயரைச் சொன்னால் புண்ணியமுண்டு. தீயதையே நினைத்து, தீங்குகள் புரியும் சிறுமதி படைத்தோரின் பெயரைச் சொல்லாமல் இருப்பதே நல்லது.

அந்த சாதுவின் பெயர் எம். ஜே. என்று வைத்துக் கொள்வோம். வயதானவர். மலையின் மீது வசித்து வந்தார். கடுமையான தவமிருந்தார். பிரும்மசரியத்தைக் கடைப்பிடித்தார். சிறிது ஆகாரமே உட்கொள்வார். எல்லோரும் அவரை ஒரு ஞானி என்றே கருதினர்.

ரமணர் பவழக் குன்றிலிருந்து, மலைக்கு வந்த போது, எம். ஜே.யைக் காணச் செல்வார். தம்மாலான தொண்டுகளை புரிவார். ஆனால், நாளடைவில் இளம் சுவாமியைத் தேடி வந்த கூட்டம் பெருகியது. எம். ஜே.யைக் காண வந்த கூட்டம் குறைந்தது. அதனால் வழக்கமாக வரும் காணிக்கையும் குறைந்தது. கூட்டளவில் வேதாந்தம் பேசி, உள்ளம் பக்குவம் அடையாமலிருந்த எம். ஜே. இதைக் கண்டு வருந்தினார். அவருள் பொறாமைத் தீ கொழுந்து விட்டு எரிந்தது.

'மதிப்பும் மரியாதையும் போனால் பரவாயில்லை; வரும்படியும் போகிறதே' என்று அந்தப் போலிச் சாமியார் உள்ளம் குமுறினார். 'நம்ம பிழைப்பில் மண்ணைப் போடப் பார்க்கும் இவரை இங்கிருந்து எப்படியாவது விரட்டி விட வேண்டும்' என்று முடிவு செய்தார். சாதாரணமாக புது சாமியார்களைப் பயமுறுத்த அவர் கையாளும் தந்திரத்தையே பின்பற்றினார்!

பிராம்மண சுவாமி மலைச் சரிவில் அமர்ந்திருக்கும் போது, எம். ஜே. மேலே ஏறிப் போய் பெரிய கற்களை உருட்டி விடுவார். சில சமயம் அந்தக் கல் சுவாமியின் வெகு அருகில் வந்து விழும். ஆனால், அதைக் கண்டு அவர் அஞ்சி நடுங்கவில்லை.

ஒரு நாள், கல் உருண்டு வரும் போது, சட்டென்று மேலே ஓடிச் சென்று எம். ஜே. யைக் கையும் களவுமாகப் பிடித்து விட்டார் பிராம்மண சுவாமி. எம். ஜே. அசட்டுச் சிரிப்பு சிரித்தார். "சும்மா விளையாட்டுக்குச் செய்தேன்" என்று எதையோ கூறி மழுப்பி விட்டார். இப்படிச் செய்ததற்காக எம். ஜே.யிடம் ரமணர் பகை பாராட்டவில்லை. அதை அந்தக் கணமே மறந்து விட்டார்.

ஆனால், எம். ஜே. தமக்கு நேர்ந்த அவமானத்தை மறக்கவில்லை. தமது தோழரான மற்றொரு சாதுவுடன் சேர்ந்து கொண்டு, ரமணரைத் திருவண்ணாமலையை விட்டே விரட்ட சதியாலோசனை செய்தார். இருவரும் அந்தத் திட்டத்தைச் செயல்படுத்தினர். அது ஒரு சுவையான கதை!

எம். ஜே.யின் அருமைத் தோழருக்கு எஸ். ஆர். என்று பெயர் கொடுப்போம். வேதத்திலும், பகவத் கீதையிலும், பிரும்மசூத்திரத்திலும் அவருக்குக் கொஞ்சம் கொஞ்சம் தெரியும். ஆங்கிலம், தமிழ், பிரெஞ்சு, மராத்தி, இந்தி, சமஸ்கிருதம், மலையாளம் என்று பல மொழிகளில் சிறிதளவு அறிந்து வைத்திருந்தார். எந்த மொழிக்காரர் வந்தாலும் 'வெளுத்து வாங்கி' விடுவார்.

← ஸ்ரீ அருணாசலேச்வரர் ஆலயம் - ராஜகோபுரமும், நந்தி மண்டபமும்.

சிவந்த மேனி; உருண்டு திரண்ட உருவம்; நேர்த்தியான உடை; பார்ப்பவர்கள் எளிதில் மயங்கி விடும் கம்பீரத் தோற்றம். படித்தவரோ — பாமரரோ, தொண்டைமானோ— தோட்டியோ, பெரியவரோ—சிறியவரோ, யார் வந்தாலும் அவரவர்களுக்குத் தகுந்தவாறு பேசி அனுப்புவதில் நிகரற்றவர். குருமூர்த்தத்தில் இருக்கும் போது ரமணரை 'எலைபோட்' அவர் போய்ப்பார்த்ததுண்டு. சுவாமிகளோ, எந் நேரமும் கண்களை மூடிக்கொண்டு வாயைத் திறக்காமல் உட்கார்ந்திருந்ததால் எஸ். ஆர். அவர் வம்புக்குப் போகவில்லை. மலைக்கு வந்த பிறகு, இளம் சுவாமியிடம் ஆன்ம ஒளியைத் தரிசித்த மக்கள் அவரை நாடிச் சென்றதைக் கண்டு எஸ். ஆர். பொருமினார். தம்மை எல்லோரும் அலட்சியப் படுத்தியதைக் கண்டு குமுறினார். 'எனக்கு இருக்கும் சாமர்த்தியமும் சாதுர்யமும் இந்தப் பையனுக்கு ஏது? ஒரு கை பார்த்து விடுகிறேன்' என்று காரியத்தில் இறங்கி விட்டார்.

பிராம்மண சுவாமி இருப்பிடத்திற்குப் போய் அவருடைய 'குரு'வைப் போல் தம்மைக் காட்டிக் கொள்வார். புதிதாக யாராவது சுவாமியைத் தரிசிக்க வந்தால் எஸ். ஆர். குறுக்கிட்டு "குழந்தைக்குத் தின்பண்டங்கள் கொடுங்கள்" என்று கூறுவார். சுவாமியைப் பார்த்து "குழந்தே, வெங்கடராமா, அவா ஏதோ கொண்டு வந்திருக்கா பாரு. அதை எடுத்துக்கோப்பா" என்பார். பட்சணக் கடையில் தின்பண்டங்கள் வாங்கிக் கொண்டு வந்து, "உனக்காக வாங்கிண்டு வந்தேன். எடுத்துக்கோ" என்று பரிவுடன் கூறுவார். வருபவர்களிடம் "இந்த சின்ன சுவாமி என்னோட சிஷ்யந்தான். நமஸ்காரம் பண்ணுங்கோ" என்று அறிமுகம் செய்து வைப்பார். மௌனமாக அமர்ந்திருந்த ரமணர் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்தார். மறுத்து ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. எஸ். ஆரைக் கண்டு கோபப்படவில்லை; மாறாக, பரிதாபப்பட்டார்.

சில சமயங்களில் எஸ். ஆர். இளம் சுவாமியிடம் வந்து, "எல்லார்கிட்டேயும் நீ என் சிஷ்யப்பிள்ளை என்று சொல்லி, கொஞ்சம் பணம் சம்பாதிச்சுக்கிறேன். உனக்கு அதனாலே ஒண்ணும் நஷ்டம் இல்லே. நீ எதுவுமே பேசாமெ இருந்துடு" என்று சற்றும் வெட்கமில்லாமல் கூறுவார். மௌன விரதம் ஏற்றிருந்த சுவாமி இந்த அற்ப விஷயத்திற்காகவா வாயைத் திறக்கப் போகிறார்? அது எஸ். ஆருக்கு நன்றாகத் தெரியும்.

சுவாமி இதையெல்லாம் பொறுத்துக் கொண்டிருந்தாலும் அவருடைய பக்தர்களுக்கு எஸ். ஆரின் பித்தலாட்டம் சற்றும் பிடிக்கவில்லை. முதலில் முணு முணுத்துக் கொண்டிருந்தவர்கள் போகப் போக வெளிப்படையாகவே கண்டிக்கத் தொடங்கினார்கள்.

பிறர் தன்னை நம்ப வேண்டும் என்பதற்காக சாமர்த்தியமாக நடிப்பதில் எஸ். ஆர். வல்லவர். திடீரென்று ரமணர் இருக்கும் குகைக்குள் வருவார். யாரையாவது அழைத்து, "டேய், பையா! இந்தச் சட்டைப் பையில் நூறு ரூபா இருக்கு. எடுடா. எவனோ திணிச்சுட்டுப் போயிட்டான். நான் பணத்தைக் கையால் தொடுவதே இல்லே" என்பார். அந்தப் பணத்தை 'சூறை விடுவார்', அப்பாவிகளாகப் பார்த்து, "உனக்கு அடுத்த மாசம் நிச்சயம் வேலைகிடைக்கும்" "இரண்டு மாசத்தில் உன் கஷ்டமெல்லாம் விடிஞ்சுடும்" என்றெல்லாம் சொல்லி நிறையப் பணம் சம்பாதிப்பார். தன் சாமர்த்தியத்தைப் பற்றி சுவாமியிடம் ஜம்பம் அடித்துக் கொள்வார்.

ஒரு நாள் விரூபாட்சி குகைக்கு வந்து, "என்னை என்னன்னு நினைச்சே! நான் இப்போ ஒரு அவதூதராயிட்டேன். நிர்வாணமாக எல்லார் வீட்டுக்கும் போறேன். எல்லாரும் வந்து எனக்கு நமஸ்காரம் பண்றா. வேணுங்கிறதைக் கொடுக்கிறா" என்று பெருமையாகப் பேசினார். அத்துடன் நிற்கவில்லை. அன்று இரவு குகையின் தாழ்வாரத்தில் படுத்து, அங்கே அசிங்கப் படுத்தி விட்டார்.

மறு நாட் காலை, தன் துணிமணிகளையெல்லாம் குகையில் வைத்து விட்டு, அவதூதர் வேடம் புனைந்து வெளியே போய் விட்டார் எஸ். ஆர். தூக்கம் கலைந்து எழுந்து வந்த ரமண சுவாமி, எஸ். ஆரின் விஷமத்தனத்தைக் கண்டு, பேசாமல் இருந்து விட்டார். ஆனால், பழனிச்சாமிக்குக் கோபம் பற்றிக் கொண்டு வந்தது. தண்ணீரைக் கொண்டு வந்து அந்த இடத்தைச் சுத்தப்படுத்தினார். பின்னர், சுவாமியுடன் குளத்திற்குக் குளிக்கப் போவதற்கு முன்

எஸ். ஆரின் உடைகளைத் தூக்கி வெளியே எறிந்துவிட்டு, குகையின் கதவைத் தாளிட்டுக் கொண்டு போய் விட்டார்.

திரும்பி வந்து பார்த்த எஸ். ஆருக்குக் கோபம் தாங்கமுடியவில்லை. தன் 'சில்க்' சட்டையையும் பட்டுக் கரை வேட்டியையும் பழனிச்சாமி தான் தூக்கி யெறிந்திருக்க வேண்டும் என்று ஊகித்துவிட்டார். உதவி யாளர்களிடமிருந்து சுவாமியைப் பிரித்தால்தான், அவரை அடக்கி ஆள முடியும் என்று முடிவு செய்து, பிராம்மண சுவாமியைப் பார்த்து, "அந்த பழனிச்சாமியை உடனே இங்கே யிருந்து துரத்தி விடு. என் துணியைத் தூக்கி யெறிகிறானே, என்ன தைரியம் அவனுக்கு? இங்கே அவன் இனிமேல் ஒரு நிமிஷம் கூட இருக்கக் கூடாது" என்று இரைச்சல் போட்டார். பழனிச்சாமி அசைய வே யில்லை. சுவாமியும் வாயைத் திறக்கவில்லை. எஸ். ஆருக்கு அடி வயிற்றில் ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது. பற்களை நரநரவென்று கடித் தார். பிராம்மண சுவாமியின் மீது காறி உமிழ்ந்து விட்டார் எஸ். ஆர். அப்போதும் பொறுமையே உருவாக, சாந்த மலையாக, ஒன்றுமே பேசாமல் அசையாமல் நின்றிருந்தார் ரமணர். ஜீவன் முக்தர்களுக்குப் பாலபிஷேகம் செய்தால் என்ன, எச்சில் அபிஷேகம் செய்தால் என்ன?

உண்மைப் பொருளை உணர்ந்து விட்ட உத்தமர் சும்மா இருக்கலாம்; அவருடைய சீடர்களும் பக்தர்களும் வாயை மூடிக் கொண்டு இருப்பார்களா? முத்தைய சாமி என்ற பக்தர் இந்தச் செய்தியைக் கேட்டு துடித்தே போனார். குருவைக் கேவலப் படுத்திய சாமியாரைத் தேடிக் கொண்டு போய் "எங்கசுவாமி மேலேயா எச்சில் துப்பினே? உன்னை விட்டேனா பார்" என்றுகையை ஓங்கிக் கொண்டு கிளம்பி விட்டார். எஸ். ஆரின் மீது அடி விழாமல் யாரோ தடுத்து விட்டார்கள். இல்லா விட்டால் அன்று அவருக்குக் கிடைக்க வேண்டியது செம்மையாகக் கிடைத் திருக்கும்!

இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு, எஸ். ஆர். மலை மீது பயமில்லாமல் நடமாட முடியவில்லை. 'யாரிடம், எப்போது, என்ன கிடைக்குமோ?' என்ற அச்சத்துடனேயே அலைந்து கொண்டிருந்த வர், ஊரை விட்டுப் போய் விடுவது தான் நல்லது என்று தீர்மானித்து, ரயில்வே ஸ்டேஷனை அடைந்தார்.

ரயில் வந்ததும், இரண்டாம் வகுப்பில் ஏறினார். அதில் ஒர் இளைஞன் ஒரு பெண்மணியுடன் பிரயாணம் செய்து கொண்டிருந்தான். அவனை வம்புக் கிழுத்து, வாயில் வந்தபடி பேசினார். அந்தப் பெண்மணியைக் காட்டி, "இந்தச் சிறுக்கியின் மேலே இருக்கிற மோகத்தாலே நீ என்னை மதிக்கமாட் டேங்கிறே" என்று ஏசினார். அந்த



இளைஞன் சும்மா இருப்பானு? அவன் என்ன ஞானியா? காவில் இருந்ததைக் கழற்றினுன். எஸ். ஆரை வெளுத்து வாங்கி விட்டான்!

இரண்டு வருடஙகள் எஸ். ஆர். திருவண்ணுமலை பக்கமே தலை காட்ட வில்லை. ஒரு நாள் திடீரென்று மலைக்கு வந்தார். மாமரக் குகையின் எதிரி லுள்ள வில்வ மரத்தடியில் வந்து நின்று கொண்டு, பிராம்மண சுவா மியை அழைத்து வரும்படி ஒருவரை அனுப்பினுர். கருணுமூர்த்தியும் நடந்ததை யெல்லாம் மறந்து அவரைக் காணச் சென்ருர். அவ்விரு வரைத் தவிர அங்கு வேறு யாருமில்லை.

''ரயில்வே ஸ்டேஷனில் நடந்தது உனக்குத் தெரியுமா?'' என்று கேட் டார் எஸ். ஆர்.

''தெரியும்'' என்று பதில் கூறினுர் சுவாமி.

''எனக்கு அதுவும் வேண்டும்; இன் னமும் வேண்டும், இல்லையா?'' என்று கேட்டார் எஸ். ஆர்.

சுவாமி வாயைத் திறக்கவில்லை.

''வெங்கடராமா, என்னை மன்னிச் சுடு. உன் மேலே எச்சிலைத் துப்பியது ரொம்ப தப்பு. ஏதோ கோபத்திலே செஞ்சுட்டேன். இப்போ திரும்பி வந் திருக்கேன். எத்தனை தரம் வேணுமோ அத்தனை தரம் என் மேல் துப்பு'' என்ருர் எஸ். ஆர். பரிதாபமாக.

பகவான் பழிக்குப் பழி வாங்கு வாரா? ஒன்றும் பேசாமல் அந்த இடத்தை விட்டகன்ருர்.

எஸ். ஆர். உண்மையிலேயே திருந்தி விட்டார் என்றுதான் எல்லோரும் நினைத்தார்கள். ஆனுல், சீக்கிரத்தி லேயே வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிக் கொண்டது. முன்பு போல், சுவாமி இருந்த குகைக்கு வந்து, எல் லோரையும் அதட்டி அதிகாரம் செய் யத் தொடங்கினுர். செல்வாக்கு மிக்க பக்தர்களிடமும் அவமரியாதையாக நடந்து கொண்டார். ஆனுல், அவர்கள் யாருமே அவரை மதிப்ப தாகத் தெரியவில்லை.

பிராம்மண சுவாமியின் சீடர்கள் தம்மை அவமரியாதையாக நடத்து கிருர்கள் என்று அறிந்த எஸ். ஆர். ''இந்த மலை வசிப்பதற்குத் தகுந்த இடம் இல்லை'' என்று உணர்ந்து, அதை விட்டுப் போய்விட தீர்மா னித்து விட்டார். ஆனுல், போவதற்கு முன் சுவாமியை நன்ருகச் சபித்து விட் டுப் போனுர்: ''உன்னிடம் இருக்கும் சக்தி யெல்லாம் போய் விடும்; இனிமேல் உன்னை ஒருவரும் மதிக்க மாட்டார்கள். உன்னைத் தேடிக் கொண்டு யாருமே வரமாட்டார்கள்.'' ஆத்திரத்தைக் கொட்டித் தீர்த்து விட்டார் அந்தப் போலிச் சாமியார். அமைதியே உருவாக அமர்ந்திருந் தார் அந்த அருள் முனிவர்.

மலையை விட்டு வேகமாக இறங்கி யவர் ஊருக்குள் சென்று, ஒரு பட் காரக் கடைக்காரரிடம் தாம் பிராம் மண சுவாமியை சபித்து விட்டு வந்த தைப் பற்றி பெருமையுடன் கூறினுர். எஸ். ஆர். இளம் சுவாமியிடம் அன் பும் பக்தியும் கொண்டிருந்த அந்தக் கடைக்காரர், எஸ். ஆரை நன்ருக உதைத்து அனுப்பி விட்டார். அந்த 'பூசை'க்குப் பிறகு ஊரில் அவரைக் காணவேயில்லை. சில மாதங்கள் கழித்து மீண்டும் திருவண்ணுமலைக்கு வந்தார். மலைமீது ஏறினுர். ரமண ரிடம் சென்று தமது ஆத்திரத்தைக் காட்டினுர். அநாகரிகமான முறை யில் வாயில் வந்தபடி ஏசினுர். சீடர் களை அவமானப்படுத்தினுர். அப்போ தும் ரமண பகவான் அருணுசல மலையாக, சலனமின்றி வீற்றிருந் தார். ஏமாற்றமடைந்த எஸ். ஆர். மனம் நொந்து எங்கோ போய் விட் டார். பின்னர் அவரைக் காணவே யில்லை.

இது நடந்து எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு, சில 'சாது'க்கள் ரமணரைக் கடத்திக் கொண்டு போய் விட வேண் டும் என்ற தீய எண்ணத்துடன் விரு பாட்சி குகைக்கு வந்தனர். தாங்கள் பொதிகை மலையிலிருந்து வருவதாக வும், அங்கு தவம் புரிந்து கொண்டிருக் கும் அகத்திய முனிவர், தீட்சை யளிப் பதற்காக ரமணரை அழைத்து வரும் படி தங்களைப் பணித்துள்ளதாகவும் கூறினுர்கள். அதைக் கேட்டுக் கொண் டிருந்த ரமணரின் சீடரான பெருமாள் சாமி, ''வாங்க, வாங்க. உங்களுக் காகத் தான் காத்துக் கொண்டிருக் கிரேம். நீங்கள் வருவதைப் பற்றி எங்களுக்குத் தகவல் வந்தது. உங்களை ஒரு கொப்பரையில் போட்டு, நெருப் பில் கொதிக்க வைக்கும்படி உத்தர வாயிருக்கிறது. என்ன சொல்றீங்க?'' என்று கூறி, அருகிலிருந்த மஸ்தான் என்ற சீடரிடம், ''சீக்கிரம் குழியை வெட்டி நெருப்பை மூட்டு'' என்று சொன்னுர். அந்த சாதுக்கள் வந்த சுவடு தெரியாமல் திரும்பிப் போய் விட்டார்கள்!

—தொடரும்.

ஒரு இந்து' என்று சொல்லுவதிலும் பெருமைப்பட வேண்டும் என்பது என் ஆசை'' என்கிறார் சேதுபதி அவர்கள்.

இந்த அரசர் ஒரே ஒரு வார்த்தையைக் கேட்டு முகம் சுளிக்கிறார். அது தான் 'அரசியல்!' ''பல தலைவர்கள் நாட்டுக்காகச் செய்த தியாகத்தையும் நன்மைகளையும் நான் மதிக்கிறேன்'' என்று அவர் போற்றினாலும் பொதுவாக அரசியல் என்றால் 'கொஞ்சம் எட்டி நின்றால தேவலாம்' என்கிற மனோபாவம் இருக்கிறது அவருக்கு. அவருடைய தந்தை அமைச்சராகப் பணியாற்றியதைக் கூடக் குறிப்பிட்டுக் கேட்கிறோம். ஊஹூம்...... ''பொதுவாக அரசியலுக்கு உரிய கௌரவம் இப்போது இல்லை. பலர் அதைத் தொழிலாக்கி விட்டார்கள்'' என்று நம் வாயை அடைத்து விடுகிறார்.

இருந்தாலும் சமுதாய முன்னேற்றத்தில் அக்கறை இல்லாமலில்லை, குறிப்பாகத் தாம் சார்ந்த முக்குலத்தோர் இனத்தைப் பற்றி ''பழம் பெருமை வாய்ந்த இந்த சமூகம் இன்று பின் தங்கிய நிலையில் இருப்பது வேதனையாக இருக்கிறது'' என்கிறார் சேதுபதி.





'தனிக் குடித்தனமா? அப்படி என்றால் என்ன?' என்று கேட்கிறார்கள் விருதுநகரிலுள்ள மருமகள்கள். மகன் வெளியூரில் இருந்தால் தனி வீட்டில் வாழலாம். ஒரு தந்தைக்கு எத்தனை பிள்ளைகள் இருந்தாலும் சரி, அவர்கள் உள்ளூரில் இருந்தால் தாய் தந்தையருடன் சேர்ந்து ஒரே வீட்டில்தான் வாழ வேண்டும். அதுதான் நியதி. அங்கே மாமியார்களும் ரொம்ப 'மாடர்ன்'! ஒவ்வொரு மகனுக்கும் மருமகளுக்கும் தனித் தனி அறை கொடுத்து விடுவார். தேவையானால் சமையலறையில் அவரவர்களுக்குத் தனித் தனியாகச் சமைத்துக் கொள்ள, குறுக்கே சுவர்கள் எழுப்பிப் பிரித்துக் கொடுத்து விடுகிறார். மருமகள் தனிக் குடித்தனம் செய்வது போலவும் இருக்காது. அதே சமயத்தில் அவர்கள் தங்கள் குடும்பம் நடத்தும் பொறுப்பு உணர்ச்சியும் பெறுகிறார்கள்.

ஒரு பெண்மணியை அணுகி, அவர் அணிந்திருந்த புகைப் படத்துடன் கூடிய டாலரைச் சுட்டிக் காட்டி, ''இது என்ன, நீங்களும் உங்கள் கணவருமா?'' என்று வினவ, அவர் நாணத்துடன் சிரித்துக் கொண்டே ''இல்லை, இது என் மாமனாரும் மாமியாரும்!'' என்று அவர் சொல்லும் போது... ..நமது முகத்தில் அசடு வழிகிறது... ..!

— சசிகலா.




ஆண்டாளின் பிணக்கு!

பெண் என்றாலே கூடலும், ஊடலும் நிறைந்தவள் என்று பெயர்.

ஒரு தடவை ஆண்டாள், தன் ஆபரணங்களை யெல்லாம் அணிந்து கொள்ள மாட்டேன் என்று பிணக்கு செய்து கொண்டாளாம். உடனே அவளுடைய காதலன் கண்ணன், தானே அணிவித்து விடுகிறேன் என்று சொல்லி, அவளுக்குத் தன் கையாலேயே எல்லா ஆபரணங்களையும், மூக்குத்தி உள்பட—அணிவிக்கிறான்! அதை ஸ்ரீ வில்லிபுத்தூரில் உள்ள ஆண்டாள் கோவிலில், மார்கழி மாத முதல் வாரத்தில் 'மூக்குத்தி திருவிழா' என்று கொண்டாடுகிறார்கள்.

—உஷா.



ஸ்ரீ அருணசலேஸ்வரர் ஆலயம் -- பிரும்ம தீர்த்தமும் தெற்கு கோபுரமும்.

அருணசல மகிமை

39

நீங்கள் பிழைப்பைக் கெடுக்க வந்தவர் என்று நினைத்து சில போலிச் சாமியார்கள் ரமண பகவானுக்கு இன்னல்கள் விளைவித்துக் கொண்டிருந்தனர். அதே சமயத்தில், 'அவர் வாழ்வே தங்கள் வாழ்வு' என்று நினைத்து, மகரிஷியின் சேவைக்கே தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்ட தியாகச் செம்மல்களுக்கும் கணக்கே இல்லை. அதிலும், தாய்மையான பக்திக்கும், திட வைராக்கியத்திற்கும் எடுத்துக் காட்டாக விளங்கிய சபரிக்கு ஈடான பெண் ரத்தினங்களின் வரலாற்றைப் படிக்கும்போது, பெருமிதத்தால் நெஞ்சம் விம்மிப் புடைக்கிறது.

போளூருக்கு அருகிலுள்ள மண்டகொளத்தூர் கிராமத்தைச் சேர்ந்தவள் லட்சுமி அம்மாள். ஆஸ்திக்கு ஒரு பிள்ளையும் ஆசைக்கு ஒரு பெண்ணும் பெற்று, கண் நிறைந்த கணவனோடு இல்லறம் நடத்தி வந்த லட்சுமியின் மீது எந்தப் பாவியின் கண் திருஷ்டிப் பட்டதோ, தெரியாது. இருபத்தைந்து வயதிலேயே விதி அவளுக்கு விதவைக் கோலத்தைத் தந்து வேடிக்கைப் பார்த்தது! மாலுமி திடீரென்று மறைந்து விட்டான். லட்சுமியின் குடும்பக் கப்பல் கவிழ்ந்து விட்டது.

துயரக் கடலில் நீந்தி கரை சேர்ந்தவள், உயிருக்குயிரான இரு செல்வங்களுக்காகத் தன் உயிரைப் பிடித்து வைத்துக் கொண்டிருந்தாள். அவளுக்கு வாழ விருப்பமில்லை. ஆயுசு இருந்தால், உண்டு, உடுத்து, உறங்கிக் கொண்டிருந்தாள்.

விதி அவளை நிழலாகத் தொடர்ந்தது. மகன் இருந்தால், அவன் பெரியவனாகி தாயைக் காப்பாற்றி விடப்

பரணீதரன்

போகிறானே என்று அவனையும் கை யோடு அழைத்துச் சென்று விட்டது. கணவன் மறைந்ததற்காக வடித்த கண்ணீர் உலருவதற்கு முன்பே, மற்றொரு கடும் சோதனையா? ஆறாத் துயரப் புண்ணில் வேல் கொண்டு தாக்கினால் எப்படித்தான் தாங்கு வது? சோகச் சித்திரமாய் இருந் தவள், நடைப் பிணமானாள்.

பூமி பிளந்ததோ, வானம் இடிந் ததோ, பிரளயம் சூழ்ந்ததோ என்று கதி கலங்கிப் போயிருந்த லட்சுமி, பெண்ணின் முகம் பார்த்து, அவள் சிரிப்பொலி கேட்டு, பேச்சழகில் சொக்கி, சூன்ய வாழ்வில் சுகத்தைத் தேடிக் கொண்டிருந்தாள். அவளைத் தேடிக் கொண்டு விதி மீண்டும் ஓடி வந்தது. ஐயோ, இதென்ன வேகம்? அதன் தாகம் இன்னும் அடங்க வில்லையா?

இல்லை, இல்லவே இல்லை! அது மரண தாகம்! அந்தப் பெண்ணின் உயிரையும் அது குடித்து விட்டுச் சென்றது. சென்று விட்டதா? இனி திரும்பி வராதே! யார் கண்டது?

அடுத்து அடுத்து மரணம் கொடுத்த அடி, லட்சுமியைப் படுக்க வைத்து விட்டது. பேயறைந்தவள் போல், பேச்சற்றுக் கிடந்தாள் பேதை. 'அந்த விதி மீண்டும் வராதா, தன்னை யும் கொண்டு போகாதா?' என்று காத்திருந்தாள்.

அழைத்தவுடன் நம்மைத் தேடி வரு வதற்கு காலன் என்ன நம் அடிமையா? அவன் விதியின் அடிமை. விதி அழைத் தால்தான் துணைக்கு வருவான். நாம் வாழ்ந்து துன்பப்பட வேண்டுமென்று தலையில் எழுதியிருந்தால் அவன் விலகியே நிற்பான்.

மரணம் வரும் என்று காத்திருந்த லட்சுமி ஏமாற்றமடைந்தாள். சுருண்டு படுத்திருந்தவள் எழுந்து உட்கார்ந்தாள். சிறிது ஆகாரம் உட் கொண்டாள். சற்று நடமாடினாள். வீடு வெறிச்சோடிக் கிடந்தது. வெளி யுலகம் வறட்சியாயிருந்தது. வாழ்க் கையே கசந்தது.

இருண்ட அறையிலேயே லட்சுமி முடங்கிக் கிடந்தாள். அதன் ஜன்ன லைத் திறப்பதற்கும் அவள் அஞ்சினாள். கதவைத் திறந்தால், தன் பெண் படித்த பள்ளிக்கூடம் கண்ணுக்குத் தெரியும். அங்கே சிறுமி நடந்து வரு வது தெரியும். அவள் பேச்சில் கிளி கொஞ்சும். சிரிப்பில் இன்பம் துள் ளும். பழைய நினைவுகள் நிழற்பட மாக ஓடும். அடி வயிற்றில் குடல் நெளியும்; நெஞ்சு வெடிக்கும்; 'வேண் டாம்! அந்த ஜன்னல்கள் அடைந்தே கிடக்கட்டும். என் உயிர் பிரிந்த பிறகு அதை யாராவது திறக்கட்டும்.'

மகள் பட்ட வேதனையை, வயதான தந்தை பார்த்து நொந்து போனார். ஆறுதல் வார்த்தைகள் சொன்னார். தைரிய மொழிகள் கூறினார். தத்துவ உபதேசம் செய்தார். ஒன்றும் பய னில்லை. பேரிழப்பால் பரிதவித்தவள் நிம்மதி யிழந்து வாடினாள்.

வீட்டிலேயே முடங்கிக் கிடந்தால் மன நிம்மதி பெற முடியாது என்று பலர் கூறினார்கள். தல யாத்திரை சென்றால், துக்கத்தைச் சிறுகச் சிறுக மறக்கலாம் என்று அனுபவமிக்க வர்கள் அறிவுரை வாழ்த்தினார்கள். தந்தைக்கும் அதுவே சரி யென்று தோன்றியது. பயணத்திற்கு மகளை உடன்பட வைத்தார்.

பம்பாய் ராஜதானியிலிருக்கும் கோகர்ணம் சென்றாள் லட்சுமி. தேவலாயங்களுக்குச் சென்று வழி பட்டாள். பல சாதுக்களைத் தரிசித் தாள். அவர்களிடம் அருளுபதேசம் பெற்றாள். அங்கிருந்து வட நாட்டின் வேறு சில இடங்களுக்குப் பயணமா னாள். மகான்களின் சேவையில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டதன் மூலம், நடந்ததை யெல்லாம் மறக்க முயன் றாள். முடியவில்லை. உள்ளத்தை அழுத்திய பாரம் நீங்கவில்லை. நெஞ் சைப் பிழிந்த துயரம் மறைய வில்லை. மனச்சாந்தி திரும்பவே இல்லை. ஊரைப் பார்க்கத் திரும்பி வந்து விட்டாள் லட்சுமி அம்மாள்.

அருணாசல மலையில் வசித்து வந்த பிராம்மண சுவாமியைப் பற்றி அப்போதுதான் முதன் முதலாக லட்சுமி அம்மாள் கேள்விப்பட்டார். 'அந்த மௌன சாமியாரைத் தரிசித் தாலே, துக்கமெல்லாம் மறைந்து போய் விடும். ஒளி நிறைந்த அவரது கண் பார்வை, நம் உள்ளத்தில் அமை தியை நிலவச் செய்யும். அவர் ஒரு மகான். சந்தேகமில்லை' என்று யாரோ சொன்னது லட்சுமி அம்மா ளுக்கு சற்று நம்பிக்கையைஅளித்தது. உடனே திருவண்ணாமலைக்குப் புறப் பட்டு விட்டார். வருடம் 1907. துணைக்கு ஒருத்தியை அழைத்துக் கொண்டு, மலையேறி, நேரே ரமண



எசசம்மாள

அவர் வாழ்வில் ஓர் அற்புதமே நிகழ்ந்து விட்டது. அமைதி தேடி அலைந்தவருக்கு அருணாசல பகவான அடைக்கலம தந்து விட்டார். தன் வாழ்நாளையெல்லாம அவர் நிழலிலேயே கழித்து விடுவது என்று அந்த அம்மாள் உறுதி பூண்டார். அவருக்கு தன் கையால் சமைத்து உணவு அளிப்பது என்று ஒரு புனித விரதமும் மேற்கொண்டார்.

பகவானாலும், பக்தர்களாலும் 'எச்சம்மாள்' என்று அன்புடன் அழைக்கபபட்ட லட்சுமி அம்மாள், தினமும் சாப்பாடு தயார் செய்து, பகவான் இருக்கும இடம் தேடிச் சென்று, அவருக்கும் ஆச்ரம வாசிகளுக்கும் உணவளித்து வந்தார். அவர்கள் சாப்பிட்ட பிறகே தான் உண்பது என்ற விரதத்தை மிகத் தீவிரமாகக் கடைப பிடித்து வந்தார்.

பகவான் அமர்ந்திருந்த குகைக்குச சென்றார். அமைதியாக அமர்ந்திருந்த ஞான குருவைத் தரிசித்தார். அவரது மலரடிகளில விழுந்து வணங்கி விட்டு, ஒரு வார்த்தையும் பேசாமல எதிரே நின்றார். அசையாமல் அப்படியே ஒரு மணி நேரம் நின்றிருந்தார். பகவானின் அருள் நோக்கால் அம்மாளின் உள்ளத்தில் எல்லையற்ற அமைதி குடி கொண்டது. அதுவரை அனுபவித்தறியாத ஆனந்தததில் மிதந்தார். அந்த இடத்தைவிட்டு நகரவே அம்மாளுக்கு மனம் இல்லை. இறுதியில் சிறிதும் மனமின்றி கீழிறங்கி வந்தார்.

இருள் கவிந்த பாதையில ஒளி படர்நதது. மனத்திலிருந்த மருள அகன்று அருள் சூழநதது. நம்பிக்கை மலர்ந்தது. தினமும் மலையேறிச் சென்று, மகானின் சந்நிதியில் சிறிது நேரம் தங்கி, புத்தொளியும் புதுத தென்பும் பெறறு வந்தார் லட்சுமி அம்மாள்.

அதற்குப் பிறகு தன் துயரக் கதையை பிறரிடம் சொல்லும் போதெல்லாம் அவருக்குத் துக்கம் தொண்டையை அடைக்கவில்லை. கண்ணீர் பெருகவில்லை. இதயம் குமுறவில்லை. எல்லாம் லேசாகி விட்டது.

சுகமோ துக்கமோ, எச்சம்மாள் பகவானிடம் சென்று முறையிடுவார். அவரது தூய பக்தியைக் கண்டு மனமிரங்கிய பகவான், எல்லா செய்திகளையும் அக்கறையோடு கேட்பார். அவவப்போது ஆறுதலாக இரண்டு வார்த்தைகள் கூறுவார்.

பகவானைக் கலந்தாலோசித்த பின்னர், எச்சம்மாள், செல்லம்மாள் என்ற பெண்ணை சுவீகாரம் எடுத்துக் கொண்டார். அவளுக்கு நல்ல பையனைப் பார்த்துத் திருமணம் செய்து வைத்தார். அவர்களுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. தன் பேரப் பிள்ளையை எடுத்துக் கொஞ்சினார். ரமணர் கொடுத்த செல்வமானதால் 'ரமணன்' என்று பெயர் சூட்டினார். அவன் மழலை மொழியைக் கேட்டு மகிழ்ந்தார்.


எச்சம்மாள் சிரித்து மகிழ்ந்தது பொல்லாத விதிக்கு எப்படித்தான் தெரிந்ததோ? எங்கிருந்தோ மீண்டும் ஓடி வந்தது!

ஒரு நாள் வீட்டில் தோத்திரப் பாடல்களை மெய்ம் மறந்து பாடிக் கொண்டிருந்த எச்சம்மாளுக்கு ஒரு தந்தி வந்தது. அது பயங்கரச் செய்தியைத் தாங்கி வந்தது. அந்தத்

தந்தியை கிராமத்திலிருந்த எச்சம்மாளின் மாப்பிள்ளை அடித்திருந்தார்.

'செல்லம்மாள் இறந்து விட்டாள்.'

இந்தத் திடீர்ப் பேரிடியை எச்சம்மாளால் தாங்க முடியவில்லை. செலலம்மாளுக்கு உடல்நலம் சரியில்லை என்ற செய்தி கூட அவருக்குத் தெரியாததால், பெண்ணின் மரணச் செய்தி தாயை திடுக்கிட வைத்தது. தந்தியை கையில் எடுத்துக் கொண்டு நேரே பகவானிடம் ஓடினார். வேறு எங்கே போவார், பாவம்?



ஸ்ரீ ரமணமகரிஷி

தந்தியைவாங்கிப்படித்த பகவான் கண் கலங்கினார். அவரது விழியோரத்தில் துளிர்த்த கண்ணீர், எச்சம்மாளின் துயரத்தைத் துடைத்தது. முனபு,மக்கள் மாண்டபோது துயரத்தில் மூழ்கிப் போனவள், தற்போது ஒரு நொடியில் மனத்தைத் தேற்றிக கொண்டாள். பகவானின் ஆசியும அருட்பிரசாதமும் அவருக்கு அத்தகைய மனப் பக்குவத்தை ஏற்படுத்தித் தந்திருந்தன.

அன்றைக்கே கிராமத்திற்குச் சென்று, பேரப் பிள்ளை ரமணனை எடுத்து வந்து ரமண பகவானின் அன்புக் கரங்களில் தவழ விட்டார் எச்சம்மாள். பகவானுக்கு மீண்டும் கண்கள் பனித்தன. இனி அந்தப் பேரனுக்கும் பாட்டிக்கும் பகவான்தானே கதி. அவரது ஆசி இருக்கும் வரை தனக்கு ஏதுங்குறை என்று நினைத்தார் எச்சமமாள். அந்த நம்பிக்கையே அவரது வாழ்க்கைக் கப்பலின் நங்கூரமாக அமைந்தது. இனி எத்தனை பயங்கரமான புயல் வீசினாலும், துன்பமும் துயரம் தொடர்ந்து வந்தாலும், எந்த அதிர்ச்சி ஏற்பட்டாலும் எச்சம்மாளால் தாங்கிக் கொள்ள முடியும்!

எச்சம்மாளுக்கு எந்நேரமும் பகவானின் சிந்தனைதான். அதனால் அவருக்குப் பல ஆன்மிக அனுபவங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

ஒரு சமயம் விரூபாட்சி குகையில் இருந்த பகவானுக்கு சாப்பாடு எடுத்துக் கொண்டு மலையேறிக் கொண்டிருந்தார் எச்சம்மாள். சத்குரு சுவாமி குகையைக் கடந்து சென்ற போது, பாதையில் இரண்டு பேர் நின்று பேசிக் கொண்டிருப்பது போல் அவருக்குத் தோனறியது. ஒருவர் ரமண மகரிஷியைப் போலவும் மற்றவர் யாரோ ஒரு பக்தர் போலவும் இருந்தனர். அங்கு நிற்காமல் எசசம்மாள் குகையை நோக்கி நடக்க ஆரம்பித்தார். அப்போது 'இங்கே இருக்கும் போது மேலே என்னத்துக்குப் போகிறது?' என்ற குரல் கேட்டது. பகவானின் குரல் போல் இருக்கிறதே என்று துணுக்குற்ற எச்சம்மாள் திரும்பிப் பாரததார. ஆனால், அங்கு யாருமே இல்லை. சுற்றுமுற்றும் பார்த்தார், ஒருவருமே கண்ணுக்குத் தென்படவில்லை. அந்த அம்மாளை ஒருவித பயம் பற்றிக் கொண்டது. உடலெலலாம் வியர்த்தது. அந்த நடுக்கத்துடனேயே விரூபாட்சி குகையை அடைந்தார்.

அப்போது ரமண பகவான், வட நாட்டிலிருந்து வந்திருந்த ஒரு சாஸ்திரியுடன் பேசிக் கொண்டிருந்தார். எச்சம்மாளின் நடுக்கத்தைக் கண்ட ஒருவர், அவரிடம் காரணத்தை விசாரித்தார். வரும் வழியில் தான் கண்டதையும் கேட்டதையும் கூறினார் எச்சம்மாள்.

அதைக் கேட்ட சாஸ்திரி, "சுவாமி, நீங்கள் என்னுடன் இங்கே பேசிக் கொண்டிருக்கும் போதே, இந்த அம்மாளுக்கு மலையில் தரிசனம் தருகிறீர்களே, எனக்கு மட்டும் அந்த அனுக்கிரகம் இல்லையே" என்று குறைப்பட்டுக் கொண்டார். அந்த பக்தரின் மனக் குறையைப் போக்குவதற்காக பகவான், "அதெல்லாம் அவளுடைய பிரமை, எப்போதும் அவள் என்னையே நினைத்துக் கொண்டிருப்பதால் அப்படி யெல்லாம் தோன்றுகிறது" என்று சமாதானமாகக் கூறி விட்டார்.

தன்னலமற்ற தொண்டே எச்சம்மாளின் மதம், வழிபாடு எல்லாம். வடநாட்டு குரு ஒருவர் மனத்தை ஒருநிலைப்படுத்தி தியானத்தில் ஆழ்ந்திருக்கும் யோகத்தை அவருக்குக் கற்றுத் தந்திருந்தார். தன்னை மறந்த நிலையில், ஒரு நாள் முழுதும் தியானத்தில் ஆழ்ந்திருப்பார். சில சமயம் அவருக்கு ஜோதி தரிசனம் ஆவதும் உண்டு. இதைப் பற்றி ஒரு நாள் எச்சம்மாள் பகவானிடம் கூறி விளக்கம் கூட கேட்டார். அதற்கு பகவான் "இதெல்லாம் உனக்குத் தேவையில்லை. அந்த ஒளி தரிசனம் உன் லட்சியமாக இருக்கக் கூடாது. உன்னையே நீ அறிந்து கொள்ள வேண்டும். அதுதான் முக்கியம்" என்றார். அதற்குப் பின்னர், எச்சம்மாள் ஆத்ம விசாரத்தில் தீவிரமாக மனத்தைச் செலுத்தினார். பகவானின் அருளாசியால் 'நான் யார்?' என்பதை எளிதில் அறிந்து கொண்டு விட முடியும் என்ற நம்பிக்கை அவருள் வேரூன்றி விட்டது.

எச்சம்மாளுக்கு தந்தையிடமிருந்து பணம் வந்து கொண்டிருந்தது. அவர் இறந்த பிறகு அந்த அம்மாளின் சகோதரர் தவறாமல் பணம் அனுப்பி வந்தார். அந்தப் பணத்தை யெல்லாம் பகவானின் கைங்கரியத்திற்கே செலவு செய்தார் அந்த உத்தமப் பெண்மணி. அவர் குடியிருந்த வீட்டில் எப்போதும் பக்தர்களின் கூட்டம் இருந்து கொண்டே யிருக்கும். அவர்களை உபசரித்து, உணவளிப்பதை பகவானுக்குச் செய்யும் தொண்டாகவே மதித்து வந்தார் அவர்.

பகவான் எச்சம்மாளின் மீது அன்பைப் பொழிந்தார். அவரைப் பற்றி யார் குறை கூறினாலும் ஒப்புக் கொள்ள மாட்டார்.

ஒரு நாள் ஆசிரமத்தின் சமையல் அறையில் பகவான் காய்கறி அரிந்து கொண்டிருந்த போது, ஒருவர் எச்சம்மாளின் சமையலைப் பற்றிக் குறை கூறினார். உடனே பகவான் அவர் பக்கம் திரும்பி, "இதோ பாரு, அவ சமையல் உங்களுக்குப் பிடிக்கா விட்டால் நீங்க சாப்பிட வேண்டாம். எனக்கு அவ கொண்டு வந்து ஆசையா கொடுக்கிறது அமிர்தமாயிருக்கு. நான் ஆனந்தமா சாப்பிடறேன்" என்று கூறினார்.

ஆசிரமத்தில் எல்லாரும் சாப்பிட உட்கார்ந்தால் பகவான் 'சாப்பிட ஆரம்பிக்கலாம்' என்று சைகைக் காட்டிய பிறகுதான் அனைவரும் சாப்பிடத் தொடங்குவார்கள். ஒரு நாள் எல்லாரும்பகவானின் சைகைக்காகக் காத்துக் கொண்டிருந்தார்கள். ஆனால், பகவான் கன்னத்தில் ஒரு கையும் இலையில் ஒரு கையுமாக பேசாமல் அமர்ந்திருந்தாரே தவிர 'சாப்பிடலாம்' என்று கூறவேயில்லை. அவர் ஏன் இப்படி இருக்கிறார் என்பது யாருக்குமே புரியவில்லை.

சற்றைக்கெல்லாம் ஓரிருவருக்கு காரணம் விளங்கி விட்டது. எச்சம்மாள் கொண்டு வந்து வைத்திருந்த 'சாப்பாட்டை, பகவானுக்கும் பிறருக்கும் பரிமாற மறந்தது அப்போது தான் அவர்களுக்கு நினைவிற்கு வந்தது. எல்லோரும் தங்கள் சாப்பாட்டைப்பற்றி நினைத்துக் கொண்டிருந்த போது, பகவான் மட்டும் அந்த தூய பக்தியின் அன்பு உள்ளத்தை நினைத்துக் கொண்டிருந்தார்.

எச்சம்மாளின் சாப்பாடு பரிமாறப் பட்ட பிறகுதான் 'சாப்பிடலாம்' என்று அனுமதி தந்தார் பகவான்.

ஒரு நாளா இரண்டு நாளா, முப்பத்தெட்டு ஆண்டுகள் எச்சம்மாளின் அன்புத் தொண்டு தொடர்ந்து நடைபெற்று வந்தது. ஆனால், இந்த உலகில் எந்தப் பணியும் ஒரு நாள் முடிந்து தானே ஆக வேண்டும்.

1945-ம் ஆண்டு டிசம்பர் மாதம் இறுதியில் ஒரு நாள் . எச்சம்மாள் சமையலை முடித்து விட்டு, பகவானுக்கும் பக்தர்களுக்கும் உணவளித்து விட்டு, வழக்கப்படி மாலையில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார். அவருக்குத் திடீரென்று உடலில் என்னவோ வேதனை செய்தது. தொண்டை

வறண்டு, தாகம் எடுத்தது. தண்ணீர் அருந்தினார். ஆனால், வேதனை அடங்கவில்லை.

மார்பு படபடவென்று அடித்துக் கொண்டது. அப்படியே படுத்து விட்டார். பிறகு நடமாட்டமே இல்லை.

இரண்டு நாட்களுக்கெல்லாம் நிலைமை மோசமாகியது. பேச்சு அடங்கியது. கண்கள் செருகிக் கொண்டன. நினைவு தப்புவதும் திரும்புவதுமாக இருந்தது.

மாலை நான்கு மணி இருக்கும். அவருக்கு சரியான நினைவு இருக்கிறதா என்று அறிவதற்காக, அருகிலிருந்த ஓர் அம்மாள், ''இன்னிக்கு பகவானுக்கு சாப்பாடு போகலே'' என்று குனிந்து, எச்சம்மாளின் காதருகில் கூறினாள். அப்போது சட்டென்று கண்களைத் திறந்து, ''என்ன, நிஜமாகவா?'' என்பது போல் இருபுறமும் வெறிக்கப் பார்த்தார் எச்சம்மாள். பெரும் துயரத்தின் சாயல் அவர் முகத்தில் படர்ந்தது. மரணத்தின் தலைவாயிலில் நின்றிருந்த நிலையிலும் அப்படியோர் அபசாரம் நடந்து விட்டதை நினைத்து வேதனைப் பட்டார் அவர். அப்போது அருகிலிருந்த உறவினள் ஒருத்தி, ''இல்லே, அந்தை! பகவானுக்கு சாப்பாடு வழக்கப்படி கொடுத்தனுப்பியாச்சு'' என்று கூறிய பிறகுதான் எச்சம்மாள் முகத்தில் சற்று அமைதிநிலவியது.

அன்று இரவு எச்சம்மாளுக்கு சுவாசம் கண்டு விட்டது. மூச்சு விட முடியாமல் திண்டாடினார். நா குழறிப் போயிற்று. ஏதேதோ பிதற்றத் தொடங்கினார். யாரோ ஒருவர் ஓடிப் போய் பகவானிடம் செய்தியைக் கூறினார். ஆசிரமத்திலிருந்த டாக்டர் வந்து பரிசோதித்துப் பார்த்தார். ஒன்றும் பயனில்லை. அவர் கையை விரித்து விட்டு, வருத்தத்துடன் திரும்பி விட்டார்.

அன்று மாலையிலிருந்து பகவான் யாருடனும் அதிகம் பேசாமல், கண்கள் பேரருளைப் பொழிய, உடலைச் சுற்றியும் பேரொளி படர, ஆழ்ந்த தியானத்தில் ஈடுபட்டிருந்தார். அதைக் கண்ட பக்தர்கள், ஏதோ ஒரு ஜீவனைக் கடையேற்றவே பகவான் தவநிலை மேற்கொண்டிருப்பதாக நினைத்தார்கள். அன்று இரவு எச்சம்மாளின் உடல்நிலையைப் பற்றி பகவானின் காதில் போட்ட கணத்திலிருந்து அந்த அம்மாளின் சிரமமெல்லாம் சிறிது சிறிதாகக் குறைந்தது; மூச்சு லேசாக இயங்க, அது மெள்ள மெள்ள அடங்கியது. தூங்குவது போலவே காணப்பட்ட எச்சம்மாள், சற்று நேரத்தில் மீளாத் துயிலில் ஆழ்ந்து விட்டார்.

சைனாவில் ஜலதோஷத்திற்கு ஒரு புதிய மருந்து கண்டு பிடித்திருக்கிறார்கள்.

அதுதான் ''மோவின் சிந்தனைகள்''.

உங்களுக்கு ஜலதோஷம் ஏற்பட்டு, அதனால் சிரமப்படும் போது, தலைவர் 'மோ'வின் சிந்தனைகள் புத்தகத்தைப் படியுங்கள்'' என்று சொல்கிறது அரசாங்க அறிக்கை.

—எஸ். ரஜத்

எச்சம்மாளின்உடலைக் கங்கை நீரில் குளிப்பாட்டினார்கள். திருமேனிக்கு திருநீறு பூசினார்கள். உருத்திராட்ச மாலைகளை அணிவித்தார்கள். கண்ணீருக்கிடையே, எரியூட்டினார்கள்.

எச்சம்மாளின் மறைவு விதிக்கு பெரும் ஏமாற்றத்தை அளித்தது; இனி, அந்த அம்மாளை அது வாட்டி வதைக்க முடியாதே! துன்பமே தீண்ட முடியாதபடி தனி உலகிற்குத் தப்பிச் சென்று விட்டாரே!


எச்சம்மாளின் மரணச் செய்தியை கேட்ட பகவான், ''என்னமோ, இந்த உலகத் தொல்லைகளிலிருந்து ஒரு வழியாகப் போய்ச் சேர்ந்து விட்டாள்'' என்று கூறினார்;


அப்போது அருகிலிருந்த ஸ்ரீ நாகம்மா என்ற ஆந்திர பக்தை, ''சுவாமி, இனி தினமும் சாப்பாடு வருவது நின்று விடுமே'' என்று கண் கலங்கக் கூறினார்.


''ஏன் அப்படிச் சொல்றே? அதான் முதலியார் பாட்டி இன்னும் உயிருடன் இருக்காளே'' என்று கூறினார் பகவான்.

முதலியார் பாட்டி, பகவானுக்குச் செய்து வந்த அன்புத் தொண்டு, மற்றொரு பக்திக் காவியம்.

—தொடரும்







அருணாசல மகிமை



ஸ்ரீ அருணாசலேச்வரர் ஆலய கோபுரம்.

பரணீதரன்

40

அலங்காரத்தம்மணியைத் தான் எல்லோரும் அன்புடன் 'முதலியார் பாட்டி' என்று அழைத்தனர். அவர் காரைக்காலுக்கு அருகிலுள்ள தில்லையாடியில் பிறந்தவர். தொண்டைமண்டல முதலியார் வகுப்பைச் சேர்ந்தவர். அவருடைய மகன் சுப்பையா முதலியார்; மருமகள் காமாட்சி அம்மாள்.

தெய்வ பக்தி நிறைந்த அந்தக் குடும்பம், அவ்வூரில் இருந்த ஒரு வயோதிக சாமியாருக்கு அன்புப் பணி புரிந்து வந்தது. அவரது மொழியும் நடத்தையும் கூடிய அந்தச் சாமியாருக்கு அன்பு குருவாக இருந்த அந்தச் சாமியாருக்கு இறுதிக் காலம் நெருங்கிவிட்டதைக் கண்டு அவர்கள் கலங்கினார்கள். சாமியார் இனி பிழைக்க மாட்டார் என்று தெரிந்து விட்டது. அலங்காரத் தம்மணிக்கு அழுகையே வந்துவிட்டது. "சாமி, எங்களுக்கெல்லாம் ஒரு வழி சொல்லாமே போறீங்களே, நீங்க மறைஞ்சப்புறம் நாங்க எப்படி வாழப் போறோமோ, தெரியலையே; எங்க எதிர்காலம் எப்படியிருக்கும், சொல்லுங்க சாமீ" என்று மன்றாடிக் கேட்டார் அம்மணி.

உயிர் பிரியப் போகும் தருணத்தில் அந்தச் சாமியார், "கவலைப்படாதீங்க தாயே. நீங்க அருணாசலம் போங்கம்மா. உங்களுக்கு ஒரு குறைவும் வராது" என்று சொல்லி விட்டுக் கண்ணை மூடினார் அவர்.

சாமியார் சொன்னதைத் தெய்வ வாக்காக மதித்து, அந்த அம்மாள் தன் மகனுடனும் மருமகளுடனும் திருவண்ணாமலை வந்து சேர்ந்தார். எச்சம்மாள் 1907-ம் ஆண்டு அங்கு வந்து சேர்ந்தார். மூன்று ஆண்டுகள் கழித்து 'முதலியார் பாட்டி' வந்தார். எச்சம்மாள் தினமும் ரமண பகவானுக்கு உணவு சமைத்து எடுத்துக் கொண்டு செல்வதைக் கண்ட அம்மணி, தானும் அவ்வாறே செய்ய ஆரம்பித்தார். பிள்ளையும் நாட்டுப் பெண்ணும் அவருடன் முழு மனத்துடன் ஒத்துழைத்தனர். நாள் ஆக ஆக அவர்கள் இல்லத்திலும் பக்தர் கூட்டம் பெருகத் தொடங்கியது. அங்கு வந்த அத்தனை பேருக்கும் சாப்பாடு கிடைத்தது. அலங்காரத் தம்மணியிடம் பணம் இல்லை; எல்லை யாக அரிய இருந்தது. பாசந்த உள்ளம் நிறைந்தது.

சில வருடங்கள் சென்றதும், சுப்பையா முதலியார் இறைவனடி சேர்ந்து விட்டார். அதன் பிறகு தொண்டு செய்வதில் பழக்கப்பட்டவர் தாயுடன் கொண்டு அங்கு கூட்டம் கொண்டார் திருப்பணத்தான் பகவானுக்குச் சோறு சாதம் மேற்கொண்டு சந்நியாசியாகி விட்டார். ஆனாலும் தாயும் அந்த நாட்டுப்பெண் காமாட்சி யைப் பட்டினி விடாமல், தம்பிரானாகி ஊர் ஊராகச் சென்று சமயப் பணி ஆற்றி வந்தார்.

காமாட்சி அம்மாள் எண்ணங்களின் இந்த நிலையாத முடிவால் கலங்கி நிலைகுலைந்துவிட்டாள். மன உறுதியுடனும் உள்ளார்ந்த ஈடுபாட்டுடனும் பாட்டியார் தொண்டு செய்யத் துணையாய் நின்று, பகவானின் சேவையில் தன் துயரத்தை மறந்து வந்தாள்.

முதலியார் பாட்டி பகவானிடம் மிக உரிமையோடு பழகுவார். சாப்பாட்டைத் தானே எடுத்துக்கொண்டு போய் அவருக்குப் பரிமாறுவார். இலையில் ஒரு பிடி சோறும், கறியும் வைத்து விட்டு "சாப்பிடு, சாமீ" என்று அன்பொழுகக் கூறுவார்.

ஒரு நாள் பகவான், "என்ன பாட்டி இது! இத்தனை வெச்சா நான் எப்படி சாப்பிடறது?" என்று உரிமையுடன் கடிந்து கொண்டார். உடனே பாட்டி, "என்ன சாமீ, எவ்வளவு வெச்சுட்டேன்? கொஞ்சம் தானே இருக்கு, சாப்பிடு" என்று பதில் கூறினார். பகவான் விடவில்லை. "இது மட்டும்தானா? மத்ததையெல்லாம் சாப்பிட வேண்டாமா? என் வயத்துலே எல்லாத்துக்கும் இடம் இருக்குமா?" என்று கேட்டார்.

"ஏன் இருக்காது? எல்லாத்துக்கும் மனசுதானே காரணம்" என்று சட்டென்று கூறிவிட்டு அங்கிருந்து நகர்ந்து விட்டார் பாட்டி. பகவானுக்குச் சிரிப்பு வந்தது. அருகிலிருந்தவர்களிடம் "பார்த்தேளா? என் உபதேசத்தை எங்கிட்டேயே திருப்பிச் சொல்லிட்டுப் போறா இந்தப் பாட்டி" என்று வேடிக்கையாகக் குறிப்பிட்டார்.

முதலியார் பாட்டி திருவண்ணாமலைக்கு வந்து இருபது வருடங்கள்

ஆகி விட்டன. வயது முதிர்ச்சியால் தள்ளாடி நடக்க ஆரம்பித்தார். மருமகள் காமாட்சியும் இறந்து விட்டதால், தன்னந்தனியாகத் திண்டாடிக கொண்டிருந்தார். கையிலே பணமும இல்லை. பாட்டியின் நிலைமையைக் கண்டு ஆச்ரமத்திலிருந்தவர்கள் பரிதாபப்பட்டார்கள்.

பகவானின் சகோதரரான நிரஞ்சனானந்த சுவாமிகளும் குஞ்சு சுவாமிகளும், பாட்டியிடம் எத்தனையோ சொல்லிப் பார்த்தார்கள்.

''பாட்டி, உனக்கோ ரொம்ப வயசாயிடுத்து. நீ ஏன் சிரமப்பட்டு பகவானுக்கு சமைச்சுப் போட்டுண்டிருக்கே? ஆச்ரமத்திலே ரொம்ப பேர இருக்கா. அவா மாதிரி நீயும் இங்கேயே இருந்துடு. வேளா வேளைக்குச் சாப்பிட்டுட்டு, பகவானுககு எதிரே சண்ணை மூடிண்டு தியானம் பண்ணிண்டு இரேன். அப்படி உனக்கு இங்கே இருக்கப் பிடிக்கலேன்னு, நீ இருக்கிற இடத்திலேயே 'கிருஷ்ணு, ராமா'ன்னு உட்கார்ந்துண்டிரு. நாங்க தினமும் உனக்கு சாபபாடு அனுப்பறோம்'' என்று அவர்கள் 'புத்திமதி' கூறியதைக் கேட்ட பாட்டி வருத்தப்பட்டார்.

''என்ன அப்படி சொல்லிட்டீங்க? என்ன கஷ்டம் வந்தாலும் நான பகவானுக்கு சாப்பாடு கொண்டு வந்து போடற புண்ணிய காரியத்தை நிறுத்தவே மாட்டேன். கையிலே துட்டு இல்லேன்னு, நாலு வீட்டுக்குப் போய பிச்சை யெடுத்து, சமையல செய்து பகவானுக்கும போட்டு விட்டுததான் நான் சாப்பிடுவேன். என்னாலே சும்மா யிருக்க முடியாது'' என்று கண் கலங்கக் கூறிவிட்டு அங்கிருந்து போய்விட்டார். பாட்டியின் திட வைராக்கியத்தையும் தளராத பக்தியையும் கண்டு பிரமித்துப் போன பகதர்கள் அவருக்கு அவ்வப்போது செலவுக்குப் பணம் கொடுத்து உதவினார்கள். வசதியாகத் தங்குவதற்கு வீடு தேடித் தந்தார்கள்.

பாட்டிக்கு வர வர கண் பார்வை மங்க ஆரமபித்தது. கையில் தடியை ஊன்றிக் கொண்டு, தட்டுத் தடுமாறி நடந்து கொண்டிருந்தார். தாயின் இறுதிக் காலத்தில் அவளுக்குப் பணிவிடைகள் செய்யவும், அவர் ஏற்றுக் கொண்டிருந்த விரதம் நிறைவேற உதவி புரியவும், சந்நியாசியாகச் சமயப் பணி புரிந்து கொண்டிருந்த மகன் சுப்பையா திருவண்ணாமலைக்கு வந்து சேர்ந்தார். இனி வீடு திரும்பவே மாட்டான் என்று எந்த மகனைப் பற்றி நினைத்திருந்தாரோ, அவர் திரும்பி வந்து தன் கடைசிக் காலத்தில் தன்னுடன் இருந்த பாட்டிககுப் பெரும் ஆறுதலாக இருந்தது.

பாட்டியின் நடமாட்டம் குறைந்து கொண்டே வந்தது. கண் சுத்தமாகத் தெரியவில்லை. பகவானுக்கு சாப்பாடு கொண்டு போகவும் அவரால் முடியவில்லை. அதனால், யார் யாரிடமோ கொடுதது அனுப்பினார். தன் கையால பகவானுக்குப் பரிமாற முடியவில்லையே என்று அவருக்குத் தணியாத குறை இருந்தது.

ஒரு நாள் யாரோ ஒருத்தன் வந்து பாட்டியிடம் பகவான் ரொம்பவும் இளைந்து விட்டதாகக கூறிவிட்டான். அவ்வளவுதான். பாட்டிக்கு வீட்டில் இருப்பு கொள்ளவில்லை. தன் கையால் சாப்பாடு போடாததால்தான் பகவான இளைத்து விட்டதாக அவர் எண்ணினார். தான் பெரிய பாவம் செய்து விட்டதாக வருந்தப் பட்டார்.

ஒரு நாள் சிரமப்பட்டு எப்படியோ ஆச்ரமத்திற்கு வநது சேர்ந்தார் முதலியார் பாட்டி. பகவான இருக்குமிடம் தேடிச் சென்று, வெகு அருகில் போய் நின்று, உற்றுப் பார்த்தார். ''அட பாவமே. உடமபு ரொம்ப இளைச்சுப் போச்சே! அவரு சொன்னது நிஜம்தான்'' என்று மிகவும் வேதனையுடன கூறினார். பகவான சிரித்துக் கொண்டே, ''இல்லே. பாட்டி! உனக்கு யாரோ தப்பா சொல்லியிருக்கா. நான் சாதாரணமாகத் தானே இருககேன்?'' என்று சொல்லி விட்டுப் போய் விட்டார். பாட்டி சமாதானம் அடையவில்லை. தியான மண்டபத்திற்கு வந்து பகவானுக்கு முன்னால் வெகு நேரம் அமர்ந்திருந்தார். அருகில் இருந்தவர்களிடம் பகவான் உடம்பு எபபடி யிருக்கிறது என்று விசாரித்துக் கொண்டிருநதார். பாவம்!

வழக்கப்படி பகவான் எழுந்த போது, எல்லோரும் எழுந்தார்கள். பாட்டியும் எழுந்து, மெள்ள நடந்து வாசற்படியின அருகில் போய் நின்று கொண்டார். அங்கு வந்த பகவான் கவலையோடு பாட்டி நிற்பதைக்கண்டு அவரெதிரில் சிறிது நேரம் நின்றார். பாட்டியின் மனத்தை அரித்த வேதனை

யைத் தணிக்கும் வகையில் கருணை வள்ளல் மீண்டும் கூறினார்: "பாட்டி, நான் இளைச்சுப் போயிட்டேன்னு நினைக்கிறாயா? எத்தனை [illegible] தெரியுமா? பாட்டி, [illegible] குருநாதனை [illegible]. [illegible] பார்ப்போம்" என்று கூறிவிட்டு மெல்ல நகர்ந்து விட்டார்.

எம்பெருமான் [illegible] ஆன் [illegible] பாட்டியும் [illegible]. மறைந்து [illegible], பாட்டுக்கு [illegible] வேண்டும் என்று [illegible] டது. [illegible] துக்கொண்டு ஆச்சரியத்தி[illegible]. பசனை இருக்குமிடத்தி[illegible] அவரை [illegible].

அப்போது பாட்டியின் [illegible] சிக்கு [illegible]. [illegible] சன்றி விட்டது போல் [illegible]. அருகிலிருந்த [illegible], "பாட்டி [illegible] சுத்தான [illegible]. இன்[illegible]" என்று [illegible]. [illegible] இறங்கு [illegible] காட்டாக [illegible]

தது. நடுக்கும் குரலில் அந்த எண்பது வயது மூதாட்டி கூறினாள்: "நான் [illegible] உன்னைப் பார்க்க வில்லை[illegible] என் உடம்பை [illegible] போகுது. [illegible] விட்டு. எனக்கு நல்ல கதி [illegible] கிடைக்கும்"

[illegible] என்ன சந்தேகம்?

எ[illegible] பாட்டி [illegible] 'கிழட்டு[illegible]' [illegible]. அவர் [illegible] பார்த்திருப் [illegible] பாட்டி [illegible] பார்த்துப் போவது [illegible].

[illegible] குகையில் [illegible] அப்போது [illegible] அவர் வந்து

"அட பாவமே, உடம்பு ரொம்ப இளைச்சுப் போச்சே...!"



தரிசிப்பது வழக்கம். அவருக்குக் கீரையும் காய்கறிகளும் சமைத்துக் கொண்டு வந்து கொடுப்பார்.

அவரிடம் இருந்த சொத்தெல்லாம் ஒரே ஒரு பானைதான். அதில வெந்நீர் போட்டுக் குளிப்பார். பின்னர் அதிலேயே சமைப்பார். கீரைப் பாட்டி சமையல் செய்வதற்கு பகவானும காய்கறிகளை நறுக்கிக் கொடுப்பார்; கீரையை ஆய்ந்து கொடுப்பார்.

கீரைப் பாட்டி, மலையிலிருந்து இறங்கிப் போய, நாலு வீடுகளுக்குச் சென்று, அரிசி, மாவு, பருப்பு எல்லாம் யாசித்துக் கொண்டு வந்து, தான் பத்திரமாக வைத்திருந்த மண் ஜாடியில் சேர்த்து வைப்பது வழக்கம். கஞ்சி தயாரித்து பகவானிடம்சென்று, ''சாமீ, கீழே ஒரு அம்மா மாவு கொடுத்தாங்க. அதிலே கஞ்சி காச்சினேன், குடியுங்க'' என்று கொண்டு வந்து கொடுப்பார். அதை அமிர்தமாக நினைத்துப் பருகுவார் பகவான்.

கீரைப் பாட்டி சமையல் சாமான்களைச் சேர்த்து வைப்பது பகவானுக்குத் தெரியும். நடசிவாயர் கோயில் மண்டபத்தில் யாரையுமே நுழைய விடமாட்டார் கீரைப்பாட்டி. அதெல், பகவான் மட்டும் போவார். உள்ளே போய் அந்த மண ஜாடியில் பாட்டி என்னென்ன வைத்திருக்கிறார் என்று பார்த்து விட்டு வருவார். இந்த ரகசியம கீரைப் பாட்டிக்குத் தெரியாது.

காய்கறிகள் கிடைக்காத நாட்களில் கீரைப் பாட்டி நொந்து போய் உட்கார்நது விடுவார். அப்போதெல்லாம் பகவான் புளியமரத்தில் ஏறி கொழுந்துகளைப் பறித்துக் கொண்டு வந்து கொடுப்பார். கீரைப்பாட்டியின் புண்ணியத்தில் பகவானுககு தினம் ஏதாவது ஆகாரம் கிடைத்து வந்தது. தனக்கென்று ஒன்றும் செய்து சாப்பிட மாட்டார் அந்தப் பாட்டி. ''சாமிக்குப் பிடிக்கும்'' என்று தினம் தினுசு தினுசாகச் செய்து கொண்டு வருவார்.

ஒரு நாள் இரவு பகவான் தங்குவதற்காக ஸ்கந்தாச்ரமத்திற்குச் சென்றிருந்தார். அன்பர் பழனிச்

சாமி மட்டும் விரூபாட்சி குகையில் தங்கியிருந்தார்.

நடு நிசி நேரம். மலைப் பிரதேசத்தில் அமைதி குடி கொண்டிருந்தது. நமசிவாயர் கோயிலிலிருந்து கீரைப் பாட்டி கூச்சல் போட்டது பகவானின் காதில் விழுந்தது.

"அய்யோ! [illegible], என்னைக் காப்பாற்று. திருடன், திருடன்" என்று கீரைப் பாட்டி இரைச்சல் போட்டது [illegible] கேட்டது. "பாட்டி, நான் இங்கே இருக்கேன். இதோ வந்து விட்டேன். யாரது?" என்று சத்தம் போட்டுக் கொண்டே பகவான் ஓடி வந்தார். வரும் வழியில், பழனிச் சாமியையும் எழுப்பி, "சத்தம் காதில் விழுந்ததா?" என்று கேட்டார். பழனிச்சாமி "ஏதோ சத்தம் வந்தது. கீரைப் பாட்டி தூக்கத்தில் உளறுகிறாளென்று நான் நினைச்சேன்" என்று கூறினார். கீரைப் பாட்டியின் குரல் பகவானின் காதில் மட்டும் தான் விழுந்தது. அருகிலிருந்த ஜடை சுவாமி குகையிலிருந்தவர்களுக்கோ, மாமரக் குகையிலிருந்தவர்களுக்கோ கேட்கவில்லை. கஜேந்திரனின் குரல் பரந்தாமனின் காதில் மட்டும்தானே விழுந்தது!

நமசிவாயர் கோயிலில் வந்து பார்த்த போது அங்கு ஒருவரும் இல்லை. "என்ன பாட்டி, சும்மா பயந்துட்டியா? திருடனையும் காணும், ஒருத்தனையும் காணோமே" என்று விளையாட்டாகக் கேட்டார் பகவான். "இல்லே சாமி. அந்தத் தடிப்பசங்க வந்து என் சாமானை யெல்லாம் எடுத்தாங்க. நான் கூச்சல் போடாமல் இருக்க என் வாயைக் கூடப் பொத்தினாங்க. நான் திமிறிக் கொண்டு உரக்கக் கத்தினேன். நீங்க உடனே குரல் கொடுத்தீங்க. அதைக் கேட்டுட்டு அந்தத் திருட்டுப் பசங்க ஓடிட்டாங்க" என்று மூச்சு முட்ட நடுங்கிக் கொண்டே கூறினார், அந்த மூதாட்டி. உடனே ஒரு தீப்பந்தத்தை ஏற்றிக் கொண்டு, சுற்று முற்றும் பார்த்தார் பகவான். அங்கு ஜாடி கவிழ்க்கப்பட்டு, சமையல் சாமான்களெல்லாம் சிதறப்பட்டுக் கிடந்ததைக் கண்டார். பின்னர்தான் திருடன் வந்தது உண்மைதான் என்பதும் கீரைப் பாட்டி கனவு காணவில்லை என்பதும் தெரிந்தது.

அந்தக் கீரைப் பாட்டி இறந்த போது கண் கலங்கினார் பகவான். நாட்டின் பல பாகங்களிலிருந்தும் பக்தர்கள் [illegible] தேடி வந்து, [illegible] விடை [illegible], [illegible] தாயினும் [illegible] அவளுக்கு [illegible] [illegible]

1926-ம் [illegible] என்பவர் [illegible] அம்மையாரின் [illegible] செய்தார். [illegible] பெயரிட்டார்கள் [illegible] பகவானிடம் [illegible] மதத்தில் [illegible] பகவான் [illegible] புரிந்து கொண்டது. [illegible] யும் போது, பகவான் [illegible] அமர்ந்து, [illegible] போலவே [illegible] நடத்தியருளினார். பின்னர் அச்சமயத்திலேயே பகவானின் முன்னிலையில் லட்சுமியை அடக்கம் செய்து, சமாதி எழுப்பினார்கள். லட்சுமியின் நினைவாக பகவான் இயற்றிய வெண்பா சமாதிக் கட்டடத்தில் பொறித்து வைக்கப் பட்டிருக்கிறது.

லட்சுமி என்ற பசு குடியாத்தத்தில் பிறந்தது. கீரைப் பாட்டியும் குடியாத்தத்திலிருந்து வந்தவர்தான். இந்தச் செய்தியை பகவான் தான பக்தர்களிடம் ஒரு நாள் கூறினார். எனவே, அந்தக் கீரைப் பாட்டிதான் லட்சுமியாக மறு பிறவி எடுத்து ஆசிரமத்திற்கு வந்திருக்க வேண்டும் என்று அவர்கள் கருதினார்கள்.

கீரைப் பாட்டியைத் திருடனிடமிருந்து காப்பாற்றிய பகவானைத் தேடிக் கொண்டும் ஓர் இரவு திருடர்கள் வந்தார்கள். அவர்கள் ஆச்ரமத்திற்குள் நுழைந்து, அங்கிருந்தவர்களைத் தடி கொண்டு தாக்கினார்கள். பகவானுக்கும் இடது தொடையில் பலமான அடி விழுந்தது. அந்த நிகழ்ச்சியைப் படிக்கும் போது அன்புத் தெய்வத்தின் கருணையுள்ளம் பளிங்கு போல் தெரிகிறது.

—தொடரும்.

To enhance your PERSONALITY always wear

"GRACEFUL BRASSIERS"

Glad to announce 'New Styles' in BRA.



ELITE (BS)		Rs. 4-25
,, (SS)		5-25
JOY (BS)		4-25
,, (SS)		5-25
SHARMILA (BS)		4-50
,, (SS)		5-95
PRINCESS (BS)		4-50
,, (SS)		5-95
ROSY (BS)		4-50
,, (SS)		5-95

Makes a lovely 'U' Shape at the back.

All the above styles are made of English Stretchable
– Elastic Straps. Guaranteed for One year. –

AVAILABLE AT ALL LEADING SHOPS.

North Arcot Dealers:

பேஷன் ஹவுஸ், லாங் பஜார், வேலூர். டிரிம்டெக்ஸ், லாங் பஜார். வேலூர், ஜெமினி ஸ்டோர்ஸ், லாங் பஜார், வேலூர், ஸ்ரீ கீதா ஸ்டோர்ஸ், லாங் பஜார், வேலூர். • பிரவின் கார்னர், மெயின் ரோடு, வேலூர், • பானு ஸ்டோர்ஸ், ஆரணி, • கோவாபரேடிவ் ஸ்டோர்ஸ், ஆரணி, • ராணி ஸ்டோர்ஸ், ஆரணி, • ஷகீலா ரெடிமேட் ஸ்டோர்ஸ், ஆற்காடு, • மரீனு ஸ்டோர்ஸ், அரக்கோணம், • ஷாப் சென்டர், குடியாத்தம், • பாலாஜி ஸ்டோர்ஸ், குடியாத்தம், • ஜமுனு ஸ்டோர்ஸ், ஆம்பூர், • பனியன் சென்டர், கிருஷ்ணகிரி ரோடு, திருப்பத்தூர், — • ஸ்ரீகல்பனு ஸ்டோர்ஸ், வாணியம்பாடி. —

Manufacturers:


GRACEFUL BRASSIERS

MADRAS - 17.

Show Room atNo. 5-B, SOUTH USMAN ROAD,

(Opp Raju Nursing Home)

T. NAGAR, MADRAS - 17.



அருணுசலேச்வரர் ஆலயத்தில் கம்பத்து இளையனுர் சந்நிதி.

அருணசல மகிமை

41

திருச்சுழி வேங்கடராமன், பால சந்நியாசியாக அருணுசலேச்வரர் ஆலயத்திலும், குருமூர்த்தத்திலும், பவழக் குன்றிலும் அமர்ந்திருந்த வரையில் அவரைத் தரிசிக்க வருபவர்கள் குறைவாகத்தான் இருந்தார்கள். மலை மீதுள்ள குகைகளில் அவர் வாசம் செய்யத் தொடங்கிய பிறகுதான் நிறைய பக்தர்களும் சீடர்களும் வந்து கூடினுர்கள். உணவு வகைகளும், பழங்களும், பலகாரங்களும் எடுத்து வந்து அன்புடன் அளித்தார்கள். பணமாகக் காணிக்கை செலுத்தும் பழக்கமும் அப்போது ஏற்பட்டது தான்.

உலக இச்சைகளையும் சுக போகங்களையும் துறந்துவிட்டு, அருணுசலம் நாடி வந்த வேங்கடராமன், ரமண பகவானுக மலர்ந்த போது, உலகப் பொருள்களை மண்ணுக்குச் சமமாக மதிக்கும் முற்றும் துறந்த முனிவராகவே காட்சி தந்தார். தம்மை தரிசிக்க வரும் மக்கள் பேரன்போடு கொண்டு வந்த தின்பண்டங்களைக் கொஞ்சம் ருசித்து விட்டு மீதியை அங்கிருந்தவர்களுக்குப் பங்கிட்டுத் தந்து விடுவார். பணமாகக் கொண்டு வந்து கொடுத்தால், ஆச்ரமங்கள் அமைக்கவும், நூல்கள் வெளியிடவும் அதை எடுத்துக் கொடுத்து விடுவார். விரூபாட்சி குகையிலுள்ள தாழ்வாரமும், மாமரக் குகையும், ஸ்கந்தாச்ரமத்தில் உள்ள கட்டடங்களும் பக்தர்களின் காணிக்கையால் தோன்றியவை தான். ஆண்டவனின் அழைப்பை ஏற்றுத்தன்னந் தனியாகத்திருவண்ணுமலை வந்து, உடுத்தியிருந்த ஆடைகளையும், கையிலிருந்த மூன்றரை ரூபாயையும் ஐயன் குளத்தில் விட்டெறிந்த

பரணீதரன்

சிறுவர் வேங்கடராமன், பின்னர் தம் கையால் பணத்தைத் தொடவே யில்லை. அவரது முயற்சி இல்லாமலே, அவர் இருந்த இடம் ஓர் ஆச்ரமமாக மாறிக் கொண்டு வந்த போதிலும் அதில் பற்றோ, பாசமோ இல்லாமல் தாமரை இலை தண்ணீர் போல் வாழ்ந்து வந்தார் அவர்.


1922-ம் ஆண்டில் அன்னை அழகம்மை மறைந்த பிறகு, மலை மீதுள்ள ஸ்கந்தாச்ரமத்திலிருந்து கீழே யிறங்கி வந்து தாயாரின் சமாதிக் கோயிலுக் கெதிரிலேயே கூரை வேய்ந்த ஓர் அறையைக் கட்டிக் கொண்டு நிரந்தரமாகத் தங்கி விட்டார். அதையடுத்து ஓரிரு சிறு குடில்கள் தோன்றின. குளியல் அறையென்றும், சமையலறை யென்றும், சாப்பிடும் அறையென்றும் மெள்ள மெள்ள வளர்ந்த அந்த இடம்தான் தற்போது பெரிய கட்டடங்களுடன் கூடிய ரமணாச்ரமமாகக் காட்சி தருகிறது.

ரமணாச்ரமத்தின் ஆரம்ப நாட்களிலேயே வருவோரும் போவோருமாக ஆச்ரமம் கலகலப்பாக இருக்கும். அங்கு ஏழைகளுக்கு அன்னமளிக்கப்படும். தினமும் நாற்பது ஐம்பது பேர் சாப்பிடுவார்கள். இதை யெல்லாம் பார்த்து விட்டு அந்த ஆச்ரமத்திற்கு நிறையச் சொத்துக்கள் இருந்ததாகச் சிலர் நினைத்ததில் ஆச்சரியமில்லை.

சாமியார் கோவணாண்டியாக இருந்தாலும், தம்மை தரிசிக்க வருபவர்களிடமிருந்து அவர் ஏராளமான பணம் சம்பாதித்து சேர்த்து வைத்திருப்பதாகச் சில திருடர்களும் நினைத்தார்கள். அது அவர்கள் கண்ணை உறுத்திக் கொண்டே இருந்தது. கேட்டால் சாமியார் கொடுக்க மாட்டார் என்று நினைத்து, இரவில் வந்து கொள்ளை அடித்துச் சென்று விடுவது என்று அவர்கள் திட்டமிட்டார்கள்.

ரமண பகவான் மலை மீதிருந்து இறங்கி வந்து இரண்டாண்டுகளுக்குப் பிறகு ஓரிரவு திருடர்கள் தாயாரின் சமாதிக் கோயிலுக்குள் கன்னம் வைத்து நுழைந்தனர். அங்கிருக்கும சில பொருட்களைத் திருடிக் கொண்டு யாருக்கும் தெரியாமல் ஓடி விட்டனர். அங்கு பணம் கிடைக்காதது அவர்களுக்குப் பெரும் ஏமாற்றமாக இருந்தது. ஆச்ரம சொத்தெல்லாம் முன்னறையிலுள்ள பீரோவில் தான் இருக்கும் என்று அவர்கள் முடிவு செய்தார்கள். எனவே, ஒரு வாரம் கழித்து, இரண்டு மூன்று பேராக, பெரும் ஏற்பாட்டுடன் ஆச்ரமத்திற்குள் நுழைந்தார்கள்.

அப்போது நடுநிசியாகி விட்டது. அந்த அறையிலிருந்த ஒரு மேடையில்



பகவான் படுத்துக் கொண்டிருந்தார். ஜன்னல்களுக்குக் கீழே நாலைந்து சீடர்கள் உறங்கிக் கொண்டிருந்தார்கள்.

வெளியே ஒரு குரல் கேட்டது: ''டேய், உள்ளே அஞ்சாறு பேர் படுத்துக்கிட்டிருக்காங்க...''

குரல் கேட்டு அங்கு படுத்திருந்த குஞ்சு சுவாமியும் மஸ்தான் சுவாமியும் விழித்துக் கொண்டு விட்டார்கள். மஸ்தான் மிரட்டும் குரலில், ''யார்ரா அது?'' என்று கேட்டார். பதிலில்லை. சற்றைக்கெல்லாம் யாரோ ஜன்னல் கண்ணாடியை உடைக்கும் சத்தம் கேட்டது. உள்ளே இருப்பவர்களைப் பயமுறுத்த வேண்டும் என்று திருடர்கள் அப்படிச் செய்தார்கள். உடனே குஞ்சு சுவாமியும் மஸ்தான் சுவாமியும் பகவான் இருந்த மேடைக்கருகில் சென்றார்கள். அதற்குள் திருடர்கள் ஓடிச் சென்று மேடைக்கருகில் இருந்த ஜன்னல் கண்ணாடியையும் நொறுக்கினார்கள். சத்தத்தால் விழித்துக் கொண்ட பகவான் எழுந்துஅமர்ந்தார். உள்ளத்திலோ முகத்திலோ ஒரு வித பதட்டமுமில்லை.

ஏதோ விஷமத்தனம் நடக்கிறது என்று ஊகித்துவிட்ட குஞ்சு சுவாமி வடப்புறமிருந்த கதவை மெள்ளத் திறந்து கொண்டு வெளியே போனார். அடுத்த குடிலில் படுத்திருந்த ராமகிருஷ்ணன் என்ற சீடரை எழுப்பி, உதவிக்கு அழைத்து வந்தார்.

இதற்குள் ஆச்ரமத்தைச் சேர்ந்த நாய்களான கறுப்பனும், ஜாக்குவும் குரைத்துக் கொண்டே வெளியே பாய்ந்து வந்தன. இதயமற்ற அந்தத் திருடர்கள் அந்த நாய்களைத் தடியாலும் கல்லாலும் அடித்துத் துன்புறுத்தினார்கள். வலி தாங்காமல் ஊளையிட்டுக் கொண்டே கறுப்பன் மீண்டும் அறைக்குள் ஓடி வந்து விட்டது. ஜாக், உயிருக்குப் பயந்து எங்கோ ஓடி மறைந்து விட்டது.

அறைக்குள் குஞ்சு சுவாமிகள் திரும்பி வந்த பிறகு, திருடர்களைப் பார்த்து, ''ஏம்ப்பா வீணு கலாட்டா பண்றீங்க? இங்கே ஒண்ணுமில்லை. வேணுமானால் வந்து பார்த்துக் கோங்க'' என்று மன்றாடினார். பகவானும் ''உள்ளே வந்து உங்களுக்கு வேண்டியதை எடுத்துப் போங்கள்'' என்று நிதானமாகக் கூறினார். அதையெல்லாம் திருடர்கள் சட்டை செய்வதாக இல்லை. கையிலிருந்த கடப்பாரையினால் ஜன்னலைப் பெயர்க்கத் தொடங்கினார்கள். குஞ்சு சுவாமிக்குக் கோபம் வந்தது. ''டேய், என்னன்னு நினைச்சீங்க? இப்போ நீங்க போகாட்டா, நல்லா உதை விழும்'' என்று மிரட்டிக் கொண்டே தென்புறமுள்ள வாசற்படி வழியே வெளியே செல்ல முயன்றார். ஆனால், பகவான் அப்படிச் செய்யக் கூடாது என்று கூறி அவரைத் தடுத்து விட்டார்.

''அவர்கள் தர்மத்தை அவர்கள் செய்யட்டும். நம்ம தர்மத்தை நாம் காப்போம். அவர்கள் செய்ய நினைப்பதைச் செய்யட்டும். பொறுமையுடனும் சாந்தமுடனும் இருக்க வேண்டியது நம் கடமை. அவர்களைத் தடுக்க வேண்டாம்'' என்று கருணாமூர்த்தி உபதேசம் செய்தருளினார். அடுத்த கணம் சீடர் பரம சாதுவாகி விட்டார். வாயைக் கூடத் திறக்கவில்லை.

தத்துவோபதேசம் பெற்றுப் போகவா திருடர்கள் ஆச்ரமத்திற்கு வந்தார்கள்? பகவானின் அருள்மொழி, அவர்களது கல் நெஞ்சைக் கரைக்கவில்லை. கையிலிருந்த வெங்காய வெடியை எடுத்து ஜன்னலின் மீது வீசினார்கள். தங்களிடம் துப்பாக்கி கூட இருப்பதாகப் பிறர் நம்ப வேண்டும் என்பதுதான் அவர்களது எண்ணம்! அந்த நிலையிலும் பகவான், ''உள்ளே வந்து வேண்டியதை எடுத்துச் செல்லுங்கள்'' என்று அன்போடு கூறினார். அதை அவர்கள் கேட்பதாக இல்லை. மாறாக, குஞ்சு சுவாமியின் மீது பழி தீர்க்கப் போவதாக இரைச்சல் போட்டார்கள். பகவானுக்கு ஆபத்து நேர்ந்து விடப் போகிறதே என்று பயந்த குஞ்சு சுவாமி, அறையை விட்டு வேகமாக வெளியே வந்தார். வயல்களைக் கடந்து, போலீஸ் உதவியைத் தேடி ஊருக்குள் சென்றார்.

குஞ்சு சுவாமி சென்றதும் ராமகிருஷ்ணன் திருடர்களைப் பார்த்து, ''உங்களை நாங்கள் தடுக்கவில்லை. உங்களுக்கு என்ன வேண்டும், சொல்லுங்கள். எடுத்துத் தருகிறோம்'' என்று கூறினார். அதற்கும் திருடர்கள் மசியவில்லை. ''இந்தக் கூரையை இப்போது கொளுத்தப் போகிறோம்'' என்று கூச்சல் போட்டார்கள். அதைக் கேட்ட பகவான் ''அப்படியெல்லாம் செய்யாதீர்கள். நாங்கள் வேணுமானால் இங்கிருந்து போய் விடுகிறோம்'' என்று கூறினார்.


அவர்கள் எதிர்பார்த்தது அதுதானே! உடனே ஒப்புக் கொண்டார்கள். ஆனால், கறுப்பனைத் தனியே விட்டுச் செல்ல அந்தக் கருணை வள்ளலின் மனம் இடம் தரவில்லை. அதை அடித்துக் கொன்று விடப் போகிறார்களே என்று ராமகிருஷ்ணனை அழைத்து நாயை வேறோர் இடத்திற்கு எடுத்துப் போகும்படி கூறினார். பின்னர், தங்கவேலு பிள்ளை, மஸ்தான், முனுசாமி ஐயர் மூவருடன் மகரிஷி அந்த அறையை விட்டு வெளியேறினார்.

அப்போதாவது அந்தப் பாவிகள் பேசாமல் இருந்திருக்கக் கூடாதா? மிருக வெறி அவர்களைப் பற்றிக் கொண்டது. எல்லோரையும் தடி கொண்டு தாக்கினார்கள் அந்தக் கயவர்கள்; ஈ எறும்புக்குக் கூட தீங்கு நினைக்காத அகிம்சா மூர்த்தியின் இடது தொடையிலும் கல் நெஞ்சன் ஒருவன் தடி கொண்டு தாக்கினான். பகவானுக்கு நன்றாக வலித்திருக்க வேண்டும். 'ஐயோ' 'அப்பா' என்று அவர் கத்தவில்லை. 'அட பாவிகளா' என்று அடித்த திருடர்களைத் தூற்றவில்லை. 'ஒரு கன்னத்தில் அடித்தால் மறு கன்னத்தைக் காட்டு' என்று கூறிய ஏசுநாதரைப் போலவே ரமண மகரிஷியும் புன்முறுவலோடு அன்பு வார்த்தைகள் மொழிந்தார்: அப்பா, உங்களுக்கு இன்னும் திருப்தி ஏற்படா விட்டால் மற்றொரு காலிலும் அடியுங்கள்.

அந்தக் கொடுமையாளர்கள் பகவானை மீண்டும் தாக்கத் தயாராகி விட்டனர். நல்ல வேளையாக ராமகிருஷ்ணன் இடைமறித்து தன் மீது அடிகளைத் தாங்கிக் கொண்டு, மகரிஷியைக் காப்பாற்றி, பக்கத்திலிருந்த குடிசைக்கு அழைத்துச் சென்றார்.

''இதோ பாருங்க, அங்கேயே 'கம்'முன்னு உட்கார்ந்துகிட்டிருங்க. எழுந்திருச்சீங்கன்னு, மண்டையைப் பொளந்துடுவோம்'' என்று திருடர்கள் எச்சரித்து விட்டு அறைக்குள் புகுந்தனர்.

சற்றைக்கெல்லாம் திருடர்களில் ஒருவன் ஓடி வந்து, ''உள்ளே இருட்டாக இருக்கிறது. ஒரு ஹரிக்கேன் விளக்கு வேண்டும்'' என்றான். விளக்கை எடுத்துக் கொடுக்கும்படி ராமகிருஷ்ணனிடம் கூறினார் மகரிஷி. அதைப் பெற்றுச் சென்றவன் மீண்டும் ஓடி வந்தான். ''சாமீ, பீரோவை எப்படித் திறக்கிறது? கொத்துச் சாவியைக் கொடுங்க'' என்று உரிமையுடன் கேட்டான். மகரிஷி அதையும் எடுத்துக் கொடுக்கச் சொன்னார். ஆனால், கொத்துச் சாவி குஞ்சு சுவாமியிடம் இருக்கிறது என்று தெரிந்ததும் அவர் வந்ததும் வாங்கித் தருவதாகக் கூறினார். திருடர்களுக்கு சாதுக்



களைப் போல் பொறுமை யிருக்குமா? அவர்கள் காத்திருக்கத் தயாரா யில்லை.

ப்ரோவை உடைத்தனர். அதில் ஆயிரக் கணக்கில் பணம் இருக்கும் என்று நினைத்தவர்கள் ஏமாந்தார்கள். பிள்ளையாருக்கு அணியும் வெள்ளி விபூதிப் பட்டை, கொஞ்சம் அரிசி, மாம் பழங்கள், ஒரு கத்தி இவைதான் அவர்களுக்குக் கிடைத்த பொருட்கள். தங்கவேலு பிள்ளையின் ஆறு ரூபாய் பணம் வேறு இருந்தது. இத்தனை ஆர்ப்பாட்டங்களுக்கும், அடி, உதை, குத்துக்களுக்குப் பின்னும் அவர்களுக்குக் கிடைத்தது இத்தனை தான்! ஏமாற்றம் ஒருபுறம், கோபம் ஒருபுறம். நேரே பகவானிடம் வந்தார்கள். ''சாமீ, உங்க பணத்தை யெல்லாம் எங்கே மறைச்சு வெச்சிருக்கீங்க, சொல்லுங்க'' என்று ஆத்திரத்துடன் கேட்டனர். மகரிஷி சிரித்தார். ''பணமா? எனக்கு ஏதப்பா பணம்? நாலு பேர் கொடுக்கிற பிச்சையிலே பிழைத்துக் கொண்டிருக்கும் சாதுக்கள் நாங்கள்'' என்று சாந்தமாக மொழிந்தார் மகரிஷி. அவ்ர் கூறியதை அவர்கள் நம்பத் தயாரா யில்லை. மீண்டும் மீண்டும் அதே கேள்வியைக் கேட்டனர். ஒரே பதில்தான் கிடைத்தது. உறுமிக் கொண்டே மீண்டும் அந்த அறைக்குள் நுழைந்தனர்.

சீடர்களுக்கு காயம்பட்டதைக் குறித்து வருந்தினார் மகரிஷி. மருந்து போடச் சொன்னார். ராமகிருஷ்ணன் மகரிஷியின் தொடையில் இருந்த வீக்கத்தைப் பார்த்து கண் கலங்கினார். ''சாமி, மருந்து போட்டுக்கலையா?'' என்று கேட்டதற்கு, மகரிஷி சிரித்துக் கொண்டே ''என்னை அடிக்கவில்லையே! பூசைதானே போட்டார்கள்'' என்று இரு பொருள்படக் கூறினார்.

ராமகிருஷ்ணனால் ஆத்திரத்தை அடக்க முடியவில்லை. அவருக்கு உடலெல்லாம் துடித்தது. ஓர் இரும்புத் தடியைக் கையிலெடுத்துக் கொண்டு, ''சாமீ, அங்கே போய் அவங்க என்ன செய்யறாங்கன்னு பார்த்துட்டு வரட்டுமா?'' என்று படபடக்கக் கேட்டார். சீடரின் மனக் கொதிப்பைப் புரிந்து கொண்ட மகரிஷி, வன்முறையில் இறங்கக் கூடாது என்று உபதேசம் செய்தார்:

''நாமெல்லாம் சாதுக்கள். நம்ம தர்மத்தை விட்டு விடக் கூடாது. நீ அவர்களை அடித்து, யாராவது இறந்து விட்டால், உலகம் நம்மைத் தான் தூற்றும். அவர்கள் ஒன்றும் தெரியாத சிறுவர்கள். அறியாமையால் எதையோ செய்கிறார்கள். நம் பற்கள் நம் நாக்கைக் கடித்து விட்டால், கோபங் கொண்டு பற்களை உடைத்து விடுகிறோமா?

திருடர்கள் சென்ற பிறகு குஞ்சு சுவாமிகள் மணியக்காரருடனும் இரண்டு போலீஸ்காரர்களுடனும் வந்து சேர்ந்தார். போலீஸ் சேவகர்கள் மகரிஷியை விசாரித்தனர். அவர் எதுவுமே சொல்ல மறுத்து விட்டார். ''ஏதோ அறியாதவர்கள் ஆச்ரமத்திற்கு வந்து எதையோ எடுத்துக் கொண்டு போனார்கள். பாவம், அவர்கள் எதிர்பார்த்த பணம் கிடைக்காமல் ஏமாந்து போனார்கள்'' என்று மட்டும் கூறினார்.

ஆனால், சீடர்கள் மணியக்காரரிடம் நடந்தவற்றை யெல்லாம் கூறினார்கள். பகவானுக்கு அடி விழுந்ததைக் கண்ணீருக்கிடையே கூறினார்கள். மனம் வருந்திய மணியக்காரர், போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று 'கேஸ்' எழுதி வைத்து விட்டுப் போனார்.

மறு நாள் பெரிய போலீஸ் அதிகாரிகளெல்லாம் வந்து மீண்டும் பகவானிடம் முதல் நாள் இரவு நடந்தவற்றைப் பற்றி விசாரித்தார்கள். தமக்கு அடி விழுந்ததைப் பற்றி அப்போதும் அவர் வாயைத் திறக்கவேயில்லை. திருடர்களைப் பற்றியும் கோபமாகப் பேசவில்லை.

அருட் பெருஞ் சோதியான ரமண பகவானின் தனிப் பெருங் கருணையைக் கண்டு அனைவரும் வியந்தனர்.

ஒரு வாரத்திற் கெல்லாம் அத் திருடர்கள் பிடிபட்டனர். அவர்களுக்கு உரிய தண்டனையும் அளிக்கப் பட்டது.

வந்தவர்கள் திருடர்கள் அல்ல;
இன்னா செய்தாரை ஒறுத்தல்— அவர்நாண
நன்னயஞ் செய்து விடல்.

என்ற குறளுக்கு இலக்கணமாகத் திகழ்ந்த ரமண மகரிஷியின் மகிமையை உலகிற்கு எடுத்துக்காட்ட வந்த பக்தர்களாகவே அவர்களை நினைக்க வேண்டியிருக்கிறது.

— தொடரும்.



ஸ்ரீ ரமணாசரமத்தில் ஓர் அழகு மயில்.

அருணாசல மகிமை

42

ஸ்ரீ ரமண மகரிஷி ஆச்ரமம் அமைத்து ஆயிரக்கணக்கில் சொத்து சேர்த்து வைத்திருப்பதாக நினைத்துக் கொள்ளையடிக்க வந்த திருடர்கள், ஏமாற்றத்துடன் திரும்ப வேண்டியதாயிற்று. ஆனால், மகரிஷியிடம் குவிந்திருந்த ஞானச் செல்வத்தைத் தேடி வந்த அன்பர்கள் எவருமே ஏமாற்றத்துடன் திரும்பவில்லை. பகவானிடம் அத்தகைய குறையாத செல்வம் இருந்ததை அறிந்து, முதன் முதலில் உலகிற்கு எடுத்துச் சொன்னவர் ஸ்ரீ சேஷாத்ரி சுவாமிகளாவார்.

முதலியார் பாட்டியும் அவரது மகனை சுப்பய்யா முதலியாரும் ரமண மகரிஷிக்குத் தொண்டு புரிந்து வந்தது போலவே சேஷாத்ரி சுவாமிகளுக்கும் தங்களால் இயன்ற பணிவிடைகள் செய்து வந்தனர். சுவாமிகள் இருந்த இடத்தைத் தேடிக் கண்டு பிடித்து, அவருக்கு உணவு அளித்து வந்தனர்.

சுப்பய்யாவை உலக வாழ்க்கையிலிருந்து திருப்பி, அவரைத் தெய்வ சிந்தனையில் ஈடுபடச் செய்யவேண்டும் என்று சேஷாத்ரி எண்ணினார். ஒரு நாள் அவரை வழி மறித்து, ''இதோ பாரு, மலை மேலே இருக்கிற என் தம்பி பத்தாயிரம் ரூபாய் சம்பாதிக்கிறான். நான் ஆயிரம் ரூபாய் சம்பாதிக்கிறேன். நீ ஒரு நூறு ரூபாயாவது சம்பாதிக்கக் கூடாதா, பிரும்ம ஹத்தி'' என்று கடிந்து கொண்டார் சுவாமிகள்.

தம் தம்பியென்று ரமண மகரிஷியைத்தான் குறிப்பிடுகிறார் என்றும், ஆன்ம செல்வத்தை நாடும் படித் தன்னைத் தூண்டுகிறார் என்றும் புரிந்து கொண்ட சுப்பய்யா, ''சுவாமி, எனக்கு இதுக்கெல்லாம் நேரம் இல்லை. நிலத் தகராறு விஷயமா கோர்ட்டிலே கேஸ் நடக்குதுங்க. அதுக்குப் போய் வரத்தான் நேரம் சரியாயிருக்குது'' என்றார். சேஷாத்ரி

பரணீதரன்

விடவில்லை. 'பிரும்மஹத்தி' 'பிரும்ம ஹத்தி' என்று சொல்லிக் கொண்டே போய் விட்டார். ஒன்றுமே புரியாத முதலியார், நேரே மகரிஷியிடம் சென்று நடந்ததைக் கூறினார்.

அதைக் கேட்டு மகரிஷி புன்முறுவல் பூத்தார். "சுவாமிகள் சொன்னது உண்மைதான். ஆத்ம விசாரம் செய்து, நீ பரபிரும்மத்தின் சொரூபம் என்பதை அறிந்து கொள்ளத் தவறி விட்டால் நீ பிரும்மத்தைக கொன்ற பாவத்திற்கு ஆளாகிறாய்."

சேஷாத்ரி சுவாமிகள் சாதாரணமாகப் பக்தர்கள் கண்களுக்கு அகப்படமாட்டார். அப்படி அகப்பட்டாலும் உபதேச மொழிகள கூறுவது மிக மிக அபூர்வம். ஆனால், ரமணருடைய பக்தர்கள் தம்மிடம் வந்தால், மிகவும் சந்தோஷப்படுவார். அவர்கள் உயர் நிலை எய்துவதற்காக இரண்டு வார்த்தைகளாவது பேசி அனுப்புவார்.

லட்சுமியம்மாள என்றபெண்மணி திருவண்ணாமலைக்கு வந்து, மலையிலிருந்த ரமண மகரிஷிக்கு ஒரு வாரம் வரை தொண்டு புரிந்துவிட்டு ஊருக்குப் புறப்படத் தயாரானாள். ஆனால், சேஷாத்ரி சுவாமிகளைத் தரிசிக்காமலே செல்ல வேண்டியிருக்கிறதே என்ற வருத்தம் அந்த அம்மாளுக்கு. அதை எச்சம்மாளிடம் தெரிவித்தாள். "ஒரு வாரமாக இங்கே இருந்தும் என்னால் சேஷாத்ரி சுவாமிகளைத் தரிசிக்க முடியலே. எங்கேயெல்லாமோ சுற்றினேன். அவர் என் கண்களுக்குத் தென்படவேயில்லை..." என்று குறைப் பட்டுக் கொண்டாள். மறுநாள் லட்சுமியம்மாள் ரமணாச்ரமம் செல்லும் வழியில் கோயிலுக்குச் சென்றாள். அங்கே சுவாமிகள் இருப்பதைக் கண்டு, கீழே விழுந்து கும்பிட்டாள். 'இந்த மகானுக்குச் சேவை செய்ய எனக்குக் கொடுத்து வைக்கவில்லையே' என்று மனத்திற்குள் நினைத்துக் கொண்டாள். அவ்வளவு தான்! பிறர் மனத்தில் உள்ளதை அப்படியே அறியும் சக்தி வாய்ந்த சேஷாத்ரி சுவாமிகள், "இங்கே என்றால் என்ன, அங்கே என்றால் என்ன" என்று கூறியபடி சென்று விட்டார்.


ரமணரும் தாமும் ஒருவரேதான் என்பதை எத்தனை அழகாகச் சுவாமிகள் கூறிவிட்டார்....!

சோமசுந்தர சுவாமி என்பவர் ரமணரின் சீடர். ரமணாச்ரமத்தில் எதிர்பார்த்த சாந்தி கிடைக்காததால், அவர் ரமணரை விட்டு ஒரு வாரம் தனியாக இருந்தார். வேறு யாரிடமாவது சென்றால்தான் தனக்கு நல்லுபதேசம் கிடைக்கும் என்றும், ஞான மார்க்கத்திற்கு வழி பிறக்கும் என்றும் நினைத்துக் கொண்டே நடந்து கொண்டிருந்தவரின் எதிரில் சேஷாத்ரி சுவாமிகள் வந்தார். சற்று ஒதுங்கி நின்று கும்பிட்ட சோமசுந்தர சுவாமியைப் பார்த்து சுவாமிகள், "ரமணர் கிட்டே போ" என்றார். தன் மனத்திலுள்ளதைச் சொல்ல முயன்றார் சோமசுந்தரம். அதை மிகத் தெளிவாக அறிந்திருந்த சேஷாத்ரி சுவாமிகள், மிகவும் அழுத்தம் திருத்தமாக, "போ... போ, போ. .ரமணர்கிட்டே போ. இங்கே நிக்காதே"......என்று கூறி அவரை விரட்டினார்.

சிதம்பரத்தைச் சேர்ந்த பக்தர் ஒருவருக்கு கஞ்சா சாப்பிடும் பழக்கம் இருந்தது. அதைச் சாப்பிட்டால், ஆன்ம விசாரத்தில் உன்னத அனுபவங்களைப் பெறலாம் என்று அவர் நினைத்திருந்தார். அந்தப் பழக்கம் அவரிடம் இருப்பதை அறிந்த மகரிஷி, அது தவறு என்றும், அந்த

ஸ்ரீ சேஷாத்ரி சுவாமிகள்.





22-11-70 

விகடன் இதழ்

சேலம் மாவட்ட மலர்

மருந்து சாப்பிடுவதை நிறுத்தி விடும்படியும் கூறினார். மகரிஷியின் அறிவுரையைக் கேட்காமல் ஒரு நாள் அந்த மருந்தைச் சாப்பிட்டு விட்டு ரொம்பவும் திண்டாடினார், அந்த பக்தர். பேரின்ப நிலை எய்துவதற்குப பதிலாக அவர் கெட்ட எண்ணங்களுக்கு அடிமையானார். 'என்ன செய்வது' என்று புரியாமல் கோயில் மண்டபத்தில் அமர்ந்திருந்த சேஷாத்ரி சுவாமிகளின் எதிரில் போய் நின்றார். உடனே சுவாமிகள் அவரைப் பார்த்து, ''நான் அப்பொழுதே இந்த மருந்தைச் சாப்பிடாதே என்று உன்னிடம் சொன்னேனே, கேட்டாயா? ஏன் சாப்பிட்டுவிட்டு இப்படி அவஸ்தைப்படறே'' என்று கோபித்துக் கொண்டார்.

அந்தப் பக்தருக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை. இதற்கு முன் சேஷாத்ரி சுவாமிகள் அவருக்கு அப்படியோர் அறிவுரை கூறியதேயில்லை. மகரிஷிதான் கூறியிருந்தார். தாமும் மகரிஷியும் ஒருவரேதான் என்பதைச் சுவாமிகள் தனக்கு எடுத்துக் கூறியதாகவே நினைத்தார் அந்த அன்பர்.

ஏ. வி. அய்யர் என்ற ரமண பக்தர் மகரிஷியைக் காணச் செல்ல வேண்டும் என்ற எண்ணத்துடனேயே, சேஷாத்ரி சுவாமிகள் எதிரில் போய் நின்று கொண்டிருந்தார். அதை உடனே அறிந்து கொண்டு விட்ட சுவாமிகள் ''மகரிஷிகள் தரிசனம் பரம பாவனம்'' என்று அவரைப் பார்த்துக் கூறினார்.

முற்றும் துறந்த இவ்விரு ஞான வைராக்கிய சீலர்கள் அடிக்கடி சந்தித்துக் கொண்டார்கள். விருபாட்ச குகையில் ரமணர் தங்கியிருந்த போது சேஷாத்ரி சுவாமிகள் அங்கு வருவார். இருவரும் சேர்ந்தே சாப்பிடுவார்கள். இவ்விரு மகான்களும் கண்களாலேயே பேசிக் கொள்ளும் அற்புதக் காட்சியைக் கண்டு புண்ணியம் பெற்றவர்களும் உண்டு.

ஒரு சமயம் இருவரும் வாய் விட்டு நேருக்கு நேர் பேசிக் கொண்டதை வாசுதேவ சாஸ்திரி என்பவர் அருகி லிருந்து கேட்கும் பாக்கியத்தைப் பெற்றார்.

மௌனமாக அமர்ந்திருந்த ரமண ரையே உற்று நோக்கிக் கொண்டிருந் தார் சேஷாத்ரி சுவாமிகள். பிறர் மனத்திலுள்ளதை ஒரு நொடியில் அறிந்து கொள்ளும் ஆற்றல் பெற் றிருந்த சுவாமிகளுக்கு அன்று ரமண ரின் மன ஓட்டத்தை ஆராய முடிய வில்லை. மகரிஷியைச் சுட்டிக் காட்டி "இது என்ன நினைக்கிறதோ, தெரிய வில்லையே" என்றார்.

ஆனால், மகரிஷியின மௌனம் கலையவில்லை. சேஷாத்ரியே தொடர்ந்து பேசினார். "அருணாசலேச்வரரை வணங்கினால் நற்கதி கிடைக்கும்" என்றார்.

அப்போது மகரிஷி, மௌனத்தைக் கலைத்து "வணங்குகிறவன் யார்? வணங்கப்படுகிறவன் யார்?" என்று சேஷாத்ரியைப் பார்த்துக் கேட்டார்.

சேஷாத்ரி இடியிடியென்று சிரித் துக் கொண்டே, "அதுதானே சரியாப் புரியலே" என்று சொன்னார்.

அதன் பின்னர் ரமண பகவான் அத்வைத தத்துவத்தைப் பற்றி ஒரு மணி நேரம் பேசினார். உலகமும் கடவுளும் தனி மனிதனின் ஆத்மாவும் பிரும்மமே என்றும், அதைத் தவிர இரண்டாவது வஸ்து கிடையாது என்றும் விளக்கினார்.

எல்லாவற்றையும் கேட்டுக் கொண் டிருந்த சேஷாத்ரி சுவாமிகள், "அது என்னமோ, இதெல்லாம் எனக்குப் புரி யவே யில்லை. எனக்குப் பக்திதான் முக் கியம். நான் சுவாமிக்கு நமஸ்காரம் பண்றேன்" என்று சொல்லி விட்டு, அண்ணாமலையின் சிகரத்தை நோக்கி பதினைந்து முறை கீழே விழுந்து கும்பிட்டு விட்டு மலையிலிருந்து இறங் கிப் போய் விட்டார்.

இந்த நிகழ்ச்சியைச் சுட்டிக்காட்டி, சேஷாத்ரி சுவாமிகளுக்கு அத்வைத ஞானமோ, ஆத்மானுபவமோ இல்லை என்று கூறி விட முடியாது. மகரிஷியைப் போன்றே அவரும் எல்லா ஜீவராசிகளையும் ஜடப் பொருள்களையும் பிரும்ம சொரூப மாகவே கண்டு களித்து, எந்நேரமும் சச்சிதானந்த நிலையிலேயே லயித் திருந்தார் என்பதில் சந்தேகமில்லை.

ஒரு சாதாரண நிகழ்ச்சி இந்த உண் மையை மிக நன்றாக விளக்குகிறது.

திருவண்ணாமலை அக்கிரஹாரத்தில் நடந்துவந்துகொண்டிருந்த சேஷாத்ரி சுவாமிகள் சட்டென்று நின்று, அங்கு கட்டப்பட்டிருந்த ஓர் எருமைக் கடாவை வைத்த கண் வாங்காமல் முறைத்துப் பார்த்துக் கொண்டிருந் தார். அருகிலிருந்த ஒருவர், "சாமி எதைப் பார்த்துக் கொண்டிருக்கு?" என்று கேட்டார்.

"இதைப் பார்த்துக் கொண்டிருக் கிறேன்" என்றார் சேஷாத்ரி.

"சாமி இந்த எருமையையா பார்த் துக் கொண்டிருக்கு?" என்று சற்று ஏளனமாகக் கேட்டார் அவர்.

உடனே சேஷாத்திரி அங்கு நின்றி ருந்த மற்றொருவரைப் பார்த்து "இது என்ன சொல் பார்க்கலாம்" என்றார்.

உடனே அவர், "இது ஒரு எருமை மாடு" என்றார்.

அதைக் கேட்டதும், "எருமையா? எருமையா? சே, பிரும்மம்னு சொல்லு" என்று கூறி விட்டு வேகமாக நடந்து சென்றார் சுவாமிகள்.

நடனானந்தர் என்ற நடேச முதலியார், ஆரம்பப் பள்ளி ஆசிரியர். ஞான மார்க்கத்தை நாடி திருவண்ணா மலைக்கு வந்தவர். அவர் ரமண மக ரிஷியிடம் சென்று சரணடைந்தார். ஆனால், அவருக்கு குருவருள் கிட்ட வில்லை. அவா விரும்பிய ஆசியோ உபதேசமோ கிடைக்கவில்லை. மன முடைந்து போயிருந்தவரிடம் ஒருவர், "நீங்கள் சேஷாத்ரி சுவாமி களைத் தரிசித்து முதலில் அவருடைய ஆசியைப் பெறுங்கள். அவர் யாரை யும் அருகில் சேர்க்க மாட்டார். விரட்டியடித்து விடுவார். அப்படிப் பட்டவரிடம் அனுக்ரஹம் கிடைத் தால், அதையே நல்ல சகுனமாக நினைத்து மீண்டும் ரமணரிடம் செல் லுங்கள்" என்று கூறியிருந்தார்.

வெகு நாட்கள் சுவாமிகளைத் தேடி அலைந்து, கடைசியில் ஒரு நாள் அவர் இருக்கும் இடம் அறிந்து அங்கு

சென்று தன் மன வேட்கையைத் தெரிவித்தார் நடேச முதலியார்.

அதைக் கேட்ட சேஷாத்ரி சுவாமிகள், ''குழந்தே! ஏன் மனத்தைப் புண்படுத்திக் கவலைப்பட வேண்டும்? ஞானம் என்றால் என்ன? எது அநித்யமோ அதையெல்லாம் புத்தியால் நீக்கிய பிறகு, எது நீக்க முடியாமல் மிஞ்சுகிறதோ அதுதான் ஞானம். மலையேறிப் போனால்தான் ஞானம் வரும், குகையில் போனால்தான் ஞானம் வரும் என்று அங்கும் இங்கும் அலைவது பைத்தியக்காரத்தனம்.... பயப்படாதே போ'' என்று ஆசி வழங்கி அனுப்பினார்.

இதற்குப் பிறகுதான் நடேச முதலியாருக்கு ரமணரின் நல்லாசியும் நல்லுபதேசமும் கிடைத்தது.

அருணாசலேச்வரரும ரமணரும் தாமும ஒருவரே என்பதையும் சேஷாத்திரி சுவாமிகள் மறைமுகமாக அடிக்கடி கூறியிருக்கிறார்.

''திருவண்ணாமலையில் மொத்தம் மூன்று லிங்கங்கள் இருக்கின்றன. ஒன்று ஜோதி லிங்கமான அருணாசல மலை. இரண்டாவது, ரமண சுவாமி. மூன்றாவது சேஷாத்ரி'' என்று அவர் கூறுவதைப் பலர் கேட்டிருக்கின்றனர்.

ரமண மகரிஷிக்குத் தினமும் அன்னம் அளித்து வந்த எச்சம்மாளிடம் மிகவும் அன்பும் பரிவும் காட்டி வந்தார் சேஷாத்ரி சுவாமிகள். மாலை நேரத்தில் மலையிலிருந்து இறங்கிவரும் எச்சமமாளைப் பார்த்து, ''ரமண சுவாமிக்குச் சாப்பாடு கொடுத்தாகி விட்டதா?'' என்று விசாரிப்பார். பொழுது சாய்ந்து இருட்டியிருந்தால், அந்த அம்மாள் வீடு வரை துணை போவார்.

ஒரு சமயம் எச்சம்மாள் வேதாந்த மகா வாக்கியங்களைப் பற்றிச் சுவாமிகளிடம் கேட்டார். ரமண பக்தை, என்ற ஒரே காரணத்திற்காக அம்மாளுக்கு நான்கு மணி நேரம் பல அரிய வேதாந்தக் கருத்துக்கள் அடங்கிய உபந்நியாசம் செய்தருளினார் சேஷாத்ரி சுவாமிகள்.

மற்றொரு நாள் எச்சம்மாள் வீட்டிற்கு வந்து, ''நீ எதைப் பூஜை செய்கிறாய்?'' என்று கேட்டார்.

''ரமண மகரிஷி படத்தையும் உங்கள் படத்தையும் வைத்துத்தான் சுவாமி நான் பூஜை செய்கிறேன்'' என்றார் அந்தப் பெண்மணி.

உடனே சேஷாத்ரி ''நீ ஏன் தியானம் பழகக் கூடாது?'' என்று கேட்க, ''சுவாமி, தியானம்செய்வது எப்படி?'' என அந்த அம்மாள் வினவினார். அந்தக் கணமே காலை மடித்து, கண்களை மூடி தியானத்தில் ஆழ்ந்த சேஷாத்ரி சுவாமிகள் ஐந்து மணி நேரம் சமாதியில் லயித்திருந்தார். இறுதியில் கண்களைத் திறந்து, ''எச்சம்மா, பார்த்தாயா, இதுதான் தியானம்'' என்று கூறினார்.

சேஷாத்ரி சுவாமிகள் ரமணரை விட, பத்து வயது மூத்தவர். அவருக்கு முன்பேஅருணாசலத்தை அடைந்தவர். வயதிலும் தோற்றத்திலும வாழ்ந்த முறையிலும் இருவருக்குமிடையே வேற்றுமைகளும மாறுபாடுகளும் இருந்தாலும், ஞான நிலையில் இருவரும் ஒருவரே. அதனால் தான் பக்தர்கள் சேஷாத்ரியை பெரிய சேஷாத்ரி என்றும் ரமணரை சின்ன சேஷாத்ரி என்றும் குறிப்பிடுவது வழக்கம். பராசக்தியின் அம்சமாக விளங்கிய சேஷாத்ரி சுவாமிகள், தம்மைப் பார்வதி தேவி என்றும் ரமணரைக் குமரக் கடவுள் என்றும் அடிக்கடி கூறுவது வழக்கம். அது உண்மைதான் என்பதை உலகிற்கு காட்டுவதே போல் சேஷாத்ரி சுவாமிகள் 1929-ம் ஆண்டு விதேக கைவல்யம் அடைந்தபோது அவரது சமாதிச் சடங்குகளில் மகனுக்குரிய உரிமையோடும், கடமை உணர்ச்சியோடும் ரமணர் கலந்து கொண்டார். ஒரு மணி நேரத்திற்கு மேல் அங்கு மௌனம் கலையாமல் ரமண பகவான் நின்றிருந்த திருக்கோலம், இவர்களிடையே நிலவிய ஆத்ம உறவுக்குச் சாட்சியாகக் காலமெல்லாம் நிலைத்திருக்கும் காட்சியாகும்.

பார்வதி தேவியும், முருகப் பெருமானும் சேர்ந்து, அருணகிரி அற்புதத் திருப்புகழின் மேன்மையை உலகறியச் செய்தார்கள். அத்தெய்வத் தொண்டில் ஈடுபடுவதற்காக அம்மகான்களின் முழுமையான ஆசியைப் பெற்றவர் தான் 'வள்ளிமலை வள்ளல்' என்று அழைக்கப்பட்ட திருப்புகழ் சச்சிதானந்த சுவாமிகள். அன்னாரது தெய்விக வரலாறு அருணாசல மகிமைக்கு மேலும் பெருமை கூட்டுகிறது.

—தொடரும்.

ஆயகலைகள் 24

இஸ்லாமியர்களின் மிகப் பெரிய பள்ளி வாசலைத் தாண்டி டிஸ்டெம்பர் வண்ணப் பூச்சில் கவர்ச்சியான கட்டடங்களில்தான் அமைந்திருக்கிறது, 'தென்னகத்திலேயே 'தாய்க் கல்லூரி' என்று போற்றப் பெறும், வேலூர் "அல்பாக்கியாத்துஸ் ஸாலிஹாத் அரபிக் கல்லூரி.'

மிகவும் எளிமையாய்த் தோன்றும் கல்லூரி முதல்வர் மௌலானா செய்கு ஹஸன் ஹஸ்ரத் அவர்கள் இக் கல்லூரியின் பரிணாம வளர்ச்சியை உற்சாகம் பொங்க விளக்குகிறார்.

இக் கல்லூரி, ஒரு பல்கலைக் கழகத்தின் பெருமையை மற்ற இஸ்லாமிய நாடுகளில் பெற்று பீடுடன் நிற்கின்றது இன்று.

அரபி, பார்ஸி, தமிழ், உர்தூ, ஆங்கிலம் ஆகிய ஐந்து மொழிகளிலும் இஸ்லாமியக் கல்வியை இங்கு கற்பிக்கின்றனராம். இந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும், இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேஷியா ஆகிய வெளிநாடுகளிலிருந்தும் இங்கு வந்து படிக்கும் மாணவர்கள் சுமார் 300 பேர்.

இப் பெரும் ஆலவிருட்சம் போன்ற கல்லூரியின் கிளைகளாய் பொதுக்குடி, கூத்தாநல்லூர், லால்பேட்டை, திருச்சி, பெங்களூர், பட்டிக்காடு (கேரளம்), நீடூர்-நெய்வாசல்போன்ற ஊர்களில் பரவி யிருக்கின்றனவாம் பல அரபிக் கல்லூரிகள்!

ஹிக்மதெ தப் இய்யாத் (பிரகிருதி சாஸ்திரம்), கிராஹத் (திருமறையின் பூர்வாபிநயம்), தப்சீர் (வேத பாஷியம்), அகாயித் (மத விசுவாசங்கள்) போன்ற இருபத்துநான்கு கலைகள் இங்கு கற்பிக்கப்படுகின்றன.

"300-க்கும் மேற்பட்ட எல்லா மாணவர்கட்கும் உறைவிடம், உணவு, பாடப் புத்தகங்கள் போன்ற சகல வசதிகளும் இலவசமாய் வழங்கப்படுகின்றன" என்கிறார் இக் கல்லூரி முதல்வர் மௌலானா செய்கு ஹஸன்.

—நீலவன்.

தொண்டை நாட்டுக் காவலர்கள்


திம்மராய கவுண்டர்



சந்தானம்


சகாதேவ கண்டர்

தண்டாரம்பட்டுத் தொகுதியிலிருந்து கே. சகாதேவ கண்டர் (காங்கிரஸ்) தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் பதினைந்து ஆண்டுகள் கிராம முனிசீப்பாக இருந்தவர்.

செங்கம் தொகுதியிலிருந்து பி. எஸ். சந்தானம் (தி. மு. க.) வெற்றி பெற்றார். 1957-62 ஆண்டுகளில் சட்டப் பேரவை உறுப்பினராக இருந்தவர்.

நாட்ராம்பள்ளியிலிருந்து தி. சி. திம்மராய கவுண்டர் (தி. மு. க.) வெற்றிபெற்றார். ஆத்துக்குப்பம் பஞ்சாயத்துத்தலைவராகவும், நாட்ராம்பள்ளி ஊராட்சி ஒன்றியப்பின் தலைவராகவும் அனுபவம் பெற்றவர்.



திருச்செங்கோடு மலையும் ஆலயமும்.

அருணாசல மகிமை

43

கோவை மாவட்டத்தில், பவானியை அடுத்து, மேட்டுருக்குச் செல்லும் பாதையில் பூநாச்சி புதூர் என்ற ஒரு கிராமம் இருக்கிறது. அங்கு நூறு ஆண்டுகளுக்கு முன், சிதம்பர ஐயர் என்பவர் மணியமாகப் பணியாற்றி வந்தார். வேத சாஸ்திரங்களை முறைப்படி பயின்று, குலத்திற்குரிய நெறியோடு வாழ்ந்து வந்தார். அவருடைய பாட்டனரான கணபதி சாஸ்திரிகள், அறுபது வயதில் இல்லறத்தைத் துறந்து, துறவியாகி, கால் நடையாகவே காசிக்குச் சென்று, கங்கையில் ஜீவ சமாதி அடைந்தார். இன்றும் 'கணபதி சுவாமிகள்' பலருக்குத் தரிசனம் தருவதாகக் கூறுகிறார்கள்.

சிதம்பர ஐயரின் மனைவி பார்வதி இறந்து விடவே, மகாலட்சுமி என்ற உத்தமியை இரண்டாந்தாரமாக அவர் திருமணம் செய்து கொண்டார். எல்லாச் செல்வங்களும் பெற்று மனம் ஒன்றிக் குடித்தனம் நடத்தி வந்த அத் தம்பதிக்கு, குழந்தைச் செல்வம் இல்லாதது பெருங் குறையாக இருந்தது. அவள் வேண்டாத தெய்வமில்லை; நோற்காத நோன்பு இல்லை.

ஒருநாள் மகாலட்சுமி தோசைக்கு மாவு அரைத்துக் கொண்டிருந்தாள். திடீரென்று அங்கு தோன்றிய கருநாகம் ஒன்று அவளருகில் வந்து, படம் எடுத்து ஆடியது. அருகிலுள்ள 'நாககிரி' என்னும் திருச்செங்கோடுக்கு வரும்படி அது அழைப்பது போல் அந்த அம்மாளுக்குத் தோன்றவே, பன்னிரண்டு அமாவாசைகள் அங்கு சென்று சுவாமி தரிசனம் செய்வதாகப் பிரார்த்தனை செய்து

பரணீதரன்

கொண்டு கற்பூரம் காட்டினுள். அந்த நாகம், சாதுவாகச் சென்று விட்டது.

அருணகிரிநாதர் தமது திருப்புகழிலும், கந்தர் அலங்காரத்திலும், கந்தர் அனுபூதியிலும் திருச்செங்கோட்டு மலையைப் பற்றியும் அங்கு உறையும் 'நாகாசல வேலவ'னையம் பெருமையோடு பேசுகிருர். 'செங்கோடனைச் சென்று தொழ நாலாயிரங் கண் படைத்திலனே அந்த நான்முகனே' என்றும் 'தெய்வத்திருமலை' என்றும் திருச்செங்கோட்டை ஏற்றிப் போற்றுகிருர். அது பூநாச்சி கிராமத்திலிருந்து பதினைந்து மைல் தொலைவிலுள்ளது. சிதம்பர ஐயரும் மகாலட்சுமியும் தாங்கள் பிரார்த்தித்துக் கொண்டபடி பன்னிரண்டு அமாவாசை திருநாட்களில் தவருமல் திருச்செங்கோடு சென்று, அர்த்தநாரீச்வரரையும், கந்தனையும் தொழுது வந்தார்கள். அதன் பலனுக பிறந்த பெண்ணுக்கு நாகம்மாள் என்றும், நான்கு ஆண்டுகளா கழித்துப் பிறந்த ஆண் மகவுக்கு அர்த்தநாரி என்றும் பெயரிட்டனர். அர்த்தநாரி தான், பின்னர் வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள வள்ளிமலையில் குடியேறி, திருப்புகழ் அமுதத்தை வையகத்திற்கு வாரி வாரி வழங்கினுர்.

1870-ம் ஆண்டு ஜனவரியில் சேஷாத்ரி சுவாமிகள் அவதரித்தார். அவரிடம் மந்திரோபதேசம் பெற்று, சீடரான வள்ளிமலை சச்சிதானந்த சுவாமிகள் அதே 1870-ம்ஆண்டு நவம்பரில் அவதரித்தார்.

குருநாதரான சேஷாத்ரி சுவாமிகளின் நூற்றுண்டு பிறந்த தின விழா நடை பெற்ற ஜனவரி மாதத்தில் 'அருணுசல மகிமை' தொடங்கியது. சீடரின் நூற்றுண்டு பிறந்த தின விழா கொண்டாடப் படும் நவம்பர் மாதத்தில் அன்னுரைப் பற்றிய வரலாறு இடம் பெறுகிறது. இது மனித முயற்சிக்கு அப்பாற்பட்ட பேரருளின் திட்டம் என்பதில் சந்தேகமில்லை.


அர்த்தநாரிக்கு ஐந்து வயது நிரம்பிய போது, சிதம்பர ஐயர் திடீரென்று காலமானுர். திக்கற்றவளாய்ப் போன மகாலட்சுமி, குழந்தைகளை அழைத்துக் கொண்டு, ஈரோட்டில் ஓட்டல் வைத்திருந்த தன் தமையனுன கங்காதர ஐயரின் வீட்டுக்குச் சென்ருள். அங்கு தந்தையின் திதியை முறைப்படி செய்வதற்காக அர்த்தநாரிக்கு உபநயனம் செய்வித்தார்கள். ஏழாவது வயதில், கலைவாணியின் அருள் பெற்று, பிள்ளையைப் பள்ளிக்கு அனுப்பி வைத்தார்கள்.

அர்த்தநாரிக்கு படிப்பில் கவனம் செல்லவில்லை. வகுப்புப் பிள்ளைகளுடன் விளையாடுவதிலும், விஷமச் சேட்டைகள் புரிவதிலும் நேரத்தைக் கடத்தினுர். அர்த்தநாரியின் அன்ருட லீலைகளைப் பற்றி கங்காதர ஐயருக்கு ஆயிரம் புகார்கள் வந்தன. கண்டித்துப் பார்த்தார், மிரட்டினுர், காதைத் திருகினுர். 'பூசை'யும் போட்டார். பிள்ளை திருந்துவதற்கான அறிகுறியே காணும்.

ஒரு நாள் விளையாட்டு வினையாகி விட்டது. தன் வயதுள்ள சிறுவனை, காளிங்கராயன் வாய்க்காலில் பிடித்துத் தள்ளிவிட்டு, 'இந்தப் பூனையும் பாலைக் குடிக்குமா?' என்று வீட்டுக்கு வந்து விட்டார் அர்த்தநாரி. காயம் பட்ட சிறுவனின் தந்தை, ஓட்டலில் இருந்த கங்காதர ஐயரிடம் வந்து சத்தம் போட்டார். அவர் வியாபா

'நாககிரி'





பழநிமலை

ரத்தைக் கவனிப்பாரா, மருமகனைப் பற்றி வரும் புகார்களைக் கவனிப்பாரா?

மறு நாளே தங்கையையும் 'அருமை'க் குழந்தையையும் கிராமத்திற்கே திருப்பி அனுப்பி விட்டார். உறவினர் கைவிட்டு விடலாம், பெற்றவள் அப்படிச் செய்வாளா? பிள்ளையை திண்ணைப் பள்ளிக்கூடத்தில் சேர்த்தாள், மகாலட்சுமி. பையன் பள்ளிக்கூடத்திற்குப் போய் வந்தானே யொழிய, விளையாட்டும், விஷமமும் அப்படியேதான் இருந்தன. இப்போது ஆசிரியர்களையே வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொண்டார். அவர்களைப் பற்றிக் கவிதைகள் கூட புனைய ஆரம்பித்தார்.

மாணாக்கனின் குறும்புத்தனத்தைக் கண்டு கோபம் கொண்ட ஆசிரியர், கடுமையான தண்டனை கொடுத்தார். கைகால்கள் வீங்கும்படி கருணையின்றி அடித்தார். அர்த்தநாரிக்குப் பொங்கி வந்தது ஆத்திரம். பீறிட்டுக் கொண்டு புறப்பட்டது ஒரு கவிதை:

நெடுமால் திருமருகா! நித்தம்
நித்தம் இந்த எழவா?
எழவெடுத்த வாத்தியார்
என்றைக்குச் சாவானோ?
களிப்புற்றிருப்பேனோ?
கணபதி காப்புத்தானே!

களிப்புற்றிருப்பது என்று முடிவு செய்து விட்டார் அர்த்தநாரி. அன்றோடு படிப்புக்கு முழுக்குப் போட்டு விட்டார்!

படிப்பு வரவில்லை என்றாலும், பையனின் புத்திசாலித்தனத்திற்கும் சாமர்த்தியத்திற்கும் குறைவேயில்லை. சிறுவன் அர்த்தநாரி, நாடகங்களில் நடித்து நல்ல பெயர் வாங்கினார். நன்றாக அரட்டையடிப்பார். நகைச்சுவையோடு பேசுவார். அவர் இருந்த இடம் எப்போதும் கலகலப்பாக இருக்கும். பெரிய மாமாவான அப்பு தீட்சிதருக்கு மருமகன் மீது அபார நம்பிக்கையிருந்தது. 'பையன் எப்படியாவது பிழைத்துக் கொண்டு விடுவான்' என்று அடிக்கடி கூறுவார். தம் ஐந்து வயதுப் பெண். சுப்புலட்சுமியை அர்த்தநாரிக்கு கன்னிகாதானம் செய்து கொடுத்தார்.

ஒன்பது வயது நிரம்பிய அர்த்தநாரிக்கு குடும்பப் பொறுப்பு வந்து விட்டது! பிழைப்பைத் தேடி கால் நடையாகவே சென்றார். சத்தியமங்கலம், ஹாஸனூர் வழியாக மைசூர் வந்து சேர்ந்தார். அங்கு அவருடைய அத்தை பிள்ளைகள் இருவர் இருந்தனர். அத்தான் குருசாமி ஐயர், 'அரண்மனையில் தலைமைச் சமையற்காரராகப் பணியாற்றி வந்தார். அவரது சகோதரர் ஸ்ரீகண்ட ஐயர், மிட்டாய்கடை வைத்திருந்தார். அவர்களுடைய சிபாரிசின் உதவியால் அரண்மனை அந்தப்புரத்தில் சமையல் வேலைக்கு அமர்ந்தார். 'அர்த்தநாரி.

ஒன்பது ரூபாய் சம்பளம். லீவு கிடைத்த போதெல்லாம் கிராமத்திற்கு வந்து தாயைப் பார்த்துவிட்டுப் போனர்.

ஆண்கள் பன்னிரண்டு வயதுக்கு மேல் அந்தபபுரத்தில் பணியாற்ற முடியாது. எனவே, அவரை அரண்மனைக்கு மாற்றினர்கள். அதிகாரிகளுடன் யாத்திரைசெய்து சமைத்துப் போட வேண்டிய கடினமான வேலையில் அமர்த்தப்பட்டார். காட்டுப் பிரதேசங்களிலும, திறந்த வெளியிலும், மழையிலும், வெய்யிலிலும் சமைத்துப் போடுவது என்பது எளிதான காரியமல்ல. இருப்பினும், தன் சாமர்த்தியத்தினல், நேரம் தவருமல் அதிகாரிகளுக்குப் பிடித்த சமையலைச் செய்து போட்டு, எல்லோரிடமும் நல்லபெயர்வாங்கினர் அர்த்தநாரி.

தொழில் செய்து கொண்டே, தேகவலிமையையும் பெருக்கிக் கொண்டார் அர்த்தநாரி. தேகப் பயிற்சிகள் பழகினர். சாமுண்டி மலையில் ஏறும் போது ஒவ்வொரு படிக்கட்டிலும் தோப்புக்கரணம் போட்டுக் கொண்டு போவார். சிலம்பம் பயின்ருர். குத்துச் சண்டை போட பழகிக் கொண்டார். பதினறு வயதில் பெரிய பயில்வானக விளங்கினர்.

மைசூருக்கு அடுத்த பச்சிமவாகினி என்ற சிற்றூரில் உறவினர் வீட்டுத் திருமணத்திற்குச் சென்றிருந்தார் அர்த்தநாரி. மணமக்கள் மணமேடையில் அமர்ந்திருந்தனர். முகூர்த்த வேளை நெருங்கி விட்டது. திடீரென்றுமாப்பிள்ளைக்கு காக்காய் வலிப்பு வந்தது. அவருக்கு அந்த நோய் இருப்பது பெண் வீட்டாருக்கு அதுவரை தெரியாது. 'நல்ல வேளை, இப்போதே தெரிந்ததே, மோசம் போக இருந்தோமே' என்று எல்லோரும் பெருமூச்சு விட்டனர். பிள்ளை வீட்டார் முகத்தில் ஈ ஆடவில்லை. மணப்பெண் நஞ்சம்மா தன் விதியை நினைத்து நொந்து போனள். அங்கிருந்த பெரியவர் ஒருவருக்கு ஓர் அரிய யோசனை தோன்றியது. குறித்த முகூர்த்தத்திலேயே நஞ்சம்மாளுக்குத் திருமணம் நடைபெற்ருக வேண்டும் என்று முடிவு செய்தார் அவர். அர்த்தநாரியை அழைத்து அவளுக்குத் தாலி கட்டச் சொன்னர். மறு பேச்சின்றி அவர் மணமேடைக்குச் சென்று, நஞ்சம்மாவை இரண்டாவது மனைவியாகக் கரம் பற்றினர்.

ஸ்ரீ வள்ளிமலை திருப்புகழ் சுவாமிகள்



சுப்புலட்சுமி தன் மாமியாருடன் பூநாச்சிபுதூரில் இருந்தாள். அர்த்தநாரி, நஞ்சம்மாவுடன் மைசூரில் குடித்தனம் நடத்தி வந்தார். அவர் அடிக்கடி கிராமத்திற்கு வந்து போவதும் உண்டு.

அவர் தம் தொழிலில் கவனம் செலுத்தினரே தவிர, புத்தகப் படிப்பைப் பற்றிக் கவலேயே படவில்லை. அவருக்கு தெய்வ பக்தியும் அதிகம் கிடையாது. யாராவது கடவுளைப் பற்றிப் பேசினால், ''எங்கே இருக்கிறார் கடவுள்? அவரை எனக்குக் காட்டுங்கள், பார்க்கலாம்'' என்று குதர்க்கம் பேசுவார்.

விதவிதமான பலகாரங்கள் செய்வதிலும், மணக்க மணக்க சமையல் செய்வதிலும் இவருக்கு ஈடு ஒருவருமில்லை என்று பெயர் வாங்கினர் அர்த்தநாரி. அவர் சம்பளம் இருபதாக உயர்ந்தது.

இருப்பினும் வாழ்க்கைப் படகு சம்சாரக் கடலில் தத்தளித்தது. மனச்சாந்தியற்றிருந்தார். முதல் மனைவிக்குப் பிறந்த இரண்டு ஆண் குழந்தைகளும் ஒரு பெண் குழந்தையும் அடுத்தடுத்து இறந்தன. சோகத்தில் வாடிய மனைவியும், சில மாதங்களில் போய்ச் சேர்ந்து விட்டாள்.

இரண்டாவது மனைவியான நஞ்சம்மாளுக்கு இரண்டு பெண் குழந்தைகளும், ஓர் ஆண் குழந்தையும் பிறந்தன. அந்தக் குழந்தைகளாவது ஆயுசோடு இருக்கக் கூடாதா? திடீரென்று இரண்டு பெண் குழந்தைகளும் இறந்து விட்டன. மூன்றாவது பையன் நரசிம்மன் மட்டும்தான் பிழைத்திருந்தான்.

அர்த்தநாரிக்கு அப்படியொன்றும் வயதாகி விடவில்லை. முப்பத்தைந்து கூட முடியவில்லை. அதற்குள் இத்தனை துன்பங்கள் வந்தால் என்ன செய்வார் பாவம்! அவருக்கு வாழ்க்கையே கசந்ததில் வியப்பில்லை. மனைவி மக்கள் என்ற பற்று மெள்ள மெள்ள குறைந்து வந்தது.

உள்ளத்தில் நிம்மதியிருந்தால் தானே உடலில் வலிமையிருக்கும்! அதுவரை நோய் நொடியில்லாமல் இருந்தவருக்கு வயிற்றில் தாங்க முடியாத வலி ஏற்பட்டது. எந்த மருந்துக்கும் அது கேட்கவில்லை. அரண்மனை மருத்துவர்கள் தங்களால் இயன்றதையெல்லாம் செய்து பார்த்து விட்டார்கள். ஒன்றும் பயனில்லை. ஒரு மாதம் வேலைக்குச் செல்ல முடியாமல், வீட்டிலேயே அவதிப் பட்டுக் கொண்டிருந்த அர்த்தநாரி, தற்கொலை செய்து கொள்வதைப் பற்றிக் கூட தீவிரமாகச் சிந்தித்தார்.

அப்போது அரண்மனையில் வேலை செய்து கொண்டிருந்த மதுரையைச் சேர்ந்த கோத்தனூர், அர்த்தநாரியைப் பார்க்க வந்தார். அவர் ஒரு முருக பக்தர். பழநி ஆண்டவனால் ஆகாதது ஒன்றுமில்லை என்ற திட நம்பிக்கை கொண்டவர். பழநிக்குச் சென்றால், வயிற்று நோய் நீங்கி விடும் என்று அர்த்தநாரிக்கு எடுத்துச் சொன்னர். தெய்வ நம்பிக்கை அதிகமில்லாத அர்த்தநாரி, கடைசியாக அதையும் செய்து பார்த்து விடுவது என்ற முடிவுக்கு வந்தார். 'உத்தியோகம் இல்லாவிட்டால் போகிறது; உயிர் பிழைத்தால் போதும்' என்று மனைவியையும் ஏழு வயதுப் பிள்ளையையும் அழைத்துக் கொண்டு, பழநியிலேயே தங்கி விடுவது என்ற எண்ணத்துடன் மைசூரிலிருந்து புறப்பட்டார்.

பிரயாணத்தின்போது, ஜோலார்ப்பேட்டையில் மனைவியின் நகைகள் களவு போயின. அருள் கிடைத்து விட்ட பிறகு பொருள் எதற்கு?

ஈரோடு வரை ரயிலில் வந்து, பின்னர் கால்நடையாகவே பழநி வந்து சேர்ந்தார். இது நடந்தது 1908-ம் வருடம். அவருக்கு வயது 38.

என்ன அதிசயமோ! பழநியில் காலடி வைத்த அன்றே அவருடைய வயிற்று நோயின் கடுமை சற்றுத் தணிந்தது. நாளுக்கு நாள் வயிற்று வலி குறைந்து கொண்டே போயிற்று. நாளுக்கு நாள் அவருடைய பக்தியும் அதிகரித்துக் கொண்டே வந்தது.

அச்சமயம் கோயம்புத்தூரில் முகாமிட்டிருந்த சிருங்கேரி சங்கராசாரிய சுவாமிகளிடம் சென்று, சந்நியாசம் தரவேண்டும் என்று பிரார்த்தித்தார், அர்த்தநாரி. அவருக்குத் தாயாரும், மனைவியும், பிள்ளையும் இருப்பதால், சந்நியாசம் தர மறுத்து விட்டார் சுவாமிகள். மாறாக, வானப்ரஸ்தாச்ரமத்தை அவருக்கு முறைப்படி அளித்தார். உடனே அர்த்தநாரி தம் கிராமத்திற்குச் சென்று சொத்துக்களையெல்லாம் விற்று, உறவினருக்குப் பங்கிட்டுக் கொடுத்து விட்டு பழநிக்குத் திரும்பினர்.

—தொடரும்



பழநிமலையில் ஐயப்பன் பக்தர்கள்

அருணாசல மகிமை

44

பழநியாண்டவனின் திருச்சந்நிதியில் தங்கி யிருந்த அர்த்தநாரியை எல்லோரும் 'மைசூர் சுவாமிகள்' என்றே அழைத்தனர். அவருடைய மனைவி நஞ்சம்மாளும், மகன் நரசிம்மனும் நான்கு வீடுகளில் உணவுயாசித்து உண்டு வாழ்ந்தனர். அர்த்தநாரியோ ஆண்டவனுக்கு அபிஷேகமான பாலையும், வாழைப்பழத்தையும் தவிர வேறு ஆகாரத்தை உட்கொள்ளுவதில்லை.

அர்த்தநாரி அன்ன ஆகாரத்தையும் நித்திரையையும் பொருட்படுத்தாமல் ஆண்டவனின் சேவைக்கே தம்மை அர்ப்பணித்துக் கொண்டார். தினமும் மும்முறை நீராடுவார். மூன்று வேளைகளிலும் ஆயிரத்தெட்டு முறை காயத்திரி மந்திரம் ஜபிப்பார். விடியற்காலையில், சண்முக நதிக்கும், வராக நதிக்கும், அமராவதி நதிக்கும் சென்று உச்சி கால அபிஷேகத்திற்கான நீரைக் கொண்டு வருவார். பழநி மலையை வலம் வருவார்; மலைப் பிராகாரத்தில் அங்கப்பிரதட்சணம் செய்வார்; நாள் தவறாமல் சூர்ய நமஸ்காரம் செய்வார். இப்படியொரு கடுமையான தவம் இயற்றியதாலும், பழநியாண்டவனுக்கு அபிஷேகம் செய்த பாலை அருந்தி வந்ததாலும் சுவாமிகளின் வயிற்று வலியும், வாந்தியும் அடியோடு நின்று போய் விட்டன.

அன்று சித்திரை மாதம். அக்னி நட்சத்திர உற்சவம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அர்த்த ஜாமத்தின்போது, மதுரையிலிருந்து வந்திருந்த ஒரு தேவதாசி, ஆண்டவனின் சந்நிதியில் 'வங்காரமார்பிலணி' என்ற திருப்புகழை உள்ளம் உருக, மெய்ம் மறந்து பாடிக் கொண்டிருந்தாள். அருகில் நின்றிருந்த சுவாமிகள்

அந்தப் பாட்டில் அப்படியே லயித்துப் போய் விட்டார். அத்திருப்புகழில் 'சிங்கார ரூபமயில் வாகனநமோநம' என்ற இடம் அவரை அப்படியே உலுக்கி விட்டது. பக்தியால் கரைந்த உள்ளம் கண்ணீராய் வெளிப்பட்டது. ஆனந்தப் பரவசநிலை எய்தினர்.

அக்கணத்திலிருந்து அருணகிரி நாதரின் திருப்புகழ் அவரை ஆட்கொண்டது. அதை மனப்பாடம் செய்ய வேண்டும், மனமுருகப் பாட வேண்டும் என்று தீராத ஆசை அவரைப் பற்றிக் கொண்டது. ஆனால், அதை எப்படிக் கற்பது? அவருக்குத் தமிழ் எழுத்துக்களே சரியாகத் தெரியாதே! திண்ணைப் பள்ளிக்கூடத்தில் அரையும் குறையுமாகக் கற்றது திருப்புகழைப் படித்துணரப் போதுமா?


மணி என்ற எட்டு வயது சிறுவனை சிநேகம் பிடித்துக் கொண்டார் முப்பத்தெட்டு வயது நிரம்பிய மைசூர் சுவாமிகள். அவனிடம் எழுத்துக்களைக் கற்றுக் கொண்டு, அங்கு கிடைத்த ஏதோ ஒரு புத்தகத்திலிருந்து, தினமும் ஒரு திருப்புகழை மனப்பாடம் செய்து, ஆண்டவனின் சந்நிதியில் ஒப்பிப்பார். அதில் பல பிழைகள் இருக்கும். இதை கவனித்த கிருஷ்ணசுவாமி பண்டாரம் என்பவர் திருப்புகழைப் பிழையில்லாமல் பாட வேண்டும் என்றும், பிழையற்ற திருப்புகழ் பதிப்பு சென்னை லிங்கிச் செட்டித் தெரு 292-ம் எண் இல்லத்தில் கிடைக்கும் என்றும் கூறினர். உடனே அந்த முகவரிக்கு கடிதம் எழுதி நானூற்றைம்பது பாடல்கள் கொண்ட முதல் பாகத்தை வரவழைத்தார் சுவாமிகள். ஒரு மாதத்திற்குள் அத்தனை பாடல்களையும் கற்று விட்டார். தினமும் சந்நிதியில் நின்று, பக்திப் பரவசத்துடன் உரக்கப் பாடுவார். கம்பீரமான குரலில் 'கணீர்' என்று திருப்புகழ் மாரி பொழிவதைக் கேட்டு ஆனந்திக்க அங்கு பெருங் கூட்டம் கூடி விடும்.

சுவாமிகளுக்குப் பழநியாண்டவரின் அருள் பரிபூரணமாக இருந்தது. தன் அபிஷேகத்திற்காக, பல மைல்களுக்கு அப்பாலுள்ள புண்ணியத் தீர்த்தத்தைக் கொண்டுவரும்படி சுவாமிகளைப் பணித்தார் முருகப் பெருமான். ஒரு நாள் அவரது கனவில் தோன்றி பொதிகை மலைச் சாரலில் பாபநாசத் தீரத்திலுள்ள கல்யாண தீர்த்தத்தைக் கொண்டு வரும்படி கட்டளையிட்டார். அகத்திய முனிவரும், யோக சித்தர்களும் வாழ்ந்த அப்பகுதிக்குப் போகும் வழியையும், நீர் எடுக்க வேண்டிய இடத்தையும், கிழக்கில் மலையடியிலிருக்கும் மணல் மேட்டையும், மேற்கிலுள்ள பாறைக் கோயிலையும் அவருக்குக் கனவிலேயே காட்டியருளினர். அன்றிரவே லட்சுமணன் செட்டியார், ஐயா குட்டிக் குருக்கள், மடைப்பள்ளி வெங்கய்யா முதலியவர்களின் கனவில் தோன்றி, வழிச் செலவுக்காக மைசூர் சுவாமிகளிடம் பணம் தரும்படி கட்டளையிட்டார். மறுநாள் விடியற்காலையில் அவர்கள் மூவரும் சுவாமிகளிடம் வந்து, ஆண்டவனின் கட்டளைக்கிணங்க, அவருக்குப் பணம் கொடுத்துதவினர்கள்.

சுவாமிகள் இப்பணியைச் செவ்வனே முடித்து வைப்பதற்காக மௌன விரதம் ஏற்றுக் கொண்டார். தாம் ஏற்றுக் கொண்டுள்ள தெய்வப் பணியை ஓர் அட்டையில் விளக்கமாக எழுதி கழுத்தில் தொங்க விட்டுக் கொண்டு, பயணத்தைத் தொடங்கினர்.

அன்று இரவு முழுவதும் கால்நடையாகவே சென்று விடியற்காலை திண்டுக்கல்லை அடைந்தார் சுவாமிகள். இரவில் இவருக்குத் துணையாக, பழநியாண்டவர் ஒரு குருக்கள் உருவில் சுவாமிகளுக்கு முன்னல் இருபது அடி தொலைவில் நடந்து கொண்டிருந்தார். மௌன விரதம் ஏற்றிருந்ததால் அவரை அழைத்துப்பேச முடியவில்லை.

சுற்றுப் பிராகாரத்தில்...





திருச்செந்தூர் ஆலய கோபுரம்

எத்தனை வேகமாக நடந்தாலும், அந்தக் குருக்களுக்கும்சுவாமிகளுக்கும் இடையே இருபது அடி இடைவெளி இருந்து கொண்டே இருந்தது. திண்டுக்கல்லை அடைந்ததும் குருக்கள் மாயமாய் மறைந்து விட்டார்.

வழி நெடுகிலும் பல பக்தர்களின் உதவியைப் பெற்றுக் கொண்டு தென்காசி வந்தடைந்த சுவாமிகளுக்கு பழநியாண்டவன், தட்சிணாமூர்த்தி பரதேசியாகக் காட்சி யளித்து, கல்யாண தீர்த்தத்திற்கு வழி காட்டினார். ஆனால், குறிப்பிட்ட இடத்தில் நீர் எடுக்காததால் பாதி வழியில் அது தவறி விட்டது. எனவே, மீண்டும் நடந்து சென்று பரதேசியின் உதவியால் செப்புக் குடத்தில் தீர்த்தம் எடுத்துக் கொண்டு கால் நடையாகவே பழநியை நோக்கிப் புறப்பட்டார். வழியில் திருடர்கள் சுவாமிகளை வழிமறித்தனர். பின்னர் அவர் கழுத்தில் மாலையாகத் தொங்கிய அட்டையைப் படித்துப் பார்த்து அவரிடம் மன்னிப்புக் கேட்டு, விபூதி பெற்றுச் சென்றனர். மற்றோர் இடத்தில் தலையில் தீர்த்தக் குடத்தை வைத்துக் கொண்டே வெள்ளத்தில் நீந்தி வரவேண்டி யிருந்தது. இத்தனை இன்னல்களையும் கடந்து வந்து, புனிதத் தீர்த்தத்தால் ஆண்டவனுக்கு அபிஷேகம் செய்து, கண் குளிரத் தரிசித்து உள்ளம் குளிர்ந்தார்.

அந்த ஆண்டு கும்பகோணத்தில் நடைபெற்ற மகாமகத்திற்குச் சென்றார் சுவாமிகள். திருச்சியிலிருந்தே ஜனநெரிசல் இருந்ததாலும், ரயிலில் போனால் தாமதமாகும் என்பதாலும் காவிரியில் குதித்து, நீந்திக் கொண்டே கும்பகோணத்தை அடைந்தார் அவர். அங்கு கும்பலில் சிக்கிக் கொண்டு திண்டாடிய வயோதிகப் தம்பதியைத் தோளில் சுமந்து கொண்டு, அவர்களை மகாமகப் புனித நீரில் ஸ்நானம் செய்வித்து, தாமும் நீராடிப் புண்ணியம் பெற்றுப் பழநிக்குத் திரும்பி வந்தார்.

அதற்கு அடுத்த வருஷம், ஆடி அமாவாசை அபிஷேகத்திற்காக பொதிகை மலையிலுள்ள தட்சிணாமூர்த்தி தீர்த்தமான பாண தீர்த்தத்தைக் கொண்டு வரும்படி ஆண்டவன் கனவில் அருள் கட்டளை யிட்டார். சுவாமிகள் மீண்டும் தென்காசி, பாபநாசம் வழியாக, மலைகளையும் காடுகளையும் தன்னந் தனியாகக் கடந்து சென்று, இடையில் குறுக்கிட்ட இன்னல்கள் பலவற்றையும் பொருட்படுத்தாது, நீர்வீழ்ச்சி இருந்த இடத்தையடைந்து, புண்ணிய தீர்த்தத்தை செப்புக் குடத்தில் எடுத்துக் கொண்டார். வரும் வழியில், வண்டுகளும், குளவிகளும் கொட்ட, கொடிய விலங்குகள் பயமுறுத்த, சற்றும் மனம் தளராது, மௌன விரதத்துடனேயே பழநிக்கு வந்து சேர்ந்தார்.

அதற்கு அடுத்த வருடம், கோயம்புத்தூருக்கு பதினைந்தாவது மைலில் இருக்கும் வெள்ளியங்கிரி மலையேறி, பஞ்சலிங்க தரிசனம் செய்து, வேறு வழியாக இறங்கி, பூண்டி என்ற கிராமத்தின் வாயு மூலையிலுள்ள தேவி தீர்த்தத்தை எடுத்துக்கொண்டு கால் நடையாகப் பழநி வந்து சேர்ந்தார். 1911-ம் வருடம் மாசி மாதம் சுக்ல சஷ்டி யன்று ஆண்டவனுக்கு வெள்ளியங்கிரி தீர்த்தத்தால் அபிஷேகம் செய்வித்து மகிழ்ந்தார்.

பழநியிலிருந்து கொழும்பு போகும் வழியில் பெரியாவடையார் என்ற

பிரஹதீச்வரர், கோயில் கொண்டிருக்கிறார். இது பிரும்மா தவம் செய்த தலம். ஆதிசேஷனுக்கு ஈச்வரன் தரிசனம் அளித்த இடம். இங்கு கற்பாறையில், இலுப்பை மரத்தடியில் லிங்கம் இருக்கிறது. இத்தலத்திற்கும் சுவாமிகள் அடிக்கடி வந்து, தீர்த்தம் எடுத்துச் சென்று பழநியாண்டவனுக்கு அபிஷேகம் செய்து வைப்பதுண்டு.

இவ்வாறு மைசூர் சுவாமிகள் நான்கு ஆண்டுகள் முருக பக்தியில் ஒன்றி, அரிய தவமிருந்தார். சகல சித்திகளும் கைகூடியும் அவர் மனம் அவற்றில் நாட்டம் கொள்ளவில்லை. யோகப் பயிற்சிகளின் மூலம் உன்னத சக்திகள் பெற்றிருந்தும், சத்தியப் பொருளையே அவர் தேடிக் கொண்டிருந்தார். திருப்புகழ் ஓதுவதையே உயிர் மூச்சாகக் கருதியவரின் உள்ளத்தில் கருணை வெள்ளம் கரைபுரண்டோடியது. ஏழை எளியவர்களின் துயர் துடைக்கத் துடித்தார். அவர்களுக்கு வயிறுர உணவளித்து மகிழ்ந்தார். பிணியால் வாடியவர்களுக்கு சிகிச்சை செய்வதில் எல்லையற்ற ஆனந்தம் கண்டார்.

அடுத்து திருச்செந்தூருக்கு செல்லுமாறு சுவாமிகளுக்கு உத்தரவாயிற்று. மனைவியும் மகனும் உடன் வர, நடந்தே திருச்செந்தூரை அடைந்து, மூன்று நாட்கள் சண்முகநாதரை வழிபட்டார். அங்கிருந்து இலங்கையிலுள்ள கதிர்காமத்திற்கு வரும்படி கந்தன் கனவில் வந்து அழைக்கவே, சுவாமிகள் தூத்துக்குடிக்குப் புறப்பட்டார். ஆனுல், கப்பல் பிரயாணத்திற்கு அப்போது அனுமதி கிடைக்காததால், குடும்பத்துடன் இராமேச்வரத்திற்குப் பயணமானுர்.

அச் சமயத்தில் பன்னிரண்டு வயது நிரம்பிய மகன் நரசிம்மன், பழநிக்குத் திரும்பி நாட்டுக்கோட்டை செட்டிமார் சிலருடன் சேர்ந்து பர்மாவுக்குப் போய் விட்டான். சுவாமிகள் மீண்டும் தூத்துக்குடிக்கு வந்து, சமையல் செய்தும், திருப்புகழ் பாடியும் பணம் சம்பாதித்து கதிர்காமத்திற்குப் புறப்படத் தயாராஞர்.

ஆனுல், இலங்கை செல்ல சர்க்கார் அனுமதி கிடைப்பது கடினமாயிருந்தது. அனுமதி வழங்கும் அதிகாரம் பெற்ற ஆங்கிலேய துரையை அணுகி தம் விருப்பத்தைக் கூறிஞர். பின்னர், புலால் சேர்க்காமலே சுவைமார்களின் ருசிக்கு ஏற்ற வகையில் வெகு சாமர்த்தியமாக சமைத்துப் போட்டு அவரை திருப்தி படுத்திஞர். மகிழ்ச்சியடைந்த துரையும் சுவாமிகள் இலங்கை செல்ல அனுமதி வழங்கிஞர்.


கதிர்காமக் கோயிலின் எழிலிலும் சூழ்நிலையின் வசீகரத்திலும் மனத்தைப் பறிகொடுத்த சுவாமிகள், அங்கு நாற்பத்தெட்டு நாட்கள் தங்கியிருந்துவிட்டு, பிரிய மனமின்றி, இந்தியாவை நோக்கிப் புறப்பட்டார். வழி நெடுகிலுமுள்ள ஆலயங்களை தரிசித்து, அங்கெல்லாம் திருப்புகழ் பாராயணம் செய்து பக்தர்களைப் பரவசத்தில் ஆழ்த்திஞர்.

தாய் நாட்டிற்குத் திரும்பிய சுவாமிகள் தூத்துக்குடியிலிறங்கி, திருச்செந்தூருக்குச் சென்று ஆறுமுகனைத் தரிசித்துக் கொண்டு, கோயில்பட்டியை அடைந்தார். அங்கு வேங்கடராயர் என்பவரின் தொடர்பு ஏற்பட்டது. வேங்கடராயர் பல சாத்திரங்களைக் கரை கண்ட மாமேதை. ஆசார சீலர். சுவாமிகளும் அவரது மனைவியும் ராயரிடம் நாற்பத்தைந்து நாட்கள்

ஸ்ரீ வள்ளிமலை திருப்புகழ் சுவாமிகள்
(1918)



கருத்துள்ள கண்காட்சி



பேராசிரியர் வரதராஜன், துணைப் பேராசிரியர் ஜகதீசனுடன், கண்காட்சியில் பங்கு கொண்ட சில மாணவ, மாணவிகள்.

சென்னை மாநிலக் கல்லூரியில் ஆங்கிலப் பிரிவில் பயிலும் மாணவ, மாணவியர் இலக்கியத்திலும், சமூக வரலாற்றிலும் தாங்கள் படித்தறிந்தவற்றைப் பயன்படுத்தி இங்கிலாந்தின் சமூக வரலாற்றைப் பற்றிய கண்காட்சி ஒன்றை ஏற்பாடு செய்திருந்தார்கள். பண்டைய நாட்களிலிருந்த அந்த நாட்டு மக்களின் சமய வாழ்வு, உடை, கேளிக்கைகள், குடும்ப வாழ்க்கை, தலையணி, தலையலங்காரம், போர் முறை, வாகனங்கள் எல்லாம் எவ்வாறு காலப் போக்கில் மாற்றமடைந்து வந்திருக்கின்றன என்பதையெல்லாம் ஆராய்ச்சி செய்து, தாங்களே படங்கள் வரைந்து, விளக்கங்களும் எழுதி வைத்திருந்தார்கள். பயனுள்ள இப் புதிய முயற்சியைப் பாராட்டத்தான் வேண்டும்.


பகவத்கீதையிலிருந்தும் ஞான வாசிஷ்டத்திலிருந்தும் பாடம் கேட்டனர். பல தத்துவங்களைக் கற்றறிந்தனர். அதன் பலனாக, சுவாமிகளுக்கு சந்நியாச ஆச்ரமத்திலும் ஆத்ம விசாரத்திலும் நாட்டம் ஏற்பட்டது. தமது எண்ணத்தை ராயரிடம் தெரிவித்தார். ராயர் சுவாமிகளிடம், திருவண்ணாமலைக்குச் சென்று, ஞான மலையின் நிழலில் மோனத் தவம்புரிந்து கொண்டிருக்கும் ரமணமகரிஷியையும் சேஷாத்ரி சுவாமிகளையும் தரிசித்தால் அவர்கள் நல்வழி காட்டுவார்கள் என்று எடுத்துச் சொன்னார்.

அடுத்து பழநிக்கு வந்த சுவாமிகள், வைகுண்ட ஏகாதசிக்கு ஸ்ரீரங்கம் சென்றுவிட்டு, திருவாதிரை திருநாள் தரிசனத்திற்காக திருவண்ணாமலைக்குப் பயணமானார்.

மைசூர் சுவாமிகள் என்று அழைக்கப்பட்ட அர்த்தநாரி, திருவண்ணாமலையை அடைந்ததும், மலை மீது வாசம் செய்து கொண்டிருந்த ரமண சுவாமிகளைத் தரிசிக்கச் சென்றார்.

அப்போது ஆச்ரமத்தின் வாயிலில் தரிசனத்திற்காக நின்று கொண்டிருந்த சிறு கூட்டத்தில் அர்த்தநாரியும் சேர்ந்து கொண்டார். சற்றைக்கெல்லாம் ரமணர் வெளியே வந்தார். கோவணாண்டியாகக் காட்சி தந்த மகரிஷி சிறிது நேரம் அப்படியே நின்றார். அவரை உற்று நோக்கினார் அர்த்தநாரி. மகரிஷிகளும் அர்த்தநாரியை ஊடுருவிப் பார்த்தார். ஒரு கணம்தான். அவ்விடத்தில் நின்றிருந்த ரமணர் மறைந்து, அர்த்தநாரியின் கண்களுக்கு பழநியாண்டவரே காட்சி யளித்தார். பிரமையோ என்று நினைத்து அர்த்தநாரி கண்களைக் கசக்கிக் கொண்டு உன்னிப்பாகக் கவனித்தார். சந்தேகமில்லை. சாட்சாத் பழநியாண்டவரேதான். அர்த்தநாரிக்கு உடலெல்லாம் சிலிர்த்தது. 'தண்டபாணிக்கு ஹரோஹரா' என்று கன்னத்தில் போட்டுக் கொண்டார். பொல பொலவென்று கொட்டிய கண்ணீர் அவர் கன்னங்களில் வழிந்தோடியது. அவருக்குப் பேச்சே எழவில்லை. அப்படியே உட்கார்ந்து விட்டார்.

— தொடரும்.



திருத்தணியில் முருக பக்தர்கள்

அருணாசல மகிமை

45

தமக்குப் பழநியாண்டவராகக் காட்சி தந்த ரமண பகவானின் சந்நிதியைவிட்டு அகலவே மனம் இல்லாமல் இரண்டு மூன்று மாதங்கள் திருவண்ணாமலையிலேயே தங்கியிருந்தார் மைசூர் சுவாமிகள். சமயம் வாய்த்த போதெல்லாம் ரமணர் முன்னிலையிலும், ஈச்வர சுவாமிகள் முன்னிலையிலும் அமர்ந்து திருப்புகழ் பாடுவார். மகான்கள் இருவரும் அன்பரின் முருக பக்தியைக் கண்டு மனமிளகி, பிழைகளைத் திருத்துவார்கள். சந்தம் பிரித்து, ஓசை நயத்துடன் முறையாகத் திருப்புகழைப் பாடுவதற்கு அவர்களிடம் கற்றுக் கொண்டார் சுவாமிகள். இரு மகான்களும் அவரைத் 'திருப்புகழ் முருகன்' என்றே அழைப்பது வழக்கம்.

சுவாமிகள் திருப்புகழ் பாடிக் கொண்டு வர, எல்லோரும் ஒருநாள் கிரிவலம் வந்தார்கள். அப்போது சுவாமிகள் அருணகிரிநாதரின்வேடச்சி காவலன் வகுப்புப் பாடிக் கொண்டு வந்தார். அப்பாடலின் இறுதியில் ''காவலனே, காவலனே, காவலனே, காவலனே'' என்று சுவாமிகள் பாடிய போது, ரமணர் வேடிக்கையாக ''ஏமேமி காவலனே, எந்தெந்தா காவலனே'' என்று தெலுங்கில் கேட்டார். அந்தக் கூட்டத்திலிருந்த ஒரு சாது, அந்த வேடிக்கையில் கலந்து கொண்டு, ''இட்லி காவலனே, காப்பி காவலனே'' என்று கூறினார். சற்றைக்கெல்லாம், அந்தக் காட்டுப் பாதையில் சற்றும் எதிர்பாராத வகையில் ஒருவர் இட்லியும் காப்பியும் கொண்டு வந்தார். அத்தனை பேரும் அதைப் புசித்துக் களைப்பாறினார்கள். விளையாட்டானாலும், பக்தனின் கோரிக்கையை நிறைவேற்றும்

பரணீதரன்

பொருட்டு வேடச்சி காவலனை முருகன்தான் இட்லி வியாபாரியாக அங்கு தோன்றினன் என்றே எல்லோரும் கருதினர்.

திருவண்ணுமலையில் தங்கி யிருந்த போது ஒரு நாள் கூட மைசூர் சுவாமிகள் சேஷாத்ரி சுவாமிகளை அருகில் சென்று தரிசித்ததில்லை. தொலைவில் நின்றபடி ஒரு கும்பிடு போடுவதோடு சரி. நான்கு ஆண்டுகளுக்குப் பின்னரே அவரிடம் உபதேசம் பெறும் பாக்கியத்தைப் பெற்ருர் அவர். மகான்களின் தரிசனமும் தொடர்பும் அதற்கான வேளை வந்தால்தான் கிட்டும். பிராப்தம் இல்லாவிட்டால் அருகில் இருந்தாலும் அவர்களைத் தரிசிக்கும் பேறு நமக்குக் கிட்டாது.

அருணுசலத்திலிருந்த மைசூர்சுவாமிகளுக்கு இமாலய யாத்திரை செய்ய வேண்டும் என்ற பேரவா ஏற்படவே, மஞ்சகுப்பம் கிருஷ்ணய்யரிடமிருந்து ஒரு கடிதத்தைப் பெற்றுக் கொண்டு சென்னை அரண்மனைக்காரத் தெருவிலுள்ள வெங்கடேசய்யர் என்ற புரோகிதரின் வீட்டுக்குச் சென்ருர்.


மைசூர் சுவாமிகளுக்கு அன்னதானம் செய்வது என்ருல் மிக விருப்பம். கையில் காசு கிடைத்தால் இரண்டு பேருக்காவது உணவு அளித்து மகிழ்வார். அவர் சென்னைக்கு வந்ததும் சஷ்டி புண்ணிய தினம் நெருங்கியதால், அன்று வெங்கடேசய்யர் இல்லத்தில் சமாராதனை நடத்துவதுஎன்றுமுடிவு செய்து, அதற்கான முயற்சியில் முழு மனத்துடன் ஈடுபட்டார். புதிய இடம் என்ருே, பழக்க மில்லாதவர்கள் என்ருே சிறிதும் தயங்காமல் நான்கு பேரிடம் கேட்டு சமாராதனைக்காகப் பணமும் பொருள்களும் சேகரித்து வந்தார்.

அச் சமயம் சென்னை கந்தசாமி கோயிலுக்கருகில் 'கொசக்கடைச் சாமியார்' என்ற மகான் வசித்து வந்தார். சமாராதனைக்கு முதல் நாள் மாலை, அப்பக்கமாகச் சென்ற சுவாமிகளின் காதில் விழும்படி "சொத்து அடித்துக் கொண்டு போக வந்திருக்கான். எல்லாம் நாளைக்குக் கிடைக்கிறது" என்று அந்தச் சாமியார் தமக்குத் தாமே பேசிக் கொண்டார். அதை தெய்வ வாக்காகவே நினைத்தார் சுவாமிகள்.

மறுநாள் சஷ்டி சமாராதனைக்கு அநேக பிராமணர்கள் வந்தனர். இறுதியாக ஒரு வயோதிகர் வந்து "சாப்பாடு கிடைக்குமா?" என்று யாசித்தார். அவரைப் பார்க்க அருவெறுப்பாக இருந்தது. தொழுநோயால் பீடிக்கப்பட்டிருந்த அவர் அங்கங்களிலிருந்து நீர் கசிந்து கொண்டிருந்தது. பந்தியில் அவரை உட்கார வைத்தால் இதர விருந்தாளிகள் முணு முணுக்கப் போகிருர்களேயென்று, அந்த வயோதிகரை வேருேர் அறையில் உட்கார வைத்து உணவு படைத்தார் சுவாமிகள். பிறரைப் போலவே அவரையும் அன்புடன் உபசரித்தார்.

சமாராதனை முடிந்ததும், சுவாமிகள் எச்சில் இலைகளில் விழுந்து புரளுவது வழக்கம். கூடத்திலிருந்த இலைகளில் புரண்டு விட்டு, அறையில் வயோதிகர் உணவருந்திய இலையிலும் புரளுவதற்காக வந்தார் சுவாமிகள்.

ஸ்ரீ வள்ளிமலை சுவாமிகள் (1916)



சுற்றிலும் சீழும் நீரும் ஒழுகி, அந்த இடம் மிக அசுத்தமாக இருந்தது. ஏனையவர் முகம் சுளித்தபோதிலும், சுவாமிகள் பக்தியுணர்வோடு அந்த அடியாரின் இலையிலும் படுத்துப் புரண்டார்.

அடுத்த கணம் அவர் நினைவிழந்தார். அவருக்கு ஒரு பேரொளி தரிசனமாயிற்று. அந்த ஒளி சேஷாத்ரி சுவாமிகளாக உருமாறியது. அவர், ''இதெல்லாம் என்னடா? போகலாம் வாடா'' என்று கூறி தமது சிகையையும் பூணூலையும் களைந்து எறிவது போலவும், ''நீ மேலான பதவியடைவாய்'' என்று அருள் வாக்கு நல்கியது போலவும் சுவாமிகளுக்குத் தோன்றியது.

வீடு தேடி வந்த வயோதிகர், உபதேசம் பெறத் தக்கவனா என்று வருங்காலச் சீடனை சோதிக்க வந்த சேஷாத்ரி சுவாமிகளாகத்தான் இருக்க வேண்டும்!

அந்தக் கணத்திலிருந்து சுவாமிகளின் உள்ளத்தில் ஒரு பெரும் மாறுதல் ஏற்பட்டு விட்டது. சுய உருவை தரிசித்த சத்திய ஞானியாகவே அவர் திகழ்ந்தார். உடை காவியாகாவிட்டாலும் உள்ளத்தளவில் அவர் துறவறம் பூண்டு விட்டார். பூணூலை அறுத்தெறிந்து விட்டு, அன்ன ஆகாரத்தை வெறுத்து, கச்சாலீச்வரர் ஆலயத்தில் போய் அமர்ந்து விட்டார்.

சுவாமிகளின் மனைவியாருக்கு ஒரே கவலையாகி விட்டது. அவளது நிலையைக் கண்டு பரிதாபப்பட்ட ஓரிருவர் சுவாமிகளிடம் சென்று வாதாடினார். ''நீங்கள் தனியாக இருந்தால் எப்படி வேண்டுமானாலும் போகலாம். உங்கள் மனைவியின் கதியைப் பற்றி எண்ணிப் பார்க்க வேண்டாமா? இந்த அம்மாளை உங்கள் பிள்ளையிடம் ஒப்படைத்து விட்டு, பின்னர் வேண்டுமானால் சந்நியாசியாகி விடுங்கள். அது வரை உங்கள் மனைவி உங்களுடனேயே இருக்க வேண்டும்'' என்று கண்டிப்பாகக் கூறினர். அவர்களுடைய வாதத்தில் நியாயம் இருப்பதை உணர்ந்து, அவ்விதமே நடப்பதாக இசைந்தார் சுவாமிகள்.



வ. த. சுப்பிரமணியப் பிள்ளை

அடுத்த கிருத்திகை தினத்தன்று மனைவியுடன் திருத்தணித் தலம் சென்றார் அவர். அங்கு முருகன் சந்நிதியில் நின்று வெகு நேரம் திருப்புகழ் பாடினார். பின்னர் தெய்வயானை சந்நிதிக்குச் சென்று மெய்யுருகிப் பாடினார். ஆனால், அதில் இசையை விட, ஆழ்ந்த பக்தி இருந்தது. ஓசை நயத்தை விட குரலின் கம்பீரம் இருந்தது. உலகை மறந்து அவர் திருப்புகழ் அமுதம் பொழிந்து கொண்டிருந்ததை, மற்றொரு முருக பக்தர் கேட்டு, உள்ளம் உருகி கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தார். அப்போது அவரது அன்னையும் உடனிருந்தார். இது நடந்தது 1913-ம் வருடம்.

வ. சு. செங்கல்வராயப் பிள்ளை என்னும் அந்த அருளாளர் இன்றும் நம்மிடையே வாழ்ந்து கொண்டிருக்கிறார். அவரை நேரில் தரிசித்து, அன்று தணிகையில் கண்ட காட்சியையும் நேர்ந்த அனுபவத்தையும் அவரது திருவாக்கால் கேட்க வேண்டும் என்ற ஆவலில் ராஜா அண்ணாமலைபுரம் சென்றேன்.

செங்கல்வராயப் பிள்ளையவர்களுக்கு தொண்ணூறு வயதுக்கு குறையாமல் இருக்கும். கூனிக் குறுகி, நடை தளர்ந்து, உடல் மெலிந்து காணப்பட்டார் அவர். குழந்தைகள் நடை வண்டியைத் தள்ளிக் கொண்டு நடை பயிலுமே, அதைப் போல் தம் அறையிலிருந்து ஒரு சிறு ஸ்டூலைத் தள்ளியபடியே ஹாலிலுள்ள சோபாவில் வந்து அமர்ந்தார். பரம்பரை பரம்பரையாக வரும் முருக பக்தியில், திளைத்து, இறைப்பணியாகத் தமிழ்த் தொண்டாற்றி, சிவப் பழமாக பழுத்திருக்கும் அவரைக் காணும்போது நெஞ்சம் நிறைகிறது. அவரால்



'பிள்ளையவர்களின் அகமும் முகமும் மலரக் கண்டேன்...'

கோவையாகவோ, தெளிவாகவோ பேச முடியவில்லை. ஆனால், நிறையக் கூற வேண்டும் என்ற துடிப்பு அவருக்கு இருக்கிறது. பேச முடியாததையெல்லாம் கண்களால் பேசுகிறார். ஒளி மிகுந்த அந்தப் பார்வையில் பழைய நிகழ்ச்சிகளின் அனுபவங்களையெல்லாம் தேக்கி வைத்திருக்கிறார். தந்தையார் தொடங்கிய தெய்வப் பணியை, குன்றாத ஆர்வத்துடன் தொடர்ந்து ஆற்றிக் கொண்டிருக்கிறார் இவர்.

இவருடைய தந்தையாரான வ. த. சுப்பிரமணியப்பிள்ளையவர்கள் அங்குமிங்குமாகச் சிதறிக் கிடந்த திருப்புகழ் பாக்களைச் சேகரித்து, வழக்கிலிருந்த பாட்டுக்களையும் செல்லரித்த ஓலைச்சுவடிகளிலிருந்த பாட்டுக்களையும் அரும்பாடு பட்டுத் தேடி, நூலாக வெளியிட்டு இந்து சமயத்திற்கும் அருணகிரியாரின் அடியார்களுக்கும் இணையற்ற சேவை செய்திருக்கிறார்.

1870-ம் ஆண்டு வள்ளிமலை சுவாமிகள் அவதரித்தார். உலகில் திருப்புகழைப் பரப்புவதற்காக ஆண்டவன் அருளால் தோன்றிய அந்த மகான் பிறந்த மறு வருஷத்திலிருந்து, அதாவது 1871-ம் ஆண்டிலிருந்தே சுப்பிரமணியப் பிள்ளை யவர்கள் திருப்புகழ் பாட்டுக்களைச் சேகரிக்கும் பணியில் ஈடுபடத் தொடங்கினார். பழநியாண்டியின் சந்நிதியில் 'வங்காரமார்பிலணி' என்ற பாடலைக் கேட்டு, வள்ளிமலை சுவாமிகள் திருப்புகழுக்கு அறிமுகமானபோது, அவர் அதை முறையாகக் கற்றறிவதற்கு உதவும் பொருட்டு சுப்பிரமணியப் பிள்ளையவர்கள் திருப்புகழ் நூலை வெளியிட்டு தயாராக வைத்திருந்தார்!

எல்லாமே தணிகேசனின் கருணையினால்தான் நடைபெறுகிறது. ஆனால், காரண காரியங்கள் நமக்குப் புரிவதில்லை.

தந்தை சேர்த்து வைத்த திருப்புகழ் பாடல்களுக்கு விளக்கவுரை எழுதி, நற்பணி யாற்றும் பெருமை அவரது மகனை செங்கல்வராயப் பிள்ளையவர்களுக்குக் கிடைத்தது.

தணிகேசன் தந்த வரப்பிரசாதத்தால் திருப்புகழ்த் தொண்டு புரியத் தொடங்கி யிருந்த மைசூர் சுவாமிகள், தணிகேசனின் திருச்சந்நிதியில் திருப்புகழை உரத்த குரலில் ஓதிக் கொண்டிருந்தார். செங்கல்வராயப் பிள்ளையவர்களும் அவரது தாயாரும் அதை மெய்ம்மறந்து கேட்டுக் கொண்டிருந்தனர். ஆச்சரியமடைந்த அன்னையார் மகனிடம், "அப்பா அவரிடம் சென்று அந்தப் பாட்டுக்களை எந்தப் புத்தகத்திலிருந்து மனப்பாடம் செய்தார் என்று கேட்டுவா?" என்று அனுப்பினார்.

மகன் முதலில் தயங்கிவிட்டு, பின்னர் சற்றுத் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு சுவாமிகளிடம் சென்று மெள்ள விசாரித்தார். அதற்குச் சுவாமிகள் ''வ. த. சுப்பிரமணியப் பிள்ளையவர்கள் வெளியிட்டுள்ள புத்த கத்தில் படித்தேன்'' என்று கூறினார். உடனே பிள்ளையவர்கள் அடக்க முடியாத மகிழ்ச்சிப் பொங்க, ''சுவாமி அவர் என் தந்தைதான். என் பெயர் செங்கல்வராயன்'' என்று தம்மை அறிமுகப்படுத்திக் கொண்டார்.

இதைக் கேட்ட சுவாமிகளுக்கு வியப்பை அடக்க முடியவில்லை. ''அப்படியா என் கண்ணே! உன்னைத் தான் இத்தனை நாட்களாகத் தேடிக் கொண்டிருக்கிறேன்'' என்று அவரை அன்புடன் தழுவிக் கொண்டார்.

தம்மிடம் நானூற்றைம்பது பாட்டுகள் அடங்கிய முதல் பாகம்தான் இருக்கிறது என்றும், இரண்டாவது பாகத்தையும் பழநிக்கு உடனே அனுப்பி வைக்கும்படியும் சுவாமிகள் கேட்டுக் கொண்டார். ஒரு வாரத்திற்கெல்லாம் பிள்ளையவர்களும் அந்த நூலை சுவாமிகளின் பழநி விலாசத்துக்கு அனுப்பி வைத்தார்.

ஐம்பத்தேழு ஆண்டுகளுக்கு முன்னால் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியைக் கூறியபோது பிள்ளையவர்களின் அகமும் முகமும் மலரக் கண்டேன். கந்தன் கருணையால் நேர்ந்த

பூஜை யறையில்
பிள்ளையவர்களின் துணைவியார்



அந்த முதல் சந்திப்பையும், பின்னர் சுவாமிகளுடன் பழகிப் பயனடைந்த நாட்களையும் பிள்ளையவர்கள் பசுமை மாறாத நினைவுச் செல்வமாகப் பாதுகாத்து வருகிறார்.

பிள்ளையவர்களின் வாழ்க்கைத் துணைவியார் எங்களைப் பூஜை யறைக்குள் அழைத்துச் சென்றார். அவர்களது குலதெய்வமான ஆறுமுகப் பெருமான்தான் அங்கு கொலுவீற்றிருக்கிறார். பூஜையிலிருந்த மயிலும் வேலும் வள்ளிமலை சுவாமிகள் தங்களுக்கு அளித்தவை யென்று கூறினார் அம்மையார். சுவாமிகள் தந்தருளிய ஒரு சிறு ஸ்படிக லிங்கமும் பூஜையில் இருக்கிறது.

''லிங்கிச் செட்டித் தெருவில் வசித்தபோது எத்தனையோ இரவுகள் பூஜை முடிந்த பிறகு இந்தப் பெருமான், வள்ளிமலை சுவாமிகளின் திருப்புகழைக் கேட்டு ஆனந்தித்திருக்கிறார். சுவாமிகள் எங்கள் வீட்டுத் திண்ணையில் அமர்ந்திருப்பார். பூஜை முடிந்து மணி அடித்ததும் உள்ளே வந்து, திருப்புகழ் அமுதத்தைப் பொழிவார். எங்கள் குடும்பத்தினர் மனம் உருகிக் கேட்போம்'' என்றார் செங்கல்வராயப் பிள்ளையவர்கள்.

அரண்மனைக்காரத் தெருவில் புரோகிதர் வெங்கடேசய்யர் வீட்டில் நடைபெற்ற சமாராதனையின் போது, ஸ்ரீ சேஷாத்ரி சுவாமிகளின் ஒளி தரிசனத்தைக் கண்டதிலிருந்து, பந்த பாசமற்று, ஞான வைராக்கியத்துடன் வாழ்ந்த சுவாமிகளுக்கு, குடும்பத்தைத் துறந்து, தன்னிச்சையாகப் புனித யாத்திரை செல்ல வேண்டும் என்ற எண்ணம் வலுக்கத் தொடங்கியது. தம் மனைவியை அழைத்துக் கொண்டுபழநிக்குச் சென்று, மகனைப் பர்மாவிலிருந்து வரவழைத்து, அவனிடம் தாயை ஒப்படைத்து விட்டு, திருப்புகழ் பாடிப் பணம் சம்பாதித்து, நண்பர்கள் ஆதரவோடு காசி யாத்திரை புறப்பட்டார்.

அங்கு சென்ற மூன்று மாதங்களுக்கெல்லாம், அன்னை அஞ்சம்மாளின் அஸ்தியோடு நரசிம்மன் தந்தையைத் தேடிக் கொண்டு வந்தான். கணவனைப் பிரிந்து வெகு நாள் வாழ விரும்பாத அந்த உத்தமி காலமாகி விடவே, தந்தையுடன் தங்கி விடலாம் என்று தீர்மானித்து காசிக்கு வந்த

மகனுக்கு ஏமாற்றமே காத்திருந்தது. தம்மிடம் மகன் தங்கியிருக்கக்கூடாது என்று கூறி, சுவாமிகள் பத்து ரூபாய் பணம் கொடுத்து அவனை ஊருக்கே திருப்பி அனுப்பி விட்டார்.

பின்னர், இமாலயப் பகுதிக்குச் சென்று மூன்று ஆண்டுகள் புண்ணியத் தலங்களைத் தரிசித்து, புனித நீராடினார். ஹரித்வார், பத்ரிநாத், கேதாரிநாத், கங்கோத்திரி, யமுனோத்ரி, அமர்நாத் முதலிய தலங்களை தரிசித்த பிறகு, இமாலயத்தில் தவம் புரிந்து வந்த ஒரு மகானிடம் முறையாகச் சந்நியாசம் பெற்றுக் கொண்டு சச்சிதானந்த சுவாமிகளானார். பத்து மாதங்கள் யார் கண்ணிலும் படாமல் காட்டுப் பிரதேசங்களில் வசித்தார். நான்கு மாதங்கள் சாதுர்மாஸ்ய நோன்பு இருந்தார். பின்னர் விதிப்படி தண்டத்தையும், கமண்டலத்தையும் கங்கைக்கு அர்ப்பணம் செய்துவிட்டு, அதிவர்ணாச்ரமத்தை மேற்கொண்டார். அந்தக் கடுமையான குளிர்ப் பிரதேசத்தில் பல மகான்களுக்குப் பணிவிடைகள் செய்தும், உணவு தயார் செய்து தந்தும், தவ நெறியோடு ஆன்ம வலிமையைப் பெருக்கிக் கொண்டார். இமாலயத்தின் உச்சியில் திருப்புகழ்க் கொடியை நாட்டினார்; சென்றவிடமெல்லாம் அருள் மணம் பரப்பினார்; அன்பு மழை பொழிந்தார்.

ஒருநாள் அயோத்தியில் ராமர் கோயிலைத் தரிசித்து விட்டு ஆகாரமின்றி சுவாமிகள் ஒரு மரத்தடியில் அமர்ந்து திருப்புகழ் பாடிக் கொண்டிருந்தார். உச்சிவேளை நெருங்கியது. சுவாமிகளுக்குப் பசி தாங்க முடியவில்லை. அண்ணாந்து பார்த்தார். மரக்கிளைகளில் நிறையக் குரங்குகள் உட்கார்ந்திருப்பதைக் கண்டு, அவற்றை நோக்கி, 'வஞ்சங் கொண்டுந்திடராவண' என்ற திருப்புகழைப் பாடினார். 'குரங்குந் துஞ்சுங் கனல் போல் வெகுண்டுங் குன்றுங் கரடார் மரமது வீசி' என்று வானர சேனைகளின் திறமையையும் வல்லமையையும் பாராட்டும் பாடல் அது. இந்தப் பாட்டைக் கேட்ட குரங்குகளில் சில ஓடோடியும் சென்று, காட்டு வழிப் பாதையில் பஞ்சாபி யாத்திரிகர்கள் தயார் செய்து கொண்டிருந்த ரொட்டிகளில் சிலவற்றைத் தூக்கிக் கொண்டு வந்து சுவாமிகளிடம் போட்டன. குரங்குகளைத் துரத்திக் கொண்டு வந்த பஞ்சாபிகள், சாது ஒருவர் தங்கள் ரொட்டியைச் சாப்பிடுவதைக் கண்டு மனமகிழ்ச்சியோடு சென்றனர். அன்று ஸ்ரீராமநவமி தினம்!



...குழந்தையைப் போல்...

தமது வட இந்திய யாத்திரையை முடித்துக் கொண்டு தமிழகம் திரும்பிய சுவாமிகள், மீண்டும் திருவண்ணாமலைக்குச் சென்றார். மலை மீதிருந்த ரமணருக்குப் பணிவிடை செய்து கொண்டு ஆச்ரமத்தில் தங்கியிருந்த சுவாமிகளைப் பார்த்து, "கீழே போங்கள்" என்று பகவான் உத்தரவிட்டார். சுவாமிகளுக்கு ஒன்றும் புரியவில்லை. "என்னஅபசாரம் செய்தோம்? பகவான் ஏன் என்னைப் போகச் சொல்கிறார்?" என்று எண்ணி எண்ணி விடை காண முடியாமல் மனம் குமைந்தார். பின்னர், குருநாதரின் கட்டளையை சிரமேற் கொண்டு, மலையை விட்டுக் கீழே இறங்கினார்.

—தொடரும்.


வாசன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட், 151, மவுண்ட் ரோடு, சென்னை-2, தமிழ் நாடு, நிறுவனத்திற்காக, ஆனந்த விகடன் அச்சகத்தில், அச்சிட்டு வெளியிடுபவர் ஆசிரியர் எஸ். பாலசுப்ரமணியன்.

பிரளயம் வந்ததோ...!

இதுவரை கண்டும் கேட்டுமிராத வகையில் பயங்கரக் கடல் கொந்தளிப்பும், புயலும் ஏறபட்டு, கிழக்குப் பாகிஸ்தானை சர்வ நாசமாக்கி யிருக்கிறது அதன் கடலோரத் தீவுகளில் 200 மூழ்கிவிட்டனவென்றும், இருபது லட்சம் பேர் இந்தக் கோர பிரளயத்தில் பலியாகி யிருக்க வேண்டும் என்றும் பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன.

சீனுவில் சுற்றுப் பயணம் செய்துவிட்டு, 'மகிழ்ச்சி'யுடன் தாய் நாட்டில் காலடி வைத்த பாகிஸ்தான் ஜனதிபதி யாஹ்யாகான் இந்தச் செய்திகளை அறிந்து திடுக்கிட்டுப் போனுர். அதிர்ச்சி அடைந்த உலக நாடுகளோ, பாகிஸ்தானுக்கு எல்லா வகையிலும் உதவி அளிக்க முன்வந்துள்ளன. இந்தியாவும் தனது சகோதரரின் கண்ணீரைத் துடைக்க ஒரு கோடி ரூபாய் அளித்து மேலும் சில சலுகைகளைத் தந்துள்ளது.

இயற்கையின் கடும் சீற்றத்திலிருந்து தப்புவது என்பது இயலாத காரியம் தான். ஆனுல், இந்த விஞ்ஞான யுகத்தில், இயற்கையின் சீற்றத்தை முன் கூட்டியே அறியும் வாய்ப்புக்கள் பல உள்ளன. அவற்றைப் பயன்படுத்திக்கொள்வதன் மூலம், இம்மாதிரியான சோதனைகளிலிருந்து சிறிதளவேனும் தப்ப முயற்சிக்கலாம். வானில் பறக்கும் செயற்கைக் கோள்களால் கடல் கொந்தளிப்பையும் புயலையும் முன்பே அறிய முடியும். உண்மையில் கிழக்குப் பாகிஸ்தானில் கடும் புயல வீசப் போகிறது என்பது மூன்று நாட்களுக்கு முன்பே கண்டு பிடிக்கப்பட்டிருககிறது. அங்கே அடிக்கடி புயல வீசிப பழக்சப்பட்டிருப்பதால் அதிகாரிகள் இதன் கடுமையைச் சரியாக உணராமல இருந்து விட்டார்கள். பூகோள அமைப்பின் காரணமாக கிழக்குப் பாகிஸ்தான் அடிக்கடி இம்மாதிரியான சோதனைக்கும் வேதனைக்கும் ஆளாக வேண்டியிருக்கும். விஞ்ஞான யுகத்தின் சாதனைகளைக் கொண்டுதான் இவற்றிலிருந்து தப்புவதற்கு அது வழி தேடவேண்டும்.





வள்ளிமலை தரிசனம்

அருணாசல மகிமை

46

மலையடிவாரத்தில் எருமை யொன்று குட்டையைக் கலக்கிக் கொண்டிருந்தது. எருமையையும் பிரும்மமாகக் கருதிய ஸ்ரீ சேஷாத்ரி சுவாமிகள், அதைக் கட்டித் தழுவி, ஆனந்தத்தில் லயித்திருந்தார். அவர் திருமேனியில் சேறும் சகதியும் படிந்திருந்தாலும், சுற்றுப்புறம் எங்கும் சந்தனத்தின் நறுமணம் 'கம்'மென்று வீசியது.

ரமண பகவான் தம்மைக் கீழே இறங்கிப் போகச் சொல்லி விட்டாரே யென்ற மனத் தளர்ச்சியுடன் மலையிலிருந்து இறங்கி வந்த சச்சிதானந்த சுவாமிகளைப் பார்த்தார் சேஷாத்ரி சுவாமிகள். ஓடிப் போய் அவரை அப்படியே கட்டித் தழுவினார். கீழே அமர்ந்து அவரை மடி மேல் அமர்த்திக் கொண்டார். இவர் மீதிருந்த சகதி அவர் மீதும் ஒட்டிக் கொண்டது. சுகந்தம் பன்மடங்காக வீசியது.

முக்காலத்தையும் உணர்ந்தபிரும்ம ஞானியான ஸ்ரீ சேஷாத்ரி சுவாமிகள் அர்த்தநாரியையா கண்டார்? திருப்புகழ் அமுதத்தை உலகிற்கு வாரி வழங்குவதற்காகவே அவதரித்துள்ள திருப்புகழ் சுவாமிகளை ஒரு நொடியில் அடையாளம் கண்டு கொண்டார்.

வருங்காலத்தில் வள்ளிமலை வள்ளலாக விளங்கப் போகிறவரைத் தமது சீடராக ஏற்றுக் கொண்டு, உபதேசமும் செய்தருளினார். ஸ்ரீ ஆதிசங்கரர் அருளிய 'சிவ மானஸ பூஜா' என்ற ஐந்து சுலோகங்களில் ஒன்றான 'ஆத்மாத்வம் கிரிஜாமதி' என்ற நான்காவது சுலோகத்தைக் கூறினார்.

ஈசனே, நீயே என் ஜீவாத்மா. என் புத்திதான் பார்வதி தேவி. பிராணன் முதலிய வாயுக்கள் உன் பரிவாரங்கள். என் உடம்பே நீ வசிக்கும் கோயில். நான் ரசிக்கும் விஷயங்களும் அனுபவிக்கும் போகங்களும் உனக்குரிய பூஜையாகும். என் தூக்கமே சமாதி நிலை. காலால் நடக்கும் போதெல்லாம் நான் உன்னை வலம் வருகிறேன். என் வாயிலிருந்து வெளிவரும் சொற்களெல்லாம் உன்னைப்பற்றிய தோத்திரங்கள். நான் செய்யும் காரியங்களெல்லாம் உனக்கு நான் செய்யும் ஆராதனையாகும்.

பரணீதரன்


சொந்த நலனுக்காக ஒரு காரியமும் செய்யாமல், சிந்தனை, சொல், செயல் மூன்றையும் நம்மைப் படைத்த பரம்பொருளுக்கே அர்ப்பணித்து வாழ்ந்தால், 'நான், எனது, உன், உனது' என்ற வேறுபாடுகள் நீங்கி, பிரும்மதத்துவத்தை உணர்ந்து உன்னத நிலையடைவாய்' என்று ஆசி வழங்கினார் குருநாதர். பின்னர் சீடரைப் பார்த்து, ''உன் பெரியோர்களும் சந்நியாசிகளாக வாழ்ந்திருக்கிறார்கள். உனது துறவு வாழ்க்கையும் சிறக்கப் போகிறது. உனக்குத் திருப்புகழ்தான் மாமந்திரம்'' என்று கூறியதும், சச்சிதானந்த சுவாமிகளுக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. உடல் நடுங்க, கைகூப்பி நின்றார்.

பின்னர், சேஷாத்திரி சுவாமிகள், சங்கரரின் சுலோகத்தில் புதைந்துள்ள கருத்தைத் தெளிவாக விளக்கி விட்டு, ''இதே கருத்து கொண்ட பாட்டுக்கள் திருப்புகழில் இருக்கிறதா?'' என்று கேட்டார். உடனே சீடர் ''எனது யானும் வேறாகி, எவரும் யாதும் யானாகும் இதய பாவனாதீதம் அருள்வாயே'' என்று வரும் திருப்புகழைப் பாடிக் காட்டி, அதன் பொருளையும் எடுத்துக் கூறினார். தமிழில் அதிகப் பழக்கமற்ற சேஷாத்ரி சுவாமிகள், ''வேத மந்திரங்களைக் காட்டிலும் ஆழமான கருத்துக்கள் திருப்புகழில் எளிமையாகச்சொல்லப்பட்டிருக்கிறது என்று தோன்றுகிறது. நீ திருப்புகழுக்காகப் பிறந்தவன். அந்த மகா மந்திரமே போதும். வேறு மந்திரங்கள் உனக்குத் தேவையில்லை. நீ வேத சாஸ்திரங்களைக் கற்க வேண்டிய அவசியமும் இல்லை. நீ திருப்புகழ் பாராயணம் செய்து கொண்டிருந்தாலே போதும், நீ வள்ளிமலைக்குப் போ. பிறகு நானும் அங்கு வருகிறேன்'' என்று கூறி சுவாமிகளுக்கு அருளாசி வழங்கி அனுப்பி வைத்தார்.

அருணாசலத்தில் அருணகிரிநாதர் அவதரித்து, திருப்புகழ் பாடித் தந்தார். முருகனின் அம்சமான ரமண பகவான், அத் திருப்புகழைப் பரப்புவதற்காகப் பிறந்த வள்ளிமலை சுவாமிகளை, பராசக்தியின் வடிவான சேஷாத்திரி சுவாமிகளிடம் அனுப்பி வைத்தார். தாயின் அருட்பெருங் கருணையோடு, அரவணைத்து, அருளுபதேசம் செய்து, அன்னாரை வள்ளிமலைக்கு அனுப்பி வைத்தார் சேஷாத்ரி

வள்ளிமலை திருப்புகழ் சுவாமிகள்





மலையடிவாரத்திலுள்ள தினைப்புன வள்ளியம்மை சந்நிதி.

சுவாமிகள். அடி, முடி காண முடியாத, நித்தியமான சத்திய ஒளியில் பிரகாசித்துக் கொண்டிருக்கும் அருணாசலத்தின் மகிமை தொடர்ந்து கொண்டேயிருக்கிறது.

சென்னையிலிருந்து எண்பதாவது மைலில், பெங்களூர் செல்லும் பாதையிலிருக்கும் திருவலம் என்ற தலத்திலிருந்து எட்டாவது மைலில் வள்ளி மலை இருக்கிறது. கந்த புராணமும் திருப்புகழும் அதன் சிறப்பை வான ளாவப் பேசுகின்றன.

மான் உரு தாங்கிய இலக்குமிக்கும் சிவமுனிவராய் வந்த திருமாலுக்கும் திருமகளாக ஸ்ரீ வள்ளி பிறந்து, வளர்ந்து, ஓடியாடி, தினைப்புனங் காத்து, தவமியற்றி, முருகப் பெருமானை மணம் புரிந்த மலைப்பகுதி அது. இம்மலையைச் சுற்றி, மான் கருவுற்ற இடத்தைக் குறிக்கும் கருமான் ஓடை, மான் வள்ளியை ஈன்ற இடத்தைக் குறிக்கும் பெருமான் குப்பம், நம்பிராஜன் கோட்டை, பரண்கள், சுனைகள் எல்லாமே வள்ளியின் வரலாற்றுக்குச் சான்றுகள் கூறுகின்றன. இச்சா சக்தியான வள்ளியம்மை அருள் தவம் இருந்து, முருகனின் மீது காதல் கொண்டு, அவன் கரம் பற்றிய வள்ளிமலை, ஒரு சக்தி பீடமாகத் திகழ்கிறது. முருக வேளின் புனித பாதங்கள் பதிந்து, புண்ணியமடைந்துள்ள வள்ளிமலைக்குச் செல்பவர்களுக்கு மரணமே கிடையாது என்பது அருணகிரியாரின் திருவாக்கு.

வள்ளிமலையின் அடிவாரத்தில் சண்முகநாதரின் ஆலயம் இருக்கிறது. மலையின் மீது, ஒரே பாறையில் அமைந்துள்ள சுப்பிரமணியர் ஆலயம் காட்சியளிக்கிறது. அதுதான் மூலஸ்தானம். கீழே உற்சவமூர்த்தி வீற்றிருக்கிறார். மாசி மாதத்தில் நடைபெறும் பிரும்மோற்சவத்தில், தேர் மலையைச் சுற்றிக் கொண்டு வரும். பிறகு வேடர் பறி என்ற உற்சவம் நடைபெறும்.

ஆலயத்திற்குப் பின்புறம் சரவணப் பொய்கை இருக்கிறது. இதில் ஆடி மாதத்தில் தெப்போற்சவம் நடைபெறுகிறது. தற்போது, திருக்குளத்திற்குப் படிகள் அமைக்கும் வேலை மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

மலையேறுவதற்குச் சௌகரியமாக படிக்கட்டுகள் அமைத்திருக்கிறார்கள். இத் திருப்பணி 1956-ம் வருடம் திருமுருக கிருபானந்தவாரியாரின் தலைமையில் தொடங்கப்பட்டது. அப்போது, பழைய நாற்கால் மண்டபத்தை இடித்துப் புதுப்பிக்கும்

நோக்கத்துடன், பழைய படியைப் பெயர்த்ததும் உள்ளிருந்து மட்டுப் பால் சாம்பிராணிப் புகை நறுமணத் துடன் வெளி வந்தது. வேலையாட் களின் வாயிலிருந்தும் மூக்கிலிருந்தும் ரத்தம் கொட்டியது. புகையடங்கிய தும், உள்ளுக்குள்ளே ஒரு முனிவரின் உருவம் மங்கலாகத் தெரிந்ததாம். எல்லாரும் பயந்து போய் அந்தக் கல்லை அப்படியே மூடி விட்டனர். அங்கு ஒரு ஜீவ சமாதி யிருக்கிறது என்று இன்றும் நம்பப்படுகிறது.

வள்ளிமலையில் எல்லாப் படிகளும் புதுப்பிக்கப்பட்டன. ஆனால், இந்தப் பழைய மண்டபத்தை மட்டும் மாற்றி யமைக்காமல் அப்படியே விட்டு வைத்து விட்டார்கள். திருப் பணி 1962-ம் வருடம் நிறைவேறி, குடமுழுக்கு விழாவும் நடந்தேறியது.

ஸ்ரீ சேஷாத்ரிசுவாமிகளால் 'வள்ளி மலைக்குப் போ' என்று அருளாசியோடு அனுப்பப்பட்ட ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகள் 1916-ம் ஆண்டு நடை பெற்ற கும்பாபிஷேகத்தின் போது அங்கு வந்து சேர்ந்தார். மலைமீதுள்ள மூலஸ்தான விக்ரகத்திற்கும், கீழ்க் கோயிலில் புதுப்பிக்கப்பட்ட சண்முக நாதர் விக்ரகத்திறகும் அவ்வாண்டு கும்பாபிஷேகம் நடத்தினார்கள். முதன் முறையாக வள்ளிமலைக்கு வந்த சுவாமிகள் அன்னதான சிவன் என்று அழைக்கப்பட்ட பழநி சிவனுடன் சேர்ந்து, பொருள் சேர்த்து, இவ் விழாவை வெகு சிறப்புடன் கொண் டாடினார். ஊர் ஊராக, கிராமம் கிராமமாகத் திருப்புகழ் பாடிச் சென்று, திருப்புகழின்பால் ஈர்க்கப் பட்ட மக்களின் ஒத்துழைப்புடன்



மலைமீதுள்ள முருகன் ஆலயம்

பெரும் அளவில் அன்னதானம் செய் வித்தார். பின்னர், குருநாதரின் வாக்கை வேத வாக்காகக் கொண்டு, அந்த ஆண்டிலேயே மலையுச்சியிலுள்ள பர்வதராஜன் குன்றுக்கருகில் உள்ள ஒரு குகையை தமது இருப்பிடமாக்கிக் கொண்டார். அதுவே பின்னர் திருப் புகழ் ஆச்ரமமாயிற்று.

அந்த ஆச்ரமத்தைக் காணவும், அவர் வாழ்ந்த குகையில் இருக்கும் சுவாமிகளின் சமாதியைத் தரிசிக்கவும் நாங்கள் வள்ளிமலைக்குச் சென்றோம்.

மலையடிவாரத்தில் ஆபத்சகாய விநாயகர் அமர்ந்திருக்கிறார். சமயத் தில் வந்து முருகவேலுக்கு உதவி புரிந்த பெருமானல்லவா? வள்ளி மலைக்கும், தணிகை மலைக்கும் உள்ள தொடர்பை நினைவு படுத்துவது போல்

மலையடிவாரத்திலுள்ள சண்முகர் ஆலயமும் சரவணப் பொய்கையும்.



ஸ்ரீ வள்ளிமலை சுவாமிகளின் நூறுவது ஆண்டு ஜயந்தி விழா

திரு பி. டி. ராஜன் அவர்களைத் தலைவராகக் கொண்ட குழுவினர் சென்னையில் நான்கு நாட்கள் திருப்புகழ் சுவாமிகளின் நூறுவது ஆண்டு ஜயந்தி விழாவை விமரிசையாகக் கொண்டாட ஏற்பாடு செய்துள்ளனர். **நவம்பர் 28-ம் தேதியும், 29-ம் தேதியும் மயிலை கபாலீச்வரர்—கற்பகாம்பாள் கல்யாண மண்டபத்திலும், 30-ம் தேதி வள்ளிமலையிலும், டிசம்பர் 1-ம் தேதி திருமுல்லைவாயில் ஸ்ரீ வைஷ்ணவி ஆலயத்திலும், அம்பத்தூரிலும் விழா சம்பந்தமான நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. இந்தக் கோலாகலத் திருப்புகழ் விழாவில் சுவாமிகளைப் பற்றிய சொற் பொழிவுகளும், திருப்புகழ் பஜனைகளும், அபிஷேக ஆராதனைகளும் நடைபெறவிருக்கின்றன.**

அவர் அங்கு கம்பீரமாக வீற்றிருக்கிறார்.

அருகில் தினைப்புன வள்ளியம்மை சந்நிதியும் இருக்கிறது. வள்ளியம்மை ஆயலோட்டுவது போல் கவண் கயிற்றுடன் காட்சியளிக்கிறாள். இரு சந்நிதிகளையும் தரிசித்துக் கொண்டு படியேறினோம். மயில் மண்டபத்திலிருந்து திரும்பிப் பார்த்த போது சரவணப் பொய்கையும், காற்றில் அசைந்தாடும் மரங்களும், அதற்குப் பின்னால் அசையாமல் நிற்கும் சண்முகரின் கருவறை விமானமும் ராஜ கோபுரமும் எழிற் ஓவியமாகக் கண்ணையும் கருத்தையும் கவருகின்றன.

மலையேறுவது கடினமாகவேயில்லை. உச்சியில் தெரியும் கொடிமரத்தையும் ஆலய கோபுரத்தையும் பார்த்துக் கொண்டே நடக்கும் போது, வேதத்திற்கும் எட்டாத பெருமானை நாம் விரைவில் எட்டிப் பிடித்துவிடப்போகிறோம் என்ற நம்பிக்கை பிறக்கிறது; ஆனந்தம் பொங்குகிறது. களைப்பும் சோர்வும் மறைந்து விடுகிறது.

கோயிலை நெருங்கியதும் "இது தான் கணேசகிரி. அந்தப் பாறையை பாருங்கள். ஒரு யானை படுத்திருப்பது போலவே இருக்கிறது" என்றேன் நான்.

"ஆமாம், ஆமாம். அப்படியே இருக்கிறது" என்றார் நண்பர் சேஷாத்திரி. மகாதேவன், "இதுஇல்லை போலிருக்கிறதே" என்று அரைகுறை சந்தேகத்துடன் கூறினார்.

"இதுவாகத்தான் இருக்க வேண்டும். அதோ பாருங்கள் தும்பிக்கை. அதோ தலை...இதோ கால்" என்று சேஷாத்ரி வர்ணித்துக் கொண்டே போனார். உடனே புகைப்படக்காரர் பாபு, எதன் மீது ஏறி நின்றால் 'யானை'யை முழுமையாகப் படம் எடுக்க முடியும் என்ற ஆராய்ச்சியில் இறங்கத் தொடங்கி விட்டார்.

அவ்வழியே வந்த ஒரு பக்தர் "எதை போட்டோ எடுக்கறீங்க?" என்று கேட்டார்.

"இதோ, இந்த கணேச கிரியைத் தான் என்றேன்" நான்.

"கணேச கிரியா? இதுவா?" என்று பலமாக சிரித்த அவர், "இது இல்லை. இது சாதாரணப் பாறை. கணேசகிரி சற்று மேலே இருக்கு. இன்னும் போகணும்" என்றார்.

"அப்படியா?" என்று அசடுவழிந்து விட்டு எல்லோரும் கோயிலுக்குள் நுழைந்தோம்.

"இது கணேசகிரி இல்லை என்று எனக்கு அப்பவே தெரியும். நீங்க சொல்றீங்களேன்னு பேசாமெ இருந்தேன்" என்று சாவகாசமாகக் கூறினார் மகாதேவன்.

மலை முருகன் இயற்கையான சூழ்நிலையில் குகைக் கோயிலில் எழுந்தருளியிருக்கிறான். கொடி மரமும், ஒரே பாறையின் மீது எழும்பியுள்ள கோபுரமும் மனத்தைக் கொள்ளை கொள்ளுகின்றன. முன் மண்டபமும் பெரிய பாறைகளால் மூடப் பெற்றிருக்கிறது. அந்த மண்டபத்தின்

ஜெயவேல் தாஸ்



இடப்புறத்தில் பாறையில் ஆயலோட்டும் வள்ளியம்மையின் எழிலுருவம் செதுக்கப்பட்டிருக்கிறது.

உள்ளே செல்வ விநாயகரைத் தரிசிக்கிறோம். மற்றும் நவவீரர், அருணகிரிநாதர், காசி விச்வநாதர், காசி விசாலாட்சி முதலானோர் வீற்றிருக்கக் காண்கிறோம். குகையைப் போன்ற கருவறையில் குகன், வள்ளி தேவயானை சமேதராய் அருள்பாலிக்கிறார்.

அக் கோயிலில் ஒரு சுரங்கப்பாதை இருந்ததென்றும், அது இப்போது அடைக்கப்பட்டிருப்பதாகவும் கூறினார்கள். அவ்வழியேதான் முருகன்-வள்ளியம்மையை இருபத்தைந்து மைல் தொலைவிலுள்ள திருத்தணிகைக்கு சிறையெடுத்துப் போனதாகவும் தல வரலாறு கூறுகிறது.

மூல மூர்த்திக்கு மேல் உருத்திராட்சப் பந்தல் போடப்பட்டிருக்கிறது. அதற்கு மேல் புத்தர் சிலையொன்று இருப்பதாகப் படித்திருந்ததால் உற்றுப் பார்த்தேன். அந்த இருட்டிலும் புகையிலும் அது சரியாகக் கண்ணுக்குத் தெரியவில்லை.

முருகனைக் கண் குளிரத் தரிசித்து விட்டுக் கோயிலை வலம் வந்தோம். அடுத்து திருப்புகழ் சுவாமிகள் ஆச்ரமத்திற்குச் செல்ல வேண்டும். ''நான் வழி காட்டுகிறேன். வாருங்கள்'' என மகாதேவன் அழைத்தார். சுவாமிகளுடன் அந்த ஆச்ரமத்திலே இருந்தவர்கள் யாராவது உடன் இருந்தால் சௌகரியமாக இருக்குமே என்று மனத்திற்குள் நினைத்துக் கொண்டேன் நான் அப்போது முன் மண்டபத்தில் ஒருவர் பாடிக் கொண்டிருந்த திருப்புகழ் காற்றில் மிதந்து வந்து, காதில் தேனாகப் பாய்ந்தது. அவரைப் பற்றிக் குருக்களிடம் விசாரித்தேன்.

''திருப்புகழ் பாராயணத்திற்காகத் தேவஸ்தானத்தார் அவரை நியமித்திருக்கிறார்கள். அவர் ஸ்ரீ வள்ளிமலை திருப்புகழ் சுவாமிகளின் சீடர். பல வருடங்கள் ஆச்ரமத்தில் அவருக்குத் தொண்டு செய்தவர். பெயர் ஜெயவேல்தாஸ். சுவாமிகளிடம் கற்ற திருப்புகழைத்தான் அவர் பாராயணம் செய்து கொண்டிருக்கிறார்'' என்றார் குருக்கள் உற்சாகமாக.

'கும்பிடப்போன தெய்வம்குறுக்கே வந்தது' போலாயிற்று எனக்கு. தவச்சீலர்களும் யோக சித்தர்களும் அருவமாக யிருந்து கொண்டு இவ்விதம் தான் துணை புரிவார்களோ?



சென்னையில் ஒரு சாப்பாடு, அதிலும் சைவ சாப்பாடு ஆறு ரூபாய் தொண்ணூற்று ஐந்து பைசாவிற்கு விற்கிறது என்றால் ஆச்சரியமாக இருக்கிறதல்லவா?

உண்மைதான்.

விமான நிலைய கேண்டீனில் தான்

சுவாமிகளின் ஆச்ரமத்தையும், அவர் சம்பந்தப்பட்ட பிற இடங்களையும் காண்பதற்கு ஜெயவேல் தாஸை விட நல்ல துணையும் வழிகாட்டியும் கிடைக்க முடியுமா? அவரிடம் சென்று, நாங்கள் வந்த காரியத்தைக் கூறி, உடன் வர வேண்டும் என்று கேட்டுக் கொண்டேன். அவர் உடனே ஒப்புக்கொண்டார். ''ஐயா, திருப்புகழ் சுவாமிகளைக் காணும் பாக்யம் எனக்கு இல்லை. அவர் திருப்புகழ் அமிர்தம் பொழிந்து நான் கேட்டதில்லை. தயவு செய்து சுவாமிகள் பாடும் பாணியிலேயே ஒரு திருப்புகழ் பாட்டுப் பாடுங்கள். அவரை மானசீகமாகவாவது கண்டு ஆனந்திக்கின்றேன்'' என்றேன் நான் உணர்ச்சிப் பெருக்குடன்.

ஜெயவேல்தாஸ் தம்புரா போன்ற கருவியில், தென்னங்குச்சிகளால் தாளம் போட்டுக் கொண்டே பத்து நிமிடங்கள் எங்களைத் திருப்புகழ் பேரானந்தத்தில் திளைக்கச் செய்தார்.

— தொடரும்.

இதோ, ஒரு <u>தீமையற்ற</u> தலைவலி மாத்திரை!



அவேதன்®

அற்புத 'எபெப்' அடங்கியது.

(என்-அஸிடில்-பி-எமினோஃபினோல்)




தலைவலி மாத்திரை ஏதாவது தீங்கு விளைவிக்குமோ என்கிற பயத்தால், நாம் எத்தனையோ தடவை தலைவலியைப் பொறுத்துக்கொண்டு அவதிப்படுகிறோம்.

ஆனால் அப்படி அவதிப்பட வேண்டாம். அவேதன் தீமையில்லாமல் தலைவலியைப் போக்குகிறது. ஏனெனில், அவேதனில் அற்புத 'எபெப்' அடங்கியுள்ளது. அவேதன் சாப்பிட்டபின் எவ்வித துன்பகரமான பின் விளைவுகளும் ஏற்படாது; துரிதமான நிச்சய நிவாரணம் கிடைக்கும்.

எனவே, தீமையற்ற முறையில் தலைவலியைப் போக்குங்கள். ஜலதோஷம், ஃப்ளு மற்றும் இதர வலிகளையும் நோவுகளையும் கூடத்தான்! 'எபெப்' அடங்கிய அவேதன் சாப்பிடுங்கள்.

2 டேப்லெட்டுகள்: 15 பைசா.

அவேதன்—அற்புத 'எபெப்' அடங்கியது. தலைவலி, ஜலதோஷம், மற்றும் ஃப்ளுவிலிருந்து தீமையற்ற நிச்சய நிவாரணம் அளிக்கிறது.





SQUIBB® SARABHAI CHEMICALS

● இ.ஆர். ஸ்க்விப் அண்டு ஸன்ஸ் இன்கார்ப்பரேடெட்டின் ரெஜிஸ்டர்ட் ட்ரேட்மார்க்கைக் குறிக்கிறது. காம்சந்த் ப்ரேம்சந்த் பிரைவேட் லிமிடெட் இதை உபயோகிக்க உரிமை பெற்றவர்கள்.

Shilpi HPMA 37A/70 TAM



திருப்புகழ் ஆச்ரமத்திற்கு போகும் வழி

அருணாசல மகிமை

47

திருப்புகழ் அமுதத்தை காது குளிர, நெஞ்சு நிறைய கேட்டு விட்டு திருப்புகழ் ஆச்ரமத்தை நோக்கி நடந்தோம். ஜெயவேல்தாஸ் முன்னே செல்ல, நாங்கள் பின்னே சென்றோம். கரடு முரடான பாதையானாலும், வள்ளியும் முருகவேளும் ஓடித் திரிந்த மலைப் பிரதேசத்தில் நடக்கும்போது உள்ளத்தில் உவகை பொங்குகிறது.

போகும் வழியில் ஜெயவேல்தாஸ் தம்மைப் பற்றிய விவரங்களை யெல்லாம் கூறிக் கொண்டு வந்தார்.

இப்போது அவருக்கு அறுபத்தியாறு வயது ஆகிறது. தமது பதினேந்தாவது வயதில் வள்ளிமலை சுவாமிகளிடம் வந்தவர், அவருடனேயே தங்கி விட்டார். வண்ணார் வகுப்பைச் சேர்ந்த ஜெயவேல்தாசுக்கு பெற்றோர் இட்ட பெயர் நரசிம்மன் என்பது. குருநாதரான திருப்புகழ் சுவாமிகள்தான் அவருக்கு ஜெயவேல்தாஸ் என்ற பெயரைச் சூட்டினார். வள்ளிமலைக்கு அருகிலுள்ள போடிநத்தம் என்ற சிற்றூரைச் சேர்ந்த இவருக்கு திருப்புகழை முறையாகக் கற்பித்து, முருக பக்தியை ஊட்டினார் சுவாமிகள். அவருக்குப் பணிவிடைகள் செய்ததை தமது வாழ்க்கையின் பெரும் பேறாகக் கருதுகிறார் ஜெயவேல்தாஸ். சுவாமிகள் இட்ட திருப்புகழ்ப் பிச்சைதான் தற்போது அவரை வாழ வைத்துக் கொண்டிருக்கிறது.

"அதோ தெரிகிறது பாருங்க, அதுதான் பர்வதராஜன் குன்று. அதுக்கும் கன்னிக் குன்றுக்கும் இடையிலேதான் திருப்புகழ் ஆச்ரமம் இருக்கிறது" என்றார் ஜெயவேல்தாஸ்.

எல்லோரும் நடந்து கொண்டிருந்தோம். சேஷாத்ரி மட்டும் சற்று பின் தங்கிவிட்டு, ஒரு பாறையைஆராய்ந்து கொண்டிருந்தார்.

"என்ன பார்க்கிறே?" என்று கேட்டேன் நான்.

"இதான் கணேசகிரி போலேயிருக்கு...இதோ தலை, இதோ காது, அதோ தும்பிக்கை" என்று விளக்க ஆரம்பித்து விட்டார். பாபு, காமிராவை 'அட்ஜெஸ்ட்' செய்யத் தொடங்கினார். காரோட்டி ஃபிலிப்,

'யானை', 'யானை' என்று குதிக்க ஆரம்பித்து விட்டான்.

''கணேசகிரி இது இல்லே! இன்னும் மேலே யிருக்கு. நான் காட்டறேன் வாங்க'' என்றுஎங்களை அழைத்தார் ஜெயவேல்தாஸ். மறுபடியும் அசடு வழிந்துவிட்டு அவரைப் பின் தொடர்ந்தோம் நாங்கள்.

இந்த மலையில் நான்கைந்து பாறைகள் ஒரு கோணத்தில் பார்த்தால் யானையைப் போலவே இருக்கின்றன. இயற்கையிலேயே அப்படி அமைந்திருக்கிறதா, அல்லது யாராவது சிற்பி பொழுது போகாமல் அப்படிச் செதுக்கி வைத்தாரா என்பது தெரியவில்லை!

''இந்தச் சுனையைப் பார்த்திங்களா? இங்கேதான் சாமி வந்து குளிப்பாரு. சில சமயம் அதோ, அந்தப் பாறை மேலே வந்து உட்கார்ந்துக்குவாரு...இதோ, இங்கெல்லாம் நடப்பாரு'' என்று பழைய நிகழ்ச்சிகளை நினைவு கூர்ந்து. உணர்ச்சிப் பெருக்குடன் விளக்கிக் கொண்டே வந்தார் ஜெயவேல்தாஸ். வள்ளிமலை சுவாமிகளின் பாதம் பட்ட இடங்களைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொண்டோம் நாங்கள்.

பர்வதராஜன் குன்றின் உச்சியை நெருங்கிக் கொண்டிருக்கும் போது, ''இங்கே வாருங்கள், ஓர் அதிசயம் காட்டுகிறேன்'' என்று எங்களை ஒரு பக்கமாக அழைத்துச் சென்றார் ஜெயவேல்தாஸ். வழுக்கும் பாறைகளில் ஜாக்கிரதையாக கால்களை ஊன்றி, அந்த இடத்திற்குப் போய்ச் சேர்ந்தோம்.

''இந்தக் கல்லைப் பாருங்கள். எத்தனை வழ வழப்பாக யிருக்கிறது. குளிப்பதற்காக இதில்தான் வள்ளி மஞ்சள் அறைத்தாளாம். இதோ, இந்தப் பாறைகளைப் பாருங்கள். மஞ்சள் தெளித்த மாதிரியே புள்ளி புள்ளியாக இருக்கிறது. இப்பக் கூட ஒரு துணியில் தண்ணீரை நனைத்து, இந்தப் பாறையில் தேய்த்துப் பாருங்கள். மஞ்சள் அப்படியே ஒட்டிக் கொள்ளும்'' என்றார் ஜெயவேல்தாஸ்.

இதைக் கேட்டுக் கொண்டு அங்கு நின்றிருந்த பள்ளிச் சிறுவர்களில் சிலர் ஒரே ஓட்டமாக ஓடிப் போய் துணியை நனைத்துக் கொண்டு வந்து பாறையில் தேய்த்துப் பார்த்தார்கள்.

''ஆமாண்டா. நெசந்தாண்டா. இதோ பாரு, துணி மஞ்சளாயிடுச்சு'' என்று ஆச்சரியத்துடன் அவர்கள் பேசிக் கொண்டார்கள்.

பின்னர், பர்வதராஜன் குன்றை அடைந்தோம். அங்கு பாறையில் செதுக்கபபட்ட ஒரு சிவலிங்கம் இருக்கிறது. அதுதான் திருமால்கிரீச்வரர். திருமால் சிவ முனிவராக வேடம் தரித்து வந்து, சிவபெருமானை வழிபட்ட லிங்கம் இது. வள்ளிமலை கிராமத்திலிருக்கும் ஆலயத்தில் எழுந்தருளியிருப்பவரின் திருநாமமும் திருமால்கிரீச்வரரே.

பர்வதராஜன் குன்றில் திருமால் கிரீச்வரரைப் பார்த்ததும் என் அருமை நண்பர் டன்லப் கிருஷ்ணன் கூறிய நிகழ்ச்சி யொன்று நினைவுக்கு வந்தது.

சென்ற ஆண்டு ஒரு நாள் கடுமையான வெய்யில் காய்ந்து கொண்டிருந்தது. அப்போது ஊரெங்கும் வறட்சி, பஞ்சம், பட்டினி. மேய்ச்சல் நிலமின்றி ஆவினங்கள் பரிதவித்தன. அந்தச் சமயம் நண்பர் கிருஷ்ணனும் ஸ்ரீ வைஷ்ணவி ஆலயத்தைச் சேர்ந்த சுவாமி சாதுராம் அவர்களும் இரண்டு மூன்று நாட்கள் வள்ளிமலை திருப்புகழ் ஆச்ரமத்தில் தங்கியிருந்தார்கள். அப்போது சாதுராமுக்கு ஒரு யோசனை தோன்றியது. மழை பெய்யாவிட்டால், அருகிலிருந்தசுனையிலிருந்து நூறு குடம் தண்ணீர் எடுத்து வந்து, திருமால்கிரீச்வரருக்கு அபிஷேகம்

ஸ்ரீ வள்ளிமலை சுவாமிகள்





ஆச்ரமத்திலுள்ள சுவாமிகளின் உருவச் சிலை

செய்தால் மழை பொழியும் என்று திருப்புகழ் சுவாமிகள் சொன்னது நினைவுக்கு வரவே, அவ்வாறு அபிஷேகம் செய்ய வேண்டும் என்று அவர் தீர்மானித்து, கிருஷ்ணனிடம் கூறினார். உற்சாகம் மிகுந்த நண்பர் அந்த நற்பணிக்குக் கை கொடுத்து உதவ முன் வரவே, இருவரும் தேவார திருமுறைகளைப் பாடிக் கொண்டே, திருமால்கிரீச்வரருக்கு நூறு குடம் தண்ணீர் அபிஷேகம் செய்வித்தனர். மேகராக குறிஞ்சியுடன் அபிஷேகம் தொடங்கியதுமே சூரியன் மேகங்களுக்குப் பின்னால் மறைந்து விட்டான்! அபிஷேகம் முடிந்ததும் திடீரென்று கருமேகங்கள் சூழ்ந்தன. வானம் இருண்டது. இடி முழக்கத்துடன் வானம் பிளந்தது போல் மழை கொட்டித் தீர்த்து விட்டது. மறுநாள் முழுதும் நல்ல மழை. மகான்கள் வாக்கு என்றுமே பொய்ப்பதில்லை.

பர்வதராஜன் குன்றிலிருந்து பார்த்தால் தொலைவில் சோளிங்கபுரமும், திருத்தணி மலையும் தெரிகிறது. சிங்கமுகக் கடவுளையும் சிங்கார வேலனையும் மனத்திற்குள் தொழுது கொண்டு திருப்புகழ் ஆச்ரமத்தைக் காணச் சென்றோம்.

திருப்புகழ் ஆச்ரமப் பகுதிக்குள் நுழையும் முன்பு, இதுதான் ''ஜாம்பவான் குன்று, காவல் பாரா'' என்று ஒரு பாறையை அறிமுகப்படுத்தினார் ஜெயவேல்தாஸ். அதைக் கடந்து உள்ளே காலடி எடுத்து வைத்தோம்.

மரம் செடிகளடர்ந்த அந்த ஆச்ரமத்தின் சூழ்நிலையில் ஆழ்ந்த அமைதியும் இன்ப எழிலும் கோலோச்சுகின்றன. முருகன் புகழ்பாடி, மோன தவம் புரிந்த முனிவர் வாழ்ந்த இடமாகையால், அங்கு அழகு கொஞ்சுகிறது; அருள்வெள்ளம் பாய்கிறது; ஆன்ம ஒளி வீசுகிறது.

ஆச்ரமத்தின் மத்தியில் உள்ள ஓர் அறைக்குள் நுழைகிறோம். வள்ளி மலை சுவாமிகளின் உருவச் சிலை, கருணையோடு நம்மை 'வா' வென்று அழைக்கிறது. பின்னால், ஸ்ரீ அருணகிரிநாதர், ஸ்ரீ ரமண பகவான், ஸ்ரீ சேஷாத்ரி சுவாமிகள், ஸ்ரீ வள்ளி மலை சுவாமிகள் முதலிய பேரருளாளர்களின் உருவப் படங்கள் காட்சி தருகின்றன. அங்கு அன்புத் தொண்டு புரிந்து வரும் அன்பர் ஒருவர் கற்பூரார்த்தி காட்டுகிறார். ஜெயவேல்தாஸ் பாடுகிறார்:

சின்னமாம் ஏகதாரை கையிலேந்தி
யிந்தச்
சென்னைமா நகரமெங்கும் திருப்புக
ழென்னுந் தேனை
சொன்னமா மாரி போலச் சுவை
யமுதொழுகச் சொல்லும்
தன்னைநே ரில்லாச் சச்சிதானந்தன்
பதங்கள் போற்றி.

அந்தக் கோயிலிலிருந்து வெளியே வந்ததும் அங்கிருந்த அன்பர் எங்களுக்கு பானகம் கரைத்துத் தந்தார்.

''இது ரொம்ப நாளைய பழக்கம். ஆச்ரமத்திற்கு வருபவர்களை சுவாமி சும்மா அனுப்ப மாட்டார். அருந்துவதற்கு ஏதாவது கொடுத்தால்தான் அவருக்கு நிம்மதியாக இருக்கும். அதுவும் அவர் கையாலே கொடுக்கவேண்டும். அவர் கையாலே காப்பி போட்டு சாப்பிடணும். ஆகா... அது மாதிரி காப்பி நான் எங்கேயும் சாப்பிட்டதில்லே... குருநாதன் தாயாக கருணை காட்டுவார். குழந்தையாக விளையாடுவார். தந்தையாக கடிந்து கொள்வார். ஆண்டவனாக அருள்பாலிப்பார்'' என்று சுவாமிகளின் பெருமைகளைப் பேசிக் கொண்டே பொங்கிப் பாறைக்கு எங்களை அழைத்து வந்தார் ஜெயவேல்தாஸ்.

''பொங்கி'' என்பது வள்ளிமலையின் காவல் தெய்வம். அது வள்ளியம்மையின் உயிர்த்தோழி. பார்வதி, லட்சுமி, சரஸ்வதி மூன்று பேரும் ஒருருவாக



வள்ளியம்மை மஞ்சள் அரைத்த இடம்

அமைந்த மாபெரும் சக்தி அது. அந்தப் 'பொங்கி'யை அந்தப் பாறை யுருவில் தரிசித்து, பூஜைகள் செய்து வந்தார் வள்ளிமலை சுவாமிகள். ஆச்ரமத்திற்கு வருபவர்களை யெல்லாம அதை வலம் வரச் சொல்லுவார். தற்போது அப் பாறைக்கு முன் வள்ளியின் உருவச் சிலை யொன்று பிரதிஷ்டை செய்யப் பட்டிருக்கிறது.

பொங்கியின் அருள் சுவாமிகளுக்கு பரிபூரணமாக யிருந்தது. நினைத்த போது அவருக்கு அவள் தரிசனம் அளித்திருக்கிறாள்.

ஒரு சமயம் சுவாமிகள் சென்னைக்கு வந்திருந்தபோது, பத்து வயது சிறுமி ஒருத்தி அவரிடம் வந்து, ''திருப்புகழ் பாடுங்கள் தாத்தா. கேட்க வேண்டும போல ஆசையா யிருக்கிறது'' என்று ஆசையுடன் கேட்டாள். குழந்தை கேட்டது, தெய்வமே கேட்பது போல் யிருந்தது சுவாமிகளுக்கு. உடனே அந்தத் தெருவிலுள்ள ஒரு வீட்டுத் திண்ணையில அமர்ந்து, ஒரு திருபபுகழை ராக, தாளத்துடன் அருமையாகப் பாடினார். மெய் மறந்து போன அச் சிறுமி, ''நானும் திருப்புகழ் பாடுவேன். கேட்கிறீர்களா?'' என்று வினவ, ''பாடம்மா, அதை விட இன்பம் எனக்கு வேறென்ன இருக்கிறது'' என்று சுவாமிகள் கூறினார். உடனே அந்தப் பெண் 'விரகற நோக்கியும் உருகியும் வாழ்த்தியும்' என்ற திருப்புகழை மோகன ராகத்தில் மெய்சிலிர்த்திடப் பாடினாள். அதில் அப்படியே லயித்துப் போன சுவாமிகள் அச் சிறுமியை இறுகத் தழுவிக் கொண்டு உச்சி முகர்ந்தார். ஆனந்தம் தாங்க முடியாமல பரவச நிலை எய்தினார்.

அப்போது அந்தச சிறுமி, ''நீங்க இவ்வளவு சநதோஷப்படறீங்களே, நான ஒண்ணு கேட்கிறேன், தருகிறீர்களா?'' என்று கேட்டாள்.

ஆசரமத்திலுள்ள பூஜையறை





மலையில் ஒரு சுனை

''இதென்னமா கேள்வி? உனக்கு என்ன வேண்டுமோ கேள். என் உடல், பொருள், ஆவியையும் உனக்குக் கொடுத்தாலும் போதாதே'' என்றார் சுவாமிகள்.

''அதெல்லாம் வேண்டாம். உங்க வெத்தலைப் பெட்டியைக் கொடுங்கள். போதும்'' என்றாள் சிறுமி, சிரித்துக் கொண்டே.

சுவாமிகளுக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை. அவர் சற்று எதிர் பாராத பரிசை அல்லவா சிறுமி கேட்கிறாள்!

திருமால்கிரீச்வரர்



''இந்தாம்மா, நீயே வெச்சுக்கோ'' என்று தன் வெற்றிலைப் பெட்டியை அவளிடம் கொடுத்தார் சுவாமிகள். அதைப் பெற்றுக் கொண்ட சிறுமி ஓடி மறைந்து விட்டாள்.

மூன்று நாட்கள் கழித்து, சுவாமிகள் வள்ளிமலைக்குச் சென்றார். அங்கு அவருக்குப் பேராச்சரியம் காத்திருந்தது. சென்னையில் சிறுமியிடம் அவர் கொடுத்த வெற்றிலைப் பெட்டி குகை வாயிலில் வைக்கப்பட்டிருந்ததைப் பார்த்து அதிசயித்தார். அதை எடுத்துத் திறந்து பார்த்தார். அவர் அதில் வைத்திருந்த ஐந்து ரூபாய் நோட்டும், சில்லறைக் காசுகளும் அப்படியே இருந்தன. அத்துடன் அதில் ஒரு துண்டுக் காகிதமும் இருந்தது. அதில், ''உன்னை நான் மறவேன். என்னை நீ மறவாதே—பொங்கி'' என்று எழுதப் பட்டிருந்தது. அதைப் படித்த சுவாமிகளின் கண்கள் பனித்தன. அவர் நெஞ்சம் நெகிழ்ந்தது. ''பொங்கித் தாயே! நான் உன் அடிமையம்மா'' என்று கதறினார். அன்று முதல் அவர் பொங்கித் தெய்வத்தை வழிபடத் தொடங்கினார்.

மற்றொரு மறக்க முடியாத நிகழ்ச்சியும் உண்டு.

சென்னையைச் சேர்ந்த கமலம்மாள் என்ற இசையாசிரியை வள்ளிமலை சுவாமிகளின் பக்தை. அந்த அம்மாளுக்கு இருந்த காசநோய் குணமாவதற்காக சுவாமிகள் 'இருமலு ரோக' என்ற திருப்புகழைப் பாடி வரும்படி பணித்திருந்தார். அந்தப் அம்மாளும் அந்தப் பாட்டை தவறாமல் முறையுடன் ஓதி வந்தார்.

ஒரு நாள் அந்த அம்மாளின் வீட்டுக்கு ஒரு குறச்சிறுமி வந்தாள். அன்று அந்த வீட்டில் திதி. எனவே, எல்லோரும் ஆசாரத்துடன் இருந்தனர். இந் நிலையில் அவள் பிச்சை கேட்டுக் கொண்டு கூடத்திற்கே வந்து விட்டாள். கோபம் கொண்ட அந்த அம்மாள் அச் சிறுமியை விரட்டினாள். ஆனால், அந்தச் சிறுமி சற்றும் பயந்ததாகத் தெரியவில்லை. அவள் கமலம்மாவை நோக்கி, '' 'இருமலு ரோகம்' மட்டும்தான் சொல்லிக்கொடுத்தானா? 'மதியால் வித்தகனாகி' என்ற பாட்டைச்சொல்லித் தரவில்லையா?'' என்று கேட்டுவிட்டு சிரித்துக் கொண்டே வெளியே ஓடி விட்டாள். சற்றைக்

கெல்லாம்'' அவள் எங்கோ மறைந்து விட்டாள்.

வீடு தேடி வந்தது பொங்கித் தெய்வம் என்று பின்னர் தான் தெரிந்தது. அத்தகைய பேறு பெற்ற கமலம்மாள் தான் திருப்புகழ் ஆச்ரமத்தி லிருக்கும் சுவாமிகளின் திருவுருவச் சிலையைச் செய்து தந்தவர்.



பொங்கிப் பாறை

சுந்தர சுவாமிகள் என்பவர் ஒரு சமயம் வள்ளிமலை சுவாமிகளிடம், 'இம் மலையில் ஓடியாடி விளையாடிக் கொண்டிருக்கும் வள்ளியம்மைக்கு வேறு பெயர் ஏதாவது உண்டா?' என்று கேட்டார். அதற்கு சுவாமிகள், ''அதற்கென்ன இன்றே நாளையோ தெரிந்து கொண்டு விடலாமே'' என்று சாதாரணமாகக் கூறினார்.

மறு நாள் சுவாமிகள் இருவரும் மலையை விட்டு இறங்கி நடந்து வந்து கொண்டிருக்கும்போது பத்து வயது சிறுமி யொருத்தி, 'விரகறநோக்கியும்' என்ற திருப்புகழைப் பாடிக் கொண்டு சுவாமிகளை நோக்கி வந்தாள். சென்னையில் முன்பு வந்தசிறுமி பாடியதும் அதே பாட்டுதான்!

திருப்புகழில் லயித்திருந்த சுவாமிகளிடம் அச்சிறுமி, ''சாமி, எனக்குப் பசிக்குதுங்க, ஏதாவது கொடுங்க'' என்று கேட்டாள். அதற்கு சுவாமிகள் ''இந்த நேரத்தில் இந்த இடத்தில் சாப்பாடு கேட்கறியே. என்னிடம் ஒன்றும் யில்லையே அம்மா'' என்று கூறவும் அந்தப் பெண், ''உன்னிடம் அன்பு கூடப் பொங்கி வராதா?'' என்று கேட்டாள். அப்போதுதான் சுவாமிகளுக்கு பிச்சை கேட்டு வந்தவள் வள்ளியம்மை யென்றும் தன்னைப் பொங்கி என்று அறிமுகப் படுத்திக் கொள்ளவே அவ்விதம் பேசியதாகவும் அறிந்து கொண்டார். ''அம்மா, உன்னை யாரு என்று தெரியாமல் ஏதேதோ பேசி விட்டேனே! என்னை மன்னித்து விடம்மா'' என்று கூறி, அப்பெண்ணின் கால்களைக் கண்ணீர் நனைக்க, அப்படியே விழுந்து கும்பிட்டார். சுவாமிகள் எழுந்து பார்த்த போது அந்தப் பெண் அங்கே இல்லை. எங்கோ மறைந்து விட்டாள்.

—தொடரும்.



ஜெய்ப்பூர் தமிழ்ச் சங்கத்தினர் தங்களுடைய முதல் ஆண்டு விழாவை சிறப்பாக அண்மையில் கொண்டாடினர். இந்த விழாவுக்கு ராஜஸ்தான் முதலமைச்சர் திரு. மோகன்லால் சுகாதியா பிரதம விருந்தாளியாக வந்திருந்தார். தமிழ்க் கலாசாரத்தைப் பாராட்டிப் பேசிய அவர், தமிழ் மக்களிடமிருந்து ராஜஸ்தான் மக்கள் பெருமளவு விஷயங்களைக் கற்றுக் கொள்ள வேண்டி யிருக்கிறது என்றும் குறிப்பிட்டார். சங்கத்தின் தலைவர் திரு வி. எஸ். தேசிகாச்சாரி எல்லோரையும் வரவேற்றார்.

போக வேண்டுமென்றால் எப்படி நம்பிப் போவது? காய்கறி விற்பவர்களிடம் சென்று காய்கறிகளுக்கு விலையைப் பேரம் பேசுவது எப்படி?

யாராவது பெண்கள் நல்ல உடைகள் அணிந்திருந்தாலோ, கோஷாவாக இருந்தாலோ போதும். சையாசானின் ஆட்களோ என்று சந்தேகப்பட்டார்கள்; வெளியில் சொல்லவோ அச்சம்.

சையாசானைப் பிடிக்கும் முயற்சியில் அரசாங்கம முடிவாக வெற்றி பெற்றது. அவருடைய காதலியின் இல்லத்தில், அந்தக் காதலியால் காட்டிக் கொடுக்கப்பட்டுக் கைதானாராம் சையாசான்!

இதுபோல சிலர் காதலியால் காட்டிக் கொடுக்கப்பட்டதாக நான் கேள்விப்பட்டதுண்டு. ஆனால் எனது வாழ்க்கையின் திருப்ப நேரத்தில், அன்றன்று நான் அறிந்த சேதிகளில் ஒன்றாகும் இது.

கடன் பத்திரம்!

சையாசான் பிடிபடுவதற்கு முன். இருந்த இடைக்காலம் எங்கள் நாடக மன்றத்திற்கு ஒரு சோதனைக் காலமாகவே இருந்தது. சையாசானின் போராட்டம் நீடித்தது போலவே எங்களுடைய சம்பளத் தேதியும் நீடித்தது. அதாவது சம்பளம் வரவில்லை. வேறு வழியற்ற நிலையில் கம்பெனி உரிமையாளரைச் சம்பளம் கேட்டோம். அவர் கையை விரித்தார். பர்மா வந்த புதிதில் நல்ல வசூல் ஆயிற்று. அதை ஊருக்கு அனுப்பி விட்டார் கம்பெனி உரிமையாளர் என்ற சந்தேகம் எங்களிடம் வலுத்தது.

சம்பளம் தர வேண்டும் என்று வற்புறுத்தினோம். அரிகிருஷ்ணப் பிள்ளை அவர்கள் சமரசம் செய்ததன் விளைவாக, இரண்டு மூன்று மாதச் சம்பளத்திற்குப் பதிலாக ஒன்றரை மாதச் சம்பளத்திற்குக் கடன் பத்திரம் எழுதித் தந்து விட்டுக் கம்பெனி உரிமையாளர் தமிழகத்திற்குத் திரும்பி விட்டார்.

''முதலாளியின் கையாளா?''

கம்பெனி உரிமையாளரின் உறவினரில் இப்ராஹீம் என்ற சிறு பையன் இருந்தான். இரண்டொரு வயது என்னை விடக் குறைந்தவன் அவன். நடிப்பதிலும் பாடுவதிலும் அவனுக்கு மிகுந்த ஆசை. நல்ல புகழ் பெற வேண்டுமென்ற தன் ஆர்வத்தை நிறைவேற்றிக் கொள்ள முடியாமற் போனதால் உள்ளம் வெடித்துப் போன நிலையில் இருந்தான் அவன்.

அவன் கம்பெனி உரிமையாளரின் உறவினன் என்ற காரணத்தால், அவன் மீது சிலருக்கு நம்பிக்கையில்லை. எங்களிடம் பேசிக் கொண்டிருந்து விட்டு அவன் போனதும், எங்களைக் கண்டிப்பார்கள். ''இங்கே என்ன பேசுகிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்வதற்காக அனுப்பப்பட்டிருக்கிறான்; முதலாளியின் கையாள்'' என்றெல்லாம் சொல்வார்கள். ஆனால் இப்ரஹீம் நிரபராதி.

கலையார்வத்தின் காரணமாக, அவன் சின்னப்பா போன்றவர்கள் பாடுவதைக் கேட்பதற்காகவே வருவான். தன்னுடைய உறவினரின் (முதலாளியின்) நிலையைச் சொல்லிக் கண்ணீர் வடித்தான். பிரிந்து செல்லும்போது சொன்னான், 'எப்படியாவது ஊரில் சந்திப்போம்' என்று.


இசையமைப்பாளர்

அவன் விருப்பப்படியே நாங்கள் இருவரும் மீண்டும் சந்தித்தோம். சென்னை வந்தவுடனேயே என்று எண்ணி விடாதீர்கள். 'மந்திரி குமாரி' படத்தில் நடிக்கப் போனபோது, நண்பர் **இப்ராஹீம் அவர்களைப்** பாடகராகச் சந்திக்க முடியாவிடினும், பாடகர்களுக்குப் புகழ் தேடித் தரும் பக்கவாத்தியக் காரர்களில் ஒருவராகச் சந்தித்தேன்.

பிறகு பல படங்களில் அவர் இசையமைப்பாளராகவும் பணியாற்றினார்.

அதை இப்போது குறிப்பிடுவதற்குக் காரணம் உண்டு. சையாசானின் ஆசை பல ஆண்டுகளுக்குப் பின் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளால் சட்டமாக்கப்பட்டது என்பதை எண்ணும்போது, ஒரு மனிதன் வாழ்வில் காணும் ஆசைக் கனவுகள் நியாய அடிப்படையில் இருக்குமாயின், அவை ஒரு காலத்தில் நடைபெற்றே தீருகின்றன என்ற நம்பிக்கை மேலும் வலுப் பெறுகிறது.

(தொடரும்)



வள்ளிமலையிலிருந்து அடிவாரத்திலுள்ள சண்முகா ஆலயத் தோற்றம்.

அருணாசல மகிமை

48

பொங்கிப் பாறையின் மீது குங்குமத்தில் மயிலும் வேலும் பாம்பும் வரையப்பட்டிருந்தன.

''சாமி இருந்த நாள்லேருந்து இப்படிப் படம் வரைந்துதான் கும்பிடறது வழக்கம். சில நாள் சாமியே பூஜையிலே வந்து கலந்துக்குவார். பொங்கிப் பூஜை ஆனப்புறம்தான் ஆச்ரமத்திலே எல்லாரும் சாப்பிடுவோம்'' என்றார் ஜெயவேல்தாஸ்.

''சாமி என்ன பூஜை செய்வார்?'' என்று கேட்டேன் நான்.

''அவர் பூஜை செய்து நாங்க பார்த்ததில்லே. திருப்புகழ்தான் அவருக்கு பூஜை, மந்திரம், தியானம், தபஸ் எல்லாம். மலையை விட்டுக் கீழே இறங்கிற போது பொங்கிப் பாறைகிட்டே வந்து கையைக் கூப்பி கும்பிட்டு விட்டுப் போவார். அவ்வளவுதான்'' என்று கூறிய தாஸ் எங்களை சச்சிதானந்த சுவாமிகள் சமாதிக் கோயில் இருக்கும் குகைக்குள்ளே அழைத்துச் சென்றார்.

எல்லோரும் பணிவாகக் குனிந்து, மிக்க மரியாதையாக அந்தக் குகைக்குள் நுழைந்தோம். திருப்புகழ் மாமந்திரம் எந்நேரமும் ஒலித்து, எதிரொலித்து, முருகானந்தத்தில் மூழ்கி, கருணைக் கடலாக விரிந்து, வையத்தை வாழ வைத்த வள்ளிமலை சுவாமிகளின் இதய குகைக்குள் நுழைவது போன்ற உணர்வு மேலோங்க, பய பக்தியுடன், வணங்கிய தலையுடன், கையால் உள்ளே சென்றோம்.

ஐம்பத்து நான்கு வருடங்களுக்கு முன்பு சச்சிதானந்த சுவாமிகள் மலையுச்சிக்கு ஏறி வந்த போது, அது சப்பாத்திக் காடாக இருந்தது. கல்லும் முள்ளும் புதரும் நிறைந்து, சிறுத்தையும், புலியும், பாம்பும், தேளும் நடமாடும் இடமாகக் காட்சி தந்தது. சுவாமிகள் வந்த பிறகு சிறுகச் சிறுக அந்தப் பகுதியைச்

பரணீதரன்

சீர் செய்து, பாதை அமைத்து, பக்தர்கள் வந்து போவதற்கேற்ற வசதிகளை செய்து வைத்தார்.

சுவாமிகள் மலைக்கு வந்த போது அந்தக் குகை ஒருவர் ஊர்ந்து செல்லும் அளவுக்குத்தான் இருந்தது. சில பக்தர்களின் உதவியுடன் மண்ணைத் தோண்டித் தோண்டி எடுத்து, சுவாமிகள் இதைப் பெரிய குகையாக்கினார்.

அங்கு மண்ணைத் தோண்டும்போது ஓர் அதிசயம் நடந்தது. பூமிக்கு அடியில் மூன்று எலும்புக் கூடுகள் தென்பட்டன. மூன்று மகான்கள், பத்மாசனத்தில் அமர்ந்து, நிட்டையில் ஆழ்ந்திருப்பது போலவே அவை காணப்பட்டன. அந்தத்தவயோகிகள் யாரோ? எத்தனை ஆண்டுகளுக்கு முன்பு அவர்கள் வாழ்ந்தார்களோ? அது முருகனுக்கே வெளிச்சம்.

சுவாமிகள் அந்த எலும்புகளை யெல்லாம் சேகரித்து, குகைக்கு வெளியே தனித் தனியே புதைத்து, அரசு, வேம்பு, வில்வ செடிகளை அவற்றின் மீது நட்டு வைத்து, அந்த ஜீவ சமாதிகளுக்குத் தினமும் பூஜை செய்து வந்தார். தற்போது ஓங்கி வளர்ந்திருக்கும் அம்மரங்களை சுற்றி மேடை கட்டப்பட்டிருக்கிறது. அந்த நிழலில் சற்று நேரம் அமர்ந்தாலே எல்லையற்ற மனச்சாந்தி ஏற்படுகிறது.

சுவாமிகள் ஆச்ரமத்தை சீர்ப்படுத்திக் கொண்டிருந்த போது தெய்வமும் அவருடன் ஒத்துழைத்ததற்கு எத்தனையோ சான்றுகள் உண்டு.

ஒரு நாள் நள்ளிரவில் சீடர்களெல்லாம் நித்திரையில் ஆழ்ந்திருந்த போது, வயோதிகர் ஒருவர், கையில் மண் வெட்டியுடன் சுவாமிகளிடம் வந்து பசிக்கு உணவு வேண்டும் என்று கேட்டார். அவரை யார் என்று வினவ, தன் பெயர் மண் வெட்டிப் புலவர் என்றும், அருகிலுள்ள சுனையைச் சீர்ப்படுத்தி, சுற்றுப் புறத்தைச் சுத்தமாக்கியுள்ளதாகவும் கூறினார். உடனே சுவாமிகள் மனம் இரங்கி சட்டியில் இருந்த களியை எடுத்து அவர் மண் வெட்டியில் வைக்க, அதை ருசித்துச் சாப்பிட்டு விட்டு அந்த வயோதிகர் போய் விட்டார்.

சற்றைக் கெல்லாம சீடர்களை எழுப்பி, நடந்த விவரத்தைக் கூறினார் சுவாமிகள். தாமாகவே வந்து உதவி செய்து விட்டுப் போன வயோதிகரைப் பற்றிய விவரங்களை அறிந்து கொள்ளும் ஆவலுடன் சீடர்கள் புறப்பட்டார்கள். அந்தக் கிழவர், கணேசகிரி பக்கம் போவதைக் கண்டு வேகமாக நடந்தார்கள். ஆனால், அடுத்தகணம் வயோதிகரின்தோற்றம் மறைந்து விட்டது.

ஏமாற்றத்துடன் திரும்பியசீடர்கள் சுனையின் அருகில் சென்று பார்த்தார்கள். அங்கு புல் பூண்டுகள் எல்லாம் அகற்றப்பட்டு நிலமெல்லாம் ஒழுங்காகக் கொத்தி விடப்பட்டிருப்பதைக் கண்டு அதிசயித்தார்கள். பல பேர் பல நாட்கள் பாடுபட்டு செய்து முடிக்க வேண்டிய அந்த வேலையை ஒரே நாளில் செய்து முடித்தவர், பிட்டுக்கு மண் சுமந்த பெருமானாகத்தான் இருக்க வேண்டும் என்று அவர்கள் நினைத்தார்கள்.

ஒரு சமயம் இந்தக் குகையில் அமர்ந்து சமாதி நிட்டை கூட வேண்டும் என்று எண்ணிய சுவாமிகள் உள்ளே சென்று, சீடர்களை அழைத்து, ஒரு பாறையைக் கொண்டு குகை வாயிலை அடைத்து விடும்படி கூறினார். ஏழு நாட்கள் கழித்துப் பாறையை அகற்றும்படியும் உத்தர விட்டார். சீடர்கள் முதலில் தயங்கினார்கள். சுவாமிகளின் உயிருக்கு ஏதேனும் ஆபத்து நேருமோ என்று அஞ்சினார்கள். ஆனால், சுவாமிகள் தைரிய மொழிகள் கூறவே, அவர்கள் குகைவாயிலைப் பாறையால் அடைத்து விட்டார்கள்.

திருப்புகழ் ஆச்ரமம்





குகைக்குள் போகும் வழி

மூனறு நாட்களுககுப் பிறகு திருப்புகழ் பாராயணத்திற்காக கோட்டை நத்தம் என்ற கிராமத்தைச் சேர்ந்த சண்முக ரெட்டியாரும், முருகேச வாத்தியாரும் ஆச்ரமத்திற்கு வந்த போது, சுவாமிகள் குகைக்குள் அடைக்கப்பட்டிருப்பதைக்கண்டு திடுக்கிட்டு, சீடர்களைக் கடிந்து கொண்டார்கள். சுவாமியைப் பட்டினி போட்டுக் கொன்ற பாவத்திற்கும், போலீசாரின் தண்டனைக்கும் ஆளாக நேரிடும் என்று எடுத்துச் சொல்லி, கடப்பாரையால் குகை வாயிலை அடைத்திருந்த பாறையை அப்புறப்படுத்தி விட்டு, உள்ளே வேகமாக நுழைந்தார்கள்.

சுவாமிகள் பேச்சு மூச்சற்று, நிர்விகல்ப சமாதி நிட்டையில் ஆழ்ந்திருந்தார்கள். வெகு நேரம் கையைத் தட்டி அழைத்த பிறகே, 'தண்டபாணி' என்ற திருநாமத்தை உச்சரித்துக்கொண்டே சுவாமிகள் கண்திறந்து பார்த்தார். குகை திறக்கப்பட்டிருப்பதையும் சுற்றிலும் சீடர்கள் நின்று கொண்டிருப்பதையும் கண்டு தமது நிட்டையை கலைத்ததற்காக அவர்களைக் கடிந்து கொண்டார். பிறகு அவர்கள் தங்கள் செய்கைக்காக வருந்தி, விளக்கம் அளித்த பின்னரே சுவாமிகள் சமாதான மடைந்தார்.

இந்தக் குகையில்தான் சுவாமிகள் அடியார்களுடன் திருப்புகழ் பாராயணம் செய்வது வழக்கம்.

ஆச்ரமம் ஏற்பட்ட புதிதில் சுவாமிகளைக் கவனித்துக் கொள்வதற்கோ, அவருடன் சேர்ந்து திருப்புகழ் பாடுவதற்கோ ஒருவருமில்லை. அந்த இடத்திற்கு வருவதற்கே கிராமவாசிகள் பயந்தனர். அப்போதெல்லாம் சுவாமிகள் சப்பாத்திப் பழத்தை சாப்பிட்டே வாழ்ந்து வந்தார். பின்னர், கிராம மக்கள் அங்கு ஒரு சட்டியை வைத்து, அதில் கூழோ, கஞ்சியோ, களியோ வைத்து விட்டுப் போகும் பழக்கத்தைத் தொடங்கினார்கள். மைசூர் அரண்மனையில் அறுசுவை விருந்துண்டு பழக்கப்பட்டவர், அந்தப் பழங் கஞ்சியையும் அதே ஆனந்தத்தோடு பருகினார். அந்தக் கஞ்சியை யாசித்து வந்தவர்களுக்கும் அன்புடன் அளித்து வந்தார். அத்துடன், தம்மை நாடி வந்தவர்களுக்கெல்லாம் திருப்புகழ் அமுதத்தை வாரி வாரி வழங்கினார் அந்த வள்ளல்.

சுவாமிகளுக்கு அக்கம் பக்கத்திலுள்ள கிராமங்களிலிருந்து நிறையச் சீடர்கள் கிடைத்து விட்டார்கள். பகலில் வயலிலும் தோட்டத்திலும், கழனியிலும் வேலை செய்து விட்டுப் பொழுது சாய்ந்ததும் அவர்கள் மலை ஏறி வந்து திருப்புகழ் பாராயணத்தில் உற்சாகமாகக் கலந்துகொள்வார்கள். எந்த ஜாதியானாலும், எந்த மதத்தைச் சேர்ந்தவரா யிருந்தாலும், எந்த வித வேற்றுமையும் பாராட்டாமல் தாம் பெற்ற இன்பத்தை எல்லோருடனும் பகிர்ந்து கொண்டார். சுவாமிகள் சம்சாரத்தில் உழன்ற பாமர மக்களை சன்மார்க்கத்தில் அழைத்துச் சென்றார்.

"இந்தக் குகையில்தான் முருகன், வள்ளியைத் திருமணம் செய்து கொண்டதாக சாமி சொல்லுவாரு. இது கூட முன்னே குகையா யில்லையாம். முருகன்தான் ஒரு பாறையாலே இந்த இடத்திலே ஒரு கூரை போட்டு ரகசியமா கல்யாணம் செய்துக்கிட்டாரு" என்று கூறினார் தாஸ்.

சுவாமிகளின் சமாதி



இதைக் கேட்டு சேஷாத்ரி ஒரு மாதிரி சிரித்தார்! அதன் பெருமை புரிந்து கொண்டு விட்டார் தாஸ்.

''உண்மைதானுங்க. அதோ தெரியுதே, அந்தப் பாறையைப் பாருங்க. முருகன் வேலாயுதத்தால் அதை இரண்டாகப் பிளந்து ஒரு பாகத்தை எடுத்து அப்படியே இங்கே வீசிப் போட்டுட்டாரு. அந்தப் பாறையை நல்லாக் கவனிச்சுப் பாருங்க. அதுலே பிளந்து எடுத்ததுதான் இந்தக் கூரைன்னு நீங்களே ஒப்புக்குவீங்க. எனக்கு எப்படி இந்த விஷயமெல்லாம் தெரியும்? எல்லாம் சாமி சொன்னதுதான்'' என்று ஜெயவேல் தாஸ் வெள்ளை உள்ளத்தோடு மீண்டும் கூறினர். அவர் கூறியதைப் போலவே இரு பாறைகளையும் சற்று நேரம் உற்றுப் பார்த்தோம். அருகிலிருக்கும் கன்னிக் குன்றைச் சேர்ந்த ஒரு பாறையின் பாதி தான் இந்த குகைக்குக் கூரையாக அமைந்திருக்க வேண்டும் என்று தோன்றியது. இயற்கையின் இத்தகைய அதிசயங்களுக் கெல்லாம் கூறப்படும் காரணங்களை நம்புவதும் நம்பாததும் அவரவர் மனப் பக்குவத்தைப் பொருத்த விஷயம்.

அந்தக் குகை ஒரு குடிசையைப் போலவே இருக்கிறது. கையை மேலே உயர்த்தினல் கூரையைத் தொடலாம். உள்ளே சுற்றிலும் சிறு மேடை கட்டி வைத்திருக்கிறார்கள். அதனுள் சுமார் எண்பது பேர் நெருக்கமாக உட்கார்ந்து கொள்ளலாம்.

அங்கு சில நாட்கள் விடிய விடியத் திருப்புகழ் பாராயணம் நடைபெறுவது வழக்கம். பாராயணம் முடியும் வரை விபூதிச் சட்டியில் கற்பூரம் எரிந்து கொண்டே இருக்கும். சாம்பிராணி புகை குகையைச் சூழ்ந்திருக்கும். ஊதுவத்தியின் நறுமணம் கமழ்ந்து கொண்டிருக்கும். பாராயணம் முடிந்ததும், சுவாமிகள் எல்லோருக்கும் திருநீறு கொடுப்பார். பாராயணத்தின் போது பக்தர்கள் இறுதிவரை அமர்ந்திருந்து, சுவாமிகளிடமிருந்து திருநீறு பெறுவதையே பெரும் பாக்கியமாகக் கருதினர்கள். தொடக்கத்திலிருந்து, சுவாமிகள் மலையை விட்டு இறுதியாக இறங்கிய 1948-ம் ஆண்டு வரை அந்த விபூதிச் சட்டி உடையாமல் அங்கேயே இருந்தது.

1950-ம் ஆண்டு நவம்பரில் சென்னையில் சுவாமிகள் மகாசமாதி யடைந்த



வெளியே வரும் வழி

போது சீடர்கள் அவர் திருமேனியை உயிருக்கு உயிராய் அவர் நேசித்து வந்த வள்ளிமலைக்குக் கொண்டு வந்து திருப்புகழின் தேனிசையால் புனிதம் அடைந்திருந்த குகையிலேயே சமாதிக் கோயில் அமைத்தனர். ஆண்டு தோறும் இங்கு குருபூஜையும் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

சமாதியின் மீது ஒரு சிவலிங்கமும் தட்சிணு மூர்த்தியின் சிறிய விக்ரகமும் இருக்கின்றன. அந்தச் சிலையில் ஒரு காளைக் கன்றுக்குட்டிந தலையை நீட்டிக் கொண்டிருப்பது வெகு அழகாயிருக்கிறது.

எதிரிலிருக்கும் பிறையில் கடவுளர் படங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. வள்ளிமலை சுவாமிகளின் படமும், வேறு சில சாதுக்களின் படங்களும் இருக்கின்றன. ஒரு தூங்கா விளக்கும் எரிந்து கொண்டிருக்கிறது.

''இவை யெல்லாம் சுவாமிகள் வைத்துப் பூஜை செய்தப் படங்களா?'' என்று கேட்டேன் நான்.

''இல்லே. இல்லே. அவருக்கப்புறம் தான் வந்தது. சாமி இருக்கிறபோது அருணகிரிநாதரின் பெரிய படம்

அருணகிரியார் குகை



ஒன்றுதான் இருக்கும். அதைத் தவிர வெள்ளை எருக்கன் வேர்கள் ரெண்டு இருக்கும்'' என்றார் தாஸ.

''அவையெல்லாம் இப்போ எங்கே இருக்கின்றன?''

''அருணகிரிநாதர் படம் மெடராஸ் கோபாலபுரத்தி லிருக்கும் கலயாண ராமய்யர் வீட்டில் இருக்குன்னு கேள்வி. அவர்தான் சாமியின் வாழ்க் கையைப் பற்றி விரிவா 'வள்ளிமலை வள்ளல்'னு ஒரு புஸ்தகம் எழுதியிருக் கார். இங்கேயிருந்த வெள்ளெருக்கன் வேர் எங்கே போச்சோ தெரியா துங்க...ஒரு அடி ஒசரத்தில் ரெண்டு வேர் இருக்கும். அதோட நிழல சுவத்திலே விழும. அதைக் காட்டி, 'வள்ளியம்மா கும்பிட்டுக் கிட் டிருக்கா, பாருடா'ன்னு சாமி சொல்லுவார். பார்த்தா அப்படியே தான் இருக்கும்'' என்று கூறிவிட்டு பழைய நாட்களின் நினைவுகளில் மூழ்கியபடி சற்று நேரம் பேசாமல நின்றிருந்தார் தாஸ். பின்னர் சுவாமிகள் சமாதியை வலம் வந்து, கீழே விழுந்து வணங்கி விட்டு தென் புறமுள்ள சிறிய வழியாகக் குனிந்து வெளியில் வந்தோம். நல்ல வேளை! கடைசியா வந்த பாபுவின் தலை தப்பியது! வெளியே வந்ததும், நிமிர்வதற்காக சற்று தலையைத் தூக்கினார். அதற்குள் மகாதேவன் ''தலையைத் தூக்காதீங்க, கல்லு இடிக்கும்'' என்று எச்சரித்து அவ ரைக் காப்பாற்றி விட்டார். கல் கூரை வாசற்படிக்கு மேல் சற்று நீட் டிக் கொண்டிருப்பது ஆபத்தாக இருக் கிறது. புதிதாக வருபவர்கள் அஜாக் கிரதையாக இருந்து விட்டால் விபரீத மாகி விடும். ஆச்ரமத்தைச் சேர்ந் தவர்கள் இதில் கவனம் செலுத்தி ஆவன செய்தால் அவர்களுக்குக் கோடிப் புண்ணியம் உண்டு.

அடுத்து ஜெயவேல்தாஸ் எங்களை 'சூரியன் காணா சுனை'க்கு அழைத்துச் சென்றார். தேனும் தினை மாவும் தின்று விட்டு வள்ளியும் முருகனும் இந்த நீரைத்தான பருகினார்களாம். கீழுள்ள குகைக்குப் பின்னால் ஒரு பாறையின் மீது ஏறி அங்கு போக வேண்டும். ஏறும்போது அந்தப் பாறையில் சில காலடிகளைக் காட்டி னார் தாஸ். களி மண்ணில் காலடி பதிந் தால் எப்படி யிருக்குமோ அப்படியே இருந்தது.

''இதோ பாருங்க. இது முருகனின் பாதம். பார்த்தீங்களா, இதுதான் கட்டைவிரல். ஒண்ணு ரெண்டு, மூணு நாலு, அஞ்சுவிரல்கள் அப்படியே இருக்கு. இந்தப் பாதம் சின்னதா இரு க்கு பார்த்தீங்களா—இது வள்ளியின் பாதம். முருகனும் வள்ளியும் விளையா டிக்கிட்டே போன அடையாளங்கள். இதையெல்லாம் சாமி காட்டிக் கதை சொல்லுவார். இன்னும் நிறையப் பாதங்கள் இருந்தன. இந்தப் படிக் கட்டு வெட்டினதுலே மறைஞ்சு போச்சு .. நான் வெட்டாதீங்கன் னேன். கேட்கலே'' என்று குறைப் பட்டுக் கொண்டார் தாஸ. நாங்கள் ஆச்சரியத்துடன் பாதங்களை ஆராய்ந் தோம்.

''இதோ பாருங்க. குதிகால் அடை யாளம். வள்ளி திரும்பி வர போது குதிகாலை அழுத்திக்கிட்டு வந்திருக்கா. இது கூட சாமி சொன்னதுதான்'' என்று உற்சாகத்துடன் காட்டினார் தாஸ்.


கணேசகிரி



மேலே ஏறிச் சென்றோம். ஒரு பெரிய பாறையின் அடியில் சுனை இருக்கிறது. அதன் மீது சூரிய வெளிச்சம் படுவதே கிடையாது. இப்போது பாறை யைச் சற்று வெட்டி விட்டிருப்ப தால் தண்ணீர் கண்ணுக்குத் தெரிகிறது.

அங்கு ஒரு சிறு குகை இருக் கிறது. சென்னையில் சுவாமிக ளிடமிருந்து வெற்றிலைப் பெட்டி யைப் பரிசாகப் பெற்றுக் கொண்ட தெய்வச் சிறுமி, அந் தப் பெட்டியை இந்தக் குகை யில் தான் கொண்டு வந்து

வைத்ததாகக் கூறப் படுகிறது. அங்கு ஒரு சமயம் சுவாமிகள் ஏழு நாட்கள் சமாதி நிட்டையில் ஆழ்ந் திருந்தார். அப்போ தும் சீடர்கள் வந்து அதைக் கலைத்து விட்டார்கள்.



சூரியன் காணு சுனை

கீழிறங்கி வந்து மேற்கே சற்று உயரத்திலிருக்கும் அருணகிரிநாதர் குகைக்குச் சென்றோம். அது தற்போது அடைக்கப் பட்டிருக்கிறது. அந்த குகையில் சுவாமிகள் பன்னிரண்டு நாட்கள் அன்ன ஆகாரம் இன்றி நிர்விகல்ப சமாதியில் ஆழ்ந் திருந்தார். பன்னிரெண்டாம் நாள் திருமதி சீதாலட்சுமி என்ற திருப்புகழ் அடியார் பசும் வெண்ணெயைக் கொண்டு வந்து சுவாமிகள் தலையில் தேய்க்க, அது கொதித்து உருகி நெய்யாயிற்று. பின்னர் சுனையி லிருந்து குடம் குடமாக நீரைக் கொண்டு வந்து அபிஷேகம் செய்வித்ததும் சுவாமிகள் நிட்டை கலைந்தார்.

அடுத்து நாங்கள் கணேச கிரியை (உண்மையான கணேச கிரியைத் தான்) காணச் சென்றோம். யானை முன்னங்காலை மடித்து அமர்ந்திருப் பது போல் அந்தப் பாறை காட்சி தருகிறது. அதை ஒட்டினாற் போல் நிறைய மரங்கள் வளர்ந்து விட்ட தால் அந்த 'யானை'யைச் சரிவர படம் பிடிக்க முடியவில்லையே என்று பாபு குறைப்பட்டுக் கொண்டார். கணேசகிரிக்குக் கீழே இரண்டு விநாயகர் சிலைகள் இருக்கின்றன.

வள்ளியைப் பயமுறுத்தி, தம்பியின் கையில் பிடித்துக் கொடுப்பதற்காக அண்ணன் யானை உருவம் தாங்கி வந்து லீலைகள் புரிந்த இடம் இது தான் என்று கூறுகிறார்கள்.

சுவாமிகள் ஆச்ரமத்தில் இருந்த போது கணேசகிரியின் அடிவாரத்தில் அனேக பக்தர்கள் ஒரு பேரொளி யைப் பார்ப்பது உண்டாம். அது அங்கு வாழும் நல்லபாம்புகளின் முடி யில் இருக்கும் மாணிக்க, ரத்தினக் கற்களிலிருந்து வீசும் ஒளியென்றும் கூறுவார்கள்.

கணேச கிரியைத் தரிசித்துவிட்டு, வரும் வழியில் ஒரு மாட்டின் சிலை வைக்கப்பட்டிருந்ததைக் கண்டு, "இது என்ன?" என்று விசாரித்தேன்.

"இது 'சிங்காரி' என்ற பசுவின் சமாதி. அதை சாமி ரொம்ப அருமையா வளர்த்தாரு" என்றார் தாஸ்.

சுவாமிகளின் பக்தரான ஏகாம்பர முதலியார் ஆச்ரமத்திற்கு அன்புடன் அளித்த பசு அது. பழனிக் கோயிலில் 'சிங்கார மயில் ரூப வாகன நமோ நம' என்ற திருப்புகழ் வரியை முதன் முதலாகக் கேட்டு மனத்தைப் பறி கொடுத்த சுவாமிகள், அந்நிகழ்ச்சி யின் நினைவாக அப் பசுவிற்கு 'சிங் காரி' என்ற பெயரிட்டு அழைத்தார்.

ஏகாம்பர முதலியார் தம் குடும்பத் தோடு ஒரு சமயம் பழநிக்குச் சென்றி ருந்த போது, புதிதாகத் திருமணமாகி யிருந்த அவருடைய மகனும் புது நாட் டுப் பெண்ணும் குளத்தில் தவறி விழுந்து விட்டார்கள். கரையிலிருந் தோர் கதறியழுது கொண்டிருந்த போது, தெய்வச் செயலாக யாரோ ஒருவர் திடீரென்று அங்கு வந்து அவர்களைக் காப்பாற்றினார். கருணை வள்ளலான வள்ளிமலை சுவாமிகளின் யோக மகிமைக்கு அடையாளமான அந்த நிகழ்ச்சியைப் படிக்கும் போது மெய்சிலிர்க்கிறது.

—தொடரும்.


இருமலே, போ!




அவள் சற்று முன்புதான் இருமலால் திணறிக் கொண்டிருந்தாள்...
பிறகு க்ளைகோடின் சாப்பிட்டாள். இப்பொழுது அவளைப் பாருங்கள்!
சோர்வைத்தரும் இருமலிலிருந்து விடுபட்டு எவ்வளவு
நிம்மதியாகத் தூங்குகிறாள்!

பூரண இருமல் கட்டுப்பாட்டுக்கு
க்ளைகோடினுக்கு இணை எதுவுமில்லை!

இருமலிலிருந்து பூரணமாக நிவாரணம் தர மருத்துவரீதியாக அங்கீகரிக்கப்பட்ட க்ளைகோடின் ஃபார்முலா செயல்புரிவது இப்படித்தான்:



- மூளையில் — இருமல் கேந்திரத்தைக் கட்டுப்படுத்துகிறது.
- தொண்டையில் — சளி அடைப்பை அகற்றி எரிச்சலைத் சமனப்படுத்துகிறது.
- மார்பில் — இறுகிய தசைநார்களுக்கு இதமளித்து சுலபமாக சுவாசிக்க உதவுகிறது.
- நுரையீரல்களில் — அடைத்துக் கொண்டிருக்கும் கோழையைத் தளர்த்தி சளியை வெளியேற்றுகிறது.



க்ளைகோடின்

டெர்ப் வசாகா

இருமல்களுக்கு,
மிக அதிகமாக
விற்பனையாகும்
நம்பகமான
வீட்டு நிவாரணி

everest/599-i/ACW tm

அரங்கிலே கூடியிருந்த மக்கள் 'கொல்'லெனச் சிரித்தார்கள்.

மரத்திற்குப் பின்னால் நிற்கவேண்டிய வேடன், மரத்திற்கு முன்னால் நின்று கொண்டிருந்தார். மரமும் இருந்தது; வேடனும் இருந்தார்!

இதை எதிர்பாராத வள்ளியின் அண்ணன்மார்களும் மேடைக்கு வந்து விட்டார்கள்.

வள்ளி விழிக்கிறாள். வேடர்கள் விழிக்கிறார்கள். வேடனை வேலன் வேங்கை மரத்தையும் பின்னால் நிறுத்தி வைத்துக் கொண்டு விழித்தார்!

அந்தக் காட்சியைச் சமாளித்துக் கொண்டு நாடகத்தை நடத்துவது பெரும்பாடாகி விட்டது.

"கணப் பொழுதிலே கதையே மாறிப் போச்சே!" என்று விழுந்து விழுந்து சிரித்தார்கள் மக்கள்.

கடைசியில் வேடனைக் காப்பாற்றித் தீர வேண்டிய பொறுப்பு ஸ்டேஜ் மானேஜரின் தலையில் வீழ்ந்தது.

அடித்தார் மணியை! படுதா விழுந்தது; வேடன் காப்பாற்றப்பட்டார்!

மறுபடி படுதா தூக்கப் பட்ட போது வேங்கை மரம் மட்டும் இருந்தது. வள்ளியின் சகோதரர்களும் தந்தையும் போன பின், வேடன் தோன்றினார்; பாடினார்!

வேடனின் சாதுரியம்!

ஆனால் வேடிக்கைக்காக, **வள்ளி** வேடம் போட்ட கோமளம் என்பவர் கேள்வி கேட்டார்:

வள்ளி:-ஓ! வேடா! என் சகோதரர்கள் வந்தபோது மரத்திற்கு முன்னால் நின்று கொண்டிருந்தாயே! பிறகு எங்கே போனாய்?

வேடன்:- பெண்ணே! என்னைச் சாமானிய மனிதன் என்று எண்ணி விட்டாயா? என்னை யார் எப்போது நினைத்துக் கொண்டிருக்கிறார்களோ, அவர்கள் கண்ணுக்குத் தெரியும் விதத்தில் எப்போதும் காட்சி தந்துகொண்டிருப்பேன். நீ என்னையே நினைத்துக் கொண்டிருப்பாய் சதா காலமும். அதனால்தான் உன் கண்களுக்கு மட்டும் தெரிந்திருக்கிறேன். நான் மரத்திற்கு முன்னால் நின்றது உன் சகோதரர்களின் கண்களுக்குத் தெரியாது! (மக்களின் கை தட்டல்)



அடுத்து வரும் இதழ்களில்....

- பெரியார் தி. வெ. ரா?
- மன்றம் மணக்கும் தேவர்
- சர்ச்சிலை மயக்கிய சுருட்டு
- தானே தோன்றிய பெருமாள்
- குணம் தரும் குணசேகரம்
- விரிப்புக்குச் சுருக்கமில்லை!
- திருச்சி மண்ணில் தேடியெடுத்த முத்துக்கள்
- வாலிகண்டாரா? வழிகண்டாரா?
- ஒளி தரும் தொழில்
- இராமர் தேடிய சீதை
- என்ஜின் நகரம்
- 'ஸிம்கோ'
- 'வின்செண்ட்ஸ்'
- திருச்சி தந்த விஞ்ஞான மேதை

மற்றும் பல சிறப்பான செய்திகள்.

அட்டையில் :

திருச்சி மலைக் 'கோட்டைக்கு முன்னால் சீதாலட்சுமி ராமசாமி கல்லூரியின் மாணவி செல்வி கீதா.


வண்ணப்படம்: **ஏ. சுந்தரம்.**



இவ்வாறு சாமர்த்தியமாகப் பேசித் தப்பித்துக் கொண்டார்.

இதிலிருந்து என் மனத்தில் ஓர் எண்ணம் தோன்றியது. ஒவ்வொரு நடிகனும் எந்தச் சமயத்திலும் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டிய அளவுக்குப் பேசும் திறமையும், நடிப்புத் திறமையும் பெற்றவனாக இருக்க வேண்டும் என்பதுதான் அது!

(தொடரும்.)



திருத்தணித் திருப்படித்

அருணாசல மகிமை

49

ஏகாம்பர முதலியார் தன் மகனுக்குத் திருமணமானதும், புது மணத் தம்பதியோடு வள்ளி மலைக்கு வருவதாக சுவாமிகளிடம் கூறியிருந்தார். ஆனால், ஏதோ ஒரு தவிர்க்க முடியாத காரணத்தினால் அவர் அங்கு போக முடியவில்லை. அதற்குப் பதிலாக, குடும்பத்தோடு அவர் பழநிக்குச் சென்றார். பழநியாண்டவனைத் தரிசிக்கச் செல்லும் முன் அனைவரும் சரவணப் பொய்கையில் நீராடச் சென்றனர்.

குளத்தில் குளித்துப் பழக்கமில்லாத முதலியாரின் மகன் கால் தவறி விழுந்து, கரையேற முடியாமல் தத்தளித்தான். கணவனின் நிலை கண்டு பதறிப் போன புது நாட்டுப் பெண் அவரைக் காப்பாற்ற வேண்டும் என்ற ஒரே நோக்கத்தில், சற்றும் யோசிக்காமல் தானும் நீரில் குதித்து விட்டாள். கணவனும் மனைவியும் உயிருக்காகப் போராடிக் கொண்டிருப்பதைப் பார்த்த மற்றோர் இளைஞரும் நீரில் பாய்ந்தார். புது மணத் தம்பதியின் உயிரைக் காக்கச் சென்றவரும் தண்ணீரில் மூழ்கினார். உயிருக்காக மன்றாடினார்.

குளக்கரையில் நின்றிருந்த பெற்றோரும் பிறரும் உதவி கோரி கூக்குரலிட்டனர். ஏகாம்பர முதலியார், ''பழநியாண்டவா, கந்தா, வேலா, சச்சிதானந்த குருவே, என் செல்வங்களைக் காப்பாற்றுங்களேன்?'' என்று துயரம் தாங்க மாட்டாமல் கண்ணீருக்கிடையே கதறியழுதார்.

பரணீதரன்



திருவிழாவில் முருக பக்தர்கள்

கண்ணுக்கெதிரில் கண்ணின் மணிகளைக் காலன் கவர்ந்து செல்லும் போதுதெய்வத்தினிடம்முறையிடுவது ஒன்று தானே வழி!

அப்போது யாரும் எதிர்பாராத வகையில் ஓர் அதிசயம் நிகழ்ந்தது. எங்கிருந்தோ திடீரென்று ஓர் ஆசாமி அங்கு தோன்றினார். அவர் சட்டென்று குளத்தில் ஒரே பாய்ச்சலில் பாய்ந்து, நீரில் மூழ்கி எமனுடன் போராடிக் கொண்டிருந்த மூவரையும் எப்படியோ காப்பாற்றி, கரையில் கொண்டு சேர்த்து விட்டுப் போய் விட்டார். அவர் யாரென்று ஒருவருக்குமே தெரியாது.

அதே நேரத்தில் வள்ளி மலை ஆச்ரமத்தில் சுவாமிகள் தம் சீடர்களுடன் அமர்ந்து உரையாடிக் கொண்டிருந்தார். திடீரென்று உரத்த குரலில், "இது தான் பழநி, இதையே பழநி என்று நினைத்துக் கொள்ளுங்கள். நாம் பழநியில் தான் இருக்கிறோம்" என்று சுவாமிகள் ஆவேசம் வந்தவர் போல் எழுந்து, திருப்புகழ் புத்தகத்தை கையில் எடுக்கச் சொல்லுகிறார்.

அங்கிருந்தவர்களுக்கு அப்போது ஒன்றுமே விளங்கவில்லை. சென்னை திரும்பிய பிறகே அவர்களுக்கு உண்மை தெரிந்தது. ஏகாம்பர முதலியாரிடமிருந்து பழநியில் நடந்த அற்புதத்தை அறிந்த பிறகே அவர்களுக்கு எல்லாம் புரிந்தது. சுவாமிகள் வள்ளிமலையில் பழநியின் பெயரைக் கூறிக்கொண்டுதிடீரென்று எழுந்த நேரமும், பழநியில் ஒரு பெரியவர் நீரில் மூழ்கி, மடிய இருந்தவர்களைக் காப்பாற்றிய நேரமும் விநாடி மாறாமல் ஒத்திருந்ததை அதிசயத்தோடு அறிந்து, அந்த அற்புதத்தை நிகழ்த்தியவர் திருப்புகழ் சித்தரான வள்ளிமலை சுவாமிகளாகத்தான் இருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தார்கள்.

இதைப் போன்று பல அற்புதங்களை நிகழ்த்தியிருக்கிறார் சுவாமிகள். ஒரே சமயத்தில் வெவ்வேறு இடங்களில் காட்சி யளித்திருக்கிறார் அவர். ஒரு சமயம் வள்ளிமலைக் குகையில் சீடர்கள் பாராயணம் செய்து கொண்டிருந்த போது, சென்னைக்குச்



சுவாமிகளின் நூற்றாண்டு ஜயந்தி தினத்தன்று வள்ளிமலை சண்முகநாதர் ஆலயத்தின் முன் திருப்புகழ் இசை நடைபெறுகிறது.

சென்றிருந்த சுவாமிகள் கையில் கமண்டலத்துடன் உள்ளே நுழைந்தார். 'சுவாமிகள் வந்து விட்டார்' என்று அனைவரும் மகிழ்ச்சியுற்றிருந்த போது, அவர் திரும்பி, கணேச கிரியை நோக்கி நடந்தார். "சாமீ... சாமீ" என்று அழைத்துக் கொண்டே சீடர்கள் பின்னே சென்றனர். சற்றைக் கெல்லாம் சுவாமிகள் எங்கோ மறைந்துவிட்டார்!

உண்மையில் சுவாமிகள் அன்று சென்னையில்தான் இருந்திருக்கிறார். மூன்று நாட்கள் கழித்தே வள்ளிமலை வந்தார். இதைப் போல் எத்தனையோ லீலைகள்!

வள்ளிமலைக்கு வந்த பிறகே சுவாமிகளுக்கு இசை ஞானம் ஏற்பட்டது. அதற்கு முன்பு தன்னிஷ்டத்திற்கு திருப்புகழைப் பாடிக் கொண்டிருப்பார் அவர். வள்ளிமலையில் இரவு நேரங்களில் தேவகானம் கேட்குமாம். தேவகணங்கள் வானுலகிலிருந்து கீழிறங்கி வந்து, இசைமாரி பொழிந்து, பொங்கித் தாயை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்துவார்களாம். அதை தினமும் உற்றுக் கேட்ட சுவாமிகளுக்கு மெல்ல மெல்ல இசையில் லயிப்பு ஏற்பட்டது. ராக லட்சணங்கள் மனத்தில் பதிந்தன. லய வேறுபாடுகள் உணர்வோடு கலந்தன. அவரையுமறியாமல் சங்கீத தேவதை அவரை ஆட் கொண்டாள். கம்பீரமான சாரீரத்தில் ராக, தாளங்கள் என்ற சுவை கூட்டி, 'சின்னமாம் ஏகதாரையைத் திருக் கையிலேந்தி' திருப்புகழ் அமிர்தத்தை வாரி வாரி வழங்க யாத்திரை புறப்பட்டார்.

வள்ளிமலையிலிருந்து அடிக்கடி சென்னைக்கு வந்துபோன சுவாமிகள், இங்கு சிறுகச் சிறுக பல திருப்புகழ் சபைகளையும் சங்கங்களையும் நிறுவினார். முருக பக்தி தழைத்தது. அடியார்த் திருக்கூட்டம் வளர்ந்தது.

எழுத்து வாசனையே யற்ற கிராம மக்களை சொல்லழகும் ஓசை நயமும் மிளிரும் திருப்புகழை சந்தம் தவறாமல் பாடும்படி பழக்கினார் சுவாமிகள். தமது யோக சக்தியாலும் தவ வலிமையாலும் எத்தனையோ பக்தர்களை இசை வல்லுனர்களாக மாற்றியிருக்கிறார் அவர்.

சென்னையில் கந்தசாமி பிள்ளை என்பவர் சுவாமிகளின் முக்கிய சீடர்களில் ஒருவராயிருந்தார். ஆண்டு தோறும் திருவண்ணாமலைக்கு குடை எடுத்துச் செல்லும் குழுவுக்குத் தலைமை தாங்கி தேவாரம் ஓதிச் செல்வார் இவர். இவர் இனிமையாக தேவாரம் பாடுவதைக் கேட்ட சுவாமிகள் இவரை தம் சீடராக்கிக் கொண்டு திருப்புகழ் கற்றுக் கொடுத்தார். பின்னர், திருப்புகழ் பாராயணங்களின் போதும் பிரசங்கங்களின் போதும் இவரும் மீனாட்சி என்றழைக்கப்படும் மாணிக்க முதலியாரும் சுவாமிகளுடன் சேர்ந்து பாடுவது வழக்கம்.

ஒரு நாள் கந்தசாமி பிள்ளை ஒரு பிடிலை வைத்துக் கொண்டு, 'சரிகம' என்ற சரளி வரிசையைத் தட்டுத் தடுமாறிப் பழகிக் கொண்டிருந்தார். அப்போது அங்கு வந்த சுவாமிகள், "ஏதாவது நல்ல ராகம் வாசி, கேட்போம்" என்றார். பிள்ளையவர்களுக்கு தூக்கி வாரிப் போட்டது. "சுவாமி, எனக்கு சரளி வரிசையே இன்னும் சரியாக வரவில்லை. அதற்குள் ராகம் வாசிக்கச் சொல்கிறீர்களே, எப்படி முடியும்" என்று பரிதாபமாகக் கேட்டார். "எல்லாம் முடியும், வாசி" என்று அதட்டினார் சுவாமிகள். குருநாதனை நினைத்துக் கொண்டு உடனே பிடில் வாசிக்கத் தொடங்கினார் பிள்ளை. அவரையுமறியாமல் பல ராகங்களை எளிதாக வாசித்தார். சுவாமிகள் ஆனந்தப்பட்டார். அன்று முதல் எந்த ராகத்தையும் விரிவாகவும் தெளிவாகவும் ஆலாபனம் செய்யும் ஆற்றல் பெற்றார் கந்தசாமி பிள்ளை.

கந்தசாமி பிள்ளையவர்களுக்கு வெகு காலம் பிள்ளைப் பேறு இல்லாமல் இருந்தது. ஜோசியர்களும் நம்பிக்கை யளிக்கவில்லை. ஆனால், சுவாமிகளின் நல்லாசியால் அவரது மனைவிக்கு இருந்த குறை நீங்கப் பெற்று, அவர்களுக்கு சந்தான பாக்கியம் ஏற்பட்டது.

கந்தசாமி பிள்ளையின் குடும்பத்தார் சென்னைக் கடுத்துள்ள 'பாடி' என்ற தலத்தில் ஆண்டுதோறும் திருஞானசம்பந்தரின் திருநட்சத்திரத்தைக் கோலாகலமாகக் கொண்டாடுவது வழக்கம். அப்போது பெரிய அளவில் அன்னதானமும் நடைபெறும். ஒரு விழாவின்போது ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சமையற்காரர்கள் வந்து சேரவில்லை. அன்னதானம் நின்றுவிடுமோ என்று ஏங்கித் தவித்துக் கொண்டிருந்த கந்தசாமியின் முன் வள்ளிமலை சுவாமிகள் காட்சி தந்தார். என்ன அதிசயம்! சுவாமிகள் விழாவுக்கு வருவார் என்று பிள்ளையவர்கள் கனவில் கூட நினைக்கவில்லை. நிலைமையையறிந்த சுவாமிகள் அடுத்த கணம் சமையல் பணியில் முழுமூச்சுடன் இறங்கி, வந்திருந்த அத்தனை பேருக்கும் அறுசுவையுடன் விருந்து தயாரித்து பரிமாறினார்.

ஒரு சமயம் திருப்புகழ் பாராயணம் ஒன்றில் தம்முடன் சேர்ந்து பாடிக் கொண்டிருந்த கந்தசாமி பிள்ளை, ஒரு பாடலில் ஏதோ சிறிய தவறு செய்து விட்டதற்காக சுவாமிகள் அவரைக் கடிந்து கொண்டு அவர் முதுகில் ஓங்கி அறைந்து விட்டார். முதுகில் ஐந்து விரல்களும் பதிந்து விட்டன. அந்த வலியையும் எல்லோர் எதிரிலும் நேர்ந்த அவமானத்தையும் பொறுத்துக் கொண்டு பேசாமல் இருந்து விட்டார் கந்தசாமி பிள்ளை.


அன்றிரவு பிள்ளையின் இல்லத்தில் தங்கிய சுவாமிகள் அவரைத் தடவிக் கொடுத்து, "ஐயோ பாவம், அடித்து விட்டேனா?" என்று அனுதாபத்துடன் விசாரித்தார். இந்த அடியினால் பிள்ளையவர்களுக்கு வரவிருந்த எத்தகைய ஆபத்திலிருந்து சுவாமிகள் அவரைக் காப்பாற்றினாரோ, யார் கண்டது?

தம் புகழை சுவாமிகள் பாடக் கேட்டு தணிகேசன் ஆனந்தக் கூத்து ஆடியதும் உண்டு.

1917-ம் ஆண்டு ஜூன் மாதம், வள்ளிமலைச் சீடர்களுடன் சுவாமிகள் திருத்தணிகைத் தலம் சென்று திருப்புகழ் பாடும் போது "திருப்புகழோதுங் கருத்தினர் சேரும் திருத்தணி மேவும் பெருமாளே" என்ற அடியை "தெருத் திண்ணை தோறும் திருப்புகழோதுந் திருத்தணி மேவும் பெருமாளே" என்று மாற்றி பாடிவிட்டார். பாராயணம் முடிந்ததும் "இப்படி ஏன் மாற்றிப் பாடினீர்கள்?" என்று

நூற்றாண்டு ஜயந்தி தினத்தன்று வள்ளிமலை ஆச்ரமத்தில் சுவாமிகளின் சமாதிக் கெதிரில் சாதுராம் அவர்களும், புதுடில்லி ராகவன் அவர்களும் திருப்புகழ் மாரி பொழிந்தார்கள்.









சீடர்கள் கேட்க, ''என்னை யறியாமல் பாடி விட்டேன். அதன் காரணம் எனக்கே தெரியவில்லை'' என்று சுவாமிகள் சமாதானம் கூறி விட்டார்.

மறு நாள் திருத்தணிகைச் சீர் கருணீக மடத்துத் திண்ணையில் இரவு பாராயணம் நடைபெற்றது. இரவு எட்டு மணிக்கு ஆரம்பித்த பாராயணம் தொடர்ந்து நடந்து கொண்டிருந்தது.

நள்ளிரவு நேரம். மலையில் திடீரென்று ஒரு பேரொளி தோன்றி மறைந்ததை பாராயணம் செய்து கொண்டிருந்த அடியார்கள் அனைவரும் கண்டு வியந்தனர். சற்றைக் கெல்லாம் கையில் விசிறியுடன் ஓர் அந்தணர் வந்து, திண்ணையின் மீது ஒரே தாவலாகத் தாவி சுவாமிகளின் அருகில் வந்து உட்கார்ந்தார். ஐந்து நிமிடங்களுக் கெல்லாம் அவர் அங்கிருந்து எழுந்து எதிரிலுள்ள குளத்தின் படிக்கட்டில் போய் அமர்ந்து கொண்டார். சுவாமிகள் பாடும் போது கவனமாகக் கேட்டு களிப்பெய்திய அந்த அந்தணர், உள்ளத்தில் ஆனந்தம் பொங்க சில சமயம் நடனமும் ஆடினார். பொழுது விடிந்ததும் பாராயணம் முடிந்தது. ஆனால், அதற்குள் அந்த அந்தணப் பெரியார் மாயமாய் மறைந்து விட்டார்.

'வேதமூர்த்தி திருத்தணி வெற்புறை சோதி கார்த்திகை பெற்ற விளக்கொளி' மலையில் தரிசனம் தந்தார். ஆண்டவர் 'தணிகையி லந்தணக் கோலத்துடன் பாராயணம் கேட்டார்.

அன்று பேரொளியாகவும், அந்தணப் பெரியாராகவும் காட்சி தந்

தணிகேசரை உலகமே வழிபடவும், 'திருப்புகழோதுங் கருத்தினரை திருத்தணியில் ஒன்று சேர்க்கவும்' சுவாமிகள் தருணம் பார்த்திருந்தார்.

அந்தக் காலத்தில் ஜனவரி மாதம் முதல் தேதியன்று அரசு ஊழியர்களும், அலுவலகங்களில் பணிபுரிபவர்களும் பூமாலைகளுடனும் பழங்களுடனும் ஆங்கிலேய துரைமார்களின் இல்லங்களுக்குச் சென்று மரியாதை செய்யும் பழக்கம் இருந்து வந்தது. வயிற்றுக்காக மனிதனை வழிபடும் இந்த அடிமைப் புத்தியைக் கண்டு மனம் குமுறிய சுவாமிகள் ஒரு யோசனை செய்தார். மனிதனை வழிபட்ட மக்களை, மால் மருகனின் வழிபாட்டில் ஈடுபட வைத்தார். டிசம்பர் 31-ந் தேதி திருப்புகழ் பாடிக் கொண்டே மலையேறிச் சென்று, தணிகேசனுக்கு மனம் குளிர அபிஷேகம் செய்து, ஜனவரி முதல் தேதி, அவனுக்கு சகல மரியாதைகளுடன் அர்ச்சனை, ஆராதனைகள் செய்து, புத்தாண்டின் அலுவல்களை புதுத் தென்புடன் துவக்க நல்வழி வகுத்துத் தந்தார். 1917-18-ல் வள்ளிமலைச் சுவாமிகளால் தொடங்கப்பட்ட திருத்தணி திருப்புகழ் திருவிழாவே, நாளடைவில் 'திருப்படி திருவிழா' வாக மாறி, இன்று முருக பக்தர்கள் கொண்டாடும் மிக முக்கிய விழாக்களில் ஒன்றாக வளர்ந்தோங்கி யிருக்கிறது.

இந்த முதல் திருப்படித் திருவிழாவில் வள்ளி மலைச் சுவாமிகள் கலந்து கொண்ட நிகழ்ச்சியும் ஓர் அற்புதமே!

சென்னையிலுள்ள திருப்புகழ் அன்பர்களை டிசம்பர் 31-ந் தேதி திருத்தணிக்குச் செல்லும்படி பணித்தது போலவே வள்ளிமலை ஆச்ரமத்திலிருந்த அன்பர்களையும் அங்கு செல்லுமாறு கூறினார் சுவாமிகள். அதற்கு உடனே இணங்கிய அடியார்கள், சுவாமிகளையும் உடன் வரும்படி அழைத்தனர். சுவாமிகளோ, "நீங்கள் செல்லுங்கள். ஆண்டவன் உத்தரவு கிடைத்தால் நான் நிச்சயம் வந்து கலந்து கொள்கிறேன்" என்று கூறி அனுப்பினார். அவர்கள் டிசம்பர் கடைசி நாளன்று, திருத்தணிக்குச் சென்று, சுவாமிகளுக்கு உத்தரவு கிடைத்து அவர் திருத்தணிக்கு வந்தால் ஆளுக்கொரு தேங்காய் உடைப்பதாக மனத்திற்குள் வேண்டிக் கொண்டார்கள்.

அன்று வள்ளிமலை ஆச்ரமத்தில் சுவாமிகளுடன் தகப்பன்சாமி, தேவாரசாமி, சிதம்பரசாமி என்பவர்கள் இருந்தனர். அவர்களைப் பார்த்து சுவாமிகள், "இன்று பாராயணம் முடிந்ததும் நீங்கள் உறங்காமல் விழித்திருங்கள். நான் நிட்டையில் அமரப் போகிறேன். திருத்தணிகைக்குப் போகும்படி ஏதாவது உத்தரவு வந்தால் என்னிடம் சொல்லுங்கள்" என்று கூறி விட்டு நிட்டையிலமர்ந்து விட்டார்.

சுவாமிகள் கூறியபடியே கண்ணிமைக்காமல் ஆண்டவனின் உத்தரவுக்காக பக்தியோடு காத்திருந்தார் தகப்பன்சாமி. திடீரென்று மெல்லிய குரலில் "நீங்கள் தணிகைபோய் ஆறு நாட்களில் திரும்பி வந்து விட வேண்டும்" என்று ஓர் அசரீரி கேட்டது. அத் தெய்வ மொழிகளைக் கேட்ட தகப்பன்சாமிக்கு உடம்பெல்லாம் வியர்த்துக் கொட்டியது. சுவாமிகள் நிட்டை கலைந்ததும் தான் கேட்ட மொழிகளைக் கூறினார். ஆனந்தப் பரவசமடைந்த சுவாமிகள் அடுத்த கணம் தகப்பன் சாமியுடன் திருத்தணிக்கு கால் நடையாகப் புறப்பட்டு விட்டார்.

மலையில் வேகமாக இறங்கி வரும் போது சுவாமிகள் தகப்பன்சாமியை நோக்கி, "இதோ பாரு. நாம் அடிவாரத்தை அடைவதற்குள் கோயில் மணி அடிக்க வேண்டும். அது அடித்தால் தான் திருவிழாவுக்குப் போக நமக்கு முழுமையான உத்தரவு கிடைத்தது என்று பொருள். மணி அடிக்கவில்லையென்றால் நமது தணிகை பயணத்தை நிறுத்தி விட வேண்டியதுதான்" என்று கூறினார். 'இதென்னடா, மறுபடியும் ஒரு சோதனை!' என்று கவலைப் பட்டார் தகப்பன் சாமி. இருவரும் மலையிலுள்ள தாமரைக் குளத்தருகில் வந்ததும் கோயில் மணி ஒலித்தது. அது மூன்று முறை ஒலித்து. சுற்றுப்புறமெங்கும் எதிரொலித்தது. நாதபிரும்மமான ஆண்டவனின் அருள் ஓங்கார நாதத்துடன் கிடைத்து விட்டது. இருவரும் மேலும் வேகமாக நடந்து, ஜனவரி முதல் தேதி விடிவதற்கு முன்பே திருத்தணி வந்து சேர்ந்தனர். அடியார்த் திருக் கூட்டம் ஆனந்தக் கடலில் மூழ்கித் திளைத்தது! தணிகேசனின் அருள் வெள்ளம் இத்தரணி யெங்கும் நிரம்பியது.

—கொடாகம்.

இருக்கின்றனர்! இந்த வெட்கக் கேடான நிலையில், வெவ்வேறு மதத்தினரிடையில் கலப்பு ஏற்படுவதென்பது அவ்வளவு எளிதா?

நான் அந்தக் கதையைச் சொல்வதற்குள் இன்னொரு பையன் சொன்னான், அதுவரையில் நான் கேட்காத புதிய கதையை. திருப்பதி வெங்கடாசலபதியின் மதத்தையே கலப்பாக்கி விட்டான் அந்தப் பையன், நான் சொன்ன கதையால்!

புதிய கதை

முதலில் திருப்பதியிலிருந்த கடவுள் சிலை சிவனுடையதாக இருந்ததாம். ஒரு வைணவ மதத்தவரும், சைவ மதத்தவரும் திருப்பதி கோயிலின் வாயிலில் தங்கினார்களாம். கோயில் சாத்திய பிறகு இருவருக்கும் வாக்குவாதம் உண்டாயிற்றாம்.

வைணவர் சொன்னாராம், உள்ளே இருக்கும் கடவுள் வைணவக் கடவுள் தான் என்று. சைவ மதத்தினர் சொன்னாராம், உள்ளே இருப்பது சைவக் கடவுள்தான என்று.

இருவருக்கும் வாக்குவாதம் அதிகமாகியதாம். சச்சரவு மோசமான கட்டத்தை நெருங்கியபோது, அங்கே தங்கியிருந்த சிலர், ''காலையில் சிலையைப் பார்த்து யாருடைய சொல் உண்மையென்பதை முடிவு செய்வோம்'' என்று சொல்லிச் சமாதானப் படுத்தினார்களாம்.

அதாவது, எந்த மதத்தினருடைய சின்னம் அந்தச் சிலையின் நெற்றியில் இருக்கிறதோ, அந்த மதத்தைச் சேராத மற்றவர் அச் சின்னத்தை அணிந்து கொள்ள வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டதாம்.

எல்லோரும் படுத்து உறங்கினராம். வைணவ மதத்தினருக்குத் தூக்கம் வரவில்லையாம். ஒரு வேளை சைவச சிலையாக இருந்து விட்டால் என்ன செய்வது என்ற பயம் ஏற்பட்டதாம். உடனே யாருக்கும் தெரியாமல் பெருச்சாளி உருவெடுத்துச் சாக்கடை வழியாக உள்ளே நுழைந்து பார்த்தாராம். சிவனுடைய சிலையாக இருந்ததாம் அது!


(தொடரும்)

17—1—71

விகடன் இதழ்



குமரி மாவட்ட மலர்



அண்ணாமலை தீபத்தைக் காண காட்சி மண்டபத்தில் எழுந்தருளியிருக்கும்


அருணாசல மகிமை

50

திணிகை மலையில் திருப்புகழ்த் திருவிழாவைத் தொடங்கி வைத்து விட்டு, வள்ளிமலை சுவாமிகள் திருப்புகழ் பரப்பும் தமது அருட் தொண்டில் ஈடுபட்டார். வள்ளிமலை ஆச்ரமத்திலிருந்து அடிக்கடி யாத்திரை மேற்கொண்டு, சென்னைக்கும் அதன் சுற்றுப்புறத்திலுள்ள ஊர்களுக்கும் சென்று, தமது திருப்புகழ் பாராயணங்களாலும், பிரசங்கங்களாலும் ஆயிரமாயிரம் அடியார்களை ஈர்த்தார். ஆங்காங்கே திருப்புகழ் சபைகளை அமைத்துச் சிறுவர் சிறுமியருக்கு அருணகிரியார் படைத்து வைத்திருந்த திருப்புகழ் அமுதத்தை ஊட்டினார். முருக பக்தியை விதைத்தார். தேன்மலர் இருக்கும் திசை நோக்கி வண்டுகள் பறந்து வருவது போல், திருக்கையில் ஏகதாரை ஏந்தித் திரிந்த அந்தக் கோவணாண்டியைப் பெருங் கூட்டம் நாடி வந்தது. பெறற்கரிய செல்வத்தைப் பெற்றது; பேரின்பத்தில் மிதந்தது.

சுவாமிகளின் நன்முயற்சியால் தமிழகமெங்கும் திருப்புகழின் அருமை பெருமைகளை மக்கள் உணர்ந்து, ராக தாளத்துடன் அதை ஓதத் தொடங்கினர். 'தங்கள் ஊருக்குச் சுவாமிகள் வர மாட்டாரா?' என்று அன்பர்கள் ஏங்கித் தவம் கிடந்தனர். தென் மாவட்டங்களில் சுவாமிகள் பிரயாணம் செய்ததன் பலனாக முருக தலங்களில் படி விழாக்களும், அருணகிரிநாதர் விழாக்களும், ஸ்கந்த சஷ்டி

பரணீதரன்



பஞ்சமூர்த்திகளை பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் தரிசிக்கும் கண் கொள்ளாக் காட்சி.

விழாக்களும் கிருத்திகை விழாக்களும் கோலாகலத்துடன் கொண்டாடப் பட்டன.

சுவாமிகள் தமிழகம் மட்டுமின்றி பம்பாய், கல்கத்தா, டில்லி போன்ற வடநாட்டு நகரங்களுக்கும் சென்று, அங்கு வாழும் தமிழர்களிடையேதிருப் புகழின் மேன்மையைப் பரப்பினர். மீண்டும் ஒரு முறை தல யாத்திரை சென்று, ஆலயங்களை வழிபட்டு, மகான்களைத் தரிசித்து, புண்ணிய நீராடித் தமது ஆன்மீக வலிமையை யும் யோக சக்திகளையும் பெருக்கிக் கொண்டார்.

மகான்களும், தவச் சீலர்களும், யோக சித்தர்களும், ஞான பண்டிதர் களும் பரம்பொருளின் தூதுவர் களாகத்தான் நம்மிடையே அவதரிக் கிருர்கள். ஒவ்வொருவரும் தங்களுக் கென ஒரு துறையை ஏற்றுக்கொண்டு தங்களுக்குரிய தனி வழியில் மக்க ளிடையே நன்னெறியையும், நல் லொழுக்கத்தையும், அன்பையும், பக்தி யையும், ஞானத்தையும் பரப்புகிருர் கள். காலத்திற் கேற்பவும், சூழ்நிலைக் கேற்பவும் மக்களின் மன நிலைக்கேற்ப வும் அவ்வப்போது தேவையான பாதையை வகுத்துத் தருகிருர்கள். அதற்கு ஆண்டவன் அவர்களுக்குத் தோன்ருத் துணையாக நிற்கிருன். கனவில் வந்த யோசனைகள் கூறு கிருன். அசரீரியாக அருள் பாலிக் கிருன். நம் கண்களுக்குப் புலப்படாத உருவம் தாங்கி வந்து உதவுகிருன்.

ஸ்ரீ வள்ளிமலைசச்சிதானந்தசுவாமி கள், பழநியாண்டவன் சந்நிதியில் திருப்புகழைக் கேட்டு, பராசக்தியின் அருளால் ஸ்ரீ சேஷாத்திரிசுவாமிகளின் மூலமாகத் திருப்புகழையே மாமந்திர மாக ஏற்று, தவநிலை மேற்கொண்டு, அரிய சக்திகளைப் பெற்று, அருணகிரி யாரின் திருப்புகழைப் பரப்பி, தெய்வ நம்பிக்கையும் முருக பக்தியும் தழைக் கச் செய்யும் அருட் பணியை மேற் கொண்டிருந்தார். அத் துறையில்



ஜோதி தரிசனம் கண்ட மனித கோபுரம்!

வெற்றி கண்டு, வந்த காரியம் இனிது முடிந்தேற ஸ்ரீ முருகனும் ஸ்ரீ வள்ளியம்மையும் அவருக்கு உறுதுணையாயிருந்தனர்.

சுவாமிகள் சுவாமிமலையில் தங்கியிருந்த சமயம். திருப்புகழ் பாராயணமும் பிரசங்கமும் முடிந்து அவர் ஓர் அன்பர் வீட்டுத் திண்ணையில் படுத்து உறங்கிக் கொண்டிருந்தார். நள்ளிரவில் **'கார்த்திகை மூலம் எனக்குகந்தது'** என்று அசரீரி கேட்டது. திடுக்கிட்டு எழுந்த சுவாமிகள் சீடர்களை எழுப்பி உற்றுக் கேட்கச் சொன்னார். அவர்களும் அந்த அசரீரியின் வாசகத்தை மிகத் தெளிவாகக் கேட்டனர். கார்த்திகை மாதத்திய மூல நட்சத்திரத்தன்றுதான் சுவாமிகள் அவதரித்தார். அந் நன்னாளை முருகன் தமக்கு உகந்தது என்று கூறுகிறான். அப் புனித நாளைத் தன் ஜயந்தியாகக் கொண்டாடச் சொல்லாமல், அருணகிரியாரின் ஜயந்தியாகக் கொண்டாட வேண்டும் என்று சுவாமிகள் பணித்தார். 1923-ம் ஆண்டு முதல் பல இடங்களில் அப் புனிதத் திருநாள் அருணகிரியாரின் விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

தமது தென்னாட்டு யாத்திரையின் போது பழநியாண்டவனைத் தரிசித்து விட்டு, விராலிமலை ஆறுமுகனை வழிபட்டு, திருச்சிக்கு அடுத்துள்ள வயலூர் சென்றார் சுவாமிகள். அப்போது அப் பகுதியில் பருவ மழை பொய்த்து விட்டதால் நிலங்கள் வெடிப்புண்டு, விவசாயிகள் பெரும் அவதிக்கு உள்ளாகி யிருந்தார்கள். சுவாமிகளைக் கண்டதும் மக்கள் அவரிடம் ஓடிச் சென்று முறையிட்டனர். "நீங்கள் திருப்புகழை உண்மையாக நம்பினால் முருகன் அருளால் மழை பொழியும்" என்று கூறிய சுவாமிகள் தமது பாராயணத்தைத் தொடங்கினார். அப்போது மழை பெய்வதற்கான அறிகுறியே காணோம். பாராயணம் தொடங்கிய அரை மணி நேரத்திற்குள் எங்கிருந்தோ கருமேகங்கள் வந்து குவிந்தன. சில்லென்று காற்று வீசியது. இரவு பத்து மணி முதல் விடியற்காலை ஐந்து மணிவரை மழை கொட்டித் தீர்த்து விட்டது.

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் புதுப் பெரியவர் - ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள்




சுவாமிகள் பெங்களூரில் தங்கியிருந்த போது, ஜதி வாத்தியத்தை வாசித்துக் கொண்டு திருப்புகழ் பாராயணப் பிரசங்கம் செய்து கொண்டிருந்தார். கூட்டத்தில் அமர்ந்திருந்த ஒரு மந்திரவாதி 'ஒன்ஸ் மோர்' என்று கத்தினன். இந்தக் குறுக்கீடு பிடிக்காத சுவாமிகள் 'நோ மோர்' என்று கூறி அவனை அலட்சியப்படுத்தி விட்டார். கோபங் கொண்ட அந்த சூன்யக்காரன் உடனே ஏவல் செய்து சுவாமிகளின் கைகளை வீங்கும்படி செய்து விட்டான். அதனுல் அவர் தொடர்ந்து வாத்தியம் வாசிக்க முடியாமல் போய் விட்டது. ஆனல், அதைச் சிறிதும் பொருட்படுத்தாமல் பாராயணத்தை நடத்தி முடித்தார் அவர். சுவாமிகளின் கைகள் திடீரென்று வீங்கியதைக் கண்டு சீடர்களும் அன்பர்களும் கவலையுற்றனர்.

மறுநாள் காலை சுவாமிகள் தங்கியிருந்த வீட்டிற்கு அந்த மந்திரவாதி அழுதுகொண்டே ஓடி வந்தான். அவனுடைய கைகள் பெரிதாக வீங்கியிருந்தன. தான் குத்துவலியால் அவதிப் படுவதாகவும், உடல் முழுவதும் எரிச்சல் எடுப்பதாகவும் கூறி, தான் செய்த குற்றத்தை மன்னித்து, திருநீறு பிரசாதம் அளிக்கும்படியும் வேண்டினன். சுவாமிகள் அவனைப் பார்த்து, ''அப்பனே, நீ கற்ற மூன்று சுழி மந்திரத்தைப் பிரயோகிக்கும் வழக்கத்தை இன்றுடன் விட்டு விடுவதாகச் சத்தியம் செய்து கொடுத்தால் விபூதி பிரசாதம் தருகிறேன்'' என்று கூறினர். அவனும் அவ்வாறே வாக்குக் கொடுத்து விட்டு விபூதிப் பிரசாதம் பெற்றுக் கொண்டு சென்றன்.

ஒருசமயம் சென்னை புரசைவாக்கம் கங்காதீச்வரர் ஆலயத்தில் சுவாமிகள் பிரசங்கம் செய்து கொண்டிருந்தார். திடீரென்று எழுந்து கொடி மரத்தின் அருகில் வந்து நின்று, வீதியை நோக்கிப் பிரசங்கத்தைத் தொடர்ந்தார். இதன் காரணம் ஒருவருக்கும் புரியவில்லை. சற்றைக்கெல்லாம் கோபுரத்துக்கு வெளியே, சற்று ஒதுங்கி நின்றிருந்த ஒரு முகமதியத் தோழரை ஆலயத்தினுள் அழைத்து வரும்படி சீடர்களிடம் கூறினர்.

கண்ணீருடன் ஆலயத்தினுள் ஓடி வந்த அந்த முகமதியர், சுவாமிகளின் கால்களில் விழுந்து விசும்பினர்: ''சுவாமி, மூன்று ஆண்டுகளுக்கு முன்பு புதுக்கோட்டையை அடுத்த மலைக் காட்டில் தாங்கள் இதே பாட்டைப் பாடவில்லையா? அதை நான் ரசித்துக் கேட்டுக் கொண்டிருந்த போது, ஒரு சிறுத்தைப் புலி பாய்ந்தோடி வந்தது. உடனே நான் அருகில் இருந்த மரத்தின்மீது ஏறிக் கொண்டேன். ஆனல், தாங்களோ சற்றும் அஞ்சவில்லை. மாருக, தங்கள் திருவோட்டில் இருந்த உணவை அந்தப் புலிக்குக் கொடுத்தீர்கள். அந்தப் புலியும் தங்களுக்குக் காவலாக அருகில் படுத்திருந்தது. பின்னர் தாங்கள் புறப்பட்ட போது, அது தங்களைத் தொடர்ந்து வந்ததால் நான் தங்களை அருகில் தரிசிக்கும் பாக்கியத்தைப் பெற முடியவில்லை. அதற்குப் பிறகு, இங்கு ஓர் அலுவலாக வந்த நான், அதே குரலை, அதே பாட்டைக் கேட்டு அசந்து நின்றேன். நான் வெளியே நின்றிருந்தது தங்களுக்கு எப்படித் தான தெரிந்ததோ? எனக்குத்

ஆலயத்திலுள்ள பழநியாண்டவர் சந்நிதியிலிருந்து தீப தரிசனம் செய்கிருர்கள்.



'அருணுசல மகிமை'யை உடனே நிறுத்தும்படி பரணீதரனிடம் தயவு செய்து சொல்லுங்கள். அது தொடர்ந்து வந்தால் என் போன்ற நாத்திகனையும் மெல்ல மெல்ல ஆத்திகனுக மாற்றி விடுமோ என்று பயமாயிருக்கிறது.

பா.சுந்தரமூர்த்தி, ஆசிரியர், அ. உ. நி. பள்ளி, சிறுவாசகூர் போஸ்ட். ஆத்தூர், சேலம்.

தரிசனம் தருவதற்காக எழுந்து வந்த தங்கள் கருணையை எப்படிப் பாராட்டுவேன்?'' என்று கூறிக் கதறித் தீர்த்து விட்டார். அருகிலிருந்தவர்கள் கண்களைத் துடைத்துக் கொண்டனர்.

வள்ளிமலையில் ஒரு நாள். பொழுது சாய்ந்து விட்டது. சுவாமிகளின் பணியாள் முனுசாமி ஆச்ரமத்திற்கு ஏறி வந்து கொண்டிருந்தான். எதிரில் நாற்பது வயது மாது ஒருத்தி ஆச்ரமத்திலிருந்து இறங்கி வந்து கொண்டிருந்ததைப் பார்த்து, ''ஏனம்மா, இந்த வேளையில் திரும்புகிறீர்கள்? நன்ருக இருட்டி விட்டதே'' என்ருன் முனுசாமி.


''சுவாமிதான் என்னைப் போகச் சொல்லித் துரத்தி விட்டார்'' என்று பதில் கூறினுள் அந்தப் பெண்மணி. முனுசாமி அந்த அம்மாளை அங்கேயே இருக்கச் சொல்லி விட்டு, சுவாமிகளிடம ஓடோடி வந்து, ''சாமி, நீஙக எல்லாப் பொம்பளைங்களையும் வள்ளியா நினைப்பீங்களே, அந்த அம்மாளை மட்டும் ஏன் இருட்டிலே போகும்படி விரட்டினீங்க? இருட்டிலே எப்படிக் கீழே போவாங்க?'' என்று கேட்டான்.

சுவாமிகள் உடனே அவனை அனுப்பி அந்தப் பெண்மணியை அழைத்து வரும்படி கூறினுர். ஆனுல், முனுசாமி சென்று பார்த்த போது அவள் அங்கிருந்து மாயமாய் மறைந்து விட்டிருந்தாள். ஏமாற்றத்துடன் திரும்பிய முனுசாமியிடம் சுவாமிகள், ''அவள் குகைக்குள் வந்ததும் நேரே இந்தக் கற்பூர டப்பியிடம் போய் உட்கார்ந்தாள். 'அங்கே என்ன பண்றே!'ன்னு சத்தம் போட்டேன். 'என்ன சாமீ இப்படிக் கோவிச்சுக்கிறீங்க?'ன்னு கேட்டு விட்டு எழுந்து போய் விட்டாள். ஒரு வேளை கற்பூரத்தை திருடிக்கிட்டு போயிட்டாளா பார்?' என்ருர் முனுசாமி. கற்பூர டப்பாவைக் கொண்டு வந்தான். என்ன ஆச்சரியம்! அதில் ஒரு வெள்ளி ரூபாய் நாணயம் மின்னியது. வந்தவள் வள்ளித்தாய் அல்லவா?

ஸ்ரீ சேஷாத்திரி சுவாமிகள் 1929-ம் ஆண்டு ஜனவரியில் மகா சமாதி அடைந்தார். தம் குருநாதரின் சமாதி சடங்குகளில் கலந்து கொண்டு விட்டு திருவண்ணுமலையிலிருந்து வள்ளிமலை திரும்பிய சச்சிதானந்த சுவாமிகள், பன்னிரண்டு ஆண்டுகள் மலையை விட்டு இறங்காமல் ஆச்ரமத்திலேயே தங்கியிருந்தார். அப்போதும் சென்னையிலுள்ள சில அன்பர்களுக்கு அவர் தரிசனம் அளித்திருக்கிருர்!

வெங்கடாச்சாரி என்ற அன்பர் சுவாமிகளின் படம் ஒன்றை ஆச்ரமத்திற்கு எடுத்துச் சென்று, அங்கு சில நாட்கள் அதை வைத்து விட்டு, சுவாமிகளின் ஆசி பெற்று வீட்டுக்கு எடுத்துவரும்போது சிலர் சுவாமிகளிடம், ''இந்தப் படம் பேசுமா? ஆகாரம் சாப்பிடுமா?'' என்று கேட்டனர். அதற்கு சுவாமிகள், ''இந்தப் படம் பேசவும் பேசும், சாப்பிடவும் என்று கூறிவிட்டார்.

மறுநாள் சென்னையில் வெங்கடாச்சாரியார் வீட்டில் பூஜை அறையில் சுவாமியின் படத்திற்கு நிவேதனம் செய்து கொண்டிருந்தார்கள். அப்போது ''ஒரு லோட்டா காப்பி கொடு'' என்று குரல் கேட்டது. சந்தேகமில்லை அது சுவாமிகளின் குரல்தான். ''உள்ளே வாருங்கள்'' என்று வீட்டார் அழைக்கவும், ''இல்லை, எனக்கு அவசர வேலை இருக்கிறது. போக வேண்டும். காப்பியை ஜன்னல் வழியாகவே கொடு'' என்று சொல்லிக் கையை நீட்டினுர் சுவாமிகள். அவர் கேட்டபடியே காப்பியை ஜன்னல் வழியாகவே கொடுத்தனர். அவரும் அதை வாங்கிக் குடித்து விட்டு, பாத்திரத்தை ஜன்னலில் வைத்தார். உடனே எல்லோரும் தெருப் பக்கம் சென்று



சில சீடர்களுடன் ஸ்ரீ வள்ளிமலை திருப்புகழ் சுவாமிகள்

பார்த்தனர். அங்கு சுவாமியைக் காணோம். சுற்றுமுற்றும் தேடிப் பார்த்தார்கள். பயனில்லை.

ஒரு சமயம் மலையைச் சீர் திருத்தம் செய்த வேலையாட்களுக்குக் கூலி கொடுக்க சுவாமிகளுக்கு இருநூறு ரூபாய் பணம் தேவைப் பட்டது. கையில் பணமில்லை. முருக னிடம் பிரார்த்தித்தார். வேறு யாரிடம் கேட்பார்?

மறுநாட் காலை ஒன்பது மணிக்கு ஆச்ரமத்தில், ஆலமரத்தடியில் அமர்ந்திருந்தார் சுவாமிகள். அப் போது எதிரில் திடீரென்று ஒரு பை வந்து விழுந்தது. அதை அவிழ்த்துப் பார்த்தார். அதில் வெள்ளி நாணயங் களாக இருநூறு ரூபாய் இருந்தது. முருகனின் கருணையை நினைத்து மனம் உருகி கண்ணீர் உகுத்தார் சுவாமிகள்.

ஒரு வாரம் கழித்து ஒரு நாள் சென்னைக்கு வந்த சுவாமிகள் அவரு டைய பக்தர்களில் ஒருவரான பிரபல டாக்டர் ரங்காச்சாரியின் இல்லத் திற்குச் சென்றார். அப்போது டாக் டர், சுவாமிகளைப் பார்த்து "நான் அனுப்பிய இருநூறு ரூபாய் வந்து சேர்ந்ததா?" என்று கேட்டார். சுவாமிகளுக்கு ஒன்றும் புரியவில்லை.

டாக்டர் சொன்னார்: "சுவாமி களே, ஒரு நாள் முருகன் என் கனவில் தோன்றி 'வள்ளிமலை சுவாமிகளுக்கு இருநூறு ரூபாய் தேவைப்படுகிறது. அதை நீ அனுப்பி வை' என்று உத்தர விட்டார். மறுநாள் நான் ஆகாய விமானம் மூலம் பெங்களூர் புறப்பட் டேன். அப்போது எனக்கு ஒரு யோசனை தோன்றியது. இருநூறு ரூபாய் நாணயங்களாக ஒரு மூட்டை யில் கட்டி வைத்துக் கொண்டேன். விமானம் வள்ளிமலையை நெருங்கிய போது தாழ்வாகப் பறந்து பைனு குலர்ஸ் மூலம் கீழே பார்த்தேன். சுவாமிகள் ஆலமரத்தடியில் அமர்ந் திருப்பது தெரிந்தது. உடனே அந்தப் பையைக் குறி பார்த்துக் கீழே போட் டேன். அது பத்திரமாக வந்து சேர்ந் ததா?" என்று கேட்டார்.

முருகனின் லீலாவினோதத்தை நினைத்து கண் கலங்கிய சுவாமிகள் டாக்டரை அப்படியே இறுகத் தழுவிக் கொண்டார். "நீங்கள் பெரும் பாக்கி யம் செய்தவர். முருகன் தங்களுக்கு கனவில் காட்சி தந்தானே. நான் இன் னும் அந்தப் பாக்கியம் செய்ய வில்லையே" என்று உணர்ச்சி பொங்கக் கூறினார்.

(தொடரும்)

அறை வாங்கிய காரணம்

தியேட்டருக்கு எதிரில் இருநத குளத்தில் பாத்திரத்தைப் பரிசிலாக்கி நானும் புதிய நண்பனும் தண்ணீரில மிதந்ததாகச் சொன்னேன் அல்லவா?

ஆனந்தத்தோடு ஆபத்தும் இருக கும் என்பார்களே, அது போல் நீந்தத் தெரியாதவர்கள் அதில் உட் கார்ந்து தள்ள ஆரம்பித்தால், அவ் வளவுதான்; பாத்திரம் கவிழ்ந்து விடும். எனக்கும் இன்னும் இரு பையன்களுக்கும் அந்த ஆபத்து ஏற பட்டது. கரையோரமாக இருந்த தால் ஆழமில்லை; தப்பித்தோம்.

அந்தப் பையன் தினமும் எங்கள் படித்துறை வருவதும் எங்களோடு பழகுவதுமாக நாங்கள் நெருங்கிய நண்பர்களானோம.

ஒரு நாள் அந்தப் பையன் எங்க ளுக்கு வேடிக்கை காண்பிப்பதற்காக, அந்தப் பாத்திரத்தை அந்தக் குளத்தி லிருந்த ஒவ்வொரு படித்துறைக்கும் ஓட்டிக் கொண்டு போனான். அதில் ஒரு படித்துறைக்குப் போனதும் அங்கு இருந்த ஒருவர் அவனை அருகில் அழைத்தார். நண்பன் அருகில் சென றான். உடனே 'பளார்' என்று அவனை அறைந்தார், அழைத்தவர். அவன் அறையை வாங்கிக் கொண்டு, பேசாமல் பாத்திரத்தைத் தள்ளிக் கொண்டு போய் விட்டான்.

எங்களுக்கு ஏதும் புரியவில்லை. இரண்டொரு நாட்களுககு அவன் வர வும் இல்லை.

பிறகு ஒரு நாள் வந்தான். நாங்கள் அவனைக் கண்டதும் அந்த நிகழ்ச்சி யைப் பற்றித்தான் விசாரித்தோம். அவன் சொன்னான்:—அவன் போன படித்துறை பார்ப்பனர்கள் மட்டும் குளிக்கும் படித்துறை. அங்கு அவன் சென்ற போது, குளித்துக் கொண் டிருந்த அவருக்குக் கோபம் உண்டான தால் அடித்ததாகச் சொன்னான்!

அப்போது 'திருவனந்தபுரம்' என்ற பெயர் அந்த ஊருக்கு எப்படி ஏற் பட்டது என்பதைப் பற்றி என் தாயார் சொன்ன கதை என் நினை வுக்கு வந்தது.

அன்னை உரைத்த கதை

ஓர் ஊரில் கல்வியறிவும் தெய்வ பக்தியும் கொண்ட ஒரு பார்ப்பனர் இருந்தாராம். ஒரு நாள் பூஜை செய்து கொண்டிருந்த போது, தாழ்த் தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஒரு குழநதை பூஜை சாமான்களை எடுத்து விளையாடிற்றும். அவர் அந்தக் குழந்தையைக் கையால் தள்ளி விட் டாராம். ஆத்திரத்தோடு குழந்தை பின்னுக்குத் தள்ளப் பட்டதுமே, அங்கு வைக்கப் பட்டிருந்த கடவுள் சிலை மறைந்து விட்டதாம்!

அந்தப் பாாப்பனர் மிகவும் கவலைப் பட்டாராம். அவருடைய மனக் கஷ்டத்தைக் கண்டு, அவரிடம் கடவுள் ''அனந்தங் காட்டுக்கு வந் தால் என்னைக் காணலாம'' என று கனவில் கூறினராம்.

அவர் தேடிக் கொண்டே அலைந் தாராம்.

இப்படிப் பல நாட்கள் அலைந்து, அனந்தகாடு எங்கிருக்கிறது என்று தெரியாது தவித்த நிலையில், ஓரிடத் தில் அமர்ந்திருந்தாராம். அப்போது அவர் ஒரு கல்லை எடுத்துப் பக்கத்தில் பாறையில் தட்டிக் கொண்டிருந்தா ராம் யோசனையோடு.

கையில் தண்ணீர் பட்ட மாதிரி தோன்றிற்றும். கவனித்துப் பார்க்க, சிவப்பாக இரத்தம் போன்றிருந்த தாம். உடனே பயத்துடன் அங்கே தோண்டிப் பார்க்க, நாரணனுடைய சிலை அங்கு காணப் பட்டதாம்.

அங்கே பூஜை செய்ய எதுவும் இல்லாத நிலையில் அங்கு கிடந்த சிரட்டையில் தண்ணீர் வைத்துப் பூஜை செய்தாராம். இப்போது கூட சிரட்டை போன்ற பாத்திரத்தில் தண்ணீர் வைத்துப் பூஜை செய்வதா கவும் என்னிடம் கூறி, ''கடவுளுக்கு எல்லோரும் ஒன்று; அதை எடுத்துச் சொல்வதற்குத்தான் இதை நடத்திக் காட்டினர் கடவுள்'' என்று அன்னையார் சொன்னர்கள். அதுவே என் நினைவிற்கு வந்தது.


இந்தக் கதை உண்மையில் நடந் திருக்குமா?

'திருவனந்தபுரத்தின் தல புரா ணம் இது தானு?'—என்பது சந்தேகத் திற்கிடமான விஷயம்.

கல்லிலே இரத்தம் வந்தது என் பதை நம்புவது சிரமம்தான்.

ஆனல், அந்தக் கதையில் உள்ள ஒரு நல்ல கருத்தை எடுத்துக் கொள் வது தவறல்ல.

(தொடரும்)



எழில் கொழிக்கும் அண்ணாமலையார் ஆலயம்.

அருணாசல மகிமை

51

ஸ்ரீ வள்ளிமலை திருப்புகழ் ஆச்ரமத்தைப் பார்த்து விட்டுத் திரும்பும் போது, ஜெயவேல்தாஸ், ''பெரியவருக்குப் பொங்கல் படைக்கும் இடத்தைப் பார்க்காமல் போகிறீர்களே'' என்று எங்களை அழைத்தார். ஒரு பாறையின் மீது அவர் ஏறிச் செல்ல, நாங்கள் பின் தொடர்ந்தோம்.

''இதோ பார்த்தீங்களா, இங்கே தினமும் சாயந்தரம் மூணு உருண்டை சர்க்கரைப் பொங்கல் வைப்பாங்க. ஒரு பெரிய கீரிப்பிள்ளை வந்து அதைச் சாப்பிட்டு விட்டுப் போகும். அதோ குழியாயிருக்கே, அதுலே குடிக்க ஜலம் விட்டு வைப்பாங்க'' என்றார் ஜெயவேல்தாஸ்.

''இப்பவும் சாதம் வைக்கறாங்களா? கீரிப்பிள்ளை வருகிறதா?'' என்று கேட்டேன் நான்.

''இல்லீங்க. அதெல்லாம் சாமி இங்கே இருந்த வரைக்கும் நடந்துக்கிட்டிருந்தது. இப்போ சாதமும் வைக்கிறதில்லே. கீரியும் வருவதில்லை'' என்றார் தாஸ்.

பரணீதரன்

ஒரு சமயம் ஒரு வயோதிகர் வள்ளி மலை சுவாமிகள் இருந்த குகைக்கு வந்து, "பசிக்கிறது. ஏதாவது கொடுங்கள்" என்று கேட்டார். ஒரு பாத்திரத்தில் இருந்த கஞ்சியை அந்தப் பெரியவருக்குக் கொடுக்கும்படி சுவாமிகள் கூறவே, சீடர் ஒருவர் எடுத்துக் கொடுத்தார். பசியால் வாடிய அந்த வயோதிகர், பாத்திரத்திலிருந்த மூன்று படி கஞ்சியையும் குடித்து விட்டு அங்கிருந்து போய் விட்டார். ஒரே மூச்சில் மூன்று படி கஞ்சியையும் குடித்த அந்த அதிசய மனிதர் யாரென்று பார்த்து வரும்படி சுவாமிகள் சில சீடர்களை அனுப்பினார். ஆனால், எத்தனை தேடியும் அவரைக் கண்டு பிடிக்க முடியவில்லை. எங்கோ மாயமாய் மறைந்து விட்டார். மறுநாள் முதல் ஆச்ரமத்தில் பெரியவருக்கு ஆகாரம் வைக்கும் பழக்கம் ஏற்பட்டது.

பெரியவருக்காக வைக்கப்பட்ட அந்த ஆகாரத்தைத் தவறாமல் ஒரு கீரிப்பிள்ளை வந்து சாப்பிட்டு விட்டுப் போகத் தொடங்கியது. சேஷாத்ரி சுவாமிகளே கீரியின் உருவில் வந்து உணவை உட்கொள்ளுகிறார் என்ற உண்மை பின்னர்தான் தெரிந்தது!

திருவண்ணாமலையில் நடமாடிக் கொண்டிருந்த சேஷாத்ரி சுவாமிகள் அநேக நாட்கள் இரவு நேரங்களை மயானத்திலேயே கழிப்பது வழக்கம். அங்கிருந்த வெட்டியான், சுவாமிகள் மீது பேரன்பு வைத்திருந்தான். சுவாமிகளும் அவனிடம் கருணையோடு பழகினார். ஊரில் யாராவது தனக்குப் புத்தாடைகள் கொடுத்தால் அவற்றைக் கொண்டு வந்து வெட்டியானிடம் கொடுத்து விட்டு, அவனுடைய கந்தல் ஆடையைத் தாம் அணிந்து கொண்டு போய் விடுவார்.

சேஷாத்ரி சுவாமிகள் மகா சமாதி அடைந்த போது, பிரிவு தாங்காமல் துயரமடைந்த பல்லாயிரக்கணக்கான பக்தர்களில் அந்த வெட்டியானும் ஒருவன். எந்நேரமும் அவரைப் பற்றியே ஏங்கிக் கொண்டிருந்த அவனால் சுவாமிகளின் ஒளிமிக்க கண்களையும், புத்துயிரூட்டும் புன்னகையையும், இனிமையான பேச்சுக்களையும் மறக்கவே முடியவில்லை.

ஒருநாள் அவன் கனவில் சேஷாத்ரி சுவாமிகள் தோன்றி, அவனை அன்புடன் தழுவிக் கொண்டார். ஆறுதல் மொழிகள் கூறினார்:

"அப்பனே, என்னைக் காணவில்லை என்று வருத்தப்படாதே. நான் வள்ளிமலையில் இருக்கிறேன். அங்கு போ. உனக்கு தரிசனம் தருகிறேன்" என்று வாக்குக் கொடுத்தார்.

மறுநாளே அந்த வெட்டியான் வள்ளி மலைக்குக் கிளம்பி விட்டான். சுவாமிகளிடமும் பிறரிடமும் தான் வந்த காரியத்தைக் கூறினான். சேஷாத்ரி சுவாமிகளின் தரிசனத்திற்காக காலை முழுவதும் காத்திருந்தான்.

மாலையில் பாறையின் மீது பெரியவருக்கு ஆகாரம் வைப்பதைக் காணச் சென்றான். அப்போது அங்கு ஒரு கீரி வந்தது. அருகிலிருந்தவர்கள் திருப்புகழ் பாடினார்கள். கீரிப்பிள்ளை வெல்லம் கலந்த அன்னத்தை ருசித்துச் சாப்பிடத் தொடங்கியது.

அடுத்த கணம், கீரிப்பிள்ளை மறைந்து அங்கு சேஷாத்ரி சுவாமிகள் காட்சியளித்தார். வெட்டியான் பக்திப் பரவசத்தில் உடல் நடுங்க, "சாமீ... சாமீ... என்னைத் தனியாக விட்டுட்டு இங்கே ஏன் சாமீ வந்தீங்க?" என்று கதறினான். சற்றைக்கெல்லாம் அவன் கண்களில் ஆனந்தக் கண்ணீர் பொங்கியது. தன்னை வள்ளிமலைக்கு அழைத்து, சுவாமிகள் தரிசனம் கொடுத்ததை நினைத்துப் பூரித்துப் போனான்.

தவக்கோலத்தில் திருப்புகழ் சுவாமிகள்



சரீரத்தோடு இருக்கும் போதே எந்த உருவத்தை வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளும் அபூர்வ சக்தி யோக சித்தர்களுக்கு உண்டு. கொடுத்து வைத்தவர்களின் கண்களுக்கு மட்டும் உண்மையான தரிசனம் கிடைக்கும்.

ஒரு சமயம் வள்ளிமலை சுவாமிகள திருவண்ணாமலைக்குச்சென்று ஸ்ரீரமண மகரிஷிகள் சந்நிதியில் திருப்புகழ் பாடினார். பின்னர் சேஷாத்ரி சுவாமிகளைத் தேடிக் கண்டு பிடித்து, தரிசனம் செய்து, சிறிது நேரம் அவருடன் பேசிக் கொண்டிருந்தார். இறுதியில், மறுநாள் வள்ளிமலை போகப் போவதாகக் கூறி உத்தரவு கேட்டார். அப்போது சேஷாத்ரி சுவாமிகள், "டேய், நானும் வள்ளிமலைக்கு வரேண்டா. என்னையும் அழைச்சுண்டு போடா" என்று கூறியதும், வள்ளிமலை சுவாமிகளுக்கு மகிழ்ச்சியை அடக்கவே முடியவில்லை. குருநாதர் விளையாட்டுக்கு அவ்வாறு கூறுகிறாரோ என்ற சந்தேகத்துடன் விடை பெற்றவர் மறுநாள் காலையில் அவரிடம் சென்று, 'ரயிலுக்குப் போகலாமா?' என்று பரிவுடன அழைத்தார். "ஓ, வரேனே" என்று சேஷாத்ரி சுவாமிகள் துள்ளிக் குதித்துக் கொண்டு கிளம்பினார். குருவும் சீடரும் ரயில் நிலையத்துக்குச் சென்று, ரயிலில் ஏறி அமர்ந்து கொண்டார்கள்.

வள்ளிமலையிலிருக்கும் கன்னிக்குன்று



ரயில் கிளம்பியது. சட்டென்று சேஷாத்ரி சுவாமிகள் எழுந்து, கீழே குதித்து விட்டார். வள்ளிமலை சுவாமிகளின் முகத்தில் ஏமாற்றம் குடி கொண்டது. குருநாதர் திடீரென்று தமது மனத்தை மாற்றிக் கொண்டு விட்டாரே என்று வருந்தினார்.

"டேய், நீ வருத்தப்படாதே, போ நான் வள்ளிமலைக்கு வந்து சேருகிறேன்" என்று சிரித்துக் கொண்டே கூறிவிட்டு சேஷாத்ரி சுவாமிகள் ஓடி விட்டார்.

வள்ளிமலை ஆச்ரமத்திற்கு வந்து சேர்ந்ததும் பொங்கித்தாய்க்கு பூஜை செய்து விட்டு திரும்பிய சுவாமிகள், எதிரில் சிரித்துக் கொண்டு சேஷாத்ரி சுவாமிகள் நிற்பதைக் கண்டு பிரமித்துப் போனார். "குருநாதா, பிரபோ" என்று கத்திக் கொண்டே, தரையில் விழுந்து கும்பிட்டு விட்டு எழுந்தார். எதிரில் குருநாதரைக் காணவில்லை; மாறாக, அங்கு ஒரு சிறு அணிற்பிள்ளை துள்ளிக் குதித்து ஓடியதைக் கண்டார்!

1929-ம் ஆண்டு சேஷாத்ரி சுவாமிகள் மகாசமாதி யடைந்த பிறகு, பன்னிரண்டு வருட காலம் வள்ளிமலை சுவாமிகள் தமது திருப்புகழ் ஆச்ரமத்திலேயே தவத்தில் ஈடுபட்டிருந்தார். மலையை விட்டு கீழே இறங்கவே யில்லை. எனவே, அவரைத் தரிசிக்க மலைக்கு வந்த கூட்டம் பெருகிய வண்ணம் இருந்தது.

திருப்புகழ் மாமந்திரத்தின் சக்தியாலும், தவயோக நெறியாலும், பொங்கித் தாயின் பேரருளாலும் சுவாமிகள் வியத்தகு சித்திகளைப் பெற்றிருந்தார்கள். நடந்ததையும், நடந்து கொண்டிருப்பதையும், நடக்கப் போவதையும் அவர் அறிந்திருந்தார் என்பதற்குப் பல உதாரணங்கள் உண்டு. அவருடைய சந்நிதியில் அன்பர்கள் பல அதிசயங்களைக் கண்டிருக்கிறார்கள். தீராத நோய்களெல்லாம் குணமடையப் பெற்றிருக்கிறார்கள்; அவரது ஆசியால் குழந்தையற்றவர்கள் மழலைச் செல்வங்களைப் பெற்று இன்புற்றிருக்கிறார்கள். குறைப் பிரசவத்தால் அவதியுற்ற பெண்மணிகள் சுகப் பிரசவம் ஆகி, நலமுற்றன



வள்ளிமலை திருப்புகழ் ஆச்ரமத்தில் சுவாமிகளும் சீடர்களும்

வாழ்ந்திருக்கிறார்கள். வள்ளிமலை சுவாமிகளின் சித்து விளையாட்டுக்களைப் பற்றியும் அவர் புரிந்த அதிசய லீலைகளைப் பற்றியும், சுவாமிகளின் நூறுவது ஆண்டு ஜயந்தி விழா சிறப்பு மலரில் பல அடியார்கள் தங்கள் அனுபவங்களை எழுதி யிருக்கிறார்கள். அவற்றைப் படிக்கும்போது உண்மையிலேயே மெய் சிலிர்க்கிறது.

1940-ம் ஆண்டு வள்ளிமலையை விட்டுப் புறப்பட்ட சுவாமிகள், ஓயாமல் யாத்திரை செய்து கொண்டிருந்தார். அடுத்த பத்தாண்டு காலம் அநேகமாக அவர் சென்னை நகரிலேயே வசித்து வந்தார். அங்கிருந்தபடியே தென்னாட்டிலும், பம்பாய், கல்கத்தா, ரிஷிகேசம் முதலிய இடங்களிலும், யாத்திரை செய்து விட்டு வந்தார். அவ்வப்போது வள்ளிமலைக்குச் சென்று தங்குவதும் உண்டு.

எழுபத்தைந்து வயதைக் கடந்த நிலையிலும் இளமை மாறாத ஆர்வத்துடன் திருப்புகழைப் பாடியும் பாட வைத்தும், நாடெங்கும் பக்தியைப் பரப்பிக் கொண்டிருந்தார். அவருடைய 'வள்ளி கல்யாண' பிரசங்கங்களைக் கேட்க பெருங் கூட்டம் கூடியது.

வள்ளி நாயகியைத் தேடி வந்த தணிகேசன் போல், அன்பர்கள் இல்லம் நாடிச் சென்றார் கருணை வள்ளலான திருப்புகழ் சுவாமிகள். தள்ளாத வயதில், பஸ்ஸிலும் ரிக்ஷாவிலும் நடையுமாக இந்த சென்னைமா நகரம் முழுவதும் அலைந்திருக்கிறார்; பக்தர்களின் வீடு தேடிச் சென்று, நொந்த உள்ளங்களுக்கு நன்மருந்தாம் திருப்புகழ் தந்து ஆட்கொண்டிருக்கிறார். வெயில் என்றும், மழை யென்றும், குளிர் என்றும் பாராமல், பசி நோக்காமல், கண் துஞ்சாமல் அருட்பணிக்கே தம்மை அர்ப்பணித்துக் கொண்ட அந்தப் பேரருளாளர் குழந்தையைப் போல் பழகுவார். வேடிக்கையாகப் பேசுவார்.

ஆனால், பாடும் போது தவறு இழைத்து விட்டாலோ, தாளம் தப்பி விட்டாலோ பொறுக்கவே மாட்டார். கடிந்து கொள்வார். கன்னத்தில் அடிப்பார். தலையில் குட்டி விடுவார்.

மலருடன் சேர்ந்த நாறும் மணப் பது போல் சுவாமிகளுடன் பழகிய வர்களெல்லாம் பண்பாளர்களானார் கள். அவருடன் சேர்ந்து பாடியவர்க ளெல்லாம் முருக பக்தர்களானார்கள். திருப்புகழுக்கு அடிமையானார்கள். திருப்புகழைப் பரப்பினார்கள்.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன் ஒரு நாள் மயிலாப்பூரில் ஒரு பிரபல வக்கீலின் வீட்டில் திருப்புகழ் பாரா யணத்திற்கு ஏற்பாடாகியிருந்தது. அந்த வக்கீல் அதற்கு முன்பு திருப் புகழ் பாடியதில்லை. பாராயணம் தொடங்குவதற்கு முன் தாளத்தை எடுத்து வக்கிலின் கையில் கொடுத்து 'நீயும் பாடு' என்றார் சுவாமிகள். அன்று பாட ஆரம்பித்தவர், நாடெங் கும் திருப்புகழ் பஜனைகள் செய்து முருகன் கீர்த்தியைப் பரப்பினார். ஒவ்வோர் ஆண்டும் திருத்தணி திருப் படி விழாவில் முக்கிய பங்கு கொண் டார். அந்த வக்கீல்தான் திருப்புகழ் மணி டி. எம். கிருஷ்ணசுவாமி ஐயர்.

வள்ளிமலை சுவாமிகள் திருப்புக ழைப் பாடுவதோடும், அதற்குப் பொருள் கூறி தத்துவ விளக்கம் செய்வதோடும் நின்று விடவில்லை: திருப்புகழிலிருந்து பல பாட்டுக்களை எடுத்து, பாராயணம், பஜனை, தியா னம், பூஜை, அபிஷேகம், அலங்காரம் அர்ச்சனை, நைவேத்தியம், கற்பூ ரார்த்தி முதலியவற்றுக்குப் பயன் படும்படி தொகுத்தளித்திருக்கிறார். அதற்கு 'திருப்புகழ் பாராயண தவ நெறித் திருமுறை' என்று பெயர்.

அதே போல் வேல் வகுப்பில் உள்ள பதினாறு அடிகளை, அறுபத்து நான்கு வரிகளாக மாற்றியமைத்து அதற்கு 'வேல் மாறல்' என்று பெயரிட்டிருக் கிறார். அது ஒரு கவசம் போன்றது. மார்கழி திருப்புகழ் பாராயணத் திரு முறை, திருப்புகழ் கோபூஜை, அனுஷ் டானத் திருப்புகழ் போன்றவற்றை யும் ஆக்கித் தந்திருக்கிறார். இரண் டாவது உலகப் போரின் போது, பகைவர்களிடமிருந்து நம் நாட்டை யும் மக்களையும் காப்பதற்காக திருப் புகழிலிருக்கும் கோளறு பதிகங்களை யும், சீவல்லாங்கு வகுப்பு முதலிய சீற் பாடல்களையும் முறையாகத் தொகுத்து, 'திருப்புகழ் பாராயணக் குண்டு' என்ற பதிப்பையும் வெளி யிட்டு உதவினார்கள். இப புத்தகங் களை இலவசமாகத் தந்து, எல்லோ ரையும் பாராயணம் செய்யச் சொல்லி அப்போது மக்களிடையே யிருந்த பயத்தை அகற்றினார்.

''திருப்புகழ் பாராயணக் குண்டு இருக்கு மிடத்தில் ஜப்பான், ஜெர் மன் குண்டுகள் ஒன்றும் செய்யாது'' என்று சுவாமிகள் கூறுவது வழக்கம். அதை மெய்ப்பிப்பதுபோல், கல்கத்தா வில் பகைவரின் குண்டு வீச்சு நடந்த போது 'திருப்புகழ்பாராயணக் குண்டு' இருந்த வீட்டில் குண்டு விழாமல் அடுத்த வீட்டில் குண்டு விழுந்ததைக் கண்ட மக்கள், சுவாமிகளின் மகி மையை உணர்ந்து போற்றினார்கள்.

சென்னையில் சுவாமிகளின் பாதம் பட்டுப் புனித மடைந்த இல்லங்களில் மயிலாப்பூரில் வாழ்ந்த பிரபல வழக் கறிஞரும், அரசியல் வாதியுமான எஸ். ஸ்ரீனிவாச ஐயங்கார் வீடும் ஒன்று. அவருடைய மகன் எஸ். பார்த்த சாரதி, வள்ளிமலைச் சுவாமிகளிடம் மதிப்பும் மரியாதையும் வைத்திருந் தார். சுவாமிகள் தம் இல்லத்திற்கு வரும் போதெல்லாம் அவரை அன் புடன் வரவேற்று உபசரிப்பார். சுவாமிகளும் அவரிடம் பரிவோடும் பாசத்தோடும் பழகி வந்தார். ஆனால், அது தமது வாழ்க்கையையே மாற்றி யமைக்கப் போகும் தெய்விகச் சேர்க்கை என்பதை அப்போது பார்த்தசாரதி சற்றும் உணரவில்லை. செல்வாக்கும் செல்வமும் மிக்க குடும் பத்தில் பிறந்த அவர், இல்லற வாழ்க் கையைத் துறந்து, ஆன்மிக வாழ்க்கை தரும் மன அமைதியை நாடிச் செல் வதற்கு சுவாமிகள் உதவப் போகிறார் என்று கற்பனையில் கூட நினைத்திருக்க முடியாது. தமது வீட்டுத் தோட்டத் தில் ஒரு மகிழ மரத்தினடியில் எழுந் தருளியிருந்த ஓர் அம்மன் சிலை, சுவாமிகளின் தவ சக்தியாலும், அரு ளாசியாலும் சென்னைக்கு மேற்கே பன்னிரண்டாவது மைலிலுள்ள வட திருமுல்லை வாயிலில் வைஷ்ணவி தேவி யாகக் கோயில் கொள்ளப் போகிறாள் என்று அவர் நினைத்திருக்க முடியுமா? அல்லது அத்தேவியின் புனிதத் தொண்டிற்கே தம்மை அர்ப்பணித் துக் கொள்ளப் போகிறோம் என்று, பொருளீட்டுவதில் முனைந்திருந்த பார்த்தசாரதி அப்போது எண்ணித் தான் இருப்பாரா?

— தொடரும்.